SECRETA

Government of India /

Please pass on this Ga
to the Officer next in

CIRCULATED TO:

1. Chief Secretary

2. Vigilance Commissi

3. Second Secretary

4. Commissioner of Tr
Secretary to Gove

5. Joint Secretary (P

ISSUED 23—7—1973]



53
Index — 1-cmy
S.N.O. — 1-10
5-10.
S.No 3: Is not available in Legislative Dept

TAMIL NADU LEGISLATIVE COUNCIL DEBATES

OFFICIAL REPORT

TUESDAY, 20th MARCH 1973

Volume CVII—No. 1

©
GOVERNMENT OF TAMIL NADU
1973

Legislative Council Department
Madras-9

Tamil Nadu Legislative Council Debates

)RTY-FOURTH SESSION OF THE LEGISLATIVE COUNCIL UNDER THE CONSTITUTION OF INDIA.

20TH, 21ST, 22ND, 23RD AND 24TH MARCH 1973.

VOLUME CVII (*Nos.* 1 *to* 5.)

TABLE OF CONTENTS.

	PAGES
Personnel of the Government of Tamil Nadu ..	i—v
Principal Officers of the Tamil Nadu Legislative Council	vii
List of Members of the Tamil Nadu Legislative Council with their Constituencies	ix—xi
Tuesday, the 20th March 1973.	
I. Condolence Resolution on the death of Thiru B. Ramachandra Reddi, former Member and Chairman of the Council	1—4
II. Questions and Answers	4—7
III. Announcement *re*—	
(1) Decision of the Business Advisory Committee	7—8
(2) Election of Members to the Senate of the Madras University	8—9
IV. Papers laid on the table of the House ..	9—13

NRV.32
NRV.1071.2
63091

PAGES

Wednesday, 21st March 1973.

I. Questions and Answers .. .. 15—32

II. Government Motion—

Discussion on the Note on the Progress of Education in Tamil Nadu .. .. 33—83

III. Papers laid on the table of the House .. 83—85

Thursday, the 22nd March 1973.

I. Questions and Answers .. .. 209—235

II. Government Motion—

Discussion on the Note on the Progress of Education in Tamil Nadu—*cont.* .. .. .. 235—290

III. Papers laid on the table of the House .. 290—291

Friday, the 23rd March 1973.

I. Swearing-in of new Member 299

II. Government Motions—

(1) Suspension of Question-hour 299

(2) Election of six members to the House Committee .. .. 301—302

(3) Discussion on the Note on the Progress of Education in Tamil Nadu—*cont.* .. .. 302—331

(4) Discussion on the Policy Notes on Medical and Public Health .. .. 332—390

III. Announcement *re*—

Election of Members to the Senate of the Madras University 300

IV. Calling attention to non-payment of lay-off compensation to workers in factories with less than 50 workers due to power cut .. .. .. 300—301

V. Papers laid on the table of the House 390

PAGES

Saturday, the 24th March 1973.

I. Questions and Answers .. .. .. 623—647

II. Announcement *re* laying of answers to Starred Questions as Unstarred Questions on the table .. 647—648

III. Government Motion—

Discussion on the papers relating to Industrial Growth in Tamil Nadu during 1972-73 .. 648—705

IV. Papers laid on the table of the House .. 705

Index .. .. 725—756

PERSONNEL OF THE GOVERNMENT OF TAMIL NADU.

Governor of Tamil Nadu.

THIRU KODARDAS KALIDAS SHAH.

Members of the Council of Ministers.

1. THE HON. DR. M. KARUNANIDHI, Chief Minister in-charge of Public, Finance, Planning, General Administration, Matters relating to I.C.S. and I.A.S. Officers, District Revenue Officers, Police, Elections, Information and Public Relations; Cinematograph Act, Newsprint Control, Tamil Nadu Drainage and Water-supply Board, Slum Clearance Board, Film Technology, Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation and Youth Service Corps.

2. THE HON. DR. V. R. NEDUNCHEZHIYAN, Minister in-charge of Education including Technical Education, Official Language, Legislature, Municipal Administration, Community Development, Panchayats and Panchayat Unions.

3. THE HON. THIRU K. ANBAZHAGAN, Minister in-charge Public Health, Medicine and Animal Husbandry.

4. THE HON. THIRU N. V. NATARAJAN, Minister in-charge Labour, Stationery and Printing, Government Press, Prosperity rigade, Legislation on Weights and Measures, Statistics and egistration.

5. THE HON. THIRUMATHI SATYAVANI MUTHU, Minister -charge of Harijan Welfare, Women's and Children's Welfare, isheries, Beggar's Home, Orphanages, Approved Schools and igilance Services, Indians Overseas, Refugees and Evacuees.

6. THE HON. THIRU P. U. SHANMUGAM, Minister in-charge f Revenue, Board of Revenue, District Revenue Establishment nd Deputy Collectors, Commercial Taxes and Prohibition.

7. THE HON. THIRU S. MADHAVAN, Minister in-charge of Industries, Textiles, Yarn, Handloom, Mines and Minerals, Iron and Steel Control, Employment and Training, Companies, Law, Courts and Prisons.

8. THE HON. THIRU S. J. SADIQ PASHA, Minister in-charge of Public Works, Minor Irrigation including Special Minor Irrigation Programme Works, Highways and Waqfs.

9. THE HON. THIRU SI. PA. ADITANAR, Minister in-charge of Co-operation, Ports, Agricultural Refinance, Agricultural Engineering Wing of the Directorate of Agriculture except Soil Conservation Schemes, Passports, and Prices and Supplies of Goods Act.

10. THE HON. THIRU A. P. DHARMALINGAM, Minister in-charge of Agriculture.

11. THE HON. THIRU MANNAI P. NARAYANASWAMI, Minister in-charge of Food, Food Production, Khadi and Village Industries and Rural Industries Project.

12. THE HON. THIRU K. RAJARAM, Minister in-charge of Backward Classes, Tourism, Housing and Accommodation Control.

13. THE HON. THIRU O. P. RAMAN, Minister in-charge of Electricity, Legislation on Money Lending, Rural Indebtedness, Legislation on Chits, Forests and Cinchona.

14. THE HON.. THIRU S. RAMACHANDRAN, Minister in-charge of Transport, Nationalised Transport and Motor Vehicles Tax.

15. THE HON. THIRU M. KANNAPPAN, Minister in-charge of Religious Endowments, Ex-Servicemen, Bhoodan, Gramdan and Milk excluding Operation Flood Project and Tamil Nadu Dairy Development Corporation.

தமிழ் நாடு அரசின் ஆளுநரும் அமைச்சரவையும்

தமிழ் நாடு ஆளுநர்.

மேதகு திரு. கோதர்தால் காளிதால் ஷா.

அமைச்சரவையின் உறுப்பினர்கள்.

1. மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி (முதலமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுத்துறை, நிதி, திட்டம், பொது நிர்வாகம், இந்திய சிவில் பணியாளர் தொகுதி (ஐ.சி.எஸ்.), இந்திய ஆட்சிப் பணியாளர் தொகுதி (ஐ.ஏ.எஸ்.) அதிகாரிகள், மாவட்ட வருவாய்த் துறை அதிகாரிகள், காவல் துறை, தேர்தல்கள், செய்தி-விளம்பரம், திரைப்படச் சட்டம், பத்திரிகைக் காகிதக் கட்டுப்பாடு, தமிழ் நாடு கழிவுநீர்-குடிநீர் வாரியம், குடிசை மாற்று வாரியம், திரைப்படத் தொழில் நுட்பவியல், பால் பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பாற்பண்ணை வளர்ச்சிக் கழகம், இளைஞர் அணி.

2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் (கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில் நுட்பக் கல்வி உட்பட கல்வி, ஆட்சி மொழி, சட்ட மன்றம், நகராட்சி நிர்வாகம், சமுதாய நல வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள்.

3. மாண்புமிகு திரு. க. அன்பழகன் (மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுச் சுகாதாரம், மருத்துவம், கால்நடை வளர்ப்பு.

4. மாண்புமிகு திரு. என். வி. நடராசன் (தொழிலாளர் நலத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழிலாளர், எழுதுபொருள் அச்சுத் துறை, அரசு அச்சகம், சீரணி, எடைகள்-அளவைகள் குறித்த சட்டம், புள்ளி விவரம், பத்திரப் பதிவு.

5. மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து (அரிசன நலத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அரிசன நலம், மகளிர்-சிறுவர் நலம், மீனவம்,

இலவலர்கள் விடுதி, அனுதை இல்லங்கள், சிர்திருத்தப் பள்ளிகள், கண்காணிப்புப் பணிகள், வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள், இடம் பெயர்ந்தவர்கள்.

6. மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் (வருவாய்த் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—வருவாய், வருவாய்த் தீர்வை வாரியம், மாவட்ட வருவாய் நிருவனங்கள், மாவட்டத் தண்டி ஆட்சித் தலைவர்கள், வணிக வரிகள், மதுவிலக்கு, ஆயத்தீர்வை.

7. மாண்புமிகு திரு. செ. மாதவன் (தொழில் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—தொழில்கள், ஆலைத் துணிகள், நூல், கைத்தறி, சுரங்கங்கள், கனிப் பொருள்கள், இரும்பு-உருக்குக் கட்டுப்பாடு, வேதி வாய்ப்பும் பயிற்சியளித்தலும், கம்பெனிகள், சட்டம், நீதி மன்றங்கள், சிறைச் சாலைகள்.

8. மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (பொதுப்பணித் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பொதுப்பணிகள், சிறு பாசனச் சிறப்புத் திட்டங்கள உட்பட சிறுபாசனம், நெடுஞ்சாலைகள், முகம்மதியர் அறக் கட்டளைகள்.

9. மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார் (கூட்டுறவுத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—கூட்டுறவு, துறைமுகங்கள், வேளாண்மை மறு நிதி உதவி, மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நீங்கலாக வேளாண்மை இயக்குத்தின் வேளாண்மைப் பொறியியற் பிரிவு, பயண அனுமதிச் சீட்டுகள், சரக்குகளின் விலைகள்-வழங்கல் குறித்த சட்டம்.

10. மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் (வேளாண்மைத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைக்கு பொறுப்பு வகிப்பார் :—வேளாண்மை.

11. மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி (உணவுத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—உணவு, உணவு உற்பத்தி, கதர்-கிராமத் தொழில்கள், கிராமத் தொழில்கள் திட்டம்.

12. மாண்புமிகு திரு. க. இராசாராம் (பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—பின்தங்கிய வகுப்பினர் நலன், சுற்றுலா, விடுதி வசதி, இட வசதிக் கட்டுப்பாடு.

13. மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் (மின்சாரத் துறை அமைச்சர்)—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—மின்சாரம், கடன் கொடுத்தல் (கிராமவாசிகள் கடன்பட்டிருத்தல்) குறித்த சட்டம், சீட்டுகள் குறித்த சட்டம், காடுகள், சின்கோனா.

14. மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் (போக்குவரத்துத் துறை அமைச்சர்) :—கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் வரி.

15. மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் (அறநிலையத் துறை அமைச்சர்) : கீழ்க்கண்ட துறைகளுக்குப் பொறுப்பு வகிப்பார் :—அறக் கட்டளைகள், பால் வழங்குத் துறை, முன்னாள் இராணுவ வீரர்கள், பூதான-கிராமதான இயக்கங்கள், பால்பெருக்குத் திட்டம், தமிழ்நாடு பால்பண்ணை வளர்ச்சிக் கழகம் ஆகியவை நீங்கலாக பால் உற்பத்தி.

தமிழ்நாடு சட்ட மன்றத்தின் முக்கிய அலுவலர்கள்.

சட்ட மன்றத் தலைவர்.

மாண்புமிகு திரு. சி. பி. சித்தாசு.

சட்ட மன்றத் துணைத் தலைவர்.

மாண்புமிகு திரு. ம. பொ. சிவஞானம்.

மாற்றுத் தலைவர்கள் பட்டியல்.

1. திரு. க. அறிவழகன்.
2. திரு. என். சுந்தரேசத் தேவர்.
3. திரு. அய்யணன் அம்பலம்.
4. திரு. எஸ். நாராயணசாமி.

சட்ட மன்றச் செயலாளர்.

திரு. ஐ. மு. அழகர்சாமி, பி.ஏ., பி.எல்.

உதவிச் செயலாளர்.

திரு. த. பி. டெல்லி துரை, பி.எஸ்ஸி.

விவாதப் பதிப்பாளர்.

திரு. நா. கோதண்டராமன், பி.ஏ., பி.டி.எல்., டிப்ளமா

தொகுதிகள் உள்ளீட்ட தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களின் (தமிழ் அகர வரிசைப்படி தயாரிக்கப்பட்ட) பட்டியல்.

தொடரிலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
1 அப்துல் வகாப், கே. எஸ். ..	மாநிலச் சட்டப் பேரவை.
2 அய்யணன் அம்பலம்	மதுரை உள்ளாட்சி மன்றம்.
3 அறிவழகன், கே., எம்.ஏ. ..	சென்னை-செங்கற்பட்டு ஆசிரியர் தொகுதி.
4 அறிவுடைநம்பி, புலவர் ஒ. ..	வட ஆர்க்காடு-தென் ஆர்க்காடு ஆசிரியர் தொகுதி.
5 அனிபா, நாகூர், ஈ.எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
6 ஆதித்தன், எஸ்.டி., பி.ஏ.,பி.எல்.	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
7 ஆறுமுகசாமி, எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
8 இராசகோபால், சி. வி.	மாநிலச் சட்டப் பேரவை.
9 இராசமாணிக்கம், எஸ்.ஏ. ..	மாநிலச் சட்டப் பேரவை.
10 இராஜாராம், கே. (எதிர்க் கட்சித் தலைவர்).	மதுரை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
11 இராணி அண்ணாதுரை	சென்னை உள்ளாட்சி மன்றத் தொகுதி.
12 இராமசாமி படையாட்சி, எஸ்.எஸ்.	தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
13 இராமசுப்பையா, காரைக்குடி ..	நியமன உறுப்பினர்.
14 இராமநாதன், எம்.	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
15 இராஜா அய்யர், எம்., எம்.ஏ., எல்.டி.	மதுரை-இராமநாதபுரம் ஆசிரியர்கள் தொகுதி.
16 இராஜு, ஜி. என்.	மாநிலச் சட்டப் பேரவை.
17 ஈஸ்வர மூர்த்தி, வி., எம்.ஏ. (விஸ்வபாரதி), எம்.ஏ. (ஆக்ஸன்).	தமிழ்நாடு மேற்கு மத்திய பட்டதாரிகள்.
18 கணபதி, கே. எஸ்.	தஞ்சாவூர்-திருச்சிராப்பள்ளி ஆசிரியர்கள்.
19 கணேசன், சா.	மாநிலச் சட்டப் பேரவை.
20 காட்டேர் கோபால்	மாநிலச் சட்டப் பேரவை.
21 காளியண்ணன், டி.எம்., எம்.ஏ., பி.காம்.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தொடர்பிலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
22 கிருஷ்ணசாமி நாயுடு, ரா. ..	மாநிலச் சட்டப் பேரவை.
23 குன்றக்குடி அடிகளார், தவத்திரு.	நியமனம்.
24 கோலப்பா, சி. ஆர்.	மாநிலச் சட்டப் பேரவை.
25 சக்தி மோகன், ஆர்.	மாநிலச் சட்டப் பேரவை.
26 சங்கரலிங்கம், எம்.	திருநெல்வேலி-கன்னியாகுமரி ஆசிரியர்கள்.
27 சந்தோஷம், டி., எம்.எ., பி.எல்...	தமிழ்நாடு தெற்கு மத்திய பட்டதாரிகள்.
28 சாம்பசிவம், இரா.	தென் ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
29 சிவஞானம், ம. பொ. (துணைத் தலைவர்).	நியமனம்.
30 சிற்றரசு, சி.பி.(மாண்புமிகு தலைவர்).	மாநிலச் சட்டப் பேரவை.
31 சுந்தரேச தேவர், என்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
32 சுவாமிநாதன், ஜி., பி. பார்மவி ..	தமிழ்நாடு கிழக்கு மத்திய பட்டதாரிகள்.
33 செங்கோட்டு வேலப்ப கவுண்டர், எஸ். சி.	கோயம்புத்தூர்-நீலகிரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
34 தங்கப் பாண்டியன், வி., பி.எ.,பி.டி.	மாநிலச் சட்டப் பேரவை.
35 தாமோதரன், எ. ஆர்., பி.எஸ்ஸி. (ஆனர்ஸ்).	தமிழ்நாடு வடக்கு பட்டதாரிகள்.
36 திருஞானசம்பந்தம், பி. ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
37 தென்னரசு, எஸ்.எஸ்.	நியமனம்.
38 தேவராஜ், வி. எம்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
39 நடராசன், என். வி. (தொழிலாளர் நல அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
40 நடராசன், எம். கே. டி.	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
41 நாராயணசாமி, பி. (வேளாண்மை அமைச்சர்).	மாநிலச் சட்டப் பேரவை.
42 நாராயணசாமி, டி. வி.	நியமனம்.

தொடர்பிலக்கமும், உறுப்பினர் பெயரும்.	தொகுதி.
(1)	(2)
43 நாராயணசாமி, எஸ்.	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
44 நீல நாராயணன்	நியமனம்.
45 பக்கர், எம். எம்.	நியமனம்.
46 பகவதி, டி.கே.	நியமனம்.
47 பராங்குசம், ஜி. (அரசாங்க கொரடா).	மாநிலச் சட்டப் பேரவை.
48 பலராமன், எல்.	வட ஆர்க்காடு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
49 பொன்னுவேலு, டி. கே. ..	மாநிலச் சட்டப் பேரவை.
50 மணி, கே. எஸ்.	தஞ்சாவூர் உள்ளாட்சி மன்றத் தொகுதி.
51 மாசிலாமணி, எம்.	மாநிலச் சட்டப் பேரவை.
52 முத்து, பி. டி.	சேலம்-தர்மபுரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
53 முத்து, எஸ்.	மாநிலச் சட்டப் பேரவை.
54 முத்துகிருஷ்ணன், டி.வி. ..	மாநிலச் சட்டப் பேரவை.
55 முத்துசாமி, எஸ்.	சேலம்-தர்மபுரி-கோயம்புத்தூர்-நீலகிரி ஆசிரியர்கள்.
56 வசந்த பாய், ஜி.	சென்னை மாவட்ட பட்டதாரிகள்.
57 வில்சன் அப்பலோஸ், என். ..	கன்னியாகுமரி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
58 வெங்கடேஸ்வர தீக்ஷிதர், ஒய். ..	திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
59 வெங்கா, வி.	செங்கல்பட்டு உள்ளாட்சி மன்றத் தொகுதி.
60 வெள்ளப்பாண்டியன், எஸ். ..	திருநெல்வேலி உள்ளாட்சி மன்றத் தொகுதி.
61 ஜனார்த்தனம், எ.பி.	நியமனம்.
62 ஜார்ஜ் கோமகன்	மாநிலச் சட்டப் பேரவை.
63 ஜெயராம் செட்டியார், எஸ். ..	இராமநாதபுரம் உள்ளாட்சி மன்றத் தொகுதி.

தமிழ்நாடு சட்ட மன்றம்.

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் கூடும் சட்ட மன்றத்தின் நாற்பத்திநான்காவது கூட்டத்தொடர்.

செவ்வாய்க்கிழமை, 1973 மார்ச் 20.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

1. இரங்கற் தீர்மானம்.

தமிழ்நாடு சட்டமன்ற முன்னாள் உறுப்பினரும் தலைவருமான திரு. பி. இராமச்சந்திர ரெட்டி அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : இம்மன்றத்தின் உறுப்பினராகவும், தலைவராகவும் இருந்த திரு. பி. இராமச்சந்திர ரெட்டி அவர்கள் இயற்கை எய்தியது குறித்து ஆழ்ந்த வருத்தத்துடன் மேலவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இரங்கல் தீர்மானத்தை முன்மொழியுமாறு மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, "1924-ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டு வரை இம் மன்றத்தின் உறுப்பினராகவும், 1930-ஆம் ஆண்டு முதல் 1937-ஆம் ஆண்டு வரை இம் மன்றத்தின் தலைவராகவும் அந்நாள் நீதிக் கட்சியின் தலைவர்களுள் ஒருவராகவும் விளங்கிய திரு. பி. இராமச்சந்திர ரெட்டி அவர்கள் இயற்கை எய்தியதைக் குறித்து இம் மேலவை தனது ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறது. அன்னாரது குடும்பத்தினருக்கும் தனது ஆழ்ந்த இரங்கலையும், பரிவுணர்ச்சியையும் தெரிவித்துக் கொள்கிறது."

மறைந்த திரு. பி. இராமச்சந்திர ரெட்டி அவர்கள் நெல்லூர் மாவட்டம், பூச்சிரெட்டிப்பள்ளியத்தில், 1894-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 24-ஆம் நாள் பிறந்தார்கள். சென்னை, பச்சையப்பன் கல்லூரியில் கல்வி கற்று, 1919-ஆம் ஆண்டில், பி.ஏ. பட்டம்

[டாக்டர் மு. கருணாநிதி] [1973 மார்ச் 20

பெற்றார்கள். நெல்லூர் மாவட்டக் கல்விக் குழுவின் தலைவராக, 1929-ஆம் ஆண்டு வரை, நான்காண்டுக் காலம் பணி புரிந்தார்கள். 1929-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து 1930-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் வரை மாவட்டக் கழகத்தின் தலைவராகப் பணியாற்றியதோடு, மாவட்ட ஆலயக் குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார். மேட்டூர் திட்டக் குழு, பஞ்சாலைக் குழுக்களில் 1928-ஆம் ஆண்டில் பணியாற்றியுள்ளார். சென்னை சட்ட மன்ற மேலவையின் பிரதிநிதியாக ஆந்திரப் பல்கலைக் கழகப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அங்கே, கிழக்கு மேற்கு கோதாவரி, கிருஷ்ணா மாவட்டங்களுக்கான பொருளாதார விசாரணைக்குழு உறுப்பினராகப் பணி புரிந்தார். இவர் நெல்லூர் மாவட்டம், பூச்சிரெட்டிப் பள்ளியத்தைச் சேர்ந்த வரலாற்றுப் புகழ் வாய்ந்த டெட்டா குடும்பத்தில் தோன்றிய பெரிய நிலக்கிழாருமாவார். அன்னார் ஜஸ்டிஸ் கட்சி–நீதிக் கட்சியில் விளங்கிய பல பெரும் தலைவர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். இந்தச் சட்ட மன்றத்தின் தலைவராக 1930-ஆம் ஆண்டிலிருந்து 1937-ஆம் ஆண்டு வரை அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுப் பணியாற்றியுள்ளார்கள். அன்னாருடைய பிரிவுக்கு என்னுடைய ஆழ்ந்த வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்த மன்றத்தின் சார்பாக அவரது குடும்பத்தாருக்கு அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

* THIRU S. NARAYANASWAMY : Mr. Chairman, I would like to associate myself with the Hon. the Chief Minister in the sentiments expressed by him for one particular reason. I knew late Thiru B. Ramachandra Reddi for over twenty years, very well indeed, not in my capacity as a legislator, because I was not one at the time, but as a good friend. I was associated with him in a number of business ventures and he was one of the most genial men I had ever met. In advanced years he had kept up his spirit of youth and his capacity to enjoy a joke was very considerable. He took his retirement gracefully and got completely reconciled to his retirement from public life. He was in the very salt of public life. He was an active freedom fighter and he participated in the Legislative Council as its President. He was an active legislator when there was the composite State of Madras. I may incidentally add that he was one of those who felt that he should act as an integrator between Madras and Andhra States. He was one of those who never took a fanatical view of any matter, one of the most practical men I had ever met, one of

1973 மார்ச் 20] [Thiru S. Narayanaswamy]

the most pleasant men with exemplary character. We have lost a very fine man. Though he died full of years, I think, he has left a vacuum behind. I hope his example, both as a legislator, and as a public man and as a good freedom fighter and citizen would always be remembered and emulated by others. I want to associate myself with the sentiments expressed by the Hon. the Chief Minister this afternoon.

திரு. எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரவர்கள் முன் மொழிந்த இந்தத் தீர்மானத்தை நான் வழி மொழிகின்ற காரணம் என்னவென்றால், காலம் சென்ற திரு. இராமச்சந்திர ரெட்டி அவர்கள் எனக்கு சிறு வயதிலிருந்தே மிகவும் நல்ல பழக்கமுடையவர்கள். இங்கே இருக்கிறவர்களுள், அவருடன் நெருங்கிப் பழகக்கூடிய வாய்ப்பு எனக்கு ஒருத்தருக்குத்தான் கிடைத்திருக்குமென்று நினைக்கிறேன். அந்தக் காரணத்தினால் ஒன்றிரண்டு வார்த்தைகள் சொல்ல ஆசைப்படுகிறேன். அரசியலில் ஈடுபடுகிறவர்கள் மிகவும் கண்ணியமாக இருக்கவேண்டும் என்ற முறையில், அரசியலில் இருப்பவர்களுக்கு ஒரு எடுத்துக் காட்டாக இருக்க வேண்டுமென்ற முறையில், அன்னார் நீதிக் கட்சியில் இருந்தபோது நடந்துகொண்டு வந்தார். அவரது குடும்பம் ஏக குடும்பமாக அமைந்திருந்தது. சுமார் 100 அல்லது 150 பேர், ஒரு ஹாஸ்டல் மாதிரி, ஒரே குடும்பத்தில் பிரியாமல் இருந்தார்கள். கம்யூனிஸ்டுகள் மாதிரி, அந்த வீட்டில் எல்லோரும் சேர்ந்திருந்தார்கள். 150 பேர் உள்ள குடும்பம் ஒரே இடத்தில் இருந்தது. அவர்கள் அனைவரும் ஒற்றுமையுடன் இருந்து வந்தார்கள். அவர் நீதிக் கட்சியில் இருந்தபோது, எல்லோரும் பாராட்டத்தக்க வகையில் நல்ல முறையில் நடந்துகொண்டு வந்தார்கள். அவர் கண்ணியமான மனிதர் என்பதை இந்த மன்றத்திற்குச் சொல்லிக்கொண்டு, அவருடைய குடும்பத்தாருக்கு என்னுடைய அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*திரு. கே. ராஜாராம் : மாண்புமிகு தலைவரவர்களே. திரு. இராமச்சந்திர ரெட்டி அவர்கள் இந்த மாநிலத்தில், ஒரே சட்டசபை இருந்த நேரத்தில், சட்டசபைக்கு கடைசி தலைவராக இருந்தார்கள். அவர் நமது மாநிலத்தில் அமைச்சராகயிருந்த திரு. பி. கோபால் ரெட்டி அவர்களுக்கு நெருங்கிய பந்து ஆவார். எனக்கு நேரிடையாகப் பழக்கம் இல்லையென்றாலும், நான் அவரைப்பற்றி அறிவேன். அவர் மிகவும் பெரிய குடும்பத்தில் பிறந்தவர். 7 ஆண்டுக் காலம்

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 20

தலைவராக இருந்து, இந்த சபைக்கு ஒரு பெரிய பெருமையையும், கன்னியத்தையும் தேடிக் கொடுத்த அவர் மறைந்தது நமக்கு மிகவும் வருத்தத்தைக் கொடுத்தாலும்கூட, ஒரு நல்ல "டிரெடிஷனை" —பாரம்பரியத்தை உண்டுபண்ணிவிட்டுச் சென்றவர் என்ற முறையில் பெருமை அடைகிறோம். அன்னாரின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து, அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த இரங்கலை என்னுடைய கட்சியின் சார்பாக நானும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : திரு. இராமச்சந்திர ரெட்டி அவர்கள் இம் மன்றத்தின் உறுப்பினராக 1924-ஆம் ஆண்டு முதல் 1937 வரை இருந்து வந்துள்ளார். 1930-ஆம் ஆண்டு முதல் 1937 வரை இம் மன்றத்தின் தலைவராகவும் பதவி வகித்து வந்துள்ளார். 1952-ஆம் ஆண்டில் மத்திய சட்ட சபையில் உறுப்பினராகவும், தேசிய ஜனநாயக முன்னணியின் துணைத் தலைவராகவும் இருந்துள்ளார். அவர் சுயராஜ்ய கட்சியின் ஸ்தாபக உறுப்பினர் ஆவார். மாண்புமிகு முதலமைச்சரவர்களும், எதிர்க் கட்சித் தலைவரும், மாண்புமிகு உறுப்பினர்களும் தெரிவித்த கருத்தில் நானும் பங்கு கொள்கிறேன்.

அன்னாரது மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் இரண்டு நிமிடம் மௌனமாக எழுந்து நிற்குமாறும், இத் தீர்மானத்தை நிறைவேற்றுமாறும் இம் மன்ற உறுப்பினர்களைக் கேட்டுக்கொள் கிறேன்.

(அவையினர் 2 நிமிடங்கள் மவுனமாக எழுந்து நின்றனர்.)

4-10 பி.ப.

தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

2. வினக்கள்—விடைகள்.

உடுக்குறியிடப்படாத வினக்கள்.

Expenditure towards printed posters for Family Planning Scheme

27. Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state the total amount of money paid to the various printers for the posters for Family Planning Scheme during 1970-71 and 1971-72 item-wise?

A.—The total amount of money paid to the various printers during 1970-71 and 1971-72 is furnished below item wise :—

Serial number and period of printing of the posters.	*Nature of the printed material.*	*Number of copies printed.*	*Name of the firm from where it was got printed.*	*Amount paid towards printing charges.*
(1)	(2)	(3)	(4)	(5)
				Rs. P.
	I. During the year 1970-71.			
1. November–December 1970.	Multi-colour Family Planning Posters.	10,000	Tvl. Photo Litho Press, Private Limited, Madras-5.	7,210 00
2. February–March 1971	Colour Pamphlets ..	100,000	Tvl. Idal Printers, Madras.	3,420 00
	Total amount paid during the year 1970-71 ..			10,630 00
	II. During the year 1971-72.			
1. March–April 1971 ..	Multi-colour Posters ..	24,600	Tvl. Photo Litho Press, Private Limited, Madras-5.	7,601 40
2. April–May 1971 ..	Multi-colour Posters ..	20,000	Do.	9,270 60
3. June 1971 ..	Tricolour F. P. Posters (13 varieties).	5,000 in each variety.	Do.	21,079 98
4. December 1971 ..	Tricolour F. P. Posters.	5,000	Do.	1,295 95
5. February–March 1972.	Tricolour F. P. Posters ..	25,100	Do.	26,256 00
	Total amount for the year 1971-72 ..			65,503 33

Harijan Welfare Department

28. *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. th Minister for Harijan Welfare be pleased to state—

(*a*) the details of the offices of the Harijan Welfare Department in (i) Government buildings and (ii) rented buildings districtwise; and

(*b*) the rents paid for them per year?

A.—The particulars required are furnished in the Annexure. @

Hides and Skins Industry

29. *Q.*—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Industries be pleased to state the details of the incentives given by the State Government for the promotion of hides and skins industry in this State?

A.—Whatever assistance is given to any small scale, medium and major Industries by the Government and the State owned Financial institutions is also available for the hides and skins industry.

Government Ceramic Factories

30. *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state the products manufactured at the Government Ceramic Factories in this State?

Serial number and name of the unit.	*Products manufactured.*
1. Mechanized Brick Plant, Thirumazhisai.	Redclay building Bricks of sizes 9"—4½"—3" and of metric size and items like partition blocks, ceiling blocks, etc.
2. Production and Training Centre in Art Pottery at Vridhachalam and Perambur.	Art and utility items in ceramics like flower vases, tea sets, ash trays, decorated bowls, statues etc.
3. Tansi Stoneware Pipes, Vridhachalam.	Stoneware pipes of size 4" to 15" diameter and specials.
4. Tansi Ceramics. Vridhachalam.	Crockery, sanitary wares and L.T. insulators.
5. Rural Works Centre for Ceramics, Omalur, Salem district.	Stoneware pickle jars of sizes from ¼ litre to 12 litres and also cheap crockery like footed bowls, etc.

@ 14 ஆம் பக்கத்தில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

Tuition through Employment Exchange Scheme

31. *Q.*—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state the number of persons, qualification-wise who have volunteered to work for the "Tutor through Employment Exchange Scheme" introduced by the Employment Exchanges in Madras City?

A.—The number of persons qualification-wise who have volunteered to work for the "Tuition through Employment Exchange Scheme" introduced by the Employment Exchanges in Madras City are as follows:

Qualification	*Number of persons*
M.A.	403
M.Sc.	313
M.Com.	10
B.T.	92
B.L.	31
B.Sc. (D.S.S.A.)	5
B.A. (D.S.S.A.)	4
Total ..	858

3. அறிவிப்பு

(1) அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவு

MR. CHAIRMAN: At a meeting of the Business Advisory Committee held at 3-30 p.m. today, the following revised programme of business has been decided:—

21st March 1973 (Wednesday) and 22nd March 1973 (Thursday).

Discussion on the Policy Note on Education.

23rd March 1973 (Friday).

Discussion on the Policy Notes on Medical and Public Health.

24th March 1973 (Saturday).

Discussion on the Policy Note on Industries.

25th March 1973 (Sunday).

Holiday.

[1973 மார்ச் 20

26th March 1973 (Monday).

(1) Presentation of the Final Supplementary Statement of Expenditure for 1972–73.

(2) Discussion on the Policy Note on Hindu Religious and Charitable Endowments.

27th March 1973 (Tuesday).

(1) Discussion on the Final Supplementary Statement of Expenditure for 1972–73.

(2) Discussion on the Policy Note on Food.

28th March 1973 (Wednesday) at 3-30 p.m. (not at 4 p.m. because there is the Tea Party by the Governor.

Discussion on the Policy Note on Agriculture.

29th March 1973 (Thursday).

Consideration and passing of Appropriation Bills.

30th March 1973 (Friday) and 31st March 1973 (Saturday).

Consideration and passing of Appropriation Bills.

The Council will meet on 2nd April 1973, if necessary. The Council will meet daily from 1 p.m., to 7 p.m., except on the 28th March 1973 when it will meet at 3-30 p.m.

(2) சென்னை பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு உறுப்பினர்கள் நியமனம் குறித்து

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை உறுப்பினர்களால் சென்னை பல்கலைக் கழக ஆட்சிக் குழுவிற்கு விதாச்சார பிரதிநிதித்துவ கோட்பாட்டிற்கிணங்க ஒற்றை மாற்று வாக்குமுறை மூலம் மூன்று உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட வேண்டியுள்ளது என்று நான் அவைக்குத் தெரிவித்துக்கொள் கிறேன். கீழ்க்கண்ட நாட்கள், நேரடி வாக்குப் பதிவு முறை மூலம் தேர்தல் நடைபெறும் நாட்களென முடிவு செய்யப்பட்டுள்ளன :

வேட்பு மனுக்கள் பெற்றுக்கொள்வதற்கான கடைசி நாளும், நேரமும்.	..	21—3—1973 பிற்பகல் 5 மணி.
வேட்பு மனுக்களைப் பரிசீலனை செய்தல்	..	21—3—1973 பிற்பகல் 6 மணி.
வேட்பு மனுக்களைத் திரும்பப்பெறுவதற்கான கடைசி நாளும், நேரமும்.	..	22—3—1973 பிற்பகல் 5 மணி.

1973 மார்ச் 20] [சட்ட மன்றத் தலைவர்]

தேர்வுயேற்பட்டால், நடைபெறும் நாளும், நேரமும்.	வாக்குப்பதிவு ..	24—3—1973 முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 1 மணி வரை.

வேட்பு மனுப் படிவத்தைச் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

மறைந்த திரு. பி. இராமச்சந்திர ரெட்டி அவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மன்றம் கலைந்து, மீண்டும் நாளை மாலை 4-1 4 மணிக்குக் கூடும். பி.ப

பின்னர், சட்ட மன்றம் ஒத்தி வைக்கப்பட்டது.

4. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

67. Notification issued with G.O. Ms. No. 3101, Public (Services-A), dated the 1st December 1972, in regard to an amendment to the Tamil Nadu Public Service Commission Regulations, 1954, for inclusion of the post of Workshop Foreman in the Cinchona Department within the Commission's purview. [Laid on the table of the House under Article 320 (5) of the Constitution of India).]

68. Notification issued with G.O. Ms. 2629, Agriculture, dated the 10th October 1972, in regard to declaration of notified areas for Red Hills Market in respect of groundnut. [Laid on the table of the House under section 29(4) of the Tamil Nadu Agricultural Produce Markets Act, 1959 (Tamil Nadu Act 23 of 1959).]

69. Notification issued with G.O. Ms. No. 3110, Home, dated the 6th December 1972, in regard to an amendment to Rule 96-A of the Tamil Nadu Cinemas (Regulation) Rules, 1957. [Laid on the table of the House under section 10(3) of the Tamil Nadu Cinemas (Regulation) Act, 1955 (Tamil Nadu Act IX of 1955).]

70. Notification issued with G.O. Ms. No. 96, Revenue, dated the 17th January 1973, in regard to certain amendments to the Assessment, Levy and Recovery of Contribution Costs Rules. [Laid on the table of the House under section 116(3) of the Tamil Nadu Hindu Religious and Charitable Endowments Act, 1959 (Tamil Nadu Act 22 of 1959).]

71. Notification issued with G.O.R. No. 2944, Revenue, dated the 14th November 1972, in regard to exemption from payment of surcharge levied under the Tamil Nadu Sales Tax Surcharge Act, 1971 by any dealer on the sale or purchase of the declared goods. [Laid on the table of the House under section 53(5) of the Tamil Nadu General Sales Tax Act, 1959 (Tamil Nadu Act I of 1959).]

72. Notification issued with Roc. No. 208854/72-E5, dated the 4th December 1972 in regard to extension of certain provisions relating to water-supply under the Tamil Nadu District Municipalities Act, 1920 in the entire area of Uppiliapuram Town Panchayat in Tiruchirappalli district. [Laid on the table of the House under section 199(2) of the Tamil Nadu Panchayats Act, 1958 (Tamil Nadu Act XXXV of 1958).]

B. Reports, Notifications and Other Papers.

40. Notification issued with G.O. Ms. No. 3428, Revenue, dated the 19th December 1972, in regard to repeal of the Kandukrishi Pattom Land Assignment Rules, 1962.

41. Notification issued with G.O. Ms. No. 193, Revenue, dated the 29th January 1973, in regard to remission of stamp duty chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899), in respect of the sale deed in favour of the Villupuram Tamil Nadu Electricity Board Staff Co-operative House Building Society Limited, Villupuram.

42. Notifications issued with G.O. Ms. No. 88, Revenue, dated the 11th January 1973, in regard to remission of stamp duty and registration fees chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) and the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908) in respect of the mortgage deed to be executed by the Southern Structurals Limited, Madras in favour of the Tamil Nadu Industrial Investment Corporation Limited, Madras.

43. Notifications issued with G.O. Ms. No. 3476, Revenue, dated the 27th December 1972, in regard to remission of stamp duty and registration fees chargeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 1899) and the Indian Registration Act, 1908 (Central Act XVI of 1908), in respect of the sale deeds to be executed for the purchase of agricultural lands by the repatriates from Burma and Ceylon.

44. Notification issued with G.O. Ms. No. 72, Revenue, dated e 9th January 1973, in regard to remission of stamp duty argeable under the Indian Stamp Act, 1899 (Central Act II of 99) in respect of the mortgage deed to be executed by the Tamil adu Electricity Board for taking a loan from the Life Insurance orporation of India.

45. Notifications issued with G.O. Ms. No. 3474, Revenue, ated the 27th December 1972, in regard to remission of stamp uty and registration fees chargeable under the Indian Stamp ct, 1899 (Central Act II of 1899) and the Indian Registration Act, 908 (Central Act XVI of 1908), in respect of the mortgage deeds o be executed by the repartiates from Burma and Ceylon in favour f the Government for obtaining loan under the housing scheme or purpose of rehabilitation.

46. Order issued with G.O. Ms. No. 2649, Revenue, dated the 7th October 1972 (English and Tamil) along with the copy of the Patta Pass Book.

47. Answers to unstarred Questions Nos. 27 to 31.

£ 48. Speech by Hon. Thiru N. V. Natarajan, Minister for Labour on Demand 39—Stationery and Printing. (English and Tamil)

£ 49. Review on the working of the Stationery and Printing Department during the year 1972–73. (English and Tamil)

£ 50. Pamphlet on "Housing in Tamil Nadu 1972–73" (English and Tamil)

£ 51. Pamphlet on "Slum Clearance in Tamil Nadu 1972–73". (English and Tamil).

£ 52. Speech by Hon. Thiru N. V. Natarajan, Minister for Labour on Demand 28—"Labour including Factories for the year 1973–74" (English and Tamil).

£ 53. Review on Labour in Tamil Nadu 1972–73. (English and Tamil).

£ 54. Review on the progress made in Co-operative Development Schemes, 1972–73. (English and Tamil)

£ 55 Speech by Hon. Thiru K. Anbazhagan, Minister for public Health on the Demand for Public Health Grants 1973–74. (English)

£ 56. A Review on the Administration and Enforcement of Excise and Prohibition Acts in Tamil Nadu State during 1972–73. (English and Tamil)

£ 57. சேலம்-கடலூர் வட்டாரம், வட்டார வளர்ச்சித் திட்ட வழிகாட்டி.— Speech by Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health at Salem. (A guide for Regional Development). (Tamil)

£ 58. A Summary of Madras Metropolitan Development Plan, 1971–91. (English)

£ 59. Performance Budget on Industries, 1973–74.

£ 60. Performance Budget on Health Services and Family Planning, 1973–74.

£ 61. Performance Budget on Medical Education, 1973–74.

£ 62. Performance Budget on ' Backward Classes ' 1973–74.

£ 63. Performance Budget on ' Industries ', 1973–74.

£ 64. Speech by Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health on the Demand for Medical Grants, 1973–74. (English and Tamil)

£ 65. Policy Note on Demand No. 30—Backward Classes Department 1973–74. (Tamil)

& 66. A Review on Industrial Growth in Tamil Nadu—Major Industries 1972–73. (English and Tamil)

& 67. A Review on Industrial Growth in Tamil Nadu—Small Scale Industries, 1972–73. (English and Tamil)

& 68. A Review on Industrial Growth in Tamil Nadu—Mineral Development 1972–73. (English and Tamil)

& 69. A Review on the Tamil Nadu Government comes to the Rescue of Sick Units 1972–73. (English and Tamil)

& 70. A Review on Industrial Growth in Tamil Nadu—Hand loom and Textile, 1972–73. (English and Tamil)

& 71. A Review on Industrial Growth in Tamil Nadu—Sugar Industry, 1972–73 (English and Tamil).

& 72. A Review on Industrial Growth in Tamil Nadu—Industrial Finance, 1972–73 (English and Tamil).

& 73. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Industrial Development Corporation Limited, 1972–73 (English and Tamil).

& 74. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Small Industries Corporation Limited 1972–73, (English and Tamil).

& 75. A Review on Industrial Growth in Tamil Nadu—Small Industries Development Corporation, 1972–73 (English and Tamil).

& 76. A Review on Industrial Growth in Tamil Nadu—Tamil Nadu Textile Corporation Limited, 1972 (English and Tamil).

& 77. A Review on Industrial Growth in Tamil Nadu—State Industries Promotion Corporation of Tamil Nadu Limited, 1972–73 (English and Tamil).

& 78. Pamphlet on Tamil Nadu Small Industries Corporation Limited (cover).

& 79. Pamphlets in State Industries Promotion Corporation of Tamil Nadu Limited. (cover)

@ 80. Report and Proceedings of the Joint Select Committee on the Tamil Nadu Buildings (Lease and Rent Control) Second Amendment Bill, 1972 (L.A. Bill No. 39 of 1972)

£ Circulated to all M.L.Cs. on 15th March 1973.

& Circulated to all M.L.Cs. on 16th March 1973.

@ Circulated to all M.L.Cs. on 19th March 1973.

இணைப்பு

[6-ஆம் பக்கத்தில் 28-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்படாத வினாவின் விடையைக் காண்க.]

(அ) (i) இருபத்தைந்து.

(ii) முப்பத்திரண்டு.

(இ) ரூ. 65,790 அல்லது ரூ. 65,800.

மாவட்ட வாரியாக விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டிருக்கின்றன.

வரிசை எண்ணும், மாவட்டமும்.	அரசாங்க கட்டிடங்களில் உள்ள அரிசன நல அலுவலகங்கள்.	வாடகைக் கட்டிடங்களில் உள்ள அரிசன நல அலுவலகங்கள்	
		அலுவலகங்களின் எண்ணிக்கை.	செலுத்தப்பட்டு வரும் வாடகை ரூ. (ஆண்டு ஒன்றுக்கு.)
(1)	(2)	(3)	(4)
1. திருநெல்வேலி ..	4	1	1,320
2. தென் ஆற்காடு ..	1	4	6,360
3. வட ஆற்காடு ..	2	3	3,960
4. செங்கல்பட்டு ..	2	3	3,300
5. தஞ்சாவூர் ..	1	4	9,180
6. இராமநாதபுரம் ..	1	4	3,510
7. தர்மபுரி	2	1	..
8. கன்னியாகுமரி ..	1	..	..
9. கோயம்புத்தூர் ..	1	3	5,880
10. நீலகிரி ..	1	..	..
11. திருச்சி .	3	2	2,160
12. மதுரை ..	2	3	3,480
13. சேலம் ..	2	3	2,640
14. சென்னை	2	1*	24,000
மொத்தம் ..	25		65,790

* Pre Examination Training Centre, Madras City.

உள்ளடக்கம்

	பக்கம்
1. வினாக்கள்—விடைகள்	15—32
2. அரசினர் தீர்மானம்—கல்வி முனனேற்றம் குறித்த குறிப்பின் மீது விவாதம்	33—83
3. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்	83—85
இணைப்புகள்	86—208

புதன் கிழமை, 1973 மார்ச் 21

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்ட பத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

I. வினாக்கள்-விடைகள்.

உடு குறியிடப்பட்ட வினாக்கள்.

Vasectomy Operation.

*213· THIRU A. R. DAMODARAN (on behalf of THIRU G. SWAMINATHAN): Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether it is a fact that Vasectomy operation was conducted on an unmarried youth against his wish on 24th December 1971 at Ariyalur Hospital; and

(*b*) if so, the action taken against those who were responsible for the same?

வாசக்டமி அலுவை சிகிச்சை.

திரு ஏ. ஆர். தாமோதரன் (திரு ஜி. சுவாமிநாதன் சார்பில்): மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) கல்யாணமாகாத ஓர் இளைஞருக்கு அவருடைய விருப்பத் திற்கு மாறுக வாசக்டமி அறுவை சிகிச்சை அரியலூர் மருத்துவமனையில் 1971, டிசம்பர் 24-ல் செய்யப்பட்டது உண்மையா?

(இ) ஆமெனில், அதற்குப் பொறுப்புள்ளவர்கள் மீது எடுத்த நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

[1973 மார்ச் 21

MR. CHAIRMAN : THIRU A. R. DAMODARAN.

THIRU A. R DAMODARAN : Sir, I put only the main question.

திரு கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, விருப்பம் இல்லாத வாலிபர்களுக்கும், கருத்தடைக்காக "ஆபரேஷன்" செய்வதாகப் பல புகார்கள் செய்யப்படுகின்றன. அதுமாதிரி ஏதாவது புகார்கள் அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததுண்டா, ஏதாவது நடவடிக்கை எடுத்ததுண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, விருப்பம் இல்லாதவர்கள், அதுவும் வாலிபர்கள், கருத்தடைக்காக அறுவை சிகிச்சை செய்வது அனுமதிக்கப்படுவதில்லை. திருமணம் ஆனவர்களாக இருக்க வேண்டும். குறைந்தது 25 அல்லது 26 வயதிற்கு மேற்பட்டவர்களாக இருக்கவேண்டும். எல்லா முறைகளும் இருக்கின்றன. சில பேர் சிகிச்சை செய்துகொள்கிறபோது, 30 வயது என்று சொல்லி, 60 அல்லது 70 ரூபாயை வாங்கிக்கொண்டு போய்விட்டு, யாராவது அவருக்கு யோசனை சொன்னவுடன், பின்னாலே 21 வயது என்று மாற்றிக்கொண்டு, புகார் செய்திருக்கிறார்கள். ஆனால், அவர்களுக்கு வாக்காளர் பதிவேட்டில் உள்ள வயது 30, 28 என்று இருக்கிறது. பள்ளிக்கூட சர்ட்டிபிகேட் 26 என்று இருக்கிறது. ஆக இந்தப் புகார்களை அதிகப்படுத்துவதிலே சிலர் அக்கறையாக இருக்கிறார்களே தவிர உண்மையாக அப்படி இளைஞர்களுக்கு அறுவை சிகிச்சை செய்வதை அரசு அனுமதிக்கவில்லை, அது தடுக்கப்பட்டும் இருக்கிறது.

திரு எஸ். ஜெயராம ரெட்டியார் : தலைவரவர்களே, இந்த "வாசெக்டமி ஆபரேஷன்" செய்வதற்கு ஒரு "டார்ஜெட்"-ஐ ஒவ்வொரு ஜில்லாவிற்கும் இவ்வளவென்று அரசு நிர்ணயித்திருப்பதால், அந்த டார்ஜெட்டை அடைய வேண்டுமென்பதற்காக, வயது அதிகமானவர்களைக் கூட கூட்டிக்கொண்டு போய் ஆபரேஷன் செய்திருக்கிறார்களென்ற தகவல் எனக்குத் தரப்பட்டிருக்கிறது. அதுபற்றி அரசு ஆராயுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, நிர்ணயிக்கப்பட்ட டார்ஜெட்படி அகில இந்திய கொள்கைப்படி, மாதிலத்திலுள்ள மக்கள்தொகையில் ஒரு சதவிகிதமாவது செய்யப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. நாங்கள் ஒரு சதவிகிதத்தைக்கூடச் செய்யவில்லை. ½ சதவிகிதம் அளவுக்குத்தான் செய்கிறோம். திருமணமான தம்பதிகளுள், 10 பேருக்கு ஒருவராவது ஓர் ஆண்டில் அறுவை சிகிச்சை செய்துகொள்வதென்ற சூழ்நிலை இருக்குமானால், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் ஓரளவுக்கு வெற்றி பெறும். ஆனால் சிலபேர் வயதானவர்களுக்கும் செய்கிறார்களே என்று கேட்கிறார்கள். வயதானவர்களுக்கும் குழந்தை பிறக்கிறதென்பதை நாம் மறுப்பதற்கில்லை.

1973 மார்ச் 21]

* 214 Q.–THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the number of Vasectomy operations has been on the decrease in recent years ; and

(b) if so, the reasons there for ?

திரு எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) அண்மை ஆண்டுகளில், ஆண்களுக்கான கருத்தடை அறுவை சிகிச்சைகள் எண்ணிக்கையில் குறைந்துள்ளனவா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு க. அன்பழகன் : (அ) & (இ) இல்லை. பல மாவட்டங்களில் நடத்திய தீவிர குடும்பநல மூனேப்பு இயக்கங்களின் காரணமாக 1971–72 ஆண்டிலும், 1972–73-ம் நடப்பு ஆண்டிலும் ஆண்கள் அறுவைச் சிகிச்சை எண்ணிக்கையில் உயர்ந்துள்ளது.

திரு எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, இந்த அறுவை சிகிச்சையால், சிலருக்கு வேறுவிதமான உபாதைகள் ஏற்படுவதாக மக்களால் பேசப்படுகிறது. இதை அரசு அறியுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த ஆண்டிலே மட்டும் 250,000 பேருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது. அதிலே 5, 6 புகார் கடிதங்கள் வந்திருக்கின்றன. வேண்டுமானால், "எங்களை அவர்கள் வற்புறுத்தி அழைத்துக்கொண்டு போனார்கள்" என்று சொல்கிற புகார்கள் 10 அல்லது 15 இருக்கலாம். ஆனால், அவர்கள் அந்த நேரத்தில் டாக்டர்களிடத்தில், "நான் செய்துகொள்ளவில்லை" என்று மறுத்துவிட்டால், டாக்டர்கள் செய்ய மாட்டார்கள். ஆகவே இந்தப் புகார்கள் எல்லாம், இந்தக் குடும்ப நலத் திட்டத்திற்காக நடைபெறுகிற அறுவை சிகிச்சைபற்றி, அவை எவ்வளவு விஞ்ஞானமுறைப்படி நடைபெறுகிறதென்பதைப்பற்றித் தெளிவாக மக்களுக்குத் தெரிவிப்பதற்கு இன்னும் போதுமான வாய்ப்பு இல்லாத காரணத்தால், சஞ்சல மனப்பான்மையிலுடைய வீளவு என்றுதான் நான் கருதுகிறேன்.

திரு ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : ரிஷிவந்தியத்தில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர் திருமணம் ஆனவரா ? திருமணம் ஆகாதவரா ? என்று அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 21

திரு. டி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, அது சம்பந்தமாக.....

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: The Hon. Member has come late and his question has been taken up and answered already. இது திரு வெள்ளபாண்டியன் கேள்வி. உங்கள் கேள்வி முடிந்து விட்டது. இப்போது திரு வெங்கடேஸ்வர தீக்ஷிதர் கேள்வி.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, கேட்ட கேள்வி தொடர்புடைய கேள்வியென்ற காரணத்தால் பதில் சொல்ல விரும்புகிறேன். அந்தக் கேள்வி கேட்ட நாளில் யாருக்கும் அறுவை மருத்துவ மூலையில் அறுவை சிகிச்சை செய்யப்படவில்லை. அதோடு நடைபெற்றதாகச் சொல்லப் பட்ட அறுவை சிகிச்சைகள் வேறு தேதிகளில் நடைபெற்றவை. அப்படி நடைபெற்றதில் ஒருவருடைய பெயர் திரு ராஜூ, வயது 32, திருமணமான காரணத்தால் தகுதி உடையவர், "எலிஜிபிள்". இன்னொரு தேதியில் நடைபெற்றது: திரு. ராமலிங்கம், வயது 40, "எலிஜிபிள்". இன்னொரு நாளில் நடைபெற்றது: திரு கருப்பன், வயது 35, "எலிஜிபிள்". ஆகவே அந்தக் குறிப்பிட்ட தேதியிலோ, அந்த வாரத்திலோ அல்லது அந்த சமயத் திலோ அப்படி ஒருவருக்கு சிகிச்சை நடைபெறவே இல்லை.

திரு. டி. சுவாமிநாதன் : தலைவரவர்களே, இது சம்பந்தமாக சப்-மாஜிஸ்டிரேட் கோர்ட்டிலே ஒரு வழக்கு தாக்கல் செய்யப்பட்டதாகச் சொல்லப்படுகிறது. அதுவும் ரிஷிவந்தியம் சம்பந்தப்பட்ட.....

[Hon. Chairman passed on to the next question.]

Vasectomy Operation.

*215 Q. THIRU Y. VENKATESWARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether it is a fact that Vasectomy operation was done in the Primary Health Centre of Rishivandiyam, South Arcot District to a 21 year old, unmarried youngster during the Intensive Family Planning Campaign —

(b) whether the operation was done by coercion when the youngster was in an intoxicated condition due to the intoxicants administered to him by the teachers, who brought him for the operation ;

(c) whether the Government are aware of the fact that the youngster filed a case in the court ; whether the Sessions Judge awarded in his judgment that a cognizable offence had been committed ; and

(d) if so, whether any action has been taken against the teachers for the above reasons by the Government, if so, the action taken against them ; and if not, the reasons for not taking any action against them ?

1973 மார்ச் 21]

வாசக்டமி அறுவை சிகிச்சை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன் :—

(அ) குடும்பக் கட்டுப்பாடு தீவிர இயக்கத்தில் தென்னாற்காடு மாவட்டம் ரிஷிவந்தியம் சுகாதார நிலையத்தில் திருமணமாகாத 21 வயது வாலிபர் ஒருவருக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை (Vasectomy) செய்யப்பட்டது உண்மையா ?

(இ) அறுவை சிகிச்சைக்கு அவரை அழைத்து வந்த ஆசிரியர்கள் அவருக்கு போதை கொடுத்து தன் சுய நினைவற்று இருக்கும்போது நிர்ப்பந்தத்தின்பேரில் அறுவை சிகிச்சை செய்யப்பட்டதா ?

(உ) மேற்படி நபர் நீதிமன்றத்திற்குச் சென்றது அரசிற்குத் தெரியுமா ? நீதி மன்றத்தில் செஷன்ஸ் நீதிபதி "தவறு நிகழ்ந்தது" என்று தனது தீர்ப்பில் கூறியிருக்கிறாரா ?

(எ) ஆமெனில், மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காக ஆசிரியர்கள் மீது அரசினால் நடவடிக்கை எடுக்கப்பட்டதா? ஆமெனில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? இல்லையெனில், நடவடிக்கை எடுக்காமைக்கு காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ), (இ), (உ) & (எ) : அவை முன் விவர அறிக்கை (1) ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, அந்த நபர் திருமணம் ஆனவரா, திருமணம் ஆகாதவரா என்று அறிய விரும்பு கிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : விவர அறிக்கையில் இருக்கலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : விவர அறிக்கையில் இல்லை.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : அந்த விவரம் என்னிடம் இல்லை. வினாவில் கேள்வியில் அது இல்லை.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, அவருடைய வயது (குறுக்கீடு).....அந்த வழக்கறிஞர் எந்த வயதை ஒப்புக்கொள்ளுகிறார் என்பதை அறிய விரும்புகிறேன். 33 வயதை ஒப்புக்கொள்ளுகிறாரா, அல்லது 21 வயதை ஒப்புக்கொள்ளுகிறாரா, என்பதை அறிய விரும்புகிறேன். மேற்கண்ட வயதுகளை என்று சொல்லவில்லை. "மேற்கண்ட வயதை அவருடைய வழக்

(1) 85-86-ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 21

கறிஞர் ஒப்புக்கொண்டுள்ளார். எனவே, அவருடைய வயது 21 அல்ல" என்று சொல்லப்பட்டிருக்கிறது. எந்த வயதை நிர்ணயம் செய்திருக்கிருர்களென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, பள்ளிக்கூடசான்றிதழில் 28 என்று இருக்கிறது. அவருடைய வயது வாக்காளர் பட்டியலில் 33 என்று இருக்கிறது. ஆகவே, அது 27-ஐ விடக்கூடத்தான் இருக்கவேண்டும். பள்ளிக்கூட சான்றிதழ்தான் அடிப்படையாகக் கருதப்படவேண்டும்.

Fatal cases due to consumption of drugs.

*216 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether a number of fatal cases of children occurred in Madras City about August 1972, after consumption of drugs ;

(b) if so, the details thereof ; and

(c) the action taken thereon ?

மருந்துகளை உட்கொண்டதால் குழந்தைகள் சாவு.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :—

(அ) மருந்துகளை உட்கொண்டதால் 1972-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் சென்னை மாநகரில் பல குழந்தைகள் இறந்தனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) அவர்களுக்குக் கொடுக்கப்பட்ட பிப்மால் என்ற மருந்திலும், பிப்மால்-சி என்ற மருந்திலும், டை எதிலின் க்ளைகால் என்ற மருந்திலும் நச்சுத் தன்மை இருந்ததால் எழும்பூர் அரசு குழந்தை நல விடுதியில் ஜூலை, ஆகஸ்ட் மாதங்களில் 16 குழந்தைகள் இறந்தன.

(உ) மருந்தின் இருப்புகள் கைப்பற்றப்பட்டன. பொதுமக்களும் மருத்துவர்களும், விற்பனையாளர்களும் மருந்தை உபயோக்கவேண்டாமென எச்சரிக்கப்பட்டனர். தயாரிப்பு உரிமம் (Licence) தற்காலிகமாக நிறுத்தப்பட்டது. அவர்கள்மீது வழக்கும் தொடரப்பட்டது.

1973 மார்ச் 21]

Children admitted at the Government Hospital, Koilpatti.

*217 Q.— THIRU S. VELLAPANDIAN AND THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state :

(a) whether a number of children of the Elementary School, Kazhugumalai, were admitted at the Government Hospital, Koilpatti, about 30th August 1972 ; and

(b) if so, the reasons therefor ?

கோவில்பட்டி அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்ட குழந்தைகள்.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் & திரு. எல். பலராமன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்:—

(அ) கழுகுமலை தொடக்கப்பள்ளி குழந்தைகள் பலர் 1972 ஆகஸ்டு 30-ஆம் நாள் வாக்கில் கோவில்பட்டி, அரசு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டனரா ?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : (அ) ஆம்.

(இ) 55 குழந்தைகள் அப்படிப்பட்ட பகல் உணவை உண்டதன் காரணமாக வாந்தி எடுக்கவும், வயிற்றுப்போக்கு ஏற்படவும், மயக்கம் ஏற்படவும் நிலைமைகள் உண்டாகியது. அவர்கள் அனைவரும் கோவில்பட்டி மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்றுத் திரும்பினர்.

4-10 பி.ப.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு தலைவரவர்களே, மதிய உணவு சமையல் செய்து போடப்படுவதிலே சில குறைகள், தவறுகள் செய்யப்படுகின்றன. அப்படி கவனக் குறைவாகப் பணிபுரிகின்றவர்கள்மீது இந்த அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அப்படி என்ன விதமான தவறு நடைபெற்றது என்பது பற்றி மாவட்ட நலத்துறை அதிகாரி அவர்களே அங்கே பரிசோதனை நடத்தியிருக்கிறார்கள். அங்கே அவர்களுக்காக நன்கொடையாக வழங்கப்பட்ட அந்தப் பொருள்களான..... Non-fat dry milk, Wheat Soya Blend, Soyabeen Salad Oil, Corn-Soya milk, Wheat Soya Blend ஆகியவையும் உண்ட பின்னுலே ஏற்பட்ட விளைவுகளுக்காக Cooked Uppumaவும் Stool culture in buffer

[1973 மார்ச் 21

salt solution ஆகியவை மத்திய ஆராய்ச்சி நிலையத்திற்கு அனுப்பப்பட்டு அவைகளெல்லாம் பரிசோதிக்கப்பட்டன. அப்படிப் பரிசோதிக்கப்பட்ட போது "கல்சர் நெகடிவ்" 'Culture negative for V. Cholera and other pathogens' என்று முடிவு ஆகியிருக்கிறது..... ..Aerobic Spore bearer grown in culture மட்டும்தான் இருந்தது. அது சாதாரணமாக மண்ணிலேயும், காற்றிலேயும் எல்லாம் காணப்படக்கூடிய ஒன்று. அதனாலே எந்த நோய்களோ அல்லது இந்த மாதிரியான விளைவுகள் ஏற்படுவதில்லை. ஆகவே, கொடுக்கப்பட்ட பண்டங்களைப் பற்றிக் குற்றமாகக் கருதப்படவில்லை. ஆனால் சமையல் நடைபெற்ற அந்த நேரத்தில் என்ன தவறு நடைபெற்றது என்பது முழுவதும் காணப்படவில்லை. இடம் துப்புறவாக வைக்கப்படவில்லை, சுற்றுப்புறச் சூழ்நிலை அவ்வளவு நல்லதாக இல்லை என்ற கருத்து காணப்படுகின்றது விளக்க அறிக்கையில்.

திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, இந்த மதிய உணவில் ஏற்பட்ட தவறுகள், கோ ஸ்தாபனத்தினால் வழங்கப்பட்ட உணவினாலா அல்லது பள்ளியில் உணவு தயாரிக்க உள்ள நடைமுறையினாலா என்று அறிய விரும்புகிறேன். இது போன்ற கோ ஸ்தாபனத்தால் வழங்கப்படும் உணவுப் பண்டங்கள் நீண்டகாலமாக அடைவையில், ஸ்டாக்கில் இருந்து கொண்டிருந்து அவைகளைக் கொடுப்பதனாலே அவைகளில் புழு பூச்சிகள் இருக்கின்றன என்று பரவலாக ஒரு கருத்து கூறப்படுகிறது. இதைக் கட்டுப்படுத்த அரசாங்கம் ஏதாவிலும் தக்க நடவடிக்கை எடுத்திருக்கின்றதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இந்த விளக்க அறிக்கையிலே இருந்து நான்கொடையாகத் தரப்பட்ட உணவுப் பொருளிலே குற்றம் இருந்ததாகக் காணப்படவில்லை. ஆனால் அந்த சமையல் நடைபெற்ற இடம் 'kitchen and store room premises' were found not to be kept clean'. துப்புரவாக வைக்கப்படவில்லை என்ற கருத்திருக்கின்றது. 'There were looms here and there in the kitchen' என்று இருக்கிறது. 'The raw materials for cooking were not properly covered' என்று இருக்கிறது. 'The kitchen was not white washed' என்று இருக்கிறது. இப்படி அவர்கள் நிறைவேற்றக்கூடிய கடமைகளைச் சரியாக நிறைவேற்றவில்லை. என்ற ஒன்றுதான் காணப்பட்டிருக்கிறதே தவிர, அந்த உணவுப் பண்டங்களிலே இன்ன குறை இருந்தது அல்லது புழு பூச்சிகள் இருந்தன என்று காணப்படவில்லை.

திரு. கே. ராஜாராம் : இந்த மாதிரிப் புகார்கள் அடிக்கடி வந்து கொண்டிருப்பதனால் மதிய உணவு தயார் பண்ணக்கூடிய இடத்தைச் சுத்தமாக வைத்துக்கொள்ளுமாறும், பாத்திரங்களை ஈயம் பூசி வைத்துக் கொள்ளுமாறும் பார்த்துக்கொள்வதுடன் இம்மாதிரியான குறைகள் இனி மேல் ஏற்படாமல் இருப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்ய அரசாங்கம் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இவற்றையெல்லாம் நாம் ஆலோசனையாகத்தான் வழங்க முடியும். அவ்வாறு உள்ளவர்

1973 மார்ச் 21]

கள் அவ்வப்போது கவனித்துச் செய்ய வேண்டிய கடமைகளை அக்கறையோடு செய்வார்களானால், இம்மாதிரியான விபத்துக்கள், குறைகள், தொல்லைகள் ஏற்படாது.

Government Hospital, Mannargudi.

*218 Q.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to upgrade the Government Hospital at Mannargudi, Thanjavur District ; and

(b) if so, from when ?

அரசினர் மருத்துவமனை, மன்னார்குடி.

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் மேற்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர் மாவட்டம், மன்னார்குடியிலுள்ள அரசினர் மருத்துவமனையின் தரத்தை உயர்த்துவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், எப்போது முதற்கொண்டு அதன் தரம் உயர்த்தப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அந்த மருத்துவ மனை ஏற்கெனவே இருந்த நிலையிலிருந்து 2—4—1972 முதல் உயர்த்தப்பட்டிருக்கின்றது.

THIRU G. SWAMINATHAN : Sir, may I know whether ayn honorary doctor will be appointed in the hospital which has been upgraded ?

THE HON. THIRU K. ANBAZHAGAN : Sir, threre is no necessity to appoint any honorary doctor whenever we increase the number of beds in any hospital. Anyhow, I am not aware whether any honorary doctor has been appointed or not.

வினாக்கள் 211, 212.—மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : இரண்டு கேள்விகளையும் ஒரே நேரத்தில் எடுத்துக்கொள்ளலாம். கேள்விகள் கேட்ட இருவருமே இப்போது அவையில் இல்லை.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : ஏற்கெனவே பதில் சொல்லப்பட்ட கேள்விகள்தான்.

[1973 மார்ச் 21

Idols Theft.

*211 *Q.*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU M. ARUMUGASWAMI): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether the Government are aware of the theft of costly idols at a Siva Temple near Mariamman Koil in Thanjavur District about 20th February 1972;

(*b*) if so, the details thereof; and

(*c*) the action taken thereon?

கடவுளர் சிலைகள் திருட்டு.

திரு. எல். பலராமன் (திரு. எம். ஆறுமுகசாமி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1972 பிப்ரவரி 20-ஆம் நாள் வாக்கில் தஞ்சாவூர் மாவட்டம் மாரியம்மன் கோயில் அருகிலுள்ள சிவன் கோயிலில் விலை மதிப்புற்ற கடவுளர் சிலைகள் திருட்டுப் போனதை அரசு அறியுமா?

(இ) ஆமெனில், அது பற்றிய விவரங்கள் யாவை?

(உ) அது குறித்து எடுக்கப்பட்ட மேல் நடவடிக்கை என்ன?

*212 *Q*—THIRU L. BALARAMAN (on behalf of THIRU V. ISVARMURTI): Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether a number of idols have been missing from Sri Kailasanatha Sivan Temple near Thanjavur about 18th March 1972; and

(*b*) if so, the details thereof?

திரு. எல். பலராமன் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்): மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சாவூர்க்கருகிலுள்ள ஸ்ரீ கைலாசநாதர் சிவன் கோயிலிலிருந்து 1972, மார்ச் 18-ந் தேதி அளவில் கடவுளர் சிலைகள் பல காணுமற் போய்விட்டனவா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: (அ) ஆம்.

973 மார்ச் 21]

(இ) (2) மாரியம்மன் கோவிலிலுள்ள கைலாசநாத சுவாமி கோவிலிலிருந்து 17—2—1972-ல் சுமார் ரூ. 400 மதிப்புள்ள மூன்று வெண்கலச் சிலைகள் களவு போயின.

காவலர்கள், குற்றம் சாட்டப்பட்டவர்களை 6—3—1972-ல் கைது செய்து சிலைகளைக் கைப்பற்றினர். தஞ்சாவூர் உட்கோட்ட மாஜிஸ்திரேட் குற்றவாளியான தங்கவேலு வன்னியருக்கு ஒரு வருடம் கடுங்காவல் தண்டனை விதித்து விடுதலைக்குப் பின்னர் ஓராண்டு காலம் தனது இருப்பிடத்தை அறிவிக்கவேண்டுமெனவும் தீர்ப்பு வழங்கியுள்ளார். மற்ற குற்றவாளிகளை ரூ. 500-க்கு ஜாமீன் பத்திரம் எழுதிக் கொடுத்து இதே தொகைக்கு இரண்டு நபர்கள் ஜாமீனும் கொடுத்து ஓராண்டு காலத்துக்கு நன்னடத்தை புடன் இருப்பதாக உறுதி அளித்ததின்பேரில் குற்றவாளிகளை நன்னடத்தை சட்டத்தின் 4 (1) பிரிவின்கீழ் விடுதலை செய்தார்.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, புராதனச் சிலைகளைத் திருடுவது என்பதிலே தமிழ் நாட்டிலே ஒரு குழுவினர்தான் தீவிரமாக ஈடுபட்டு, அதை ஒரு தொழிலாகவே ஆரம்பித்திருப்பதை அரசு அறியும் என்று அறிகிறேன். அதைக் கண்டிப்பதற்கு அரசு ஏதாகிலும் நடவடிக்கை எடுத்திருக்கின்றதா? மேலும் அவர்களுக்குத் தண்டனை வழங்குவதில் தீவிரம் காட்டுவதில் அரசு தக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஏற்கெனவே அவர்களுக்குத் தண்டனை அதிகமாக வழங்கப்படுகிறது. ரூபாய் 400 அளவு மதிப்புள்ள சிலையைத் திருடியவர்களுக்குக்கூட ஒரு ஆண்டுக் காலம் தண்டனை வழங்கப்படுகிறது. இந்தச் சிலை திருடுவது என்பது தமிழ் நாட்டிலே மாத்திரம் அல்ல, இந்தியா முழுவதுமேகூட இருக்கிறது என்பதை உண்மையிலே ஒரு பத்திரிகையிலே வந்த குறிப்பின்படி அறிகிறோம். கடந்த மூன்று ஆண்டுக் காலத்தில், 1970, 1971, 1972-ஆம் ஆண்டுகளில் இந்தியா முழுவதிலும் 2,034 சிலைகள் திருடப்பட்டன என்றும், அதிலே 527 சிலைகள் மீட்கப்பட்டன என்றும், தகவலின்படி 376 பேர்கள் இந்தச் சிலை திருடும் வேலையிலே தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றும் அந்தப் பத்திரிகையில் வந்திருக்கின்றது. இப்படி இந்தியா முழுவதுமே இச் சிலை திருடப்படுவது அங்கங்கேயுள்ள காவல் துறையினரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றது. நடவடிக்கை களும் அவ்வப்போது எடுக்கப்பட்டுள்ளன.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, ரூபாய் 400 மதிப்புள்ள சிலைகள் என்று குறிப்பிட்டார்கள். மதிப்பு அந்த சிலைகளின் வெண்கலத்தினுடைய கனத்தைப் பொறுத்தா அல்லது சிலைகளின் கால மதிப்பைப் பொறுத்தா நிர்ணயிக்கப்பட்டது என்று அறிய விரும்புகின்றேன். அவை எத்தனை நூற்றாண்டுகளுக்கு முன்னால் உள்ள சிலைகள் என்பதையும் அறிய விரும்புகிறேன். இந்தக் களவுகளைத் தடுப்பதற்கு என்று தனி போலீஸ் படை ஒன்று போடுவதாக முன்னால் சொல்லப்பட்டது. அது பற்றி அரசு ஏதாவது ஆராய்ந்ததா என்பதையும் அறிய விரும்புகின்றேன்.

[1973 மார்ச் 21

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, சிலைகளின் வயதைப் பொறுத்துத்தான் அவற்றின் விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. இந்தச் சிலைகளைப் பொறுத்த வரையில், 3 வெண்கலச் சிலைகள், நடராஜர், அம்மன், பிரதோச நாயகர் என்கின்ற மூன்று சிலைகள் களவாடப்பட்டன. இவைகள் பிற்கால சோழனுடைய காலத்தினைச் சேர்ந்த சிலைகள் என்று கூறப்படுகின்றன. ஆகவே தான் அந்த உலோகத்தையும் கணக்கு வைத்துக் கொண்டு, அதே நேரத்திலே காலத்தையும் கணக்கு வைத்துக் கொண்டு அவைகளை மதிப்பிட்டிருக்கின்றார்கள் என்று நான் கருதுகிறேன். இந்தத் திருடுகளைத் தடுப்பதற்கான பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்கின்ற அளவில், இதற்கு என்று இந்த வழக்குகளைத் திறமையாகக் கையாளுவதற்காக, புலன் ஆய்வுத்துறையிலே இன்ஸ்பெக்டர்கள் 2, சப்-இன்ஸ்பெக்டர்கள் 2, தலைமைக் காவலர்கள் 2 பேர் அடங்கிய சிறப்புப் பணியாளர்கள் துறையை, இந்த அரசு இப்படிப்பட்ட சிலைத் திருட்டு வழக்குகளைக் கண்டறிய, அமைக்க சமீபத்திலே ஒப்பளிப்பு வழங்கியிருக்கின்றது. மேலும் காவல் துறையை அதிகப்படுத்த வேண்டுமென்று ஐ. ஜி. இடமிருந்து அரசாங்கத்திற்குச் செயல் குறிப்பு ஒன்று வந்திருக்கின்றது. அதையும் அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கின்றது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, கோயில்களில் விலையுயர்ந்த சிலைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அந்த ஆண்டவன் அங்கேயிருந்து இப்படிப்பட்ட சிலை திருடுபவர்களைக் கண்டுபிடிப்பார்களா அல்லது அவர்கள் இந்த நாட்டைவிட்டே போய் விட்டார்களா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : கடவுளுக்கு விரோதமான ஒரு கேள்வியை அந்தத் தரப்பிலேயிருந்து திரு. வெள்ள பாண்டியன் அவர்கள் கேட்பது உள்ளபடியே வியப்புக்குரிய ஒன்று. ஆனால் இப்போது ஆண்டவனையும் ஆள்கின்றவர்கள் பாதுகாக்க வேண்டியிருக்கின்றது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : தலைவரவர்களே, இந்தியா முழுமையிலே 2,034 சிலைகள் மூன்று ஆண்டுக் காலத்திலே களவு போயிருக்கின்றன என்று முதல் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதிலே தமிழ் நாட்டில் மட்டும் எத்தனை சிலைகள் களவு போயிருக்கின்றன என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, நான் முதலிலே இந்தியா முழுமையும் என்று சொன்னது அரசாங்கத்தினுடைய கணக்கு அடிப்படையில் சொல்லவில்லை. அண்மையிலே பத்திரிகையிலே வந்த குறிப்பின்படி இவ்வளவு என்று சொன்னேன். தமிழ் நாட்டில் மாத்திரம் 1966-லிருந்து எடுத்துக் கொண்டால் கூட, 1966-ல் பதிவு செய்யப்பட்ட வழக்குகள் 50 என்றும், அதிலே கண்டுபிடிக்கப்பட்ட வழக்குகள் 36 என்றும், திருடப்பட்ட சிலைகளின் மதிப்புத்தான் நமக்குத் தரப்பட்டிருக்கிறது. 1967-ல் 21 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன, 5 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1968-ல் 39 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன, 15 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1969-ல்

1973 மார்ச் 21]

28 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன, 11 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1970-ல் 81 வழக்குகள் பதிவு செய்யப்பட்டன, 48 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1971-ல் 31 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 19 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. 1972 மார்ச் 20 தேதி வரை 10 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு 9 வழக்குகள் கண்டுபிடிக்கப்பட்டன. சிலைகளுடைய எண்ணிக்கைபற்றிய விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரம் தரலாம்.

திரு. சி. ஆர். கோலப்பா : தலைவரவர்களே, தி. மு. க. ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தில் தான் இந்தச் சிலைகள் திருடப்படுவதாகக் கூறப்படுகிறதே, அது உண்மையா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவரவர்களே, இது காலா காலமாக நடைபெற்று வருகின்ற ஒரு கைங்கர்யம். இது கழக ஆட்சிக்குக் களங்கம் ஏற்படுத்துவதற்காக நடைபெறுகின்ற செயல் என்று நாம் எண்ணிவிட முடியாது.

Labour Welfare Fund.

*219 . THIRU A. R. DAMODARAN (On behalf of THIRU M. ARUMUGASWAMI) : Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) the procedure adopted for the disbursement of the Labour Welfare Fund ; and

(*b*) the basis on which these disbursements are made ?

தொழிலாளர் நல நிதி.

திரு. ஏ. ஆர். தாமோதரன் (திரு. எம். ஆறுமுகசாமி சார்பில்) : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தொழிலாளர் நல நிதியை பிரித்துக் கொடுப்பதில் பின்பற்றப்படும் முறை யாது ?

(இ) எந்த அடிப்படையில் அது பிரித்துக் கொடுக்கப்படுகிறது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) அரசு நிட்டவட்டமாக ஒப்பளிப்பு வழங்கியுள்ளவையும் தொழிலாளர் நலவாரியம் அனுமதித்துள்ளவையுமான காரியங்களுக்கு தொழிலாளர் நல நிதியிலிருந்து தொகையளிக்கப்படுகிறது. இத்தொகை சம்பந்தப்பட்டவர்களுக்கு, தொழிலாளர் நல வாரியத்தின் செயலாளர் வழங்கும் காசோலைகள் மூலமாக வழங்கப்படுகிறது.

[1973 மார்ச் 21

(இ) தொழிலாளர்கள் அவர்களை நம்பியிருப்போர் ஆகியோரது நலனுக்காக அரசு அவ்வப்போது குறிப்பிடக்கூடிய காரியங்களை மேற் கொள்வதற்காக வாரியம் இந்நிதியிலிருந்து செலவு செய்ய வேண்டு மென்று தொழிலாளர் நல நிதிச் சட்டத்தின் 17-வது பிரிவு வரை யறுக்கிறது. இந்தப் பிரிவின் விதித் துறைகளுக்கிணங்க நிதியிலிருந்து தொகை வழங்கப்படுகிறது. மேற்காணும் காரியங்களுக்காக நிதியிலிருந்து செலவு செய்யப்படலாம் என்று 17-வது பிரிவின் (2) உட்பிரிவு வரை யறுக்கிறது :—

(a) சமுதாய சமூகக் கல்வி நிலையங்கள்.
(b) வாழ்க்கைத் தொழில் வாய்ப்புப் பயிற்சி.
(c) சமுதாயத் தேவைகள்.
(d) கேளிக்கைகளும் மற்ற வகையான மனமகிழ்வு நிகழ்ச்சிகள்.
(e) உருக்கி நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் குணமடைய ஏது வான விடுதிகள் அமைப்பது.
(f) உடல் நலனுக்கேற்ற இடங்களில் விடுமுறை விடுதிகள் கட்டுதல்.
(g) தொழிலாளர்களின் மனைவிமார்களுக்கு பகுதிநேர வேலை தருதல்.
(h) குழந்தைகளை வளர்ப்பதற்காக பள்ளிகள்.
(i) தொழிலாளர்களின் குழந்தைகளுக்கு ஊட்டச்சத்துடன் கூடிய உணவு வழங்குதல்.
(j) உடல் ஊனமுற்ற தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்துதல்.
(k) இச்சட்டத்தின் காரியத்திற்காக அமர்த்தப்பட்ட பணியாளர் களுக்கான சம்பளங்கள், படிகள் ஆகியவை உட்பட இச்சட்டத்தை நிர்வகிப்பதற்கான செலவு.
(l) தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல், தொழிலாளர்களின் சமூக நிலைகளைச் சீர்படுத்துதல் ஆகிய வற்றிற்குத் தேவையானவை என்று அரசு கருதுகிற ஏனைய பொருள்கள்.

ஆனால் தொழிலாளர்களுக்கு வேறுபல சட்டத்தின்படி தொழில் நிறு வன நிர்வாகிகள் செய்ய வேண்டிய வசதிகளுக்கு இந்த நிதியை பயன் படுத்தக்கூடாது.

Child Labour in Hotel Industry.

*220 *Q.* THIRUVALARGAL V. ISVARMURTI and S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Labour be pleased to state :

(*a*) whether the Government are aware of the employment of Child Labour in Hotel Industry ;

(*b*) if so, the details thereof ; and

(*c*) the action taken thereon ?

1973 மார்ச் 21]

ஓட்டல் தொழிலில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துதல்.

திரு. வ. ஈஸ்வர மூர்த்தி & திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக் களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) ஹோட்டல் தொழிலில் சிறுவர்களை வேலைக்கு வைத்துக்கொள் ளப்படுவதை அரசு அறியுமா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

(உ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) தமிழ் நாட்டில் உள்ள உணவகங்கள் எவற்றிலும் சிறுவர்கள் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்ட தகவல் எதுமில்லை.

(இ) &(உ) : இவ்வினா எழவில்லை.

திரு எஸ். எஸ். தென்னரசு : தலைவர் அவர்களே, இதைப் போல் வயதுக்கு வராத சிறுவர்களை சிவகாசி பட்டாசுத் தொழிலில் பயன் படுத்துவது அரசுக்குத் தெரியுமா? அப்படியானால், அதைத் தடுக்க நட வடிக்கை உண்டா என்பதை அறிய விரும்புகிறேன். 4 20 பி.ட

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : அரசுக்கு இந்த விவரம் தெரியாது. மாண்புமிகு உறுப்பினர் ஆதாரத்துடன் தெரிவித்தால், தக்க பரிசீலனை செய்யப்படும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Sales of Government Publications.

*221 *Q.* THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Labour be pleased to state the amount for which the Government publications were sold at the Government Sales Depot during the Calendar year 1972?

அரசு வெளியீடுகள் விற்பனை.

திரு எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்.—

1972-ம் காலண்டர் ஆண்டில், அரசினர் விற்பனை நிலையத்தில் எவ்வளவு தொகைக்கு அரசு வெளியீடுகள் விற்கப்பட்டன ?

மாண்புமிகு திரு என். வி. நடராசன் : 1972-ம் ஆண்டில் தமிழ் நாடு அரசினர் வெளியீடுகள் விற்பனை நிலையத்தில் ரூ. 2,16,932.92-க்கு அரசாங்க வெளியீடுகளும் புத்தகங்களும் விற்கப்பட்டன. அவைகளின் விபரம் பின்வருமாறு :

[1973 மார்ச் 21

	ரூ.	பை.
1. விற்பனை கூடத்தில்	1,26,908	82
2. பண அஞ்சல் மூலம்	48,779	36
3. விற்பனை முகவர் மூலம்	30,156	19
4. பணம் செலுத்திப் பெறும் அஞ்சல் மூலம் ..	11,088	55
	2,16,932	92

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : விஞ்க்கள் 222-ம், 223-ம் ஒத்திப் போடப்படுகின்றன.

Village belonging to the Thiruvavadudurai Adhinam.

* 224. *Q.* THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR ;: Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether the Government are aware of the fact that a document has been executed allowing the enjoyment by an individual of a village in Tirunelveli District, belonging to the Thiruvavadudurai Adhinam ;

(*b*) if so, whether the execution of such a document is allowed under the provisions of the Hindu Religious and Charitable Endowments Act; and

(*c*) whether it has now been challenged?

திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான கிராமம்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட விஞ்க்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) திருவாவடுதுறை ஆதீனத்துக்குச் சொந்தமான திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள ஒரு கிராமத்தைத் தனி நபர் ஒருவருக்கு அனுபவித்துக்கொள்ள எழுதிக் கொடுத்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(இ) ஆம் எனில், அங்ஙனம் எழுதிக் கொடுத்தது அறநிலைய ஆட்சி சட்ட விதிகளின்படி அனுமதிக்கப் பெற்றதா ?

(உ) இப்போது அதில் தாவா எற்பட்டிருக்கிறதா ?

மாண்புமிகு திரு மு. கண்ணப்பன் : (அ), (இ), & (உ)—திருவாவடுதுறை மடம் ஆதீனகர்த்தர் அவர்களால், குற்றுலம் திரு பராசக்தி பெண்கள் கல்லூரி நிர்வாகத்திற்காக, 7-4-1969 மற்றும் 8-9-1969 நாட்களிட்ட நம்பக ஆவணங்கள் (Trust deeds) மூலம் திருநெல்வேலி மாவட்டம், செங்கோட்டை வட்டம், மேக்கரை கிராமத்திலுள்ள மேற்படி இடத்திற்குச் சொந்தமான 944.11 எக்கர் நன்செய் மற்றும் புன்செய் நிலங்களின் மேல் வருமானத்தை சில நிபந்தனைகளுக்

1973 மார்ச் 21]

குட்பட்டுப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று எழுதி வைக்கப்பட்டிருந்தது. இந்த நிர்வாகம், குற்றுலத்திலுள்ள திரு பராசக்தி கல்விக் கழகத்தால் நடத்தப்பட வேண்டுமென்றும், மேற்படி கழகத்தின் தலைவர் திரு. எ. ஆர். சுப்பையா முதலியார் அவர்கள் மேற்படி நில வருமானத்தை மேலாளர் என்ற முறையில் அவரது ஆயுள்வரை நிர்வாகம் செய்து வரவேண்டுமென்பதும் நிர்வாக நன்மை கருதி விதிக்கப்பட்ட நிபந்தனைகளை, மேலாளர் மீறி நடந்தால் மேற்குறித்த ஆவணங்களை (Trust deeds) இரத்து செய்ய ஆதீனகர்த்தருக்கு உரிமையுண்டு என்பதும் இந்த ஆவணங்களின் முக்கிய பகுதிகளாகும்.

மேற்கூறியவாறு நில வருமானத்தை எழுதிக் கொடுக்குமுன் ஆதீனகர்த்தர், இந்து சமய அறநிலையச் சட்டத்தின்படி ஆணையரின் முன் அனுமதி பெறவில்லை. எனினும் இச்செய்தி இந்து சமய அறநிலையத் துறை ஆணையரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதும், அவர் இது பற்றி நடவடிக்கை எடுத்து, இந் நிர்வாகம் சிருறச் செயல்படுவதற்காக சில நிபந்தனைகளை விதித்துள்ளார்.

ஆனால், இந் நிர்வாகத்தை நடத்திவந்த மேலாளர், ஆதீனத்தாரால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு மாறுக நடந்ததாகக் குறிப்பிடப்பட்டு ஆதீனகர்த்தரால் மேற்குறித்த நம்பக ஆவணங்கள் (Trust deeds) 3-7-1972 அன்று ரத்து செய்யப்பட்டுவிட்டன. இந் நிலங்களின் மேற்பார்வை 1382-ம் பசலி முதல் ஆதீனகர்த்தர் அவர்களின் நேரடிப் பார்வையில் இருந்து வருகிறது என்றும் சாகுபடிதாரர்களிடமிருந்து புதிய குத்தகைப் பத்திரங்களும் ஆதீனத்தின் பெயரிலேயே எழுதி வாங்கப்பட்டுள்ளன என்றும் தெரியவருகின்றன.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : தலைவர் அவர்களே, அது கல்லூரிக்கு எழுதிக் கொடுக்கப்பெற்றதால், இப்போது அதிலிருந்து வருகிற வருவாய் கல்லூரிக்கு வழங்கப்படுகிறதா ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, கல்லூரிக் காகத்தான் அந்த நன்செய், புன்செய் நிலங்களிலிருந்து வருகிற மேல் வருமானத்தை எடுத்துக்கொள்ள வேண்டுமென்ற நிபந்தனையோடு மேலாளர் திரு. எ. ஆர். சுப்பையா முதலியாருக்கு எழுதி வைக்கப் பட்டது. ஆனால், அவர் விதிக்கப்பட்டிருந்த சில நிபந்தனைகளுக்கு மாறுபட்டு நடந்துகொண்டிருக்கிறார் என்று தற்போது அந்த ஆதீனகர்த்தர் ரத்து செய்திருக்கிறார். அந்த விவரம்தான் இருக்கிறது. ஆனால் ரத்து செய்வதற்கு முன்பு அதில் வருகிற வருமானம் கல்லூரிக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : தலைவர் அவர்களே, மடாதிபதி அவர்கள் கல்லூரியின் வருவாய்க்கு எழுதி வைத்த சொத்துக்கள் பற்றி அவருக்கும் திரு சுப்பையா முதலியாருக்கும் எற்பட்ட அபிப்பிராய பேதத்தால் ஆவணத்தை ரத்து செய்து கல்லூரி நடப்பதற்கு பாதகம் எற்படுத்திவிட்டதாகத் தெரியவருகிறது. ஆகவே, அதற்கான நடவடிக்கை எடுத்து, கல்லூரி நிதி நிலைமை கெட்டுவிடாமலும் பாதிக்கப்படாமலும் இருக்க மடாதிபதியிடமிருந்து போதிய நிதி ஒவ்வொரு வருடமும் குறையாமல் கிடைக்க

அரசாங்கம் எற்பாடு செய்யுமா, நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : தலைவர் அவர்களே, அந்த மடாதிபதி அவர்கள் மடத்திற்குச் சொந்தமான 944 எக்கர் நிலத்தை கல்லூரியின் வளர்ச்சிக்காகவும், நிர்வாகச் செலவுக்காகவும், எழுதித் தந்தார்கள். இடையில் எந்தக் காரணத்தால் ரத்து செய்தார்கள் என்பது நமக்கு அவ்வளவு தெளிவாகத் தெரியவில்லை. தொடர்ந்து கல்லூரி சிறப்பான முறையில் நடைபெற தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

Contribution to the Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

* 225 *Q.*—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether any Charitable Institution has objected to the sanction of contribution to the Hindu Religious and Charitable Endowments (Administration) Department of Tamil Nadu Government ; and

(*b*) if so, the action taken thereon by the Government?

இந்து அறநிலைய ஆட்சித் துறைக்கு சகாயத் தொகை.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்கு பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) தமிழக அரசின் இந்து அறநிலைய ஆட்சித் துறைக்கு சகாயத் தொகை வழங்குவதை எந்த அறநிலையமாவது ஆட்சேபித்திருக்கிறதா ?

(இ) ஆமெனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) ஆம்.

(இ) நாங்குநேரி திரு வாலுமாமலை மடத்தின் தீயர் சென்னை உயர்நீதி மன்றத்தில் சகாயத் தொகை விதிப்பு விதிதாச்சாரம் செல்லாது என ரிட் மனு (எண் 1665/70) தாக்கல் செய்து அது விசாரணையிலிருந்து வருகிறது. மேற்படி மனுவில் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையின சார்பாக எதிர் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உயர்நீதி மன்றத்தின் தீர்ப்பு எதிர்பார்க்கப்படுகின்றது.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி(*) அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அரசினர் தீர்மானம்—கல்வி முன்னேற்றம் குறித்த குறிப்பின் மீது விவாதம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, "சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள 'தமிழ் நாட்டில் கல்வித் துறையில் முன்னேற்றம்'@ என்னும் அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் பட வேண்டும் "

என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்டமன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள 'தமிழ்நாட்டில் கல்வித் துறையில் முன்னேற்றம்' என்னும் அறிக்கை விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும்."

*THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, I rise to offer a few remarks on the Policy Note on Education placed on the Table of the House. Today, I am able to do so with a great sense of relief unlike the one that we had some time back while having a general discussion on the Budget, Sir. Our hearts then were full of anxious misgivings on account of a threatened agitation that was round the corner. We were all very gratefully aware of the great steps that the Government were then taking to forestall such an agitation by conceding beforehand two of the very important, main demands of the Graduate Assistants in our State. I wish to congratulate the Government, even as I thanked them the other day, on their wisdom in having announced those concessions without waiting for the agitation to materialise. It was just the proper thing to do and it should not be construed as a wrong strategy. If it had been announced some time later, perhaps it might have amounted to surrendering to an agitational approach. The announcement was done in good time ; but in spite of that, the agitation came through and it was extremely unfortunate. We very much strained every nerve to see that the agitation did not come off and today, Sir, we are happy that the agitation has been called off, without any further concession having been wheedled out of the Government. The agitation has been called off quite voluntarily and unconditionally by the very people who started the agitation without perhaps any seeming concession having been received to justify the withdrawal of the agitation even. So, in a way, I am extremely happy that there is no agitation before us and when we met the Hon. the Chief Minister and the Hon. the Education Minister and conveyed to them the happy news that the agitation had been called off, they were pleased to say that the teachers who had been arrested would be released, that the cases against them would be withdrawn, and that there would be no victimisation. All of them were voluntary announce-

பிற பக்கம் 4–30

@ 73—200....ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.

[Thiru M. Rajah Iyer]

ments from their side and there was no bargaining for the stopping of the agitation on the one hand and getting any concession on the othe It was a magnanimous gesture matched by the spontaneity with which the agitation was called off. We were hoping that a cordial atmosphere would once again straightway be restored. But the unfortunate thing about it was that the teachers who were placed under suspension could not go back to schools without offering regret for having launched an agitation and for having abstained from duty from the 5th of March till the date of their rejoining the posts. I think a formal expression of regret has been insisted upon by the Hon. the Chief Minister and the Hon. the Education Minister. I would have been personally most happy, Sir, if that formality had not been insisted upon. I only express my feeling that happy as I am, I would have been happier if the Government had very magnanimously said : " What is there in a formal expression of regret? We permit you all to go back to your posts of duty. We excuse you without your asking for it. " If they had done so, they would have risen up in my estimation. Not that they are any the lower at present. They have done many favours for teachers. I am not tired of recounting the favours they have done for the teachers and I congratulate them on that.

THIRU S. T. ADITYAN : The hon. Member is talking of only two parties. There is also a third party, the parents. What is the feeling of the parents? Will the hon. Member refer to that also?

THIRU G. SWAMINATHAN : Sir, I may also add in this connection that it is not only a letter of regret that has been asked for by the Government. I am very sorry to find that a certain amount of victimisation is also there in the attitude of the Government. The authorities have a pro forma letter of regret and the teachers are asked to sign the same. It has been stated in the pro forma : " I may be permitted to be reinstated (to join) and my reinstatement will not in any way deprive the right of the authorities to take any further action for the period of suspension." What is required, I think, is only a letter of regret. But the authorities insist upon them to sign a declaration wherein they have been asked to say that they are liable for further action. I think this is a kind of victimisation. Again, Sir, I may also point out.....

MR. CHAIRMAN : The hon. Member may have a chance to mention them when he speaks.

THIRU G. SWAMINATHAN : Sir. I am mentroning only for the purpose of getting a clarification.

MR. CHAIRMAN : The hon. Member will get a fair chance later.

THIRU G. SWAMINATHAN : Since, the hon. Member opposite has made a point. I am mentioning some points so that the Hon. Minister may give a clarification and the teachers.....

MR. CHAIRMAN : Does the hon. Member seek to furnish any information to Thiru Rajah Iyer?

THIRU G. SWAMINATHAN : The teachers are prepared to go to the schools. But the Chief Educational Officers have instructed the Headmasters not to allow the President, office-bearers and the ring leaders of the teachers to join duty in the schools. The Headmasters of North Arcot district have been instructed like that. This is another kind of victimisation. In the Corporation High Schools, when all the teachers have been allowed, somehow the teachers who have participated in the agitation have not been allowed to join duty.

THIRU M. RAJAH IYER : Mr. Chairman, Sir, I am on my legs. If the hon. Member will excuse me.....

THIRU C. V. RAJAGOPAL : If everybody wants to safeguard his own position, what will be the position of the Government who will have to safeguard their position?

THIRU M. RAJAH IYER: Mr. Chairman, Sir, my purpose in referring to the letter of regret was quite simple. I am not concerned with the phraseology. I could appreciate the hon. Member Thiru Swaminathan's view that it should be merely formal. I am only anxious that this letter of regret which we are getting from the various teachers who have abstained from duty and who perhaps are willing to give such a letter of regret, must not be used against them on a future date to block their promotional chances. Because the Hon. the Chief Minister has made it very clear that there is no question of victimisation of anybody and that the various teachers will not be made to pay any penalty for having participated in this agitation, they are quite willing to give such a letter of regret which is merely formal and innocuous. But all these are Graduate Assistants and some of them are likely to be promoted as Headmasters of institutions and every one of them has got a selection grade open to him within a particular period. If the Hon. the Education Minister says that these letters of regret have become necessary because some thousands have already given it and because there should be uniformity, I am anxious that these letters should not be made tools in order to punish the teachers on a subsequent date when their pro

motional chancer are there before them. That would indeed be a true gesture of non-victimisation. That alone would lend substance and strength to the gracious concession which the Hon. the Minister for Education and the Hon. the Chief Minister were pleased to extend saying that no teacher would be victimised as a consequence of the unfortunat agitation in which they had participated.

பிறகல் 4-40 If such an assurance could be given by the Government, I would be more happy and feel mightily relieved as far as this particular unfortunate episode is concerned. My hon. Friend Thiru Adityar referred to the part of the parents. I quite agree with him that parents do have a vital stake if the teachers were to go on strike. Parental co-operation is the bedrock on which the teacher welfare stands. In fact, most of the parents resented this sort of agitation especially during this part of the year. If this sort of agitation has been called off quickly and spontaneously, it was because parents everywhere made it abundantly clear that if such an agitation was held during the month of March, the interest of the students would be at stake. I quite agree with the hon. Member and also share the anxieties of the parents. My earnest appeal to the Government would beto see that the letters of regret about what they did, rightly or wrongly, on the 5th March 1973 are ignored. Since they had called off their strike spontaneously and voluntarily on the 17th March, the letters of regret from them could be ignored. If the letters of regret are to be insisted on for formality's sake, nobody should be called upon to pay the price for what they had taken recourse to due to excitement and emotion. I feel that cordiality. mutual understanding and mutual harmony are very necessary on this matter. I hope we have heard the last of this unfortunate black chapter in the history of education, Sir.

In this respect, I would like to refer to the need for the revival of the Legislature Consultative Committee on Education. My own feeling is if such a Legislature Consultative Committee had been constituted, perhaps they would have taken charge of such issues and anticipated the agitation round the corner and would have avoided such agitations. Such a Committee could have anticipated the grievances, hitches and clashes, and advised the Government to take suitable action on the 3rd March or 28th February or even earlier and avoided the teachers thronging in the City of Madras. If such a Committee had been there, the young and excited teachers who had assembled here would have gone back to their places without the agitation materialising. If such a decision was taken a week or much earlier, we might have perhaps avoided such an agitation taking place. I would, therefore, plead with the Hon. the Minister for Education to see that the Legislature Consultative Committee on Education is constituted at such a time when such grave

issues shake the very foundation of society. The Education Consultative Committee could give proper advice to the Government in times when such incidents raise their ugly heads again.

I must also on this occasion refer to the great sense of disappointment which the Lecturers particularly serving in Aided Colleges have given expression to.They were looking forward to the extension of retirement benefits to them in the Budget. There are 127 Aided Colleges, as against 49 Government Colleges. It is a pity, Sir, that all these College Teaching Staff, not to speak of the non-teaching staff, do not have the liberalised retirement benefits. The Lecturers in Government Colleges are having those benefits, which, unfortunately, have beendenied to the Lecturers in Aided Colleges. They were hoping that these liberalised retirement benefits would be extended to them, since they have not heard the last word on the subject. I hope the Hon. the Minister for Education would announce that the retirement benefits would be extended to the College staff also. More than these retirement benefits, we have to think of the pathetic conditions in which the College staff are functioning to-day due to lack of security, Sir, Only this morning, some of them met me and told me that four Women Lecturers in a Women's College in the City of Madras had been summarily served with a notice dispensing with their services after three months' time, Sir. Lady Lecturers in a College in Chromepet have been served with such a notice by the Management. This sort of summary dispensation is an unfortunate state of affairs in Colleges. As I have already pointed out, even teachers in schools would seem to be much better off than the Lecturers in Aided Colleges. I feel that something should be done to see that the College staff get security of service, which is necessary for them in order to make them function quite efficiently. I find, Sir, that the Assistant Professors in Colleges are to be a gazetted lot hereafter. I am not able to understand this modern craze for Gazetted status in public life. I do not know how it adds to their status. Only it adds to their responsibility. But I think that one gets a little sentimental satisfaction and some sort of pleasure, if he calls himself a Gazetted Officer. The Assistant Professors in Government service hereafter will get their Gazetted rank. May I appeal to the Hon. the Minister for Education to see that this is extended to Headmasters of High Schools also ? Sir, especially Headmasters of High Schools should get the Gazetted rank and Gazetted status, particularly the Headmasters in villages. The Headmaster in a village High School is the only person of any importance in the village. If he is a Gazetted Officer, parents and students of the village need not go far to get the certificates signed by a Gazetted Officer. He will be competent to sign certificates like any other Gazetted Officer. I hope that Headmasters of Government High Schools also would be made Gazetted Officers.

[Thiru M. Rajah Iyer] [1973 மார்ச் 21

I cannot understand the wisdom of banning the appointment of secondary grade teachers in Higher Grade Posts. That ban should go. If for no other reason, it should atleast be construed that secondary grade teachers are better than higher grade teachers. They should be appointed in higher grade posts. We have abolished Higher Grade Training. If there is any vacancy in the higher grade posts, it should now be filled up by appointing the secondary grade teachers also. If we have to wait for higher grade teachers, it takes a lot of time. The secondary grade teachers should be made eligible for appointment to that post.

(The Hon. Chairman sounded the gong.)

Just a minute, Sir. I think the other points which I would like to mention could be reserved for the Appropriation Bill. I would just end my speech by congratulating the Depratment of Education on the installation of I.B.M. Computer System to process the work of the S.S.L.C. Public Examination. It becomes fool-proof and quick. In one stroke, we have jumped from the bullock-cart age to the jet age for tabulation work especially in the months of May-June. This will solve the present problem to a considerable extent. I am happy that all the manual work has been ended and I.B.M. Computers have been installed, Sir.

Thank you, Sir.

திரு. வே. தங்கப்பாண்டியன் : மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே, இந்தக் கல்வி வளர்ச்சி அறிக்கையின் மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்வதில் பெருமகிழ்ச்சியடைகிறேன். தமிழ்நாட்டில் கடந்த 10 ஆண்டுக்காலம் கல்வித் துறையில் நடைபெறுகிற மிகப் பெரிய மாறுதல்களை தமிழகம் மிகப் பெரிய அளவிலே வரவேற்றுக்கொண்டிருக்கிறது. இந்தியத் துணைக் கண்டத்திலேயே தமிழ் நாட்டில் நடைபெறுகிற கல்வி வளர்ச்சியை பிற மாநிலங்களிலுள்ள மக்கள் வரவேற்றுக்கொண்டிருக்கிறார்கள். நம்முடைய மாநிலத்திலிருந்து சென்ற ஆண்டுக்கு முந்திய ஆண்டு வேறுபல இடங்களுக்குச் சென்ற மதிப்பீட்டுக் குழு வேறு பல பணிகளை மேற்கொண்டபோது, நான் சந்தித்த பல்வேறு கல்வி நிபுணர்களெல்லாம் தமிழ் நாட்டில் பணியாற்றிய மிகப் பெரிய கல்வி நிபுணர்களைப் பற்றியும், கல்விச் சீர்திருத்தங்கள் பற்றியும் மிகப் புகழத் தக்க முறையில் பாராட்டியிருக்கிறார்கள். இன்றைக்கு தமிழ் நாட்டில் நாம் மேற்கொண்டிருக்கிற இந்தச் சீர்திருத்தத் திட்டங்கள் தமிழ் நாட்டில் கல்வி வளர்ச்சியை மேலும் பெருக்கியிருக்கின்றன என்று பெருமையாக நான் சொல்லிக்கொள்கிறேன். இன்றைய தினத்தில் கல்வியை ஒரு பிரச்சினையாக்கி, கல்வியின் தரத்தை யாராது ஒரு சிலர் கையில் கொடுத்து அதை உயர்நிலைப் பள்ளியில் பணியாற்றுகிற ஆசிரியர்கள், கல்லூரியில் பணியாற்றுகிற பேராசிரியர்கள் கல்வியின் தரத்தைக் காப்பாற்ற வேண்டும் என்று மட்டும் இல்லாமல், கல்வியின் தரத்தைக் காப்பாற்றுவது

1973 மார்ச் 21] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

ஒவ்வொருவரின் உரிமையும், கடமையும் என்ற நிலைமை தோன்றியிருக்கிறது. இதைத்தான் அண்ணா அவர்கள் சொன்னார்கள். பெற்றவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், ஆக இந்த மூன்று பேர்களுக்கும் இந்தக் கல்வியின் தரத்தைக் காப்பாற்றுவதில் சமமான பங்கு இருக்க வேண்டும், வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு ஆக இந்த மூன்றையும் அளவோடு சேர்த்துப் போட்டால்தான் போடுகிறவர்களுக்கு ருசியும், சுவையும் கிடைக்கும் என்று சொன்னார்கள். அதைப்போல கல்வியின் வளர்ச்சியில் ஆசிரியர்களின் பங்கைப் போல, பெற்றவர்களுக்கும் உண்டு, பெற்றவர்களுக்குள்ள பங்கைப் போல மாணவர்களுக்கும் உண்டு. இந்த மூன்று பேர்களும் இன்றைய தினம் கல்விக் களத்தில், கல்விக் கூடங்களில் அரசியல் கூடாதென்று சொல்லிவிட்டு அந்தக் கல்விக் கூடங்களிலேயே அரசியலை வளர்த்தவர்களாக ஆகிக்கொண்டிருக்கிறார்கள். ஊருக்கு உபதேசம் செய்கிற பெரியவர்கள் அரசியலில் செய்கிற சிலம்பு விளையாட்டுகளை பள்ளிகளில் வேண்டாமென்று ஒதுக்கிக்கொண்டால், அது தமிழ் நாட்டின் கல்வி வளர்ச்சிக்கு நல்லதாக இருக்கும் என்று சொல்லிக் கொள்கிறேன். எனக்கு ஞாபகத்துக்கு வருகிறது. நான் படித்தபோது ஒரு முறை ராஜாஜி அவர்கள் ஒரு பட்டமளிப்பு விழாவில் ஆசிரியர்களைப் பார்த்துச் சொன்னார்கள் :

"You are the cultural and moral army of India" என்று. இந்தியத் துணைக் கண்டத்திலே வளம்பொருந்திய வளப்படையாக, கலாச்சாரப்படையாக இருக்க வேண்டும் என்று சொன்னார்கள். எனக்குக் கூட ஒரு கல்லூரிக் கூட்டத்திலே கேட்ட ஞாபகம் உண்டு. மறைந்த தேவர் அவர்கள் இதைச் சொன்னார்கள் பைபிளிலிருந்து : பிற்பக 4-50

"When wealth is lost, nothing is lost, when health is lost, something is lost, but when character is lost, everything is lost." சொத்தை இழந்தவர்கள் திரும்பப் பெறலாம். சுகத்தை இழந்தவர்கள் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கருணை இருந்தால், திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். ஆனால் பண்பை இழந்தவர்கள் மீண்டும் பெறுவதற்கு தமிழ்நாட்டில் பல ஆண்டு எடுத்து வரவேண்டும். ஆனால் இன்றையதினம் அரசியல் களம் கல்லூரிகளுக்குள்ளே, உயர்நிலைப் பள்ளித் தாழ்வாரங்களிலே, ஆரம்பப் பள்ளி விளையாட்டு மைதானங்களிலே கொண்டு வரப்பட்ட காரணத்தினால் இங்கு பண்பு எப்படி அழிக்கப்படுகிறது என்பதை நாம் உணர்ந்துதான் ஆக வேண்டும். ஆகவேதான் கல்வியினுடைய வளர்ச்சியைக் கெடுக்கிற நோக்கம் பள்ளிகளில் இல்லாமல் உருவாக்க நாம் நிச்சயம் செய்து கொள்ள வேண்டும். நான் பணிவன்போடு அரசைக் கேட்டுக்கொள்வதெல்லாம், "நீங்கள் காட்டுகிற கருணையைத் தாராளமாகக் காட்டுங்கள், நீங்கள் கொடுக்கிற சலுகைகளை ஏராளமாகத் தாருங்கள். நீங்கள் போடுகிற திட்டங்களை மிக அதிகமாகப் போட வேண்டும். நல்ல நிர்வாகமாக இந்தக் கல்வித் துறை அழிக்கப்படாமல் நிரந்தரமாக இருக்கத்தக்க அளவு புழுதிபடாமல் வைத்துக்கொள்ளத்தக்க அளவிற்கு மட்டுமல்லாமல், அந்த நிர்வாக இயந்திரம் மிகச் சிறப்பாக இருக்க வேண்டும்."

கல்லூரிக் கல்வியிலைப் பொறுத்த மட்டில், கல்காணிப்பதற்கு பல்கலைக் கழகங்கள் முழுப் பொறுப்பேற்றிருக்கின்றன. சுயேச்சையாக வினங்குகின்றன. அதில் யாரும் தலையிட முடியாது என்பது ஒப்புக்

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1973 மார்ச் 21

கொண்ட உண்மை. அது மீதத் திறப்பட நடைபெற்றுக் கொண்டு வருகிறது. சென்ட் மறைமுகம், சிண்டிகேட் மன்றமும் கொள்கைகளை உருவாக்கி நடைமுறைக்குக் கொண்டுவந்து, அரசு நிலையிலாயி, பல காரியங்கள் செய்து கொண்டு வருகிறது. அதை நாம் இந்த மன்றத்திலே பாராட்டவேண்டும். தமிழநாட்டைப் பொறுத்த வரையில் 1960-ம் ஆண்டு 59 கல்லூரிகள்தான் இருந்தன. இன்றையதினம் 1972–73-ல் 176 கல்லூரிகளாக அதிகரித்துள்ளன. மிகப் பெரிய வளர்ச்சியைப் பெற்றிருக்கிறோம். 10 ஆண்டுக் காலத்திலே பெற்ற வளர்ச்சி மிகப் பெரிய வளர்ச்சியாகும். அந்த வளர்ச்சியினுடைய வேகத்திலே நாம் ஏற்றுக் கொள்கிற அத்தகைய கொள்கைச் சிறப்புகள் மூலம் மாணவர்களுக்கு, எங்கெங்கே கிடைக்கிற பயிற்சிக் குறிப்பிட்ட நேரத்திலே நாம் கொடுத்து கல்வி பயனுள்ள கல்வியாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில், 'Quality instead of Quantity' விரும்புகின்ற மனப்பான்மையை உருவாக்குகிற கல்வித் திட்டத்தை வேலை வாய்ப்புகளை உருவாக்குகிற கல்வித் திட்டத்தை, உருவாக்குகிற இந்தப் பொறுப்பை கல்வியிலே ஈடுபாடு கொண்ட அறிஞர்கள் ஏற்று வழி காட்டினால், அதை ஏற்றுக் கொண்டு அரசு செயல்பட்டாக வேண்டும்.

பல ஆண்டுகளுக்கு முன்னாலே கல்லூரியிலே இடைநிலை வகுப்பு—"இண்டர்மீடியட்" வகுப்பு என்று இருந்தது. அது மீண்டும் வருவது நலம் என்று கருதுகிறேன். என்னைப் பொறுத்த வரையில், இப்படிப்பட்ட ஒரு நிலைமை வரவேண்டும். ஒரு ஆண்டுக் காலத்தில் பி.யு.வி.யில் பல லட்சக் கணக்கான மாணவர்கள் வருகிறார்கள். ஆனால் அவர்களில் பலர் "பெயில்" ஆகிறார்கள். இப்படிப்பட்ட சூழ்நிலை உருவாகிறது. இரண்டாண்டு காலமென்னால், ஓராண்டில் கல்லூரிச் சூழ்நிலைக்குத் தங்களைப் பழக்கப்படுத்திக் கொண்டு, ஒவ்வொரு பாடத் திட்டத்திலும் தன்னை முற்றும் உள்ளவர்களாக ஆக்கிக் கொண்டு, இரண்டாம் ஆண்டுத் தேர்விலே அவர்கள் அமருகிறபோது, ஓராண்டிற்கு அவர்கள் தங்களுடைய பாடங்களில் தேர்வுபெற்றவர்களாக கல்லூரிச் சூழ்நிலைக்குத் தங்களைப் பழக்கப்படுத்திக்கொள்கிற நிலைமை இருந்தது. அது மீண்டும் வருவது நலம் பயக்கும் என்று நான் கருதுகிறேன்.

இது தொடர்பாக பல்வேறு சிறிய திட்டங்களைக் கல்லூரிகளில் அமலாக்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் தயாரித்த பல அறிக்கைகள் கூறுகின்றன. இவைத் துணிந்து நிச்சயமாகச் செயல்படுத்த வேண்டும். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சாது அய்யர் கல்லூரி உதவிப் போராசிரியர்களுக்கு செலக்ஷன் கிரேட் பதவி கொடுத்ததைக் குறிப்பிட்டுச் சொன்னார்கள். இப்படிப்பட்ட பதவியை ஆசிரியர்களுக்குக் கொடுத்ததை நான் மனப்பூர்வமாக வரவேற்கிறேன். ஆனால் முன்னால் கூர்ந்து சிலவினிக்க வேண்டும். இப்போது செலக்ஷன் கிரேட் அந்தஸ்து கொடுப்பது ஒரு பாஷனுக்கு, ஒரு "நாவல்டியாக" ஆகி விட்டது. பி.எஸ்.ஸி. படித்த மாணவர்கள் டாக்டர் ஆகிவிட்டால் செலக்ஷன் கிரேட். ஜூனியர் இன்ஜினியர்கள் படித்து அவர்கள் கல்லூரியில் ஸ்ட்ரைக் செய்தால் செலக்ஷன் கிரேட். பி.எஸ்.ஸி. (அக்ரி.) படித்தவர்கள் ஸ்ட்ரைக் செய்தால் செலக்ஷன் கிரேட். பி.பார்ம். மாணவர்கள் ஸ்ட்ரைக் செய்தால் அவர்கள்

1973 மார்ச் 21] [திரு. வே. தங்கப்பாண்டின்]

செலக்ஷன் கிரேட், இப்படிக் கல்லூரியில் புரொபஸர்ஸ், தலைமை ஆசிரியர்கள் செலக்ஷன் கிரேட், நம் ஜனத் தொகையில் பாதிப்பேர் உண்மையில் செலக்ஷன் கிரேட் பதவி பெற்றவர்கள் என்ற நிலை வந்துவிடும்போல் இருக்கிறது. ஆகவே அருள் கூர்ந்து சொல்லிக் கொள்வேன்: தாலுகாவிலே மிகப் பொறுப்பு வகிக்கிற தாசில்தார்கள், தாலுகாவிலே மிகப் பொறுப்பு ஏற்றுள்ள சட்டம் ஒழுங்கைக் காப்பாற்றுகிற பொறுப்பு வகிக்கின்ற இன்ஸ்பெக்டர்கள் செலக்ஷன் கிரேட் இல்லை.

திரு. டி. சுவாமிநாதன்: தாசில்தார்களையும், இன்ஸ்பெக்டர்களையும் செலக்ஷன் கிரேட் ஆக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அபிப்பிராயப் படுகிறாரா என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

திரு. வே. தங்கப்பாண்டியன்: இப்படி நான் எண்ணிக்கையை வளர்த்து விடுகிற எண்ணத்தை விட்டு விட்டு, என்ன என்ன தேவை என்பதை ஆராய்ந்து அறிந்து, நல்ல பலன் அளிக்கத் தக்க விதத்தில் செயல்பட வேண்டும் என்பதை இந்த மன்றத்திலே பணிவோடு தெரிவித்துக் கொள்கிறேன். ஊதிய உயர்வு முறையை நம்முடைய ஆசிரியப் பிரதிநிதிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். அவர்களுடைய வாழ்நாளில் அவர்களுக்கு பல நன்மைகள் கிடைத்தாக வேண்டும். அவர்களுக்கு ஊதிய உயர்வை விட அவர்கள் பிள்ளைகளுக்கு நிலவசக் கல்வி, அவர்கள் வாங்குகிற சம்பளத்தை இப்போது குறைத்து விட்டாலும், கல்லூரிகளில், கல்வி செலவுன் கிடைக்கக் கூடிய முறையில் தக்க வழி வகை செய்ய வேண்டும். அதே போல அவர்கள் தங்குவதற்கு வீட்டு வசதி வாரியத்தின் மூலம் வீடு கிடைக்கவும், அவர்களுக்கு இலவச மருத்துவ வசதியும் செய்து தரப்பட வேண்டும்.

ஆண்டு தோறும் கல்விக் கூடங்களை உருவாக்கி வருகிறோம். நான் கேட்டுக் கொள்வது புதிய உயர்நிலைப் பள்ளிகளைத் துவக்கும்போது, ஒவ்வொரு ஊரிலும் "லேபரட்டரி" வசதி செய்து தருவதற்கு ஆசிரியர்கள் இல்லாமலிருக்கிறார்கள். ஒவ்வொரு பள்ளிக்கூடத்திலும் இத்தகைய லேபரட்டரி கட்டிடம் கட்ட வேண்டுமென்று அடிப்படை விதிகள் இருக்கின்றன. இதைப் பூர்த்தி செய்வதற்கு அரசாங்கம் பொருளுக்கு அனுமதி கொடுக்கலாம். இதை விட தனியார் பள்ளிகள் இந்தக் கட்டிடங்களைக் கட்டாயமாக்கால், இந்த அனுமதியைத் திட்டவட்டமாக நிறுத்திக் கொள்ள வேண்டும். இன்றைய தினம் தனியார் பள்ளிகள் கட்டுவதற்கு அனுமதி அளிக்கிறோம். ஆசிரியர் பயிற்சி பெறுவதற்கு இருக்கும்படியான பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் நியமனம் செய்யப்படுகிறவர்கள் அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களாகத்தான் இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் பதவி கொடுக்கப்படுகிறது. பெரும்பான்மையான பெயரளவிற்கு டி.இ.ஓ விற்குச் சொல்லிவிட்டு அவர்கள் நியமிக்கப்படுகிறார்கள். தலைமை ஆசிரியரைப் போடுவதானாலும், ஊழியர்களைப் போடுவதானாலும் அந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்களைப் பார்த்துக் கொடுக்கப்படுகிறது. தனியாருடைய பள்ளிக் கூடத்தில் ஆசிரியர்களாக இருக்கிறவர்களுக்கு பாதுகாப்புக் கொடுக்கிறோம். ஆகவே இனிமேல் இந்த முறையை இந்தத் துறையில் பின்பற்றக் கூடாது என்று பணிவன்போடு சொல்லிக்கொள்வேன்.

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1973 மார்ச் 2

இப்போது ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆசிரியர்கள் இல்லங்களை கட்டியிருக்கள். இது வரவேற்கத் தக்கது. இராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், ஆசிரியர் இல்லம் கட்டுவதற்கு அரசு அனுமதி வழங்கியிருக்கிறார்கள். ஆனால் கட்டுகிற இடம் இராமேஸ்வரம் என்று சொல்லுகிறார்கள். புனித ஸ்தலம். போற்றத்தக்க இடம் தான். ஆனால் எல்லா ஆசிரியர்களும் இந்த இல்லத்தினால் பலன் பெற முடியாது. மேற்கே இருக்கிற, ராஜபாளையத்தில் இருக்கிற ஆசிரியர் இராமேஸ்வரத்திற்குச் சென்று தங்க முடியாது. மிக அதிக பட்சமாகப் பணம் செலவழித்து அரசாங்கத்தாரால் இராமேஸ்வரத்தில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் பழுது பார்க்கப்பட முடியாமல், கடல் அலைகளாலும், உப்புக் காற்றினாலும் நாளாவட்டத்தில் பழுது பட்டுப் போகின்றன. ஆகவே மதுரை அவர்களுக்குச் சிறந்த இடம். வரலாற்றுப் புகழ் பெற்ற நகரம் என்பது மட்டுமல்ல. அங்கே பல்கலைக் கழகம் இருக்கின்ற காரணத்தினால் ஓய்வு பெறுகின்ற ஆசிரியர்கள் இங்கே தங்கி தங்கள் விடுமுறைக் காலத்தில் தங்கள் அறிவு வளர்ச்சியை மேம்படுத்திக் கொள்ளலாம். ஆகவே இந்தத் திட்டத்தை அருள் கூர்ந்து மாற்றிக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொன்று, மதுரையிலே பெண்கள் கல்லூரி, மீனாட்சி கலைக் கல்லூரி, அரசாங்கத்தால் நடைபெறும் கல்லூரி இருக்கிறது. இந்தக் கல்லூரியில் படிக்கிற பெண்கள் வெளியிலிருந்து வந்து அங்கு தங்கிப் படிக்கிற மாணவிகள், இவர்களுக்காக ஒரு உணவு விடுதி கட்டப்பட்டிருக்கிறது. ஆனால் தனியார் இடத்தில் அவர்கள் தங்கிப் படிக்கிற காரணத்தினால், அவர்களுடைய ஆசிரியர்களுடைய அல்லது கல்லூரி முதல்வருடைய கட்டுப்பாட்டின் கீழ் இல்லாமல், தனியார் கட்டிடத்தில் இயங்குகிற காரணத்தினால், பல்வேறு தவறுகளுக்கும், தொந்திரவுகளுக்கும் ஆளாக்கப்படுகிற நிலைமைகள் இருக்கிற காரணத்தினால், ஒரு உணவு விடுதி அந்தக் கல்லூரிக் காம்பவுண்டுக்குள்ளேயே கட்டி முடிக்கப்பட இருக்கிறது. இதனை விரைவிலே நிறைவேற்றுவதற்கு அரசு எற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, ஆரம்பப் பள்ளிக்கூடங்களைப்பற்றி அருள் கூர்ந்து இந்த அரசாங்கம் நல்ல முடிவிற்கு வர வேண்டும். ஆரம்பக் கல்விக் கூடங்கள் மிக அதிகமாக, இரண்டு மடங்குக்கு மேல் ஊராட்சி ஒன்றியத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் கட்டிடங்களுக்காக 50 சதவிகிதம் கொடுக்கிறது, டீச்சிங் கிராண்டில் 15 சதவிகிதம் கொடுக்கிறது. பெண்களுக்குக் கடடுகிற குடியிருப்பு வசதியிலே ஏறக்குறைய 35 சதவிகிதம், 40 சதவிகிதம் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து வழங்குகிறது. இந்த வகையில் ஊரா ஒன்றியங்களுக்கு ஆரம்பக் கல்வியிலே நீங்கள் இடம் கொடுக்க வேண்டுமென்று நினைத்தால், அந்த முடிவினை நான் வரவேற்கிறேன். இல்லை, ஊராட்சி ஒன்றியத்திடம் "கல்வியே இருக்க வேண்டாம், அதைத் தனித்துப் பிரித்து, கல்வி அதிகாரிகளிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்றால், அதையும் வரவேற்கத் தயாராக இருக்கிறேன். ஊராட்சி ஒன்றியத்தின்கீழ் நிச்சயமாக இருக்க வேண்டுமென்று முடிவு எடுத்து விட்டால், நாம் எராளமாக கல்விக்காகச் செல

1973 மார்ச் 21] [திரு. வே. தங்கப்பாண்டியன்]

வழிக்கிறோம். சமீபத்திலேகூட செலவழிக்க இருக்கிறோம்—அந்தத் தொகையைக் கண்காணிப்பதற்கும், நிர்வகிப்பதற்கும் நேரிடையாகச் செய்வதிலும் ஊராட்சி ஒன்றியங்கள் நன்கு செயல்படக் கூடும். இரண்டு தாலுகாவிற்கு ஒரு டி.இ.ஓ. என்ற நிலைமை இருப்பதால், அவர் இந்த ஆசிரியர்களுடைய பணிகள், சிறப்புகள் ஆகியவற்றை நேரிடையாகத் தெரிந்திருக்க முடியாது. நாங்கள் சொல்வதெல்லாம், அட்வைசரி கமிட்டி ஒழிக்கப்பட்டு, ஆசிரியர்கள் மாறுதல் அதிகாரத்தை ஒரு குறிப்பிட்ட அதிகாரியிடத்திலே கொடுத்து விட்டால், அது சிறப்பாக இருக்கும். இதை விட்டுவிட்டு, டி.இ.ஓ. என்கின்ற இன்னொரு அதிகாரியிடம் கொடுத்து, அவரிடம் "கன்சல்ட்" பண்ணவேண்டுமென்று சொன்னால், சண்டை போட்டுக் கொள்ளுங்கள் என்றுதான் அர்த்தம்; "கன்சல்ட்" செய்துகொள்வது என்று அர்த்தம். ஒன்றிய ஆணையாளர்கள் அனுப்புகிற அந்த மாறுதல் "ப்ரபோசல்" தான் டி.இ.ஓ. டெபுடி இன்ஸ்பெக்டரிடம் அனுப்புகிறார். அவர், ஒவ்வொரு ஆசிரியரையும் குறிப்பிட்டு, இப்படி வந்திருக்கிறதென்று சொல்கிறார். உடனடியாக அதை நிறுத்துவதற்கான ஏற்பாடு நடக்கிறது. நாம் போடுகிற எந்த ஒரு உத்தரவும், எளிமையாக இருக்க வேண்டும். உடனடியாகப் பின்பற்றுகிற முறையில் இருக்க வேண்டும். ஒன்றிய ஆணையாளர்கள் போடுகிற உத்தரவிலே ஏதாவது தவறுகள் இருந்தால், மேல்முறையீட்டு அதிகாரியாக கலெக்டரை வைத்துக் கொள்ளலாம் அல்லது ஆர்.டி.ஓ. அவர்களை வைத்துக் கொள்ளலாம். அந்த மாவட்டத்திற்குள், ஆசிரியர்களுடைய மாறுதல் உத்தரவு தவறுதலாக இருந்தால், அவர்கள் முறையீடு செய்து, அதை மாற்றியமைப்பதற்கான அதிகாரத்தை, அந்த ஒன்றிய ஆணையாளருடைய மேல் அதிகாரிக்குக் கொடுக்க வேண்டும். ஒன்றிய ஆணையாளர் "நான் ஒன்றியத்திற்குக் கட்டுப்பட்டவன், எப்படி டி.இ.ஓ. சொல்வதைக் கேட்பேன்?" என்று சொல்லக்கூடிய நிலைமை இருக்கிறது. இதிலெல்லாம் அருள் கூர்ந்து நல்லதொரு முடிவு எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எளாமான பள்ளிக்கூடங்களுக்குக் கட்டிடம் இல்லாமல் இருக்கிறது. இப்போது ஆயுள் காப்பீட்டுக் கழகத்தின் மூலமாக ஒரு வாரியத்தினை உருவாக்கி, அது ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் கட்டிடங்களைக் கட்டுவதற்கான வசதியை உண்டாக்கித் தருவதற்கு வாய்ப்பு ஏறபட்டிருக்கிறது. இது வரவேற்கத்தக்க திட்டமாகும். பல ஆரம்பப் பள்ளிகளுக்குக் கட்டிடம் இல்லை. பள்ளிகளுக்குக் கட்டிடம் இல்லை என்ற நிலை இருப்பதோடு, பல இடங்களில் ஆசிரியர்கள் குடியிருக்க வசதியில்லாமல் இருக்கிறது. எனவே ஒவ்வொரு ஊரிலும் பள்ளிக்கூடங்கள் கட்டுவதோடு, இவைதவிர அந்தக் கிராமத்தில் 2 அல்லது 3 இல்லங்களாவது இருந்தால், பெண் ஆசிரியர்கள் தங்கி வேலை செய்ய வாய்ப்பு இருக்கும். இதையும் உணர்ந்து செயல்பட வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன்.

ஊரக வளர்ச்சித் துறையில் ஒரு இணை இயக்குநரைப் போட்டிருக்கிறார்கள். அவர்கள் கல்வித்துறையில் பணியாற்றியவர். அவர் ஒரு "டேரிங் ஆபீசர்" என்று சொல்லுகிறார்கள். ஆனால் அவர் குறிப்பாக தலைமை யகத்தில்தான் இருக்கிறார். அவர் சில மாவட்டங்களுக்குச் சென்று,

[திரு. வே. தங்கப்பாண்டியன்] [1973 மார்ச் 21

ஆசிரியர்களுடைய பிரச்சினைகள், அவர்களுடைய இன்கிரிமென்ட் பற்றிய பிரச்சினைகள், ஒன்றிய ஆலோசனைக் குழுவாளர்களுக்கும் ஆசிரியர் பிரதிநிதிகளுக்கும் உள்ள சிக்கல்கள், ஸ்டேபிலைஸேஷன் பற்றியெல்லாம் அங்கு இருக்கிற ஸ்டாட்டிஸ்டிக்கல் அஸிஸ்டெண்ட்களை வைத்துக்கொண்டு, இப்படியெல்லாம் நீங்கள் பட்டியல் தயாரிக்க வேண்டும். இந்தந்த முறைகளைப் பின்பற்ற வேண்டும் என்று நல்ல யோசனைகளைச் சொல்லிவிட்டால், அவர்கள் அந்த அடிப்படையில் வேண்டிய விவரங்களைத் தயாரித்து அனுப்ப முடியும். அப்படி இல்லாமல், அங்கிருந்து ஒரு தகவல் வந்து, இன்னுள்ள கல்வி சம்பந்தப்பட்ட அனைத்தையும் ஒரு முடிவு எடுத்து, அதை அவர்களுக்கு அனுப்பி, மீண்டும் அவர்கள் வெளிமுனைத் தயார் செய்யும் நிலையில் ஆசிரியர்களுக்குத் தப்பானம் போன்றவைகளைப் போட முடியாத நிலைமைகளெல்லாம் இருக்கின்றன. ஆகவே இதுபோன்ற தொடையாகக் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

ஆசிரியர்களுக்கு எதிரான பிரமல்களையும் தொந்தரவுகளையும் கொடுப்பது பற்றி இங்கே சொன்னார்கள். தம்முடைய திரு. ராஜா அய்யர் அவர்களுக்குத் தெரியுமென்று நினைக்கிறேன். என்னுடைய மாறுதலுக்கு, இக்கு இருக்கும் நம்முடைய நாவலர் அவர்களும், பேராசிரியர் அவர்களும், என்னுடைய மாவட்ட எம். எல். ஏ.- வாகிய, தொழிலமைச்சர் திரு. மாதவன் அவர்களும், திரு. ராஜா அய்யர் அவர்களும்—இத்தனை பேரும் கடுபட்டார்கள். நான் முரசொலியைக்கூட வெளியே தெரிகிற மாதிரி வைத்துக் கொள்வது கிடையாது. மூறைப்படி நடந்துகொண்டவன். ஆனால் 2 ஆண்டுக் காலத்தில் 11 முறைகள் மாறுதல் செய்யப்பட்டேன். அந்த மாவட்டத்தின் கிழக்குப் பிராந்தியத்தில் எனினைப் போடாத வார்களே கிடையாது. அப்படிப் பயந்து ஒழுங்காகப் பணியாற்றிய காலத்திலேகூட பழி வாங்கப்பட்டோம். முரசொலி என்ற பத்திரிகையைப் படித்தவன் என்று சொன்னல்கூட பழி வாங்கப் பட்டோம். அப்படிப்பட்ட நிலைமைகள் இருந்தன. அந்தப் பழி வாங்குகிற படலம் இப்போது எங்கேயும் இல்லை. ஆனால் இப்போது நண்பர்கள், "ஆசிரியர்கள் பழி வாங்கப்படக் கூடாது" என்று சொன்னார்கள். நிச்சயமாக ஆசிரியர்கள் பழி வாங்க படக் கூடாதுதான். ஆனால் ஆசிரிய நண்பர்கள், மாலைவர்களே—10-வது 11-வது வகுப்பு மாணவர்களே மிரட்டியிருக்கிறார்கள். "நீங்கள் வகுப்பை விட்டு வாவிட்டால்,..... நான்தான் ஆங்கிலப் பாடத்தைத் திருத்தப் போகிறேன்; நான்தான் கிருநானப் பாடத்தைத் திருத்தப் போகிறேன்; நான்தான் கணக்குப் பாடத்தைத் திருத்தப் போகிறேன், எனவே என்ன மினைவுகள் வற்படும்" என்று மாலைவர்களே மிரட்டியிருக்கிறார்கள். மேலும், பல பள்ளிக் கூடங்களில், ஆசிரியப் பெருமக்கள், மாலைவர்களிடம் "நீங்கள் வகுப்பை விட்டுச் சென்றாலிட்டால்.....உன் மார்க் என் கையில்தான் இருக்கிறது. நாங்கள் 5 பி.டி. ஆசிரியர்கள் இருக்கிறோம். நிலைமை ஆசிரியர்களுக்கு எந்தப் பெரும் கிடையாது" என்று பயமுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள். எந்த ஒரு சூழ்நிலையிலும் நல்ல முடிவை வரவேற்க நாங்கள் தயாராக இருக்கிறோம். ஆனால் ஆசிரியப் பிரதிநிதிகள் ஏதோ சொல்லி, நீங்கள் அவர்களுடைய யோசனைகளைக் கேட்ப தற்குப் பதிலாக, உங்களுடைய யோசனைவைச் சொல்லி அவர்கள் கேட்டு

1973 மார்ச் 21] [திரு. வே தங்கப்பாண்டியன்]

விட்டால், நாங்கள் எற்றுக் கொள்ளத் தாயாராக இருக்கிறோம். நான் இந்த மேலவைப் பொறுப்புக்கு வந்தபோது, நானும், எங்கள் மாவட்டச் செயலாளரும் காஞ்சிபுரம் சென்று, அண்ணு அவர்களுக்கு மாலை அணி வித்தபோது, அவர்கள் மிகப் பெருமையோடு சொன்னார்கள் "இந்த மன்றத்தில் இருக்கத் தக்கவர் திரு. ராஜா அய்யர் அவர்கள். அரசாங்கம் போடுகிற திட்டங்களை ஆசிரியர்களுக்குச் சொல்வதும், ஆசிரியர்களுடைய தேவைகளை அரசாங்கத்திற்கு முறையோடு எடுத்துச் சொல்லவும், ஒரு நல்ல தூதுவராக, இணைப்புப் பாலமாக திரு. ராஜா அய்யர் அவர்களைக் கருதுகிறேன். அவர் மீண்டும் இந்த அவைக்கு வர வேண்டும்" என்று அண்ணு அவர்கள் சொன்னார்கள். அப்படிப்பட்டவர்கள் சொல்கிற ஆலோசனைகளையெல்லாம் கேட்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் அரசாங்கம் செய்கிற அளவுக்கு நம்முடைய ஆசிரிய பெருமக்கள் கேட்க வேண்டும். நாணயத்தினுடைய இரு பக்கத்தினையும் திரும்பிப் பார்க்க வேண்டும். ஒரு பக்கம் மட்டும் நாணயத்திற்குச் சொந்தமல்ல. 2 பக்கமும் சொந்தம் என்பதை அறிந்து பார்த்து, கல்வி நிலையங்களில் தேக்கத்தை உருவாக்காமல், ஒடுகிற அந்தச் சிற்றோடையில், எல்லோரும் பருகுகிற அந்த நீர் ஓடாகத்தை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, பேச வாய்ப்பளித்த தலைவர்களுக்கு நன்றியைக் கூறி அமர்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் திரு. நெடுஞ்செழியன் : தலைவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்களும், திரு. சுவாமிநாதன் அவர்களும் பட்டதாரி ஆசிரியர்கள் கோரிக்கை பற்றிய பிரச்சினைகளை இங்கே கிளப்பினார்கள். ஆகவே அதற்கு இப்போதே ஒரு விளக்கம் தந்திடுவது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். நான் மாலை நான் இறுதி உரையாற்றுகிறவரையில், மற்றவர்கள் எல்லோரும் இதுபற்றித் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொண்டிருந்து, பின்னால் விளக்கங்கள் அளிப்பதைவிட, இப்போதே அதற்கு விளக்கங்கள் அளிப்பது பொருத்தமாக இருக்குமென்று கருதுகிறேன். பட்டதாரி ஆசிரியர்களுடைய பிரச்சினைகளைப் பற்றி நான் விளக்க வேண்டிய நிலையில்லை என்று கருதுகிறேன். இந்த அவையில் மாண்புமிகு முதல்வரவர்கள் அதைப்பற்றித் தெளிவுபடுத்திச் சொல்லியிருக்கிறார்கள். ஆசிரியர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை என்பதை 6 ஆண்டுகளாக மிக நன்றாகக் காணலாம். ஆசிரியர்களை எப்படி இந்த அரசு நடத்துகிறது. அவர்களுடைய பிரச்சினைகளை எப்படி கவனித்துப் பார்க்கிறது, குறைபாடுகளைத் தீர்ப்பதில் எவ்வளவு நாட்டமும், ஆர்வமும், ஊக்கமும் காட்டி வருகிறது என்பதை பல்வேறு பிரச்சினைகள் மூலமாக மிகத் தெளிவாக அறியலாம். அவற்றையெல்லாம் நான்ன நேரம் நேரம் கிடைக்குமானால், உறுப்பினருக்குப் பொறுமை இருக்குமானால், அப்போது விளக்கிக் கூறலாமென்று கருதுகிறேன். ஆசிரியர்களைப் பழி வாங்க வேண்டுமென்ற எண்ணம் இந்த அரசுக்கு இல்லை. பழிவாங்க வேண்டுமென்று ஆசிரியர்கள் இருக்கும் நிலையில், எங்களுக்குத் தொல்லை கொடுக்க, அரசுக்குத் தொல்லை கொடுக்க, வருகின்ற தேர்தல் போன்ற நெருக்கடியான கட்டத்தில், இந்த ஆட்சியையோ, அரசையோ கொண்டு போய்விட்டு இக்கட்டான சூழ்நிலையில் அரசைக் கூட்டுப்படுத்த வேண்டுமென்று

அவர்களுக்குப் பழிவாங்குகிற-இருக்கிறதென்று நான் சொல்ல வில்லை-நிலை யில் இருக்கிறார்களோவென்று ஐயப்படத்தக்க அளவுக்கு நிலையிருக்கிறது. பழிவாங்க வேண்டிய நிலையில் அரசு இல்லை என்பதைத் தெளிவாகச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

சென்ற ஆண்டும், இப்படிப்பட்ட ஒரு பிரச்சினையை மார்ச் மாதம் பார்த்துத்தான் தேர்ந்தெடுத்தார்கள். இன்னொரு அவையில் சொல்கிற போது, பங்குனி மாதத்தில் திருவிழா வருகிற மாதிரி, ஆண்டுக்கு ஆண்டு இந்த மார்ச் திங்களில்தான், தேர்தல் வருகின்ற, சட்டசபை கூடுகின்ற இந்த நேரத்தில்தான், இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வருகின்றனவென்று தெரிவித்தேன். இப்படிப்பட்ட சூழ்நிலைகள் வருமேயானால், எங்களுக்குத் தனிப்பட்ட அரசியல்வாதிகளுக்கு, அமைச்சர்களுக்குத் தொல்லைகள், வரு மானால், அவையெல்லாம் மாற்றப்படக்கூடியவை. அதிலிருந்து மீண்டு விடுவோமென்ற தைரியம் எங்களுக்கு இருக்கலாம். மீளமுடியாதென்ற தைரியம் மற்றவர்களுக்கு இருக்கக்கூடும். அதை நாடு பார்க்கும். தனிப் பட்டவர்களுக்கு வருகிற குறைபாடுகளையோ, தாக்குதல்களையோ மற்றவை களையோ சமாளிக்க முடியும். ஆட்சிக்கு வருகிற குறைபாடுகளையும், மற்ற வைகளையும் சமாளித்துக் கொள்ள முடியும். ஆனால், மாணவர்களுக்கு, கல்வித் துறைக்கு வருகிற கேடுகளை அத்தனை பேரும் சேர்ந்து சமாளிக்கக் கூடிய வகையில், எதிர்காலத்தில் போய்ச் சேர்த்துவிடும் என்பதால்தான் அக்கறையோடு, பிரச்சினைகளை அணுகுவதில் நாங்கள் நாட்டம் செலுத்தி வருகிறோம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறேன். சென்ற ஆண்டும் இப்படிப்பட்ட நிலைமைகள் ஏற்பட்டு, பல்வேறு நிலைமைகள் ஏற்பட்டன. ஒழுக்க விதிகள், மற்றவைகளையெல்லாம் மீறுகிறோமென்று தெரிந்தி ருந்தும், மீறுகிற சூழ்நிலை ஏற்பட்டது. அதற்காக முன் எச்சரிக்கை விட்டிருந்தும்கூட அத்தகைய சூழ்நிலை ஏற்பட்டது. பள்ளியை விட்டு வெளியேறுவது குற்றம், ஆகவே "ஆப்சென்ட்" ஆவது குற்றம், உண்ணாவிரதம் இருப்பது குற்றம், மறியல் செய்வது குற்றம், தடை உத்தரவை மீறுவது குற்றம், தடை உத்தரவை மீறி சிறைச்சாலைக்குச் செல்வது குற்றம் என்று இருக்கிறது. அத்தனை யும் மீறினால், இலாகா அடிப்படையில் நடவடிக்கைகள் எடுக்கத்தக்கன. ஆகவே இது பற்றி அவர்களிடத்தில் விளக்கங்கள் கேட்டு, வேலையி லிருந்து விலக்கி வைக்கிற அளவுக்கு நடவடிக்கை எடுக்கத்தக்க தன்மை உடையன. இது அத்தனையும் தெரிந்து அத்தனையையும் தாங்குவோம் என்ற அளவுக்கு சென்ற ஆண்டும் 2 அல்லது 3 நாட்களுக்கு அவர்கள் போராட்டம் நடத்தினார்கள். அதற்குப் பிறகு அவர்களுடன் உட்கார்ந்து பேசிய சூழ்நிலைக்குப் பிறகு, அவர்கள் போராட்டங்களை யெல்லாம் திரும்பப் பெற்றுக்கொண்டார்கள். அதற்குப் பிறகு அரசு அவர்கள் மீது எந்தப் பழி வாங்குகிற எண்ணத்தையும் மேற்கொள்ளாமல், சிறு கெடுதலையும் ஏற்படுத்தாமல், அவர்களுடன் உட்கார்ந்து பேசி, அந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதிலே தாராளத்துக்கு, முடிந்த அளவுக்குக் கவனம் செலுத்தினோம் என்பதை சென்ற ஆண்டு ஏற்பட்ட அனுபவத்திலிருந்து மிகத் தெளிவாகக் காணலாம். ஆனால் இப்படிப்பட்ட சூழ்நிலைகள் ஏற்பட்டதற்குப் பிறகும்கூட, இந்த ஆண்டு மறுபடியும் இந்தப் போராட்டச் சூழ்நிலைகள் வந்திருக்கின்றன. அந்தப் போராட்டத்திற்குத் திட்டங்கள்

தீட்டப்படுகின்றன. அவைகளை எல்லாம் இங்கே படித்துக் காட்டி னேன். அவர்கள் போட்ட அறிக்கையிலே கூட, "சிங்க நிகர் தங்கங் களே, எல்லோரும் இளைந்து எழுங்கள், படை திரண்டு விட்டது, போர் நடை போடுங்கள், பாசறை அமைந்து விட்டது, தலைவர்களெல்லாம் அமைந்து விட்டார்கள். ஆகவே அவ்வப்போது போக்குவரத்தெல் லாம் ஏற்பாடு செய்யப்படும். ராகசிய ஏற்பாடுகளெல்லாம் செய்யப்படும். ஆகவே தொடர்ந்து இந்தப் போராட்டம் நடைபெறும். வெந்நீரும், செந்நீரும் சிந்தி இந்தப் போராட்டத்தை நாங்கள் நடத்தியே தீருவோம். ஆகவே அரசாங்கத்திடமிருந்து இவைகளுக்கெல்லாம் மறு தாக்கீதுகள் வரும். அந்தத் தாக்கீதுகளையெல்லாம் துச்சமென மதித்து தூக்கி எறிவோம். ஆனாலும் கடைசிவரை போராடுவோம்" என்று போட் டிருந்தார்கள். அவர்களெல்லாம் அரசியல் போராட்டத்திலே ஈடு படுகின்றார்கள். ஆகவே மாணவர்கள் சமுதாயத்தினையும் கல்வித் துறையையும் காப்பாற்ற வேண்டியவர்களிடத்திலிருந்து எதிர்பார்க்கக் கூடாத செயல்களைச் செய்திருக்கிறார்கள். அதற்காக நாங்கள் ஒன்றும் நடவடிக்கை எடுக்காத அளவுக்கு, அந்தப் பிரச்சினைகள் வந்தபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. ராஜா அய்யர் அவர்கள், திரு. சுவாமிநாதன் அவர்கள், திரு. கணபதி அவர்கள், வழக்கறிஞர் சந்தோஷம் அவர்கள் எல்லாம் கூட வந்து பேசுகிறோம் என்று சொன்னார்கள். "வந்து பேசுங்கள். எப்படியாவது இந்தப் பிரச்சினைகள் நீர் வேண்டுமென்பது தான் எங்களுடைய ஆசை" என்றெல்லாம் கூடச் சொன்னோம். ஆகவே அவர்களை வைத்துக் கொண்டு பேச்சு வார்த்தை நடத்த வேண்டு மென்ற முறையிலே, அவர்கள் பேசிவிட்டு வந்து, அவர்கள் என்னிடத் திலே எடுத்துச் சொன்னவை மிகவும் முக்கியமான இரண்டு பிரச்சினைகள். அந்த இரண்டு பிரச்சினைகளிலும் தெளிவு ஏற்படுமானால், போராட்டத்தைக் கைவிடுகின்ற நிலையிலே அவர்கள் இருக்கின்றார்கள் என்று சொன்னார்கள். அந்தப் பேரவையிலும் இந்த அவையிலேயும் நான் சொன்னேன். கல்வி மானியக் கோரிக்கை வருகின்றபோது, நான் இது பற்றித் திட்ட வட்டமாக அறிவிப்பேன் என்று நான் எடுத்துச் சொன்னேன். மறு படியும் அவர்கள் வந்து என்னிடத்திலே "காலம் கடத்த வேண்டிய அவசியம் இல்லை. 5-ஆம் தேதி போராட்டம் என்று சொல்லப்பட்ட காரணத்தாலே, இப்போதே அவர்களுக்குத் தெளிவு படுத்துவது மிகவும் நல்லது", என்று சொன்னார்கள். நானும் அவசர அவசரமாக நிதித் துறைச் செயலர், கல்வித் துறைச் செயலர் இவர்களையெல்லாம் கூப்பிட்டு வைத்துப் பேசிய போது, அவர்கள் ஏனைவரும் ஒப்புக்கொள்ளாத சூழ் நிலை இருந்தது. 3,500 ஆசிரியர்களை நாம் தேர்வு ஆணைக்குழுவிற்கு அனுப்பியதற்குப் பிறகு நமக்கு உரிமையில்லை, அத்தனை பேருக்கும் நாம் வேலை வாய்ப்புக் கொடுக்கின்ற போதே "நீங்கள் 10 ஏ (1) லே தேர்வு ஆணைக்குழுவிற்குச் செல்லத்தான் வேண்டும், அவர்களால் தேர்ந் தெடுக்கப்படுகின்ற வரைக்கும் நீங்கள் தற்காலிகமாகத்தான் நியமிக்கப் படுகிறீர்கள். எந்த நேரத்திலேயும், எந்தக் காரணத்திற்காகவும், உங்களை வேலையிலிருந்து நீக்கிவிட இடம் உண்டு" என்கின்ற நோட்டீஸ் வாங்கிக்கொண்டுதான் அவர்கள் வேலைக்கு வந்திருக்கின்றார்கள். தேர்வு ஆணைக்குழுவிற்குப் போக வேண்டுமென்று அறிவிக்கப்படாமல், திடீ ரென்று கொண்டுவரப்பட்டவர்களும் அல்ல. 1-4-1970 லிருந்து இருக் கின்ற நிலைமைகளுக்கு எற்ப சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று தேர்வு

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 21

ஆணைக்குழுவிடம் நான் கேட்டபோது, "எங்களிடத்திலே வந்த பிறகு நாங்கள் தேர்ந்தெடுத்த பிறகு, மீதம் விடுபட்டவர்களை நீங்கள் எப்படி வேண்டுமானாலும் செய்து கொள்ளுங்கள். ஆனால் நடுவிலே நிறுத்துவது நம்முடைய தேர்வு ஆணைக்குழுவினுடைய கருத்துக்கு உகந்தது அல்ல, சரி அல்ல" என்று அவர்கள் சொல்லி விட்டார்கள். அதையும் நான் அவர்களிடம் சொல்லிப் பார்த்தேன். இல்லை, இல்லை இப்போதே சொல்லி விடுவது நல்லது என்று மாண்புமிகு அங்கத்தினர்கள் எல்லாம், வற்புறுத்தியதற்குப் பிறகுதான் தேர்வாணைக்குழுவிடமிருந்து (List) வந்த பிறகு அத்தனை பேரையும் ரெகுலரைஸ் பண்ணுவோம் என்றும் யார் யார் ரெகுலரைஸ் பண்ணுமல் விடுபட்டார்களோ அவர்களுக்காகத் தனி ஆணை போட்டு, அத்தனை பேரையும், Regularise பண்ணுவோம் என்றும், அந்த 3,500 பேரையும் ஏற்றுக்கொள்ளுகிறோம் என்றும், எந்த விதிக்கும், எந்தத் துறைக்கும் கையாளாத முறைகளை நாம் கையாண்டோம். அதே மாதிரி தேர்வு நிலையைப் பொறுத்த வரையிலும், விகிதாசார அடிப்படையிலே வேண்டாம், பணி மூப்பு அடிப்படையிலே பணிக்கால அடிப்படையிலே வைப்பதுதான் பொருத்தமுடையதென்றும் மாநில அளவிலே எல்லா ஆசிரியர்களையும் கணக்கு எடுத்துக் கொண்டு "பர்சன்டேஜ்" போட்டுப் பார்த்தால் அதிகக் காலம் பணியாற்றியவர்கள் அந்தக் கணக்கிலே வருவார்கள். மாவட்ட அளவிலே கணக்குப் போடும்போது, சில மாவட்டங்களிலே 10 ஆண்டுகள், 12 ஆண்டுகள், 13 ஆண்டுகளுக்கு மேல் பணியாற்றியவர்களுக்கும் தேர்வு நிலை வராத சூழ்நிலையும், சில மாவட்டங்களிலே 6 ஆண்டுகள் 7 ஆண்டுகள் பணியாற்றியவர்களுக்கு தேர்வு நிலை வருகின்ற சூழ்நிலையும் இருந்து வருகின்றது. அது பற்றி சென்ற ஆண்டு என்னிடத்தில் எடுத்துச் சொன்ன போது, நானே அதில் நியாயம் இல்லை என்பதை உணர்ந்து, பணிக்கால அடிப்படையில்தான் அந்தத் தேர்வு நிலை வழக்கப்படும்; அது குறித்து நிதி வசதியைப் பார்த்து, செயலரைக் கலந்து கொண்டு சொல்லுகிறேன் என்று சொன்னேன். அதையும் கல்வி மானியம் வருகிறபோது தெளிவுபடுத்துகிறேன் என்று சொன்னேன். ஆனால் அதையும் உடனடியாக அறிவித்து விட வேண்டு மென்று சொன்னார்கள். இந்த இரண்டு பிரச்சினைகளைப் பற்றிச் சொல்லி விட்டால், இந்தப் போராட்டத்திற்கே அவசியமில்லை என்று சொன்னதற்குப் பிறகுதான் நான் எப்படியேனும் ஒரு சுமுகமான சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்று இரண்டையும் அவசர அவசரமாக போவையிலேயும் மேலவையிலேயும் அறிவித்தேன். அதற்குப் பிறகும் கூட மறுநாள் காலையிலே வந்து சிலபல விளக்கங்கள் வேண்டுமென்று சொன்னார்கள். எதிலிருந்து "ரெகுலரைஸ்" பண்ணுவீர்கள் என்று கேட்டார்கள். எந்தெந்த முறையில் "ரெகுலரைஸ்" பண்ண முடியுமோ, இதற்கு முன்னால் எந்த முறையில் தேர்வு ஆணைக்குழு "ரெகுலரைஸ்" பண்ணுமோ, அந்த முறையில் "ரெகுலரைஸ்" பண்ண முடியும் என்றேன். வேறு பல பிரச்சினைகளை எடுத்துச் சொன்னார்கள். அவை பரிசீலிக்கப்படக் கூடியவை. ஊதிய சம்பந்தமானது, நிதி சம்பந்தமானது. இதோடு 7, 8, பிரச்சினைகள் சேர்த்துக் கணக்கிட வேண்டிய பிரச்சினைகள். அதற்குப் பெரும் நிதி செலவாகின்ற தன்மையிலே அவைகள் இருக்கின்றன. அதைப் பற்றி நிதித் துறைச் செயலரோடு தனியாக ஆராய வேண்டும். அது பற்றி இப்போது சொல்வதற்கில்லை என்று திட்ட

1973 மார்ச் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

வட்டமாக, தெளிவாக அன்றைக்கே எடுத்துச் சொல்லியிருக்கிறோம். ஏ விங், பி விங் ஒன்றுக இணைய வேண்டுமென்று சொன்னார்கள். அன்றைக்கே அதை ஏற்றுக்கொண்டிருக்கிறோம். நாங்கள் அதை ஏற்றுக் கொள்ள ஆயத்தமாக இருக்கின்றோம். ஆனால் அது 1970 ஆம் ஆண்டு வரையிலே தெளிவாக்கப்படாமலேயே இருந்து, அவை ஏற்கெனவே டிஸ்ட்ரிக்ட் போர்ட் சட்ட திட்ட முறைப்படியே நடைபெற்றுக்கொண்டு வந்தன. எப்படியேனும் முடிவுக்கு வந்துவிட வேண்டுமென்று பல தடவைகள் நான் முயற்சித்தேன். நானே 1968–69லே, பேசும்போது கூட ஒருவித ஏற்பாட்டிற்கும் வரவில்லை. தனியாகவே இருக்க வேண்டு மென்று விரும்பினார்கள். சரி, சில சங்கடங்கள் இருந்தாலும், தனியாக இருக்கட்டும் என்று சொல்லி அரசாங்கத்தினுடைய சலுகைகள், முறைகள் எல்லாம், ஏ விங், பி விங் என்ற முறையில் இருக்கட்டும். அதுவே காலப் போக்கில் மாறி ஒரே விங்காக ஆகிவிடும் என்ற அளவிலே முறை வகுக்கப்பட்டது. அப்போது அதைத்தான் டிஸ்ட்ரிக்ட் போர்டு தலைமை ஆசிரியர்கள் எல்லாம் வற்புறுத்தினார்கள். பி விங் என்று ஏற்படுத்தப் பட்டது. இப்போது அவர்கள், பி விங், ஏ விங், இரண்டாக இருக்க வேண்டாம், ஒன்றுக ஆக்குங்கள் என்று சொல்கிறார்கள். நான் சொல்வதை இந்த இரண்டு தரப்பினரும் சேர்ந்து கொண்டு ஒப்புக்கொள்வார்களானால், நாளையே, நாங்கள் ஏற்றுக்கொள்வதற்குத் தயாராக இருக்கிறோம். ஒருவர் வற்புறுத்தி மற்றவர் மறுக்க, ஒருவர் மறுத்து, மற்றவர் வற்புறுத்தும் நிலை இல்லாமல், ஏ விங் பிரதிநிதிகளும், பி விங் பிரதிநிதிகளும் உட்கார்ந்து பேசி, "நாங்கள் இரண்டு பேர்களும் ஒப்புக்கொண்ட நிலை இது, இந்த நிலையின் அடிப்படையிலே இரண்டு விங்குகளையும் ஒன்றுக ஆக்குங்கள்" என்று ஒரு நல்ல சொலுஷனைக் கொடுப்பார்களானால், அதை நானே மறுநாளே ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோம். நானே தரட்டும், நானே மறு நாளே நாங்கள் ஏற்றுக் கொள்கிறோம்; அல்லது பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்களையும் வைத்துக் கொண்டாவது ஒரு முடிவு கட்டட்டும், அந்தக் கட்டத்திலே முடிவு கட்டா விட்டாலும் கூட, அமைச்சர் என்ற கட்டத்திலே முடியும் என்றால், கடைசியிலே என்னை இழுப்பார்களேயானால், நானே உட்கார்ந்து பேசுகிறேன். ஒரு சொலுஷன் கண்டு விட்டு, மறுபடியும் எவரும் ஒரு பிரச்சினையைக் கிளப்புவது என்ற அளவுக்கு இல்லாமல் இருந்தால், நாங்கள் ஒத்துக் கொள்ள ஆயத்தமாக இருக்கின்றோம், அதை நாங்கள் தெளிவு படுத்தியிருக்கிறோம். ஆறு கோரிக்கைகளிலே இரண்டு கோரிக்கைகள் இங்கே தெளிவாகிவிட்டன. ஏ விங் பி விங்—ஐ ஒன்றுக ஆக்கிவிடுகிறோம் என்று சொல்லிவிட்டோம். தலைமை ஆசிரியர்களைப் பொறுத்த வரையிலும், வித்வான் படித்தவர்களுக்கு அப்பதவி தரக்கூடாது என்பது நியாயமல்ல. தலைமை ஆசிரியர்களுக்கு என்று ஒரு தகுதியை நிர்ணயித்திருக்கிறோம். அந்தத் தகுதியை யார் யார் பெற்றிருக்கின்றார்களோ அந்தத் தகுதியின் படி கொடுக்க வேண்டும். அந்தத் தகுதி இரண்டு பேருக்கும் பாதகம் இல்லாமல் இருக்கும் முறையில் இருக்க வேண்டும். அதைப் பற்றி அரசாங்கம் ஆலோசித்துக் கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு முறையை வகுக்கலில்லை. அதைப் பற்றிப் பள்ளிக் கழகத்தைக் கலந்து கொண்டு, அதிகாரிகளையும் கலந்து கொண்டு, ஒரு முறையை வகுக்கலாம், என்று எடுத்துச்

சொல்லப்பட்டிருக்கிறது. அதை எடுத்துச் சொன்னதற்குப் பிறகு கூட, "இந்தப் போராட்டத்தை நாங்கள் கை விட்டு விடுகிறோம், அவர்களுக்கும் சொல்லிவிடுவோம். நாங்களாகவே முடிவு செய்து கொண்டுபோனால் அவர்கள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், சம்பிரதாய முறைப்படி அவர்களை கேட்டுக் கொண்டு வருகிறோம் என்று சொன்னார்கள்" என்று அன்றைக்கு, திரு ராஜா அய்யர் அவர்கள் தெளிவுபடுத்தினார்கள். அது அத்தனை பேருக்கும் தெரியும். இங்கே முதல்வைமச்சர் அவர்களும் தெளிவு படுத்தினார்கள். அவர்கள் எல்லாம் சேர்ந்து இவர்களைக் கட்டுப் படுத்த முடியாமலிருக்கிறதோ, அல்லது இவர்கள் நலனுக்காகக் கட்டுப் படுத்த முடியவில்லையோ என்னவோ, துவக்கிய படை புறப்பட்டு விட்டது. களம் கண்டு விட்டது, கொடியேற்றப்பட்டுவிட்டது, ஆகவே இவர்கள் எல்லாம் பின் வாங்குவது நலமாக இருக்காது என்று கருதுகிறார்களோ என்னவோ. எப்படியோ நாமெல்லாம் வேதனைப் படுகின்ற அளவுக்கு ஒரு சூழ்நிலை ஏற்பட்டுவிட்டது. அதற்காக நாங்கள் இங்கே கூட பல வேண்டுகோள்களை விட்டோம். அந்த வேண்டுகோள்களுக்குப் பிறகும் கூட தொடர்ந்து மறியல், தடைபெற்ற போராட்டங்கள் எல்லாம் நடைபெற்றன. அதற்குப் பிறகு எதை செய்ய வேண்டிய நிலைமை ஏற்பட்டு, 25 ஆயிரம் பட்டதாரி ஆசிரியர்களில், கிட்டத்தட்ட இந்த மறியலில் ஈடுபட்டவர்கள் அல்லது வேலைக்குச் செல்லாமல் இருந்தவர்கள் அல்லது அங்கேயே மறியலில், உண்ணாவிரதத்தில் ஈடுபட்டவர்கள், 7000, 8000 பேர்கள் இருக்கின்றார்கள். கடைசி நிலைமையில் இவர்களில் சில பேர்கள் மறுபடியும் பணியாற்ற விரும்புகிறார்கள் என்று சொல்லக் கேட்டு, நாம் உடனே ஒரு நாள் தவணை கொடுத்தோம். அதற்காக அவர்கள் வருத்தம் தெரிவித்துக்கொள்வார்களானால், அவர்களை மறுபடியும் வேலைக்கு வைத்துக்கொள்ளுங்கள் என்று ஒரு உத்தரவை மட்டும் அரசு இட்டது. அதைத்தான் மாவட்டக் கல்வி அலுவலர் திரு. சுவாமிநாதன் அவர்கள் இங்கே படித்துக் காண்பித்தார்கள். அந்த உத்தரவின்படி, அவர்கள் வருத்தம் தெரிவித்துக்கொள்வார்களானால், அவர்களை மறுபடியும் பணியாற்ற அனுமதியுங்கள் என்ற அளவுக்குத்தான் பள்ளிக் கல்வி இயக்குநரிடத்திலிருந்து ஆணை சென்றது. அப்போது போராட்டம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தாலும், எதிர்காலத்திலே என்ன விளைவுகள் ஏற்படும் என்று தெரியாத காரணத்தாலும், அவர்கள் வருத்தம் தெரிவிக்கின்ற நிலைமையிலே, எதிர் காலத்திலே எதாவது நடவடிக்கைகள் மற்றவைகள் எடுக்க வேண்டுமே யானால், அவர்கள் கொடுத்த கடிதம் எங்களைக் கட்டுப்படுத்தாது, அதற்கு எங்களுக்கு அதிகாரம் உண்டு என்ற அளவிலேதான் அங்கே இருக்கிற சி.ஈ.ஓ.-க்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் போராட்டம் நடைபெற்றுக் கொண்டு, சிறைக்குச் சென்றுகொண்டிருக்கும்போதே, இந்த வருத்தம் தெரிவிக்கின்ற கடிதங்கள் வாங்கின காரணத்தால், அந்த கண்டிஷன்கள் எல்லாம் போட்டு வருத்தம் தெரிவிக்கும்படியாகக் கேட்டிருக்கிறார்கள். அதை இன்ன முறையிலேதான் வாங்க வேண்டுமென்று சொல்லப்பட வில்லை. அவர்கள் வருத்தம் தெரிவித்துக்கொண்டால் சேர்த்துக்கொள்ளுங்கள் என்று சொன்ன காரணத்தினாலே, அந்தந்த மாவட்டத் தலைமை அதிகாரிகள் இம்மாதிரி வாசகங்கள் வைத்திருக்கின்றார்கள். எழுதி வாங்கின எந்த நிமிட்டத்திலும் கைவிடலாம். ஆனால் எழுதி வாங்காமல் இருந்தால், எந்த நிமிடத்திலும் எதையும் புகுத்த முடியாது. அதை எந்தக் கோர்ட்டும் ஏற்றுக்கொள்ளாது. ஆகவேதான் முன்னெச்சரிக்கை

யாக இப்படிப்பட்ட நிலைமைகளிலே கண்டிஷன் போடுவது வழக்கம். அதற்படி கண்டிஷன்கள் போட்டிருக்கின்றார்கள். அதற்குப் பிறகு, இந்தப் போராட்டத்தை வாபஸ் வாங்குகிறோம் என்ற அளவுக்கு அவர்களாக வந்தார்கள். அந்த நிலைமையிலே தான குறைந்தபட்சமாக எடுத்துச் சொன்னதெல்லாம் கூட "நிலைமை இப்படியிருக்கிறது, ஏற்கெனவே வருத்தம் தெரிவித்தவர்கள் பல பேர் வேலையிலே வந்து சேர்ந்திருக்கின்றார்கள். ஆகவே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டிருப்பவர்கள் வருத்தம் தெரிவித்துக்கொள்வார்களேயானால், அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படமாட்டாது" என்பதுதான். இதைத்தான் முதல்வைமச்சர் அவர்களும் பேரவையிலே எடுத்துச் சொன்னார்கள். மாவட்டமிகு பேரவை உறுப்பினர் திரு. கே. டி. கே. தங்கமணி அவர்கள் ஆசிரியர்கள் பழிவாங்கப்படுவார்களா என்று கேட்டபோது கூட," அந்தப் பழி வாங்குகின்ற எண்ணம் எங்களுக்குக் கிடையாது ; ஆனால் மற்றவர்கள் தங்கள் கடமையை உணர்ந்து எப்படி வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு வேலைக்குச் சேர்ந்தார்களோ, அதே மாதிரி இவர்களும் வருத்தத்தைத் தெரிவித்துக்கொண்டு வேலைக்கு வந்து சேருவார்களேயானால், பழி வாங்குகின்ற முறையில் நடவடிக்கை எடுக்கமாட்டோம்" என்ற அளவுக்கு கருத்தைத் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். இன்று நண்பகல் வரையில் 2,944 பேர்கள் இந்த வருத்தம் தெரிவித்துக் கடிதம் எழுதிக்கொடுத்துவிட்டு வந்திருக்கின்றார்கள். ஆனால் போராட்டத்தில் ஈடுபட்ட 'Action' கமிட்டியைச் சேர்ந்தவர்கள் " நாங்கள் வருத்தம் தெரிவிக்கமாட்டோம் ; எப்போது போராட்டத்தை வாபஸ் வாங்கினோமோ அப்பொழுதே எங்களை எந்த நடவடிக்கைக்கும் உள்ளாக்காமல் சேர்க்க வேண்டும்" என்று கூறும்போதுதான், நாங்கள் நேரடியாகவே,—ராஜா அய்யர் அவர்கள் வந்திருந்தார்கள் என்று கருதுகின்றேன்—அவர்களுக்கு எடுத்துச் சொல்லினோம், இந்தச் சூழ்நிலைகளைப் பொறுத்த வரையிலும், ஏற்கெனவே வேலை பார்த்தவர்கள் பைத்தியக்காரர்கள் ஆகி, இதிலே வருத்தம் தெரிவித்துக்கொண்டவர்களும் பைத்தியக்காரர்கள் ஆகி, அதற்கு கட்டுப்பாடும் இல்லாமல் ஒழுங்குக்கு நீதியும் முறையும் இல்லாமல் போய்விடும் என்ற சூழ்நிலை ஏற்படும். இவர்கள் குறைந்தபட்சம் மன்னிப்பு கேட்கவேண்டுமென்றுகூட நாங்கள் இவர்களைக் கேட்கவில்லை.

ஆகவே, இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டதற்காக வருந்துகிறோம் என்று சொல்லி வருவார்களேயானால், மீண்டும் எடுத்துக்கொள்வோம் என்ற அளவுக்கு எடுத்துச் சொன்னார்கள். இப்போது வற்புறுத்துவதும் அதுதான். மாவட்டமிகு உறுப்பினர் திரு. சுவாமிநாதன் சொன்னது போல், "I express regret for having participated in the agitation/abstained from duty. I request I may be permitted to assume duty". என்று எழுதிக் கொடுத்தால் நாங்கள் சேர்த்துக்கொள்ள ஆயத்தமாக இருக்கிறோம். மேலும் பல கண்டிஷன்கள் போட்டிருந்தாலும், அவைகள் எல்லாம் தளர்த்தப்படும் என்று எடுத்துக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். விடக்கூடாது என்ற நிலைமை இல்லாமல் பெருந்தன்மையைக் கையாளக் கூடாதா என்று கேட்டால் பெருந்தன்மை இரண்டு பக்கமும் இருந்து

பிறப
5.20

வரவேண்டுமே தவிர, ஒரு பக்கத்திலிருந்து கீழ்த்தன்மை வர, ஒரு பக்கத்திலிருந்து பெருந்தன்மை வராது. 'ஈக்குவலாக' பெருந்தன்மை வரவேண்டும். ஆகவே, நான் எடுத்துச் சொல்வதெல்லாம், சென்ற ஆண்டு எந்தக் கண்டிஷனும் போடாமல் விட்டோம். ஆனால் இந்த ஆண்டு இந்த நிலைமை வந்ததால் வருத்தம் தெரிவித்தால் போதும் என்ற அளவுக்குத்தான் சொல்கிறோம். மன்னிப்புக் கேட்க வேண்டிய அவசியமில்லை. அந்த நிலைமையில் பார்த்தால், பழிவாங்கும் எண்ணம் இல்லை என்பது தெரியும். கேரளத்தில் அப்படி அல்ல; நாங்கள் அந்த அளவுக்குப் போகவில்லையென்று சொல்லிக்கொள்ளுகிறேன். கேரளாவில் சீப் மினிஸ்டர் "Mr. Achutha Menon today reiterated that the State Government staff who were on strike would not be paid their salaries for the strike period". ஆசிரியர்களும் என். ஜி. ஓ.-க்களும் சேர்ந்து பத்தாயிரம், பத்தாயிரம் ஆக 20 ஆயிரம் பேர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டார்கள். "Government and private school teachers and Secretariat employees alleged that cases had been registered against 10,000 employees and equal number placed under suspension" பத்தாயிரம் பேர் தற்காலிகமாக நிறுத்தப்பட்டு, நாலாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் மீது வழக்குத் தொடரப்பட்டிருந்தது. ஸ்டிரைக் பண்ணிய பீரியடுக்கு சம்பளமே இல்லையென்றும், வாழ்க்கையைக் காப்பாற்றுவதற்கு ஒரு மாதச் சம்பளம் முன் பணம் என்ற முறையில் கொடுக்கப்படும், ஆறு மாதத் தவணையில் திருப்பித் தர வேண்டுமென்று சொன்னார்கள். "The government was firm in their earlier resolve to take suitable action against non-gazetted officers, against teachers who were involved in violence and insulted women staff. Action would also be taken against the Headmasters who had struck work without handing over the keys of the schools to the Assistants or District Educational Officers" என்று அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். "Suspension orders served on the Headmasters would be temporary. They would be allowed to rejoin duty when proceedings against them would be continued but they would not be allowed to rejoin duty in the institution where they were working". இவ்வளவு கண்டிஷன் போட்டுத்தான் வைத்திருக்கிறார்கள். நாங்கள் அந்த நிபந்தனைகளைப் போட்டு பழிவாங்கும் எண்ணத்துடன் இல்லை. வருத்தம் தெரிவிக்கச் சொல்லும் நிலை ஏற்பட்டதென்றால், இந்தத்துறை ஒழுங்காக நடைபெற வேண்டும், இதைக் கட்டுப்பாட்டுக்குக் கொண்டுவர உதவி செய்யவேண்டுமென்ற நிலையில்தான் அதைப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறோம். மறுபடியும் கேட்டிருக்கிறார்கள். கேரளாவில் தலைமை ஆசிரியர்களை ஒரு பள்ளிக்கூடத்தை விட்டு மற்றொரு பள்ளிக்கூடத்திற்கு மாற்ற வேண்டிய அவசியம் என்ன என்று எதிர்க்கட்சிகள் கேட்டதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். மாணவர்களுக்கு உறுப்பினர் திரு. தங்கப்பாண்டியன் சொன்னதுபோல, அங்கே வேலை நிறுத்தம் மற்றவைகளில் ஈடுபடாத மாணவர்களையெல்லாம் தலைமை ஆசிரியர்கள் மிரட்டியிருக்கிறார்கள் என்று பெற்றோர்களிடமிருந்து புகார்கள் வந்ததன் காரணமாக, மறுபடியும் அந்த பள்ளிக்கூடத்தில் இவர்களே தலைமை ஆசிரியர்களாக வருவதால், மாணவர்கள் ஒருக்கால் பழிவாங்கப்பட்டுவிடலாம்

என்ற காரணத்தால், அதே பள்ளிக்கூடத்தில் யாரும் வேலை செய்ய வேண்டியதில்லை, வேறு பள்ளிக்கூடத்தில் வேலை செய்ய வேண்டுமென்று கடுமையான உத்தரவுகளைப் போட்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நிலைமைக்கு நாங்கள் போகவில்லையென்று கூறிக்கொள்ளுகிறேன். ஆகவே இந்தச் சாதாரண சூழ்நிலை ஏற்பட வேண்டுமென்பதை இங்கேயும் சொல்லுகிறோம். தனிப்பட்ட 'பிரஸ்டிஜ்' என்பதல்ல. எல்லாவற்றையும்விட அரசு என்பது பெரிது. அரசு, ஸ்டேட், என்றைக்கும் நிலைத்திருக்கும் ஒன்று. ஆட்சி மாறும், கட்சி மாறும். எது மாறினாலும், அரசு என்றென்றைக்கும் இருக்க வேண்டும். ஆகவே, அதனுடைய தன்மைகள் காப்பாற்றப்பட வேண்டும், ஒழுங்குக் கட்டுப்பாட்டுக்கு உட்பட வேண்டுமென்று சொல்லுகிறோம். பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டுமென்று சொல்லும்போது, நான் பாண்டிச்சேரியில் இருந்தேன். காலை பத்து மணிக்கு வருவதாகத்தான் திட்டம். இரவு 11 மணிக்கு முதலமைச்சர் அவர்கள் தொலைபேசியின் மூலம் காலை 8½ மணிக்கு வர வேண்டுமென்று சொன்னார்கள். 5 மணிக்குக் கிளம்பி ஓடோடி வந்தேன். மாண்புமிகு மேலவை உறுப்பினர் கீழே இறங்கி வந்து பேச வேண்டுமென்று சொன்னார்கள். கீழே இறங்கக்கூட அல்ல, ஓடோடி வந்து பேசியிருக்கிறேன். பாண்டிச்சேரியிலிருந்து ஓடிவந்து பேசினேன். எந்தத் தகராறும் அல்ல. சுமுகமான சூழ்நிலை ஏற்படுத்தப்பட வேண்டும் என்பது தவிர, வேறு எத்தனைய நிலைமையும் அல்ல. தனிப்பட்ட நெடுஞ்செழியனிடம் இவர்கள் வருத்தம் தெரிவிக்க வேண்டுமென்ற சூழ்நிலை இல்லை. ஒழுங்கு, கட்டுப்பாடு காப்பாற்றப்பட வேண்டும், எதிர்காலத்தில் நல்ல சூழ்நிலை ஏற்படுத்தப் பயன்படுகிற அளவுக்கு இந்த வேண்டுகோளை ஏற்றுக்கொள்ளுவார்கள் என்று நம்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வேறு எந்த ஐயப்பாட்டிற்கும் இடமில்லை. மற்ற நடவடிக்கைகளும் கைவிடப்படும்; இதைப் பொறுத்து அவைகள் இருக்கின்றன. இது நடந்தேறியதற்குப் பிறகு அந்தக் காயை நகர்த்த முடியும். அந்தக் காயை நகர்த்திவிட்டு இதை நகர்த்த முடியாது என்பதை உணருவார்கள் என்று கூறி என்னுடைய விளக்கத்தை இந்த அவையோடு நிறுத்திக்கொள்ளுகிறேன்.

*THIRU A. R. DAMODARAN: Mr. Chairman, Sir, after the long and eloquent exposition given by the Hon. the Education Minister regarding the episode that has occurred in the educational field, I will only say, Sir, that the quality of mercy is not strained, it droppeth like thegentle rain from Heaven. I thank him for the assurance that he has given to those unfortunate persons who have been involved in the strike thatthey will not be victimised if they give the letter of regret in the form in which the Hon. the Education Minister has just mentioned. I do not wish, Sir, to prolong this argument, and I would like to go on to a discussion of the policy note on Education which has been placed before us for consideration. மி. ப. 5-30

Sir, education today is a very costly process and it does not require a note to mention that almost 25 per cent of our annual budget is

spent on educational activities and everybody realises today that this is a continuing process and it is an ever-expanding field where more and more expenditure would be required in the years to come. Sir, education investment could broadly be divided into 3 categories—investment on buildings, investment on teachers and investment on students—not to speak of the other reforms in the educational field. Mention has been made, Sir, of the fact that in spite of the best attempts made by this Government to allocate more and more resources for buildings, it has not been found possible to allocate even 2½ per cent of the educational budget of Rs. 99 or 100 crores on putting up new buildings either in our elementary schools or in our secondary schools or even in the colleges which have come up in the recent past. I was one of those who felt, Sir, a few years ago very much upset, when I found that in many schools students were reading in thatched huts due to lack of proper buildings in many of our high schools and perhaps even in our colleges. There are colleges even today in South Arcot District which are operating in sheds, but, after viewing the explosion in expenditure that has taken place in education, I am rapidly veering round to the view, Sir, that due priority must be given to the other facets of education rather than to the putting up of mere buildings. When I mention this, this is not to state that expenditure on buildings is not required, but I would like the Government to think of the situation that it is likely to face not in 1990, but even earlier as 1980, when more than double the present number of students are likely to study in our educational institutions and it is because of our realisation of the tremendous expenditure that would be required in putting up buildings that I venture to make the suggestion that it is high time, Sir, that we thought of a much fuller utilisation of the existing buildings, not only in our schools, but also in our colleges. Sir, in industries and factories, there is what is known as an installed capacity and if a machine capable of producing 100 units produces only 60, we say it is under-utilisation of capacity. I believe, Sir, in our educational institutions we should come round to the view that if we want more of our students in these educational institutions and if we are to cater to the enormous number that will be thronging these institutions in a few years time, the question of having a shift system in our educational field cannot be avoided. I know, the suggestion has been made to the University, but, I would like the Government to consider, because the problem has assumed urgency, whether even in the few high schools that are equipped with laboratories and libraries it is going to be possible for us ever to catch up when the number of high schools is increasing day by day.

Out of 2,700 high schools, I think only 700 or 800 have been provided with laboratories. Crash Programmes have been instituted and I believe Rs. 40,000 is given for the setting up of laboratories and in view

of the expansion in the number of high schools, I do not think any Government, Sir, either now or in the future, will ever be able to equip all the high schools—those that are existing as well as those that are coming up—with these laboratories, that are so very essential for our schools. I would, therefore, suggest that we really think in terms of utilising our high schools, elementary schools, secondary schools and even our colleges, where we have good buildings, good libraries and good laboratory facilities, whether we should not think of having—perhaps if I may use the word 'shift system', it may not be liked by educationists — a morning school and an evening school or a morning college and an evening college. Sir, we must go into the financial consequences of trying to put up buildings for all our schools and take a policy decision in this matter, because, otherwise, it would be impossible for the under-privileged children in our rural areas even to achieve the standards that the boys in the urban areas have. If you take into account the high schools in the big cities like Madurai, Tiruchirappalli, Salem, Madras and other District headquarters, this difference in the educational facilities and amenities that are afforded to students is so vast that it is in itself a form of discrimination against the under-privileged and the backward communities in our State. I, therefore, plead, Sir, that in the interests of rural institutions, in the interests of boys who are studying in these rural institutions, sufficient priority must be given for putting up buildings and laboratories in some of the rural areas and those high schools should be utilised on a double shift, if necessary, so that all these facilities can be enjoyed in the rural areas also.

Sir, I referred to the fact of education investment consisting of buildings, but, what is far more important is the investment that we have in the teachers themselves. Sir, their welfare, well-being and contentment are absolutely necessary, if the educational system is to be a success. If you have disgruntled, frustrated members of the teaching profession, and if you entrust young boys between the ages of seven to fourteen to their tender care, great chaos and great havoc can result. It is, therefore, Sir, with a view to improving and to removing the irritation that seems to exist amongst the teaching profession at the present moment, that I would like to suggest that instead of their being forced to seek confromation either in the streets or trying to threaten the Government with dire consequences if their demands are not accepted, a machinery must be evolved on the lines of Councils that exist in other countries, where a process of discussion can be encouraged with our educational administrators, if not with our Ministers themselves. There is a mistaken impression, Sir, amongst all the sections of our society today—and it has been pronounced for the past five or six years—that any concession that they must get must be obtained directly form the Minister himself. This is a wrong approach, Sir, for anybody

to take, whether it is in the educational field, whether it is in the public health field, whether it is in the case of students of Polytechnics or teachers themselves, or in the labour field. I know, Sir, how six or eight months ago, when we had various labour disputes in Madras City all the labour union leaders would rush immediately to the Minister for Labour, and he, naturally responsive to public opinion, kept his door open at all times of the day and night for them to come and the whole process of discussion and conciliation was enormously complicated because, after all, Sir, the Minister is expected to lay down a policy and he should not interfere at each and every stage. I am not making any aspersions on any ministerial conduct, Sir. It is with a genuine desire of helping out our Ministers themselves, by realising that they are inviting great troubles by entering into direct talks even at the first opportunity. It is at the last opportunity that a Minister should convene representatives, whether they belong to labour union or teachers' association or any other associations, and if they can allow their officers to act as their buffer and to weed out all unnecessary demands from the necessary demands at that time, a Minister can certainly over-rule the Ministerial advisers, the officers who are working under him, because it is a matter for him to lay down a policy. What I am saying, Sir, is not in reference to teachers' agitation itself, but with reference to all agitations that take place, the feeling that they can gherao a Minister or stage a demonstration in front of his house, must be absolutely discouraged. Neither administration nor orderly progress will ever be possible if we allow this chaotic state of affairs to exist. This was encouraged in a State in the western portion of India for al most one and a half years 5-40 P.M. everything was absolutely disorderly. Nobody could do business. Industries came to a standstill. Employment came to a standstill. There was complete chaos and anarchy. I, therefore, feel that there should be some machinery evolved. My hon. Friend Thiru Raja Iyer suggested the formation of a Consultative Council. While such a council would be helpful to the Minister in an informal discussion I am thinking of having an official machinery which could absorb this task, which could take upon itself the task of analysing all these demands that are made and finding out what are reasonable and what are unreasonable and later on, putting them up to the Minister concerned or the Cabinet for settlement.

Sir, we have Director of School Education, Director of Collegiate Education and Director of Technical Education. I think it was in 195[illegible] or 1959 that the Directorate was split up. I think there are about 32,000 Primary Schools and it is time that we have a Directorate for Primary Education also. It is an extremely difficult task in administration for a single individual to deal with about 2,33,000 teachers. I know

this because I receive copies of petitions and some petitions are so obstruse and so complicated dealing with administrative problems that I have to seek the help of a qualified educational administrator before I could sort out the points that are mentioned in these petitions. It is an enormous task and my full sympathies are with the Directorate. I think, in their own interests, they will have to consider whether a separate Board, a separate Directorate could not be created. Of course, I realise, numerous Deputy Directors have been appointed. But, in view of the burden placed on the Directorate of School Education. I think, we should consider whether it would not be desirable to re-organise the School Education set-up, so that we could have a Directorate of Primary Education. In addition to this, we could have Boards to advise the Directors also; and in those Boards there may be representatives of teachers and representatives of parents. How these Boards could be constituted, I have no idea. But, I would like the Government to think on these lines so that everything is not brought out into the streets for agitation.

Sir, the third investment in Education is students. I do not wish to make any general observations regarding the conduct of the students, because I have read that about 3000 years ago, Aristotle expressed the view that students were incorrigible and that they were getting absolutely troublesome. But, somehow I have a feeling that students of the present generation and age do not seem either to appreciate the values of education or even the values of..... (Pardon)

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர்: எழுத்து அறிவித்தவன் இறைவன் ஆவான் என்று அன்று இருந்தது. இப்போது எழுத்து அறிவிப்பவன் ஆசிரி ஆவான் என்று இருக்கிறது.

THIRU A. R. DAMODARAN: Sir, in spite of all our talk about character building and improving the conduct and knowledge of our students, I have a feeling that somehow they are being misled by various happenings around us in the world. In fact, I was very deeply pained to hear from a nephew of mine who had attended the convocation of Madras University only the day before yesterday that when the Hon. the Pro-Chancellor was conferring the degrees, there was a lot of shouting and a lot of rowdyism. It is unfortunate that it was done by educated students. I have also been a student and I have also participated in fairly troublesome demonstrations when I was young. But, now, courteous conduct is lacking among our educated sections. I do not know whether, with an expenditure of a hundred crores of rupees on

education, we are breeding a new race of absolutely adamant people who will listen neither to authority nor to any sense or order. I think this is a task where friends like Thiru Rajah Iyer and other teacher-representatives could inform their own members of the Association to find out what exactly has gone wrong with our educational system, because there is neither respect for the teachers nor for the administrator nor for anybody above the age of 25. In fact, I have rigorously refrained from any invitation to address a College audience, because somehow the students are not responsive to serious discussion. They are more anxious to welcome and listen to the people in the cine field than to listen to people who have something to say to them. This is unfortunate. I think we should correct this state of affairs. There is no point in expanding the educational facilities without bringing some sort of cultural import into our educational activities. I am, therefore, happy, Sir—although a very prominent member, an erstwhile member of the D.M.K. has criticised it—that the Hon. the Chief Minister has given 15 lakhs of rupees to a Cricket Association. Sir, the criticism is unfortunate, because, I feel that more than 3 to 4 lakhs of people would to-day march in a procession to the Hon. the Chief Minister to thank him for the grant that he has made to the Cricket Association. I know, during the recent Test Match, if it had not been for the stadium that was put up and the elaborate arrangements that were made possible by the grant of Rs. 15 lakhs to the Cricket Association, lakhs of young persons would otherwise have been roaming about the streets, probably staging agitations and demonstrations. In fact, it is the lack of facilities for sports amenities that has resulted in a chaos in the rural areas and I would request the Hon. the Education Minister not only to think of Stadia in different District Headquarters but to spend at least some small money to put up Badminton and Basket Ball Courts which are not very expensives, so that the young boys in every High School may be given the facilities to take part in Sports activitiest N.C.C., Scouts and Cub Movement.

Sir, mention has been made about reforms in curricula, syllabi, teaching methods, etc. Somehow when I asked my son, who is appearing for the Matriculation examination and who usually reads well, what text book he was using in the subject of Geography, he said, "There is no text-book prescribed in my school at all; the teacher gives me notes and I by-heart it from top to bottom. This is what I am going to write." I was flabbergasted and aghast. If this could happen in a Matriculation School, it happens ten-fold in the S.S.L.C. school? This disgusting habit of prescribing notes does not enable the students to refer to a text-book. In fact, in Calcutta, when I questioned a ten-year old niece of mine, she said that one-hour in three days was set apart as general knowledge hour, as it was called and then she was asked questions

entirely out of the syllabus. I asked her, 'How do you answer if you do not have a text-book?' She said, 'we are expected to go to the Library, refer to the Encyclopaedia Brittanica, the Junior Encyclopaedia and we are expected to write notes on that particular question'.

How much the mind would become enlarged how much knowledge would be widened, if we can import something like that into our educational system. I am not aware of that and I am not an expert on educational matters. But, somehow this disgusting habit of reading notes and not going through the textbooks at all will, I am sure, destroy the spirit of study in our younger generation. I would like the Education Department which consists of very able administrators to kindly find out what can be done so that this system could be banned and more reading habit could be encouraged. In the assessment of students, I fully support the idea that we should have 25 per cent of the mark, allotted to internal assessment. Wherever this has been done, discipline has improved and students have greater respect for their teachers. Although it may be pointed out that in a few institutions, some teachers may not assess properly, by and large, 90 per cent of them will do their duty properly and then the students will be more amenable to discipline. They will not be so reckless in their behaviour. Not only that; it will give the teachers a chance to play their part fully in the educational field.

Sir, one more point and I have done. This is in relation to the general point, feeling which many members have expressed, namely, that just because the Government give grants and aids to educational institutions. Universities and Colleges, they are entitled to play the piper and everybody else should dance to the tunes of the Government in regard to policies of education. Sir, I know that in Oxford and Cambridge also millions of pounds are given by the Government of Great Britain, but the atmosphere of academic freedom is preserved. Because there is a feeling that when we give so much grant and aid to schools for paying their teachers, there is no need for us to have the private educational institutions at all and that everything could be absorbed in the State apparatus and everything would be easily administered. I would like to state that this is a wrong notion of the administration of educational grants and aids. I think the Hon. the Education Minister also realises this to a great extent. It is absolutely necessary for us to have private educational institutions side by side with Government institutions whether it be in the field of Polytechnics or in the field of Schools or in the field of Colleges and I hope that this liberal policy will be continued in the future also.

One more word and I have done, Sir. It is a very important matter relating to the re-organisation of University Education, viz. whether we should have the Intermediate Course or whether P.U.

should continue, whether it should be a course of 10+2+3, or 11+1+3, or 11+2+2. The Government have been telling us that they are consulting the Universities in this regard. There is no doubt that the one year course is a failure. We will have to have a two-year course, whether it is junior College course or whatever it is. I hope that at least before the next academic year, 1974–75 the Government policy in this regard would be announced. Even if we have a 10 year course, we could profitably employ all the teachers who are employed in the high schools by decreasing the ratio of students to teachers and there is no need for the teachers to fear that they are likely to be thrown out of employment. As far as the financial implications are concerned, regarding the introduction of two year course—Intermediate course in Colleges, it is something we will have to face. I would suggest that we could easily switch over to the morning and afternoon shift system in Colleges to get over the problem, because the Government will not find it necessary to put up buildings in all the existing institutions to introduce the two year Intermediate Course and we can certainly have the junior college functioning in the morning and the degree and other classes functioning in the afternoon. This is a problem that has to be faced at least for a period of 5 to 7 years and I would request the Government to take a desison early in this matter, so that these reforms are put through at least from the next academic year. Thank you.

பி ப. 5.50

* திரு. காட்டூர் கோபால்: தலைவர் அவர்களே, தமிழ் நாட்டின் கல்வித் துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையொட்டி நடைபெறுகிற இந்த விவாதத்தில் நானும் பங்கு பெறுவதற்கு அனுமதி அளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். தமிழ் நாட்டில் கல்வித் துறையைப் பொறுத்த வரையில் ஏனைய எல்லாத் துறைகளையும்விட 103 கோடி ரூபாய் செலவிடத்தக்க வகையில் மிகச் சிறப்பான வகையில், இந்தத் துறை எல்லா வழிகளிலும் விரும்பத்தக்க வகையில், பாராட்டத் தக்க வகையில், நடைபெற்றுவருகிறது. இந்தக் கல்வித் துறையில், கல்லூரிகள் அதிகமாக அமைகிற வகையிலும், பயிற்சி பெறுகிற மாணக்கர்கள் நல்ல முறையில் பயிற்சி பெற வாய்ப்பு ஏற்படத்தக்க வகையிலும் பணியாற்றியிருப்பதோடு, பாடப் புத்தகங்கள் கூட, அழகாகவும், நல்ல எளிமையாகவும், எடுப்போரும் இருக்கிற வகையில் தினியோஷிக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பாடப் புத்தகங்கள் இலவசமாக ஒன்றும் வகுப்பு முதல் 3-ம் வகுப்பு வரை அளிக்கப்பட்டு வருகின்றன. அதற்கும் உயர் மட்ட வகுப்பு வரையில் உள்ள மாணக்கர்களுக்கு இலவசமாக புத்தகங்கள் அளிக்க ஏற்பாடு செய்யக் கூடிய அளவுக்கு மேலும் மேலும் விரிவுபடுத்த முயற்சி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு முன்னுலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் தொழிலாளர்கள் பிரச்சினை ஆனலும், ஆசிரியர்கள் பிரச்சினை ஆனலும், எடுத்த உடனேயே நேரடியாக அமைச்சரை அழைத்துப் பேசுகிற நிலைமையை மாற்றி, முதலிலே சம்பந்தப்பட்டவர்கள் நேரிடையாகப் பேசி, அதில் தீர்வு ஏற்படாவிடில், அதிகாரிகளின் முன்னிலையிலே

மரசப் பேச்சு வார்த்தையின் மூலம் பிரச்சினையைக் கேட்போம்; டைசிக் கட்டமாகத் தான் அமைச்சர்கள் இதில் தலையிட வேண்டுமென்ற அபிப்பிராயத்தை தெரிவித்தார்கள். பலஹீனமான பகுதியினருக்கு உடனடியாக அமைச்சர்கள் போன்றவர்களுடைய தலையீடு இருந்தாவது அந்தப் பிரச்சினைகள் தீர வேண்டும் என்கின்ற அக்கறையோடு நடக்கிற காரியங்கள் பெரிதும் பாராட்டத்தக்க காரியமாகும். ஆனால் தற்போது தெல்லாம் கோரிக்கைகள் தீர்ந்து விட்டனவே என்ற நிலையில் அதனுலே வருகின்ற கொண்டாட்டம் தான் போராட்டமாக மாறி விடுகின்றது. பேச்சு வார்த்தை முடிந்து முடிவெடுத்த காரியங்களிலும் அமைச்சர் பெருமக்கள் தலையிட்டு விவகாரங்களை முடித்துவைத்திருந்தாலும் திடீரென்று முடிந்து விட்ட அந்தப் பேச்சு வார்த்தைகளை ஏற்றுக்கொள்ள முடியாமல் தான் அண்மையில் நடைபெற்ற ஆசிரியப் பெருமக்களுடைய போராட்டம் கூட அமைந்திருந்தது என்பதனை நான் குறிப்பிடுவது என்னுடைய கடமை என்று கருதுகிறேன்.

போராட்டத்திற்குத் தேதி அறிவிக்கப்பட்டு, ஏற்பாடுகள் மேற் கொண்ட நிலையில் பிரச்சினைகளுக்குப் பரிகாரம் காணப்பட்டுள்ளது. முன் கூட்டியே போராட்டத்திற்குத் தேதி தெரிவித்து விட்டார்களே, இப்படித் தெரிவித்த பின்புலே நான் எதற்குப் பரிகாரம் காணுவது என்கிற அந்தக் கண்ணோட்டத்தில் பார்க்காமல் இந்தப் பிரச்சினைகளை எப்படியாவது தீர்க்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு கல்வித்துறை அமைச்சரவர்களும், சம்பந்தப்பட்ட துறையினரும் விரிவாக அன்றைக்குப் பரிசிலனைக்கு எடுத்துக்கொண்டு தக்க பரிகாரம் கண்ட தன்மை உள்ளபடியே இந்தப் பிரச்சினை தீர வேண்டும் என்பதில் உள்ள ஆர்வத்தை எடுத்துக் காட்டுவதாக இருந்தது. என்றாலும் அதனை உடனடியாக முற்றுக்கொண்டு இலைகள் கிடைத்துள்ளன என்கிற வெற்றியிடத்திற்குப்போகாமல் எப்படியாவது போராடித் தீர வேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலையும் அவசியமற்ற போராட்டமும் ஏற்பட்டதை நான் இந்த நேரத்திலே குறிப்பிட்டுக்கொள்கிறேன். அமைச்சர் பெருமக்கள் சில பிரச்சினைகளில் முதலாவதாக உடனடியாகத் தலையிட்டாலொழிய அந்தப் பிரச்சினைகள் பல ஆண்டுகளாகத் தீராமல் இருக்கின்றன என்பதனை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது கல்வித் துறையில் 176 கல்லூரிகள் இருக்கின்றன. தனியார் கல்லூரிகளில், பெரும்பாலான கல்லூரிகளில்—அரசு உத்தரவிட்டு ஆணை பிறப்பித்திருக்கிற குறைந்த பட்ச ஊதிய நிலைமைகள் அமுலாக்கப்பட வில்லை. கல்லூரிகளில் பணியாற்றுகிற ஊழியர்கள் அந்தச் சம்பளத்தைக்கூட இன்னும் பெறுமல் இருக்கிறார்கள். இந்தக் கல்வித் துறையில் 103 கோடி ரூபாய் செலவழிக்கப்பட இருக்கிறது. ஆசிரியப் பெருமக்கள் ஒவ்வொரு கட்டத்திலும், ஒவ்வொரு அளவிலும் நல்ல ஊதிய உயர்வைப் பெற்றி ருக்கிறார்கள். அதே அளவிற்கு அந்தக் கல்லூரிகளில் பணியாற்றுகிற போதிக்கின்ற, பணிகளில்லாமல், வேறுபணிகளில் ஈடுபடுத்தப்பட்ட பல் வேறு பிரிவிலே இருக்கிற ஊழியர்கள் மிகவும் குறைந்தபட்ச ஊதியத்தைத் தான் பெற்று வருகிறார்கள். அரசே ஒப்புக்கொண்டு செயல்படுத்தி வருகிற ஊதியங்களைக் கூட பல்வேறு கல்லூரிகளில் உள்ள ஊழியர்கள் இன்றைய வரையில் பெறுமலிருக்கிற அந்த நிலைமைகளை இந்த நேரத்திலே

[திரு. காட்டூர் கோபால்] [1973 மார்ச் 21

நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இதனை அமைச்சர் பெருமக்கள் அவர்களாகவே நேரிலிட்டு இதிலே சமரசம் பேசி, இதற்குப் பரிகாரம் கண்டாலொழிய வேறு வழியில்லை. காரணம் தனியார் துறையில் பணியாற்றுகிற ஆசிரியர்களல்லாத ஊழியர்கள் பிரச்சினைகளானாலும், அவர்கள் சம்பளங்களானாலும் அதற்காக சம்பந்தப்பட்ட நிர்வாகத்தைக் கட்டுப்படுத்த முடியாத அளவிற்கு நிலைமை இருக்கிறது. இப்போது இருக்கிற சூழ்நிலையில் சாதாரண அடிப்படை விதிகள் கூட கட்டுப்படுத்துவதாக இல்லை. தனியார் கல்லூரிகள், உதாரணமாக ஜெயின் கல்லூரியில் இருக்கிற ஊழியர்கள் அரசு அறிவித்திருக்கிற அடிப்படைச் சம்பளம், குறைந்த பட்ச ஊதியத்தைக்கூடப் பெற முடியவில்லை என்று மனுச் செய்தார்கள். அரசுக்கு மனுச் செய்தார்கள், அதிகாரிகளுக்கு மனுச் செய்தார்கள். மாண்புமிகு அமைச்சரவர்கள் இப்போதுள்ள சட்டத்தொகுப்பு தொழிலாளர்களின் நியாயமான தேவையையும் புறக்கணித்துவிட்டு அவர்களையெல்லாம் கட்டுப்படுத்த முடியாத நிலைமையிலே இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இப்படிப்பட்ட சிக்கல்களில் அமைச்சர் அவர்களே நேரிலிட்டு அதற்குப் பரிகாரம் கண்டால்தான் காண முடிகிறதே அல்லாமல் கடந்த 30 ஆண்டுக்காலமாக கல்லூரிகளில் பணியாற்றும் ஊழியர்களுக்கு எந்தவிதப் பரிகாரமும் இல்லை. இவ்வளவு காலமாகவும் இவர்களது குறைகள் நீக்கப்படுவதற்கான காரணத்தைப் பார்க்கலாமே என்னவழி என்று பார்க்கலில்லை. இப்போது இருக்கிற இந்த ஆசின் மூலம் இப்போது இருக்கிற இந்த அமைச்சர் பெரு மக்களுடைய முயற்சி இருந்தால் தான் முடியும். எனவே தான் அவர்களுடைய கருணை மிகுந்த பார்வையும் அவர்களுடைய கனிவான உள்ளமும் கல்லூரியில் பல வடிவங்களில் பணியாற்றிக் கொண்டு இருக்கின்றவர்கள் பக்கம் இருந்தால் தான், அவர்கள் தங்களுடைய உரிமையைப் பெற முடியும். அங்கே இருக்கிற ஊழியர்கள் மிகக் குறைவான ஊதியம் பெற்றுவருவது மட்டும் அல்லாமல் எந்தவிதப் பலனும் பெற முடியாத நிலைமையில் இருந்து வருகிறார்கள். கிராஜுயிடி திட்டம் பல்வேறு கல்லூரிகளில் அமுல்படுத்தப்படாமல் இருந்து வருகிற நிலைமைகளை இந்த நேரத்திலே நான் குறிப்பிட்டுக்கொள்கிறேன். கல்லூரிகளில் பணியாற்றுகிற ஊழியர்களின் பிரச்சினைகளை நான் இந்த நேரத்திலே இந்த மன்றத்தில் குறிப்பிடுவதற்குக் காரணம் பல்வேறு வகைகளிலும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும், அவைகள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை. சட்ட பூர்வமாக அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமைகள் கிடைத்திடச் செய்ய நற்போது வழியில்லை என்பதை நான் உணருகிறேன். ஆகவே எந்த வகையிலேனும் புதிய சட்டப்பிரிவுகளை ஏற்படுத்தி அந்தக் கல்லூரிகளில் பணியாற்றுகிற ஊழியர்களுக்கு நியாயமான ஊதியம் கிடைத்திடவும், நியாயமான பலன்களும் ஒய்வூதியம்போன்ற வைகளும் அவர்கள் வாங்குதற்வகான வழி வகைகளைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு இந்தக் கல்வித் துறையில் இப்போதிருக்கிற போதனா முறைகளில் பல்வேறு வகைச் சீர்திருத்தங்களை, மாற்றங்களை ஏற்படுத்தும் முயற்சிகளும் தொடங்க இருப்பதாக இந்தக் குறிப்புகளில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. பாட முறைத் திட்டத்தில் ஒரு வகைப்பிரிவு மிக

மார்ச் 21] [திரு. காட்டூர் கோபால்]

யம் சேர்க்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக் கிறேன். தொழிலாளப் பெருமக்கள் எவ்வளவு ஊதியம் நிர்ணயர்கள் என்பதைப் பொருட்படுத்தாமல், எவ்வளவு அதிகமாக ஞ்சினும், குறைவாக வாங்கினாலும், தங்களுடைய வருவாயைக் ட்டி, ஒரு மினிமம் பட்ஜெட்டைத் தயாரித்து அவர்களுடைய வரு ப அறிந்து, அவர்களுடைய குடும்பத்தைச் சிக்கனமாக நடத்தியிருக்கிறார்கள். எனவே அந்தக் கருத்துடனே பட்ஜெட்டைத் தயாரிக்கும் யை அவர்கள் இன்னும் கற்றுக்கொள்ளாத காரணத்தினால், த்த் தொழிற்சாலைகளில் பணியாற்றுகிற லட்சக்கணக்கான தொழி ர்கள் தொழிற்சங்கம் மூலமாகவோ அல்லது அரசுத் திட்டங்களின் ாகவோ வேறு ஸ்தாபனங்கள் மூலமாகவோ செய்திடும் நன்மைகளைக் முழுமையாக அனுபவிக்க முடியவில்லை. தேவையில்லாத வினைகளுக்கு ஆளாக்கப்பட்டு விடுகிற நிலைமையிலும் தங்களை முறைப் ிக்கொண்டு சிறந்த வாழ்க்கை முறையை அனுசரித்திட வேண்டு ற தன்மையும் இல்லாத காரணத்தினால், சமுதாய மக்கள் த தொல்லைக்கு ஆளாகிறார்கள். இந்த வகையில் வரவு- வு குடும்ப பட்ஜெட்டைத் தயாரித்து, சிறப்பான வாழ்க்கையினை த்துக்கொள்வது என்ற முறையில் பாடத் திட்டம் உருவாக்கப் ல்லை. உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிவுறுகிற கட்டத்திலாவது கைளைப் பற்றித் தெரிந்து விழிப்புறத் தக்க வகையில் பாடமுறையில் பிரிவு அமைத்திட வேண்டுமென்ற முறையில் இந்தத் துறையில் க்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் குறிப்பிட்டுக்கொள் ன்.

வித் துறையில் ஏற்கெனவே இருக்கிற பலமுய நிலைகளைவிட ாது செய்து வருகிற சீரிய ஆராய்ச்சி, ஏற்பாடுகளால் இந்தச் ாயம் நல்ல முறையில் பலன் பெறுகிற நிலைமை இருக்கிறது. ருந்தும் சில அரசியல் கட்சிக்காரர்கள் அதிலே எந்த வகையிலும் ட்டங்களைப் பயன்படுத்திக்கொண்டு கல்வித் துறையிலே முன்னேற்றத் தடுத்து நிறுத்தி விடுகிற வகையிலே புரட்சிகளைச் செய்கிற டிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அரசு கல்வியைப் பொதுவாக இருந்து றைத் தடுத்து நிறுத்துவதற்கு முயற்சிகளை எடுத்துக்கொள்ள டியது அவசர அவசியம் என்று வற்புறுத்துகிறேன். இந்தப் ாட்டங்களெல்லாம் பள்ளித் தேர்வு வருகிற நேரத்திலே வருகின்றன. சித் தாள்களை நாங்கள் திருத்த மாட்டோம் என்று ஆசிரியப் மக்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்த அபாய நிலைமையை நாம் உணர்ந்து தாக வேண்டும். இனிமேலே அது இந்தத் தொழிலைச் சேர்ந்த யர்களானாலும் தொழிலாளர்களானாலும், எந்தக் கோரிக்கை காரணத் காகவும் அல்லது குறை காரணமாகவும், பொது மக்களுக்குப் துவாக இருக்கிற நன்மைகளைத் திடீரென்று தடுத்து நிறுத்திவிட பாத அளவிற்கு ஏற்பாடுகளை, முன்னெச்சரிக்கையான நடவடிக்கை அரசு எடுத்துக்கொள்ள முன்வந்தாக வேண்டும். தொழிற்சாலை உள்ள தொழிலாளர்கள் எத்தகைய காரணங்களுக்காகவும் வேலை த்தத்தில் ஈடுபடுவார்களானால், அப்படிப்பட்ட நிலைமை இருக்குமானால், ற வகைகளிலே அதைச் சமாளிப்பதற்கு முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் ன்றன. ஒன்று அது மிகவும் அத்தியாவசியமான தொழில்,

[திரு. காட்டேர் கோபால்] [1973 மார்ச் 21

அதிலே இருப்பவர்கள் எந்த நேரத்திலும் வேலை நிறுத்தங்களில் ஈடுபடக் கூடாது என்று தெரிவித்து விடுவது. இரண்டாவது, அந்தப் பணி களுக்கு எந்த நேரத்திலும் "சப்ஸ்டியூட்" பதவிகளை, அமர்த்திக்கொண்டு அவர்கள் இல்லாவிட்டாலும் இன்னொரு வகையிலே மாற்று ஏற்பாடு செய்யப்படுவதற்குத் தயாராக இருப்பது ஆகியவைகளாகும். பொது மக்களுக்கு மிகவும் அத்தியாவசியமான தொழிலில் ஈடுபட்டிருப்பவர் கள் வேலை நிறுத்தங்களில் ஈடுபட்டாலும் அதனைச் சமாளிக்கிற மாற்று ஏற்பாடுகளை முன்னெச்சரிக்கையாகச் செய்தாக வேண்டும். தற்போதைய கொள்கையில் இந்தத் துறை நிறைய இயங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்தக் கல்வித்துறையில் சிரிய பணிகள் விரிவடைந்து மேலும் மலர்ந்த தக்க வகையிலே அரசின் நடவடிக்கைகள் இருக்கின்றன. இந்த வகையிலான சிறப்புக்குழு இந்தத் துறையில் உள்ள அதிகாரிகளும் பணியாளர்களும் நல்ல ஒத்துழைப்புக் கொடுத்துக்கொண்டு வருகிற நிலைமை இருக்கிறது என்று தெரிவித்து எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

6.00 பி. ப.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்.— மாண்புமிகு தலைவரவர்களே, கல்விக் கொள்கை அறிக்கை குறித்து சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். இந்தக் கல்விக்காக, நமது 1973-74 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்திலே கிட்டத்தட்ட ரூ. 99 கோடி—ரூ. 100 கோடி என்று சொல்லலாம்—ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு பணம் ஒதுக்கப் பட்டதற்குக் காரணம், நாட்டிலே விலைவாசிகள் ஏறிக்கொண்டேயிருக் கின்றன. ஆசிரியர்களுடைய சம்பளம் உயர்ந்துகொண்டேயிருக்கிறது. இந்த அளவுக்கு இந்த ஆண்டு இருப்பது, அடுத்த ஆண்டு மேலும் போதுமோவென்று ஐயப்பாடு எற்படுகிறது. இப்போது ஒதுக்கியிருக்கிற 100 கோடி ரூபாய் போதுமா என்ற அளவுக்குக்கூட ஐயம் எற்படுகிறது. விலைவாசிகள் உயர்ந்துகொண்டே போவதால் இன்னும் தேவைப்படக் கூடிய நேரம் வந்தாலும் வரும். இவ்வளவு கோடி செலவழித்து நாம் கல்வியை வளர்ப்பதற்கு அருட்பாடுபட்டுக்கொண்டிருக்கிறோம். இருந்தும் அதிலே ஒத்துழைப்பவர்கள் ஒத்துழைக்கிறார்களா என்று பார்க்க வேண்டும். செல்ற ஆண்டும், இந்த ஆண்டும் நாடு போகிற போக்கையும் கல்வியினுடைய தரம் எப்படியிருக்கிறதென்பதையும் பார்த் தால், பயப்படவேண்டியிருக்கிறது. கிட்டத்தட்ட ஒரு பள்ளி 150 நாள் நடக்கவேண்டுமென்றால், 120 நாளாவது நடந்திருக்கிறதாவென்று பார்க்கவேண்டும். நாம் இவ்வளவு கோடி ரூபாய் செலவு செய்து என்ன பயன்? நல்ல கட்டிடங்களைக் கட்டி என்ன பயன்? ஆசிரியர்களைப் போட்டு என்ன பயன்? 150 நாள் நடக்க வேண்டிய பள்ளிக்கூடம், 120 நாட்களாவது நடந்தால் நல்லது. இதற்கு விளக்கம் ஒன்றும் சொல்லவில்லை. இதை முக்கியமாகச் சரிப்படுத்த வேண்டும். கல்யாணம் பண்ணி வைக்கிறோம், ஆணுக்கும் பெண்ணுக்கும். அவர்கள் சேர்ந்து திருப்பதுதான் முக்கியம். எவ்வளவோ செலவழித்துப் பந்தல் போடுகிறோம். மேளம் வைக்கிறோம். இப்படியெல்லாம் கல்யாணத் தைப் பண்ணுகிறோம். அவர்கள் உறவு எப்படியிருக்கிறதென்பதைப் பார்க்க வேண்டும். தலிர மாணவர்களுடைய தரம் குறைந்ததற்குக்

1973 மார்ச் 21] [திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்]

காரணம் என்ன? ஆசிரியர்களுடைய கவர்ச்சி, அவர்களை விட்டால் மாணவர்களுடைய கவர்ச்சி. இவ்வையொன்றும் மற்றவர்களுடைய கவர்ச்சி என்று இருக்கிறது. ஆகவே கல்வியினுடைய தரம் குறைந்து கொண்டே வருகிறது. பள்ளிக்கூடங்களை மூட வேண்டிய நிலை ஏற்படுகிறது. இடையும் பயனற்றுப்போகிற நிலையில், அதை எப்படி நாம் சரிப் படுத்துவது, இனிமேல் நடக்காமலிருக்க என்ன வழி செய்யப் போகிறோம் என்பதைப் பற்றி ஒன்றும் காணோம். அந்த அளவில் இந்தக் கல்விக் கொள்கை அறிக்கை இருக்கிறது. சுமார் 100 கோடி ரூபாய் செலவு செய்கிறோம். பி. யு. சி. வரை இலவசக் கல்வியைக் கொடுத்திருக்கிறோம். இன்னும் "டிகிரி" கோர்ஸ் ஒன்றுதான் இருக்கிறது. இதையும் இலவசமாக வைத்திருந்தால் மிகவும் வரவேற்கத்தக்கதாக இருந்திருக்கும். பி.யு.சி. வரை படித்திருந்தால், ஒன்றுக்கும் பிரயோசனம் இல்லை. அவர்களுக்கு வேலையும் கிடைப்ப தில்லை. டிகிரி கோர்ஸ் எப்படியாவது படித்திருந்தால்தான், ஒரு வேலை கிடைக்கிறது. இல்லையென்றால், வேலை கிடைப்பதில்லை. பணம் படைத்தவர்கள் பணத்தைக் கொடுத்து தங்கள் பையன்களைப் படிக்க வைக்கிறார்கள். ஏழை பாளைகள், பின்தங்கிய மக்கள் என்ன பண்ணை முடியும் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். பட்டப் படிப்புப் படித்தால்தான், வேலை வாய்ப்பு என்ற நிலை இருக்கிறது. எனவே இதுபற்றி அரசு ஒரு முடிவு எடுத்தால், என்றைக்கும் அறிவிக்கலாம். டிகிரி கோர்ஸ் இலவசமாக இருந்தால், நல்ல வாய்ப்பாக இருக்கும்; எல்லோரும் வாழக்கூடிய அளவுக்கு இருந்திருக்கும். ஆனால் அது இப்போதில்லை.

அடுத்தபடியாக, ஜூன் மாதம், ஜூலை மாதம் வந்தால், மதுரை, திருச்சி, கோவை, திருநெல்வேலி, சென்னை போன்ற நகரங்களில், இந்தக் காலத்தில் தகப்பனார்களும், பையன்களும் அலைவது எதில் போய் முடியு மென்று தெரியவில்லை. எங்கு போனாலும் இடமில்லை, ஹோட்டலுக்கு போனால் இடமில்லை. டாக்சிகள் எப்போதும் "எங்கேஜ்ட்" ஆக இருக்கின்றன. பொது மக்களுக்கு எராளமான செலவுகள் ஏற்படுகின்றன. அந்த அளவுக்குப் பள்ளிக்கூடத்தில் குழந்தைகளைச் சேர்ப்பது என்பது ஒரு பிரச்சினையாகிவிட்டது. அதிலும் இரண்டு அல்லது மூன்று குழந்தை கள் உள்ள தகப்பனார்கள் அலையும் அலைச்சல் மிகவும் அதிகமாக இருக் கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, திரு. தீக்ஷிதர் அவர்கள் இரண்டு மூன்று குழந்தைகள் உள்ளவர்கள் சொம்பவும் கஷ்டப் படுவதாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்காகவாவது கொஞ்சம் குடும்பக் கட்டுப்பாட்டை ஆதரித்து அவர்கள் சொல்லவார்களானால், கொஞ்சம் அலைச்சலும் குறையும், வேண்டிய இடமும் கிடைக்கும்.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்ன மாதிரி, குடும்பக் கட்டுப்பாட்டை ஏற்றுக் கொள்கிறேன். அதை நடைமுறைப்படுத்துவதைத்தா ழ்ட்சேபிக்கிறேன். குடும்பக் கட்டுப்பாடு முறையை.....

[1973 மார்ச் 21

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : உங்களுக்கு எத்தனை குழந்தைகள் ?

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : எனக்கு மூன்று பெண்கள், ஒரு பையன். அந்தக் காலத்தில் குடும்பக் கட்டுப்பாடு இல்லே. இருந்திருந்தால் இரண்டோடு நிறுத்தியிருப்போம். நான்கள் எல்லாம் வயோதிகர்கள்.

பெற்றோர்களும், மாணவர்களும் நகரங்களுக்குச் செல்கிறார்கள். இந்தச் சமயத்தில் எந்த விடுதிக்குப் போனாலும் இடம் கிடைக்கவில்லே. ஹோட்டலில் இடம் கிடைக்கவில்லே. தெரிந்தவர்களில் ஒரு பக்கம் பெரியோர்களும், இன்னொரு பக்கம் மாணவர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். எங்கே வந்தீர்கள் என்றால், அட்மிஷனுக்குத்தான் வந்தோம் என்று சொல்கிறார்கள். எந்தெந்தப் பள்ளிக்கூடத்தில், கல்லூரியில் அப்ளிகேஷன் கொடுக்கிறார்களோ, அத்தனை அப்ளிகேஷனையும் வாங்கிப் போடுகிறார்கள். வேறு ஜில்லாக்களில் உறவினர்கள் யாராவது இருந்தால், அங்கும் ஒரு "அப்ளிகேஷன்" வாங்கிப் போடுகிறார்கள். இதற்கெல்லாம் காரணம் என்ன, தவறுகள் எங்கே இருக்கின்றன, என்பதெல்லாம் கல்வித் கொள்கையில் இல்லே. மாணவர்கள் எல்லாம் ஒரு வருஷத்திற்கு ஒரு "குரூப்"-ல் சேருகிறார்கள். ஒரு வருஷம் பி.காம்., ஒரு வருஷம் "பி.எஸ்சி.," என்று சேர எல்லோரும் ஆசைப்படுகிறார்கள். எல்லோரும் இங்கிலீஷ் படிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். ஆனால் நம் கொள்கை தமிழ் மீடியம்தான். அப்படிப்பட்ட நிலையில் ஒவ்வொரு கல்லூரியிலும் ஒன்று அல்லது இரண்டு வகுப்புகள்தான் வைக்கிறார்கள். அதற்கு 2,000 பேர் வருகிறார்கள். அவர்களுள் தமிழ் படிக்க மாணவர்கள் இல்லவேயில்லே. 2,000 அப்ளிகேஷன் வருகிற இடத்தில், ஒரு மாணவர் கூட தமிழ் படிக்க விரும்பி வரவில்லே. சமீபமான அளவுக்கு வருகிற அப்ளிகேஷன்களில் தமிழ்க்கென்று ஒன்று கூட வரவில்லே. இரண்டு வகுப்புகள் இருக்கிற காலேஜ்களில், புகுமுக வகுப்பில், தமிழ் மீடியத்தில் சேருகிறேன் என்று மாணவர்கள் விரும்பி வருவதில்லே. இதற்காக கல்லூரி பிரின்சிபால் என்ன பண்ணுகிறார் என்றால், அப்ளிகேஷன்களைப் பிரித்துப் பார்க்கும்போது ஒரு சில் தமிழ் மீடியம்தான் எடுக்க வேண்டுமென்று சொன்னவுடன், அந்த மாணவனுக்குக் கிறுகிறுப்பு வருகிறது. 60 வயதுக் கிழவனுக்கு வருகிற பிரஷர், வேகம், மனக் கஷ்டம் அந்த மாணவனுக்கு ஏற்படுகிறது. தமிழ் மீடியத்தில் சேர "கம்பெல்" பண்ணுகிறார்கள், வற்புறுத்தப்படுகிறார்கள்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆங்கில மொழிப் பயிற்சியில் சேரத் துடிக்கிற அளவுக்கு, மாணவர்கள் தமிழ் வகுப்பிலே போய்விழுவதில்லே என்று சொல்லுவதை விட, யாருமே சேரவில்லே, யாரும் முன் வரவில்லையென்று சொல்லி முடியாது. தென் மாவட்டங்களைப் பொறுத்த மட்டில், கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழி

1973 மார்ச் 21] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

யில் படிக்க மாணவர்கள் நிறையச் சேருகிறார்கள். வட மாவட்டங்கள், சென்னை போன்ற நகரங்களில் அந்த அளவுக்கு இல்லாவிட்டாலும், தமிழில் மாணவர்கள் சேருகிறார்கள். அந்த நிலைமைதான் இருக்கிறது. அறவே தமிழுக்கு வரவில்லையென்று சொல்லமுடியாது. 56,000 மாணவர்கள் ஆங்கிலப் பயிற்சி மொழி எடுத்துப் படித்தவர்கள் என்றால், 22,000 மாணவர்கள் தமிழில் படிக்க முன் வந்துள்ளார்கள். மேலும் தமிழில் தேர்வு விழுக்காடு பாராட்டத்தக்க நிலையில் இருக்கிறது என்பதும், புரிந்துகொண்டு, அறிந்துகொண்டு செய்கிறார்கள் என்பதும் கிஷ்பல கல்லூரிகளிலிருந்து வந்துள்ள நகலிலிருந்து தெரிகிறது.

திரு. ஓய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர் : அமைச்சர் அவர்கள் சொல்வதை ஒரளவிற்கு ஒத்துக்கொண்டாலும் ஆங்கிலத்திற்கு உள்ளதைப்போல இல்லாமல், தமிழிலே குறைவாகத்தான் இருக்கிறது. எதற்காகச் சொல்லுகிறேனென்றால் தமிழிலே படிக்க முன்வரக் கூடிய மாணவர்களுக்கு பிறகாலத்தில் சர்க்காரில் உத்தியோகத்தில் பெருமளவிலே அவர்களுக்குச் சலுகை கொடுப்பதாக அறிக்கை விட்டால், அதில் இன்னும் சேர வாய்ப்பு வரும். முதலில் சேர்க்கூடிய மாணவர்களுக்கு, இங்கிலீஷிலே கொடுப்பதைவிட தமிழ் மீடியத்திலே கொடுத்து, அதிலே படித்தால் சலுகைகள் கொடுக்கப்படும் என்று போட்டுவிடவேண்டும்.

6.10 பி.ப.

கல்லூரிகளில் அட்மிஷன் கஷ்டத்தைப் போக்குவதற்கு பிரின்சிபால், மெனேஜ்மெண்டுடன் கலந்து மாவட்ட அளவில் ஒரு குழு போட்டு, அந்தக் குழுவில் சர்க்கார் அதிகாரிகளும் போடப்பட்டு, அந்தக் குழு ஒரே இடத்தில் இருந்துகொண்டு காலேஜ் அப்ளிகேஷன்களை ஒருங்கிணைத்து, மாணவர்களை இந்த இந்தக் காலேஜுகளுக்குப் போகும்படியாகப் பிரித்து அனுப்பினால், காலேஜ் ஒன்றிலேயே நெருக்கடி உண்டாவது குறையும். ஹாஸ்டல் வசதிக் குறைவால், பல் தொந்தரவுகள், அரசியல் கந்தடிகள், பாடப்புக் கஷ்டங்கள் வருகின்றன. இதற்காக அந்தந்தப் பகுதி மாணவர்கள் அவர்கள் வீட்டுப்பக்கமாக இருக்கின்ற காலேஜுகளில் சேரும்படி அந்தக் குழு வழி வகுத்தால், பல்லிதமான கஷ்டங்கள் தீரும். இனி மேலாவது, 120 நாட்கள் பள்ளி வேலை நாட்கள் என்ற நிலை மாறி 150 நாட்கள், 170 நாட்கள் என்றாவது நடைபெறவேண்டும். பள்ளிக் கூடங்கள் நல்ல முறையிலே நடக்க வேண்டும் என்பதற்காகச் சொல்கின்றேன். பள்ளிகளில், உயர்நிலைப் பள்ளிகளில், காலேஜுகளில் பிரின்சிபால், அல்லது நிலைமை ஆசிரியர்கள் சேருகின்ற மாணவர்களைப் பார்க்கும்போது பையன்கள் சிறியவர்களாக இருக்க வேண்டுமென்று எண்ணுகிறார்கள். கொஞ்சம் ஏறுமாறாகவாக இருந்தால், அவர்களுக்கு என்ன தொல்லைகள் வற்படுமோ என்று வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் மனதிலேயே எண்ணிக்கொள்கிறார்கள். இதை நிவர்த்திக்க ஏதாவது வழி செய்தால்தான், நாட்டில் கல்வி பெறுவதில் உள்ள கஷ்டங்கள் தீரும்.

அடுத்தபடியாக, இப்போது அரசினுடைய கொள்கை, தூரம்பக் கல்வியிலிருந்து பி.யூ.சி. வரை இலவசக் கல்வி என்று இருந்தும், நகராட்சிப் பள்ளிகள் சம்பந்தப்பட்டவரை, எறக்குறைய 30 நகராட்சிகள் கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. நாங்கள் நகராட்சிகளிலே

ஏதோ ஒரு பர்சன்டேஜ் கல்விக்கு வருஷ பட்ஜெட்டில் ஒதுக்கீடு செய்கிறோம். ஆனால் சர்க்கார் கிராண்டு கொஞ்சம்தான் கொடுக்கப்படுகிறது. மொத்தத்தில் சர்க்கார் கொடுக்கின்ற கிராண்டு இந்த இலவசக் கல்விக் கொள்கை சம்பந்தமாக மாறுபட்டிருக்கின்றது. தற்போது 4 லட்சம் ரூபாய் செலவாகிறது என்றால், அதில் அரசு கொடுக்கும் மான்யமும், நாங்கள் வசூலிக்கின்ற வரியும் சேர்ந்து 2 லட்சம் ரூபாய். பாக்கி 2 லட்சம் ரூபாயை எங்கள் வரிப்பணத்திலிருந்துதான் கொடுக்கவேண்டியிருக்கிறது. அப்படிக் கொடுக்கும்போது, ஜனங்களுடைய கல்விக்காக ஆகும் செலவு வரியில் இரட்டிப்பாக ஆகிவிடுகிறது. இலவசக் கல்வி என்று ஒரு பக்கம் இருந்தாலும், வரி வாங்குவது இரண்டாவது பக்கம் ஆகிவிடுகிறது. இந்த நிலைமையில் கிட்டத்தட்ட 30-க்கு மேற்பட்ட நகராட்சிகள் அவதிப்படுகின்றன. இந்த இலவசக் கல்வி முறை சரியாக நடைபெறவேண்டும். சில நகராட்சிகளில், மேனேஜ்மெண்டு ஸ்கூல்களிலே, வினக்குமாறு தந்தால், குப்பை கூட்டுகின்றவர்கள் கூலி ஸரை பூராவாகக் கொடுத்து விடுகின்றார்கள். ஆனால் சில நகராட்சி ஸ்கூல்களில் அப்படிக் கொடுப்பதில்லை. அப்படி வருகிற பணம் முச்சமாக இருக்கிறதோ இல்லையோ, நகராட்சியில் சேர்மனோ, மெம்பர்களோ அவர்கள் பணத்தைக் கொடுக்கப்போவதில்லை. ஜனங்களுடைய வரிப்பணத்தைத்தான் கொடுக்கப் போகிறார்கள். நகராட்சியில் உள்ளவர்கள் பள்ளிக்குச் சேர வேண்டிய சம்பளத்தைக் கொடுத்துவிடுகிறார்கள். இதனால் இலவசக் கல்வித் திட்டம் நிறைவேறுமோ போய் விடுகிறது. 90 நகராட்சிகளில் கிட்டத்தட்ட 30 நகராட்சிகள் அவல நிலையில் இருக்கின்றன. அதை நிவர்த்திக்க எந்த ஒரு வழியும் இதில் காணப்படவில்லை.

ஹராட்சி ஒன்றியங்களுக்கு கட்டிடங்கள் கட்ட எல்.ஐ.சி.யிலே இருந்து பணம் கடன் வாங்கித் தருகிறோம் என்று ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அது போலவே பற்றுக்குறை நகராட்சிகளுக்கு இந்த மாதிரிக் கடன் வாங்கிக் கொடுக்கலாம். உயர்நிலைப் பள்ளிகளுக்கும், தூரப்புப் பள்ளிகளுக்கும் சரியான கட்டிடம் இல்லாமலும், சிறுவர்கள் உட்காருவதற்குச் சரியான பெஞ்சு, டெஸ்க் போன்றவைகள் இல்லாமலும் மிகவும் கஷ்டமாக இருக்கின்றது. மொத்தத்தில் 10 பள்ளிகளில், 2 பள்ளிகளில்தான் வசதிகள் ஓரளவுக்குப் போதுமான அளவில் இருக்கும். மற்ற 8 பள்ளிகளில் போதுமான வசதிகள் இல்லை. இதுதான் என்னுடைய கருத்து.

அடுத்தபடியாக, பாடப் புத்தகங்கள். பாடப்புத்தகத்தை விநியோகம் செய்யும் விற்பனையாளர்கள் நிறைய இருந்தார்கள். ஆனால் நல்லதோ, கெட்டதோ, அரசினுடைய கொள்கைப்படி சர்க்காரே இந்த பப்ளிகேஷனை எவுத்துக்கொண்டிருக்கிறது. இதைப் ஒரு மாவட்டத்தில் தனிப்பட்ட நபர்களிடம், ஒரு இரண்டு பேர்களிடம் ஒப்படைத்தால், அது மோனோபலியாக ஆகிவிடுகிறது. சில நேரங்களில் புத்தகங்கள் கிடைக்காமல் போய்விடுகிறது. காலம் கடந்து வருகின்றன. சில நேரம் அதிக விலைக்குக் கூட வாங்க வேண்டியதாக இருக்கின்றது. இதனால் ஒருசிலர் வாங்கி வைத்து விற்கின்ற நிலையும் ஏற்படுகிறது. ஆகையால் இதில் போட்டி மனப்பான்மையை ஏற்படுத்த வேண்டும். இவைகள் விற்பனை

நிலை என்ன பண்ண வேண்டும்? அரசாங்கமானது, அவர்களுக்கு இத்தனை பர்சன்டேஜுக்கு என்று கொடுத்துவிட வேண்டும். அவர்களிடையே போட்டி மனப்பான்மை வரும். இரண்டு பர்சன்ட் வைத்து புதுசில் விற்பார்கள். வீணாகப் போகும் என்று எண்ணும்போது, அவர்கள் ஒரு பர்சன்டுக்கும் விற்பார்கள். வியாபாரம் அடித்துவிடப்போகிறது என்று ஒரு சில நேரத்தில் லாபமே வேண்டாமென்று விற்பார்கள். இது மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் சௌகரியமான முறையிலே இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அரசு இந்தக் கருத்துக்களை நிறைவேற்றுமானால், நல்லதாக இருக்கும் என்று சொல்லிக் கொண்டு நான் விடைபெறுகிறேன். வணக்கம்.

திரு. கி. வி. ராஜகோபால்: தலைவரவர்களே, கல்விக் கொள்கையின் மீது பேசுவதற்கு தாங்கள் வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த அரசினுடைய கோட்பாடும் லட்சியமும் மக்களுக்குக் கல்வி அளிப்பது என்பது. மக்களில் அரை மனிதர்களாக, கால் மனிதர்களாக, கல்வியின்றி இருக்கின்றவர்களை முழு மனிதர்களாக ஆக்க வேண்டுமென்ற ஒரு அடிப்படை லட்சியத்தை வைத்துக்கொண்டு இந்த ஆட்சி பணியாற்றிக் கொண்டிருக்கின்றது. மனிதன் இதுவரையில் முழு மனிதனாகத் தெரியவில்லை. மனிதன் கல்வியிருந்தால்தான் முழு மனிதன் ஆகின்றான் என்பதனை நம் அரசு மனதில் கொண்டு பல காரியங்களை நிறைவேற்றி வருகின்றது. தமிழ் நாட்டிலே 100 கல்லூரிகள் இருந்தன. இப்போது 170 கல்லூரிகள் ஆகியிருக்கின்றன. அதுமாதிரியே உயர்நிலைப் பள்ளிகள் இப்போது ராமராஜ்யமாகக் கட்டப்பட்டிருக்கின்றன. கல்விக்காக ஏறத்தாழ நம்முடைய அரசின் வருவாயிலே நான்கில் ஒரு பாகம் செலவழிக்கப்படுகிறது. இவை யெல்லாம் இந்த அவையிலே சொல்லப்பட்ட கருத்துக்கள். நானும் அதையொட்டி சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகின்றேன். நான் ஒரு கருத்தைச் சொல்கின்றேன். எனக்கு முன்னாலே பேசிய திரு. தீக்ஷிதர் கல்வி ஏதோ வயிற்றுப் பிழைப்புக்குதான் என்றார்கள். அந்தச் சொல் கல்வியினுடைய தரத்தை, மதிப்பை, தன்மையை, பெரிய நிலைமையைக் குறைத்துக் கூறுவதாகத்தான் இருக்கிறது. மனிதன் பண்போடு, முழு மனிதனாக, அறிவுடையவனாக உலகில் ஆக்கக்கூடியவனாக, போற்றத் தக்க வகையிலே திகழக்கூடியவனாக இருக்க வேண்டும் என்ற நிலைமைக்கு மனிதனை மாற்றத்தான் நம்முடைய வருவாயிலே நாலில் ஒரு பங்கைச் செலவு செய்து வருகிறோம் என்பதனை முதற்கண் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது ஏறக்குறைய எஸ்.எஸ்.எல்.சி. வரை படிக்கிற மாணவர்கள் இருக்கிறார்கள். அந்த மாணவர்களுக்கு ஆரம்பத்திலேயே தாங்கள் வேலைக்காகத்தான் படிக்க வேண்டுமென்ற எண்ணம் இருக்கின்றதே, அதை ஓரளவுக்கு மாற்றித்தான் ஆகவேண்டும். அந்த எண்ணம் அந்தப் பிள்ளைகளுக்கு படிக்கிறபோதே வரக்கூடாது. அவர்களுக்கு, தாங்கள் படித்த பிறகு வேலைக்குப் போகலாம், அப்படி தங்களுக்கு வேலை கிடைக்கவில்லையென்றால், தாங்கள் படித்ததில் பெற்ற திறனடனேயே, படித்த படிப்பை அடிப்படையாகக் கொண்டே பல காரியங்கள் செய்யலாம், பல முயற்சிகள் எடுத்து முன்னேற்றம்

[திரு. சி. வி. ராஜகோபால்] [1973 மார்ச் 21

அடையமுடியும், பிழைத்துக்கொள்ள முடியும், அத்துடன் திரு. தீக்ஷிதர் அவர்கள் சொன்னது போல வயிற்றையும் நிரப்பிக்கொண்டு வாழ முடியும், மானத்தையும் காப்பாற்றிக் கொள்ளமுடியும் என்ற எண்ணம் ஏற்படும் அளவுக்கு இந்தக் கல்வி இருக்க வேண்டும். இப்போது 11-வது ஸ்டான்டர்ட் என்று சொல்கிறார்கள். பழைய காலத்தில் எஸ்.எஸ்.எஸ்.சி. என்று சொல்வார்கள். 11-வது ஸ்டான்டர்டிலே ஒரு பாகுபாடு இருக்க வேண்டும், ஒரு முடுக்கடை இருக்க வேண்டும். அதற்கும் மேலே கல்லூரிக்கு, மேற்படிப்புக்கு வேண்டுமானால் ஒருமுறை வைத்துக்கொள்ளுங்கள். 11-வது ஸ்டான்டர்டில் அதிகமாக புரமோஷன் கொடுத்துவிட்டு அவர்கள் கல்லூரிக்கு அனுப்புவதைவிட, 11-வது ஸ்டான்டர்டு வரை படித்த படிப்பு உலக அறிவைக் கொடுத்து, பல தளைகளிலே நின்று வாதாடி முன்னேறி வாழுமளவுக்கு கல்வி முறையை மாற்ற வேண்டும். அதாவது எஸ்.எஸ்.எஸ்.சி. அல்லது 11-வது ஸ்டான்டர்டில் பரீட்சை வைக்கிறபோது, அப்படிப்பு இரண்டாண்டாவது இருக்க வேண்டும். பி.ஏ. 3 ஆண்டுகள் தேவை என்று நீங்கள் நிர்ணயிக்கின்றீர்கள். அப்படியானால், ஒரு தடை அந்தக் கட்டத்திலே வைத்துக்கொள்ளுங்கள். அந்த தடைக் கட்டத்தில் 2 வருடமாவது நிச்சயமாக இருக்க வேண்டும். அப்படியில்லாமல், வெறும் படிப்பு மட்டும் படித்துவிட்டு, மேற்கொண்டு பரீட்சையில் தேர்ந்து கொண்டே போய் கடைசியில் எல்லாப் படிப்பையும் முடித்து வேலை, வேலை என்று அலைவதாக அங்கலாய்த்துக்கொள்வது, அதற்காக பேராட்டங்கள் நடத்துவது தேவையற்றவை.

6·20 மி. ப.

பிரிட்டனில் இருக்கிற படிப்பு முறையில் "எய்டெட் ஸ்கூல்"களுக்கு ஏராளமான பணம் தருகிறார்கள் என்று சொன்னார்கள். அங்கிருக்கிற நன்மை வேறு, நிலைமை வேறு. இங்கு தமிழ்நாட்டுப் பண்புக்கேற்ற வகையில் படிப்பு இருக்க வேண்டும். மாண்புமிகு உறுப்பினர் திரு. தீக்ஷிதர் அவர்கள் எல்லோரும் ஆங்கிலத்தையே கேட்கிறார்கள், தமிழ் எதற்கு, தமிழ்நாடு என்ற பெயர் எதற்காக வைக்க வேண்டுமென்று அழகாகச் சொன்னார்கள். தமிழுக்கு நாம் உயிர்வு அளிக்காமல், தமிழை நாம் துச்சமாக எண்ணுவது நியாயமல்ல. அதற்காக ஆங்கிலம் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆங்கிலத்தைக் கொண்டு பிற மாநிலங்களுக்குச் சென்று பிழைக்க வழிவேண்டும், வியாபாரம் செய்ய வழிவேண்டும். ஆங்கிலம் வேண்டுமென்று சொல்லுகிற காரணத்தால், தமிழுக்கு பெரிய இழுக்குத் தேடுவது நியாயமல்ல, முறையும் அல்ல. தமிழ் தேவை. நம் குழந்தைகள் பரீட்சை முடிந்த பிறகு, கல்லூரியில் இடம் தேடுவதற்கு அலைகிறார்கள். எறி வருவதற்கு சிக்ஷா கிடைக்கவில்லை, மற்றவை கிடைக்கவில்லை என்று கஷ்டப்படுகிறார்கள். குழந்தைகளை எவ்வளவு இலேசாகப் பெற்றுவிடுகிறார்கள்? பெற்ற குழந்தைகளுக்கு படிப்புத் தேட அலைந்தால் என்ன கெட்டுவிடும்? பெற்றிருக்கிற அந்தக் கடமையைச் செய்ய வேண்டாமா? அது அவர்களுடைய பொறுப்பு அல்லவா? எதோ குழந்தைகளைப் பெற்று தூக்கி எறிவதுபோல், அங்கே சிக்ஷாவில் சென்றோம், வெளிட்டில் தூக்கியிருந்தோம் என்று அலட்சியமாகப் பேசக் கூடாது. அலட்சியமான கருத்துக்கள் நமக்கு வரக்கூடாது, நாட்டுக்கே வரக்கூடாது. கல்வி தேவை. அதற்கு அலட்சியப் போக்குகள் எவ்வளவு வளர்ந்திருக்கின்றன என்பதை நான் சொல்லி அவை உறுப்பினர்கள்

3 மார்ச் 21] [திரு. சி. வி. ராஜகோபால்]

ரிந்து கொள்ளவேண்டிய அவசியத்தில் இல்லை. அலட்சியப் போக்கு க்கக்கூடாது என்று சொல்லுகிறேன்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: எளிதாக இருக்க வேண்டு ன்று சொன்னேன். அலட்சியப்படுத்துவதாக நினைக்கக்கூடாது.

திரு சி. வி. ராஜகோபால்: அலட்சியம் என்று கருதாவிட்டாலும் தாக ஆக்கவேண்டும் என்று சொன்னார்கள். அவர்களுக்கு நான்கு ந்தைகள். எனக்கு எட்டுக் குழந்தைகள். மக்கள் தொகை வளவு வளர்ச்சியாக இருக்கும்பொழுது, நம் தமிழக ஆட்சிக்கு கோடி வருவாய். எங்கே வரி போடுவது? வரி போட்டால் வரி ட்டுவிட்டார்களே என்று திரு தீக்ஷிதர் அவர்கள் சொல்லுவார்கள். கோடி ரூபாய் வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியை பிற்பட்ட ள், அடித்தளத்தில் உள்ள மக்களுக்கு கல்வி வேண்டும் என்பதற் த் தான் ஒதுக்கியிருக்கிறார்கள். பிற்பட்ட மக்களுடைய குழந்தைகள், ஜன மக்களுடைய குழந்தைகள், ஏழைகள் இருக்கிறார்களே, அவர் க்குக் கல்வி அளிக்க வேண்டும். சின்னச் சின்ன உத்தியோகத்தில் க்கின்றவர்கள், அதாவது சாதாரண வேலை செய்கிறவர்கள், கடைநிலை யர்கள், அவர்கள் பெற்று எடுக்கிற குழந்தைகளுக்குக் கல்வி ண்டாமா? மேட்டுக்குடி மக்கள் ஆங்கிலத்தில் படித்தார்கள். அந்தக் த்தில் ஆங்கிலம் மேட்டுக் குடி மக்களுக்குத் தான் இருந்தது.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீக்ஷிதர்: மூன்றுவது பாரத்தில் மூன்று ஷம், நான்காவது பாரத்தில் மூன்று வருஷம், ஐந்தாவது பாரத்தில் று வருஷம் படித்து விட்டு, பிறகு படிப்பே வேண்டாம் என்று ஒ விட்டேன்.

திரு. சி. வி. ராஜகோபால்: பேரறிஞர் அண்ணு என்னுடன் படித்தார். றகு மேலே படித்தார்கள். எனக்கு ஒவ்வொரு வகுப்பிலும் இரண்டு ாடு, மூன்று ஆண்டுகள் தான்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: ஆளும் கட்சியும் எதிர்க் யும் ஒரு காரியத்தில் சரிசமமாக இருக்கிறது என்று தெரிகிறது.

திரு. சி. வி. ராஜகோபால்: படிக்க வேண்டும். அப்போது பள்ளிக் த்தில் "ஸ்டிரெங்த்" இருப்பதில்லை. ஆட்களைப் பள்ளிக்கூடத்திற்கு ழைக்க வேண்டும். "அட்டெண்டென்ஸ்" இல்லையே என்று ஆட்களை ழைத்த காலம் உண்டு. ஆனால் இப்போது 4½ கோடி மக்கள் என்றால் ாரணமானதல்ல. அடிப்படையில் எறக்குறைய 5, 6 ஆண்டுகளுக்கு பு 30 சதவிகிதம் கல்வி அறிவு இருந்தது. இப்போது கல்வி அறிவு வளவு வீதாச்சாரம் எறியிருக்கிறது என்ற கணக்கையாவது ஒரு ம் எண்ணிப் பார்க்க வேண்டும். 60 சதவிகிதம், 62 சதவிகிதம், ி அறிவு குழந்தைகள் பெற்றிருக்கிறார்கள் என்றால், அது மிகச் ாரணமானதல்ல. அவ்வளவு திறம்படச் செய்கிறபொழுது, கட்டிடம் லையென்று சொல்லுகிறார்கள். யார் இல்லையென்று சொல்லுகிறார்

கள். எராளமான கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. இன்னும் கேட்டால், பெரிய கட்டிடங்களைக் கட்டுவதில் அதிகமாகச் செலவு செய்வது என்றால், படிப்பில் அக்கறை இல்லாமல் பலவிதமான சூழ்நிலை ஏற்படும். எராளமான கட்டிடங்கள் கட்டப்பட்டிருக்கின்றன. பெரும் கட்டிடங்கள் கட்டி, ஃபேன், லைட் போட்டுவிட்டால், படிப்பில் "கான்சென்டிரேஷன்" இல்லாமல் வேறு எதற்கோ போகும். அழகான லைட் மீது போகும், ஃபேன் மீது போகும், போடுகிற கட்டில் மீது போகும், தலையணை மீது போகும். இப்படி மாணவர்களைக் கெடுப்பதற்காக கட்டிடமே இல்லை யென்று சொல்லுகிறார்கள். வெட்ட வெளியிலா சொல்லிக் கொடுக் கிறார்கள்? எங்கும் கட்டிடங்கள் இருக்கின்றன. சில இடங்களில் அதிக மாகவே, நேர்த்தியாகவே கட்டப்பட்டிருக்கிறது. ஒரு தெய்வீக உணர்ச்சி யோடு கல்வியைப் பரப்பும் காரியத்தில் இந்த ஆட்சியாளர் ஈடுபட்டிருக் கிறார்கள். அருமை நண்பர் திரு முத்துசாமி ஒரு ஆசிரியர் பெருமகன் தான். இந்த நாட்டில் ஆசிரியர்கள் அமைச்சர்களாக இருக்கிறார்கள். நாவலர் நெடுஞ்செழியன், பேராசிரியர் அன்பழகன் ஆகியோர் ஆசிரியர் வேலையிலிருந்து வராமல் வேறு எந்தத் தன்மையிலிருந்து வந்திருக் கிறார்கள் என்று ஆசிரியர்கள் ஒரு கணம் உணரவில்லை. அது என்னுடைய பிரார்த்தனைக் குற்றச்சாட்டு. ஆசிரியர்களுக்காக எவ்வளவோ பேர் இருக்கிறார் கள். மாண்புமிகு உறுப்பினர் திரு ராஜா அய்யர் அவர்கள் பகல் இரவு பாராமல் மன வேதனையோடு ஆசிரியர்களுக்கெல்லாம் எவ்வளவு அறிவுரை வழங்குகிறார்கள் என்பதைக் கண்ணாரக் கண்டேன். பக்கத்தில் அமர்ந்துகொண்டு கேட்டேன். தாங்கள் பெற்றெடுத்த குழந்தைகள் பரீட்சைக்குப் போகுமா, பரீட்சையில் மார்க் வாங்குமா என்று பெற்றோர் கள் எங்குகிற நேரம் பார்த்து, "நாங்கள் பரீட்சைக்கு வராமாட்டோம், பரீட்சை எழுதமுடியாத அளவுக்குச் செய்துவிடுவோம்," என்று பி.எ., பி.டி. படித்த ஆசிரியர்கள் கணக்கிட்டு அறுதியிட்டு, இதைக் கெடுக்க வேண்டும், நாட்டு மக்களின் குழந்தைகள் பாழாக வேண்டும் என்பதற்காக ஆரம்பிக்கிற போராட்டம் மிகச் சாதாரணமானதல்ல. எதோ கொஞ்சம் காருண்யம் உள்ள சர்க்காராக இருந்த காரணத்தால், ஒன்றும் செய்ய வில்லை. என்னிடம் சர்க்கார் பொறுப்பு இருந்திருந்தால், நிச்சயமாக நான் சலுகைகள் காட்டமாட்டேன். ஆசிரியர்களை பெரிய மனிதர்கள் என்று நம்பியவன் நான். ராமாநுஜ அய்யங்கார், விஜயராகவாச்சாரி, ராஜகோபால அய்யர், போன்ற ஆசிரியர்கள் நடந்து வந்தால், மிதப்போடு இருந்தோம். இப்போது ஆசிரியர்களைப் பார்த்தவுடன் மிதமிதப்பு வருவ தில்லை. வேறு எதோ வருகிறது. தமிழ்நாட்டுக் குழந்தைகளைப் பார்த்துக்கொள்ளுகிற பொறுப்பு ஆசிரியர்களுக்கு உண்டு. அவர்கள் இப்படிச் செய்யலாமா? ராமாயணம் படித்தவர்கள் இருக்கிறார்கள். ரா. கி. அவர்களுக்குத் தெரியும். ராமன் தன் கையில் வில்லை வைத் திருக்கிறான். ராவணன் வந்தான். ராமன் சொன்னான், "இன்று போய் நாளை வா என்று" யாரை? ராவணனை. அப்படிப்பட்ட ஒரு ஆட்சியாளர் நாட்டு மக்களைக் காப்பாற்ற வேண்டுமென்கிறபொழுது எவ் வளவு பெரிய தவறு, எந்த நேரம் பார்த்துச் செய்வது? ஆசிரியர்களே, இப்படிப்பட்ட காரியத்தைச் செய்யலாமா? நானாக இருந்திருந்தால், Ignorance of law is no excuse' என்று சொல்லியிருப்பேன். ஆகவே சட்டம் அப்படி இருக்கிறது. சட்டத்தின்படி நடவடிக்கை எடுத்திருந்தால், இந்நேரம் எறக்குறைய 10,000 ஆசிரியர்கள்

வந்து புகுந்திருப்பார்கள். வேலையும் தொடர்ந்து நடந்திருக்கும். ஆசிரி யர்கள், " நாம் பெரும் குற்றம் செய்திருந்தாலும், Ignorance of law is no excuse என்று இருந்தாலும் ஓரளவிற்கு அதைத் தளர்த்தி பாது காப்பு அளித்திருக்கிறார்கள் " என்ற நிலையில் வேலை செய்ய வேண்டும். நான் எறக்குறைய ஒரு வாரத்திற்கு முன்பு, பச்சையப்பன் பெண்கள் கல்லூரிக்குச் சென்றிருந்தேன். 'ஹாஸ்டல் டே'க்கு என்னை 'சிஃப் கெஸ்ட்' ஆக அழைத்திருந்தார்கள். அங்கே என்டர்டெயின்மெண்ட் எல்லாம் வேடிக்கையாக இருந்தது. ஆசிரியர் பெருமக்கள் வந்திருந் தார்கள். அங்கே கல்லூரி முதல்வர் அம்மையார் அவர்கள் வந்திருந் தார்கள். அவரைத் தொடர்ந்து கூட வேலை செய்கிற பி.எ., பி.டி.; எம். ஏ. படித்தவர்கள், கல்லூரி ஆசிரியர்கள், இணைந்து பணியாற்றுகிற வர்கள் வந்திருந்தார்கள். அவர்களுக்குப் பாராட்டு தெரிவிக்கவேண்டும் என்று சொன்னார்கள். மிக மகிழ்ச்சியோடு பாராட்டு தெரிவித்தேன். " உங்களிடம் என்னை அறியாமலே மகிழ்ச்சி வருகிறது. காரணம் இப்போது நடந்து முடிந்த போராட்டத்தில் நீங்கள் கலந்து கொள்ள வில்லை. உங்கள் கடமையை உணர்ந்திருக்கிறீர்கள். கல்லூரி நடக்க வேண்டும். மாணவிகள் பெருமக்களைக் காப்பாற்ற வேண்டும் என்று இந்தப் போராட்டத்திற்கு துளிக்கூட செவி மடுக்காமல் உங்கள் காரிய ங்களைச் செவ்வனே செய்திருக்கிறீர்கள். மகிழ்ச்சி. நாட்டிலே சூழப்பங் கள் ஏராளமாக நடக்கின்றன என்று பத்திரிகையிலே போடுகிறார்கள். பி.எ., பி.டி. படித்தவர்களால் மறியல் போராட்டமாம், சிறையாம்—இதை எல்லாம் விரும்பாதவர்கள் நீங்கள், அதற்காக மகிழ்ச்சி கொள்ளுகிறேன், உங்களைப்பாராட்டுகிறேன் " என்று சொன்னேன். அது மாத்திரமல்ல. சிறிய அளவு, அல்ப காசு தரலில்லை என்று இப்படிப் போராட்டம். சிறிய குறைகளுக்கு இவ்வளவு பெரிய ஆர்ப்பாட்டம். அவை தேவை யில்லை. ஆகவே ஆசிரியப் பெருமக்களை பணிவன்போடு இந்த அவையின் சார்பிலே கேட்டுக் கொள்ளுகிறேன்; நீங்கள் உங்கள் பெருந்தன்மையை முதலில் காப்பாற்றிக்கொள்ளுங்கள். அது நாட்டிற்குத் தேவை. நாட்டு மக்களுக்குத் தேவை. குழந்தைகளுக்குத் தேவை. அதற்காக அரசு வயிற்றிலே அடிக்கிறது என்றால், அதற்குச் சம்மதிக்க மாட்டேன். எராள மாகக் கொடுக்கிறார்கள். கொடுக்காமல் இல்லை. " பணமே கொடுப் பதில்லை, சம்பளமே கொடுப்பதில்லை, எப்படி வேலை செய்ய ?" என்று கூற முடியாது. தமிழ்நாடு முழுவதும் உலகம் முழுதும் " Sympathy" காட்டியிருக்கிறார்கள் முன்பு. இப்போது " Sympathy" காட்டாது. ஆகவே ஆசிரியர்களே, மிகப் பணிவாக இந்த அவையின் சார்பாகக் கேட்டுக்கொள்ளுகிறேன். கண்ணியம், தரம், பண்பு, மாண்பு இவைகள் எல்லாம் உயர வேண்டும் என்பது தான் இன்றைய கருத்து, என்னுடைய கருத்தும் என்று கூறி முடிக்கிறேன்.

* திரு. எல். பலராமன் : தலைவரவர்களே, கல்விக்காக தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் ரூ. 100 கோடிக்கு மேல் செலவழிக்கக் கூடிய நிலையை ஒரு பக்கம் பாராட்டினாலும், வளரும் சமுதாயத்திலே சமுதாய வளர்ச்சிக்கு மிக மிகத்தேவை என்பதை நாடும் சமூகமும் அறிந்திருந் தாலும், நம் நாட்டிற்கு இவ்வளவு செலவழிக்கிறோமே, இதனால் என்ன நிலை இப்போது என்பதைப் பரிசீலிக்க வேண்டியிருக்கிறது. அது சமுதாயத்திற்கு நல்ல முறையில் பயன்படுகிறதா என்று பார்த்தால்

[திரு. எல். பலராமன்] [1973 மார்ச் 21

இன்றைய சூழ்நிலையில் அதற்கு ஆட்சிப்பொறுப்பில் உள்ளவர்கள், அமைச்சர் பொறுப்பில் உள்ளவர்கள் காரணமா அல்லது நிர்வாகத்தில் உள்ள அதிகாரிகள் காரணமா என்று பார்த்தால், இன்றைய மாணவர்களிடையே அமைதியில்லாத நிலைமை, ஆசிரியர் இடையேயும் அதே நிலைமை இருக்கிறது. இதற்கு நிர்வாகச் சீர்கேடு காரணமா அல்லது இந்தக் கோளாறுக்கு யார் காரணம் என்பதைப் பார்க்கும்போது, மிக வேதனையாகவும் வருத்தமாகவும் இருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. நாடு இதை உணர்ந்தேயிருக்கிறது. இன்றைக்கு இந்தத் துறையை எடுத்துக் கொண்டால், ஒரு பக்கம் பட்டதாரி ஆசிரியர் போராட்டம் நடக்கிறது. அங்கு இவர்களுக்குச் சாதகமாக மாணவர்களிடையே போராட்டம் என்று ஆங்காங்கு துவக்குகிறார்கள். ஆரம்ப ஆசிரியர் மகாநாடுகள் என்ற நிலையை உருவாக்குகிறார்கள். இதற்கெல்லாம் யார் காரணம்? நாட்டிலே இருக்கும் அரசியல் கட்சிகளா என்று பார்த்தால், அரசன் எவ்வழியோ அவ்வழி தான் குடிமக்கள் என்ற நிலையை உணர்த்திக்கொண்டிருக்கிறது. அன்று என்ன வழி காண்பித்தோமோ அந்த வழியில் இன்று நாடு நடந்துகொண்டிருக்கிறது, மக்கள் நடந்துகொண்டிருக்கிறார்கள் என்பதை உணர வேண்டும். அதனால் எதிர்கால சந்ததியினர் நாம் என்ன ஆவது என்பதைச் சிந்திக்க வேண்டும், அனைத்துக் கட்சிகளும் சிந்திக்க வேண்டும் என்ற சூழ்நிலையில் இருக்கிறார்கள். இதற்காக ரூ. 100 கோடி செலவழிக்கிறோம் என்றுசொல்லி, இத்தனை கோடி என்று கணக்குப் பார்ப்பதில் நியாயமில்லை, நேர்மையில்லை. வளரும் சமுதாயத்தில் நாம் என்ன செய்கிறோம், அது எல்லா மக்களுக்கும் எப்படிப் பயன்படுகிறது என்பதைத் தாராளமாகச் சிந்திக்க வேண்டும். எப்படி பண்புள்ளவர்களாக வளர வேண்டும் என்ற பெரும் நோக்கத்துடன் அதிலே பெரும் பொறுப்பு வகிக்கும் அதிகாரிகளும் அந்தப் பொறுப்பு வசிக்கிற அமைச்சர்களும் இதைச் சிந்திக்க வேண்டும் என்று நான் இங்கு கூற ஆசைப்படுகிறேன். இந்தக் கொள்கைக்கு காரணம், அகில இந்திய ரீதியில் பார்த்தாலும் நல்லதொரு விளக்கம் இல்லை என்று கூறுகிறார்கள். இதற்கு ஒரு தெளிவான கொள்கை ஏற்படுத்தி, மாணவர்களிடையே பண்பாடுகளை வளர்க்கும் வழிவகைகளை உருவாக்க வேண்டும். ஏதோ வேலையின் பொருட்டு தான் கல்வியா அல்லது அறிவின் பொருட்டு கல்வியா என்ற வாதத்திற்கு, கல்வி என்பது அறிவிற்குத்தான், வேலைக்கு அல்ல என்று கூறினாலும், நம்முடைய சமுதாய அமைப்பு எப்படி இருக்கிறது என்றால், ஏழைகள், தாழ்ந்த நிலையில் இருக்கும் ஏழை மக்கள், ஏதோ தங்களுடைய வாழ்க்கைக்காகக் கல்வி கற்கிறார்களே தவிர அறிவு வளர்ச்சிக்காக அல்ல என்பதை நாம் உணர்ந்திருக்கிறோம். ஏதோ வசதியுள்ளவர்கள்கூட இன்று படிப்பதெல்லாம் உத்தியோகத்திற்குத்தான் என்று இருப்பதால் தான், உத்தியோகம் வழங்குவதிலே இன்று வசதியுள்ளவர்களுக்குத் தான் படித்தவர்களுக்குத்தான் வேலை வாய்ப்பு கிடைக்கிறது. சாதாரண மக்கள் ஏழைமக்கள் அந்த நிலையில் இல்லை என்பதை இன்று கண்கூடாகக் காண்கிறோம். குறிப்பாக ஆரம்பக் கல்வி என்று பார்த்தால், இந்த ஆரம்பக் கல்வியை பஞ்சாயத்து யூனியன் பொறுப்பிலே நிர்வகித்துக்கொண்டிருக்கிறார்கள். மதிப்பிற்குரிய எங்கள் தலைவர் காமராஜர் ஆட்சிப் பொறுப்பில் இருக்கும்போது, பஞ்சாயத்து அமைப்புகளை ஏற்படுத்தி, 300 ஜனத்தொகை உள்ள ஒவ்வொரு கிராமத்

973 மார்ச் 21] [திரு. எல். பலராமன்]

திற்கு ஒரு பள்ளி, ஐந்து மைல்களுக்கு ஒரு உயர்நிலைப்பள்ளி என்ற நிலையை ஏற்படுத்தி, அதனால் ஒரு மறுமலர்ச்சி ஏற்பட்டு, கேரளாவிற்கு அடுத்தாற்போல் 47 சதவிகிதம் என்ற அளவிற்கு தமிழ்நாடு பெருமை படைத்தது என்று கூறுகிற அளவிற்கு, கல்வி கொடுக்கப்பட்டது என்பதைப் பார்த்து தமிழ் நாட்டு மக்கள் வியந்திருக்கிறார்கள். மேலும் இதனால் பெருவாரியாகக் கல்வி கற்று உத்தியோகத்திற்குச் செல்ல வேண்டுமென்று இன்று ஏழை மக்கள், கிராம மக்கள் கல்வி கற்கும்போது, அந்தக் கல்வி, "கண்ணிலான் பெற்று இழந்தான்" என்று கம்பன் கூறியது போன்ற நிலை இன்று ஏற்பட்டிருக்கிறது. கண்ணில்லாதவர்கள் என்று கூறுகிறபோது எற்கெனவே அவர்கள் சமூகத்தில் அவர்கள் தாய் தந்தையர்கள் கஷ்ட திசையில் இருந்தாலும், காமராஜர் ஆட்சிப்பொறுப்பில் இருந்தபோது அளித்த கல்வி வசதி காரணமாக, அந்தக் கல்வியைக் கற்று பிறகு ஏதோ வேலை கிடைக்கும், அதனால் நம் பிழைப்பு வளரும் என்று ஓரளவிற்கு ஊக்கத்தோடும் ஆர்வத்தோடும் கல்வியைக் கற்று பிறகு வேலை வாய்ப்பு இல்லை என்று ஏற்படுகிறபோது, அது பெற்ற கண்ணை இழந்துவிடுகிற மாதிரியாகிறது. இதனை வேதனையோடும் வருத்தத்தோடும் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதனை மாற்ற, இந்தக் கல்விமுறையை மாற்றியமைக்க, படிக்கிற கல்வி பயன்பட வேண்டும் என்ற திட்டம் இருக்கிறதா என்றால், எங்கும் இல்லை. தமிழ் நாட்டிலும் இல்லை. அகில இந்தியாவிலும் இல்லை. இதற்கு நல்லதொரு வழிவகுக்க வேண்டும். எதிர் காலத்தில் இப்படி நல்லதொரு பயனோடு படிக்கிறார்கள் என்ற நிலை இருந்தால் அல்லாமல், சமுதாயத்தில் ஒரு புரட்சி உண்டாகும் நிலை ஏற்படும் என்ற ஐயப்பாடு கூட ஏற்படுகிறது. இன்று படித்த பட்டதாரிகள், வேலையில்லாமல் இருப்பவர்கள், வேலையில்லாதோர் சங்கம் என்று ஆரம்பித்திருக்கிறார்கள். இதை அரசு உணர்ந்திருக்கிறதா, அரசு அதிகாரிகள் உணர்ந்திருக்கிறார்களா என்றால், இல்லையென்று தான் சொல்ல வேண்டும். இந்த நிலை மேலும் நீடித்துக்கொண்டு போனால், அது சமுதாயத்தில் ஒரு பெரிய புரட்சியை உண்டாக்கும். அந்த மாதிரிப் புரட்சி நம் நாட்டில் ஏற்பட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. நக்ஸலைட்டுகள் சமீபத்தில் கைது செய்யப்பட்டபோது, அதிலே பட்டதாரிகள் இருந்தார்கள். இதற்கு அடிப்படைக்காரணம் அவர்களுடைய கல்வி வீணாக்கப்பட்டது, படித்தும் வேலைவாய்ப்பு இல்லை, வேறு வழியில்லை, சமுதாயத்திற்குப் பயன் இல்லை என்று அப்படிப் பயன் இல்லாமல் போனது தான் என்பதை இந்த நேரத்தில் உணர வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். மேலும் ஆரம்பக் கல்வியை நல்ல முறையில் பலப்படுத்த வேண்டும். ஆரம்பக் கல்வி அப்படி இருந்தால்தான், அது மேல் கல்வி வளருவதற்கு அடிப்படையான அடிக்கல் என்று கூறுவார்கள். அந்த முறையில் அது இருக்க வேண்டும் என்று கூறிக்கொள்ளுகிறேன். ஆரம்பக் கல்விக்கு ஒதுக்கப்படும் பணம் போதுமா என்றால் போதாது. பல பள்ளிகள் பழைய நிலையிலே, பழைய ஆரம்ப நிலையிலே இருக்கின்றன. கூரைக் கொட்டகைகள் என்ற நிலையிலே பல பஞ்சாயத்து யூனியன்கள் நிர்வகிக்கக்கூடிய நிலையை இன்று கண்கூடாகக் கண்டுகொண்டிருக்கிறோம். அந்தப் பள்ளியில் இருக்கும் மாணவர் விகிதம் அதிகம். 40 என்று இருக்கிறது. இதைக் குறைத்து மேலும் அதிகமாக வழி வகைகள் செய்தால் தான், கல்வியின் தரம் உயரும்.

6—40 பி.ப.

கல்வியென்றால், எதோ எட்டுக் கல்வி மட்டும் இருந்தால் போதாது என்பதை உணர்ந்து அரசாங்கம் நீதி போதனைகளைப் புகுத்த வழி வகுக்க வேண்டும். இந்த நீதி போதனைகள் இருந்தால் தான், சமூதாயம் அடக்கமாகவும், தன்னம்பிக்கையோடும் வாழக்கூடிய ஒரு முறைக்கு வழி வகுக்க முடியும். பழைய காலத்தில் இந்த நீதி போதனைகள் இருந்தன. இன்றைக்குக்கூட கிருஸ்தவ, முஸ்லீம் மதங்களின் சார்பாக நடத்தப்படுகிற பள்ளிகளில் அவரவர்களின் மதபோதனைகளை ஒரு பாடமாக வைத்திருக்கிறார்கள். ஆனால் அரசாங்கத்தின் பொறுப்பில் உள்ள பள்ளிகளில் அது தேவையில்லை என்று வைத்திருக்கிறார்கள். ஒருவேளை மதமே இல்லை என்று சொல்வதின் காரணமாக இதைச் செய்யவில்லையோ என்று நான் நினைக்கிறேன். மதபோதனை இல்லாவிட்டாலும், நீதி போதனைகளைச் சொல்லிக் கொடுத்து மாணவர்களிடையே நல்ல பண்பாட்டை வளர்க்க வேண்டுமென்று அதைச் செய்கிறார்களா என்று பார்த்தால், அது இல்லை. அந்தப் பண்பாட்டை உருவாக்குவது மிக மிக அவசியமாகையால், ஆரம்பப் பள்ளிகளில் ஒன்றே அல்லது இரண்டோ வகுப்புகளை இந்த நீதி போதனைகளுக்காக ஒதுக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். இப்போது பள்ளிக் கூடப் பாடங்களில் சில பல மாற்றங்களை ஏற்படுத்தியிருக்கிறார்கள் என்று நான் அறிகிறேன். அந்த முறையில் வரலாற்று நிகழ்ச்சிகளில் தமிழ் நாட்டைப் பற்றித் தான் கூறப்போவதாகக் கூறுகிறார்கள். இப்படி தமிழ் நாட்டுச் சரித்திரத்தை மட்டுமே கூறிவிட்டு, வடக்கே இருக்கிற மாநிலங்களைப்பற்றிக் கூறாமல் விட்டால், அது எதோ ஒரு குறுகிய மனப்பான்மையைத்தான் ஏற்படுத்தும் என்று எனக்குத் தோன்றுகிறது. ஆகவே இதை மாற்றி தேசம் பூராவும் இருந்த தலைவர்களைப் பற்றியும், இப்போது இருக்கிற தலைவர்களைப் பற்றியும், மாநிலங்களைப் பற்றியும் தெரிந்து கொள்ள வாய்ப்புத் தர வேண்டும். நான் ஒரு பட்டியலைப் பார்த்தேன். அதிலிருந்து குறிப்பாக, தமிழ் நாட்டில் இருக்கிற ஒரு சில தலைவர்களைப் பற்றி மட்டும் பாடபோதனைகளாக 2 முதல் 5-ம் வகுப்பு வரை சரித்திரப் பாடங்களில் புத்தகங்களில் புகுத்தப் போவதாக அறிந்தேன். அது மாத்திரமல்லாமல், இந்த நாட்டின் விடுதலைக்காகப் போராடி உயிர்நீத்த தலைவர்கள், இன்றைக்கும் இருக்கிற தலைவர்கள் ஆகியோரின் வரலாற்றையும் இணைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எதோ கட்சி மனப்பான்மையோ உங்களின் கட்சியில் இருக்கிற சில தலைவர்களின் வரலாறுகளை மட்டும் இணைப்பது நியாயமல்ல. அதுவும் குழந்தைகளின் மனதில் இந்த மனப்பக்குவத்தை உண்டாக்குவது முறையல்ல. அப்படிச் செய்தால், அது தேசிய ஒருமைப்பாட்டை பாதிக்குமே என்ற ஐயப்பாடு எழுந்திருக்கிறது. உலகம் சுருங்கிக் கொண்டிருந்தாலும், வளர வேண்டிய குழந்தைகளின் மனங்களை விசாலமாக்க வேண்டுமென்று கூறிக் கொண்டு, இன்றைக்கு பஞ்சாயத்து யூனியன் உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கிற இடுக்கண்களைத் தவிர்க்க வேண்டும். அன்றைக்கு ஆசிரியர்களை சேர்மனும், ஆணையாளர்களும் தான் மாற்ற வேண்டுமென்று இருந்தபோது எந்தவிதத் தகராறும் இல்லை. ஆனால் அதற்குப் பிறகு இன்றைக்கு கட்சி நோக்கோடு எம்.எல்.ஏ-க்களையும் அந்தக் குழுவில் பங்குக்கொள்ளச் செய்ததால், இன்றைக்கு நிர்வாகத்தில் ஊழலும், மாச்சரியமும் ஏற்பட்டு ஒருவருக்கொருவர் நீ பெரியவனு? நான் பெரியவனு? என்ற போட்டி எழுகிற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு சேர்மனும் வேண்டாம்,

சட்ட மன்ற உறுப்பினரும் வேண்டாம் என்று சொல்லி ஆணையரிடமும் கல்வி அதிகாரியிடமும் அந்தப் பொறுப்பை விடவேண்டுமென்று சொல்லப் பட்டது. அதிலும் சிக்கல் இருக்கிறது, அதனால் இன்றைக்கு நிர்வாகப் பொறுப்பை சேர்மனிடமும், ஆணையாளரிடமும் விட்டுவிடவேண்டுமென்று சொல்லி, இந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் மாறுதல்களை அவர்களிடம் விடவேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். இதற்கு எதோஒரு வாரியம் அமைக்க வேண்டுமென்ற அபிப்பிராயம் இருப்பதாகக் கூறப்பட்டது. இந்த வாரியம் அரசியல் நோக்கோடு இல்லாமல், தனி வாரியமாக இருந்தால், பயனுள்ளதாக இருக்கும் என்ற ஒரு நிலைமை இருக்கிறது. அந்த முறையைப் பயன்படுத்தி ஆரம்பக் கல்விக்காக ஒரு வாரியம் அமைக்கப் பட வேண்டுமென்று அபிப்பிராயப்படுகிறேன். அந்த முறையில் அரசாங்கமும், அதிகாரிகளும் இவைகளையெல்லாம் நன்கு பரிசீலித்து இந்த நாடு வளர வேண்டும், இந்த நாட்டு மக்கள் நல்ல முறையில் வாழ வேண்டுமென்ற முறையில் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இந்த உயர்நிலைப் பள்ளிகள் 5 மைலுக்கு ஒன்று என்று திறக்கப்பட்டிருந்தாலும், அதை நிர்வகிக்கக்கூடிய நிலைமை எப்படி இருக்கிறதென்று பார்த்தால், அது மிகவும் பின்தங்கிய நிலையிலிருக்கிறது. எனக்கு முன்பே பேசிய அங்கத்தினர்கள் கூறினார்கள். இப்படி நிறைய பள்ளிகளைத் திறப்பதை விட திறந்த பள்ளிகளை நல்ல முறையில் நடத்துவதில், அவைகளுக்கு வேண்டிய தளவாடங்களையும், மற்ற கட்டிடங்களையும் விஞ்ஞானக் கருவிகளையும் வாங்கிக் கொடுத்தால், நல்லதாக இருக்குமென்று கூறினார்கள். அதைப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். பல உயர்நிலைப் பள்ளிகளில் மாணவர்கள் தங்க நிழல் கூட இல்லாமலிருக்கிறது. பழங் காலத்து ஆசிரமப் பள்ளிகள் போலிருக்கிறது. அந்த ஆசிரமப் பள்ளிகள் இருக்க வேண்டிய நிலையில் இருந்தால் கூட அது வரவேற்கத் தக்கதாக இருக்கும். ஆனால் இப்போது அந்தமாதிரி கூட இல்லை என்று சொல்லுகிற அளவுக்கு அந்தப் பள்ளிகளில் இருந்த மரங்களைக் கூட வெட்டிவிட்டதால், நிழல் கூட இல்லாத நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அந்த மாதிரி நிலைமையை மாற்றியமைக்க வேண்டுமென்று கூறிக்கொள்ளுகிறேன்.

இப்போது உயர்நிலைப் பள்ளிகளில் இருக்கிற பி.டி. ஆசிரியர்களுக்கும், தமிழாசிரியர்களுக்குமிடையே ஒரு விதப் போட்டி மனப்பான்மை ஏற்பட்டிருக்கிறது. அதை இந்த அரசு தான் ஏற்படுத்தியிருக்கிறது என்று வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். எதோ அவர்களுக்கு நல்ல சலுகை செய்வது போல தமிழாசிரியர்கள் தகுதி உள்ளவர்கள், அவர்களும் 5 வருடம் படித்தவர்கள் என்ற முறையில் அவர்களும் தலைமையாசிரியர்களாக பொறுப்பை ஏற்கலாம் என்ற ஒரு வாக்குறுதியைத் தந்ததின் காரணமாகவும், அதற்கான ஒரு வழி முறை நல்ல முறையில் வகுக்கப்படாததின் காரணமாகவும் தான் இன்றைக்கு அவர்களிடையே ஒரு போட்டி மனப்பான்மை; இல்லை, இல்லை நான் தான் உயர்ந்தவன்.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட தகுதி இருந்தால் அந்தப் பதவிக்கு அவர்கள் வருதல் கூடாது என்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுகிறார்களா?

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 21

ஆகவே போட்டி என்று ஏற்படுகிற அளவுக்கு அரசு எப்படித் தூண்டுதலாக இருக்க முடியும்? அவர்கள் இரண்டு பேர்களும் இந்த மாதிரிக் கோரிக்கைகளை வைக்காமலிருந்தால், எங்களுக்கு எந்தக் கவலையுமே இருந்திருக்காது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறிய விளக்கத்துக்கு வணக்கம் கூறுகிறேன். தமிழாசிரியர்கள் தங்களைத் தலைமை ஆசிரியர் பொறுப்பில் வைக்க வேண்டுமென்று கூறுகிறார்கள். ஆனால் அதற்கான உத்தரவுகள் விரைவாக அனுப்பாததின் காரணமாக இதுநாள் வரையில் அந்த மனநிலை பி.டி. ஆசிரியர்களுக்கு ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை அந்த ஆசிரியர்கள் உணர்கிறார்கள். தமிழாசிரியர்கள் அதை ஒரு குறையாகவும் இன்று கூறுகிறார்கள். ஆகவே அதை நிவர்த்திக்க வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன். அதற்குத் தகுதியான தமிழாசிரியர்கள் இருந்தால், அவர்களை நியமிப்பதில் எந்தவித ஆட்சேபணையும் எனக்குக் கிடையாது. அதை நான் வரவேற்கிறேன். பி.டி. ஆசிரியர்கள் தங்களின் கோரிக்கைகள் என்று 6 கோரிக்கைகளை வைத்து, இன்றைக்கு அது பெரிய விவாதமாக நடந்து அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரு பெரிய பதிலைக் கொடுத்தார்கள். அவர்களின் கோரிக்கைகளை சாதாரணமாக அதிகாரிகள் பரிசீலித்து இறுதியான ஒரு முடிவு காண வேண்டுமென்ற நிலை இருந்தும், இவ்வளவு நாள் கடத்தி இன்றைக்கு அதற்காக ஒரு பெரிய போராட்டம் நடத்தக்கூடிய அளவுக்கு வந்ததற்கு யார் காரணம் என்பதைச் சிந்திக்க வேண்டும். இன்றைக்கு போராட்டம் நடத்தித் தான் ஆசிரியர்கள் அவர்களின் கோரிக்கைகளைப் பெற வேண்டுமென்ற நிலைக்கு வந்திருக்கிறார்களா என்று பார்த்தால், அவர்களின் பிரதிநிதிகளாக இங்கே வந்திருக்கிற அங்கத்தினர்களும் அதை ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், அந்த ஆசிரியர்களும் அதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆகவே நிர்வாகம் கொஞ்சம் தயக்கம் காட்டியது தான் இப்படிப்பட்ட நிலைமைக்குக் காரணம் என்பதை நான் சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன். இப்போது வந்துள்ள நிலைமைக்கு முன்பே வந்திருந்தால் நலமாக இருந்திருக்கும் என்று கருதுகிறேன். அதிலும் இன்றைக்கு பி.டி. ஆசிரியர்களை சர்வீஸ் கமிஷன் மூலம் தேர்ந்தெடுப்பது நல்லதல்ல. அதை வாபஸ் பெற்றுக்கொண்டோம் என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் ஆசிரியர்களின் தேர்வுக்கு மிகமிகத் தேவையானது கல்வியுடைய உயர்ந்த ஒழுக்கத்தை அதிகமாக வளர்ப்பது தான் என்பதை நான் அறிவேன். அந்த அளவுக்கு ஆசிரியர்கள் பயிற்சிக்குப் போவதற்கு முன்னதாக, அவர்களை சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுத்து அதற்குப் பின்னால் அவர்களுக்கு ஆசிரியர் பயிற்சியைத் தந்து ஆசிரியராக நியமிப்பதில் எந்தவிதச் சிக்கலும் இருக்காது. அதைப் பயன்படுத்தலாம் என்று ஒரு கொள்கை இருக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே சொல்லிக் கொள்ளுகிறேன்.

* மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் ஆசிரியர்கள் சர்வீஸ் கமிஷன் மூலமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குப் பிறகு வேலையில் சேருவது நல்லது என்ற கருத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். அந்தக் கருத்தைத் தான் அவர்கள் தெரிவிக்கிறார்களா என்பதை அரசாங்கம் அறிந்துகொள்ள ஆவலாக இருக்கிறது.

973 மார்ச் 21]

திரு எல். பலராமன்: தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு கேள்வியை எழுப்பினார்கள். ஆசிரியர் பதவிக்கு, இவர்கள் தான் தகுதியானவர்கள் என்று அரசாங்கம் முத்திரை குத்திய பிறகு தான், வேறு ஒரு தேர்வு வைப்பது நியாயமா என்ற ஒரு விளக்கத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

* மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, ஆசிரியர்களாக தற்காலிகமான பதவி அவர்களுக்கு வழங்கப்படுகிற நேரத்தில், பின்னர் நீங்கள் சர்வீஸ் கமிஷன் தேர்வின் மூலம் எடுக்கப்படவேண்டும், இப்போது தற்காலிகமாக வேலையில் இருங்கள் என்றுதான் ஆணைதரப்பட்டது. ஆனால் இப்போது அவர்களெல்லாம் சர்வீஸ் கமிஷன் தேர்வுக்குச் செல்ல மாட்டோம் என்றுதெரிவித்தார்கள். இப்போதுஅங்கத்தினர் அவர்கள் சொல்கிறபடி பார்த்தால், சர்வீஸ் கமிஷனின் தேர்வுக்குச் சென்று அதற்குப் பிறகு வேலையில் சேரும் முறை இருந்தால் நல்லதல்லவா என்று கேட்கிறார்கள் என்று கொள்ளலாமா?

திரு எல். பலராமன்: தலைவரவர்களே, நான் இங்கே சொல்வதெல்லாம் ஆசிரியர் பயிற்சி பெற்ற பின்னால் தான் ஆசிரியர் வேலைக்கு தகுதி என்று பி.டி. பட்டம் வாங்குகிறார்கள். அரசுத் தரப்பில் வழங்கு வேண்டும். அதற்குப் பிறகு அதற்கென மறு தேர்வு சர்வீஸ் கமிஷனில் தேவையில்லை என்று உணர்ந்தாலும்.....

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேர்ந்தெடுக்கிறோம். 60, 70 ஆண்டுக் காலமாகவும், பல ஆண்டு காலமாகவும் அரசாங்க உயர்நிலைப் பள்ளிகளுக்கு சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் தேர்ந்தெடுக்கிறோம். டிஸ்ட்ரிக்ட் போர்டு பள்ளிகளுக்கு சர்வீஸ் கமிஷன் மூலமாகத்தான் வரவேண்டும். அதற்கு என்று தனி அதிகாரிகள் இருந்தார்கள். ஆனால் தனியார் பள்ளிகளுக்கு சர்வீஸ் கமிஷனுக்குப் போக வேண்டிய அவசியமில்லை. அவர்களைப் பொறுத்து தமிழ் நாட்டிலே அவர்களுக்கு பி. டி. தகுதி மட்டும் தான் பார்க்கப்படுகிறது. அரசாங்கப் பள்ளிகளுக்கு வருகின்றபோது, அரசாங்கத்தின் கீழே, தேர்வு ஆணைக் குழுவின் மூலம் தான சேர்க்கப்படவேண்டுமென்ற விதிமுறை எல்லாத் துறைகளுக்கும் கையாளப்படுவது காரணமாக இந்தத் துறைக்கும் கையாளப்படுகிறது. அந்தக் காரணத்தினால் அந்த விதி முறைகளுக்கு இவர்களும் உட்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். அதே பி.எ., பி.டி. படித்தவர்கள் தனியார் பள்ளிகளுக்கு விண்ணப்பித்துக் கொள்வார்களானால், அங்கு தேர்வு ஆணைக் குழு வராது அல்லது வேறு உயர்நிலைப் பள்ளிகளுக்கு விண்ணப்பித்துக் கொண்டால் அங்கே இது வராது. அந்த விதிகள் இருக்கின்ற காரணத்தினால், அரசாங்க விதிகளுக்குக் கட்டுப்பட்டு நியமிக்கப்பட வேண்டியவர்களாக இருக்கிறார்கள். ஆக அந்த ஆசிரியர்கள் தேர்வுக்குழுவின் கீழே போக வேண்டுமென்ற ஒரு "பாலிசியை" எடுத்துவிடுவோமானால், அந்த விதி முறைகளுக்கு உட்படாமலே சேர்த்து விடலாம் என்றால், அதை யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

திரு. எல். பலராமன் :—தலைவரவர்களே, நான் கூறுவதெல்ல அவர்கள் பொறுப்புமிக்கவர்களாக நியமிக்கப்பட வேண்டியவர்கள் எ தால், தகுதியுள்ளவர்க்களாக இருக்க வேண்டுமென்ற நிலையோடு நா இதை நான் சொல்கிறேன். அதே போல பி. யூ. பட்டம் பெற்ற ஆசிரியர்கள் பொறுப்புக்கு தகுதி வாய்ந்தவர்களென அரசாங் சான்றிதழ் வழங்கியதற்குப் பின்னால், ஒரு தேர்வு முறை தான் என்ற வினாவை எழுப்புகிறேன். அதை விரித்து முதலாவதாக சர்வீ கமிஷன் மூலமாகத் தேர்வு செய்து பி.டி. பயிற்சி பெறுவது பின்னு அவர்களுக்கு வேலை வழங்கப்பட வேண்டும் என்ற ஒரு வாதத்தை இ அவையின் முன்னால் வைக்கிறேன்.

*மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, ஒரே வரியில் வேலைக்கும் இன்னொன்று வருகிறது. அதைத் தெரிந்து அரசாங்கம் தெரிவிப்பதாக அவர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளுங்க ஆசிரியர்கள் நிரந்தரமாக எடுக்கப்பட்டவர்களுடைய பிறகுதான் சர்வீ கமிஷன் தேர்வுக்கு அனுப்பப்படுகிறார்கள். முதலில் தற்காலிகமாக்தா நியமிக்கப்படுகிறார்கள்.

திரு. கே. ராஜாராம்: கண்ணியர் திரு. பலராமன் கூறுவதெல்லாம் அவர்களே இப்படியும் பொதுமக்கள் சர்வீஸ்கமிஷனிலிருந்து நியமித்திருக்கலாமே என்பதுதான். இப்படி 10 (ர) (1) அதற் போட்டதனாலே எவ்வளவு குழப்பம் வந்தது, எனவே சர்வீஸ் கமிஷன் மூலம் நடத்திருக்கலாமே என்று கூறுகிறார்.

*மாண்புமிகு திரு ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, பல இடங்களில் 10 (எ) (1)ன்கீழ் நியமிக்கும்போது சர்வீஸ் கமிஷனுக்குப் போவது கிடையாது. அதற்குப் பின்னால் "ரெகுலரைஸ்" செய்யும்போது தான் சர்வீஸ் கமிஷனுக்கு அனுப்புவது முழுக்கம். 10 (எ)-(1)-ல் போடுவது சர்வீஸ் கமிஷன் அல்ல. அந்த சர்வீஸ் "ரெகுலர் சர்வீஸ்" ஆக முடியாது. தற்காலிகம் என்று தொலைத்தான் போடுகிறோம். 10 (எ) (1) என்ற பிரிவின் கீழ் போடும்போதே டெம்பரரி என்று தொலைத்தான் போடுகிறோம். தலைவரவர்களே என்று எதிர்கட்சிக்காரர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். ஒத்துக்கொள்ளக்கூடாது. ஜனநாயகத்தில் இப்படித்தான் இருக்க வேண்டும். சர்வீஸ் கமிஷன் தேவையில்லை என்று சொல்லுவார்களானால், தேவையில்லை என்ற எண்ணம் எதிர்க்கட்சியினருக்கு இருக்குமானால், ஆட்சேபனை கிடையாது.

திரு. கே. ராஜாராம்: நீங்கள் சொல்லியிருக்கிறீர்கள். சர்க்கார் சொல்லியிருக்கிறது. நீங்கள் சர்வீஸ் கமிஷன் தேவையில்லையென்று ஒத்துக்கொண்டுவிட்டீர்கள். அதை வைத்துக்கொண்டுதான் பேசுகிறோமே தவிர வேறு ஒன்றுமில்லை.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: சர்வீஸ் கமிஷன் வேண்டாமென்று நாங்கள் ஒப்பக்கொள்ள வில்லை. நிலைமையை உத்தேசித்து அன்றைக்கு நாட்டிலே ஏற்பட்ட சூழ்நிலை காரணமாக சர்வீஸ் கமிஷனுக்கு

போக வேண்டிய அவசியமில்லை, அது தேவையில்லை என்று எல்லோரும் ஏற்றுக்கொண்ட பிறகு, பொட்டதே தவிர, இதைப் பொதுவான விதியாக வைத்துக்கொள்ள முடியாது.

திரு. எல். பலராமன்: நான் இங்கே சொல்வதெல்லாம் 10 ஆண்டுக்காலம் பணி செய்த பின்னால் மற்றத் துறைகளுக்கு வேண்டுமானால், இது பொருந்தலாம், ஆனால் இத்தத் துறைக்குப் பொருந்தாது என்பது. ஆசிரியர் பயிற்சித்த என்று அந்தவர்கள் தற்காலிகமாக நியமிக்கப்படுவார்களானால், அவர்கள் பின்னால் வேறு வேலைக்குப்போக முடியாது. இப்படிப் பயிற்சி அளித்து உங்களைத் தற்காலிகமாக நியமிக்கிறேன் என்ற நிலையை ஏற்படுத்தி அதற்கு மேலே சர்வீஸ் கமிஷனுக்குப் போவது என்ற முறை சரியல்ல. முதலாவது சர்வீஸ் கமிஷன் தேர்வு செய்து பின்னால் பி.டி. ஆசிரியர் பயிற்சி பெற்று நியமிப்பது என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கூறிக் கொண்டு.....

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: சர்வீஸ் கமிஷனுக்குப் போவதற்கு முன்னால் பயிற்சி அளிப்பதா அல்லது சர்வீஸ் கமிஷனுக்குப் போய்விட்டு வந்த பிறகு அனுப்புவதா ? அப்படி அனுப்புவதானால் யார் அனுப்புவது ?

*மாண்புமிகு திரு க. அன்பழகன்: தலைவரவர்களே, இதற்குக் கூட அரசாங்கம் தயார். இந்த ஆண்டு ஜூன் மாதம் பள்ளிக்கூடங்கள் திறக்கின்றன என்று வைத்துக்கொள்ளுங்கள், சர்வீஸ் கமிஷனுக்கு நாங்கள் தெரிவித்து அவர்கள் தேர்வு செய்து நியமிப்பது என்று சொல்லுங்கள் 8 மாதமாகி விடும். அவர்களை விளம்பரப்படுத்தி, முறைப்படி இண்டர்வியூ கொடுத்து, அவர்கள் தேர்வு வைத்து, நேர்ந்தெடுத்து நியமிப்பது என்றால், பள்ளிக்கூடங்களுக்கு ஆசிரியர்கள் உடனுக்குடன் கிடைக்க மாட்டார்கள். 6,7,8 மாதங்களானாலும் ஆசிரியர்கள் கிடைக்காமல் வேலை நடக்காது. ஆகவே தற்காலிகமாக ஒரு இடைக்கால ஏற்பாடு இது. இந்த இடைக்கால ஏற்பாட்டை நிரந்தரமாக்குவதற்கு அரசாங்கத்திற்கு நடைமுறையில் அதிகாரம் இல்லை. அதை அரசாங்கம் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது என்பதற்காகத் தான் பின் நாளில் தேர்வுக்குழுவிற்குச் செல்ல வேண்டுமென்று சொல்கிறோமே தவிர வேறில்லை.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அரசாங்க வேலைகளுக்கு வருபவர்கள் தேர்வு ஆணைக் குழுவிற்கு வர வேண்டுமென்ற ஒரு விதி முறை இருப்பது காரணமாகத் தேர்வு ஆணைக் குழுவின் மூலம் வர வேண்டும். அந்த பி.எ., பி.டி. படித்தவர்கள் அரசாங்க வேலைக்கு வரவேண்டுமானால், தேர்வாணைக் குழுவிற்கு வரவேண்டும். பி. எ., எம். எ. படித்தவர்கள் தனியார் பள்ளிகளுக்கு மனுச் செய்து கொண்டால், அவர்கள் சர்வீஸ் கமிஷனுக்குப் போக வேண்டியதில்லை. மாண்புமிகு உறுப்பினர் சொல்கிற கருத்து, ஒரு பி.டி. பயிற்சி படித்தவருக்கு ஆசிரியர் வேலை என்று சொல்லி விட்டால், அவர் வேறு எந்தத் தொழிலுக்கும் போக முடியாது. இப்போது இருக்கிறபடி, அரசாங்க வேலைக்குப் போக முடியாதே தவிர, தனியார் பள்ளிகளுக்குப்

[1973 மார்ச் 21 [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

போகக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. இன்றைக்கு அதையும் நிலையாக்குகிற அளவில் நான் எண்ணிக் கொண்டிருப்பது, ஒருவர் ஆசிரியர் பயிற்சி என்று பயிற்சி முடித்த பிறகு டெஸ்ட் பண்ணி பி.டி. ஆசிரியராக எடுப்பதற்குப் பதிலாக பி.டி. பயிற்சிக்கு முன்னாலேயே ஒரு முறையில் செலக்ஷன் செய்து நியமிக்கப்படலாம். இப்படிப்பட்ட முறையை நாம் வைத்துக்கொள்ளவில்லை. இப்படிப்பட்ட ஒரு முறையைக் கொண்டுவர வேண்டுமென்று தான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். எனென்றால் முதலிலே பி.டி. ஆகிவிட்ட பிறகு, அவருக்கு வேலையில்லை என்று சொல்வது தவறு. அதனால் அவர் வேறு வேலைக்குப்போகிற வாய்ப்பு இல்லை. தனியார் பள்ளிகளில் அவர்களுக்கு வேலை கிடைக்கிற வாய்ப்பு இருக்கிறது ஆனால் அரசாங்கப்பள்ளிகளில் வேலை கிடைக்கிற வாய்ப்பு இல்லை. ஆனால் ஆசிரியர் பயிற்சிக்கு முன்னாலேயே அவரை "டெஸ்ட்" செய்து அவருடைய "ஆப்டிடியூட்", தகுதி எல்லாவற்றையும் பார்த்து செலக்ஷன் செய்து அவர்களுக்கு பயிற்சி கொடுத்து ஆசிரியர் ஆக்கலாம் என்பது கொள்கை அளவிலே நல்லதுதான். நடைமுறையிலே அது இந்த அளவிற்கு இடம் தராது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு எல். பலராமன்: தலைவரவர்களே, என் கருத்திற்குத்தான நானும் வர வேண்டிய நிலையில் இருக்கிறேன் என்ற விளக்கத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் தெரிவித்தார்கள். மேலும் செகண்டரி கிரேட் படித்துப் பணி செய்தவர்கள் பி. ஏ. படித்துத் தேற முடியுமென்று கருதப்படுபவர்கள், அந்தப் பயிற்சிக்குப் பின்னால், வேலை வாய்ப்புப் பெறுவது சுலபமாக இருக்கிறது. அப்படிப் பயிற்சி பெறுவது என்றால், 15 ஆண்டு செகண்டரி கிரேட் பயிற்சி பெற்று பணி ஆற்றியவர்கள் தான் இப்படிப் பயிற்சிக்கு வர வேண்டுமென்ற சூழ்நிலை இருப்பதைத் தவிர்ப்பதற்கு, அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். இன்னும் குறைந்த காலத்தில் அவர்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன். மேலும் தமிழ் ஆசிரியர்களில் முதல் நிலை, இரண்டாம் நிலை என்று இருப்பதைத் தவிர்ப்பதற்கு அரசு திட்டவட்டமான ஒரு முறையை எடுக்க வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்கிறேன். இந்த இரண்டாம் நிலையில் கடந்த 10 ஆண்டுக்காலத்திற்கு முன்னால் 5, 6, 7, 8 வது வரை படித்துவிட்டு தமிழ் ஆசிரியர்களாகப் படித்துப் பணியாற்றி எஸ். எஸ். எல். சி படித்து, தேர்வுக் குழுவினால் முதல் நிலைக்குப் பொறுக்கப்படாத நிலையில் 150 தமிழ் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். இப்படி இந்த மாநிலத்திலே இருப்பதைத் தவிர்த்து, நல்ல சிறப்பான முறையிலே வளர்வதற்கு அவர்களுக்கும் முதல் நிலையை உருவாக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன். இன்னும் 4, 5 ஆண்டுகளிலே இவர்கள் ஓய்வு பெற இருக்கிறார்கள். கல்லூரிகளை நல்ல முறையிலே நடத்தி கல்லூரி மாணவர்கள் நல்ல பண்பு உள்ளவர்களாகவும், நாட்டிலே செழிப்பான மாணவர்களாகவும் ஆவதற்கு வேண்டிய வாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கூறிக்கொள்கிறேன்.

எங்கள் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், எங்கள் மாவட்டத்திலே எந்தவித மேல் படிப்புக்கும் வழியில்லை. அதற்கு வழிவகுப்பதற்கு அரசாங்கத்திலே வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த

1973 மார்ச் 21] [திரு எல். பலராமன்]

நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அரக்கோணத்திலே ஒரு கல்லூரியை ஆரம்பிக்கலாமென்று அங்கோரம் வழங்கியிருக்கிறார்கள். அதை துரிதமாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதற்கு வேண்டிய ஆக்கபூர்வ மானவைகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, மேற்படிப்பிற்கு வேண்டிய வசதியை வேலூர் முத்துரங்கம் கல்லூரியில் ஏற்படுத்து வதற்கும் ஏழைகள் படிப்பதற்கு வேண்டிய வாய்ப்பினை உருவாக்க வேண்டுமென்றும் கூறிக்கொண்டு தலைவரவர்களுக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். வணக்கம்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்டமன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

3. மன்றத்தின் முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders.

73. Notification issued with G.O. Ms. No. 16, Revenue, dated the 4th January 1973, in regard to reduction in the rate of sales tax, on the sales of cement to Kerala State Electricity Board for the construction of Hydro Electric Project at Idikki in Kerala State. [*Laid on the table of the House under section* 53 (5) *of the Tamil Nadu General Sales Tax Act* 1959 (*Tamil Nadu Act I of* 1959).

74. Notifications issued with G.O. Ms. No. 3384, Revenue, dated the 14th December 1972, in regard to certain amendments to Revenue Department Notification II-1 Nos. 5939 and 5940 of 1969, published at pages 1-2 of Part II—Section 1 of the Tamil Nadu Government Gazette Extraordinary, dated the 19th December 1969 as subsequently amended. [*Laid on the table of the House under section* 18 (4) *of the Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Rights Act*, 1969 (*Tamil Nadu Act* 10 *of* 1969).]

75. Notification issued with G.O. Ms. No. 2566, Rural Development and Local Administration, dated the 9th December 1972, in regard to an amendment to the Tamil Nadu Bhoodan Yagna Rules, 1959. [*Laid on the table of the House under section* 28 (4) *of the Tamil Nadu Bhoodan Yagna Act*, 1958 (*Tamil Nadu Act XV of* 1958).]

76. Notification issued with G.O. Ms. No. 153, Transport, dated the 14th March 1973 making the Tamil Nadu Stage Carriages and Contract Carriages (Acquisition) Rules, 1973. [*Laid on the table of the House under section* 32 (4) *of the Tamil Nadu Stage Carriages and Contract Carriages* (*Acquisition*) *Act*, 1973 (*Tamil Nadu Act* 12 *of* 1973).]

[1973 மார்ச் 21

B. Reports, Notifications and Other Papers.

81. Notification issued with G.O. Ms. No. 2272, Rural Development and Local Administration, dated the 26th October 1972, in regard to an amendment to the Tamil Nadu Cottage Industries Construction and Establishment (Restrictions, Limitations and Conditions) Rules, 1960.

* 82. Policy Notes on Medical and Public Health. (English and Tamil.)

* 83. Speech by Hon. Thiru K. Anbazhagan, Minister for Public Health on the Demand for Public Health Grants 1973–74 (Tamil).

*84. Note on the Progress of Education in Tamil Nadu (English and Tamil).

† 85. Speech by Hon. Thiru Mannai P. Narayanaswamy, Minister for Food on the Capital Outlay on Schemes of Government Trading (Food) (English and Tamil).

† 86. Performance Budget for 1973–74, relating to Agriculture.

† 87. Commercial Budget for 1973–74, relating to Agricultural Engineering Workshop.

† 88. Policy Note on Demand No. 29—"Welfare of Scheduled Tribes and Castes," 1973–74. (Tamil).

† 89. Performance Budget for 1973–74, relating to Fisheries.

† 90. Performance Budget for 1973–74, relating to Harijan Welfare.

† 91. Note on Fisheries Demand, 1973–74. (Tamil).

† 92. Performance Budget for 1973–74, relating to School Education.

† 93. Performance Budget for 1973–74, relating to Collegiate Education.

† 94. Performance Budget for 1973–74, relating to Technical Education.

1973 மார்ச் 21]

* Circulated to all M.L.Cs. on 19th March 1973.

† Laid on the table of the House on 20th March 1973.

இணைப்பு I.

[5-ஆம் பக்கத்தில் 215-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினவின் விடையாக காண்க.]

நிதிவந்தியம் சுகாதார நிலையத்தில் திரு. முத்துசாமி என்பவருக்கு அறுவைச் சிகிச்சை செய்யப்பட்டது. அவருடைய வயது வாக்காளர் பட்டியலில் 33 என்றும், கல்வி சான்றிதழில் 27 என்றும் உள்ளது. மேற்கண்ட வயதை அவருடைய பழக்கத்தைக் ஏற்புக்கொண்டுள்ளார். எனவே அவருடைய வயது 21 என்று கூற இயாது.

திரு. முத்துசாமி போதை மருந்து கொடுக்கப்பட்டோ அல்லது நிர்ப்பந்தத்தின் பேரிலோ அறுவைச் சிகிச்சை செய்யப்படவில்லை.

இது தொடர்பான வழக்கில் அதிரியர்களுக்கு குற்றவியல் நீதிபதி அளித்த தண்டனையை மாவட்ட நீதிபதி ரத்து செய்து தீர்ப்பளித்தார். தமது தீர்ப்பில் "..... குடும்பக்கட்டுப்பாடு திரை இயக்கம் எவ்வளவு நல்ல எண்ணத்துடன் நடைபெற்றாலும் அதில் தவறுகளுக்கும் முறையற்ற செயல்முறைக்கும் வாய்ப்புகள் மறைந்து கிடக்கின்றன என்பதை இவ்வழக்கு காட்டுகின்றது" என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வழக்கில் சம்பந்தப்பட்ட அதிரியர்கள் தவறு செய்யவில்லை என்று மாவட்ட செஷன்ஸ் நீதிபதி, அவரின் தீர்ப்பில் செய்திருப்பதால் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எதும் இல்லை.

இணைப்பு II

[19-ஆம் பக்கத்தில் இனம் 2-க்கான அடிக்குறிப்பைக் காண்க.]

அத்தியாயம் 1.

தோற்றுவாய்.

(1) கல்விச் செலவும் மாநில வரவு-செலவுத் திட்டமும்

1. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் இறுதி ஆண்டாகிய 1973-74-ஆம் ஆண்டில் கல்விக்காக "மானியக் கோரிக்கை 16—கல்வி" என்பதன்கீழ் ஒதுக்கியுள்ள தொகை ரூ. 93 கோடியாகும். நமது மாநில வரவு-செலவுத் திட்டத்தில், கல்வி வளர்ச்சிக்காக, மொத்த வருவாய்க் கணக்குச் செலவில் (465 கோடி.) 21 விழுக்காடு ஒதுக்கப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டத்தில் மற்ற எல்லாத் துறைகளையும் விட கல்வித் துறைக்கே அதிகத் தொகை ஒதுக்கப் பட்டுள்ளது.

2. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதி முதல் கல்வித் துறையின் பல்வேறு பிரிவுகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி விவரம், இக்குறிப்பின் இறுதியில் உள்ள இணைப்புகளில் கொடுக்கப் பட்டுள்ளது.

3. 1972-73-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையும் 1973-74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தையும் ஒப்பு நோக்கி அறியும் வகையில், தனித்தனி தலைப்புகளின்கீழ், "28. கல்வி" என்னும் தலைப்பில் செய்துள்ள நிதி ஒதுக்கங்களின் விவரங்களை அடுத்த பக்கத்தில் காணலாம்.

	1972-73 வரவு-செலவு மதிப்பீடு.			1973-74 வரவு-செலவு மதிப்பீடு.		
	திட்டத் திட்டமல்லாத	திட்ட மல்லாத	மொத்தம்	திட்டத் திட்டமல்லாத	திட்ட மல்லாத	மொத்தம்
	(கோ. இலட்சத்தில்.)					
(1) தொடக்க நிலைக் கல்வி..	40,65	1,14	41,79	43,53	1,42	44,95
(2) இடை நிலைக் கல்வி ..	23,74	3,31	27,05	25,43	3,65	29,08
(3) பல்கலைக் கழகக் கல்வி ..	6,02	1,25	7,27	6,53	1,99	8,52
(4) தொழிற்துறைப் பயிற்சி (ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் முதலியன.) ..	1,19	9	1,28	1,12	31	1,43
(5) பிற இனங்கள் ..	7,38	1,12	8,50	7,86	60	8,46
(6) தொழில் நுட்பக் கல்வி ..	1,82	77	2,59	1,92	1,34	3,26
(7) தொழில் பயிற்சிப் பள்ளிகள்	1,31	6	1,37	1,46	7	1,53
மொத்தம் "28. கல்வி" ..	82,11	7,74	89,85	87,85	9,38	97,23

[1973 மார்ச் 2

குறிப்பு.—1973-74-ஆம் ஆண்டு பள்ளிக் கல்வி சாதனை நிதி அறிக்கையில் தொடக்கக் கல்வி, இடைநிலைக் கல்வி ஆகிய இரண்டு இனங்களிலும் அடங்கிய சில சில்லரை இனங்கள் தனியாகக் காட்டப்பட்டு இருப்பதால் 1973-74-ல் தொடக்கக் கல்விக்கு நிதி ஒதுக்கம் 4,440 லட்சம் என்றும் இடைநிலைக் கல்விக்கு நிதி ஒதுக்கம் ரூ. 2,890 லட்சம் என்றும், அவ்வறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அவ்வாறே "பிற இனங்களில்" அடங்கிய கல்லூரிக் கல்வி, தொழிற் கல்வி ஆகியவற்றுக்கான நிதி ஒதுக்கத்தையும் சேர்த்து கல்லூரிக் கல்விக்கும், தொழிற் கல்விக்கும் 1973-74-ல் "28. கல்வி" என்ற தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கம் முறையே ரூ. 9,32 லட்சமும் என்றும் ரூ. 5,78 லட்சம் என்றும் கல்லூரிக் கல்வி, தொழிற் கல்வி சாதனை நிலை அறிக்கைகளில் காட்டப்பட்டுள்ளது.

4. 16-வது மானியக் கோரிக்கையில் "28. கல்வி" என்ற தலைப்பின்கீழ் ரூ. 97 கோடி நிதி ஒதுக்கப்பட்டிருப்பதைத் தவிர தொல் பொருள் ஆய்வு வளர்ச்சி, அரும் பொருட்காட்சி நிலையங்கள் அரசுத் தேர்வுகள் ஆகியவற்றிற்காகவும் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதன் விவரங்கள் வருமாறு :—

		(ரூ. லட்சத்தில்)	
26.	பல்வகைத் துறைகள் (அரசுத் தேர்வுகள்)		70
27.	அறிவியல் துறைகள்—தொல் பொருள் ஆராய்ச்சி.	7	
	அரும் பொருட் காட்சி நிலையங்கள், கன்னிமாரா நூலகம்.	10	17
28	கல்வி.		97,23
29.	பிற இனங்கள்.		56
	மொத்த மானியக் கோரிக்கை—"16. கல்வி"		98,66

1973 மார்ச் 21]

5. கல்வி வளர்ச்சிக்காகச் செய்யப்பட்டுள்ள மேற்கண்ட நிதி பிற கோரிக்கைகளின்மேற் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கம்.—

(1)	பொதுக்கல்வி. திட்டச் செலவு. (2)	பொதுக்கல்வி. திட்டத்தினைக்கும் வாராத செலவு. (3)	(மொத்தம்). (4)
	(ரூபாய் லட்சத்தில்).		
வருவாய்க் கணக்கில் செலவு.			
37 சமுதாய வளர்ச்சிப் பணிகள்—ஊராட்சி ஒன்றியப் பள்ளிக் கட்டிடங்கள்	102	...	102
50 (எ) புதிய பணிகள்—அரசுக் கல்வி நிறுவனங்களுக்கான கட்டிடங்கள்	..	3	3
52 மூலதனச் செலவு..	..	1	1
71 பல்வகை—கல்லூரிகளில் திட்டக் குழுக்கள்	1	..	1
வருவாய்க் கணக்கின்கீழ் வராத செலவு.			
103. பொதுப் பணிகளுக்கான மூலதனச் செலவு—அரசுக் கல்வி நிறுவனங்களுக்கான கட்டிடங்கள்	139	9	148
109. மூலதனச் செலவு (தொழிற் பயிற்சிப் பள்ளிகள்)	..	..	..
கடன்கள்.			
பாடப்புத்தக நிறுவனத்திற்குக் கடன்	..	10	10
மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்குத் திருமணக் கடன்கள் ..	..	3	3
தேசியக் கடன் படிப்பு உதவித் தொகை..	..	58	58
தொழிற் கல்வி மாணவர்களுக்கு கடன் படிப்புதவித் தொகை ..	..	..	..
சொந்தத் தொழில் நடத்துவதற்காக கைவினைஞர்களுக்குக் கடன்கள்..	..	..	..
மொத்தம் .	242	84	326

மேற்சொன்ன நிதி ஒதுக்கங்கள் கணக்கில் சொள்ளப்பட்டால் 1973-74-ல்

[1973 மார்ச் 2

ஒதுக்கங்கள் தவிர, கட்டிடங்கள், கடன்கள் முதலியவற்றிற்காக பின்வருமாறு :—

தொழிற் கல்வி.			மொத்தம்.		
திட்டச் செலவு.	திட்டத்தின் கீழ் வராத செலவு.	மொத்தம்.	திட்டச் செலவு.	திட்டத்தின் கீழ் வராத செலவு.	மொத்தம்.
(5)	(6)	(7)	(8)	(9)	(10)
		(லட்சத்தில்.)			
..	..	..	102	..	102
5	1	6	5	4	9
..	..	..	..	1	1
..	..	..	1	..	1
23	1	24	162	10	172
30	..	30	30	..	30
..	..	..	..	10	10
..	..	..	..	3	3
..	..	..	..	58	58
12	..	12	12	..	12
30	..	30	30	..	30
100	2	102	342	86	428

கலவி மேம்பாட்டுக்கான செலவு ரூ. 103 கோடியாகும்.

6. அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர் நலப்பள்ளிகள்: விடுதிகள், அரிசனங்கள், பழங்குடி வகுப்பினர், பின்தங்கிய வகுப்பினரைச் சேர்ந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித் தொகைகள் முதலியவற்றுக்கான செலவும் சீர்திருத்தப் பள்ளிகள் போன்றவற்றிற்கான செலவுகளும் மேற்படி செலவினங்களின்கீழ் வரா. இந்தப் பல்வகை இனங்களின் மொத்தச் செலவு சுமார் ரூ. 14 கோடியாகும்.

மருத்துவக் கல்வி, வேளாண்மைக் கல்வி, கால்நடை மருத்துவக் கல்வி ஆகியவற்றுக்கு அந்தந்தத் துறைகளின்கீழ் 1973-74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் தனித்தனியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி மொத்தம் சுமார் ரூ. 5 கோடி. மேற்கண்ட

1973 மார்ச் 21]

இரு இனங்களுக்காகும் செலவையும் (ரூ. 14 கோடியும் ரூ. 5 கோடியும்) கணக்கில் கொண்டால், 1973-74-ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் கல்வி வளர்ச்சிக்கான மொத்தச் செலவு சுமார் ரூ. 122 கோடியாக இருக்கும்.

7. எல்லாத் தலைப்புகளின் கீழும் (28. கல்வி, மூலதனச் செலவு, கடன்கள் முதலியன) கல்வியின் பல்வேறு துறைகளுக்கு 1973-74-ஆம் ஆண்டில் செய்யப்படும் திட்டச் செலவு கீழே கொடுக்கப்பட்டுள்ளது. கூட்டல் குறிக்குப் பின்னர் உள்ள இலக்கங்கள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கான செலவினைக் குறிக்கும்.

	பொறுப்பேற்ற பொதுச் செலவினம்.	1973-74ல் புதிய திட்டமாக ஒப்புவிப்பு வழங்கப்படும் செலவினங்கள்.	மொத்தம்.
	(ரூபாய் லட்சத்தில்.)		
பொதுக் கல்வி—			
1. தொடக்கநிலைக் கல்வி	501·90	27·00	528·90
	+75·00		+75·00
2. இடைநிலைக் கல்வி ..	191·77	52·00	243·77
3. பல்கலைக் கழகக் கல்வி ..	262·59	42·66	305·25
	+28·40		+28·40
4. ஏனைய கல்வித் திட்டங்கள் ..	134·54		134·54
	+0·57		+0·57
மொத்தம் ..	1,090·80	121·66	1,212·46
	+103·97		+103·97
தொழில் நுட்பக் கல்வி ..	125·13	15·00	140.13
	+33·62		+33·62
பண்பாடு, தொல்பொருள் இயல் முதலியன.	6·32	0·20	6·52

(2) எதிர்நோக்கும் பணிகள்

8. நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியாண்டாகிய 1973-74 தொடங்கும் இந்நிலையில், இம்மாநிலத்தில் கல்வித்

துறையில் இதுகாறும் ஆற்றியுள்ள பணியைக் கணக்கிடுவதும், அடுத்துவரும் சில ஆண்டுகளில் நாம் தீர்வு காண வேண்டிய சிக்கல்களின் தன்மை, அவற்றின் அளவு, ஆகியவற்றை ஆய்ந்து அறிவதும், சாலப் பொருத்தமாகும். இந்த நாட்டில், எழுத்தறிவை ஊட்டுவதிலும் கல்விக்காகச் செலவு செய்வதிலும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களில் நமது தமிழகமும் ஒன்றாகும். 14 வயது வரை சிறார் அனைவருக்கும் தொடக்க நிலைக் கல்வியை இலவசமாக அளிக்க வேண்டுமென்ற அரசியல் சட்ட நெறிமுறைக் கோட்பாட்டினை நிறைவேற்றுவதிலும் மற்ற எல்லா மாநிலங்களைக் காட்டிலும் தமிழகம் முன்னணியில் நின்று தலைசிறந்த பணியாற்றி வருகிறது. நாடு அந்நியத் தளையிலிருந்து விடுதலை பெற்ற பின்னர், தொடக்க நிலைக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகிய பிரிவுகளில் கல்வித் துறை அனைவரும் வியக்கத்தக்க அளவுக்கு பெரும் முன்னேற்றம் அடைந்துள்ளது. இம்மாநிலத்தில் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 1956-57-ஆம் ஆண்டில் 32.91 லட்சமாக இருந்தது. 1972-73-ஆம் ஆண்டில் 74.36 லட்சமாக உயர்ந்தது. அதுபோலவே, 1956-57-ஆம் ஆண்டில் 1.08 லட்சமாக இருந்த ஆசிரியர்களின் எண்ணிக்கை 1972-73-ஆம் ஆண்டில் 2.34 லட்சமாக உயர்ந்தது. 1956-57-ஆம் ஆண்டில் 894 உயர்நிலைப்பள்ளிகளே இருந்தன. இவ்வெண்ணிக்கை 1972-73-ஆம் ஆண்டில் 2,763 ஆக உயர்ந்துள்ளது.

9. கல்லூரிக் கல்வியில், மாணவர்களின் எண்ணிக்கையும் கல்லூரிகளின் எண்ணிக்கையும் வெகுவாக உயர்ந்துள்ளன. 1961-62-ஆம் ஆண்டில் கல்லூரிகளின் எண்ணிக்கை 59. அது 1972-73-ஆம் ஆண்டில் 176 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் 1961-62-ஆம் ஆண்டில் சுமார் 45,000 ஆக இருந்தது. 1972-73-ஆம் ஆண்டில் சுமார் 2 லட்சமாக உயர்ந்துள்ளது.

10. மொத்தத்தில், வரவு-செலவுத் திட்டத்தில் கல்விச் செலவு 1956-57-ல் ரூ. 15 கோடியாக இருந்தது. ஆண்டொன்றுக்கு 45 விழுக்காடு விதத்தில் படிப்படியாகப் பெருகி 1973-74-ஆம் ஆண்டில் சுமார் ரூ. 100 கோடியாக உயர்ந்துள்ளது.

11. கல்வி வளர்ச்சிக்காக அதிகத் தொகை செலவிடுவது அவசியமாகும். அது தவிர்க்க முடியாததும் கூட. எனினும் பள்ளிகள், கல்லூரிகளின் எண்ணிக்கையும், மாணவர்களின்

எண்ணிக்கையும் விரைந்து பல்கி வருவதால், பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் கற்பிக்கும் தரம் குறித்துப் பல சிக்கல்கள் எழுந்துள்ளன. எனவே, நமது வருங்காலத் திட்டங்களில், கல்வி கற்பிக்கும் தரத்தை மேம்படுத்த சிறப்பிடம் அளிக்கப்பட வேண்டுமென்பதே நமது தலையாய நோக்கமாக இருக்க வேண்டும்.

12. கல்வி நிலையங்களில் கல்வி கற்பிக்கும் தரத்தை மேம்படுத்தவும், பள்ளி செல்லும் சிறார்களின் எண்ணிக்கை பெருகி வருவதால் அவர்கள் கல்வி கற்பதற்கு ஏற்ற வசதிகளைச் செய்து கொடுக்கவும், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்காக "குறைந்த அளவு தேவைகள் திட்டம்" தற்போது வகுக்கப்பட்டு வருகிறது. இத் திட்டம், மாநிலத்தில் கல்வி வளர்ச்சிக்கு வேண்டிய அடிப்படைத் தேவைகளுக்கு, அதாவது போதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல், பள்ளிகளுக்குப் போதிய சாதனங்கள் வாங்குதல், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் 14 வயது வரையுள்ள சிறார் அனைவரையும் பள்ளியில் சேர்த்துக் கொள்ளத் தேவைப்படும் கூடுதல் ஆசிரியர்களை நியமித்தல், ஆசிரியர்கள் பயிற்சி பெறுவதற்கான வசதிகளை ஏற்படுத்துதல், மாணவர்களுக்கு நண்பகல் உணவு அளித்தல், புத்தகங்களையும், நிகாடைகளையும் இலவசமாக வழங்குதல் ஆகிய தேவைகளுக்கான செலவு மதிப்பீடுகளைக் கொண்டதாகும்.

13. குறைந்த அளவுத் தேவைகள் திட்டத்திற்கு மத்திய உதவி பெறுகையில் பல்வேறு பகுதிகளுக்கிடையேயுள்ள வேற்றுமைகளை அகற்றுவது என்ற பெயரில் தமிழ்நாடு போன்ற முன்னேற்ற மடைந்துள்ள மாநிலங்களுக்கு மத்திய உதவி குறைக்கப்படக் கூடாது என்ற உண்மையை இந்திய அரசிடம் வலியுறுத்தவும் கருதப்பட்டுள்ளது.

14. மாநிலத் திட்டக் குழு அமைத்த கல்விப் பணிக்குழு இம் மாநிலத்தில் கல்வி வளர்ச்சிக்காக நீண்ட காலத் திட்டம் ஒன்றை வகுத்து அரசுக்கு அனுப்பியுள்ளது. தொடக்க நிலைக் கல்வி, உயர்நிலைப் பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி, தொழில் நுட்பக் கல்வி ஆகியவற்றுக்கான துறைவாரியான திட்டங்களை ஆய்வு செய்து அவற்றிற்கு இறுதி வடிவம் கொடுக்கச் செயற் குழுக்களையும் துணைக் குழுக்களையும் அரசு அமைத்துள்ளது. இந்தக் குழுக்கள், ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்ப்பதற்கான விரிவான திட்டங்களையும் வகுக்கும்.

கல்வி முறை

15. இம் மாநிலத்தில் தற்போது பட்டம் பெற பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் பதினேந்து ஆண்டுகள் படிக்க வேண்டும். இந்த முறை அனேத்து இந்திய அடிப்படைக்கு இணங்க உள்ளது. ஆயினும், இந்தப் பதினேந்து ஆண்டு முறையை மாற்றியமைப்பது பற்றி (அதாவது பள்ளிக் கல்வி 10 ஆண்டு ஆக இருக்க வேண்டுமா அல்லது 11 ஆண்டு ஆக இருக்க வேண்டுமா? பின்னர் கல்லூரியில் புகுமுக வகுப்பு ஓராண்டு ஆக இருக்க வேண்டுமா அல்லது இரண்டு ஆண்டு ஆக இருக்க வேண்டுமா, பட்டப் படிப்பு 3 ஆண்டுகளாக நீடிக்க வேண்டுமா என்பவை) சிறிது காலமாகவே விவாதிக்கப்பட்டு வந்திருக்கின்றன. 10+2+3 ஆண்டுகள் கல்வி பயிலும் முறையை மாநிலத் திட்ட ஆணைக் குழுவின் கல்விப் பணிக்குழு தன் அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது. எனைய மூன்று தென் மாநிலங்களும் இந்த முறையையே பின்பற்றி யுள்ளன.

16. தற்போதுள்ள கல்வி முறையை மாற்றப் போனால் செலவு கூடுதலாகும். தற்போது பள்ளியில் சேர்க்கப்பட்டுள்ள பதினோராவது ஆண்டையும், புகுமுக வகுப்பையும் இரண்டாண்டு இண்டர்மீடியட் படிப்போடு இணைப்பதால், அதற்கேற்ப கூடுதலாகச் சாதனங்களை வாங்குவதற்கும் தேவையான அளவு கல்லூரி ஆசிரியர்களை நியமிப்பதற்கும் கூடுதல் செலவேற்படும். இண்டர்மீடியட் கல்லூரிகளைத் தனியாகத் தொடங்குவதாலும், புதிய கட்டிடங்கள், சாதனங்கள் ஆகியவை குறித்துப் பெருமளவில் செலவாகும். ஆகவே, எந்த வகையிலும், அனேத்து இந்திய முறையை பின்பற்றுவதாலும் மிகுதியான செலவு ஏற்படும். அதற்கு இந்திய அரசிடமிருந்து பெருமளவு உதவி கேட்பதும் தவிர்க்க முடியாததாகிவிடும்.

17. பள்ளிக் கல்வி முறையின் அமைப்பு பற்றிய பிரச்சினையும் உள்ளது. 10 ஆண்டுக் கல்வி முறை பின்பற்றப்பட்டால் பள்ளிகளில் நான்காண்டுகள் தொடக்கப் பள்ளிப் படிப்பு, 3 ஆண்டுகள் உயர் தொடக்கப் பள்ளிப் படிப்பு, 3 ஆண்டுகள் உயர்நிலைப் பள்ளிப் படிப்பு என்று இருக்க வேண்டுமா அல்லது முறையே அவ்வாண்டு வகுப்புகளை 5,2,3, அல்லது 5 3, 2 என்று அமைக்கலாமா என்பதும் ஆய்வு செய்ய வேண்டியதாகும். ஆகவே, நிதி, நிர்வாகம், பாடப் பயிற்சி ஆகிய மூவகைகளிலும் எழும் சிக்கல்களைக் கருத்திற் கொண்டு இது குறித்து ஒரு முடிவு எடுக்கப்படும்

அத்தியாயம் 2

தொடக்க நிலைக் கல்வி.

பள்ளிகளில் அதிக மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளுதல்.

1. 1972-73-ஆம் ஆண்டில் 6-11 வயதுத் தொகுதிச் சிறுவர்களின் எண்ணிக்கை 58.95 லட்சம் (1971 மக்கள் தொகைக் கணக்குப் படி.). இவர்களில், 53.26 லட்சம் சிறுவர்கள் அதாவது 90.5 விழுக் காட்டினர் பள்ளிகளில் படித்துக் கொண்டிருந்தனர்.

2. 1972-73-ஆம் ஆண்டில், 11-14 வயதுத் தொகுதியில் 26.53 லட்சம் சிறுவர்கள் இருந்தனர். (1971 மக்கள் தொகைக் கணக்குப்படி). இவர்களில், 13.83 லட்சம் சிறுவர்கள், அதாவது 52.2 விழுக்காட்டினர், பள்ளிகளில் படித்துக் கொண்டிருந்தனர்.

3. 1973-74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், 16-ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பட்டிருக்கும் மொத்தச் செலவாகிய ரூ. 99 கோடியில், 6-14 வயதுத் தொகுதியில் உள்ள சிறுவர்களைப் பள்ளியில் சேர்த்துக் கொள்வதற்காக சுமார் ரூ. 48 கோடி அதாவது சுமார் 48 விழுக்காடு ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த ஐந்து ஆண்டுகளில் ஆண்டுதோறும் கூடுதலாகச் செல விடப்பட்ட தொகை, கூடுதலாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை, கூடுதலாகச் சேர்த்த மாணவர்கள் எண்ணிக்கை ஆகிய விவரங்களை இணைப்பில் காணலாம்.

கல்வித் தரத்தை உயர்த்துதல்.

4. பள்ளிகளில் கல்வியின் தரம் உயர வேண்டுமாயின் ஆசிரியர் மாணவர் விகிதம் சீராக இருக்க வேண்டும். சாதாரணத் திட்டங்களின்கீழ் ஆண்டுதோறும் நியமிக்கப்படும் ஆசிரியர்களைத் தவிர, பி.டி. ஆசிரியர்களை நடுத்தரப் பள்ளிகளில் தலைமை ஆசிரியர்களாக நியமிக்கும் திட்டம் 1971-72-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டம் இவ்வாண்டும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இவ்வாண்டின் இறுதியில், இத்திட்டத்தின் கீழ் 1,800 ஆசிரியர்கள் பணி செய்வர். ஆண்டுதோறும் ரூ. 45 லட்சம் செலவில் இந்திய அரசின் உதவியுடன் இத் திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

5. பள்ளிகளில் கல்வியின் தரத்தை உயர்த்துவதற்கான ஒரு முயற்சியாக, கடந்த சில ஆண்டுகளில் தொடக்க நிலைத் தர (லோயர் கிரேடு) ஆசிரியர்களை நியமிப்பது படிப்படியாகக் குறைக்கப்பட்டுள்ளது. பயிற்சிப் பள்ளிகளில் தொடக்க நிலை ஆசிரியர் பயிற்சி வகுப்புகளில் ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவது படிப்படியாகக் குறைகைப்பட்டு 1969-70 முதல் அறவே நிறுத்தி விடப்பட்டது. தொடக்க நிலை ஆசிரியர்கள் முன்னர் வகித்து வந்த இடங்களில் இப்போது உயர்நிலை (செகண்டரி கிரேடு) ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டுள்ளனர். மேலும், உயர்நிலைத் தர ஆசிரியர்கள் தற்போது வகித்துவரும் தொடக்க நிலை ஆசிரியர் பதவிகள் படிப்படியாக உயர்நிலை ஆசிரியர் பதவிகளாக மாற்றப்பட்டு வருகின்றன. கடந்த ஐந்தாண்டுகளில் 24,500 பதவிகள் இவ்வாறு மாற்றப்பட்டன. எஞ்சியிருக்கும் தொடக்க நிலை ஆசிரியர் பதவிகளில், 5,000 பதவிகள் 2—10—73 முதல் உயர்நிலைப் பதவிகளாக மாற்றப்படும்.

6. விரைந்து முன்னேறி வரும் இந்த உலகில், அறிவியல் கல்வி கல்வித் துறையில் முக்கியமான இடத்தைப் பெற்றுள்ளது. அறிவியல் பாடத் திட்டத்தையும் ஏனைய பாடத் திட்டங்களையும் திருத்தியமைப்பது பற்றி ஐந்தாம் அத்தியாயத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. அறிவியல் கருவிகள் வாங்குவதற்காகத் தொடக்கப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 300 வீதமும் உயர் தொடக்கப் பள்ளிகள் அல்லது நடுத்தரப் பள்ளிகள் ஒவ்வொன்றுக்கும் ரூ. 1,000 வீதமும், கொடுப்பது என்ற அடிப்படையில் அறிவியல் சாதனங்கள் துணைக் கருவிகள் வழங்கும் திட்டம் 1960 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் 14,200 பள்ளிகள் பயன் பெற்றுள்ளன. 1973-74 ஆம் ஆண்டிலும் இத் திட்டம் தொடரும். மேலும் 200 உயர் தொடக்கப் பள்ளிகள் இத்திட்டத்தினால் பயனடையும்.

நண்பகல் உணவுத் திட்டம்

7. இம் மாநிலத்தில் உள்ள தொடக்கப் பள்ளிகளிலும் உயர் தொடக்கப் பள்ளிகளிலும் பயிலும் மாணவர்களில், ஏழைக் குழந்தைகளான, சுமார் மூன்றில் ஒரு பங்கினருக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. இத் திட்டம் பள்ளிகளில் சேரும் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டப் பெரிதும் உதவியுள்ளது. அரிசன நலத் துறையினால் அரிசன நலப் பள்ளிகளில் நண்பகல் உணவு வழங்கப்படும் மாணவர்கள் நீங்கலாக,

தற்பொழுது ஆண்டுதோறும் 17 லட்சம் மாணவர்களுக்கு நண்பகல் உணவு வழங்கப்படுகிறது. 1973—74 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் இதற்காக ரூ. 218 லட்சம் நிதி ஒதுக்கப் பட்டுள்ளது. இத்துடன், 'கேர்' நிறுவனம் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6 கோடி மதிப்புள்ள உணவுப் பொருள்களை இலவசமாக வழங்குகிறது.

8. இம் மாநிலத்தில் மூன்று மாவட்டங்களில் மையச் சமையற் கூடத் திட்டம் செயல்படுகிறது. இத் திட்டத்தின் கீழ், மையமான ஓரிடத்தில் உணவு சமைக்கப்பட்டு பள்ளிகளுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. 44 மையச் சமையற்கூடங்கள் செயல்படுகின்றன. மேலும் 21 விரைவில் தொடங்கும். இன்னும் 26 கட்டப்பட இருக்கின்றன.

9. மையச் சமையற் கூடங்களிலிருந்து பள்ளிகளுக்கு நண்பகல் உணவை எடுத்துச் செல்வதற்கான போக்குவரத்து வண்டிகளைப் பெறுவதற்கான பணிக்களரி ஒன்று தென் ஆர்க்காடு மாவட்டம் விக்ரவாண்டியில் கட்டப்பட்டுள்ளது. இது 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் கட்டப்பட்டது.

10. இத் திட்டத்திற்குத் தேவைப்படும் உணவுப் பொருள்களைச் சேமித்து வைப்பதற்காக 'கேர்' நிறுவனத்தின் உதவியுடன் தமிழ் நாட்டில் 10 வட்டாரச் சேமிப்புக் கிடங்குகள் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆறு இடங்களில் வட்டாரக் கிடங்குகள் செயல்பட்டு வருகின்றன.

11. நண்பகல் உணவுக்காக 'கேர்' நிறுவனம் அளிக்கும் திட்டத்தில் மாநில அரசின் பங்குக்காக 1973—74 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 59.12 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இலவசமாக புத்தகங்களும் எழுது பலகைகளும் வழங்குதல்.

12. 1 முதல் 3 முடிய வகுப்புகளில் பயில்வோரும் நண்பகல் உணவு பெறுவோருமான ஏழை மாணவர்களுக்குப் பாடப் புத்தகங்களும் எழுது பலகைகளும் இலவசமாக வழங்கப் படுகின்றன. இத் திட்டத்தின் கீழ் ஆண்டுதோறும் சுமார் 12 லட்சம் மாணவர்கள் பயனடைகின்றனர். 1973—74 ஆம் ஆண்டிலும் இத் திட்டம் தொடரும்.

[1973 மார்ச் 21

கட்டிடத் திட்டங்கள்

13. ஊராட்சி ஒன்றியங்களைச் சேராத பகுதிகளில் தொடக்கப் பள்ளிக் கட்டிடங்கள் கட்டும் வகையில் நகராட்சிகளுக்கும் தனியார் பள்ளி நிறுவனங்களுக்கும் மானியம் வழங்குவதற்காக ரூ. 3.45 லட்சமும், அரசினர் தொடக்கப் பள்ளிகளுக்கு கட்டிடம் கட்டும் செலவுக்காக சுமார் ரூ. 8 லட்சமும் 1973-74 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்டுள்ளன. 1973-74 ஆம் ஆண்டில் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக சமுதாய வளர்ச்சிப் பணிகள் வரவு-செலவுத் திட்டத்தில், ரூ. 92.27 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இத்துடன், பரிசுச் சீட்டு விற்று முதலிலிருந்து ரூ. 50 லட்சம் வழங்கப்படும்.

14. கிராமப் பகுதிகளில் ஆசிரியைகள் வசிப்பதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, கிராமப் புறங்களில் ஆசிரியைகளுக்காக குடியிருப்புகள் கட்டும் திட்டம் செயற்படுத்தப்படுகிறது. ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் இதுவரை சுமார் 1,600 குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. இத் திட்டத்திற்கு சமுதாய வளர்ச்சிப் பணிகள் வரவு-செலவுத் திட்டத்தின்கீழ் 1973-74 ஆம் ஆண்டில் ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் அரசு மானிய உதவி முறையில் திருத்தம்.

தமிழ் நாட்டில் மொத்தம் சுமார் 32,000 தொடக்கப் பள்ளிகள் உள்ளன. இவற்றில் சுமார் 22,000 பள்ளிகள் ஊராட்சி ஒன்றியங்களால் நடத்தப்படுகின்றன. ஊராட்சிக் கல்வி நிதி உதவி விசாரணைக் குழுவின் பரிந்துரைகளின் பேரில், ஆப் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் அரசு மானிய உதவி முறையை அரசு அண்மையில் திருத்தியமைத்துள்ளது. புதிய முறையின்படி (ஒரு ரூபாய் நில வரிக்கு 45 காசு என்று வசூலிக்கப்படும்) உள்ளூர் வரியில் 4/9 பாகம், தொடர்ந்து ஊராட்சி ஒன்றியத் தொடக்கக் கல்வி நிதிக்கு வழங்கப்படும். மேலும், 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகையை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு வட்டத்திலும் உள்ள மக்கள் தொகைக்கு, தலைக்கு ரூ. 6 வீதம் கணக்கிட்டு கல்வி மானியத்தையும் அரசு வழங்கும். தொடக்க நிலைக் கல்வியின் கீழ் வரும் எஞ்சிய செலவை, திருத்தியமைக்கப்பட்ட வட்டார வகைப்பாட்டிற்கு ஏற்ப அரசும் ஊராட்சி ஒன்றியங்களும் பகிர்ந்து ஏற்றுக்கொள்ளும்.

1973 மார்ச் 21]

அத்தியாயம் 3

உயர்நிலைப் பள்ளிக் கல்வி

இம் மாநிலத்தில் 1972–73 ஆம் ஆண்டில் 14–17 வயதுத் தொகுதியினர் 21.89 லட்சம் பேர் இருந்தனர், (1971 மக்கள் தொகைக் கணக்குப்படி) இவர்களில் 7.25 லட்சம் பேர், அதாவது 33.2 விழுக்காட்டினர், உயர்நிலைப் பள்ளிகளில் 9–11 ஆவது வகுப்புகளில் பயின்றனர்.

2. இம் மாநிலத்தில் உள்ள சுமார் 2,700 உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்கு 1973-74 ஆம் ஆண்டில் ஆகும் மொத்தச் செலவு ரூ. 29 கோடியாகும். இது "கோரிக்கை எண். 16 கல்வி" தலைப்பின்கீழ் ஆகும் செலவில் சுமார் 29 விழுக்காடாகும். நான்காவது திட்டக் காலத்தில் பள்ளியில் சேர்க்கப்பட்ட இந்த வயது தொகுதியைச் சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை, கூடுதலாக நியமிக்கப்பட்ட ஆசிரியர்களின் எண்ணிக்கை முதலியவற்றை இணைப்பில் காணலாம்.

3. 1973–74-ல், இவ் வயதுத் தொகுதியைச் சேர்ந்த 40,000 மாணவர்களைக் கூடுதலாகச் சேர்க்கவும், கூடுதலாக 375 ஆசிரியர்களை நியமிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

கல்வியின் தரத்தை உயர்த்துதல்

4. அறிவியல் சாதனங்களை வாங்குவதற்கும், ஆய்வுக்கூடங்கள் அமைப்பதற்காகவும் (கருவிகள் வாங்க ரூ. 15,000, ஆய்வுக்கூடக் கட்டிடங்களுக்காக ரூ. 25,000) உயர்நிலைப் பள்ளிகளுக்கு உதவி மானியம் வழங்கும் திட்டத்தினை அரசு செயற்படுத்துகிறது. இத் திட்டத்தின்கீழ் இதுவரை சுமார் 800 உயர்நிலைப் பள்ளிகள் பயனடைந்துள்ளன. இத்திட்டம் 1973-74-லும் தொடரும். இதற்கு ரூ. 15 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் 40 உயர்நிலைப் பள்ளிகள் பயனடையும்.

5. தற்போது உயர்நிலைப்பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள இரு ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் இயங்குகின்றன. ஒரு வருவாய் மாவட்டத்திற்கு ஒன்று என்னும் வீதத்தில் மேலும் 12 ஆய்வுக்கூட இயல் ஊர்திகள் வாங்கப்படும்.

6. பள்ளிகளில் அறிவியல் கல்வி கற்பிக்கும் தரத்தினை உயர்த்துவதற்காக யூனிசெஃப் நிறுவனத்தின் உதவியுடன் கூடிய ஒரு முன்னோடித் திட்டம், சென்னை, செங்கற்பட்டு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட 50 தொடக்கப் பள்ளிகளிலும் 30 உயர்தொடக்கப்பள்ளிகளிலும் கொண்டு வரப்பட்டது. இத் திட்டத்திற்கான புதிய அறிவியல் பாடத்திட்டம் 1—5 வகுப்புகளிலும் 6-வது வகுப்பிலும் செயல்படுத்தப்பட்டது. இத் திட்டத்தின்கீழ் தெரிந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு மறுபயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இவர்கள் மேற்படி பள்ளிகளின் மற்ற ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சி நடத்தினர்.

7. பல்கலைக்கழக மானியக்குழுவும், கல்வி ஆராய்ச்சி பயிற்சி குறித்த தேசியக்குழுவும் 1969 முதல் கோடை காலப்பயிற்சி நிலையங்கள் நடத்தி வருகின்றன. 1973 ஆம் ஆண்டிலும் உயர் நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கு இயல்பியல், வேதியியல், உயிரியல், கணிதம் ஆகிய பாடங்களில் கோடை காலப் பயிற்சி வகுப்புகளை நடத்த கல்வி ஆராய்ச்சி பயிற்சி தேசியக் குழு திட்டமிட்டுள்ளது.

8. 1973-74-ல் "அறிவியல் பொருட்காட்சி" என்ற புதியதொரு திட்டம் கொண்டுவரப்படும். இத்திட்டத்தின்கீழ் உயர்நிலைப் பள்ளிகள் சிறப்பான அறிவியல் கல்வியை விளக்கக்கூடிய அறிவியல் சங்கங்களையும் பொருட்காட்சிகளையும் அமைக்கும். இத்திட்டம் 1973—74ல் இரண்டு மாவட்டங்களில் தொடங்கப்படும். பின்னர் அது ஏனைய மாவட்டங்களுக்கும் விரிவாக்கப்படும். இந்தப் பொருட்காட்சிகளில் கலந்துகொள்ளும் பள்ளிகள், அவற்றிற்காகும் செலவைப் பகிர்ந்துகொள்ளும். அரசு இணைமானியம் வழங்கும்.

9. எல்லா உயர்நிலைப்பள்ளிகளிலும் நல்ல நூலகங்களை அமைப்பதற்கான திட்டத்தின்கீழ் இதுவரையில் 1,388 பள்ளிகளில் நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. 1973—74ல் மேலும் 200 உயர்நிலைப்பள்ளிகளில் நூலகங்களை அமைக்க, பள்ளிக்கு ரூ. 500 வீதம் மானியம் வழங்கப்படும்.

10. கல்வி விளக்கப்படங்கள் (Audio-Visual Education) மூலம் கல்வி கற்பிக்கப்படுவதற்காக 180 படச்சுருள்களும் 500 தானே படச்சுருள்களும் (filmstrips) வாங்கும்பொருட்டு 1973—74ல் ரூ. 1 லட்சம் செலவிடப்படும். இதனால் கல்வி விளக்கத் திரைப்படச்சுருள் தொகுப்பில் பழையனவற்றுக்குப் பதிலாகப் புதியவை இடம் பெறும்.

6 3071

11. கோத்தாரி கல்வி ஆணைக்குழு "மாதிரிப் பள்ளிகள்" திறக்க வேண்டும் என்று கருத்துத் தெரிவித்தது. இவை இலட்சிய முன்னோடிகளாக அமைய வேண்டியவையாகும். 1972-73ல் 6, 9 வகுப்புகளுடன் புதுக்கோட்டையில் ஒரு மாதிரிப பள்ளி திறக்க அரசு அனுமதி வழங்கியது. 1973-74 ல் இப்பள்ளியில் 7-வது 10-வது வகுப்புகள் ஏற்படுத்தப்படும். தன்னு தேர்ச்சி பெற்ற ஆசிரியர்கள் இப்பள்ளியில் பணி செய்கின்றனர். திறமையான மாணவர்கள் அப்பள்ளியில் சேர்க்கப்பட்டு அப்பள்ளி விடுதியிலேயே தங்கிப்படித்து வருகின்றனர்.

பள்ளிகள் தொகுதி (School Complex)

12. பள்ளிகள் பல ஒன்றுக்கொன்று உதவிப் பயன்பெறும் பொருட்டு, பள்ளித்தொகுதித் திட்டத்தின்கீழ் உயர்நிலைப்பள்ளி களையும், தொடக்க நிலைப்பள்ளிகளையும் இணைக்கலாம் என்ற கருத்தினைக் கோத்தாரி கல்விக் குழு தெரிவித்தது. இத்திட்டத்தின் கீழ், உயர்நிலைப்பள்ளிகளைச் சுற்றிலும் அமைந்துள்ள 10-லிருந்து 20 தொடக்கநிலைப் பள்ளிகள், 3 அல்லது 4 உயர் தொடக்கப் பள்ளிகள் அனைத்தும் ஒரு தொகுதியாக அமைந்து கொள்ளும். இத்தொகுதி கல்வி மேம்பாட்டுக்கான திருத்தங்களை ஆய்ந்து ஏற்கும் நிலையில் இயங்கும். பள்ளிகள் தொகுதித்திட்டம், தமது மாநிலத்தில் எல்லா மாவட்டங்களிலும் தெரிந்தெடுத்த இடங்களில் செயல்பட்டு வருகின்றது (மொத்தம் 114 இடங்களில்).

மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம்.

13. சென்னையிலுள்ள மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம், தேசிய நிலையில் உள்ள கல்வி ஆராய்ச்சி பயிற்சி குறித்த தேசிய மன்றத்துக்கு நிகரான மாநில அமைப்பாகும். சென்னையிலுள்ள மாநிலக் கல்வி ஆய்வு நிறுவனம் பள்ளி அளவில் பணிக்காலப் பயிற்சிக்கு பொறுப்பு ஏற்கிறது. 1973-74 ல் பல பணிக்காலப் பயிற்சித்திட்டங்கள் நடத்தப்படும். இந்த நிறுவனம் கல்வி தொடர்பான பல்வேறு பிரச்சினைகள் பற்றி ஆராய்ச்சியும் நடத்துகிறது. தொடக்கக் கல்வி சீர்திருத்த விரிவுப்பணி நிலையம் ஒன்றும்கூட இந்நிறுவனத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த விரிவுப்பணித்திட்டத்தின்கீழ் ஸ்ரீபெரும்புத்தூர் ஊராட்சி ஒன்றி யத்திலும் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்திலும் 25 பள்ளிகள் பயன்பெறுகின்றன.

8-வது வகுப்பிற்கான பொதுத்தேர்வு

14. ஒவ்வொரு வருவாய் மாவட்டத்திலும் உள்ள எல்லாப் பள்ளிகளுக்கும் 8-வது வகுப்பு ஆண்டுத் தேர்விற்கான பொதுவான வினாத்தாள்கள் 1970-71-ம் ஆண்டிலிருந்து தயாரிக்கப் பட்டு வருகின்றன. எனினும், விடைத்தாள்கள் அந்தந்தப் பள்ளி களிலேயே திருத்தி மதிப்பிடப்படுகின்றன. இம்முறை இவ் வாண்டும் தொடர்ந்து பின்பற்றப்படும்.

15. **கட்டிடத்திட்டங்கள்.**—உயர்நிலைப் பள்ளிகளுக்கான கட்டி டங்கள் கட்டுவதற்காக நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரு கோடி ரூபாய்க்கு மேல் செலவு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு கணிசமான நிதி ஒதுக்கப்பட்ட போதிலும், பெரும்பாலான உயர்நிலைப் பள்ளிகள் (மொத்தமுள்ள 2,700 பள்ளிகளில் சுமார் மூன்றில் ஒரு பாகம்) இன்னும் சரியான கட்டிடம் இல்லாமல் இருக்கின்றன. உயர்நிலைப் பள்ளி கட்டிடங்களுக்காக 1973-74-ல் ரூ. 10 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. முன்னர் கழக உயர்நிலைப் பள்ளிகளாக இருந்து இப்போது அரசினால் மேற்கொள்ளப் பட்டுள்ள உயர்நிலைப் பள்ளிகளுக்கு கட்டிடங்கள் கட்டுவதற்காக ரூ. 5 லட்சமும், பழுதுபார்க்கும் பணிக்காக ரூ. 6 லட்சமும் ஒதுக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கு வசதிகள் அளித்தல்

படிப்பு உதவித் தொகைகள்.

16. தமிழ்நாட்டில் பள்ளிகளில் எல்லா நிலைகளிலும் இலவசக் கல்வி அளிக்கப்படுகிறது. கிராமத்தைச் சார்ந்த, கல்வியில் சிறந்த மாணவர்களுக்குப் படிப்பு உதவித்தொகை வழங்கும் ஒரு திட்டம் இந்திய அரசின் உதவியுடன் 1971-72ல் தொடங்கப்பட்டது. அதன்கீழ் விடுதியில் தங்கிப் பயிலும் மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 1,000-ம் வெளி மாணவர்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 500-ம் வழங்கப்படுகிறது. இத்திட்டம் 1973-74லும் தொடர்ந்து நிறைவேற்றப்படும். இத்திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து, ஒவ்வோர் ஆண்டிலும் ஊராட்சி ஒன்றியத்திற்கு இரண்டு வீதம் 748 படிப்பு உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

17. பர்மா, இலங்கை அகதிகள், பாதுகாப்புப் படையினர், முன்னாள் இராணுவத்தினர், அரிசனங்கள், பழங்குடியினர், தங்கக் கட்டுப்பாட்டு ஆணையால் பாதிக்கப்பட்ட பொற்கொல்லர்கள்,

1973 மார்ச் 21]

அரசியல் தியாகிகள் ஆகியோரது சிறார்களுக்கும் கல்வித்துறை கல்விச் சலுகைகளை அளிக்கிறது. அரிசனங்கள், பழங்குடியினர், பின்தங்கிய வகுப்பினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவர் களுக்குக் கல்வியின் எல்லா நிலைகளுக்கும் அரிசன நலத்துறையும் பின்தங்கிய வகுப்பினர் நலத்துறையும் தங்களது நிதியிலிருந்து படிப்பு உதவித் தொகைகள் வழங்குகின்றன.

பள்ளி மேம்பாடு மாநாடுகள்.

18. பள்ளிக்குரிய வசதிகளையும், மாணவர்களுக்குரிய வசதி களையும் செய்து தருவதற்காக உள்ளூர் மக்களின் முயற்சிகளை ஒருங்கு திரட்டும் பொருட்டு இதுவரை 506 பள்ளி மேம்பாட்டு மாநாடுகள் நடத்தப்பட்டுள்ளன. இவற்றின் வாயிலாக ரூ. 13 கோடி நிதியுதவி பெறப்பட்டுள்ளது. பள்ளி மேம்பாட்டு மாநாடுகளையும் பொறுத்தமட்டில் நமது மாநிலம் முன்னோடியாக உள்ளதென்று அனைவரும் ஏற்றுக்கொள்கின்றனர்.

19. அந்தந்தப் பள்ளிகள் தாமாகவே எடுத்துக்கொண்ட முயற்சிகளின் விளைவாக 1973 பிப்ரவரி முடிய ரூ. 2.51 லட்சம் செலவில் 38 லட்சம் மாணவர்களுக்கு நிகராடை வழங்கப் பட்டுள்ளது. குறிப்பாக, சிறுமியர் ஒழுங்காகப் பள்ளிக்குச் செல்ல இது ஊக்குவிக்கிறது.

மருத்துவப் பரிசோதனை.

20. சென்னை மாநகரிலுள்ள தொடக்க, உயர்நிலைப் பள்ளி களிலுள்ள சுமார் 5,000 மாணவர்களுக்கு மருத்துவப் பரிசோதனை செய்வதற்காக முன்னோடித் திட்டம் ஒன்று கொண்டுவரப் பட்டுள்ளது. வட ஆர்க்காடு, சேலம், கோயம்புத்தூர், திருச்சிராப் பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில், மருத்துவர்கள், இயல் ஊர்திகளில் சென்று, பள்ளி மாணவர்களின் உடல்நலனை ஆய்வு செய்கிறார்கள். மருத்துவச் சோதனைக்காக மாணவர்களிடம் வசூலிக்கப்படும் தனிக் கட்டணத்தைக் கொண்டு இத் திட்டம் செயல்படுகிறது.

அநுபந்தம் 4.

ஆசிரியர் நலன்.

தமிழ் நாட்டில் உள்ள பள்ளிகளில் தற்பொழுது சுமார் 2:34 லட்சம் ஆசிரியர்கள் பணிபுரிகிறார்கள். அவர்களின் நிர்வாக வாரியாண வெவ்வேறு அல்லது) விவரம் வருமாறு :—

நிர்வாக வாரியாக (1-ல்) குறித்த ஆசிரியர் எண்ணிக்கை வகைப்படுத்தப்பட்டது.

பள்ளிகள்.		ஆண் ஆசிரியர்கள்.	பெண் ஆசிரியர்கள்.	மொத்தம்.	ஆண் ஆசிரியர்களும், மத்தியப் பள்ளிகளிலும், பெண் ஆசிரியர்களும் அடங்குவர்.			
					ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள்.	நடுநிலைப் பள்ளி ஆசிரியர்கள்.	உயர்நிலைப் பள்ளி ஆசிரியர்கள்.	மொத்தம்.
தொடக்கப் பள்ளிகள்	..	66,732	37,209	103,941	6,854	..	61,525	8,279	27,283
உயர் தொடக்கப் பள்ளிகள்	..	36,481	29,866	66,347	3,185	..	28,083	6,793	28,286
உயர்நிலைப் பள்ளிகள்	..	44,683	18,774	63,457	5,047	28,243	.	4,436	*35,731
மொத்தம்	..	147,896	85,849	233,745	15,086	28,243	89,608	19,508	81,300

* இந்தியா இந்நிலைகளில் பணிபுரியும் 826 ஆசிரியர்களும், மத்தியப் பள்ளிகளிலும், மெட்ரிக் மேலவுள்ள பள்ளிகளிலும் பணிபுரியும் 1,477 ஆசிரியர்களும் இத்தொகையில் அடங்குவர்.

1973 மார்ச் 21]

2. பள்ளி இறுதி வகுப்பு முடிய இலவச கல்வி முறை கொண்டு வரப்பட்ட பின்னர், அரசினர் பள்ளிகளிலும் மானியம் பெறும் பள்ளிகளிலும் பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு ஊதியம் முழு வதையும் அரசே வழங்குகின்றது. ஆசிரியர்களின் நலனுக்கும் அவர்களது பணி நிலைமைகளை மேம்படுத்துவதற்கும் அரசே பெரும் பொறுப்பு வகிக்கிறது. இம்மாநிலத்தில் உள்ள எல்லாப் பள்ளிகளையும் சேர்ந்த (அரசுப் பள்ளிகளும், மானியம் பெறும் பள்ளிகளும், உள்ளாட்சி மன்றப் பள்ளிகளும்) ஆசிரியர்களின் சம்பளம் குறித்து ஆகும் செலவு 1973-74-ல் சுமார் ரூ. 55 கோடியாக இருந்து 1973-74-ல் சுமார் ரூ. 70 கோடியாக உயர்ந்துள்ளது. இது மாநிலத்தில் பள்ளிக் கல்விக்காகச் செலவிடப்படும் தொகையில் 86 சதவிதமாகும். அவர்களுக்கு நியாயமான பணி நிலைமைகளை ஏற்படுத்திக் கொடுக்கவும் கடந்த சில ஆண்டுகளாக அரசு பல நடவடிக்கைகளை எடுத்துள்ளது. தற்பொழுது பணிபுரிகின்ற ஆசிரியர்களுக்கு மனநிறைவு அளிப்பதுடன் ஆசிரியர் தொழிலுக்கு நல்ல திறமையுள்ளவர்களை ஈர்க்க இந்நட வடிக்கைகள் ஊக்கம் அளிப்பவையாகவும் அமையும்.

(1) ஊதிய வீதங்கள்.

அரசுப் பணியாளர்களின் ஏனைய வகையினரைப் போலவே ஆசிரியர்களுக்கும் (அரசுப் பள்ளி ஆசிரியர்களும், மானியம், தனியார் பள்ளி, உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும்) ஒரு நபர் குழுவினால் திருத்தியமைக்கப்பட்டுள்ள இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிசீலனை செயல்படுத்தியதன் வாயிலாக உயர்ந்த வித ஊதியம் அளிக்கப்பட்டுள்ளது. எல்லா நிர்வாகங்களின் கீழும் உள்ள பல்வேறு வகையைச் சேர்ந்த ஆசிரியப் பணியாளர்களுக்கும் முதல்முதலாக தேர்வுநிலைப் பதவிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அரசுப் பணியாளர்களுக்கு வழங்குவதைப்போலவே, மானியம் பெறும் பள்ளி ஆசிரியர் களுக்கும், உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் 2—10—1970 முதற்கொண்டு வீட்டு வாடகைப் படியும், மாநகர ஈட்டுப் படியும் வழங்கப்படுகின்றன.

கடந்த சில ஆண்டுகளில், தொடக்கப் பள்ளிகளில் 24,500 அயர் கிரேடு ஆசிரியர் பதவிகளை செகண்டரி கிரேடு ஆசிரியர் தரத்திற்கு உயர்த்தி அப்பதவிகளில் பணி செய்த செகண்டரி

[1973 மார்ச் 21

கிரேடு ஆசிரியர்களுக்கு செகண்டரி கிரேடு ஊதியம் வழங்கப் பட்டுள்ளது. 1973-74 ஆம் ஆண்டில் மேலும் 5,000 பதவிகளின் தரம் உயர்த்தப்படும்.

(2) தனியார் பள்ளி, உள்ளாட்சி மன்றப்பள்ளி ஆசிரியர்களுக்கு ஓய்வூதியம்.

5. அரசுப் பள்ளிகளில்லாத பிற பள்ளி ஆசிரியர்களுக்கான (மானியம் பெறும் பள்ளிகள், உள்ளாட்சி மன்றப் பள்ளிகளின் ஆசிரியர்கள்) ஓய்வூதிய விதிகள், கடந்த சில ஆண்டுகளில் அவ்வப் பொழுது காராளமாக்கப்பட்டு வந்தன. இவற்றிற்கெல்லாம் சிகரம் வைத்தாற் போல் அமைந்த ஒரு சாதனை, மாநில அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்துகின்ற காராள ஓய்வூதிய விதிகளையும் குடும்ப ஓய்வூதிய விதிகளையும் 1-6-70 முதல் தனியார் பள்ளி உள்ளாட்சி மன்றப் பள்ளி ஆசிரியர்களுக்கும் விரி வாக்கியது ஆகும். அரசுப் பணியல்லா பிற பணியைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கு அரச அலுவலரையொப்ப ஓய்வுக்கால நன்மைகளை முதலில் வழங்கிய மாநிலம் தமிழ் நாடாக இருக்கலாம். 1-4-72 முதல், மானியம் பெறும் பள்ளிகளில் உள்ள ஆசிரியர்களல்லாத பிற பணியாளர்களுக்கும், அரசுப் பணியாளர் களையொப்ப ஓய்வூதிய நன்மைகள் வழங்கப்படுகின்றன.

6. 1-7-60-க்கு முன்பு ஓய்வு பெற்ற டி.டி. ஆசிரியர்கள்/தலைமை ஆசிரியர்கள், அதிக அளவு ஓய்வு ஊதியமாக மாதம் ரூ. 30/35 மட்டுமே பெற்று வந்தனர். இந்த அதிக அளவு ஓய்வு ஊதியத் தொகை 1-4-72-லிருந்து ரூ. 60/75 -ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

7. அரசுக் கல்வி நிலையங்கள் அல்லாத பிற கல்வி நிலையங்களில் பணி செய்து 2-10-70-க்கு முன் இறந்த ஆசிரியர்களின் குடும்பங்கள் பெறுதற்குரிய குடும்ப ஓய்வூதிய நிபந்தனைகளைத் காராளமாக்கி 1972-73-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(3) ஆசிரியர் நல தேசிய நிதி.

8. பணியில் உள்ள ஆசிரியர்களுக்கும், ஓய்வு பெற்ற ஆசிரியர் களுக்கும் ஆசிரியர் நல தேசிய நிதியிலிருந்து உதவி அளிக்கப் படுகிறது. இந்த நிதியின் மாநிலச் செயற் குழு ஆசிரியர்களில் தக்காருக்கு மாதாந்திர தொடர் மானியமும், மொத்தத்தொகை மானியமும் வழங்கி வருகிறது. வறுமையில் வாடும் ஓய்வு பெற்ற

1973 மார்ச் 21]

ஆசிரியர்களுக்கும், இறந்துவிட்ட ஆசிரியர்களின் விதவையருக்கும் ஆசிரியர்களைச் சார்ந்தவர்களுக்கும் மாதந்தோறும் ரூ. 10 முதல் ரூ. 100 வரை மானியமாக அளிக்கப்படுகிறது. சில நேர்வுகளில், ரூ. 1,000 வரை ஒரு மொத்த மானியம் மருத்துவச் செலவுகள் முதலியவற்றிற்காக அளிக்கப்படுகின்றது. தகுதி பெற்ற ஆசிரியர்கள் 2,100 பேருக்கு இதுவரை ரூ. 12 லட்சம் உதவித் தொகையாக வழங்கப்பட்டுள்ளது.

(4) பிற நன்மைகள்.

9. கல்வி மாவட்டங்கள் ஒவ்வொன்றிலும் உள்ள தொடக்கப் பள்ளி, உயர்நிலைப்பள்ளி, ஆசிரியர்களுக்கும், மாநில விருதுகள் வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு கல்வி மாவட்டத்திலும் ஆண்டு தோறும் தொடக்கப்பள்ளி ஆசிரியர் இருவருக்கும், உயர்நிலைப் பள்ளி ஆசிரியர் இருவருக்கும் விருதுகள் வழங்கப்படுகின்றன. விருது பெறுபவர் ஒவ்வொருவரும் தகுதிச் சான்றிதழ், வெள்ளிப் பதக்கம், சொக்கப்பரிசாக ரூ. 200 ஆகியவற்றைப் பெறுகின்றனர்.

10. கல்வித்தர உயர்வு நடவடிக்கை முயற்சியாகச் செயல் படவும் மாவட்டத் தலைமை இடத்துக்கு வரும் ஆசிரியர்கள் பயன்படுத்து தற்கும் என்று 1970-71-ல் வேலூரில் ஆசிரியர் இல்லம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஆசிரியர்கள் தாமாகவே திரட்டிய வருவோடு மாநில அரசு ரூ. 50,000 மானியம் வழங்கியது. உதக மண்டலத்தில் ஆசிரியர் இல்லம் ஒன்று கட்டப்படுவதற்கு ரூ. 1 லட்சம் மானியம் தரப்பட்டுள்ளது. கொடைக்கானலிலும் ஆசிரியர் இல்லத்திற்கு மானியம் அளிப்பது பற்றி ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

11. வீடுகட்ட கடன் வழங்கும் திட்டம் அரசு (கழக) உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்களுக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது.

12. ஆதாரப் பயிற்சியற்ற ஆசிரியர்கள் ஊதிய உயர்வு பெறுமுன் கைப்பணிப்பயிற்சித் தகுதியைப் பெற்றிருக்கவேண்டும் என்ற விதியை அரசு நீக்கியுள்ளது.

(5) மானிய உதவி பெறும் பள்ளிகள்.

13. மானிய உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களின் நீண்ட காலக் குறைகள் பலவற்றை அண்மைக் காலத்தில் அரசு நீக்கியுள்ளது. 1968-69-ல் இந்த ஆசிரியர்களின் விடுப்பு விதிகள் காராளமாக்கப்

[1973 மார்ச் 21

பட்டன. அரசுப் பணியில் உள்ள ஆசிரியர்களை ஒப்ப விடுப்பை சொக்கமாக்கிக் கொள்வது உட்பட, அனைத்து விடுப்பு வசதிகளும் மானிய உதவிபெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும் அண்மையில் அனுமதிக்கப்பட்டுள்ளன. 1969-70-ல் மானிய உதவி பெறும் பள்ளி ஆசிரியர்கள் குறித்த பிரச்சினைகள் எல்லாவற்றையும்பற்றி ஆராய்வதற்கு என டாக்டர் பால் தலைமையில் குழு ஒன்று அமைக்கப்பட்டது. இக்குழுவின் அறிக்கையோட்டி, மானிய உதவி பெறும் பள்ளி ஆசிரியர்களின் பணி நிலைமைகளைப் பாதுகாக்கும் வகையில் அடங்கல் சட்டவரைவு ஒன்றை 1972-ல் அரசு கொண்டுவந்துள்ளது. 1970-71 ஆம் ஆண்டிலிருந்து, மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கு (1) வீட்டு வாடகைப்படி, குறிப்பிட்ட பகுதிகளில் குளிர்க்காலப்படி, மலைவாழ் படி முதலியன, (2) பண்டிகை முன்பணம், (3) கைத்தறித் துணிகள் வாங்குவதற்கான முன் பணம், (4) திருமணக் கடன்கள், (5) அரசு மருத்துவமனைகளில் இலவச மருத்துவ சிகிச்சை போன்ற பல்வேறு சலுகைகள் அளிக்கப்பட்டுள்ளன. 1971-72-ல் மானியம் பெறும் பள்ளிகளில் ஆசிரியர்களல்லாத பணியாளர்களுக்கும் இலவச மருத்துவ வசதிகள் அளிக்கப்பட்டன. மானியம் பெறும் பள்ளியின் ஆசிரியர் ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாறும்போழுது ஊதிய உயர்வைக் கணக்கிடுவதற்காக அவருடைய பணிக்கால முழுவதும் (முன்னர்ப் பணி செய்த பள்ளிகள் உட்பட) கணக்கில் கொள்ளப்படுகிறது. மானியம் பெறும் உயர்நிலைப்பள்ளி ஆசிரியர்கள் ஒரே ஊதிய விகிதத்தைக் கொண்ட ஒரு பதவியிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றப்பட்டால் முன்னதில் ஆற்றிய பணிக் காலத்தையும் கணக்கிட்டு பின்னதில் ஊதியம் குறிக்கப்படுகிறது.

(6) வேலைவாய்ப்பின்மைக்கு நிவாரணம்.

14. பயிற்சி பெற்ற ஆசிரியர்களிடையே நிலவும் வேலை வாய்ப்பின்மையைக் குறைப்பதில் அரசு, கவனம் செலுத்தி வருகிறது. கடந்த ஆறு ஆண்டுகளில் கூடுதலாக சுமார் 33,000 ஆசிரியர்கள் பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டன. இவை போக 1971-72-லும் 1972-73-லும் வேலை வாய்ப்பின்மையைக் குறைக்கும் மத்தியத் திட்டத்தின்கீழ் 1,809 பதவிகள் ஏற்படுத்தப்பட்டன. 1973-74-ல் மாநில அரசுத் திட்டங்களின்கீழ் கூடுதலாக சுமார் 1,475 முறையான ஆசிரியர் பதவிகளும், மைய

1973 மார்ச் 21]

அரசுத் திட்டத்தின் கீழ் கூடுதலாக சுமார் 900 முறையான ஆசிரியர் பதவிகளும் ஏற்படுத்தப்படும். ஒரு சிறப்புத் திட்டத்தின் கீழ் மேலும் கூடுதலான பதவிகளை ஏற்படுத்துவது பற்றியும் ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், 1970 அக்டோபர் முதல் தொடங்கப்பட்ட தொழில் பழகு ஆசிரியர் திட்டத்தின் கீழ் தொழில் பழகு ஆசிரியர்கள் பதவிகளில் சுமார் 5,746 ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களுள் ஏறத்தாழ 3,308 பேர் ஏற்கெனவே முறையான பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள தொழில் பழகு ஆசிரியர்கள் 2,438 பேரும் கூடிய விரைவில் முறையான பதவிகளில் அமர்த்தப்படுவர்.

அத்தியாயம் 5.

கல்விச் சூழ்நிலை மேம்படுத்தல்.

1. பாட நூல்களை வெளியிடும் உரிமையை நாட்டுடைமையாக்கல்.

தமிழ் நாடு பாட நூல் வெளியீட்டு நிறுவனம் 1970 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் அமைக்கப்பட்டது. பாட நூல் வெளியிடும் உரிமையை நாட்டுடைமையாக்கும் கொள்கையைச் செயல்படுத்துவதற்கு, இந்நிறுவனம் தீவிர நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. பாட நூல்கள் வெளியிடும் உரிமையை நாட்டுடைமை ஆக்கும் பணி, பள்ளி அளவில், 1972-73 ஆம் கல்வி ஆண்டின் தொடக்கத்தில் பெரும்பாலும் நிறைவு பெற்றுவிட்டது.

கீழ்க்கண்ட நூல் வெளியிடும் உரிமை மட்டுமே இன்னும் நாட்டுடைமையாக்கப்படவில்லை, அவையாவன :—

(1) விருப்பப் பாடங்கள் 10, 11-ம் வகுப்புகளுக்கு (தமிழில்): குறிக் கணக்கியல், வடிவியல், இயல்பியல், வேதியியல், வரலாறு.

(2) பல்வேறு பாடங்களுக்கான, தெலுங்கு, மலையாளம், உருது போன்ற சிறுபான்மை மொழிகளிலுள்ள பாட நூல்கள்.

(3) சிறுபான்மை மொழிகளில் மொழிப் பாடங்களுக்கான பாட நூல்கள்.

2. 1972-73 ஆம் ஆண்டில் பயன்படுத்துவதற்காக, இந்நிறுவனம் சுமார் 260 லட்சம் பாட நூல்களை அச்சிட்டு வழங்கியுள்ளது. 1973-74 இல் பயன்படுத்துவதற்காக சுமார் 300 லட்சம் பிரதிகளை இந்நிறுவனம் அச்சிடும்.

3. சென்னை மாநகரில் நிறுவனம் பாட நூல்களைப் பள்ளிகளுக்கும், விற்பனையாளர்களுக்கும் நேரடியாக விற்று வந்தது. 1972-73 இல் நேரடி விற்பனை செங்கற்பட்டு மாவட்டத்திற்கும் விரிவாக்கப்பட்டது. 1972-73 இல் மற்ற மாவட்டங்களில் 55 வட்ட நூல் விற்பனையாளர்களையும், 595 சில்லறை விற்பனையாளர்களையும் நிறுவனம் நியமித்தது. இவ்வாண்டில் விற்பனை முறையில் புதுமையாக நிறுவனத்தின் நூல்களை விற்பனை செய்வதற்காக வட்ட விற்பனையாளர்களாக மூன்று நகர்வோர், கூட்டுறவுச் சங்கங்கள் நியமிக்கப்பட்டன.

4. அதிக அளவில் பாட நூல்களை அச்சிட வேண்டியுள்ளதால், பாட நூல்களை அச்சிடுவதற்கென்றே, பாட நூல் அச்சகம் ஒன்றை நிறுவ அந்நிறுவனம் கருதியுள்ளது. இது குறித்து இந்திய அரசோடு பேச்சுவார்த்தை நடைபெற்று வருகின்றது.

குழந்தைகளுக்கான நூல்களை வெளியிடுதல்.

5. குழந்தைகளுக்கான நூல்களை (தமிழில்) எழுதுவோருக்குப் பரிசு வழங்கும் திட்டத்தின்கீழ், ஒவ்வொரு ஆண்டும், ரூ. 500-க்கு மேற்படாமல், பத்து பரிசுகள் வழங்கப்படுகின்றன. குழந்தைகளுக்கான சிறந்த நூல்களைத் தமிழில் படைப்போருக்குப் பரிசுகள் வழங்கும் திட்டத்திற்கு இந்திய அரசு ஆதரவளிக்கிறது. இத்திட்டத்தின்கீழ், குழந்தைகளுக்கான சிறந்த நூல்களைத் தமிழில் படைப்போருக்கு 1,000 ரூபாய் ரொக்கப் பரிசு வழங்கப்படுகிறது.

(2) பாடத் திட்டத்தைத் திருத்தியமைத்தல்.

6. நமது பள்ளிகளில் தற்போது பின்பற்றப்படும் பாடத்திட்ட முறையானது, கடைசியாக, 1965 ஆம் ஆண்டில் திருத்தியமைக்கப்பட்டது. பாடத்திட்ட முறையை அடிக்கடி ஆய்வு செய்ய வேண்டியதன் தேவையையும் கல்வி கற்பிக்கும் முறையை தற்காலத்திற்கேற்றவாறு புதுப்பிப்பதன் தேவையையும் உணர்ந்து பள்ளிப் பாடத்திட்ட முறை முழுவதையும் திருத்தியமைப்பதற்கு

1970 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில், அரசு, குழுக்களை அமைத்தது. 1-5 வகுப்புகளுக்கு இக் குழுக்கள் தயாரித்த திருத்தப் பாடத்திட்ட வரைவு 1971 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் வெளியிடப்பட்டது. 6-8 வகுப்புகளுக்கான புதிய பாடத் திட்ட வரைவு 1972 ஆம் ஆண்டு சனவரித் திங்களில் வெளியிடப்பட்டது. 9-11 வகுப்புகளுக்கான புதிய பாடத்திட்ட வரைவு விரைவில் வெளியிடப்படும்.

7. 1972-73 கல்வி ஆண்டிலிருந்து 1-ஆ வகுப்புகளில் கணக்கு, அறிவியல் ஆகிய பாடங்களைத் தவிர, ஏனைய எல்லாப் பாடங்களிலும் புதிய பாடத்திட்டம் நடைமுறைக்கு வந்தது. புதிய பாடத் திட்டத்தில் கணிதம், அறிவியல் ஆகியவற்றிற்கான பாடத் திட்டங்கள் மாணவர் ஆற்றலைத் தூண்டுவனவாகவும் செய்முறைப் பயிற்சியை வலியுறுத்துவனவாகவும் இருந்தன. 1973-74 ஆம் ஆண்டு முதல் அந்த வகுப்புகளுக்கு கணக்கு, அறிவியல் பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு, புதிய பாடத் திட்டத்தில் சிறமையளிக்க ஏற்கெனவே சிறப்புப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதற்காக இம் மாநிலத்தில் 1972-73 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 40 லட்சம் செலவில் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில், பெருமளவில் உள்ளிருப்புப் பயிற்சித் திட்டம் நடத்தப்பட்டது. 1973, சூன் மாதத்துக்கு முன் 58,500 ஆசிரியர்களுக்குப் பயிற்சியளிக்கப்படும். பாடத்திட்ட மேம்பாட்டுக்காக, நிலையான அமைப்பு ஒன்றை ஏற்படுத்தும் நோக்கத்துடன் மாநிலக் கல்வி நிறுவனத்தில் பாடத் திட்ட மேம்பாட்டுப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பாடத்திட்ட ஆராய்ச்சி, பயிற்றுவிப்புச் சாதனங்களை மேம்படுத்துதல், போன்றவற்றில் இந்த அமைப்பு நாட்டம் செலுத்துவதோடன்றி மாநில மானவர் கல்வித்தர மதிப்பீட்டுப் பிரிவுடனும் நெருங்கி ஒத்துழைக்கும்.

(3) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி வசதிகள்.

8. தமிழ் நாட்டில், ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள் 118 உள்ளன; (மூன்று தொடக்க நிலை ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகள், ஒரு ஆங்கிலோ இந்திய பயிற்சிப் பள்ளி ஆகியவை நீங்கலாக). இவற்றில் 61 பயிற்சிப் பள்ளிகளை அரசும் 57 பயிற்சிப் பள்ளிகளைத் தனியாரும் நடத்தி வருகின்றனர். பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் வேலை பெறுவது சிரமமாகியுள்ள சூழ்நிலையில் ஆசிரியர் பயிற்சிக்கான தற்போதைய வசதிகளைச் சீர்தூக்கிப் பார்ப்பது

[1973 மார்ச் 21

தேவைப்பட்டது. ஆசிரியர்கள் ஏற்கெனவே வேலையின்மைப் பிரச்சினையை எதிர்நோக்கியிருப்பதால் ஆண்டுதோறும் புதிதாகப் பயிற்சி பெற்று வெளிவரும் ஆசிரியர்கள், ஏற்கெனவே கடுமையாகவுள்ள இச்சிக்கலை மேலும் கடுமையாக்கக் கூடாதென்பதே இதன் நோக்கமாகும். எனவே, 1972-73 ஆண்டு பயிற்சிப் பள்ளிகளில் மாணவர்கள் சேர்த்துக் கொள்வதை நிறுத்த வேண்டியிருந்தது. மாநிலத்திலுள்ள பயிற்சிப் பள்ளிகளில் ஒவ்வொரு பிரிவுக்கும் 40 மாணவர்களாக 1972-73-ல் 159 பிரிவுகள் உள்ளன. அவை அனைத்தும் சீனியர் வகுப்பில் பயில்வோர் பிரிவுகளே.

9. பயிற்சிப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேம்படுத்தவும், பணியிலுள்ள ஆசிரியர்கள், துணை ஆய்வாளர்கள் ஆகியோர் தங்கள் தொழில் தகுதிகளை மேம்படுத்திக் கொள்வதற்கான வாய்ப்புகளை ஏற்படுத்தித் தரவும் பள்ளி ஆசிரியர்களிலிருந்தும் துணை ஆய்வாளர்களிலிருந்தும் 10 பேர் 1970-71 ஆம் ஆண்டு முதற்கொண்டு ஒவ்வொரு ஆண்டும் அரசுச் செலவில் எம்.எட். பயிற்சிக்கு அனுப்பப்படுகின்றனர். இத்திட்டம் 1973-74 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயலில் இருக்கும்.

(4) ஆங்கில மொழி கற்பிக்கும் இயக்கம்.

10. தமிழ் நாட்டில் மட்டுந்தான் மூன்றாவது வகுப்பு முதற்கொண்டு, ஆங்கிலம் இரண்டாவது மொழியாகக் கற்பிக்கப் பட்டு வருகிறது.

11. தொடக்கப் பள்ளிகளில் உள்ள ஆங்கில மொழி ஆசிரியர்களுக்குப் பணிக்காலப் பயிற்சி அளிப்பதற்காக பிரிட்டிஷ் கவுன்சிலின் ஒத்துழைப்புடன் விரிவான ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது. கடந்த ஆறு ஆண்டுகளில் 8,000 ஆசிரியர்களுக்கு பாளையங்கோட்டை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், கடலூர் ஆகிய இடங்களில் உள்ள ஆங்கில மொழி கற்பிக்கும் நிலையங்களில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சி முறைகளைத் தவிர கருத்தரங்கங்களும், பணி வகுப்புகளும் அவ்வப்போது நடத்தப் படுகின்றன. பெங்களூரிலுள்ள ஆங்கிலப் படிப்பு வட்டார நிலையத்திற்கு நமது மாநிலத்திலிருந்து 25 பேர் அனுப்பப் படுகின்றனர்.

1973 மார்ச் 21]

12. ஆங்கிலம் கற்பிப்பதைத் தொடக்க நிலையிலிருந்தே வலுப்படுத்தும் நோக்குடன், 1972-73 முதல், மூன்றாம் வகுப்பிலிருந்தே ஆங்கிலத்தை எழுதவும் படிக்கவும் கற்றுத் தரப்படுகிறது. 1972-73 முதல் பாட நூல் நிறுவனம் மூன்றாம் வகுப்பிற்கான ஆங்கில பாட நூலையும் வெளியிட்டது. ஆசிரியர்கள் குறிப்பேடு ஒன்றும் வெளியிடப்பட்டது.

(5) தேர்வுகள்.

13. நாடு முழுவதும் உள்ள கல்வி வல்லுநர்கள், தேர்வு முறையில் உடனடியாக மாற்றம் செய்ய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ளனர். இத்தப் பிரச்சினையில் கல்வி வல்லுநர்களிடையே உருவாகும் கருத்து ஒற்றுமை, தேர்வு முறைகளில் தேவையான சீர்திருத்தங்களைச் செய்வதில் வழிகாட்டியாக அமைய வேண்டும் என்பது அரசின் விருப்பமாகும். தேர்வு முறைகளில் சீர்திருத்தம் செய்வதற்கான அனைத்திந்தியக் குழுக்கள் சிலவற்றின் பரிந்துரைகளும் அரசின் ஆய்வில் உள்ளன. கல்வித் தர ஆய்வு முறைகளை மேம்படுத்து வதற்காக 1971-72 இல் கல்வித்தர ஆய்வு மாநிலப் பிரிவு (State Evaluation Unit) ஒன்று அமைக்கப்பட்டது. பள்ளித் தேர்வுகள் அளவிலும், பொதுத் தேர்வுகள் அளவிலும் தேர்வு முறையில் சீர்திருத்தங்களைச் செய்வதற்கான அடங்கல் திட்டம் ஒன்றை இப்பிரிவு தற்போது தயாரித்து வருகிறது. மாநகரில் 12 பள்ளி களில் சோதனைமுறை அடிப்படையில் மாணவர்களின் திறமையை முழு அளவில் மொத்தமாக மதிப்பீடு செய்வதற்கான திட்டம் ஒன்று, சென்னை மாநகரில் உள்ள 12 பள்ளிகளில் கொண்டு வரப் பட்டது. அம்மை மாவட்டங்களிலுள்ள 200 பள்ளிகளில் இத் திட்டத்தைச் செயலுக்குக் கொண்டு வருவது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

14. தற்போது பள்ளிக் கல்வி இயக்குநர், அரசுத் தேர்வுகளின் ஆணையாளராகவும் பணியாற்றி, சுமார் 22 தேர்வுகள் நடத்துகிறார். இவற்றில் சில, ஆண்டுக்கொரு முறையும் சில ஆண்டுக்கு இரு முறையும் நடத்தப்படுகின்றன.

15. அரசுத் தேர்வுகள் ஆணையாளரால் நடத்தப்படுகின்ற தேர்வுகளிலேயே மிகப் பெரியது எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வு ஆகும். இத் தேர்வு மார்ச் மாதத்தில் சுமார் 1,100 இடங்களிலும்

[1973 மார்ச் 21

அக்டோபரில் சுமார் 180 இடங்களிலும் நடத்தப்படுகிறது. 1971 ஏப்ரலில் 1,93,059 பேர்கள் எழுதியதற்கு மாறாக, 1972 ஏப்ரலில் நடத்தப்பட்ட எஸ்.எஸ்.எல்.சி. தேர்வில் 2,01,950 பேர் எழுதினர். 1971 ஏப்ரலில் நடத்தப்பட்ட இத்தேர்வில் 1,11,823 மாணவர்கள் மட்டுமே தேற, 1972 ஏப்ரலில் நடத்தப்பட்ட தேர்வில் 1,19,122 பேர் தேறினர். தேறியவர்களின் சதவிதம் 1971 ஏப்ரலில் 59.2 சதவிதத்திலிருந்து 1972 ஏப்ரலில் 60.2 சதவிதமாக உயர்ந்துள்ளது. எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளில் இதுவரை ஒரே நாளில் இரண்டு பாடங்களில் அல்லது ஒரு பாடத்தின் இரண்டு பாகங்களில், தேர்வு நடைபெற்று வந்தது. ஆனால், 1973, மார்ச் முதல் ஒரு நாளில் ஒரு பாடத்தில் அல்லது ஒரு பாடத்தின் ஒரு பாகத்தில் மட்டுமே தேர்வு நடைபெறும். 1972, அக்டோபர் மாதத்திலிருந்து அரசுத் தேர்வுகள் ஆணையாளர், எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வுக்கான பணிகளை கிண்டியிலுள்ள மின் கணக்குப் பொறியின் (ஐ.பி.எம். கம்ப்யூட்டர்) மூலம் செய்து வருகிறார். இம்முறை தேர்வுப் பணிகளைச் சீரமைத்துள்ளதுடன் தவறுகளை விலக்கவும் பயன்பட்டு வருகிறது.

(6) சிறப்புப் பள்ளிகள்.

இளஞ்சிறார் பள்ளிகள்—

16. ஐந்து வயதுக்கும் குறைந்த சிறுவர்களுக்கான 40 சிறப்பு இளஞ்சிறார் பள்ளிகள் பெரும்பாலும் நகரங்களில் கல்வித் துறையினால் நடத்தப்படுகின்றன. கிராமப் பகுதிகளில் குழந்தைகள் காப்பகங்கள் ஊராட்சிகளினால் நடத்தப்படுகின்றன.

தொழில் புகுமுகப் பயிற்சி நிலையங்கள்.

17. இந்திய அரசு தொடங்கிய தொழில் புகுமுகப் பயிற்சித் திட்டத்தின் கிழ் தொடக்கப் பள்ளிக்கு மேல் படிக்கவியலாத 11-14 வயதுத் தொகுதியிலுள்ள சிறார்களுக்குப் புகுமுகத் தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது. இம்மாநிலத்தில் 6 நிலையங்கள் இயங்குகின்றன.

உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்கான பள்ளிகள்—

18. உடல் ஊனமுற்ற சிறுவர்களுக்காக தற்போது இம் மாநிலத்தில் 26 பள்ளிகள் செயல்பட்டு வருகின்றன. பார்வை இழந்த சிறுவர்களுக்காக 8 பள்ளிகளும், காது கேட்காத ஊமைச்

1973 மார்ச் 21]

சிறுவர்களுக்காக 10 பள்ளிகளும், கண், காது, வாய் ஊனமுள்ள சிறுவர்களுக்காக 2 பள்ளிகளும் உடல் ஊனமுற்ற சிறுவர் களுக்காக 4 பள்ளிகளும் தொழு நோயால் வருந்தும் சிறுவர்களுக்காக 4 பள்ளிகளும் நடைபெற்று வருகின்றன. இப் பள்ளிகளில் 2,700 மாணவர்கள் தற்போது பயின்று வருகின்றனர்.

19. பூவிருந்தவல்லியில் அமைந்துள்ள கண் பார்வையற்றோர் பள்ளியில் நிறுவப்பட்டுள்ள வட்டார பிரெய்ல் அச்சகம், தென் மாநிலங்கள் நான்கின் தேவையையும் நிறைவு செய்கிறது. இம் மாநிலங்களின் தேவைகளை ஈடு செய்வதற்காக, இந்த நிலையத்தில் வட்டாரப் பயிற்சி நிலையம் ஒன்றும் நடத்தப்பட்டு வருகிறது. இதுவரை 25 ஆசிரியர்கள் இதில் பயிற்சி பெற்றுள்ளனர். 9 ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருகின்றனர்.

குருடர்களுக்கான சிறிய அளவிலான பொறியியல் திட்ட நிலையம் ஒன்று 1967-71 ஆம் ஆண்டுகளில் கிண்டியில் நடத்தப் பட்டது. இந்நிலையம் குருடர்களுக்கு எதேனுமொரு வாழ்க்கைத் தொழிலில் பயிற்சி அளித்தது. இந்நிலையத்தில் 118 பேர் பயிற்சி பெற்றுள்ளனர். இவர்களில் 102 பேருக்கு ஏற்கெனவே வேலை வாய்ப்பு கிடைத்துவிட்டது. 1971-72 முதல் இத்திட்டத்திற்கான முழுச் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொண்டு இத் திட்டத்தினை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது.

சிறுவர் இல்லங்கள்.

20. அனைதைச் சிறுவர்களுக்குக் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்யும் அனைதை இல்லங்களுக்கு, அரசு நிதி உதவி அளிக்கிறது. தற்பொழுது 380 அனைதை இல்லங்கள் அரசு நிதி உதவி பெறுகின்றன. அவற்றுள் 7 இல்லங்கள் 1972-73 முதல் நிதி உதவி பெறுகின்றன. இவற்றின் வாயிலாக கிட்டத்தட்ட 63,000 அனைதைச் சிறுவர்கள் பயன் பெறுகின்றனர்.

முதியோர் கல்வி.

21. 1961 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ் நாட்டில் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் 31.4 சதவிதம் ஆகும். 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்புப்படி இது 39.39 சதவிதமாக உயர்ந்தது. 1971 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி ஆண்களில் 51.68 சதவிதத்தினரும், பெண்களில் 26.83 சதவிதத்தினரும் எழுதப் படிக்கத்

[1973 மார்ச் 21

தெரிந்திருந்தனர். எழுத்தறிவின்மையைப் போக்குவதற்காக 22 முதியோர் கல்வி நிலையங்கள் தற்போது நடத்தப்பட்டு வருகின்றன.

குடியானவர் கல்வி-தொழில் எழுத்தறிவுத் திட்டம் கோயம்புத்தூர் மாவட்டத்தில் உடுமலைப்பேட்டை, பொள்ளாச்சி ஆகிய இடங்களிலும், தஞ்சாவூர் மாவட்டத்தில் தஞ்சை வட்டத்திலும், வட ஆர்க்காடு மாவட்டத்தில் திருவண்ணாமலையிலும், திருநெல்வேலி மாவட்டத்தில் தூத்துக்குடியிலும் நடத்தப்பட்டது. இத்திட்டம், 1972-73 ஆம் ஆண்டில், தென் ஆர்க்காடு மாவட்டத்திலும் கொண்டு வரப்பட்டது.

(7) நூலக இயக்கம்.

22. நூலகச் சட்டம் இயற்றி, நூலக இயக்கத்திற்குத் தொடர்ந்து ஆதரவு அளித்து வரும் ஒரு சில மாநில அரசுகளுள் தமிழ் நாடு அரசும் ஒன்றாகும். தற்போது இம் மாநிலத்தில் மாவட்ட மத்திய நூலகங்கள் 13-ம், கிளை நூலகங்கள் 1,437-ம், புத்தகம் வழங்கும் நிலையங்கள் 1,882-ம் உள்ளன. இயங்கும் நூலகப் பணி, புத்தகங்களை இல்லங்களில் கொண்டு தரும் பணி, சிறுவர்கள், மகளிர் ஆகியோருக்கான நூலகப் பணி, சிறுபயணிகளுக்கான நூலகப் பணி, கைதிகளுக்கான நூலகப் பணி, காவல் துறைப் பணியாளர்களுக்கான நூலகப் பணி, மருத்துவமனை நூலகப் பணி ஆகிய பணிகளை மாவட்ட நூலக மன்றங்கள் செயல்படுத்துகின்றன.

23. நூலக நிதியின் பெரும் பகுதி, வீட்டு வரி அல்லது சொத்து வரி ஆகியவற்றின் மீது விதிக்கப்படும் மேல் கட்டணத்தின் மூலம் வசூலிக்கப்படுகிறது.

1972 ஏப்ரல் முதல் நூலக மேல் கட்டணத்தை ரூபாய்க்கு மூன்று காசிலிருந்து ஐந்து காசாக உயர்த்தி அரசு ஆணை வெளியிட்டுள்ளது. நூலக ஆணைக் குழுக்களின் வருவாயைப் பெருக்குவதற்காக இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு வசூலிக்கப்படும் மேல் கட்டணத்திற்கு இணையான உதவித் தொகை, சென்னை தவிர பிற மாவட்டங்களில் உள்ள மாவட்ட நூலக மன்றங்களுக்கு மானியமாக வழங்கப்படுகிறது. 1972-73 இல் சுமார் ரூ. 28 லட்சம் இணை மானியமாக வழங்கப் பட்டது. 1973-74 முதல் இத்தகைய இணை மானியத்தில்

1973 மார்ச் 21]

25 சதவிதம் புத்தகங்களாக கொடுக்கப்படும். மேலும், ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் தொடங்கப்பட்டுள்ள நூலகங்களுக்காக தனி மானியங்கள் வழங்கப்படுகின்றன. அத்தகைய திட்ட நூலகங்களுக்கு 1972-73 இல் ரூ. 37 லட்சம் வழங்கப் பட்டது. 1973-74 முதல் திட்ட மானியத்தில் 50 சதவிதம் நூல்களாக அரசினால் வழங்கப்படும்.

24. பள்ளிக் கல்வி இயக்குநரே பொது நூலகங்களின் இயக்குநராகவும் 1—8—1972 வரை செயல்பட்டார். இந்த இயக்குத்திற்கு ஊக்கமளிக்கவேண்டி 1—8—1972 முதல் தனியாக பொது நூலகங்கள் இயக்குநர் ஒருவரை அரசு நியமித்துள்ளது.

(8) விளையாட்டுக்களும் உடல்நலக் கல்வியும்.

25. நமது மாநிலத்திலுள்ள கல்வி நிலையங்கள், உடல் நலக் கல்விக்கும் விளையாட்டுகளுக்கும் தொடர்ந்து சிறப்பிடம் அளித்து வருகின்றன. மாவட்ட, மாநில விளையாட்டுப் போட்டிகள் குறித்த காலத்திற்கொருமுறை ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. மாநில விளையாட்டுக் கழகமும், மாவட்ட விளையாட்டுக் கழகங்களும் மாணவர்களிடையே மட்டுமின்றி, பொது மக்களிடையேயும் பந்தயங்களையும், விளையாட்டுக்களையும் நடத்துவதில் பெரும் பங்கு ஆற்றி வருகின்றன. கிராமங்களில் பந்தய விளையாட்டுக்களைப் பிரபலப்படுத்துவதில் நாம் இன்னும் நாட்டம் செலுத்த வேண்டும். இந்த முக்கியமான பணியில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் தங்கள் கவனத்தைச் செலுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

26. மாநில அரசு, மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்களைக் கட்டுவதற்காக, மானியங்கள் வழங்குகிறது. இதுவரையில், திருச்சிராப்பள்ளி, வட ஆர்க்காடு, சேலம், மதுரை, நீலகிரி செங்கற்பட்டு, கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டன. 1973-74 ஆம் ஆண்டிலும் மேலும் இரண்டு மாவட்டங்களில் விளையாட்டு அரங்கங்களைக் கட்டுவதற்காக ரூ. 2 லட்சம் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. இதைத் தவிர சேப்பாக்கம் திடலில் நவீன கிரிக்கெட் விளையாட்டு அரங்கு ஒன்றைக் கட்டுவதற்காக, சென்னை கிரிக்கெட் சங்கத்திற்கு ரூ. 15 லட்சம் சிறப்பு மானியம் வழங்க, தமிழக அரசு இசைந்து ரூ. 12 லட்சம் ஏற்கெனவே வழங்கப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 21

அத்தியாயம் 6.

கல்லூரிக் கல்வி.

1. இம் மாநிலத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் பள்ளி இறுதித் தேர்வு (எஸ்.எஸ்.எல்.சி.) எழுதிய மாணவர்கள், தேர்வில் தேர்ச்சி யடைந்த மாணவர்கள், இம் மாநிலத்திலுள்ள மூன்று பல்கலைக் கழகங்களில் சேர்ந்த மாணவர்கள் எண்ணிக்கை விவரம் கீழே உள்ள புள்ளி விவர அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது :—

	எஸ்.எஸ்.எல்.சி. எழுதிய மாணவர்கள்.	எஸ்.எஸ்.எல்.சி. தேறிய மாணவர்கள்.	கல்லூரியில் சேர்ந்த மாணவர்கள் (புகுமுக வகுப்பில்).	
ஏப்ரல் 1968	1,96,272	98,181	1968–69	60,000
ஏப்ரல் 1969	1,82,829	91,794	1969–70	66,000
மார்ச் 1970	1,91,853	1,03,974	1970–71	70,000
ஏப்ரல் 1971	1,93,059	1,11,823	1971–72	76,814
மார்ச் 1972	2,01,950	1,19,122	1972–73	80,506

2. தேர்ச்சி பெறும் மாணவர்கள் படிப்படியாகப் பெருகி வருவதால் கல்லூரி நிலையில் அவர்களுக்குக் கல்வி வசதியை ஏற் படுத்திக் கொடுக்கும் பொறுப்பு அரசுக்கு ஏற்பட்டு உள்ளது. இதன் காரணமாகக் கடந்த சில ஆண்டுகளில் இம் மாநிலத்தில் கல்லூரிகளின் எண்ணிக்கை மிகுந்துள்ளதோடு கல்லூரிக் கல்விக் கான செலவும் பெருகி வந்துள்ளது.

	கல்லூரிகளின் எண்ணிக்கை (தனியார் கல்லூரிகள் உட்பட).	நிதி ஒதுக்கம் (கட்டிட செலவு உட்பட.) (ரூபாய் லட்சத்தில்.)
1968–69	126	321
1969–70	140	438
1970–71	160	572
1971–72	169	681
1972–73	176	829
1973–74 (எதிர்பார்ப்பது)	182	841

1973 மார்ச் 21]

3. கல்லூரிக் கல்வி இயக்குநர் பொறுப்பில் பல்வேறு துறை களுக்காகச் செலவிடப்படும் தொகை விவரத்தைக் கீழ்க்காணும் புள்ளிவிவரம் காட்டும் :—

	திருத்த மதிப்பீடு, 1972—73.	வரவு-செலவு மதிப்பீடு, 1973—74.
	(ரூபாய் லட்சத்தில்.)	
1. இயக்குநரகம் —	8	9
2. பல்கலைக் கழகங்களுக்கு மானியங்கள்.	91	80
3. இப்போதுள்ள கலை, அறிவியல் கல்லூரிகளை நடத்துதல்—		
(அ) அரசு ..	428	487
(ஆ) தனியார் ..	346	351
4. இப்போதுள்ள பயிற்சிக் கல்லூரிகளை நடத்துதல்—		
(அ) அரசு ..	26	25
(ஆ) தனியார் ..	10	9
5. சட்டக் கல்லூரி ..	9	8
6. இப்போதுள்ள தனி நிறுவனங்கள்—		
(அ) அரசு ..	2	2
(ஆ) தனியார் ..	4	5
7. புதிய கல்லூரிகளையும், பாட முறைகளையும் தொடங்குதல்—		
(அ) அரசு ..	..	43 லட்சம் பிற இனங்களில் சேர்க்கப்பட்டுள்ளது.
(ஆ) தனியார் ..	..	
8. படிப்பு உதவிப் பணங்கள் முதலியவை.	184	146
9. பல்வகை	6	6
மொத்தம் ..	1,114	1,128

மானிய உதவிபெறும் கல்லூரிகள்.

4. கல்லூரிக் கல்விக்காக 1972-73 வரவு-செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட சுமார் ரூ. 11 கோடியில், ரூ. 3 கோடிக்கும் மேலாக, தனியார் கல்லூரி மானிய உதவிக்கே செலவிடப்பட்டது.

தற்போது கல்லூரிகளில் பயிலும் மாணவரில் பெரும் பகுதியினர் மானிய உதவி பெறும் தனியார் கல்லூரிகளில் பயின்று வருகின்றனர். கடந்த ஐந்தாண்டுகளில் இதுபற்றிய புள்ளிவிவரங்கள் பின்வருமாறு :—

	அரசு கல்லூரிகள்.		மானிய உதவி பெறும் கல்லூரிகள்.		மொத்தம்.	
	எண்ணிக்கை.	மாணவர் எண்ணிக்கை லட்சத்தில்.	எண்ணிக்கை.	மாணவர் எண்ணிக்கை லட்சத்தில்.	எண்ணிக்கை.	மாணவர் எண்ணிக்கை லட்சத்தில்.
	(1)	(2)	(3)	(4)	(5)	(6)
1968—69	33	0·28	93	1·02	124	1.30
1969—70	39	0·34	101	1·19	140	1·53
1970—71	43	0·38	117	1·26	160	1·64
1971—72	46	0·46	123	1·37	169	1.83
1972—73	49	0·52	127	1·45	176	1·97

5. அரசிடமிருந்து மானிய உதவி பெறும் தனியார் கல்லூரிகளின் எண்ணிக்கை 1968-69-ல் 93 ஆக இருந்தது, 1972-73-ல் 127 ஆக உயர்ந்துள்ளதைக் காணலாம். மாநில அரசு நிதியிலிருந்து தனியார் புகுமுக கல்லூரிக்கு மானியம் அளிப்பதாயின் ஆண்டொன்றுக்கு ரூ. 50,000-மும் பட்ட வகுப்புக் கல்லூரிக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 1 லட்சமும் செலவாகும். கல்லூரியின் ஆண்டு நிகரப் பற்றாக்குறையில் 80 விழுக்காடு என்ற விகத்திலும் புகுமுக வகுப்புக் கட்டண இழப்பீடாக ஒவ்வொரு மாணவருக்கும் ரூ. 240 என்ற அடிப்படையிலும் மானியம் கணக்கிடப்படுகிறது.

தனியார் கல்லூரிகள் மேலும் மேலும் திறக்கப்பட்டதால் உதவி மானியச் செலவு மிகுந்துள்ளதைக் கீழ்க்காணும் புள்ளிவிவரங்கள் காட்டும் :—

		உதவி மானியங்கள். (ரூ. லட்சத்தில்.)
1967—68	.. .. ..	134
1968—69	.. .. ..	187
1969—70	.. .. ..	236
1970—71	.. .. ..	255
1971—72	.. .. ..	329
1972—73	(திருத்த மதிப்பீடு) ..	360
1973—74	(வ.செ. மதிப்பீடு) ..	365

6. 1973-74-ஆம் ஆண்டில், மாநில நிதியிலிருந்து மேற் கொண்டும் நான்கு புதிய கல்லூரிகளுக்கு மானிய உதவி அளிக்க திட்டமிடப்பட்டுள்ளது. ஆனால், இந்தக் கல்லூரிகள் பல்கலைக் கழகங்களிடமிருந்து ஏற்பளிப்பு பெறவேண்டும். பல்கலைக் கழக இசைவுடன் கல்லூரிகளில் தொடங்கப்படும் புதிய பாட முறைகளுக்கும் மாநில அரசு நிதி உதவி கிடைக்கும். மானிய உதவியைக் கணக்கிடுகையில் அரசுக் கல்லூரி ஆசிரியர்களுடைய சம்பள விதங்கள், படிகள் ஆகியவற்றின் அடிப்படையிலேயே மானிய உதவிபெறும் தனியார் கல்லூரி ஆசிரியர்களுக்கும் கணக்கிடப் பட்டு வழங்கப்படுகின்றன. பட்ட மேற்படிப்புக் கல்லூரி முதல்வருக்குரிய ரூ. 1,000-50-1,400 சம்பள விதமும் போராசிரியர்க்குரிய ரூ. 800-40-1,000-50-1,250 சம்பள விதமும் மானிய உதவி பெறும் தனியார் கல்லூரி முதல்வருக்கும், போராசிரியர்க்கும் இனி வழங்கப்படும். தனியார் கல்லூரிகளில் இந்தப் பதவிகளுக்கு தற்போதுள்ள சம்பள விதங்கள் முறையே ரூ. 900-50-1,300-மும் ரூ. 600-40-1,000-மும் ஆகும்.

அரசுக் கல்லூரிகள்.

7. கடந்த ஐந்தாண்டுகளில் அரசுக் கல்லூரிகள் எண்ணிக் கையின் வளர்ச்சியை மேலே 4-ம் பத்தியில் காணலாம்.

[1973 மார்ச் 21

8. அரசுக் கல்லூரிகளின் எண்ணிக்கை, தனியார் கல்லூரிகள் எண்ணிக்கையில் பாதிக்கும் குறைவு; மாணவர்கள் எண்ணிக்கையும் பாதிக்கும் குறைவு. இவ்வாறு இருந்த போதிலும், அரசுக் கல்லூரிகள் அரசின் சமுதாய நலப் பணிகளின் முக்கிய உறுப்பென்பதை உணர வேண்டும். சமுதாயம், பொருளாதாரம். படிப்பு ஆகியவற்றில் பிற்படுத்தப்பட்டவர்களால் தனியார் நிறுவனங்களில் சேர்ந்து படிப்பதற்கு ஆகும் செலவை எற்க இயலாது. அவர்களுக்கும் பள்ளி நிலைமைத் தாண்டிக் கல்லூரிப் படிப்பைத் தொடருவதற்கு அரசுக் கல்லூரிகள் உதவுகின்றன. தனியார் கல்லூரிகளிலும், அரசுக் கல்லூரிகளிலும் பல்வேறு பாடமுறை மாணவர்கள் தர வேண்டிய கட்டணங்களை ஒப்பிட்டால் இது புலனாகும்.

	ஒவ்வொரு தவணைக் காலத்திற்குரிய கட்டணங்கள்.	
	தனியார் கல்லூரிகள்.	அரசுக் கல்லூரிகள்.
(1)	(2)	(3)
பி.எ.	கல்லூரிக்குக் கல்லூரி மாறுபடுகிறது. (ரூ. 61 முதல் ரூ. 130 வரை).	ரூ. 61
பி. எஸ். சி.	ஷை	ரூ. 61
பி. காம்.	ஷை	ரூ. 61

மேற்கண்ட கட்டணங்களுக்கும் மேலாகச் சில தனியார் கல்லூரிகளில் வசூலிக்கப்படும் தனிக் கட்டணங்கள், மாணவர் சேர்க்கைக் கட்டணங்கள் போன்றவற்றை ஒதுக்கிவிட்டுப் பார்த்தாலும், தனியார் கல்லூரிக் கட்டணங்கள் அதிகமென்பது வெளிப்படை. கல்லூரிக் கல்வியை வேறு வகையில் பெற இயலாத மக்களுக்கு அரசுக் கல்லூரிகள் சிறந்தவொரு சாதனமாக அமைந்துள்ளமையால் அவை மக்களாட்சி அமைப்புடைய நம் சமுதாயத்தில் முக்கியமான பணி ஆற்றுகின்றன.

9. இம்மாநிலத்தில் 1972–73-ல் அரசுக் கல்லூரி மாணவருக்கு ஆகும் செலவைவிட கட்டண வருவாய் மிகக் குறைவு

1973 மார்ச் 21]

என்பதிலிருந்து அரசு அவர்களுக்கு எந்த அளவுக்கு மறை முகமாக உதவித் தொகை அளிக்கிறது என்பது தெளிவாகும்.

	கல்லூரி புகுமுக வகுப்பு.		பட்ட வகுப்பு.		பட்ட மேற்படிப்பு.	
	கலை.	அறிவியல்.	கலை.	அறிவியல்.	கலை.	அறிவியல்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
(ஆண்டொன்றுக்கு) ஒரு மாணவருக்கு ஆகும் செலவு.	300	500	410	600	775	1120
(ஆண்டொன்றுக்கு) ஒவ்வொரு மாணவரிட மிருந்துகிடைக்கும் கட்டணம்.	..		183	183	அரசுக் கல்லூரிகளில் ரூ. 250. தனியார் கல்லூரிகளில் ரூ. 300 லிருந்து 360 வரை.	

10. 1973–74-ல் மேலும் இரு அரசுக் கல்லூரிகள் திறக்கப்பட இருக்கின்றன. பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படும் மாணவர் எண்ணிக்கை உயர உயர, பட்ட வகுப்பு களில் சேர்த்துக் கொள்ளப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை உயர்ந்துள்ளது. அரசுக் கல்லூரிகளில் தொடங்கப்பட்ட கூடுதலான, புதிய பட்டப்பாடமுறைகள் 1969–70-ல் 15 ; 1970–71-ல் 8 ; 1971–72-ல் 15 : 1972–73-ல் 24 ஆகும். 1968–69-ல் அனைத்துக் கல்லூரிகளிலும் (அரசுக் கல்லூரிகள் தனியார் கல்லூரிகள்) பட்ட வகுப்பு மாணவர் எண்ணிக்கை 66,000. அது 1972–73-ல் 1,10,400 ஆக உயர்ந்தது. பல்கலைக் கழக ஏற்பு பெற்று 1973–74-ல் சில கல்லூரிகளில் கூடுதலான பாட முறைகளும் தொடங்கப்படும். இப்போதுள்ள கல்லூரிகளில் கூடுதலான கட்டிடங்கள் கட்ட 1973—74-ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் சுமார் 138 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. 1968—69-ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசுக் கல்லூரிகளில் ஒன்பது பட்ட மேற்படிப்பு வகுப்புகள் தொடங்கப் பட்டன. அரசுக் கல்லூரிகள், தனியார் கல்லூரிகள் ஆக அனைத்துக் கல்லூரிகளிலும் 1968–69-ல் பட்ட மேற்படிப்பு வகுப்பு மாணவர்கள் 3,600 பேர் இருந்தனர். 1972–73-ல் 6,700 பேர் இருந்தனர். பல்கலைக் கழக ஏற்புடன் 1973–74-ல் மேலும் சில பட்ட மேற்படிப்புப் பாட முறைகளும் தொடங்கப்படும்.

தொடர் கல்வி.

11. குறிப்பிட்ட காலம் பயின்ற பின் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்திடல் வேண்டும் என்னும் பழங்கொள்கை இப்பொழுது ஏற்புடைத்தல்ல. படிப்பை நிறுத்திவிட்ட எவரும் நிறுத்திவிட்ட எந்த நிலைக்கும் மேலாக மீண்டும் தொடர்ந்து படிக்கும் வாய்ப்பை அனைவருக்கும் தர வேண்டும் என்பதும், வேலையில் உள்ளவர்கள் பகுதி நேரங்களில் மாலைக் கல்லூரியில் அல்லது அஞ்சல் முறை மூலம் தொடர்ந்து பயில வசதி செய்ய வேண்டும் என்பதுமே தற்போதைய கொள்கைகளாகும். முதன் முதலாக 1965–66-ல் மூன்று அரசுக் கல்லூரிகளிலும், இரு தனியார் கல்லூரிகளிலும் மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டன. 1972–73-ல் 34 கல்லூரிகளில் (19 அரசுக் கல்லூரிகள், 15 தனியார் கல்லூரிகள்) மாலை நேர வகுப்புகள் நடத்தப்பட்டன. அவற்றில் 8,800 மாணவர்கள் பயின்றனர். இன்னும் சில அரசுக் கல்லூரிகளில் 1973–74-ல் மாலை நேர வகுப்புகள் தொடங்கப்படும்.

12. மதுரைப் பல்கலைக் கழக பி.எ. பட்டப் படிப்புக்கு அஞ்சல் வகுப்பு ஒன்றைத் தொடங்குவதற்காக அக்கழகத்திற்கு ரூ. 1 லட்சம் வழங்க அரசு இசைந்தது. இந்த அஞ்சல் வகுப்பு நன்கு நடைபெற்று வருகிறது. அதில் பயிலும் மாணவர்கள் 1973 ஏப்ரலில் மதுரைப் பல்கலைக் கழக பி.எ. பட்டத் தேர்வு எழுதுவர்.

கல்லூரி ஆசிரியர்களின் தகுதி வளர்ச்சி.

13. கல்லூரி ஆசிரியர்களின் ஊதிய விகிதங்களில் கணிசமான உயர்வுக்கு இரண்டாவது சம்பள ஆணைக்குழு வகை செய்துள்ளது. கல்லூரிகளில் ஆசிரியர் தொழிலுக்கு திறமையும் தகுதியும் உள்ளவர்கள் பெருமளவில் முன்வருவதற்கு இது தூண்டுகோலாக உள்ளது. 1972–73-ல் சாதாரண பேராசிரியர்களை விட உயர்ந்த சம்பள விதத்தில் அரசுக் கல்லூரிகளில் முதல் நிலைப் பேராசிரியர் பதவிகள் 29 ஏற்படுத்தப்பட்டுள்ளன. இப்பதவிகளில் 50 விழுக்காட்டிற்கு, டாக்டர் பட்டம் பெற்றவர்கள் நேரடித் தேர்வு மூலம் நியமிக்கப்படுவர். ஏற்கனவே பணி செய்யும் பேராசிரியர்கள் முதல் நிலைப் பதவிக்கு பதவி உயர்வு பெற வேண்டுமாயின், டாக்டர் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அரசுக் கல்லூரி ஆசிரியர் பதவிகளுக்குத் திறன் மிக்கவர்களை ஈர்ப்பதற்கு மற்றொரு ஏற்பாடாக, 1973–74-லிருந்து டாக்டர் பட்டம் பெற்றவர் அனைவருக்கும் சிறப்புச் சம்பளம் கொடுக்கப்படும்.

14. பல்கலைக் கழகங்கள் தம் ஆசிரியர்களுக்கு உயர்தர சம்பள விதங்களைக் கொடுக்க வகை செய்து ஆண்டுதோறும் பல்கலைக் கழகங்களுக்கு அளிக்கப்படும் மொத்த மானியங்களை கடந்த ஆண்டு முதல் அரசு உயர்த்தியுள்ளது. சென்னை பல்கலைக் கழகத்திற்கு கொடுக்கும் மானியம் ரூ. 21.50 லட்சத்திலிருந்து ரூ. 29 லட்சமாகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு கொடுக்கும் மானியம் ரூ. 14.11 லட்சத்திலிருந்து ரூ. 23.59 லட்சமாகவும் உயர்த்தப்பட்டன. மதுரைப் பல்கலைக் கழகத்துக்கு ஆண்டுக்கு ரூ. 9 லட்சம் தரப்படுகிறது. பல்கலைக் கழக மானியக் குழு, அனைத்திந்தியக் கல்லூரி தொழில் நுட்பக் கல்விக் குழு ஆகியவை பரிவுரைத்த சம்பள விதங்களை நடைமுறைப்படுத்தவும் தமிழ்நாட்டு இரண்டாம் சம்பள ஆணைக்குழு பரிவுரை செய்த அகவிலைப்படி மற்ற படிகளையும் கொடுத்திடவும் பல்கலைக் கழகங்களுக்கு உதவுவதே மேற்கண்டவாறு உதவித் தொகை மானியத்தை கூட்டியதன் நோக்கமாகும்.

படிப்புதவிப் பணங்களும், பயிற்சி உதவிப் பணங்களும்.

15. "இலவசக் கல்லூரிப் புகுமுகக் கல்வித் திட்டம்" 1969–70-ல் தொடங்கப்பட்டது. அதிலிருந்து (அரசுக் கல்லூரியிலாயினும் தனியார் கல்லூரியிலாயினும்) மாணவர் எவரும் கல்விக் கட்டணம் கட்டத் தேவையில்லை. இது இம் மாநிலத்தில் கல்லூரிப் புகுமுக வகுப்பு மாணவர் 80,000 பேருக்கும் ஆளுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ. 240 படிப்பு உதவிப்பணம் கொடுப்பதற்கு ஈடாகும். இதனால் அரசுக்கு ஆண்டுதோறும் சுமார் ரூ. 2 கோடி செலவாகிறது.

16. இதைத் தவிர (மானிய உதவிபெறும் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகள் இவ்விரண்டிலும்) பி.எ., பி.எஸ்.சி. வகுப்புகளில் தமிழ்ப் பயிற்றுமொழி மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 180 பயிற்சி உதவிப் பணமாகவும், பல்கலைக் கழகப் புகுமுக வகுப்பில் தமிழில் பயிலும் மாணவருக்கு ஆண்டுக்கு ரூ. 50 புத்தகப் படியாகவும் கிடைக்கிறது. இவ்விரு திட்டங்களினால் அரசுக்கு ஆண்டுதோறும் ரூ. 40 லட்சம் செலவாகிறது. இவையன்றி, பலவகையான படிப்புதவிப் பணமளிப்பு, பயிற்சி உதவிப் பணமளிப்புத் திட்டங்களும் உள்ளன; அவற்றில் முக்கியமானவை பின் வருமாறு :—

[1973 மார்ச் 21

திட்டம்.	ஒதுக்கப்பட்ட புதிய படிப்பு உதவித் தொகைகளின் எண்ணிக்கை.		மொத்தம் அனுமதிக்கப்பட்ட படிப்பு உதவித் தொகைகளின் எண்ணிக்கை.	
	1971–72.	1972–73.	1971–72.	1972–73.
தேசிய படிப்புதவிப் பணத் திட்டம்.	577	700	2,704	2,994
ஆசிரியர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் தேசிய படிப்புதவிப் பணம்.	48	47	273	249
தேசிய கடன் படிப்பு உதவிப் பணத் திட்டம.	1,502	1,499	5,136	6,999

உடல் ஊனமுற்றோருக்கும், போர்ப்படையினர், விடுதலைப் போராட்ட வீரர்கள், பர்மிய அகதிகள், இலங்கை அகதிகள் ஆகியோரது பிள்ளைகளுக்கும் அளிக்கப்படும் படிப்புதவித் தொகைத் திட்டங்களும் உள்ளன. அரிசன மாணவர்களும், பழங்குடி மாணவர்களும், பின் தங்கிய வகுப்பைச் சேர்ந்த மாணவர்களும், அரிசன நலத் துறை, பின்தங்கிய வகுப்பினர் நலத் துறை இயக்குநர்கள் நிர்வகித்து வரும் நிதிகளிலிருந்து படிப்புதவிப் பணம் பெற்று வருகின்றனர்.

17. இத்தகைய படிப்புதவித் தொகைத் திட்டங்களில் கல்லூரிக் கல்வி இயக்குநர் பொறுப்பில் உள்ளவற்றுக்கு மட்டும் 1973–74 ஆம் ஆண்டு நிதி ஒதுக்கீடு ரூ. 145 லட்சம் ஆகும். இத்தகைய பல்வேறு படிப்புதவித் தொகைத் திட்டங்களைப் பற்றி ஆழ்ந்து ஆராய்ந்தறிந்து 1974–75-லிருந்து தொடங்கும் ஐந்தாவது திட்டக் காலத்தில் அவற்றை நன்கு சீரமைத்து விரிவாக்கக் கருதப் பட்டுள்ளது.

தமிழ்ப் பாட மொழியில் கல்லூரிப் பாட நூல்கள்.

18. தமிழ் நாடு பாடநூல் நிறுவனம் கல்லூரி மாணவர் களுக்காக இது வரையில் 457 புத்தகங்களை வெளியிட்டுள்ளது. தற்போது 50 நூல்கள் அச்சில் உள்ளன. நாடு முழுவதும் இந்தி உட்பட எல்லா வட்டார மொழிகளிலும் 1971 டிசம்பர் 31 முடிய வெளியிடப்பட்ட கல்லூரிப் பாட நூல்கள் 652 மட்டுமே. இதனோடு

1973 மார்ச் 21]

ஒப்பிட்டால் தமிழ் நாட்டுச் சாதனை குறிப்பிடத்தக்கதாகும். மேலும் 546 புத்தகங்களை எழுத பாட நூல் நிறுவனம் ஏற்பாடு செய்துள்ளது. இந்நிறுவனம் இதுவரை வெளியிட்டுள்ள நூல்களுள், 328 மூல நூல்களாகும். 129 மொழி பெயர்ப்புக் களாகும்.

தேசிய மாணவர் படை.

19. இம்மாநிலத்தில் தேசிய மாணவர் படையில் 51 முதுநிலை பிரிவுகளும் (30,875 மாணவர்), 708 இளநிலைப் பிரிவுகளும் (69,500 மாணவர்) உள்ளன இவற்றில மாணவிகள் முதுநிலைப் பிரிவுகள் ஐந்தும் (3,000 மாணவியர்), இளநிலைப் பிரிவுகள் 57-ம் (5,700 மாணவியர்) அடங்கும். இளநிலைப் பிரிவுகளுக்கான பகுதி நேர அதிகாரிகளுக்கு அளிக்கப்படும் ஊதியம் 1973–74 முதல் அனைத்திந்திய விகிதத்தையொட்டி மாதம் ரூ. 35-லிருந்து ரூ. 50 உயர்த்தப்படும். 1973 சனவரியில் புது டில்லியில் நடைபெற்ற குடியரசு நாள் விழா அணிவகுப்பில் கலந்து கொண்ட தமிழ்நாடு தேசிய மாணவர் படைக்குழு முதன்மையானது என்று தீர்ப்பளிக்கப்பட்டு, அகில இந்திய வெற்றிக்கொடி பெற்றது. இச்சிறப்பை அக்குழு பெற்றது மூன்றாவது தடவையாகும்.

சட்டக் கல்லூரி.

20. சட்டக் கல்லூரி மாணவரின் எண்ணிக்கை 1966–67-ல் 1,045 ஆக இருந்தது. 1972–73-ல் சுமார் 2,500 ஆக உயர்ந்துள்ளது. சட்டப் படிப்பில் சேர்வதற்கான ஆர்வத்தை நிறைவேற்றும் வகையில் 1966–67-ல் மாலை நேர வகுப்புகள் தொடங்கப்பட்டன. 1972–73-ல் மாலை நேர வகுப்பு மாணவரது எண்ணிக்கை 660 ஆகும். சட்ட மேற்படிப்பு (எம்.எல்.) வகுப்புகள் 1969–70-ல் தொடங்கப் பட்டன. தற்போது இந்த வகுப்புகளில் சுமார் 40 மாணவர் உள்ளனர்.

21. சட்டக் கல்லூரி மாணவர் பழைய விடுதி 220 மாணவருக்கு இடமளித்தது. சட்டக் கல்லூரியில் மாணவர் எண்ணிக்கை பெருகுவதால் மிகுதியான விடுதி வசதிகள் தேவைப்படுவதால் மேலும் 248 மாணவருக்கு விடுதி வசதியளித்திட ரூ. 12 லட்சம் செலவில் புதிய விடுதி கட்டுவதற்கும் அரசு அனுமதி வழங்கி யுள்ளது.

[1973 மார்ச் 21

அத்தியாயம் 7

தொழில் நுட்பக் கல்வி

(1) நிதி ஒதுக்கீடு.

இம்மாநிலத்தில் மாநில அரசின் செயல்வரம்பிற்குள் உள்ள பொறியியல் கல்லூரிகள் 7, பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் 36 தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் 14. இவற்றில் 1972–73-ல் இருந்த இடங்கள், சேர்ந்த மாணவர்களின் எண்ணிக்கை ஆகியவை வருமாறு :—

	அனுமதிக்கப்பட்ட இடங்கள்.	சேர்ந்தோர் தொகை.
பொறியியல் கல்லூரிகள்	1,570	1,578
பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் ..	4,730	5,083
தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்.	840	768

நம் நாட்டில் தற்போதுள்ள தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களே வரும் சில ஆண்டுகளின் தேவைக்குப் போதுமானவை என்ற கருத்தில், தற்போதுள்ள தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களைப் பெருக்க வேண்டிய தேவையில்லையென்று அனைத்திந்திய முடிவு எடுக்கப்பட்டதனால், 1966 ஆம் ஆண்டிலிருந்து இந்தத் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் சேர அனுமதிக்கப்பட்ட மாணவர் தொகை உயர்த்தப்படவில்லை.

2. ஆனால் இதனால் இம்மாநிலத்தில், இக்கல்வி நிறுவனங்களின் வளர்ச்சி, சிறந்த சாதனங்கள், கட்டிடங்கள், துறை வளர்ச்சி ஆகியவற்றைப் பொறுத்தவரையில், வளர்ச்சி ஏற்படவில்லை என்பது பொருள் அல்ல. கடந்த சில ஆண்டுகளில் தொழில் நுட்பக் கல்விக்காக செய்யப்பட்ட கூடுதல் நிதி ஒதுக்கீடுகள் இதைக் காட்டும்.

	(ரூபாய் லட்சத்தில்.
1971–72	*550*
1972–73	*637*
1973–74	*669*

1973 மார்ச் 21]

3. இந்நிதி ஒதுக்கீடு எவ்வாறு தொழில் நுட்பக் கல்வியின் பல்வேறு கூறுகளுக்குச் செலவிடப்படுகின்றது என்பதைக் காண்க :—

	திருத்த மதிப்பீடு 1972–73.	வ.செ. மதிப்பீடு 1973–74.
	(ரூபாய் லட்சத்தில்.)	
1. இயக்குநரகம்	18	19
2. பொறியியல் கல்லூரிகள்—		
(அ) அரசு	148	155
(ஆ) தனியார்	37	37
3. பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளும் சிறப்பு பட்டயப் படிப்பு நிலையங்களும்—		
(அ) அரசு	111	119
(ஆ) தனியார்	60	55
4. தொழில்நுட்ப உயர்நிலைப் பள்ளிகள்—		
(அ) அரசு	20	16
(ஆ) தனியார்	4	4
5. வட்டாரப் பொறியியல் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.	15	15
6. மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகை, பயிற்சி உதவிப் பணம், கடன்கள்.	17	21
7. தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (தொழிலாளர் நலத் துறை.)	194	212
8. தேர்வுகள்—		
(அ) பல்தொழில் பயிற்சிப் பள்ளித் தேர்வுகள்.	5	5
(ஆ) வணிகவியல் தேர்வுகள்.	7	7
	637	669

(2) உதவி பெறும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள்.

4. இம்மாநிலத்திலுள்ள தனியார் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு (பொறியியல் கல்லூரிகள் 3, பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள் 17, தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் 3). கடந்த சில ஆண்டுகளில் இவற்றுக்கு வழங்கப்பட்ட உதவி மானியம் 1968–69-ல் சுமார் ரூ. 68 லட்சமாக இருந்தது 1973–74-ல் ரூ. 96 லட்சமாக உயரும்.

5. இந்த மானியச் செலவு, தொழிற்பயிற்சி பள்ளிகள் தனிர தொழில் நுட்பக் கல்விக்கான மொத்தச் செலவில் சுமார் 20 விழுக்காடாகும். இச்செலவு உயர்ந்துள்ளதற்குக் காரணங்கள்: பணியாளருக்கு இரண்டாவது சம்பள ஆணைக்குழுவின் பரிவுரைகளைச் செயல்படுத்தியது, புதிய பாடத் திட்டங்களுக்கும் புதிய கட்டிடங்கள், சாதனங்கள் முதலியவற்றிற்கும் உதவி மானியங்களை வழங்கியது, உதவி மானியத்தின் அளவை 1970–71-ல் 66-2/3 சதவிகிதத்திலிருந்து 75 சதவிகிதமாகவும், 1971–72-ல் 85 சதவிதமாகவும், உயர்த்தியது ஆகியவையாகும்.

6. தனியார் பொறியியல் கல்லூரிகளில் கடந்த சில ஆண்டுகளில் தொடங்கப்பட்டுள்ள சிறப்புப் பொறியியல் பிரிவுகள் புதிய பல்கிறப் பாடமுறைகள் ஆகியவை பின்வருமாறு :—

(1) கட்டுமானப் பொறியியல், மின்சார ஏற்பாடுகள் பொறியியல் ஆகியவற்றில் பட்ட மேற்படிப்பு.

(2) செய்முறை அறிவியல் (Applied Science) முதலியவற்றில் பட்டப் படிப்பு.

கடந்த சில ஆண்டுகளில் தனியார் பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் தொடங்கப்பட்டுள்ள சிறப்புப் பயிற்சி வகுப்புகள் வணிகவியல் பயிற்சி, வேளாண்மைப் பொறியியல் முதலியன வாகும்.

7. தொழில் நுட்பக் கல்வி ஆசிரியர் நியமனம் குறித்த அனைத்திந்திய கோட்பாடுகளை ஒட்டி சரியான ஆசிரியர்-மாணவர் விகிதத்தைச் செயல்படுத்தல், சிறப்புப் பாடங்களை அவ்வப் பாடங்களில் சிறப்புத் தேர்ச்சி பெற்றவர்களே கற்றுத்தர ஏற்பாடு செய்தல், ஆகிய காரணங்களுக்காக கடந்த, சில ஆண்டுகளில் தனியார் தொழில் கல்வி நிலையங்களில் கூடுதல் ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

8. தனியார் தொழில் நுட்பக் கல்வி நிலையங்களில் படிக்கும் மாணவர்களுக்காக ஆகும் செலவில் பெரும் பகுதியை அரசே ஏற்கிறது என்பதைப் பின்வரும் விவரங்கள் காட்டும் :—

(1)	ஒரு மாணவருக்கு முழுவதும் ஆகும் செலவு. (2)	பயிற்சி முழுவதற்கும் கட்டணம். (3)	பெற்றோர் மானியம். (4)	அரசு அம்மாணவரிடத்தில் ஏற்கும் பங்கு. (5)	
	ரூ.	ரூ.	ரூ.	ரூ.	
பொறியியல் கல்லூரி.	8,530	2,000	6,530	5,22480	விழுக்காடு,.
பல்தொழிற் பள்ளி.	3,160	480	2,680	2,144	,,
தொழில் நுட்ப உயர் நிலைப்பள்ளி.	1,700	30	1,670	1,670	(முழுவதும்).

(3) அரசினர் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள்.

9. அரசினர் பொறியியல் கல்லூரிகள், பல்தொழில் பயிற்சிப் பள்ளிகள், தொழில் நுட்ப உயர்நிலைப் பள்ளிகள் ஆகியவற்றில் தற்போது சேர அனுமதிக்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை முறையே 1,827, 5,526, 840 ஆகும்.

10. கடந்த சில ஆண்டுகளில் அரசினர் பொறியியல் கல்லூரிகளில் தொடங்கப்பட்ட சிறப்புப் பயிற்சிக்கான பிரிவுகளில் தலையானவை கீழே தரப்பட்டுள்ளன. இவ்வகுப்புகளில் புதிய தொழில் நுட்ப அறிவு புகட்டப்படுகின்றது. அதனால் இவ்வகுப்புகளில் பயிலும் மாணவர்கள் புதிய தொழில் வளர்ச்சிக்கு உரிய தொழில் நுட்பங்களை அறிய முடிகின்றது.

(1) கட்டுமானப் பொறியியல், இயந்திர அமைப்பு, செயல் முறை, மின் அணுவியல், செயல் முறைக்கணிதம், பொறியியல் வடிவமைப்பு முதலியவற்றில் பட்ட மேற்படிப்பு.

(2) மின் அணு செய்தித் தொடர்புப் பொறியியல், செய்முறை அறிவியல் ஆகியவற்றில் பட்டப்படிப்பு.

1973-74-ல் பின்வரும் புதிய பாடப் பிரிவுகளைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது :—

(1) தொழிற்சாலைப் பொறியியலில் பட்டமேற்படிப்பு.

(2) மின் வேதியியல் பொறியியலில் பட்டமேற்படிப்புப் பட்டய வகுப்பு.

(3) வேதியியல் பொறியியலில் பட்ட வகுப்பு.

11. நம்முடைய பொறியியல் கல்லூரிகளில் உள்ள பாடப்பிரிவுகளின் வளர்ச்சிக்கான, தொழில் நுட்பக் கல்விக்கான அனைத்திந்திய குழு கூறும் பணியாளர் நியமன அமைப்பிற்கு ஏற்ப, 20 பேராசிரியர்கள், 25 உதவிப் பேராசிரியர்கள், 67 விரிவுரையாளர்கள் ஆகியோர் கடந்த ஐந்து ஆண்டுகளில் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்

12. பல்தொழில் பயிற்சிப் பள்ளிகளில் கடந்த ஐந்தாண்டுகளில் பின்வரும் பல்திறப்பாட வகுப்புகள் தொடங்கப்பட்டன. அவை ஒப்பனைப் பொருளியல் (Cosemetalogy) சொட்டு தயாரிப்பு, தோட்டக்கலை, பற்றவைப்புத் தொழில் நுட்பவியல், பிராஸ்தெடிக்ஸ் (Prosthetics) ஆர்தெடிக்ஸ் (Orthetics) முதலியனவாகும்.

1973-74 ஆம் ஆண்டில் தொடங்கவிருக்கும் புதிய பல்தொழிற் பாடமுறைகள், விமானப் பொறியியல், ரப்பர் தொழில் நுட்பவியல், பாற்பண்ணை பொறியியல், பெட்ரோ கெமிகல் தொழில் நுட்பவியல், புள்ளி விவரம் தொகுத்தல் (Data processing) மருந்தாக்கவியல் ஆகியவையாகும்.

13. தொழில் நுட்பத் தேர்ச்சி பெற்ற பணியாளர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கென மாணவர்களுக்குக் கணிசமான அளவு

1973 மார்ச் 21]

உதவித் தொகை கொடுக்கப்படவேண்டியுள்ளது என்பதைப் பின் வரும் புள்ளி விவரங்கள் காட்டும் :—

	பயிற்சி முடிவு வதற்கும் மாணவர் ஒருவருக்கு ஆகும் செலவு.		மாணவர் தரும் கல்வி கட்டணம்.
	அரசு	தனியார்	
கல்லூரிகள் ..	8,600	8,530	2,000
பல்தொழில் பயிற்சி பள்ளிகள்.	2,590	3,160	480
தொழில் நுட்ப உயர் நிலை பள்ளிகள்.	2,100	1,700	30

(4) ஆசிரியர் கல்வித் தர வளர்ச்சி.

14. 1972-73-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட உரையில் முதலமைச்சர் அறிவித்தபடி, தமிழ்நாடு உயர்பணிகள் உதவித் தொகைத் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குறித்து, வெளிநாட்டுப் பல்கலைக் கழகங்களில் பணியாற்றும் நமது அறிஞர்கள், விஞ்ஞானிகளிடையே விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டத்தில் பங்கு பெற இசைந்துள்ள அறிவியலறிஞர் சிலர் அடுத்த கல்வியாண்டுத் தொடக்கத்திலிருந்து நம்முடைய தொழில் நுட்ப எனைய கல்வி நிலையங்களில் கற்பிக்கும் பணியிலும் ஆராய்ச்சிப் பணியிலும் அமரக்கூடும்.

15. பொறியியல் கல்லூரிகளில் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்குடன் பொறியியல் கல்லூரிகளில் உயர்தர ஆசிரியர் பதவிகளில் நியமிக்கப்படுவோர் ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டம் பெற்றிருக்க வேண்டும் என்று விதி வகுக்கப்பட இருக்கிறது. அது போலவே பல்தொழில் பயிற்சிப் பள்ளி ஆசிரியர் பதவிகளுக்குத் தேவையான தகுதிகளும் உயர்த்தப்படும்.

16. ஆராய்ச்சி செய்து டாக்டர் பட்டங்கள் பெறுவதற்காகத் தற்போதுள்ள ஆசிரியர்களை முகமையில் அனுப்பும் திட்டமும் தொடர்ந்து செயல்படுகிறது. இத்திட்டத்தின்கீழ், 1972-73-ல் ஆறு ஆசிரியர்கள் முகமையில் அனுப்பப்பட்டனர். 1973—74-ல் ஐந்து ஆசிரியர்கள் அனுப்பப்படுவர்.

[1973 மார்ச் 2

17. கலெக்கல்லூரிகளில் உள்ள புகுமுக வகுப்புக்கு இணையாக தொழில் கல்வி புகுமுக வகுப்பில் இம்மாநிலத்தில் பிறந்த அல்லத வசிக்கின்ற மாணவர்கள் அனைவரும் இலவசமாகப் பயிலலாம இதைத் தவிர 1973-74-ல் மாணவர்களுக்கு படிப்பு உதவித் தொகைகள், பயிற்சி உதவித்தொகைகள், கடன்கள் ஆகிய வற்றிற்காக ரூ. 21 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது 1970-71, 1971-72 ஆண்டுகளில் வழங்கப்பட்ட படிப்புதவித் தொகைகள், கடன்கள் முறையே, ரூ. 1,225, 1,215 ஆகும். 1972-73-ல் 1972 டிசம்பர் வரை ரூ. 1,277 வழங்கப்பட்டிருந்தன.

18. பட்டயதாரர்கள் பொறியியல் பட்டங்கள் பெறுவதற்கு உதவ 1971-ல் தொடங்கப்பட்ட பகுதி நேர பொறியியல் பட்டப் படிப்புகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. இந்த வகுப்புகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் இயந்திரப் பொறியியல் பிரிவில் 160 பேர்கள், மின்சாரப் பொறியியல் பிரிவில் 160 பேர்கள், கட்டிடப் பொறியியல் பிரிவில் 150 பேர்கள் சேர்க்கப்படுகின்றனர்.

(7) கைவினைஞர்கள்.

பயிற்சித் திட்டங்களும், தொழிற் பயிற்சி நிறுவனங்களும்.

19. இவை வேலைவாய்ப்பு-பயிற்சி இயக்குநரின்கீழ் செயல் படுகின்றன.

தொழில் பயிற்சிப் பள்ளிகள்.

20. இரண்டாவது ஐந்தாண்டுத்திட்ட இறுதியில் 10 தொழில் பயிற்சிப்பள்ளிகள் (3,368 மாணவர்கள்) செயல்பட்டன. மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் பயிற்சிப் பள்ளிகளின் எண்ணிக்கை 30 ஆக (9,592 மாணவர்கள்) உயர்ந்தது. தற்போது 31 தொழிற் பயிற்சிப் பள்ளிகள் (13,112 மாணவர்கள்) உள்ளன.

21. தொழில்கல்விப் பல்லுறைபடித்தும் திட்டத்தின்கீழ், சில தொழில் பயிற்சிப் பள்ளிகளில் வேலை வாய்ப்பு குறைந்த தொழில்கள் சிலவற்றிற்குப் பதிலாக, மின் அணுவியல், டிராக்டர் கள், மோட்டார் வாகனங்கள், குளிர் பதனம்-சீர்வளிச் சாதனம் பொருத்துதல் ஆகியவற்றில் இயந்திரக் கம்மியர் போன்ற வேலைவாய்ப்பு மிகுந்த தொழில்களில் பயிற்சி அளிக்கப்பட இருக்கிறது.

973 மார்ச் 21]

22. கிண்டி, வட சென்னை, அம்பத்தூர், மதுரை, கோயம் புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள தொழிற் பயிற்சிப் பள்ளிகள், தொழிற்சாலைத் தொழிலாளர்களுக்காக மாலை நேர வகுப்புகள் நடத்துகின்றன. தற்போது மொத்தம் சுமார் 803 தொழிலாளர்கள் மாலை நேர வகுப்புகளில் பயிலுகின்றனர்.

23. வட சென்னை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களிலுள்ள தொழிற்பயிற்சிப் பள்ளிகள் முன்னோடித் திட்டமாகத் தச்சுத் தொழிலில் வாணிகத் தொழில் பிரிவுகளைத் தொடங்கியுள்ளன. இந்தப் பிரிவுகள் பயிற்சி பெறுபவர்களுக்கு சுமார் 6 முதல் 10 மாதங்களுக்கு உற்பத்திப் பயிற்சி அளிக்கின்றன. பயிற்சி பெறுபவர்களுக்கு தினங்கள் ஒன்றுக்கு ரூ. 100 அளிக்கப்படுகின்றது. இப் பயிற்சியின் மூலம் தொழிலாளர்கள் சொந்தமாகத் தொழில் தொடங்குவதிலும், சொந்தமாகப் பணியாளர்கள் பெறுவதிலும் நம்பிக்கை பெறுகிறார்கள். இந்த முன்னோடித் திட்டம் வெற்றி அடைந்தால், இது ஏனைய இடங்களிலுள்ள நிறுவனங்களுக்கும் விரிவாக்கப்படும்.

24. தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றுத் தேறிய வர்களுக்குத் தொழிலே நோக்கமாகக் கொண்ட நடைமுறைப் பயிற்சி அளிக்கும் திட்டங்களும் செயலில் உள்ளன. திருச்சிராப் பள்ளி தொழில் பயிற்சிப் பள்ளியில் பயிற்சி பெறுபவர்கள், பாரத் மிகுனரக மின்சாரக் கருவிகள் தொழிற்சாலைக்குத் தேவையான இயந்திரப் பாகங்களைத் தயாரித்து அளிப்பதற்கான பணியாளர் களைப் பெறுவதற்கு அனுமதிக்கப்படுகின்றனர். கிண்டியிலும், துரையிலும் உள்ள தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெறு வர்கள், குளிர்ப்பதனப் பெட்டி, மற்றும் மருத்துவ மனைகளில் பயன்படுத்தும் கருவிகள் ஆகியவற்றைப் பழுதுபார்க்கவும் அனுமதிக்கப்படுகிறார்கள். இவர்கள் பயிற்சி உதவித்தொகை மாதத்துக்கு ரூ. 100 பெறுகின்றனர். பர்மா, இலங்கை அகதி களுக்கு ஒவ்வொரு தொழிற்பயிற்சிப் பள்ளியிலும், ஒவ்வொரு மாதமும் 5 விழுக்காடு இடங்கள் ஒதுக்கப்படுகின்றன.

25. இம் மாநிலத்தில் உள்ள தொழிற்பயிற்சிப் பள்ளிகளில் நிறைந்த தரமான பயிற்சி அளிக்கப்படுகிறது. புது டில்லியில் ஆண்டு தோறும் நடத்தப்படுகின்ற அனைத்து இந்திய திறமைப் போட்டி

களில் இரண்டொரு தொழில்களில் தமிழ்நாடு தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. பிறந்த மாநிலத்திற்கான குடியரசுத் தலைவரின் சுழல் கோப்பையையும் தமிழ்நாடு மும்முறை பெற்றுள்ளது.

தொழில் பழகுவோர் பயிற்சித் திட்டம்

26. 1961-ஆம் ஆண்டு தொழில் பழகுவோர் சட்டத்தின்படி ஒரு தொழில் நிறுவனம் தொழில் பழகுவோர் சிலருக்குப் பயிற்சி அளிக்கவேண்டியது அவசியமாகும். தற்போது 20 தொழிற் சாலைகள் இச்சட்டத்தின்கீழ் வருகின்றன. ஐநூத்தி தொண்ணூற்று ஏழு தொழில் நிறுவனங்கள் இச்சட்டத்தைச் செயற்படுத்து கின்றன. இவற்றில் மொத்தம் 3,417 தொழில் பழகுவோர் உள்ளனர். பத்து தொழில் பயிற்சிப்பள்ளிகளில் தொடர்புள்ள பாடங்களில் போதனை வகுப்புகள் நடத்தப்படுகின்றன.

மானியம் பெறும் தொழில் பள்ளிகள்

27. இம் மாநிலத்தில், வேலைவாய்ப்பு பயிற்சித் துறையால் ஏற்படுத்தப்பட்ட 59 உதவிபெறும் தொழில் பள்ளிகள் உள்ளன. இவற்றிற்கு, பணிதல் செலவு, கருவிகள், மற்றும் கட்டடங்களுக் காக மானியங்கள் அளிக்கப்படுகின்றன.

தொழில் பயிற்சிப் பள்ளிகளில் பயிற்சி பெற்றுத் தேறி வேலையில்லாமல் இருப்பவர்களுக்குக் கடன் உதவி.

28. தொழில் நுட்பத் தகுதிபெற்ற கைத்திறப் பணியாளர் களுக்கு, சொந்தமாகத் தொழில் தொடங்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன், தொழில் பயிற்சிப் பள்ளி களில் பயிற்சிபெற்றுத் தேறிய கைத்திறப் பணியாளர்களுக்கு கருவிகளும், உபகரணங்களும் வழங்குவதற்கான வட்டியில்லாக் கடனுதவித் திட்டம் ஒன்று செயல்படுகிறது. சொந்தத்தில் தொழில் தொடங்குவதற்காக ஒவ்வொருவருக்கும் ரூ. 1,000 முதல் (இத்தொகை 25 சமமான மாதத் தவணையில் வசூலிக்கப்படும்). ரூ. 5,000 வரை (இது 60 சமமான மாதாந்தரத் தவணையில் வசூலிக்கப்படும்) மதிப்புள்ள கருவிகளும், சாதனங்களும் வழங்கப்படுகின்றன. கருவிகள் வழங்கப்பட்ட ஆறாவது மாதத் திலிருந்து கடன் வசூல் தொடங்கும். இத் திட்டத்திற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூ. 30 லட்சம் ஒதுக்கப்பட்டு வருகிறது.

அத்தியாயம் 8

இசை, கலைகள், கலை நிகழ்ச்சிகள்

சங்கீத நாடக சங்கம்.

1. **சங்கீத நாடக சங்கம்.**—இம் மாநிலத்தில் நாட்டியம், நாடகம், இசை போன்ற நுண் கலைகளை வளர்ப்பதற்காக அமைக் கப்பட்ட தமிழ்நாடு சங்கீத நாடக சங்கம் ஒரு தனி நிறுவன மாகும். இதற்கு மாநில அரசு முழு நிதியுதவி அளிக்கிறது. 1972-73-ஆம் ஆண்டில் அரசு இதற்கு ரூ. 2.30 லட்சம் மானியமாக அளித்தது. 1973-74-ல் இச்சங்கத்திற்கு ரூ. 2.40 லட்சம் மானியம் வழங்கப்படும்.

2. சங்கத்தின் முதன்மையான நடவடிக்கைகளில், நாடகக் குழுக்களுக்கு நாடகங்களைத் தயாரிப்பதற்காக உதவி மானியங் கள் வழங்குவதும் ஒன்று. இதற்காக 1972-73-ல் ரூ. 10,000 நிதி ஒதுக்கம் செய்யப்பட்டது; நாடக விழாக்களை நடத்துவதற்காக ரூ. 20,000 செலவிடப்படும். 1972-73-ல் இசை, நாடகத் துறை களில் சிறந்து விளங்கியவர்களுக்கும், முன்னேற்றம் அடைந்து வரும் கலைஞர்களுக்கும் பரிசுகள் வழங்குவதற்காக ரூ. 32,000 செலவிடப்பட்டது.

3. இச்சங்கம் 1971, 1972-ஆம் ஆண்டுகளில் சென்னை மாநகரத்தில் சோவியத் ரஷியாவிலிருந்து வந்த 'மாயிசியவ் டான்ஸ் என்சம்பளை', "ப்ஸுப்ரஸ்" என்னும் மால்டேவி குழு ஆகிய புகழ்பெற்ற குழுக்களின் நடனங்கள், இசை நிகழ்ச்சி ஆகிய வற்றை நடத்தியது. இக்குழுக்கள் இந்திய அரசு ஏற்பாட்டின் மேல் வந்தன. அவற்றின் நிகழ்ச்சிகள் மக்களைப் பெரிதும் கவர்ந்தன.

4. வரும் ஆண்டில், இச்சங்கம், இந்திய விடுதலை நாளின் 25-வது ஆண்டு நினைவாக நாடக விழா ஒன்றை நடத்தும். அதை யொட்டி நம்நாட்டிலுள்ள பல்வேறு மாநிலங்களில் ஒன்றிலிருந்து ஒன்றுக்கு குழுக்களை அனுப்பி கலை நிகழ்ச்சிகள் நடத்தவும் ஏற்பாடு செய்யப்படும்.

[1973 மார்ச் 21

5. ஓய்வுபெற்ற கலைஞர்களில் தற்போது வறுமை நிலையிலுள்ள வர்களுக்கு உதவ மாதம் ரூ. 50 முதல் ரூ. 150 வரை ஓய்வூதியம் தருவதற்கான இத்திட்டம் கூட்டாக இந்திய அரசாலும், மாநில அரசாலும் கொண்டுவரப்பட்டது. இத் திட்டத்தின்கீழ், மாநில அரசும், மத்திய அரசும் 2 : 1 என்ற அடிப்படையில் செலவை ஏற்றன. எனினும், 1970-ஆம் ஆண்டிலிருந்து இத் திட்டத்தை நீடிப்பது இல்லையென இந்திய அரசு முடிவு செய்தது. இதன் விளைவாக, 1970-ஆம் ஆண்டிலிருந்து இத் திட்டத்தின்கீழ் புதிய ஓய்வூதியம் எதுவும் வழங்கப்படவில்லை. எனினும் இத்திட்டத்தின்கீழ் ஏற்கெனவே ஓய்வூதியம் பெறுபவர்கள் தொடர்ந்து இதனைப் பெற்று வருவர். தற்போது ஓய்வூதியம் பெறுபவர்களின் எண்ணிக்கை 300 ஆகும்.

6. இந்திய அரசு இத்திட்டத்தை நிறுத்தியதன் விளைவால், ஓய்வூதியம் வழங்குவதை மாநில அரசு தன் முழுச் செலவில் ஏற்றுக்கொண்டுள்ளது. மாநில திட்டத்தின்கீழ் இதுவரையில் 195 பேருக்கு ஓய்வூதியம் வழங்கப்பட்டுள்ளது. 1973-74-ம் ஆண்டில் இத்திட்டத்திற்கு ரூ. 63,000 ஒதுக்கப்பட்டுள்ளது. இதனால் மேற்கொண்டும் சுமார் 70 பேர் பயனடைவர்.

கர்நாடக இசைக் கல்லூரி.

7. **கர்நாடக இசைக் கல்லூரி.**—இக்கல்லூரியில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 154, ஆசிரியர்கள் 25 பேர். இக் கல்லூரியில் நடத்தப்படும் வகுப்புகள் வித்வான் பயிற்சிக்கு முந்திய பயிற்சி (ஓராண்டு); சங்கீத வித்வான் (2 ஆண்டுகள்), புல்லாங்குழல், மிருதங்கம், நாகஸ்வரம் ஆகியவற்றில் வாத்ய விசாரதா (மூன்று ஆண்டுகள்), பரத நாட்டியத்தில் நாட்டிய விசாரதா பயிற்சி வகுப்பு (3 ஆண்டுகள்) ஆகியவையாகும். வாத்ய விசாரதா, நாட்டிய விசாரதா வகுப்புகள் 1971-72-ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டன. இக் கல்லூரியில், இலங்கை, மலேசியா, அமெரிக்கா, ஐப்பான் ஆகிய இடங்களைச் சேர்ந்த மாணவர்களும் உள்ளனர்.

அரும் பொருட் காட்சிச் சாலை

8. சென்னை, அரும் பொருட்காட்சிச்சாலை, தனது கல்வித் திட்டப் பணிகளின்கீழ் கிழ்கள்தோறும் படக்காட்சிகளை நடத்து

1973 மார்ச் 21]

கிறது. சிறந்த விரிவுரைகளை ஆற்ற ஏற்பாடு செய்கிறது. அறிவியல் பொருட்காட்சிகளை நடத்துகிறது. இம் மாநகரத்தி லுள்ள பள்ளிகளுடன் நல்ல தொடர்பு கொண்டு இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. 1973-74-ல் அரும் பொருட் காட்சிச் சாலையிலுள்ள தொல்பொருளியல் பொருட்கள், விலங்கியல் பொருட்கள் குறித்து வழிகாட்டி நூல்கள், சிறு வெளியீடுகள் ஆகியவை தொடர்ந்து வெளியிடப்படும்.

தொல்பொருள் ஆராய்ச்சித் துறை

9. பொதுப் பணித் துறையின் பாதுகாப்பின்கீழ் இதுவரை இருந்த திருமலை நாயக்கர் மகால், 1971-ஆம் ஆண்டில் மாநிலத் தொல்பொருள் துறையால் மேற்கொள்ளப்பட்டது. இதனைப் பழுது பார்க்கும் பணி 1972-ஆம் ஆண்டிலிருந்து தொடங்கப் பட்டது.

10. தொல்பொருள் ஆராய்ச்சித் துறையின் அகழ்நல் பணித் திட்டம், பாண்டிய மன்னர்களின் பண்டைய தலைநகரமாகிய கொற்கையில் தொடர்ந்து நடைபெறுகிறது.

11. புதுடில்லியிலுள்ள மத்தியக் கல்வெட்டு ஆராய்ச்சி நிறுவனத்தைப் போன்று 1973-74-ஆம் ஆண்டில் இம் மாநிலத் திலும் கல்வெட்டு ஆராய்ச்சி நிறுவனம் ஒன்று தொடங்கப்படும். தமிழ் நாட்டில் கல்வெட்டுக்களில் கண்டுள்ள வாசகங்களை அறிந்து அவற்றைப் பதிப்பிக்கும் பணியை முடிக்க இந்த நிலையம் துணை புரியும்.

12. இப்போதெல்லாம் அரிய விலைமதிப்புள்ள, கலை வேலைப் பாடுகள் மிகுந்த பொருட்களை மறைவாகவும் கள்ளத்தனமாகவும் நாட்டைவிட்டுக் கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. நாட்டின் மதிப்புயர்ந்த கலைக்கருவூலங்களைப் பெருமளவில் கடத்தல் செய்வதைத் தடுக்க இந்திய அரசு "தொல் பொருட்கள் கலை முக்கியத்துவம் வாய்ந்த பொருட்கள் சட்டம் 1972" என்னும் சட்டத்தை அண்மையில் நிறைவேற்றியுள்ளது. அச்சட்டம் நம் நாட்டிலுள்ள கலைப்பொருள் விற்பனையாளர்களுக்கு உரிமம் வழங்கவும் தனிநபர்கள் வைத்திருக்கும் கலை தொடர்புடைய பொருட்களைப் பதிவு செய்யவும் வகை செய்கிறது. இம் மாநிலத்தில் இச்சட்டத்தைச் செயற்படுத்துவதற்கான செயற் குறிப்புகள் ஆய்வில் உள்ளன. போதுமான நிதியுதவி அளிக்கு மாறு இந்திய அரசிடம் கேட்கப்படும்.

[1973 மார்ச் 21

அத்தியாயம் 9.

தமிழ் வளர்ச்சி

1. 1968 ஜனவரித் திங்கள் 23 ஆம் நாள் மாநிலச் சட்ட மன்றம் நிறைவேற்றிய தீர்மானத்தில் சார்ற்றியுள்ள கொள்கைக் குறிப்பிற் கிணங்க, தமிழை ஆட்சி மொழியாகக் கொண்டுவருதலும் அலுவலக மொழியாகப் பயன்படுத்திவருதலும் ஆண்டுதோறும் விரிவடைந்து கொண்டே வருகின்றன. அரசு இக்கொள்கையைச் செயல்படுத்துவதில் மிகுந்த நாட்டம் கொண்டுள்ளது.

2. மாவட்ட அலுவலகங்களில் தமிழ் பயன்படுத்தப்படுவதை மேற்பார்வையிடவும், நிர்வாகத்தில் தமிழை மேலும் பயன்படுத்தி வருவதை விரைவுபடுத்தவும், தமிழில் குறிப்பும் வரைவும் எழுதப் பணியாளர்கட்கு ஆங்காங்கு அறிவுரை வழங்கவும், தற்போது மாவட்ட அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

3. தமிழ் வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் மூன்று அதிகாரி களைக் கொண்ட மொழிபெயர்ப்புப் பிரிவு ஒன்றும் செயல்பட்டு வருகிறது. இப்பிரிவு, மாநில அரசின் விதிமுறைச் சட்டக் கோவை, நடைமுறை நூல்கள், சட்டங்கள், ஒழுங்குமுறை விதிகள் ஆகியவற்றை மொழிபெயர்க்கிறது. ஆட்சிச் சொல்லக ராதியின் தொகுப்பு ஒன்று 1973-74-ல் தயாரிக்கப்பட்டு வெளி யிடப்படும்.

4. தமிழில் சிறந்த வரைவுகளும், குறிப்புகளும் எழுதும் அரசுப் பணியாளர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் ஆண்டு தோறும் சிறந்த வரைவுகள் அல்லது குறிப்புகளை எழுதும் அரசுப் பணியாளர்களுக்கு ஒவ்வொன்றும் ரூ. 500 விதம் 15 பரிசுகள் அளிக்கப்பட்டு வருகின்றன. 1973 ஆம் ஆண்டிலிருந்து, தலைமைச் செயலகத்தில் தமிழ்மொழியை (ஆட்சி மொழியை) நன்கு பயன்படுத்தும் அரசுப் பணியாளர் ஒருவருக்கு ரூ. 500 பரிசு வழங்கப்படும்.

5. இந்த இயக்குநர் அலுவலகம், 1867-லிருந்து 1940 வரை வெளியான தமிழ் வெளியீடுகளின் நூற்பட்டியல் ஒன்றைத் தயாரிக்கும் பணியிலும் ஈடுபட்டுள்ளது. நூற்பட்டியலின் 3, 4, 5 ஆவது தொகுப்புகளின் (ஒவ்வொன்றும் மூன்று பாகங்களை

1973 மார்ச் 21]

யுடையது) இறுதி படித் திருத்தம் 1973-74 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 6, 7 ஆவது தொகுப்புகளைத் தயாரிக்கும் பணி 1973-74-ல் மேற்கொள்ளப்படும்.

6. தமிழ் வளர்ச்சி-ஆய்வு மன்றம், பரிசுகள் வழங்குவதன் மூலம், தமிழில் தரமான இலக்கிய நூல்களை வெளியிட ஊக்க மளித்து வந்துள்ளது. 1971-72லிருந்து பரிசுத் தொகை உயர்த்தப் பட்டுள்ளது. இருபது வகைப்பட்ட நூல்களில், ஒவ்வொரு வகையிலும் இரண்டு நூல்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ. 2,000 மதிப்புள்ள முதல் பரிசு ஒன்றும் ரூ. 1,000 மதிப்புள்ள இரண்டாவது பரிசு ஒன்றும் வழங்கப்பட்டு வருகின்றன.

7. இம்மன்றம், தமிழில் தரமான நூல்களை வெளியிடுவதற்கு ஊக்கமளிக்கும் பொருட்டு, நூலாசிரியர்களுக்கு நிதியுதவி யளிக்கும் திட்டமொன்றையும் செயற்படுத்தி வருகிறது. இது வரை, இத் திட்டத்தின்கீழ் மூன்று நூலாசிரியர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. மேலும், சில நூலாசிரியர்களுக்கு நிதி யுதவியளிப்பது குறித்து மன்றம் ஆய்வு செய்து வருகிறது.

8. தமிழில் சிறுவர் கலைக் களஞ்சியம் ஒன்றை வெளியிடுவதற் காக தமிழ் மன்றத்திற்கும் (Tamil Academy) யுனெஸ்கோ கூரியர் தமிழ் இதழ் வெளியீடு, போன்ற பொது நூல் வெளி யீட்டுத் திட்டத்துக்காக தென்மொழிகள் புத்தக டிரஸ்ட் நிறுவனத் துக்கும், தென்னிந்தியாவின் நான்கு முக்கிய திராவிட மொழிகளை இணைக்கும் நோக்கத்திற்காக திருவனந்தபுரத்திலுள்ள திராவிட மொழியியல் சங்கத்திற்கும், அரசு தாராளமாக மானிய உதவி யளித்து வந்துள்ளது. தமிழில் ஆராய்ச்சிப் பணியை மேற் கொள்வதற்காகவும், பட்ட மேற்படிப்பை நடத்துவதற்காகவும் பிற மாநிலங்களிலுள்ள சில பல்கலைக் கழகங்களுக்கு மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தின்கீழ், தமிழ் மொழியை வளர்ப்பதற்காக, அல்லது உயர்கல்வி உதவித் தொகைக்குரிய இடங்களை ஏற்படுத்துவதற்காக, அல்லது தமிழில் சிறப்புப் பேராசிரியர் பதவிகளை ஏற்படுத்துவதற்காக உஸ்மானியா பல்கலைக் கழகம், கோவை பல்கலைக் கழகம், ஆந்திரா பல்கலைக் கழகம், வெங்கடேஸ்வரா பல்கலைக் கழகம், விஸ்வபாரதி பல்கலைக் கழகம், கல்கத்தா பல்கலைக் கழகம் ஆகியவற்றிற்குத் தமிழ்நாடு அரசு உதவியளித்துள்ளது.

[1973 மார்ச் 21

9. 1971 ஜூன் முதல், டாக்டர் மு. வரதராசனுர் தலைமையில் அரசு அமைத்துள்ள அறிஞர்கள் குழு அதிகார பூர்வமான தமிழக வரலாற்றைத் தமிழில் எழுதும் பணியில் ஈடுபட்டுள்ளது. இந்த வரலாறு ஆறு பகுதிகளைக் கொண்டிருக்கும். வரலாற்றுக்கு முந்திய காலம் பற்றிய முதல் பகுதி 1973-74-ல் வெளியிடப்படும்.

அனைத்து நாட்டுத் தமிழ் ஆய்வு நிலையம்.

10. இந்த நிலையம் முதலில் 1970 அக்டோபரில் சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்கீழ் பதிவு செய்து நிறுவப்பட்டது. தமிழ் ஆய்வுப் பணியில் பற்றுமிக்க அனைத்து நாட்டு அறிஞர்களின் ஒத்துழைப்புடன், தமிழியலின் அனைத்துக் கூறுகளிலும், அதற்குத் தொடர்புடைய துறைகளிலும் எல்லா வகைகளிலும் ஆய்வை வளர்ப்பதே இந்நிலையத்தின் முக்கிய நோக்கமாகும். இந்நிலையம் 1972 ஆம் ஆண்டிலிருந்து தமிழியல் பற்றிய அனைத்து நாட்டு அரையாண்டு ஆய்வு இதழ் ஒன்றை வெளியிட்டு வருகிறது. அவ்விதழில் அனைத்து நாட்டு அறிஞர்கள் எழுதும் ஆய்வுக் கட்டுரைகள் வெளி வருகின்றன. பிற மொழியினருக்குத் தமிழ் மொழி கற்பிப்பதற்கான புதுமைக் கருவிகளுடன் மொழிப் பயிற்சிக் கூடம் ஒன்று அமைக்கவும், தமிழ் ஆய்வை வளர்க்கவும், தமிழ் இலக்கியத்திலும் மொழியிலும் தரமான நூல்களை வெளியிடவும் நிலையம் திட்டமிட்டுள்ளது.

11. இந்நிலையம் தற்போது தமிழ்நாடு அரசு, யுனெஸ்கோ நிறுவனத்துடன் ஒத்துழைப்பதற்கான இந்தியநாட்டுக் குழு, ஆகியவற்றின் ஒத்துழைப்புடன் செயல்பட்டு வருகிறது. தற்போது தமிழ்நாடு அரசு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 70,000 அளவில் இந்த நிலையத்திற்காகும் முழுச் செலவையும் ஏற்று வருகிறது.

73 மார்ச் 21]

ஆவணம் 4

பள்ளிக் கல்வி பற்றிய புள்ளி விவரங்கள்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்.

(1)	1965–66 (முன்றாவது திட்ட முடிவு).	1968–69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு).	1969–70.	1970–71	1971–72 ஆகஸ்டு 1-ம் நாள் உளவுப.	1972–73 ஆகஸ்டு 1-ம் நாள் உளவுப.	1973–74 ஆகஸ்டு 1-ம் நாள் எதிர்பார்க்கப் படுவது.
	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
4. வெவ்வேறு வயதுத் தொகுதி சிறுர் மொத்த எண்ணிக்கை—							
வயதுத் தொகுதி—							
6 முதல் 11 வரை—							
சிறுவர்	2,584,823	2,679,005	2,711,153	2,743,686	2,915,922	2,980,072	3,015,635
சிறுமியர்	2,564,214	2,657,615	2,689,506	2,721,780	2,851,961	2,914,704	2,978,828
மொத்தம் ..	5,149,037	5,336,620	5,400,659	5,465,466	5,767,883	5,894,776	6,024,461
11 முதல் 14 வரை—							
சிறுவர்	1,130,861	1,172,061	1,186,125	1,200,358	1,312,165	1,341,032	1,370,534
சிறுமியர்	11,21,832	1,162,705	1,176,657	1,190,776	1,283,382	1,311,617	1,340,473
மொத்தம் ..	2,252,693	2,334,766	2,362,782	2,391,134	2,595,547	2,652,649	2,711,007

	நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலம்						
	1965-66 (மூன்றாவது திட்ட முடிவு).	1968-69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு).	1969-70.	1970-71	1971-72 ஆகஸ்டு 1-ம் நாள் உள்ளபடி.	1972-73 ஆகஸ்டு 1-ம் நாள் உள்ளபடி.	1973 74 ஆகஸ்டு 1-ம் நாள் எதிர்பார்க்கப் படுகிறது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
14 முதல் 17 வரை—							
சிறுவர்	933,407	967,414	979,022	990,770	1,083,057	1,106,884	1,131,235
சிறுமியர்	925,955	959,693	971,209	982,863	1,059,299	1,082,603	1,106,420
மொத்தம் ..	1,859,362	1,927,107	1,950,231	1,973,633	2,142,356	2,189,487	2,237,655
ஆ. அவர்களுள் பள்ளியில் சேர்க்கப் பட்டோர் எண்ணிக்கை—							
வயதுத் தொகுதி—							
6 முதல் 11 வரை—							
சிறுவர்	2,637,300	2,822,157	2,863,560	2,909,242	2,964,295	3,009,338	3,059,388
சிறுமியர்	1,874,050	2,095,788	2,127,310	2,193,109	2,269,283	2,316,796	2,366,796
மொத்தம் ..	4,511,350	4,917,945	4,990,870	5,102,351	5,233,578	5,326,134	54,26,134
11 முதல் 14 வரை—							
சிறுவர்	721,271	799,711	800,809	809,813	868,657	888,124	918,124
சிறுமியர்	344,656	427,873	437,157	444,732	478,218	494,502	514,502
மொத்தம் ..	1,065,927	1,227,584	1,237,966	1,254,545	1,346,875	1,382,626	1,432,626
14 முதல் 17 வரை—							
சிறுவர்	386,286	430,378	447,911	457,674	482,702	488,591	513,591
சிறுமியர்	165,175	206,539	210,503	217,336	231,634	236,426	251,426
மொத்தம் ..	551,461	636,917	658,414	675,010	714,336	725,017	765,017
இ. பள்ளிகளில் சேர்க்கப்பட்டோர் சதவீதம்—							
6 முதல் 11வரை—							
சிறுவர்	102·03	105·34	105·62	106·0	102·0	101·3	100·4
சிறுமியர்	73·08	78·85	79·09	80·5	79·6	79·5	79·4
மொத்தம் ..	87·61	92·15	92·41	93·3	90·9	90·5	90.0

இணைப்பு

[1973 மார்ச் 2

973 மார்ச் 21]

இணைப்பு

	1965-66 (மூன்றுவது திட்ட முடிவு).	1968-69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு).	நான்காவது ஐந்தாண்டுத்திட்டக் காலம். 1969-70	1970-71	1971-72 ஆகஸ்டு 1-ம் நாள். உள்ளபடி.	1972-73 ஆகஸ்டு 1-ம் நாள். உள்ளபடி.	1973-74 ஆகஸ்டு 1-ம் நாள் எதிர்பார்க்கப் படுவது.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)
11 முதல் 14 வரை—							
சிறுவர்	63·78	68·23	67·51	67·46	66·4	66·4	66·09
சிறுமியர்	30·72	36·79	37·15	37·3	37·3	37·3	38·3
மொத்தம் ..	47·31	52·57	52·39	52·4	52·0	52·2	52·8
14 முதல் 17 வரை—							
சிறுவர்	41·38	44·48	45·75	43·1	44·7	44·2	45·4
சிறுமியர்	17·83	21·52	21·67	22·1	21·8	21·8	22·7
மொத்தம் ..	29·65	33·05	33·24	34·2	33·4	33·2	34·1
ஈ. பள்ளிகளின் எண்ணிக்கை—							
தொடக்கப் பள்ளிகள்	24,641	25,694	25,855	26,074	26,159	26,431	..
உயர் தொடக்கப் பள்ளிகள்	6,065	6,018	5,968	5,928	5,862	5,817	..
உயர்நிலைப் பள்ளிகள் (மெட்ரிகுலேஷன் பள்ளிகள், மைய அரசுப்பள்ளிகள் உட்பட).	2,234	2,513	2,580	2,637	2,699	2,763	..

1971-க்கு முன் ஆண்டுதோறும் மக்கள் தொகை உயர்வு 1·2 விழுக்காடு என்ற அடிப்படையில் வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறுர்களின் மொத்த எண்ணிக்கை கணக்கிடப்பட்டு வந்தது. 1971 மக்கள் தொகைக் கணக்குப்படி அது 2·2 விழுக்காடாக உயர்ந்து வெவ்வேறு வயதுத் தொகுதிச் சிறுர்களின் மொத்த எண்ணிக்கை மதிப்பீடு சரியதால் அவர்களுள் பள்ளியில் சேர்ந்தோர் சதவீதமும் 1970-71க்கும் இன் குறைபலாயிற்று.

[1973 மார்ச் 21

1973 மார்ச் 21]

உ. ஆசிரியர்களின் எண்ணிக்கை—						
தொடக்கப் பள்ளிகள்	88,173	91,918	93,748	96,689	101,266	103,941
உயர் தொடக்கப் பள்ளிகள்	59,943	62,222	62,511	64,499	64,392	66,347
உயர்நிலைப் பள்ளிகள்	48,574	54,857	56,651	57,756	59,891	63,457
மொத்தம் ..	196,690	208,997	212,910	218,944	2,25,549	233,745
ஊ. ஆசிரியர்—மாணவர் விகிதம்—(ஆகஸ்டு முதல் நாள் உள்ளபடி)—						
(1) பள்ளி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களையும் ஆசிரியர் தொகையில் சேர்த்து)—						
தொடக்கப் பள்ளிகள்	27	36	36	36	35	35
உயர் தொடக்கப் பள்ளிகள்	35	33	34	34	34	33
உயர் நிலைப் பள்ளிகள்	31	26	26	26	26	25
(2)வகுப்புத் தொகுதி வாரியாக (சிறப்பு ஆசிரியர்களை, ஆசிரியர் தொகுதியிலிருந்து நீக்கி)—						
தொடக்கப்பள்ளி வகுப்புத் தொகுதி	37	37	37	35	35	35
உயர் தொடக்கநிலை வகுப்பு தொகுதி	32	33	33	32	31	31
உயர்நிலைப்பள்ளி வகுப்பு தொகுதி	32	32	31	29	28	28

		நான்காவது திட்டக்காலம்.				
(1)	1965-66 (மூன்றாவது திட்ட முடிவு). (2)	1968-69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு). (3)	1969—70 (4)	1970—71 (5)	1971-72 (6)	1972-73 (7)	1973-74. (8)
ஏ. கல்வியின்மீற் செய்யப்பட்ட மொத்த நிதி ஒதுக்கம் (திட்ட வேலைகளும் பிறவும் சேர்த்து)—					(இ.ம.)	(ஆ.செ.ம.)	
			(ரூபாய் லட்சத்தில்).				
தொடக்கக் கல்வி	61,98	2,605	3,064	3,423	4,021	4,448	4,421*
உயர்நிலைப்பள்ளிக் கல்வி	1,250	1,922	20,31	2,184	2,571	2,843	2,908

ஏ. கல்விச் செலவு (மாநிலத்திட்டக் குழுவின் கல்விப்பணிக்குழு நயாரித்த 1972-84-க்கான கல்வித் திட்ட அறிக்கையில் கண்டது)—

	ரூபாய்.	
தொடக்கப்பள்ளி நிலை	61·70	ஆண்டுக்கு சராசரி ஒரு மாணவனுக்குச் செலவு.
உயர் தொடக்கப்பள்ளி நிலை	111·40	
உயர்நிலைப்பள்ளி நிலை	244·80	

* ஆசிரியர்களுக்கு வேலைவாய்ப்புத் தருவதற்கான மைய அரசுத் திட்டச் செலவு நீங்கலாக.

இணைப்பு 2.

கல்லூரிக்கல்வி—புள்ளி விவரங்கள்.

விவரங்கள். (1)	1965-66 (மூன்றாவது திட்ட முடிவு). (2) மார்ச் அக்டோபர் 1966.	1968-69 (ஆண்டுத் திட்டங்கள் முடிவு.) (3) ஏப்ரல் அக். 1968	1969-70. (4) ஏப்ரல் அக். 1969	1970-71. (5) மார்ச் அக். 1970	1971-72. (6) ஏப்ரல் அக். மார்ச் 1971	1972	1972-73. (7) மார்ச் அக். மார்ச். 1973.	1973	1973-74 எதிர்ப்பார்க்கப்படுவது. (8) மார்ச். 1973,
1, எஸ்.எஸ்.எல்.சி. எழுதிய மாணவர் எண்ணிக்கை.	1,46,592	31,327	1,96,272	57,374	182,829	34,408	1,91,853	33,572	1,93,059	24,445,	2,01,950	57,570	1,96,300
2 அவர்களுள் தேறியோர் எண்ணிக்கை.	75,270	8,128	98,181	11,004	91,794	8,326	1,03,974	81,92	1,11,823	6,674	1,19,122	6726	..
3 கல்லூரிப் படிப்புக்குச் சென்ற மாணவர்கள்.	39,507		59,743		65,928		70,309		76,814		80,506		86,000
4 மொத்த மாணவர் எண்ணிக்கை—													
(1) புகுமுகவகுப்பு.	39,507		59,743		65,928		70,309		76,814		80,506		86,000
(2) பி.எ. ..	11,349		28,016		36,033		39,996		45,387		49,961		54,000
திரு. கே. ராஜாராம்: அதை நான் அறியாமல் இல்லை. அறிந்து தான் பேசுகிறேன். 5ஆம் 6ஆம் வகுப்பிலிருந்து ஆங்கிலத்தையே "மீடியம் ஆப் எஜுகேஷன்" ஆக, பயிற்சி மொழியாகப் பெற்றுப் படித்தும் கூட, பி.ஏ., பி.எஸ்சி. பாஸ் பண்ணிய ஒருவரை ஒரு கட்டுரை ஆங்கிலத்தில் எழுதச் சொன்னால், நாலு செண்டன்ஸ்கூட அவர்களால் எழுத முடிவதில்லை. பெரும்பாலானவர்களுக்கு முடிவதில்லை. எதோ ஒரு சிலர்தான் எழுதுகிறார்கள். அந்த நிலைமையில்தான் பூராவும் தமிழிலேயே படித்து, ஆங்கிலப்பாடம் மட்டும் ஆங்கிலத்திலே படித்திருப்பது தான் தினைத் தலைவர் அவர்கள் சொல்லக்கூடிய கல்வி முறை. அப்படிப் படித்தால், இன்னும் அவர்களுக்கு ஆங்கிலம் எப்படி நன்கு எழுத அல்லது பேச வரும்? எல்லாப் பாடங்களையுமே, ஆங்கிலத்தில் படிக்கும்போதே, நான்கு செண்டன்ஸ் சேர்த்து எழுத அவர்களால் முடிவ தில்லை என்பதை நாம் பார்த்துக்கொண்டுதான் இருக்கின்றோம்.

திரு. ம. பொ. சிவஞானம்: எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் என்றென்றுமே ஆங்கிலம்தான் பாடமொழியாக இருக்க வேண்டுமென்று கருதுகிறார்களா?

திரு. கே. ராஜாராம்: அந்த மாதிரிக் கிடையாது. தமிழில் படிப்பதற்கு எவ்வளவு ஊக்கம் கொடுக்கப்படுகிறதோ அந்த அளவுக்கு ஊக்கம் ஆங்கிலத்திற்கும் கொடுக்க வேண்டும். தமிழிலே படித்து தமிழ் நாட்டிலேயே இருக்க வேண்டும் என்று இருப்பவர்கள் தமிழில் படித்து இருக்கட்டும். வெளியில் செல்ல விரும்புபவர்கள் இருக்கிறார்கள். ஒருவர் போபாலுக்குச் செல்ல வேண்டும், ஒருவர் பஞ்சாபுக்குச் செல்ல வேண்டும், அல்லது வேறு மாநிலத்திற்குத் தொழில் தேடச் செல்ல வேண்டுமென்று விரும்பினால், அவர்களுக்கு அந்த முறையில் படிக்க தகுந்த வசதி இருக்க வேண்டுமென்றுதான் சொல்கின்றேன். ஆங்கிலம் எப்போதுமே இருக்க வேண்டுமென்று சொல்லவில்லை. அவர்கள் ஆங்கிலத்தைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிப்பதற்கு வசதி இருக்க வேண்டும் என்பதுதானே ஓழிய, கண்டிப்பாக ஆங்கிலம் படிக்க வேண்டுமென்று யாருஞ்சொல்லவில்லை. தமிழிலேயே படிக்க வேண்டுமென்ற அவசியமும் இல்லை. இங்கேயே தமிழ் நாட்டிலேயே தொழில் தேடி வாழ இருப்பவர்களுக்கு தமிழில் பயிற்சி கொடுக்கலாம். அவர்கள் படிப்பதற்கு ஆட்சேபணை கிடையாது. இவ்வளவு பேருக்கு வேலை தேடவேண்டியிருக்கிறது. வெளி மாநிலங்களுக்கு மட்டுமல்லாமல், வெளி நாடுகளுக்கும் போகவேண்டியிருக்கின்றது. அமெரிக்கா, சிங்கப்பூர், மலேயா போன்ற நாடுகளுக்கு அவர்கள் வேலைக்குப் போக வேண்டும். அவர்கள் ஆங்கில மொழியைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படிக்க நாம் இடமில்லை என்று சொல்லக்

கூடாது. அதைத்தான் நான் சொல்கின்றேனே ஒழிய, வேறு ஒன்று மில்லை. இப்போது அரசு அதைச் செய்துகொண்டிருக்கின்றது. அதைக் குறைத்து விடக்கூடாது என்றுதான் சொல்லுகின்றேன்.

அடுத்தபடியாக, நமது கல்விச் சாலைகளில் பண்பை வளர்ப்பதற்கு அந்தக் காலத்தில் தெய்வ பக்தியை ஒரு பாடமாக வைத்துப் படித்துக் கொண்டிருந்தார்கள். இப்போது பண்பு, கலாச்சாரம் இவைகளை ஒரு பாடமாக வைத்து, ஒரு அரை மணி நேரமாவது நல்ல பண்பு எது என்று பாடசாலைகளில் சொல்லிக்கொடுக்க வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். எல்லா வகுப்புகளிலும் இந்தப் பாடம் இருக்க வேண்டும். நல்ல பண்பாட்டைக் கற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இரண்டாவது ஊதியக் குழு முடிவைத் தெளிவுக்கும்படி. அரசாங்கம் மிகவும் அவசரப்பட்டு முடிவினைச் செய்தது என்பதுதான் என்னைப்போன்ற வர்களுடைய அபிப்பிராயம். 1971-ம் வருஷம் பிப்ரவரி மாதம் தேர்தல் வருகிறது. பிப்ரவரி மாதம் தேர்தலுக்குள் நாலரை மில்லியன் ஊதியக் குழுவின் முடிவை அறிவித்துவிட வேண்டுமென்று அவசரப்பட்டு அறிவிப்பு செய்ததனால் ஏற்பட்ட கஷ்டம்தான் இந்த கிராஜுவேட் டீச்சர்ஸ் ஸ்ட்ரைக், பாலிடெக்னிக் மாணவர், ஆசிரியர் ஸ்ட்ரைக். இம்மாதிரியான ஸ்ட்ரைக்குகள் எல்லாம் வருவதற்குக் காரணம் இதுதான். இந்த இரண்டாவது ஊதியக் குழுவின் முடிவை அரசாங்கம் அவசரப்பட்டு தேர்தலுக்கு முன்னால் சொல்லிவிட வேண்டுமென்று செய்ததனால்தான் இந்நிலை. உதாரணமாக பி. யூனிவர்சிட்டி படித்தவர்கள், புதிய ஹோல்டர்கள்; கம்பவுண்டர் படிப்பு படித்தவர்கள், எஸ்.எஸ்.எல்.சி. படித்துவிட்டு பின்னர் கம்பவுண்டர் படிப்பு படித்தவர்கள். இந்த இரண்டும் ஒன்று என்று வைத்து ஒரேமாதிரியான சம்பளத்தை நிர்ணயித்து விட்டார்கள், இரண்டாவது ஊதியக் குழுவினர். இதைப் பரிசீலிப்பதற்குக்கூட அரசாங்கத்திற்கு நேரம் இல்லை. வந்தவுடனேயே இந்த முடிவை வெளியே சொல்லி விட்டார்கள். இது மாதிரி பல காரியங்கள். இது மாதிரி செகண்டரி ஸ்கூல் டீச்சர்கள். அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்து விட்டு இரண்டு ஆண்டுகள் டிரெயினிங் ஸ்கூலில் படித்துவிட்டு அப்புறம் வாத்தியார் வேலைக்கு வருகிறார்கள். ஆனால் சர்க்கார் உத்தியோகத்திற்கு வருபவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள். அவர்கள் நேரடியாக வருகிறார்கள். இவர்களுக்கும் அவர்களுக்கும் ஒரே சம்பள நிர்ணயம் செய்து விட்டார்கள். இந்த இரண்டு ஆண்டுகள் அதிகமாகப் பயிற்சி பெற்றதைக் கணக்கு எடுக்காமல் நிர்ணயித்து விட்டார்கள். ஆகையால் இப்போது இவ்வளவு தொந்தரவுகள் ஏற்பட்டு வருகின்றன என்பதை வருத்தத்துடன் தெரி வித்துக்கொள்கின்றேன். கொஞ்சம் அவசரப்படாமல் ஊதியக் குழுவின் முடிவைப் பரிசீலனை செய்து அறிவித்திருக்க வேண்டும். தேர்தலை எண்ணி அவசரப்பட்டதனால் வந்த ஒரு பலனைத்தான் நாம் இப்போது அனுபவித்துக்கொண்டிருக்கின்றோம் என்பதைத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

"ஆங்கிலோ-இண்டியன் ஸ்கூல்" களிலும் முஸ்லீம் ஸ்கூல்களிலும் தமிழ் ஆசிரியர்கள் கண்டிப்பாக நியமிக்கப்பட வேண்டும். ஆங்கிலோ-இண்டியன் ஸ்கூலிலே கூட தமிழாசிரியர்கள் இப்போது கிடையாது.

முஸ்லீம் ஸ்கூலில் உருது படிக்கக்கூடிய பள்ளிகளில் தமிழாசிரியர்கிடையாது. தமிழ்நாட்டில் அவைகள் தமிழ் அரசாங்க மான்யம் பெற்று நடைபெற்று வருகின்றன. அவைகளில் முக்கியமாக தமிழ் வகுப்புக்கள் இருக்க வேண்டுமென்பதை நான் தெரிவித்துக் கொள்கின்றேன். இப்போது இல்லையென்றால், கண்டிப்பாக தமிழில் அங்கு வகுப்பு இருக்க வேண்டும், அதற்கு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அது தவிர சைனிக் ஸ்கூல் என்று இருக்கின்றது. நமது அமராவதி ப்ராஜெக்ட் இருக்கின்ற இடத்தில், அமராவதியில் ஒரு மத்திய அரசாங்க சைனிக் ஸ்கூல் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அதற்கு மாநில அரச நிதியிலிருந்து ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். அந்த ஸ்காலர்ஷிப்பில் சில பேருக்கு வருடம் ஒன்றுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். அதுவும் மாதம் ரூ. 400 சம்பளம் வாங்குகின்ற பெற்றோர்களுடைய குழந்தைகளுக்கு, ஆயிரம் ரூபாய் ஸ்காலர்ஷிப் கொடுக்கிறோம். இது மத்திய சர்க்காருடையது. நாம் என் மான்யம் அவர்களை கொடுக்கச் சொல்லக் கூடாது? நமது மாநிலத்தில் அவர்கள் சைனிக் ஸ்கூலில் படித்துவிட்டு மிலிடெரிக்குப் போகிறார்கள். அவர்களுக்கு மத்திய சர்க்காரிலிருந்துதான் நியாயமாகப் பணம் கொடுக்க வேண்டும். நாம் வேண்டுமானால் பெயருக்கு, மற்ற ஸ்காலர்ஷிப் போல கொடுக்கலாம். மெடிகல் அல்லது மற்ற ஸ்காலர்ஷிப் போல கொடுக்கலாம். அவையெல்லாம் பெரிய பையன்களுக்கு கொடுக்கிறோம். ஆனால் 10, 12 வயதுப் பையன்களுக்கு, 5வது, 8வது வகுப்பு படிக்கிற பையன்களுக்கு வருடத்திற்கு ஆயிரம் ரூபாய் ஸ்காலர்ஷிப், எந்நூறு ரூபாய் ஸ்காலர்ஷிப் என்ற அளவுக்கு இருக்கிறது. நான் சொல்கின்றேன் என்று வருத்தப் பட வேண்டாம். இது ஊதாரித்தனமான செலவு என்றுதான் சொல் வேன். அவ்வளவு செலவு அதற்குச் செய்ய வேண்டுமா நாம் என்று கேட்கிறேன். ஒரு பையனுக்கு ஆயிரம் ரூபாய் மீதம் நாம் ஏன் கொடுக்க வேண்டும்? ஒரு சில பையன்களுக்கு ரூபாய் இரண்டாயிரம்கூட கொடுக்கிறோம். இதற்கு ஒரு ஏற்பாடு செய்து, மத்திய சர்க்காரிலிருந்து அதற்காக மான்யம் பெற வேண்டும் அல்லது அவர்களே அந்த ஸ்காலர் ஷிப் கொடுக்கும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும்.

பேக்வார்ட் கிளாஸுக்கு இப்போது பப்ளிக் சர்வீஸ் கமிஷனில் ஷெட்யூல்டு காஸ்ட் அல்லது ஷெட்யூல்டு வகுப்பினருக்குக் கொடுத்திருப்பது போன்று வயது தளர்த்திய நிர்ணயம் கிடையாது. ஆனால் பேக்வார்ட் கிளாஸுக்கு மற்ற உயர்ந்த வகுப்பினருக்கு வயது நிர்ணயம் எப்படியோ அந்த மாதிரி வயது நிர்ணயித்திருக்கின்றார்கள். சாதாரணமாக அஸிஸ்டெண்ட் வேலைக்குப் போகிறவர்களுக்குத்தான் 26 வயது வரை வரம்பு கொடுத்துள்ளார்களேயொழிய மற்றவர்களுக்கு அந்த வயது தளர்த்திய நிர்ணயம் கிடையாது.

அதுவும் ஐ. ஏ. எஸ். போன்ற மத்திய சர்க்காரில் பதவி வகிக்கும் பெரிய அதில இந்திய சர்வீஸ்களுக்குப் போக வேண்டுமென்றால், ஹரிஜனங் களுக்கு 30 வயது. மற்றவர்கள் பேக்வேர்ட் க்ளாஸைச் சேர்ந்தவர்கள் நமது மாநிலத்தில் என் பகுதியில் கள்ளர், மறவர், அகமுடையர் என்று பிற்பட்ட வகுப்பினர் இருக்கிறார்கள். எதோ படித்தவர்கள் சட்ட

M.P. 4-30

[திரு கே. ராஜாராம்] [1973 மார்ச் 23

சபைக்கு வருகிறவர்கள் இவர்களை அடிப்படையாக வைத்து இவர்கள்தான் கள்ளர், மறவர் என்று நினைத்துவிட வேண்டாம். அவ்வளவு மோசமான நிலையில் அங்கு ஏழ்மையில் உள்ளவர்கள். உயர்ந்த முதலியார், ஐயர், ஐயங்கார், போன்றவர்களுக்கும் என்ன வயது நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றதோ, அதையே அவர்களுக்கும் நிர்ணயிப்பது நியாயமா ? இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : முதலியார்களில் பல ரகம் இருக்கிறார்கள். எந்த முதலியார் என்பதைச் சொல்ல வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திரு. கே. ராஜாராம் : எந்த முதலியார் தங்களை உயர்ந்தவர்கள் என்று சொல்லுகிறார்களோ அவர்களைக் கருதிக்கொள்ளலாம். அவர்களே சொல்லுகிறார்கள். ஆகையால்தான் இந்த பிற்பட்டோர் சமூகத்தையும் வன்னியர்களையும் ஒன்றுசேர்த்து இவர்களுக்கும் அவர்களுக்கும் ஒரே வயதுதான் என்றுசொன்னால், அது நியாயமில்லை. இதுவரை இந்த அரசாங்கமும் சரி, நான் சார்ந்திருக்கும் அந்த அரசாங்கமும் சரி 25 ஆண்டுகளாக எப்படி அனுமதித்துக்கொண்டு வந்தது என்பது புரியவில்லை. இப்போதாவது சலுகை போட்டு, பிற்பட்ட வகுப்பினருக்கு என்று சலுகைகள் பெற்றுத்தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் சில முதலியார்கள் இடையாது. வேறுவிதமான முதலியார் என்று பட்டியலில் இருக்கிறதே தவிர, முற்போக்கு வகுப்பு என்று குறிப்பிட்டிருக்கிற நாடார், முதலியார், இவைகளெல்லாம் அந்தப் பிற்பட்ட வகுப்புப் பட்டியலில் இடையாது. ஆகவே, அன்றைய தினம் என்ன ஆதாரம் தரப்பட்டதோ அந்த ஆதாரத்தோடு பட்டியல் அமைந்திருக்கிறது.

திரு. கே. ராஜாராம் : அரசாங்கத்தால் வெளியிடப்படும் பாடப் புத்தகங்கள் ஒவ்வொன்றுவது சட்டசபை அங்கத்தினர்களுக்கு கொடுக்கப்பட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதை நாங்கள் பார்த்தால் இங்கே வந்து பேச வேண்டிய அவசியம் இல்லை. அப்போதைக்கப்போது செகரடரிக்கோ, அமைச்சர்களுக்கோ சஜஷன்களைச் சொல்லுவதற்கு வசதியாக இருக்கும். ஒவ்வொரு புத்தகத்திற்கு ஒவ்வொரு பிரதியை உறுப்பினர்கட்கு மேலவையிலும் பேரவையிலும் கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு அங்கத்தினர்கள் சில பேர் சொன்னதைக் கேட்கலாம்—பல ஊர்களில் பள்ளிக்கூடங்கள் என்று பெயர் இருக்கும், மரத்தடியிலிருந்து படித்துக்கொண்டிருக்கிறார்கள். மழை பெய்தால் வகுப்பு நடக்காது. இதற்கென்று ஒரு ரூ. 400 கோடியை ஒதுக்கிச் செலவழித்தால் கூட காணாது. அப்படிச் செய்யவேண்டுமென்று சொல்ல வில்லை. ஆரம்பப் பள்ளிக்கூடங்களைக் கட்டுவதற்கு என்று ஒரு திட்டம், 10 ஆண்டுத் திட்டம் போடுங்கள். அந்த 10 ஆண்டில் எல்லா ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கும் நல்ல கட்டட வசதியோடு இருக்கும் ஏற்பாடு ஒன்றைச் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

1973 மார்ச் 23] [திரு கே. ராஜாராம்]

பொதுவாக கல்லூரிகளுக்கான பாடப் புத்தகங்களை தமிழில் எழுதுவதற்கென்று மத்திய சர்க்கார் ஒரு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள். இம்மாதிரி, அந்தந்த மாநிலத்திற்குள்ள அடிப்படையில் கல்லூரிகளுக்கான பாடப் புத்தகங்களை தயார் செய்வதற்கென்று நிதியுதவி மத்திய சர்க்கார் அளித்திருக்கிறார்கள். அதே மாதிரி நமது மாநிலத்திற்கும் வருஷா வருஷம் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இவ்வருஷம் ஒரு கோடி ரூபாய் கொடுத்திருக்கிறார்கள்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : நான் அறிந்த வரை 5 ஆண்டுகளுக்கு ஒரு கோடி என்றுதான் கேள்விப்பட்டேன்.

திரு. கே. ராஜாராம் : ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை என்று சொல்லாததால் வருஷா வருஷம் கொடுக்கிறார்கள் என்று நான் நினைத்துவிட்டது நல்ல கொள்கைதான். எந்தெந்தப் பாடப் புத்தகங்களை வெளியிடவேண்டும் என்று பார்க்க வேண்டும். இது யானைப் பசிக்கு சோளப் பொறி கொடுத்த மாதிரி 5 ஆண்டுகட்கு ஒரு கோடி காணாது. நிறைய பணம் வேண்டும். மத்திய சர்க்கார் கொடுக்க முடியும். அவர்களிடம் நிறைய பணம் வாங்கும்படி நமது மாநில அரசை நான் கேட்டுக்கொள்கின்றேன். பொதுவாக மிகப் பெரிய பொறுப்பையேற்றுக்கொண்டிருக்கும் கல்வியமைச்சரவர்களுடைய கஷ்டம் எனக்குத் தெரியும். இவ்வளவு கஷ்டத்திலும் கல்வித் துறையைப் பொறுத்த வரையில், மற்றத் துறைகளை விட கூடுமான வரையில் இவர்கள் வளர்ச்சித் திட்டங்களுக்குப் போதுமான நிதியை அரசாங்கத்திலிருந்து பெற்றிருக்கிறார்கள் என்று நான் சொல்ல முடியும். எனென்றால் அடுத்து வரவிருக்கும் டிமாண்டைப் பற்றிக் குறைகளைச் சொல்ல வேண்டிய நிலைமை இருக்கும். ஆதலால் இப்போது சொல்லிக்கொள்கின்றேன். கல்வியமைச்சாவர்கள், கூடுமான வரை தமிழக நிதியில் இருக்கிற ரூ. 465 கோடியில் கிட்டத்தட்ட 99 கோடி ரூபாய் கல்விக்கும் தன்வசமுள்ள மற்றத் துறைகளுக்கு ரூபாய் 20, 25 கோடியைப் பெற்றிருக்கிறார்கள். அவர்களை நான் பாராட்டுகிறேன். மேலும் திறமையோடு நல்லமுறையில், அமைதியான முறையில் இந்த மாநிலத்தில் கல்வி நடைபெற வேண்டும். இப்போது அமைதி இருப்பதாகச் சொல்ல முடியாது. கடந்த 4, 5 மாதங்களாக அமைதிக்கு பங்கம் ஏற்பட்டிருக்கிறது. அமைதி நிலவ ஏற்பாடு செய்ய வேண்டும். பல கட்சிக்காரர்களைக் கூட்டி வைத்துப் பேசி நல்ல முடிவுக்கு வர வேண்டும். என். சி. சி. ஒரு நல்ல திட்டம். கம்பல்சரியாக ஒவ்வொரு மாணவனும் என். சி. சி.-யில் சேரவேண்டும். அமைதியுடன் அவன் நடக்க வேண்டும் என்பதற்காக முயற்சி பண்ணலாம். அவ்வப்போது நல்லொழுக்கத்தோடு நேர்ப்படுதலோடு இருப்பதற்கு மாணவருக்கு ஒரு பரிசை அளிக்கலாம். இம்மாதிரி ஏதாவது ஒரு நல்ல திட்டம் போட்டு, கல்விச் சாலைகள் அமைதியாக இருக்க கல்வியமைச்சரவர்கள் ஏதாவது செய்தால் என் போன்றவர்கள் மிகவும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். கல்வித் துறையை நல்ல முறையில் இயக்க ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாக் கட்சிக்காரர்களையும் கூட்டி, அரசியலைப் பள்ளிக்கூடங்களுக்குக் கொண்டு வராமல், அமைதியான முறையில் கல்வி கற்பிக்க, அவர் ஏற்பாடு செய்ய வேண்டும். அதற்கு இந்த அரசாங்கத்தில் என்ன

[திரு கே. ராசாராம்] [1973 மார்ச் 23

ஏற்பாடு செய்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை. அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு நான் முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, கல்விக் கொள்கைப்பற்றி இந்த மேலவையில் வைக்கப்பட்ட அறிக்கையையொட்டி, இந்த மேலவை உறுப்பினர் பெருமக்கள் தங்களுடைய சீரிய கருத்துக்களைச் சிறப்புற வழங்கியிருப்பதற்காக என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்தக் கல்வித் துறை எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதைப் பற்றி நேற்றைக்கும் முன் நாளும் நேற்றைக்கும் இன்றும் விவாதிக்க வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகி, வேறு எந்தத் துறை பற்றியும் இல்லாமல் 3 நாள் இழுத்துக்கொண்டு மேலவை உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை வழங்கியிருக்கிறார்கள். இந்தக் கல்வித் துறை மேலும் வளர வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு, கல்வியினுடைய தரம் வளர வேண்டும் என்பது மட்டுமல்ல, கல்வியினுடைய நிர்வாகம் சிறப்புற நடைபெறவேண்டும் என்பது மட்டுமல்ல, அதனுடைய பயன் எல்லோருக்கும் கிட்ட வேண்டும் என்ற கருத்தையும் எடுத்துச்சொல்லியிருக்கின்றார்கள். ஆக இன்றைக்கு மருத்துவத் துறையைப் பற்றிய விவாதம் நடைபெற இருந்தாலும், அதனுடைய நேரத்தை ஓரளவுக்கு நாம் எடுத்துக்கொள்ள வேண்டிய அளவுக்கு விவாதம் நடைபெற்றிருக்கிறது. ஆகவே, நீண்ட பல விளக்கங்களைத் தருவதற்கு நேரமில்லாத வகையில் ஒரு சில கருத்துக்களை மட்டும் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். கல்வியினுடைய நிலை வளர வேண்டுமென்கின்ற விதத்தில் அடிப்படையான ஆர்வம் அத்தனை பேருக்கும் இருக்கிறது என்பதை நாம் இங்கு காண்கிறோம். அதனுடைய இன்றியமையாத தன்மையை உணர்ந்த காரணத்தினால்தான், வேறு எந்தத் துறைக்கும் இல்லாத அளவுக்கு கல்வித் துறைக்கு மிக அதிகமான அளவுக்கு நாங்கள் செலவழித்து வருகிறோம். ஆக அந்த வகையில் செலவழிப்பதற்குக் காரணம் இந்தத் தலைமுறையில் செலவழிக்கப்படுகின்ற தொகைக்கு ஏற்ற பலன் எதிர்காலத்தில் எட்டியும் முதலுமாக சேர்த்துக் கிடைக்க வேண்டும் என்ற நோக்கம் தான் ஆகவே கல்வி என்கின்றபோது தமிழில் "கல்" என்று சொல்லப்படுவதற்கு உள்ளேயிருக்கின்ற அறிவு, ஆற்றலை வெளியே கொண்டு வருதல் என்று பொருளாகும். ஆகவே, அதனைப் பெறுவதற்குள்ள முயற்சிகளில் ஈடுபடுவோர் என்கின்ற வகையில்தான் நாங்கள் வழங்குகிறோம். எஜுகேஷன் என்று ஆங்கிலத்தில் சொல்லுகின்றபோது கூட, லத்தின் மொழியில் இருக்கின்ற "எடுகேட்" என்று சொல்லப்படுகின்ற சொல்லின் அடிப்படையில்தான் "எஜுகேஷன்" என்ற சொல் வந்திருக்கிறது. "எடுகேட்டார்" என்பதற்கு "அப் பிரிங்கிங் ஆப் சைல்டு" (up bringing of child) குழந்தை வளர்த்தல், அவர்களை ஈடேற வளர்ச்சியுறச் செய்தல் என்று பொருள் படத்தான் சொல்லியிருக்கிறார்கள். "புக் ஆப் நாலெட்ஜ்" (Book of knowledge), அறிவு வளர்ச்சியியல் என்பதில் விளக்கம் சொல்கின்றபோது,

1973 மார்ச் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

"In its broadest sense it means from all training of mind and character and also teaching techniques that will enable pupils to earn their livelihood,make use of their own special talents and be good and useful members of the community" என்று ஒரு வாக்கியத்தில் அந்தக் கல்வியினுடைய நோக்கத்தை, முக்கியத்துவத்தை அந்த ஆராய்ச்சியாளர் தெரிவித்திருக்கிறார். ஆகவே அந்தக் கல்வியினுடைய நோக்கமே அவர்களுடைய பண்பினைப் பண்படுத்தவும், அவர்களுடைய அறிவை வளர்க்கவும், அது மட்டுமல்லாமல் அந்த வளர்ச்சியின் மூலமாகப் தங்களுடைய வாழ்க்கை சிர்பெறுவதற்கு ஏற்ற வகையில் தனிச் சிறப்பினைப் பெறவும், அவரவர்கள் தாங்கள் பெற்றிருக்கின்ற நனி ஆற்றல் முதலியனவற்றினைச் சமுதாயத்திற்குப் பயன்படுகின்ற அளவுக்கும், மக்கள் அனைவருக்கும் பயன்படுகின்றவர்களாக மாற வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் இந்தக் கல்வி இருத்தல் வேண்டும் என்று நோக்கம் சொல்லப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மாண்புமிகு உறுப்பினர்கள் பலரும், தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்களும், எதிர்க் கட்சித் தலைவரவர்களும், திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த நோக்கம் நிறைவேற வேண்டும் என்பதில் அக்கறை அத்தனை பேருக்கும் இருக்கிறது. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டது போல், கட்சி மாறுபாட்டுக்கு இடமில்லாத அளவுக்கு, மாச்சரியத்திற்கு இடமில்லாத அளவுக்கு இந்தக் கல்வி நிலையில் அத்தனைபேரும் அக்கறை செலுத்தி அதைச் சிர்பெறச் செய்ய வேண்டிய பொறுப்பு இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொன்னார். அது வரவேற்கத்தக்கதொன்று. இந்த மக்கள் வளர வேண்டுமென்று குறிப்பிட்டார்கள். ஆட்சி வரும், ஆட்சி மாறும்; கட்சிகள் வரும், கட்சிகள் மாறும்; ஆனால் கல்வித்துறையைப் பொறுத்தவரையில், இந்தத் தலைமுறையில்மேற்கொள்கின்ற பல்வேறு முடிவுகள், எண்ணங்கள் எதிர்காலத்தில் பலன்களைத் தருகின்றனவாக அமையும். அந்தவகையில் எல்லோருடைய ஒத்துழைப்பும் அவசரமும், மிக, மிகத் தேவைப்படுகின்றது. எப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன? ஒவ்வொரு சிறுவனையும் சிறுமியையும் சிறப்புற ஆற்றல் பெற்றவர்களாக, அறிவு பெற்றவர்களாக, பண்பு படைத்தவர்களாக வளர்ப்பதற்கான வகையில் நாம் நமது கல்விச்சாலைகளையும் பொறுப்பான வகையில் அமைக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் இன்று பேசுகிறபோது, அமெரிக்க நாட்டின் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்ரஹாம் லிங்கன் அவர்கள் தன்னுடைய பையனைப் பள்ளிக்குக் கொண்டுபோய்ச் சேர்க்கும் போது, அதில் சேருகிறவனுக்குக் கேடு ஏற்படுகிற அளவுக்கு என்னென்ன சூழ்நிலைகள் ஏற்படும் என்பதைக் கருதி, அந்தக் கேடுபாடுகளிலிருந்து அந்தப் பையனை உலகம் காப்பாற்றவேண்டும்; சமுதாயம் காப்பாற்ற வேண்டும்; ஆசிரியர்கள் காப்பாற்றவேண்டும்; சுற்றி இருக்கின்றவர்கள் காப்பாற்ற வேண்டுமென்று வேண்டுகோள் விட்டதாக அந்த அறிக்கையை இங்கே படித்துக்காட்டினார்கள். அந்த அறிக்கையை எவ்வளவு உருக்கமாக அப்ரஹாம் லிங்கன் விட்டான் என்பதைக் காண்கிறோம். அந்த அமெரிக்க நாட்டிலேயே அப்ரஹாம் லிங்கன் போன்றவர்களே தன்னுடைய பையனை அனுப்புகின்றபோது இவ்வளவு கேடுபாடுகள் நிறைந்திருக்கின்றன, அதிலிருந்து தன்னுடைய பையனைக்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 23

காப்பாற்றிக்கொள்ளுதான் தன்னுடைய பையன் வளர்வான் என்று எண்ணு கின்ற சூழ்நிலை இருக்கின்றபோது, நம்முடைய நாட்டில் ஒவ்வொரு பையனையும் பள்ளிக்கு அனுப்புகிறபோது, எவ்வளவு கேடுபாடுகள் நிறைந்த சூழ்நிலையிலிருந்து அவனைக் காப்பாற்றிப் பாதுகாத்துத் தர வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதை உணர வேண்டும். ஆக அந்த வகையில் கல்வியைப் பொறுத்த வரையில், அதற்குச் செலவழிக்க வேண்டுமென்ற முறையில் அரசாங்கம் முடிந்த அளவுக்குச் செலவழித்து நாம் கரைனம் செலுத்திக்கொண்டு வருகிறோம்.

தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், நான் அடிக்கடி எடுத்துச் சொல்வது போன்று 1971-ஆவது ஆண்டு மக்கள் தொகை எண்ணிக்கை கணக்குப்படி 100-க்கு 42 பேர் தான் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள். மீதி 58 பேர் எழுதப் படிக்கத் தெரியாத நிலைமையில் உள்ளவர்கள். நாட்டில் இரண்டாவது இடம் பெறுகிறது. மாநிலத்தைப் பொறுத்த வரையில் கோவா முதலிடம் வகிக்கிறது. அங்கு 100-க்கு 60 பேர் எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள். அந்த 42 பேரும் எதையும் செய்யக்கூடியவர் களாக ஆற்றல் பெற்றவர்களாக இருக்கிறார்களா என்றால், அதுவுமில்லை என்ற நிலை இருக்கிறது. அந்த நிலைமையைப் போக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். நிச்சயமாக அதை நீக்க நாம் அத்தனைபேரும் சேர்ந்து பாடுபட வேண்டியவர்களாக இருக்கிறோம் என்பதற்காகவே கணக்கைச் சொல்கிறேன். இந்த 42 பேரையும் எடுத்துக் கொள்வோமே யானால், 1, 2, 3, 4, 5-வது வகுப்பு படித்து விட்டு, ஆறுவதில் அடி எடுத்து வைக்காமல் நிலைவிட்டவர்கள் 26 பேர். இரண்டாவது படித்து விட்டோம், மூன்றுவது படிப்போம், ஆனால் நான்காவது வகுப்பு வேண்டுமா வேண்டாமா என்று யோசனை செய்து விட்டு மூன்றுவதோடு நின்று விட்டவர்கள் 16 பேர். இவைகளைத் தாண்டிப் போய் இறுதி வகுப்பில் சென்றவர்கள் $6\frac{1}{2}$, 7 பேர்தான் தாண்டுகிறார்கள். பிறகு $1\frac{1}{2}$ பேர்தான் பட்டம் பெறுகின்ற அளவுக்கு, அதாவது 200 பேருக்கு கணக்கு எடுத்தால் 3 பேர்தான் பட்டதாரியாக வருகிறார்கள். அதற்காகச் செலவழிக்கின்ற அளவில் தொழில் கல்வி, மற்ற கல்விக்கெல்லாம் சேர்த்து இந்த ஆண்டு 98 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதர பல்வேறு வகையான கல்விச் செலவுகளைச் சேர்த்துக்கணக்குப் பார்த்தால், அதாவது மருத்துவத் துறை, பொறியியல் துறை, விலங்கியல் துறை, வேளாண்மைத் துறை, ஆகிய எல்லாத் துறைகளையும் கணக்கிட்டு மதிப்பிட்டால், கிட்டத்தட்ட 120 கோடி, 122 கோடி ரூபாய்க்கு மேல் வருகிறது. அதைத் தவிர ஊராட்சி ஒன்றியங்கள், நகர மன்றங்கள், மாநகராட்சி மன்றங்கள் செலவழிக்கின்ற தொகை, தனியார் பள்ளிகள், தனியார் கல்லூரிகள், மற்றவர்கள் கல்விக்காக அறக்கட்டளைகள் ஏற்படுத்திச் செலவழிக்கின்ற தொகை, ஒவ்வொரு மாணவனுக்கும் அந்தந்தப் பொறுப்பிலிருக்கின்ற பெற்றோர்கள் உடை, உணவு, துணி மணி, இவற்றை நீக்கி, கல்விக்காகப் பொறுப்பேற்றுச் செலவழிக்கின்ற தொகை, இவற்றையெல்லாம் சேர்த்துக் கணக்குப் பார்த்தால் கிட்டத்தட்ட தமிழகத்தில் மட்டும் 1973-74-ம் ஆண்டில் 165 கோடி ரூபாய் அளவுக்கு கணக்கு வருகிறது. ஆக அந்த அளவுக்கு கல்விக்கு நாம் வசதி செய்து கொடுத்திருக்கிறோம். அதனுடை பலன் கிட்ட வேண்டுமென்றுதான் பலரும் இங்கு எடுத்துச் சொன்னார்க

1973 மார்ச் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் இந்தக் கல்விச்சாலைகள் அமைதியான முறையில் நடைபெற வேண்டுமென்று எடுத்துச்சொல்லி அப்படிப்பட்ட சூழ்நிலை இல்லை, அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டு மென்று சொன்னார்கள். அந்த வகையில் பரவலாகத் திட்டம் தீட்டி அமுல்படுத்த வேண்டிய முறையில் செய்யப்பட வேண்டியவை இன்னும் இருக்கின்றன என்பதை ஒத்துக்கொள்கிறேன். இதில் மாற்றங்கள் ஏற்பட வேண்டும் என்பதையும் ஒத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் சொன்ன மாதிரி பல்வேறு வகையான குழுக்கூட்டங்கள், கல்வி மகாநாடுகள், ஆராய்ச்சியாளர்கள் மாநாடு போன்றவற்றை, யுனெஸ்கோ அடிப் படையில் செய்து மாநில அளவில் கேடுகளைப் போக்குவதற்கும், மீண்டும் ஏற்பட இடமளிக்காத அளவுக்கும் சூழ்நிலையை உருவாக்க வழி வகை இருக்கிறதா என்று பார்த்தால் எல்லோரும் சேர்ந்து அப்படிப்பட்ட தொடர்ச்சியான வேலையில் ஈடுபடவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். தமிழ் நாட்டைப் பொறுத்தவரையில், சென்ற ஆண்டுக் கணக்கை எடுத்துப்பார்த்தால், அரசு செலவழிப்பது, தனியார் துறை, மற்றத் துறைகள், உராட்சித் துறைகள் எல்லாம் செலவழிப்பதை நீக்கி, அரசு செலவழிக்கின்ற கணக்கைப் பார்த்தால், கல்விக்குச் சிறப்பாகச் செலவழிக்கின்ற கணக்கைப் பார்த்தால், தொடக்கப் பள்ளியில் ஒன்று முதல் ஐந்து வகுப்பு வரையில் ஒவ்வொரு மாணவனுக்கும் அரசு ஆண்டு ஒன்றுக்குச் செலவழிப்பது ரூ. 61.78. ஒவ்வொரு மாணவனும் ஐந்தாவது வரையில் படிப்பதற்கு அரசு செலவழிக்கும் தொகை ஒரு ஆண்டுக்கு அந்த அளவு. உயர் தொடக்கப்பள்ளியைப் பொறுத்த வரையில், 6, 7, 8 வகுப்புகளில் படிக்கின்ற ஒவ்வொரு மாணவனுக்கும் செலவழிப்பது ரூ. 111.40. உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில், அதாவது 9, 10, 11-வது வகுப்புகளில் படிக்கும் மாணவர்களுக்கு உராட்சி மன்றம், நகர மன்றங்கள், தனியார் துறை இவைகள் நீங்கலாக, அரசுத் துறை மட்டும் செலவழிப்பது ஒரு ஆண்டுக்கு ரூ. 244·80 காசு ஆகிறது.

புகுமுக வகுப்பில் கலைப் பிரிவிலே படிக்கிற மாணவர்களுக்கு மட்டும் 380 ரூபாய் ஆண்டு ஒன்றுக்கு ஒவ்வொரு மாணவருக்கும் ஆகிறது. அறிவியல் பிரிவிலே படிக்கிற மாணவனுக்கு கிட்டத்தட்ட 500 ரூபாய் ஆகிறது. ஒவ்வொரு மாணவருக்கும். பட்டப் படிப்பில், கலைப் பிரிவில் படிக்கிற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் பி. எஸ்.ஸி. மாணவர்களுக்கு, பி. ஏ. படிக்கிற மாணவர்களுக்கு 410 ரூபாய் ஆகிறது. அறிவியலிலே பி. எஸ். ஸி படிக்கிற ஒவ்வொரு மாணவனுக்கும் 600 ரூபாய் ஆகிறது. பட்ட மேற்படிப்பு. போஸ்ட் கிராஜுவேட் படிக்கிற மாணவர்களுக்கு, கலைப் பிரிவிலே எம். ஏ. படிக்கிற மாணவனுக்கு 775 ரூபாய். எம். எஸ். ஸி படிக்கிறவர்களுக்கு 1,120 ரூபாய் ஒவ்வொரு மாணவனுக்கும் ஆகிறது. பாலிடெக்னிக் படிக்கின்ற மாணவர்கள் ஒவ்வொருவருக்கும், 3 ஆண்டு பாலி டெக்னிக் டிப்ளமா படிக்கின்ற ஒவ்வொரு மாணவனுக்கும் 2,880 ரூபாய் ஆகிறது. போஸ்ட் கிராஜுவேட் ஸ்டடீஸுக்கு இரண்டு வகுப்புக்கு மேல் ஆகிறது. பாலிடெக்னிக் படிக்கிற ஒவ்வொரு மாணவனுக்கும், தொழில் நுட்பக் கல்வி கற்றுக் கொடுக்கிற வகையில்

செலவு 2,880 ரூபாய் ஆகிறது. வேளாண்மைக் கல்லூரியில் ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு 7,000 ரூபாய் ஆகிறது. பொறியியல் கல்லூரியில் படிக்கிற ஒவ்வொரு மாணவனுக்கும் ஆண்டு ஒன்றுக்கு 8,565 ரூபாய் ஆகிறது. மருத்துவக் கல்லூரியில் படிக்கிற ஒவ்வொரு மாணவருக்கும் ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 10 ஆயிரம் ரூபாய் ஆகிறது. என் இவற்றையெல்லாம் நான் சொல்ல விரும்புகிறேன் என்றால், இவைகளுக்கெல்லாம் வட்டியும் முதலுமாக, பணமாக நாம் எதிர்பார்க் காவிட்டாலும் கூட இவர்கள் அறிவு மூலமாக, ஆற்றல் மூலமாக தொண்டு மூலமாக வீழ்ச்சியுற்றுக் கிடக்கிற, வீழ்மைப்பட்டுக்கிடக்கிற, வறுமை யில் இருக்கிற இந்த நாட்டினுடைய நிலைமைகள் மாற்றப்பட அவர்களு டைய அறிவு, ஆற்றல் பயன்பட வேண்டுமென்ற நோக்கத்தின் அடிப்படையில் தான் அத்தனை பேருடைய ஒப்புதலின் பேரில் இப்படிப் பெரும் செலவிற்கு ஆளாகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயராம ரெட்டியார் கூறுகின்றபோது, இலவசக் கல்வி என்று வைத்திருப்பதினாலே அதற்கு ஒரு மரியாதையில்லாமல், மதிப்பு இல்லாமல் போய்விடுகிறது, எனவே அதற்கு ஏதேனும் ஒரு மாற்றுத் திட்டத்தை அமுல் செய்யுங்கள் என்று சொன்னார்கள். ஆகவே நாம் இன்னும் பல்வேறு வகையிலே சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

குடியானவர்கள் அடிப்படையில் வருமானம் இல்லாதவர்கள், இப்படிப் பட்ட மக்கள் ஏராளமாக இருக்கிறார்கள் என்ற கணக்கும் நம்மிடத்திலே வருகிறது. 1971-ம் ஆண்டு மக்கள் கணக்குப்படி 22½ கோடி மக்களுக்கு மாதம் ஒன்றுக்கு 20 ரூபாய்க்கும் கீழே தான் வருமானம் வருகிறது. அப்படிப்பட்டவர்கள் 22½ கோடி மக்கள் இருக்கிறார்கள்.

திரு எஸ். ஜெயராம ரெட்டியார்: மாண்புமிகு அமைச்சரவர்கள் கொடுத்த புள்ளி விவரங்களை ஒரு நோட்டீஸாகப் போட்டு பள்ளிக்கூடங் களில் படிக்கிறவர்களிடத்திலே கொடுத்தால், இப்போது விவசாயக் கல்லூரியில் வீட்டைக் செய்கிறவர்களிடம் வருஷத்திற்கு 7 ஆயிரம் ரூபாய் செலவழிக்கிறோம் என்று ஞாபகப்படுத்துகிற முறையிலே கொடுத்தால் நன்றாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: ஆகவே தான் ஏழ்மையிலே இருப்பவர்கள் எப்படியேனும் அறிவு பெற்று, ஆற்றல் பெற்று, சமுதாய நிலைமையில் சமத்துவ நிலை பெற்றுநூறுண்டுகளாக, ஆயிரமாண்டுகளாகப் புறக்கணிக்கப்பட்டிருக்கிற, பரம்பரை, பரம்பரையாக வந்திருக்கின்ற தடுப்புகள் எல்லாம் வசதி, வாய்ப்புப் பெற்று பரவ லாக இருக்க வேண்டுமென்று பாவலாக் கல்வி தரப்படுகிறது. மற்ற நாடு களிலே பல்வேறு வகைகளிலே முன்னேறி வந்திருக்கிறார்கள். பல்வேறு வகைகளிலே முன்னேறி வர வேண்டியவர்களாக நாம் இருந்துகொண் டிருக்கிறோம். அந்த வகையிலே பார்க்கிறபோது அவர்கள் சொன்ன கருத்து சில பல நாடுகளிலே இருந்து வருகிறது. இந்த நாட்டுக்குப் பொருந்தி வருமா இல்லையா என்பதைப் பார்க்க வேண்டும் என்று நான் ஒரு தடவை சொல்லிவிட்டேன். சொன்ன பிறகு ஒரு பெரும் எதிர்ப்பு

வந்தது. பிறகு அடக்கிக் கொண்டேன். என்ன கருத்து என்று சொன்னால், சாதாரணமாக, ஏழை எளியவர்களுக்கு, முடியாத வர்களுக்கு ஸ்காலர்ஷிப் என்று இல்லாமல், சில நாடுகளில் அதை லோனுகத் தருகிறார்கள். ஆரம்பத்திலிருந்து கடைசி வரையில் அதை கடனுகவே எழுதிக் கொண்டு வருகிறார்கள். அவர்கள் வாழ்க்கையில் இறங்கியதற்குப் பிறகு, சம்பாதிக்க முடியாதவர்களுக்கு "வெய்வ்" பண்ணுகிறார்கள். எந்தக் காரணத்தைக் கொண்டாவது அவர்கள் சம்பாதிக்க முடியாத ஒரு சூழ்நிலையைப் பெற்று விட்டார்கள் என்றால், அவர்கள் திருப்பி அந்தக் கடனைச் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை. ஒரு குறிப்பிட்ட வேலைக்கு வந்தால், வியாபாரத்திற்கு வந்தால், அல்லது பணம் சம்பாதிக்கிற ஒரு நிலைமை வருமானால், அவர்கள் பள்ளியில் பெற்ற அத்தகைய கடனை, படிப் பதற்கு வாங்கிய அத்தகைய பணத்தை 30, 40 ஆண்டுக் கால வாழ் நாளிலே திருப்பி அந்த ஆட்சிக்குச் செலுத்த வேண்டுமென்ற முறையை வைத்து, அதற்கு ஸ்காலர்ஷிப் என்று பெயர் இல்லாமல், லோன் என்று பெயர் தந்திருக்கிறார்கள். இவ்வளவு தருகின்ற போது, அதற்குப் பெயர் "ஸ்காலர்ஷிப்" என்று இல்லாமல் "லோன்" என்று தந்து விட்டு பிறகு, அவர்கள் வசதி பெறுகின்றபோது சமுதாயத்திற்குப் பயன் படும். பின் சந்ததியினருக்குப் பயன்படும், மற்றவர்களுக்குப் பயன்படும் முறை சில நாடுகளிலே இருக்கிறது. சில நாடுகளிலே இந்த முறையை வைத்திருக்கிறார்கள். மேற்படிப்பு, கல்லூரிப் படிப்பைப் பொறுத்த வரையில், அந்த முறை இருக்கிறது. அந்த முறையை நான் சொன்ன போது, அரசாங்கம் எதற்காக இருக்கிறது, வரிப்பணத்தை எதற்காக வாங்குகிறீர்கள், எதற்காக கடனுக அளிக்கிறீர்கள், ஆகையால் கடுமையாக எதிர்க்கிறோம் என்று விமர்சித்து, பத்திரிகையிலே வந்த தாக்குதலைத் தாங்க முடியாமல், நான் அந்தக் கருத்தைச் சொல்வதை நிறுத்திக் கொண்டிருக்கிறேன். எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், இப்படிச் சில நாடுகளிலே இருக்கிறது. அந்த நிலைமைகள் வர வேண்டும். வேறு பல நாடுகளிலே பல்வேறு வகைகளிலே அதை மாற்றிக் கொண்டு வருகின்ற தன்மைகளைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்கள். இப்போது யுனெஸ்கோ மூலமாக ஒரு கமிட்டி அமைத்து, உலக நாடுகளையெல்லாம் பார்த்துவிட்டு, அவர்கள் ஒரு அறிக்கை தந்த வகையிலும் கூட அதற்கு ஒரு குழுவை வைத்தார்கள். அந்தக் குழுவினர் ஒரு அறிக்கையை வைத்திருக்கிறார்கள். அந்த அறிக்கையிலே பல்வேறு கருத்துக்களை எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள்.

"In the past the main concern had been to do more than before and later on better than before".

ஏற்கனவே இருந்த கல்வி முறையை பரவலான. அதிகமான கல்வி. அதிகமான பேருக்கு வரவேண்டுமென்று சொல்கிற அளவிற்கு நோக்கம் இருந்தது. அந்த நிலை மாறி இப்போது அதற்குப் பிறகு, 'Later on the better before' ஏற்கனவே இருந்த கல்வி முறையை விடச் சிறந்த முறையிலே கல்வி முறை இருக்க வேண்டு மென்று

'We must now ask ourselves how to do it different than before'.

எற்கனவே இருந்த கல்வி முறையைவிட மாற்றங்களோடு கூடிய புதிய கல்வி முறை வரவேண்டும் என்ற அளவிற்கு 'Because what was before no longer either cheatable or relevant'. என்று யுனஸ்கோ அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். ஆனால் நாம் இந்த மூன்று கட்டங்களையும் சேர்ந்தே, ஒவ்வொரு கட்டத்தையும் தாண்டி மற்ற நாடுகள் செய்யும்போது நாம், பரவலான அளவிற்கு பெரும்பாலோருக்குக் கல்வி தர வேண்டிய வகையில் இருக்கிறோம். (Better than before) எற்கனவே இருந்த கல்வியைவிடச் சிறந்த கல்வியைத் தரவேண்டுமென்ற நோக்கத்தில் ஈடுபடுகிறார்கள். அதே சமயத்தில் (different than before) வேறுபட்ட கல்வி முறையைக் கொண்டுவர வேண்டிய தன்மையிலே இருக்கிறார்கள். இப்படிப் பல்வேறு தன்மையில் இருக்கிற காரணத்தினால் தான், எல்லோருடைய ஒத்துழைப்பு, ஆதரவின் அடிப்படையிலே தான் இந்தத் தன்மைகளை நாம் நிறைவேற்ற வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகைகளுக்கு அத்தனை பேருடைய ஆதரவும், மற்றவைகளும் கிடைக்குமென்ற தன்மையை நான் கூறிக்கொள்கிறேன்.

கல்வியின் தரம் உயர வேண்டுமென்று பல்வேறு வகைகளிலே பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நாம் முடிந்த அளவிலே எந்தெந்த வகையிலே செய்து வருகிறோம் என்பதை இந்தக் கல்விக் கொள்கை பற்றி வெளியிட்டிருக்கிற அறிக்கையில் எடுத்துத் தந்திருக்கிறோம்.

அடிப்படையிலிருந்து கடைசி வரையில் இந்தப் பாடத் திட்டங்களை காலத்திற்கேற்ற அளவிற்கு, அவர்களுக்குத் தேவையான கருத்துக்களைத் தர வேண்டுமென்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, பல்வேறு துறைகளில் இருக்கின்ற வல்லுநர்கள் அடங்கிய குழுக்கள் போடப்பட்டு, 1 முதல் 11 வரை உள்ள வகுப்புகளுக்கு எல்லாப் பாடத் திட்டங்களும் மாற்றியமைக்கப்பட்டு, இந்தப் புதிய, மாற்றியமைக்கப் பட்ட பாடத் திட்டத்தினுடைய அடிப்படையிலே தான் இப்போது நூல்கள் வெளியிடப்பட்டு நடைமுறைக்குக் கொண்டு வரப்படுகின்றன. ஆகவே இது காலத்திற்கு ஏற்றபடியும், கருத்தை ஒட்டிய வகையிலேயும் பயன்படுகிற அளவிலேயும் இருக்க வேண்டும். தேவையற்ற கருத்துக்களை ஒருவனுடைய உள்ளத்திலே ஒரு சுமையாக வைத்துக்கொள்கிற கல்வியாக இல்லாமல், பயன்படக்கூடிய கல்வியாக இருக்க வேண்டு மென்ற நோக்கத்தை அடிப்படையாக வைத்து, 1 முதல் 11 வரை யுள்ள வகுப்புகளுக்கு பாடத் திட்டங்கள் மாற்றியமைக்கப்பட்டிருக்கின்றன. அந்த அடிப்படையில் பாடப் புத்தகங்கள் போடப்பட்டு வருகின்றன. 1 முதல் 5 வகுப்பு வரையிலே கணக்கு, அறிவியல், ஆகிய இரண்டு பாடங்களைத் தவிர மற்றப் பாடங்களெல்லாம் புகுத்தப்பட்டு விட்டன. கணக்கு, அறிவியல், ஆகிய இரண்டு பாடங்களும், அடுத்த ஆண்டிலிருந்து புகுத்தப்பட இருக்கின்றன. ஏற்கெனவே அறிவியல் பாடம் இட்டத்தட்ட 1 முதல் 5 வகுப்பு வரையில் சொல்லிக் கொடுக்கப்படாத ஒன்றாக, மேலெழுந்த வாரியாகச் சொல்லிக் கொடுக்கப்படுகின்ற ஒன்றாக இருந்தது. அதைத் திவிரமாகச் சொல்லிக் கொடுக்கவேண்டு மென்ற முறையிலே வைத்து அதற்காகத் தனிப் பயிற்சி ஆசிரியர் களுக்குத் தர வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டு, இப்போது

54 ஆயிரம் ஆசிரியர்களுக்கு, துவக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு இந்தத் துறையில் பயிற்சி அளிக்கப்பட்டு, அடுத்த ஆண்டிலிருந்து இந்த முறை நடைமுறைக்கு வருகிறது. ஆங்கிலத்தைப் பொறுத்த வரையில், 5-வது வகுப்பிலிருந்து மொழி என்ற அளவிலே கற்றுக் கொள்ளலாம் என்று இருந்தது, மூன்றாவது வகுப்பிலிருந்து கட்டாய மாகக் கற்றுக் கொள்ளலாம் என்று புகுத்தப்பட்டது மட்டுமல்லாமல் மொழி அளவிலே சொல்லிக்கொடுக்கலாம், மூன்றாவது வகுப்பிலும், 4-வது வகுப்பிலிருந்து புத்தகமும், எட்டாவிலும் வைத்துக் கொள்ள லாம் என்று இருந்ததை மாற்றி, மூன்றாவது வகுப்பிலிருந்து எட்டாவில் சொல்லிக் கொடுப்பது, எழுதுவது ஆகிய முறைகளைக் கொண்டு வரவேண்டுமென்று இருக்கிறது. ஆங்கிலத்தில் தனிப் பயிற்சியும், மற்றவைகளும் பெற வேண்டும் என்பதற்காக பிரிட்டிஷ் கவுன்சிலின் ஆதரவின் கீழ், அதற்கான பயிற்சி தரப்பட்டு வருகின்றது. அதே மாதிரி கல்லூரிப் பாடத் திட்டங்களை இப்போது பல்கலைக் கழகங்கள் மாற்றியமைப்பதற்கான ஒரு முயற்சியை மேற்கொண்டிருக்கிறார்கள்.

இங்கே பயிற்சி மொழி எந்த மொழியாக இருக்க வேண்டுமென்ற கருத்துக்கள் பரிமாறப்பட்டன. நம்முடைய மாண்புமிகு துணைத் தலைவர் திரு ம.பொ. சிவஞானம் அவர்கள் இங்கே நேற்று எடுத்துத் தெரிவித்தார்கள். அவர்கள் தெரிவித்த கருத்துக்கள் அத்தனையிலும் நான் ஒரு சிறிதும் மாறுபடவில்லை. அந்தக் கருத்துக்கள் அத்தனை யையும், அத்தனை பேரும் ஏற்றுக்கொள்வார்கள். நானும் முழுக்க, முழுக்க, ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் நடைமுறைப்படுத்து கின்றபோது, பல்வேறு சங்கடங்கள், பல்வேறு தொல்லைகள் ஏற்படுகின்ற காரணத்தினால், படிப்படியாகப் போகவேண்டிய அத்தகைய கட்டங்கள் இருக்கின்றன. நம்முடைய நோக்கம் நல்லதாக இருந்தாலும் கூட, இந்த நோக்கத்தை நடைமுறைப்படுத்துகின்றபோது பல்வேறு இடர்பாடுகள் வந்து விடும். எந்த மொழி கல்வி மொழியாக இருக்க வேண்டுமென்கிறபோது, தமிழிலே இருக்க வேண்டுமென்றார்கள். அதை, அரசாங்கக் கல்லூரி களைப் பொறுத்த வரையில், கொண்டு வருகின்ற நிலைமையில் தமிழில் இருக்க வேண்டாமென்று கிளர்ச்சி செய்தார்கள். எந்த மாணவர்கள் தமிழிலே இருக்க வேண்டுமென்று கிளர்ச்சி செய்தார் களோ, அதே மாணவர்கள் எல்லோரும் எங்களுக்கு ஆங்கிலத் திலே வேண்டுமென்று பெரும் கிளர்ச்சி செய்ததன் காரணமாக, பல கல்லூரிகள் மூடப்பட்டு, டாக்டர் ஏ. லட்சுமணசாமி முதலியார் அவர் களுடைய தலைமையின் கீழ் ஒரு குழு அமைக்கப்பட்டு, திரு சந்திரன் தேவநேசன், திரு தாமோதரன் போன்றவர்களெல்லாம் அந்தக் குழு விலே இடம் பெற்று, அவர்கள் மூலம் ஒரு அறிக்கை பெறப்பட்டு, இப்போது ஒவ்வொரு கல்லூரியிலும் ஒரு வகுப்பாவது ஆங்கிலத் தில் கட்டாயம் இருக்க வேண்டும், அரசினர் கல்லூரியிலும் இருக்க வேண்டும் என்று முடிவெடுக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல சங்கடங் களைத் தவிர்த்து நாம் வரவேண்டிய நிலைமைகள் இருப்பதன் காரணமாகத் தான் இப்படிப்பட்ட நிலைமைகள் இருக்கின்றன. அவருடைய நோக்கம் ஆகியவைகளை நிறைவேற்ற வேண்டுமென்பதிலே இஞ்சித்தும் மாறுபாடு இல்லை. அவைகளை வழிமுறைப்படுத்துவதற்கு இன்னும் அதிகமான முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டும் என்பதையும் ஒப்புக்கொள்கிறேன்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 23

3-00 பி.ப. அந்த வகையில்கூட, தமிழிலே படித்து வருகின்றவர்களுக்கு முன்னுரிமை தரவேண்டுமென்று 1971-லே தேர்வு ஆணைக் குழுவிடம் அரசு கூறியிருக்கிறது. எனெனில் சில குறிப்பிட்ட துறைகளைத் தவிர, மற்றைய துறைகளில் தமிழ் அறிவு தேவைப்படுகிறது. எனவே அந்த நிலை ஏற்படும்போது, அவைகளுக்கு முன்னுரிமை தர வேண்டுமென்ற தன்மையை வைத்திருக்கிறோம். ஆட்சித் துறையிலும் சரி, மற்ற துறைகளிலும் சரி, தமிழைத் தீவிரப் படுத்த வேண்டுமென்பதை ஒத்துக்கொள்கிறோம். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொண்டு வருகிறது. ஆனால் மொழி அளவிலே ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள ஆட்சேபணையில்லை என்பதை நமது மாண்புமிகு துணைத் தலைவர் திரு ம.பொ.சி. அவர்களே குறிப்பிட்டார்கள். அந்தக் கருத்தை பலரும் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அதைத்தான் நாமும் சொல்லிக் கொண்டு வருகிறோம். தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டுமென்று அவர் சொன்னது தமிழ் வளர வேண்டுமென்ற காரணத்தினால்கூட, அல்ல. அறிவு வளர வேண்டுமென்பதற்கும் ஆற்றல் வளர வேண்டுமென்பதற்கும் அந்த முயற்சியை படிப்படியாகக் கொண்டு வர வேண்டியிருக்கிறது. அதற்கான எல்லா முயற்சிகளையும் முறைப்படி அரசு மேற்கொள்ளும் என்பதை இந்த வாய்ப்பிலே நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அந்த வகையிலே மாணவர்களுக்கு ஊக்கம் தர வேண்டுமென்பதற்காக புகுமுக வகுப்பில் ரூபாய் 50-ம் பட்டப்படிப்புக்கு ரூ. 150-ம் புத்தகங்கள் வாங்குவதற்காக, மற்றவகைளுக்காக வழங்கப்படுகிறது.

இப்போது கிட்டத்தட்ட 51,000 சில்லரை பேர்கள் புகுமுக வகுப்பில் ஆங்கிலம் எடுத்துப் படிக்கிறார்கள். 21,000 சில்லரை பேர்கள் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கிறார்கள். அதேபோல் பட்டப் படிப்பில் 16,000 சில்லரை பேர்கள் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்துப் படிக்கிறார்கள். ஆக அவர்களுக்கு இருக்கிற அச்சம், அவர்களை வாழ்க்கையில் எந்த அளவுக்கு ஏற்றுக்கொள்ளுவார்கள் என்பதுதான். அந்த முயற்சியில்தான் நாம் படிப்படியாக முன்னேற வேண்டியவர்களாக இருக்கிறோம். அதற்கான முயற்சிகளை மெல்ல மெல்ல மேற்கொள்ள வேண்டியவர்களாக இருக்கிறோம். தமிழைத் தாய் மொழியாகக் கொண்டுள்ளவர்கள் அதிலே சிந்தனை செய்து செயலாற்றுகிற தன்மையை, பிற நாடுகளில் உள்ளதைப் போல், "Original thinkers" என்ற அளவுக்கு உண்டாக்க முடியும். எனவே அந்த நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக எல்லோருடைய ஒத்துழைப்பையும் தரும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அந்த அடிப்படையில் தீவிரமான முயற்சிகளை மேற்கொண்டுள்ளவர்களாக நாம் இருக்கிறோம். ரேஸ் குதிரைக்கும், வண்டிக் குதிரைக்கும் வேறுபாடு இருக்கிறது. ரேஸ் குதிரை வேகமாக ஓட முடியும், அப்படித்தான் நானும் ஓடினேன். ஆட்சிப் பொறுப்புக்கு வந்த பிறகு, வண்டியில் கட்டப்பட்ட குதிரை மாதிரி ஆகிவிட்டது. அதிலும் பாரத்தையும் சேர்த்து இழுத்துக்கொண்டு போவதென்றால்....

மாண்புமிகு சட்டமன்றத் துணைத் தலைவர் : ரேஸ் குதிரை அதற்குரிய வேகத்தில் போகலாமல்லவா?

1973 மார்ச் 23]

மாண்புமிகுடாக்டர் இரா. நெடுஞ்செழியன் : ரேஸ் குதிரை அந்த வேகத்தில் போனால்தான், இந்தக் குதிரை அதைப் பார்த்து ஓட முடியும். நோக்கம் இந்த அளவுக்கு இருக்க வேண்டுமென்று வற்புறுத்திக்கொண்டு வரவேண்டியதுதான் ; அதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டியதுதான். அந்த முயற்சியைத் தனித் தனியாக எடுத்துக்கொண்டு வருகிறோம். அதைத் தீவிரப்படுத்த இலாகாவினர் தக்க முயற்சிகளை மேற்கொண்டுள்ளனர் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

பிற மொழிகளுக்கு, மைனாரிடி மொழிகளுக்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்று சொன்னார்கள். தமிழக மாநிலத்தைப் பொறுத்த மட்டில், 13 மைனாரிடி மொழிகளை பள்ளிக்கூடங்களில் வைக்க வாய்ப்பு அளித்திருக்கிறோம். குஜராத்தி, மராத்தி, வங்காளம், இந்தி என்று பல்வேறு மொழிகள் இருக்கின்றன. அந்த மொழிகளைப் படிப்பவர்கள் தமிழ் படிக்க வேண்டுமென்று ஆர்வம் காட்டுகிறார்கள். அதற்கும் பள்ளிக் கல்வி இயக்குநர் அவர்கள் ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். இப்போது வகுக்கப்பட்டுள்ள பாட முறைகளுக்கேற்ப நேரங்களை ஒதுக்குவதில் கடினம் ஏற்படுகிறது. "அவுட் ஆப் தி பீரியட்" என்று ஒதுக்கி, கூடுதலான பீரியடுகளில் குறிப்பிட்ட மாணவர்கள் சேர்ந்து தமிழ் படிப்பதென்றால், அதற்கான எல்லா வாய்ப்புகளையும், வசதிகளையும் செய்ய அரசு ஆயத்தமாக இருக்குமென்பதைச் சொல்லியிருக்கிறோம். இப்போது திருக்கிற எந்த வகுப்பையும் எடுத்துவிட்டு, அதில் தமிழ் பயிற்சி என்று வைப்போமானால், மற்ற பள்ளிக்கூடங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, அந்தப் பீரியடுகள் சரியாக வரா. அந்தப் பீரியடுகளுக்கு அப்பாற்பட்டு, தனிப் பீரியடாக வைத்து, கற்றுக்கொள்ளுவதற்கு ஆயத்தமாக இருக்கக் கூடிய பள்ளிகளுக்கு அந்த வாய்ப்பு, வசதிகளைச் செய்யலாமென்று முயற்சிகள் எடுத்துக்கொண்டு வருகிறோம்.

கல்லூரிக் கல்வி முறைகளில் மாற்றங்கள் எற்பட்டதைக் குறித்து, இங்கே குறிப்புகள் தந்திருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கருத்துக்களைக் கூற வேண்டுமென்பதற்கான எண்ணத்தின் அடிப்படையில்தான் வைக்கப்பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் இண்டர் மீடியட் 2 ஆண்டுக் காலம், பட்டப் படிப்பு 2 ஆண்டுக் காலம், மேற்பட்டப் படிப்பு 2 ஆண்டுக் காலம், இடையில் "ஆனர்ஸ்" கோர்ஸ் என்று 3 ஆண்டுக் காலம் என்று இருந்தது. அதில் மாற்றங்கள் வந்து 1956-57-ல் புகுமுக வகுப்புகள் வந்தன. இந்தப் புகுமுக வகுப்பை எல்லாப் பல்கலைக் கழகங்களும் கையாண்டு, பழைய முறையே நல்லதென்ற முடிவுக்கு வந்து, ஆந்திரா, கேரளா, மைசூர் மாநிலங்களில் மறுபடியும் 10 ஆண்டுகள் பள்ளிப் படிப்பு ; 2 ஆண்டுகள் இடைநிலை வகுப்பு ; 2 ஆண்டுகள் பட்டப் படிப்பு ; 2 ஆண்டுகள் மேற்பட்டப் படிப்பு என்று ஆக்கியிருக்கிறார்கள். நாம் 11 ஆண்டுகள், அதற்குப் பிறகு ஒரு ஆண்டு ; பிறகு 3 ஆண்டுகள் ; பிறகு 2 ஆண்டுகள் என்று வைத்திருக்கிறோம். அந்த வகையில் மற்ற மாநிலங்களோடு நாம் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, பல சங்கடங்கள் வருகின்றன. நம்முடைய மாணவர்கள் பிற மாநிலப் பல்கலைக் கழகங்களில் போய்ச் சேரும்போது இரண்டுக்கும் ஒத்து வராத நிலை ; ஓராண்டு கூடப் படிக்க வேண்டுமென்று அங்கு வற்புறுத்துகிறார்கள். இங்கே ஓராண்டு கூடப் படித்துவிட்டு, அங்கு ஓராண்டு குறைவாகப் போய்ச் சேர வேண்டிய நிலையிருக்கிறது.

ஆகவே, எல்லா மாநிலத்திலும், எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் அதே முறையைக் கையாளும் காரணமாக, இங்கேயும் அதைக் கையாளலாமென்று கொள்கை அளவிலே ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு, நான், கல்வி அமைச்சர்கள் மாநாட்டிலே அரசு முடிவு செய்யுமென்று சொல்லியிருக்கிறேன். கல்வித் துறையைப் பற்றித் திட்டக் குழு ஆராய்ந்து, கொடுத்த அறிக்கையில் பள்ளிப் படிப்பு 10 ஆண்டுகள், இண்டர்மீடியட் 2 ஆண்டுகள், பட்டப் படிப்பு 2 ஆண்டுகள், மேற்பட்டப் படிப்பு 2 ஆண்டுகள் வைத்துக்கொள்ளலாமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். இந்த 10 ஆண்டுக் காலத்தை எப்படி வைப்பதென்று துறையினர் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். வல்லுனர்கள் எல்லாம் ஆராய்ந்துகொண்டிருக்கிறார்கள். கல்லூரிப் படிப்பைப் பொறுத்தவரையில், பல்கலைக் கழகத் துணை வேந்தர்களிடம் அதுபற்றிய கருத்துரைகளைக் கேட்டிருக்கிறோம். நடைமுறைப் படுத்த வேண்டியவர்கள் அவர்கள். அதற்கான முடிவும் எடுக்க வேண்டிய வர்கள் அவர்கள்தான். நம்முடைய கொள்கையை நாம் எடுத்துச் சொன்னாலும், நடைமுறைப்படுத்த வேண்டிய அவர்கள், அதை சிண்டிகேட்டில் வைத்து, அதை வெற்றிபெறச் செய்துதான் நடைமுறைப்படுத்த வேண்டும். அந்த வகையில் பல்கலைக் கழகத் துணைவேந்தர்கள் ஒரு முடிவுக்கு வரலாமென்று கருதுகிறேன். அதே நேரத்தில் சிக்கல்களையும் மற்றவைகளையும் ஆராய்ந்து சொல்லும்படியாக, துறையினரைக் கேட்டிருக்கிறோம். அந்த 2 ஆண்டுகளை எங்கே வைப்பதென்பதைப்பற்றிச் சிந்தித்து ஒரு முடிவுக்கு வர வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், இதை உடனடியாகக் கொண்டுவர முடியாது. இந்த ஆண்டு நாம் முடிவு செய்தால்தான், ஒரு ஆண்டுக்காலம் கழித்து அதை நடைமுறைப் படுத்த முடியும். அதற்குப் பிறகு சிலபஸ் வகுக்க வேண்டும், புதிய பாடப் புத்தகங்கள் உருவாக்க வேண்டும்.

அதற்குப் பிறகுதான் இண்டர்மீடியட் வகுப்பு, பட்டப் படிப்பு வகுப்பு ஆகிய கோர்சுகளை நாம் துவக்க முடியும். அதற்கான முன் ஏற்பாடுகளைச் செய்ய ஓராண்டு அல்லது இரண்டு ஆண்டுக் காலம் இடைவெளி தேவை. இப்போது முடிவெடுத்தால், 1974-ல் கூட வராது; 1975–76-ல் நடைமுறைப்படுத்த முடியும். அதில் உருவான பலனை 4 அல்லது 5 ஆண்டுக் காலம் கழித்துத்தான் காணமுடியும். ஆக, அந்த 2 ஆண்டுகளைக் கல்லூரியில் கொண்டுபோய்ச் சேர்ப்பதா, பள்ளியில் வைப்பதா என்பதுதான் பிரச்சினை. அதில் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. வளர்ந்த பள்ளிகள் சிலவற்றோடு 2 ஆண்டுகளை வைப்பதா அல்லது சிறந்த, வளர்ந்த கல்லூரிகளோடு 2 ஆண்டுகளை வைப்பதா அல்லது ஜூனியர் கல்லூரிகள் சிலவற்றை எற்படுத்தி அதோடு 2 ஆண்டுகளைச் சேர்ப்பதா வென்ற பல்வேறு கருத்துக்கள் வல்லுனர்களால் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கின்றன. நிதி வசதி, மற்றவைகள் அனைத்தையும் பார்த்து, இதில் ஒரு முடிவு எடுக்கலாமென்ற கருத்தைக் கொண்டிருக்கிறோம். ஆகவே இந்த வகையில் இங்கே சொல்லப்பட்ட கருத்துக்களையும் உள்ளடக்கி வைத்து, அதற்கான முடிவையும் மேற்கொள்ளலாமென்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

தேர்வு முறைகளைப்பற்றிக் கூறும்போது, மாற்றங்கள் வேண்டுமென்று எடுத்துச் சொன்னார்கள். அகில இந்திய அடிப்படையில் அந்த முறை தான் இருக்கிறது. "Report on the Committee of Education"

என்று தேர்வு முறைகளை மாற்றி அமைப்பதற்காக ஒரு அகில இந்திய கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் வல்லுனர்கள் கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு, பல்வேறு முறைகளை ஆராய்ந்து, அவர்கள் ஒரு பரிந்துரையைச் செய்திருக்கிறார்கள். சில்பல மாற்றங்களைச் செய்யவேண்டுமென்று அதில் பரிந்துரைகள் செய்திருக்கிறார்கள். அதில் "Internal assessment" என்பதை வலியுறுத்தியிருக்கிறார்கள். "Public Examination" அடிக்கடி வேண்டாமென்றும், 3 தடவைகள் இருந்தால் போதுமென்றும், "There should not be too many Public Examinations" என்றும் சொல்லியிருக்கிறார்கள். அதில் "There should not be too many public examinations and there should be one at the end of upper primary or middle school stage, another at the end of the secondary stage, and the third at the first degree stage" என்ற அளவுக்கு பப்ளிக் எக்சாமினேஷன் வைக்கலாமென்றும், மற்றவைகள் எல்லாம் "all others should be internal assessment only" என்றும் வைத்திருக்கிறார்கள். "Internal assessmet" மூலமாக அவைகளைக் கணக்கிடுவதன் வாயிலாகவும், பொதுத் தேர்வுகள் மூலமாகவும் அவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்ற கருத்தைச் சொல்லியிருக்கிறார்கள், பாடங்களை எப்படி வைக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். இவற்றை எல்லாம் ஆராய்ந்து தக்க முடிவை எடுக்கலாம்.

இப்போது பொறியியல் கல்லூரிகளில் இந்த முறை புகுத்தப்பட்டிருக்கிறது. கலைக் கல்லூரிகளிலும், மற்ற இடங்களிலும் இந்த முறையை நாளடைவில் புகுத்த வேண்டுமென்ற எண்ணம் அரசுக்கு இருக்கிறது. அது மட்டுமல்லாமல், ஒவ்வொரு பாடத்திலும் தனித்தனியாக கணக்கிட வேண்டுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.

"Subjectwise passing should be introduced and the public examination certificate should be given on the candidate passing" என்ற அளவுக்கு அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனென்றால் இப்போது எல்லா சப்ஜெக்டுகளையும் ஒன்றுசேர்த்து, மார்க்குகளைக் கூட்டிப் பார்த்து, தேர்வுக்குரிய மார்க் வருகிறதாவென்று பார்த்து மேலே அனுப்புவதன் காரணமாக ஒரு பாடத்தில் 6 மார்க்குகள், 7 மார்க்குகள் வாங்கியவர்களைகூட மேலே போகக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதற்குப் பிறகு தரம் வளரவில்லையென்று குறைபட்டுக்கொள்கிற நிலையிருக்கிறது. அதற்கெல்லாம் இடம் தரக்கூடாதென்று பல்வேறு யோசனைகளைச் சொல்லியிருக்கிறார்கள். மையத் தேர்வு வைப்பது பற்றி மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. சுவாமிநாதன் அவர்கள் இங்கே சொன்னார்கள். இந்த அறிக்கையிலே அவர்கள் சொல்லியிருப்பதிலுட்கூட, "The method of spot valuation at a central place to which all examiners are called should be adopted" என்று நாம் இங்கே வைத்திருக்கிற முறைதான் எற்ற முறை என்று எல்லா மாநிலங்களையும் வற்புறுத்தியிருக்கிறார்கள். இந்த மைய முறைகளை ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் வைப்பதென்று இல்லாமல் 4 அல்லது 5 சென்டர்களில் வைத்திருக்கிறோம். எந்த ஊர்களில் ஆசிரியர்கள் தங்குவதற்குப் போதுமான ஹாஸ்டல் வசதிகள் மற்றவைகள் எல்லாம் இருக்கின்றனவோ, எங்கே கிடைத்தாளைத் திருத்துவதற்கு வாய்ப்பு வசதி

5–10 P.M.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 23

இருக்கிறதோ அந்த இடங்களைத் தேர்ந்தெடுத்து இந்த ஆண்டு 5 அல்லது 6 மையங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. அந்த இடங்களில் வைத்து முறைப்படி செய்யவேண்டுமென்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். மாணவர்களிடையே கட்டுப்பாடு வேண்டுமென்று எல்லா மாண்புமிகு உறுப்பினர்களும் குறிப்பிட்டார்கள், தவத்திரு குன்றக்குடி அடிகளாரும், குறிப்பிட்டார்கள், ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்களும் குறிப்பிட்டார்கள். அந்த முறைகளை வற்புறுத்துவதற்கு ஆசிரியர்கள் பெற்றோர்கள் ஆகிய அத்தனைபேர் ஒத்துழைப்பும் இருந்தாலொழிய, எந்த நிலைமைகளும் ஏற்படுவதற்கில்லை என்பதை நாம் காணலாம். கல்வித் தரத்தைத்தான் நாம் வளர்த்துக்கொண்டு போகலாமே தவிர, கல்வியை வளர்க்க ஆட்சியாலோ அரசியல் வாதிகளாலோ மற்றவர்களாலோ இயலாது. ஆனால், அரசியல்வாதிகளும் சேர்ந்து இதற்கு ஒத்துழைக்க வேண்டுமென்று பலர் சொன்னார்கள். அதில் ஓரளவு உண்மையும் இருக்கிறது. ஆனால், பெற்றோர்களும் ஆசிரியர்களும் மற்றவர்களும் கட்டுப்பட்டு ஒரு அடிப்படையில் வளர்க்க வேண்டும். தரத்தை வளர்க்க வீதாச்சார முறையை மாற்ற வேண்டுமென்ற கருத்தைச் சொன்னார்கள். அதில் ஓரளவு உண்மையிருக்கிறது என்பதை ஒத்துக் கொள்கிறேன். ஆனால் அது மட்டுமே முழுக்காரணமாக அமைந்துவிடாது என்று கூறிக்கொள்ளுகிறேன். நம்முடைய உயர்நிலைப் பள்ளிகளில் 1:25 என்றும், மற்ற இடங்களில் 1:35, 1:33 என்றும் ஆசிரியர் மாணவர்கள் வீதாச்சாரம் வருகிறது. அதைக் குறைத்து, ஆசிரியர்களுடைய அக்கறையும், மாணவர்கள் அக்கறையும் ஊக்கமும் அதில் அதிகமாக வேண்டும். பெற்றோர்கள் கண்காணிப்பும் அதிகமாக வேண்டியிருக்கிறது. எப்படி இருந்தாலும் கூட, ஆசிரியர்களிடையே மாணவர்கள் 4 அல்லது 5 மணி நேரம்தான் பழகுகிறார்கள். ஆசிரியர்கள் எவ்வளவு பாடுபட்டுத் திருத்தினாலும், பாக்கி 18 மணி நேரத்தில் கெடுத்துவிட்டு மறுநாள் அனுப்பி வைக்கிறார்கள். முதல்நாள் பக்குவப்படுத்துவது, மறுநாள் அதைக் கெடுத்து, மறுபடியும் பழைய இடத்தில் தொடங்கி இப்படியே கவலேற்று மாடு மாதிரி, இருந்த இடத்திலேயே இருந்து நகர்ந்துகொண்டிருக்கிற காரணத்தால், யார் மீது யார் குற்றம் சொல்லுவது என்ற நிலைமை இல்லாத அளவுக்குப் போய்க்கொண்டிருக்கிறது. இன்னும் ஒரு கணக்கையும் பார்த்தேன். குறைந்த மாணவர்களை வைத்துக்கொண்டு, சில இடங்களில் சொல்லிக் கொடுக்கிறார்கள். அங்கே ரிசல்ட் தெளிவாகவும் தீவிரமாகவும் வருகிறதா என்றால், "அவ-இக்கனுமிக் ஸ்கூல்" என்ற அளவுக்கு சென்ற ஆண்டு 55 ஹைஸ்கூல்கள் வருகின்றன. மொத்தத்தில் மாணவர்கள் 100க்கு கீழே இருக்கிற உயர்நிலைப் பள்ளிகளில் 55 வருகின்றன, 2,800 ஹைஸ்கூல் இருக்கின்றபோது 6, 7, 8 மாணவர்கள் மட்டுமே இருக்கிறார்கள், 9, 10, 11-வது வகுப்புகளில். குறைந்த மாணவர்களை வைத்துக்கொண்டு கறறுக் கொடுக்கிறார்களே, அங்கே தரம் வளர்ந்து நல்ல ரிசல்ட் வந்திருக்கிறதா என்று பார்த்தால், மற்ற 100 அல்லது 2,000 பேர்களை வைத்திருக்கிற பள்ளிகளின் ரிசல்ட் கூட இல்லாமல், 50 சதவிகிதம், 40 சதவிகிதம் என்ற அளவுதான் இருக்கிறது.

திரு. பி. சுவாமிநாதன்: இதுமாதிரிப் பள்ளிகள் உட்புற கிராமங்களில் இருக்கின்றன. அங்கு மாணவர்களின் தரம் வேறு. நகரில், இருக்கின்ற மாணவர்கள் தரம் வேறு. இதை அமைச்சர் அவர்கள் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

[1973 மார்ச் 23]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லா இடங்களிலும் இருக்கின்றன. கும்பகோணம் நகராட்சி உயர்நிலைப் பள்ளியில் கடந்த நான்கு ஆண்டுக் காலமாக அவர்கள் சென்டம் எடுத்து, நான்கு மாதங்களுக்கு முன் நான் அங்கே சென்று பரிசு கொடுத்தேன். அந்த நகராட்சி உயர்நிலைப் பள்ளி தொடர்ந்து சென்டம் எடுத்துக்கொண்டிருக்கிறது. இன்னும் சில பள்ளிகள் இருக்கின்றன. இரண்டு வகை மிலும் இருக்கிறது. எதற்காகச் சொல்லுகிறேன் என்றால், ஆசிரியர்களுக்கு இருக்கிற அக்கறையையும் மற்ற நிலைகளையும் பொறுத்திருக்கிறது.

ஆசிரியர்கள் தேர்வுக்கென்று ஒரு முறை வகுத்தால் நல்லது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் குறிப்பிட்டார்கள். அதை நான்கூட எடுத்துச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதற்கு எதேனும் ஒரு முறையை வகுக்க வேண்டியிருக்கிறது. 'ஆப்டிடியூடைப்" பார்த்து இந்தத் துறைக்குத் தகுதி பெற்றவர்களா, ஆர்வம் இருக்கிறதா, அதற்கான திறமை பெற்றவர்களா என்பதை அறிய வழி கண்டுபிடிக்க வேண்டும் என்பதை நானே எடுத்துச் சொல்லி வருகிறேன். விண்ணப்பம் போடுகிறவர்களை எடுத்துக்கொண்டு, இந்தத் துறைக்கு உரியவர்களை எல்லாம் விட்டுவிட்டு, அப்படிப்பட்ட நிலைகள் வருகிறபோது, பல்வேறு கொளறுபடிகளும் மற்றவைகளும் வருகின்றன. அதைப்பற்றி ஆராயும்படிக்கு இந்தத் துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள். அதற்கான முயற்சிகளையும் நானடைவில் செய்வோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். பள்ளிகளில் நீதிபோதனை வேண்டுமென்று சொல்லுகிறார்கள். சில பள்ளிகளில் அதற்காக தனியாக ஒரு பீரியட் ஒதுக்கியிருக்கிறார்கள். இதை சில இடங்களில் லீவாக விட்டு விடுகிறார்கள். ஒழுக்க போதனை சொல்லிக்கொடுக்கிற அளவுக்கு பாடத் திட்டங்களிலும் ஆங்காங்கு அது புகுத்தப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிறது. இருந்தாலும் ஓரளவுக்குக் கட்டுப்பாடு மற்றவைகள் எல்லாம் மீறி கெடுகிறது. அது சமுதாயமே சேர்ந்து ஒழுங்குபடுத்துவதாகும் என்பதை நாம் நன்றாக அறிகிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் மற்ற மாநிலங்களைவிட ஒழுங்காக நடைபெற்றுவந்த நம் மாநிலத்துப் பட்டமளிப்பு விழாவில் கூச்சல் ஏற்பட்டதைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். பட்டதாரி பட்டம் வாங்குகிறவர்கள் எல்லாம் அங்கே உறுதிமொழி தருதல் வேண்டும். "நான் கவரவத்தைக் காப்பாற்றுவேன், எந்தத் தொழிலில் இருந்தாலும் கண்ணியத்தைக் காப்பாற்றுவேன், நாட்டுக்குத் தொண்டாற்றுவேன், எந்த இழிசெயலிலும் ஈடுபடமாட்டேன், நாட்டுக்கோ இந்தத் துறைக்கோ பங்கம் ஏற்படும் எதையும் செய்யமாட்டேன்" என்று உறுதிமொழி எடுக்க வேண்டும். உறுதிமொழி கூறுகிற அளவில்கூட அமைதி நிலவவில்லை. எல்லோரும் அதில் ஈடுபட்டார்கள் என்று சொல்லமாட்டேன். பல மாணவர்கள் அடக்கமாகவே இருந்தார்கள். ஆகவே பட்டமளிப்பு விழாவில்கூட பெரும் கூச்சல்களும் வேறு பல நிலைமைகளும் ஏற்பட்டு, அந்த விழாவினுடைய பெருமை, புகழ் ஆகியவற்றையெல்லாம்கூட காப்பாற்ற முடியாத அளவுக்கு நிலைமைகள் இருக்கின்றனவென்றால், வேறு பல சூழ்நிலைகளிலும் மற்ற இடங்களிலும் எப்படிக் கட்டுப்படுத்த முடியும் என்பதை நாம் நன்றாகக் கவனிக்க வேண்டும். மாணவர்கள் வேலையில்லாத காரணத்தால், அதிருப்தியைக் காட்டுவதற்கு கிளர்ச்சிகளில் ஈடுபடுகிறார்கள்

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 23

என்று கூறலாம். கிளர்ச்சி நடத்த வேண்டிய இடங்களில் அதைக் காணலாம். ஆனால் பட்டம் வாங்குகிற இடத்தில் உறுதிமொழி கொடுக்கிற இடத்தில் "I do promise" என்று சொல்ல வேண்டும். அதைக்கூடச் சொல்லவில்லை. சொல்லாமல் கூச்சலும் குழப்பமும் செய்கிற அளவுக்கு 2, 3 நாட்கள் விழா நடைபெற்றிருக்கின்றது. வேறு பல இடங்களில் பல்கலைக் கழகமே பார்த்து பட்டமளிப்பு விழாவே வேண்டாமென்று முடிவு கட்டிவிட்டார்கள். கேரளத்தில்கூட அம்மாதிரி முடிவெடுத்திருக்கிறார்கள். ஏன் இதைச் சொல்லுகிறேன் என்றால் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமோதரன் அவர்கள் அதைப்பற்றிக் குறிப்பிட்டார்கள். இதைப் பற்றிப் பல்கலைக் கழகம்தான் முடிவு கட்டவேண்டும். இப்படித்தான் செய்யவேண்டுமென்று வற்புறுத்தி அரசு ஆணையிட முடியாது. பல்கலைக் கழகம்தான் இதை முடிவு செய்ய வேண்டும்.

காலை நேரங்களில்தான் பள்ளிகள் நடைபெற வேண்டுமென்று தவத்திரு குன்றக்குடி அடிகளார் குறிப்பிட்டார்கள். உலக நாடுகள் முழுவதும் எங்கு பார்த்தாலும் காலை நேரத்தில்தான் பள்ளிக்கூடங்கள் நடைபெறுகின்றன. நான் கிட்டத்தட்ட 40 உலக நாடுகளில் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தேன். உலக நாடுகள் சுற்றிய உறுப்பினர் திரு. வசந்தபாய் இருக்கிறார். நண்பர் தாமோதரன் இருக்கிறார். பலர் இருக்கிறார்கள். திரு. சுவாமிநாதன்கூட ஜப்பான் போய்விட்டு வந்தார். திரு. சா. கணேசன் அவர்கள் பார்த்துவிட்டு வந்திருக்கிறார்கள். பல்கலைக் கழக அளவிலே சாதாரண அளவிலிருந்தே 7½ மணிக்கு மேல் பள்ளிக்கூடம் ஆரம்பிக்கிற மாதிரி இல்லை. ஒருவேளை நடைபெறுகிறது. ஒரு வேளை விடுமுறை விடுகிற அளவுக்குத்தான் இருக்கிறார்கள். அதுவும் குளிர் நாடுகளில் முழு நாளும் வைத்தாலும் பரவாயில்லை. நம் நாட்டைப் பொறுத்த வரையில், எந்தக் காலத்தினுடைய தன்மைகளைப் பார்த்தாலும் கூட, உழவுத் தொழில் ஆகட்டும், கல்வி ஆகட்டும் அல்லது பயிற்சி ஆகட்டும் காலையில் 5 முதல் 8½ மணிக்குள் நடந்து முடிந்தது தவிர, நண்பகல் மற்ற நேரங்களில் பயிற்சி கொடுக்கிற எந்த முறையும் இருந்ததில்லை. ஆனால் சிங்கப்பூரில் 7½ மணிக்கு பள்ளிக்கூடத்தைத் துவக்குகிறார்கள். அது மட்டுமல்ல. அமெரிக்காவில் ஒரு டாக்டர் பல்கலைக் கழகத்தில் சொன்னார்கள். "ஹார்மோன் செக்ரிஷன்". காலை நேரத்தில் தான் கருத்துக்களை உள்ளத்தில் வாங்குகிற திறனை மூளை பெற்றிருக்கிறது என்றும் அதுவும் அந்த நேரம் தான் கருத்துக்களை வாங்கி சிந்தித்து முடிப்பதற்கேற்ற நேரம் என்றும் அவர்கள் கண்டறிந்திருக்கிறார்கள். நண்பகல் அல்லது மாலை நேரம் அதற்கேற்றதல்ல. மாலை நேரத்தில் ஓய்வு பெற்று, மனதை பல்வேறு வழிகளில் செலவழிக்க எற்ற காலம் எனலாம், உள்ளதை வாங்கிக்கொண்டு சிந்தித்து முடிவு கட்டுவதற்கு காலை நேரம் தான் நல்லது, அந்த நேரத்தில் சொல்லிக் கொடுக்க வேண்டுமென்றும் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு அரசுடைய ஒத்துழைப்பும், ஆதரவும் இருந்தால், அதை நடைமுறைக்குக் கொண்டு வர முடியும். அதை 2, 3 கல்லூரிகளில் கந்தசாமி முதலியார் கல்லூரி, வேலுநாயக்கர் போன்ற கல்லூரிகளில் கொண்டு வந்தார்கள். மூன்று மாதம் நடைபெற்றது. அதற்குள் ஆசிரியர்களிடமிருந்தும், மாணவர்களிடமிருந்தும் ஒரு பெரும் கிளர்ச்சி ஏற்பட்டு, நாங்கள் சாப்பிட்டுவிட்டுத் தான் வருவோம் என்று சொல்லி மறுபடியும் 10 மணிக்கு வரும் நிலைமை

1973 மார்ச் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

ஏற்பட்டது. தவத்திரு அடிகளார் சொன்னது போல், மேற் வகுப்புகளில் ஒன்று முதல் 8 வரை அல்ல, 9, 10, 11-வது வகுப்புகளில் படிக்கிறவர்கள், கல்லூரியில் படிக்கிறவர்கள், காலை நேரத்தில் கல்லூரிப் படிப்பை முடித்து விட்டால், மாலையில் வேறு தொழில் பழகி, அதில் தங்களுடைய கவனத்தைச் செலுத்தி, இன்னொரு பகுதி நேரத்தை பயிற்சி பெறப் பயன் படுத்திக் கொள்ளலாம் என்ற கருத்து மிகவும் நல்ல கருத்து. அதை நடைமுறைப் படுத்தக் கூடிய நிலைமை ஏற்பட்டால், மிக நன்றாக இருக்கும், அதற்கு "ஷிப்ட்" முறையைக் கையாளலாம் என்று நண்பர் திரு. தாமோதரன் அவர்கள் சொன்னார்கள். நம்முடைய மாநிலத்தைப் பொறுத்த வரையில், நாம் கிட்டத்தட்ட 98 கோடி ரூபாய் கல்விக்காக ஒதுக்கினாலும் கூட, பொதுத்துறை மற்ற கல்விக்காக ஒதுக்கினாலும் கூட, பள்ளி, கல்லூரி, தொழில் விஞ்ஞான ஆசிரியர்கள் ஊதியத்திற்கும், பள்ளிக் கல்வி, பல்கலைக் கழக மானியத்திற்கு மட்டுமே ரூபாய் எண்பது கோடியே அறுபத்தாறு லட்சம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது. கட்டிடம் கட்டுகிற வகையில் கிட்டத்தட்ட தைல்கூலப் பொறுத்த வரையில், ஒரு கோடி சில்லரை தான் 4, 5 ஆண்டுகளில் செலவு செய்திருக்கிறோம். கல்லூரி, பள்ளி, அரசாங்க உயர்நிலைப் பள்ளி எல்லாவற்றையும் சேர்த்துக் கணக்கிட்டால் 1973–74-க்கு மூன்று கோடியே முப்பத்திரண்டு லட்சம் ரூபாய் ஒதுக்கியிருக்கிறோம். கிட்டத்தட்ட ரூ. 100 கோடி செலவழிக்கிற திட்டத்தில் மூன்று கோடியே முப்பத்திரண்டு லட்சம் ரூபாய் என்பது மிகக் குறைவு தான். ஆகையால் எதிர்பார்த்த அளவுக்கு இப்போது கட்டிடங்கள் கட்டுவதற்கில்லை. அதை எந்த அளவுக்குக் கூட்டலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம்.

5 20 பி.ப.

இந்த ஷிப்ட் முறை வருமானால், அதிலே ஒரு லாபம் இருக்கின்றது. ஆனால் அதைக் கடைப்பிடிக்க பல்கலைக் கழகம் நயங்குகின்றது. நான் பல தடவைகள் மன்றத்திலே எடுத்துச் சொல்லியிருக்கின்றேன். பல்கலைக் கழகத்திற்குக்கூட நான் எழுதியிருக்கிறேன். ஆனால் பல்கலைக் கழகம் இப்போது இருப்பதை வைத்துக் கொண்டே சமாளிக்கலாம் என்று சொல்லிக் கொண்டிருக்கின்றது. கட்டிடங்கள் 30, 40 லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்துக் கட்டுகின்றோம். பல லட்சக்கணக்கான ரூபாய்கள் செலவழித்து லெபாரட்டரி அமைக்கின்றோம். ஏராளமாகச் செலவு செய்து வகுப்பு அறைகள், மற்றும் தளவாட சாமான்கள் வைக்கின்றோம். ஆயிரக் கணக்கான மாணவர்களுக்குச் சொல்லிக் கொடுப்பதற்காக வைத்திருக்கின்ற அதே தளவாடங்களை, மேலும் இரண்டாயிரம் பேர்கள் அல்லது 1,500 பேர்களுக்குப் பயன்படும்படியாகச் செய்யலாம் இந்த ஷிப்ட் முறை இருந்தால். கலைத்துறை மாணவர்களுக்கும் பயன்படுத்தலாம். அறிவியல் மாணவர்களுக்கு அதிக நேரம் இல்லாவிட்டாலும், அவர்களுக்கும் அதை வைத்துச் சரிக்கட்டலாம். அந்த அளவுக்கு நம் நாடு முற்பட்டால்தான் முடியும். இந்த முறை டெல்லி, பம்பாய் போன்ற இடங்களிலும் வேறு பல இடங்களிலும் இருக்கின்றது. சென்னை மாநகராட்சி உயர்நிலைப் பள்ளிகளிலும் பல இடங்களில் கையாளப்பட்டு வருகின்றது. சில நேரங்களில் கட்டிடங்கள் கட்ட வேண்டிய சூழ்நிலையும் அவசியமும் ஏற்படுகின்றது. அம்மாதிரிக் கட்டிடங்கள் கட்டுவதற்காக அதிகம் செலவழிக்காத நிலைமை ஏற்படுகிறது என்பது மட்டுமல்லாமல், அதிலிருக்கின்ற பல சங்கடங்கள் ஓரளவுக்குக் குறையும். அதற்கான நிலைமைகள் ஏற்படும்.

[டாக்டர் இரா. நெடுஞ்செழியன்] [1973 மார்ச் 23

பெண்களை ஆண்கள் பள்ளியில் சேர்ப்பது போல் கல்லூரியிலும் சேர்க்கலாம் என்றும் சொன்னார்கள். ஏற்கெனவே இருந்த உத்தரவை திருப்பி ஞாபகப்படுத்த விரும்புகின்றேன். தற்போது புதிய உத்தரவு ஏதும் இல்லை. பெண்களுக்கு என்று ஒரு தனிப்பள்ளி இருக்கின்றது, அதிலே பெண்கள் பயில வேண்டும். ஆண்கள் பள்ளியில் பெண்கள் பயிலவே கூடாது என்று இல்லை. அதற்குத் தக்க காரணங்கள் சொல்லிச் சேர்க்க வேண்டுமென்றால், சேர்த்துக் கொள்ளலாம். இப்போது ஒன்பதாவது வகுப்பில் சேர்ந்த பெண்களை நிறுத்திவிட வேண்டும் என்பதல்ல. சேர்ந்து விட்டப் பெண்கள் 10-வது, 11-வது வரையில் படிக்கலாமென்று வைத்திருக்கின்றார்கள். ஆனால் அதற்குச் சில காரணங்களை மேல் அதிகாரிகளிடத்தில் சொல்லி, அவர்கள் அனுமதி பெற்று ஆண்கள் பள்ளியில் பெண்களைச் சேர்த்துக் கொள்ளலாம். ஆண்கள் பள்ளியில் பெண்கள் இந்த முறையில் சேர்ந்து 10-வது வரையில் படிக்கின்றார்கள். அந்த முறை கல்லூரியில் வர வேண்டும் என்பதைத்தான் நான் சொல்லுகின்றேன். பெண்களுக்கு என தனிக் கல்லூரி இல்லாத அரியலூர், திண்டிவனம், விழுப்புரம் போன்ற இடங்களில் இருப்பவர்கள் வெகு தூரம் செல்லாமலிருக்க, அருகாமையில் இருக்கின்ற கல்லூரிகளிலே பெற்றோர்களே அவர்களைப் படிக்க வைக்க வேண்டுமென்று விரும்பி பெற்றோர்களும் தைரியமாக அதற்கு முன்வருவார்களேயானால், நாம் அவர்கள் அங்கு படிப்பதற்கு அனுமதிக்கலாம். சிலபல இடங்களில் முன்னேற்பாடுகளையும், நிபந்தனைகளையும் விதிக்கலாம். ஆண்கள் படிக்கின்ற பள்ளிகளிலே பெண்களைச் சேர்க்கின்றபோது, அந்தப் பள்ளிகளிலே கட்டாயமாக பெண் ஆசிரியர்கள் இருக்க வேண்டும்; பெண்கள் தங்கியிருப்பதற்கான அறைகள் இருக்க வேண்டும்; அவர்களுக்கு விளையாட்டிடங்கள் இருக்க வேண்டும்; அவர்களுக்குத் தனிக் கழிவிடங்கள் இருக்க வேண்டும்; தனியான பாதுகாப்போடு இருக்கின்ற இடங்கள் இருக்க வேண்டும் என்கின்ற நிபந்தனைகள் விதிக்கப்படுகின்றன. இந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்ட கல்லூரியாக இருந்தால்தான், அனுமதி தரப்படும் என்ற முறை இருக்கின்றது.

திரு. பி. சுவாமிநாதன்: சில பள்ளிகளிலே பெண்களுக்காக தனி கிளை ஒரு செக்ஷன் இருக்கின்றது. ஒரு பள்ளியிலே ஒரு பகுதியிலே 1,500 ஆண்களும், இன்னொரு பகுதியிலே 1,500 மாணவிகளும் படித்துக் கொண்டிருக்கின்றார்கள். அப்படி ஒரே பள்ளியிலே இரண்டு செக்ஷனாக வைத்து நடத்தக்கூடிய பள்ளிகளிலே என்ன செய்வது என்பதை விளக்கினால் நலமாக இருக்கும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அப்படிப்பட்ட இடங்களில் 1,000 மாணவர்கள் இருந்தாலும்கூட, அதைத் தனிப் பள்ளியாக வைத்து விடலாம். அப்படிப்பட்ட இடங்களில் தனிப் பள்ளியாக மாற்ற அனுமதி கேட்பார்களானால், அனுமதி கொடுக்கலாம். இப்போது 500, 600 மாணவிகள் தான் வருகிறார்கள்.

திரு. பி. சுவாமிநாதன்: தஞ்சாவூரிலே ஒரு பள்ளி இருக்கின்றது. 1,500 மாணவர்கள் படிக்கின்ற பள்ளியில், இப்போது பாய்ஸ் செக்ஷனிலே 1,200 மாணவிகள் படிக்கின்றார்கள். அவர்கள் தனியாகப் பள்ளி வேண்டுமென்று கேட்கின்ற நிலைமை ஏற்பட்டால், அவர்களுக்கு ஒரு லட்சம் ரூபாய் அரசு என்னென்ன மானியமாகக் கொடுக்குமா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, பலவகைகளில் விண்ணப்பிப்பார்களானால் அனைத்தும் தனியாக அரசாங்கம் கவனித்தும். ஏற்கெனவே இருந்து வருகின்ற ஒன்றை இரண்டாகப் பிரித்து, இரண்டு பள்ளிக்கூடங்களாக நடத்துகிறோம் என்று சொல்லுகின்றபோது, அதைப்பற்றி அரசு ஆலோசிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். கேட்கின்ற ஒரு லட்சம் ரூபாய் டிபாஸிட் பணம் தான். அது அரசாங்கத்துக்கு வருகிற பணம் அல்ல. அதைப் பெறுவதற்கு முயற்சி செய்வார்களானால், அதைச் செய்வதற்கு அரசு அனுகூலமாக இருக்கும் என்பதைக் கூறிக் கொள்ள விரும்புகின்றேன்.

இங்கே வேறு பல கருத்துக்களையும் எடுத்துச் சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. முத்துசாமி அவர்கள் ஸ்ரேயர் கிரேடு ஆசிரியர்கள் சம்பள விகிதத்தை மாற்றியமைக்க வேண்டுமென்றும் இக்கொள்கையை குறித்து தனி நபர் ஆணைக்குழுவினுடைய அறிக்கையில் எதுவும் குறிப்பிடவில்லை என்றும் சொன்னார்கள். இப்பிரச்சினையைப் பற்றி தனி நபர் ஆணைக் குழு சேர்ந்த பரிந்துரை அறிவிக்கப்படவில்லை என்றும் கூறினார்கள். தனி நபர் ஆணைக்குழு, ஸ்ரேயர் கிரேடு ஆசிரியர்களைப் பொறுத்த வரையில், எந்த விதமான முன்பாடோ, அல்லது பொருத்தமின்மையோ இடையாது என்று கருத்து தெரிவித்திருக்கிறது.

"There is no anomaly in respect of higher grade teachers" என்பது தான் அந்தக் குழுவினுடைய முடிவு. ஸ்ரேயர் கிரேடு ஆசிரியர்கள் சம்பளம் நிர்ணயிக்கப்படும்பொழுது, அவர்களின் இரண்டு ஆண்டுக்காலப் பயிற்சிக்கு மதிப்பு அளிக்கப்படவில்லை என்ற அந்தக் குழுவின் முன்பு விவாதிக்கப்பட்டது. சாதாரணமாக 8-வது படித்தவர்களுக்கு 130 ரூபாவிலிருந்து 195 ரூபாய் என்ற விகிதத்தில் ஊதியம் நிர்ணயிக்கப்பட்டது என்றும், ஸ்ரேயர் கிரேடு ஆசிரியர்களுடைய இரண்டு ஆண்டுப் பயிற்சியைக் கணக்கில் எடுத்தும், அவர்களுடைய தகுதியையும் தொழிலில் அந்தஸ்தையும் மனதில் கொண்டுதான் அவர்கள் சம்பளம் ரூ. 125-லிருந்து ரூ. 225 வரை என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்றும், அதில் எந்த விதமான முரண்பாடும், பொறுத்தமின்மையும் இல்லையென்றும் அந்தக் குழு தீர்மானமாகத் தெரிவித்துவிட்டது. ஸ்ரேயர் கிரேடு ஆசிரியர்களுக்கும் செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் உள்ள சம்பள விகிதத்தில் வேறுபாடு முன்பு 30 விழுக்காடு இப்போது 40 விழுக்காடாக உயர்த்தப்பட்டுள்ளது என்று மாண்புமிகு அங்கத்தினர் திரு. முத்துசாமி அவர்கள் குறிப்பிட்டார்கள். இது குறித்தும் தனி நபர் குழுவின் முன்பு வலியுறுத்தப்பட்டது. பொதுவாக அரசுப் பணியாளர்கள் அனைவருக்கும் சம்பள ஊதியத்தைத் திருத்தியமைக்கும்போது, ஒரு பதவிக்கும் மற்றொரு பதவிக்கும் இடையில் வேறுபாடு முன்பிருந்த அளவுக்கே இருக்க வேண்டும் என்பது கண்டிப்பாக விதி முறைக்கும் செயல் முறைக்கும் எற்றதல்ல என்று தனி நபர் குழு எடுத்துக்காட்டியது. தனி நபர் குழு,

"The representatives pointed out that the gap between the pay of higher grade teachers and the secondary grade teachers has increased from 30 per cent to 40 per cent on account of the revision. It was

1973 மார்ச் 23] [திரு. ஜி. சுவாமிநாதன்]

pointed out to them that this should not be looked at as an isolated case, that this has happened not only in the category of teachers but in other categories as well and that when there was a general revision of pay-scales, such differences are bound to occur here and there, particularly when an attempt was made to reduce the number of existing scales" என்றுதான் தந்திருக்கின்றார்கள். அந்த அளவிலேதான் நாம் முடிவினை எடுக்கவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத்தலைவர் : மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அவருடைய இருக்கையிலிருந்து கேட்பது நல்லது.

திரு செ. முத்துசாமி : மாண்புமிகு தலைவரவர்களே, மைனர் கிரேடு ஆசிரியர்களைப் பொறுத்த அளவில், கல்வியமைச்சர் அவர்கள் விளக்கம் சொன்னார்கள். செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப்பற்றித் தனி நபர் ஆணைக் குழு என்ன பரிந்துரை செய்திருக்கின்றது என்ற தகவலை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : முதலிலேயே செகண்டரி கிரேடு ஆசிரியர்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறேன்.

"There is no anomaly in respect of Pay-Scales of higher grade teachers" என்று சொல்லியிருக்கின்றார்கள் என்று சொல்லியிருக்கின்றேன்.

அடுத்ததாக, தொடக்கக் கல்விக்கு தனி இயக்குநர் போடவேண்டுமென்ற ஒரு கருத்தை இங்கே எடுத்துச் சொன்னார்கள். ஏற்கெனவே ஒரே இயக்குநரின் கீழ் இருந்து, பிறகு பள்ளிக் கல்வி இயக்குநர், கல்லூரிக் கல்வி இயக்குநர் என நியமித்தோம். இப்போது பள்ளிக் கல்வி, கல்லூரிக் கல்வி இயக்குநர்களின் கீழ், துணை இயக்குநரும், இணை இயக்குநரும் இருக்கின்றார்கள். உ.ஈ.ஒக்கள் எல்லாம் தொடக்கப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இவைகளில் சேர்ந்திருக்கின்றார்கள். தொடக்கப் பள்ளியும் இப்போது விரிவடைந்திருக்கிறது. அகில இந்திய ரீதியிலே தொடக்கப் பள்ளிக்கு ஒரு தனி இயக்குநர் வேண்டுமென்று சொல்லியிருக்கின்றார்கள். இந்த அரசு அதைப் பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையையும் ஆராயும்படி நான் சொல்லியிருக்கின்றேன். தொடர்கல்வியை மேற்பார்வையிடுகின்ற முறைகள், மற்ற முறைகள் பற்றியெல்லாம் ஆராய்ந்து நல்ல முடிவு அரசு எடுக்கும் என்பதை இந்த அவையிலே கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

அடுத்து, மாணவர்களைச் சேர்ப்பதுபற்றியெல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நேரமில்லாத காரணத்தாலே, இங்கேயே வேறு எந்தத் துறையிலும் விட அடிக்கடி கேள்வி கேட்டு கேட்டு விளக்கம் பெறுகிற துறையாக இந்தத்துறை இருக்கின்ற காரணத்தாலும், மற்ற விளக்கங்களையெல்லாம் கூறவேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறேன். பேரவையிலே நான் அறிவித்தபடி, உதவிப் பேராசிரியர்கள், அரசிதழ் பதிவு பெற்ற ஆசிரியர்களாக ஆக்கப்படுவார்கள் என்பதை மறுபடியும் இந்த அவையில் கூறிக்கொள்ள விரும்புகின்றேன். தகுதிபெற்ற உதவிப்

பேராசிரியர்கள் அனைவரும் இந்த ஆண்டு அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளாக ஆக்கப்படுவார்கள் என்பதை மகிழ்ச்சியோடு அறிவிக்கின்றேன். இதனால் சுமார் 1,800 பேர்கள் பயன் அடைவார்கள்.

ஐதியத்தில் உச்ச கட்டத்தை அடைந்தவர்கள், பதவி உயர்வு கிடைக்கப் பெறுபவர்கள் அல்லது வாய்ப்பு இல்லாமல் இருக்கும் அரசு ஊழியர்களுக்குத் தேக்கப்படி அளிக்க வேண்டுமென்று இரண்டாவது சம்பளக் குழு பரிந்துரை செய்துள்ளது. இந்தத் தேக்கப்படி இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை வழங்கப்படலாம். 5 முறைகளுக்கு மேற்படாமல் அடிப்படைச் சம்பளம் ஆயிரத்திற்கு மேற்படாமல் இருக்கும் வரை கொடுக்கப்படலாம். அரசுப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு இந்தச் சலுகை ஏற்கெனவே அளிக்கப்பட்டுள்ளது. இப்போது தனியார் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகள் இவைகளில் பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் இந்தத் தேக்கப்படி அளிக்க அரசு முடிவெடுத்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இதே மாதிரி அரசு மேற்படிப்புக் கல்லூரிகளில் பணியாற்றும் முதல்வர்கள், பேராசிரியர்களுக்கு இருந்த சம்பள விதியே தனியார் கல்லூரியில் பணியாற்றும் முதல்வர்கள், பேராசிரியர்களுக்கு அளிக்கப்படும் என்று ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அப்புறம் கல்லூரிகளுக்கு மானியம் வழங்குவதில் அவர்களுக்கு உண்மையாக ஏற்படுகின்ற பற்றுக்குறையில் 80 சதவிகிதத்தை அரசு ஏற்றுக்கொள்ளும் என்பதையும் நான் கூறிக்கொள்கிறேன். ஏற்கெனவே "தொழனல் இயக்கம்" என்ற ஒன்று வைத்திருந்தார்கள். அதையெல்லாம் மாற்றி அவர்கள் உண்மையான செலவையும் எழுதி, உண்மையான வரவையும் எழுதி, அவர்களுக்கு எவ்வளவு பற்றுக்குறை வந்திருக்கிறதோ அதிலே 80 சதவிகிதத்தை அரசாங்கம் ஏற்றுக்கொள்ளுமுடன். 20 சதவிகிதத்தை வைத்துக் கொள்ளலாம். அவர்களுடைய தனி "எண்டோமெண்டிலிருந்து" அவர்களுக்கு வருமானம் வருமானால் அதை வருமானத்திலே காட்ட வேண்டும். "எண்டோமெண்ட்" என்று வைத்தால், அந்த "எண்டோமெண்டி"லிருந்து வருகிற வருமானத்தைக் கொண்டு 0 சதவிகித "கட்"டைப் பயன்படுத்திக் கொள்ளலாம். ஆனால் நன்கொடை தனியாக வசூலிப்பார்களேயானால், நன்கொடையைக் காட்ட வேண்டும். அதையும் அருவாயாகத் தனியாகக் காட்டும் நிலை இருக்கட்டுமானால், அது பொருந்தாது என்பதையும் கொல்லியிருக்கிறார்கள். இப்படி மற்றக் கருத்துக்கள் பலவற்றையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். நவத்திரு குன்றக்குடி அடிகளார் எழுப்பிய கருத்தை திரு. திருநாவுக்கரசு நாயுடு அவர்களும், எழுப்பினார்கள். அது பற்றி நேற்றே நான் குறிப்பிட்டேன். அவர்களும் அறிந்திருப்பார்களென்று நான் கருதுகிறேன்.

திரு செ. முத்துசாமி : தலைவரவர்களே, ஒரு விளக்கம் அறிய விரும்புகிறேன். பட்டதாரி ஆசிரியர்களுக்கு 10 ஆண்டிலே தேர்வுநிலை வழங்கி

5-30 பி.ப.

[திரு. செ. முத்துசாமி] [1973 மார்ச் 23

யதைப் போல, செகண்டரி கிரேடு ஆசிரியர்களுக்கும் ஹையர் கிரேடு ஆசிரியர்களுக்கும் வழங்குவதற்கு முடிவு செய்திருக்கிறார்களா என்ற விளக்கத்தை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, அந்தக் கோரிக்கை வந்திருக்கிறது. அதுபற்றி ஆராயப்பட்டு கொண்டிருக்கிறேன். எனினும் அந்தத் துறைகளிலே எந்த அளவுக்கு வருகிறது என்ற நிலைமைகளை ஆராய்ந்து அதுபற்றி அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது. பரிசீலித்ததற்குப் பிறகு தக்க முடிவு எடுக்கப்படும்.

திரு. காட்டூர் கோபால்: பல ஆற்றுக்கணக்கான பேர்களுக்கு ஊதியம் கிடைக்காதது பற்றியும், தனியார் கல்லூரிகளிலே அரசு சொல்லுவதைக் கேட்டுக் கொடுக்காமலிருக்கும் நிலை பற்றியும் தெரிந்து கொண்டேன். இதற்குக் காரணம் என்ன என்பதைப்பற்றி விளக்கம் கொடுக்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அதுபற்றி விளக்கம் எடுத்துச் சொல்லுகிறேன். தனியார் நிர்வாகத்திற்குட்பட்ட தலைவராக இருக்கிறவர்களுக்கு விளக்கமாக ஒரு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது. அரசு எந்த அளவுக்குத் தலையிட்டுச் செய்யமுடியுமோ அந்த அளவுக்குச் செய்வதற்கு முயற்சியாக இருக்கிறது. பல்கலைக் கழகம்தான் அதற்கு முடிவெடுத்து அந்தந்தக் கல்லூரிக்குச் சொல்லவேண்டியிருக்கிறது. கல்லூரிகள் நிறைவேற்றவேண்டியிருந்தால் அரசாங்கம் அறிவுறுத்தி, எதையெதையெல்லாம் நிறைவேற்ற முடியுமோ அதை நிறைவேற்றி, பல்கலைக் கழகத்திற்கு அதை எடுத்துச் சொல்லி பல்கலைக் கழகம் மூலமாக அதை நிறைவேற்றுவதற்காக மேற்கொள்ளும் எல்லாவற்றையும் நான் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். இந்தப் பாடப் புத்தகத்திலே "ஆசியர் தொழுவது சாலவும் நன்று" என்பது விடுபட்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். நேற்றே நான் குறிப்பிட்டேன். இது மாதிரி பாடப் புத்தகத்திலே கொண்டை வேந்தன் முழுவதும் இருந்திருக்கிறது. ஆனால் இந்தப் பாடப் புத்தகத்திலே ஒரு பகுதியிலே கொன்றை வேந்தனை அடக்கவேண்டும் என்பதற்காக சில பல வரிகளை எடுத்துவிட்டார்கள். அவர்கள் "ஆசியர் தொழுவது சாலவும் நன்று" என்பதை மட்டும் எடுக்கவில்லை. வேறு பல்வறை "இல்லது மல்லது நல்லறமன்று" என்பதையும் எடுத்துவிட்டிருக்கிறார்கள். "அலுவம் பேல் ஆக்கத்திற்கு அழிவு, கெடுபிடி செய்யின் பிறவும் கடமம்" என்பதையெல்லாம் எடுத்திருக்கிறார்கள். ஆகவே எதையெதை எடுப்பது என்பதை இதற்கென்று அமைக்கப்பட்டிருக்கிற குழுவினர் எடுத்திருக்கிறார்கள். அதற்கு திரு. எ. வி. வேணுகோபால் அவர்கள் மேற்பார்வையாளராக இருந்திருக்கிறார்கள். ஆகவே கொன்றை வேந்தனை எடுத்துக்கொள்ளுமாறு சொன்னபோது, முழுவதையும் வைக்கமாட்டோம், அல்லது பாதியையும் வைக்கலாம். அதைத் திருப்பி எடுத்துவைக்கலாம். ஆனால் ஒரு பகுதியில் அடக்கவேண்டும் என்பதினுடைய காரணமாக அவர்களாகவே வைத்தார்கள். திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், "அந்த 30-லிலேயே இதை முக்கியமாகக் கருதி வைத்திருக்க வேண்டாமா" என்று குறிப்பிட்டார்கள். அவர்களைப் போன்றவர்களை பற்றிதான் திரு. எ. வி. வேணுகோபாலன். அவர்களை

1973 மார்ச் 23] [டாக்டர் இரா. நெடுஞ்செழியன்]

சாதாரணமாகக் கருதிவிட முடியாது. அவர்களாகப் பார்த்து வைத்திருக்கின்றார்கள். இதிலே எந்தக் குறிக்கோளும் விடுபடவேண்டுமென்ற எண்ணம் இல்லை என்பதைக் குறிப்பிட்டுக் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

திரு. எம். ராஜா அய்யர் : தலைவரவர்களே, அமைச்சரவர்கள் தனியார் கல்லூரிகளிலும் முதல்வர்களுக்கும் பேராசிரியர்களுக்கும் அரசுக் கல்லூரிகளில் இருக்கும் சம்பள விகிதங்கள் பொருந்தும் என்று அறிவித்தார்கள். இது ஒய்வு ஊதிய விகிதங்களுக்கும் பொருந்துமா? இல்லாவிட்டால் அது ஆய்விலாவது இருக்கிறதா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தனியார் கல்லூரிகளில் கொடுக்கப்படும் ஒய்வு விகிதத்தைப் பொறுத்த வரையில், அது அரசாங்கத்தினுடைய பரிசீலனையில் இருந்து வருகிறது. நிதித் துறையினுடைய கருத்தை அறிந்ததற்குப் பிறகுதான் இதுபற்றி முடிவு எடுக்கலாம். ஆகவே பெரும்பாலான கருத்துக்களைச் சொல்லியிருக்கிறேன் என்று கருதுகிறேன். வேறு பல கருத்துக்களைச் சொன்னார்கள். அவைகளுக்கு அவ்வப்போது காரணங்கள் கூறியிருக்கிறேன். மருத்துவத் துறையினுடைய விவாதம் இன்று நடைபெறவேண்டும். ஆகையால் இந்தக் கருத்துக்களையெல்லாம் மனதிலே தாங்கி, இந்தத் துறை சிறந்த முறையிலே நடைபெறுவதற்கு ஊக்கம் தந்ததற்காக உறுப்பினர்களுக்கு நான் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வித் துறையை எந்த ஒரு தனிப்பட்ட மனிதனும் சீர்திருத்தமுடியாது. ஆனால் நாம் ஒரு மாற்றத்திற்குத் தயாராக இருக்கவேண்டும். மாற்றம் மட்டும் போதாது. இன்னும் சொல்லப் போனால், "ரெவலூஷனே" வேண்டும் என்பது என்னுடைய கொள்கை. பல மாற்றங்கள் ஏற்படுவதற்கு சமுதாயமும் பக்குவப்படவேண்டும். நாமும் பக்குவப்படவேண்டும். எல்லோரும் பக்குவப்பட்டு, கட்டுப்பாடோடு வருகிற சூழ்நிலை ஏற்பட்டால்தான் முடியும். இதற்கு எல்லா உறுப்பினர்களும் தங்களுடைய யோசனைகளை பரிந்துரைகளின் மூலமாகவும், ஒத்துழைப்பின் மூலமாகவும் தந்து, இந்தத் துறை சிறப்புற அமைவதற்கு உதவி செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த விவாதத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்து, இந்தத் துறையிலே இந்தப் பணிகளிலே ஈடுபட்டு வருகிற இந்தத் துறையினுடைய செயலாளர், இயக்குநர்கள், அலுவலாளர்கள், அதிகாரிகள் அத்தனை பேருக்கும் இந்த வாய்ப்பிலே என்னுடைய நன்றியைத்தெரிவித்துக்கொள்கிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : கொன்றை வேந்தன் பூராவும் வைக்கப்படுமா என்பதை அரசு அறிவிக்கவில்லை. அன்பு கூர்ந்து அமைச்சர் அவர்கள் அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, ஆணையிட வேண்டிய அவசியமில்லை. விண்ணப்பம் அந்தக் குழுவினருக்கு அனுப்பினால், அந்தக் குழுவினர் அதைப் பரிசீலனை செய்து போடுவதற்கு முயற்சிகளை எடுப்பார்கள்.

(4) மருத்துவம், மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கைக் குறிப்புகள் மீது விவாதம்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : மன்றத் துணைத் தலைவரவர்களே, சட்ட மன்றத்தின்முன் வைக்கப்பட்ட 'மருத்துவம், மக்கள் நல்வாழ்வு குறித்த கொள்கைக் குறிப்புகள்'@ பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்" என்று முன்மொழிகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : முன் மொழியப்பட்ட தீர்மானம் :

"சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்ட 'மருத்துவம், மக்கள் நல் வாழ்வு குறித்த கொள்கைக் குறிப்புகள்' பரிசீலனைக்கு எடுத்துக்கொள் ளப்பட வேண்டும்."

திரு. என். சுந்தரேசத் தேவர் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, மருத்துவத் துறை மானியத்தின் மீது சில கருத்துக்களை நான் கூற விரும்புகிறேன். பொதுவாக மேலவையில் நேரத்தை மிகவும் சுருக்கக் கூடிய தன்மை, அங்கத்தினர்கள் தங்களுடைய கருத்துக்களை விரிவாகச் சொல்லுவதற்கு முடியாத ஒரு தளையிருக்கிறது என்பதை வருத்தத் தோடு தெரிவித்துக்கொள்கிறேன். இதை இரண்டு மூன்று நாட்களுக்குத் தான இருக்கக்கூடிய நிலையில் இந்த சட்டசபையில் வைத்திருக்கிறார்கள். குறுக்கீடுகள் அதிகம். 5 நிமிஷம் 3 நிமிடம் கூட்டிக்கொடுங்கள் என்று சொல்கிறோம். கருத்துக்களைச் சொல்ல முடியவில்லை. விஷயத்தையே விட்டு விட்டு எதேதோ பேசுகிறோம்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : அநேக உறுப்பினர் பேச ஆர்வத்தோடு இருப்பதால், அவர்களுக்கெல்லாம் இடமளிக்கவேண்டும்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : மருத்துவத் துறையைப் பொறுத்த வரையிலும், சிறந்த பணிகள் செய்யப்பட்டிருந்தபோதிலும், அதிகமாகத் தொகை ஒதுக்கப்பட்டிருந்தபோதிலும்கூட, கிராமப் பகுதிகளில் மருத்துவ வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. இந்தத் துறைக்கு ரூ. 42, 42½ கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. காங்கிரஸ் ஆட்சிக்காலத்தில் ரூ. 13 கோடி செலவு செய்ததற்கு இன்றைய தினம் ரூ. 42 கோடி செலவு செய்திருக்கிறபோது, புதிய மருத்துவ மனைகள் கிராமப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றனவா என்பதைப் பார்க்கிறபோது, ஒரிரண்டு இடங் களில்தான் ஏற்பட்டிருக்கின்றன. ஆனால் வளர்ச்சிகரமான ஒரு நிலை ஏற்பட வில்லை. பல துறைகளில், கல்வித் துறையில், தொழில் துறையில் வளர்ச்சி ஏறபட்டிருக்கின்றது. வைத்தியத் துறையில் அதிகமான வளர்ச்சி நகரப் பகுதிகளிலே செய்யப்பட்டிருக்கின்றதே தவிர, கிராமப் பகுதிகளில் அதிக வளர்ச்சி ஏற்பட்டிருக்கின்றதா என்று பார்க்கிறபோது, அந்த அளவு

@ 391–622-ஆம் பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.

வளர்ச்சி இல்லை. அதை அமைச்சரவர்கள் கவனிக்க வேண்டும். அமைச்ச ரவர்களுடைய நிர்வாகத்தைப்பற்றியோ, திறமையைப் பற்றியோ குறை சொல்லவில்லை. பெரிய தொகை வந்துகொண்டிருக்கிறது இந்தத் துறைக்கு. ஆகவே அரசு கிராமங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கவேண் டும். தமிழ்நாட்டிலே மொத்தம் இருக்கக்கூடிய ஆஸ்பத்திரிகள் 803. இதில் 379 சுகாதார நிலையங்கள் போனால், 424 ஆஸ்பத்திரிகள்தான இருக்கின்றன. கணக்குப் போட்டுப் பார்த்தால், மக்களுடைய தொகையை பார்த்தால், 96,000 பேருக்கு எறத்தாழ ஒரு ஆஸ்பத்திரி இருக்கிறது. லட்சம் பேருக்குக்கூட ஒன்று என்று சொல்லலாம். அதுவும் நகரத்திலே அதிகமாக ஊன்றிப்போயிருக்கிறதே தவிர, கிராமத்தைப் பார்த்தால் தாலுக் ஹெட்குவாட்டர்ஸிலேதான் இருக்கிறது. வட்டாரத்திற்கு ஒன்றிரண்டு இருக்கக்கூடிய நிலையை சில வட்டாரங்கள் பெற்றிருக்கின்றன.

பல வட்டாரங்களில் அரசாங்க ஆஸ்பத்திரி என்பதே இல்லாத நிலைமை 5-40 இருந்து வருகிறது. அதைப் போக்க வேண்டும். அதைப் போக்க பஞ்சா பி.ப. யத்துக் கூட்டு மன்றங்களில் உள்ளவற்றை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும் என்று சொல்லப்படுகிறது. நாங்களும் அரசாங்கம் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று விண்ணப்பம் கொடுக்கின்றோம். என் அப்படிக் கொடுக் கின்றோம் என்று பார்க்க வேண்டும். உண்மையாகப் பார்த்தால், அப்படி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று எந்த மன்றமும் விரும்பவில்லை. ஒரு பஞ்சாயத்து கூட்டு மன்றம் ஒரு ஆஸ்பத்திரியை நிர்வாகம் பண்ண முடி யாத நிலைமை இருக்கிறதா என்று பார்த்தால், அப்படி இல்லை. பஞ்சா யத்து கூட்டு மன்றங்கள் ஆஸ்பத்திரிகளை வைத்து நடத்தக்கூடிய அளவுக்கு அரசாங்கம் ஒத்துழைக்கிறதா என்று பார்த்தால், அரசாங்கம் ஒத்துழைக்க வில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஆகையினால்தான் அரசாங்கம் எடுத்துக்கொண்டு விட்டால், நல்லது என்று சொல்கிறோம். அதை நிர் வகிக்க முடியவில்லை என்ற காரணத்திற்காக எடுத்துக்கொள்ள வேண்டு மென்று சொல்லவில்லை.

முதலில் இந்த பட்ஜெட் விவாதத்தில் கலந்துகொண்டு பேசுகிறபோது, "பஞ்சாயத்து கூட்டு மன்ற ஆஸ்பத்திரிகளில் மருந்து கிடையாது, டாக்டர் கள் கிடையாது, அந்த நிலை நீடிக்கின்றதை மக்கள் பெருங்குறையாகக் கருதுகிறார்கள்" என்று சொன்னேன். பஞ்சாயத்து கூட்டு மன்றங்கள் தங்கள் ஆஸ்பத்திரிக்கு மருந்து வாங்க வசதி செய்யப்பட்டி ருக்கிறதா என்று பார்த்தால், இல்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஒரு பஞ்சாயத்து கூட்டு மன்றம் தனது ஆஸ்பத்திரியின் தேவைக்கு மருந்து கேட்டு, பணம் அனுப்பி வைத்தாலும்கூட, மருந்து வருவதற்கு ஓராண் டுக்காலம், சில நேரங்களில் ஆறு மாத காலமாகிறது. மெடிகல் ஸ்டோர் என்று வைத்திருப்பது இடையூறுகத்தான் இருக்கிறது. அதிலிருந்து விரை வில் மருந்து வருவதில்லை.

*மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, சென்ட்ரல் மெடி கல் ஸ்டோர் என்றிருக்கின்ற மருந்தகம் தமிழ்நாடு சர்க்காருக்குச் சொந்த மானதல்ல. அது மத்திய சர்காரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. ஏற் கெனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி, நாம் அங்குதான் மருந்து வாங்க வேண்டும். இப்பொழுதுள்ள ஒப்பந்தத்தின்படி, இன்னும் இரண்டு

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 23

ஆண்டுக் காலத்திற்கு அந்குதான் வாங்க வேண்டும். அதற்கு நாம் சம்மதித்திருக்கிறோம். அந்த ஒப்பந்த காலம் முடிந்துபோன பிறகு, இரண்டு மூன்று மாவட்டங்களுக்குச் சேர்த்து ஒரு இடத்தில் மருந்து கிடைப்பதற்கு வழி செய்து அதன் மூலம் வழங்கலாம் என்று கருதப்பட்டு வருகிறது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவரவர்களே, அந்த நிலைமையை விரைவில் செய்துகொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இருந்தாலும் மாநில சர்க்கார் கல்வித் துறையில் ஊக்கம் காட்டுவதுபோல், நல்வாழ்வுத் துறையிலும் காட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மக்கள் நல்வாழ்வுதான் மிகவும் அவசியம். மக்கள் நல்லபடி வியாதி இல்லாமல் வாழ்ந்தால்தான், அவர்கள் நல்லபடி சேவை செய்ய முடியும். நல்ல ஊக்கம் கொடுக்கப்பட வேண்டியது மக்கள் நல்வாழ்வுத்துறை என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இப்பொழுது டாக்டர்கள் பஞ்சம் கொஞ்சம் குறைந்திருக்கிறது. முன்பு எம்.பி.பி.எஸ். டாக்டர்கள் கிடைக்கமாட்டார்கள். இப்பொழுது எம்.பி.பி.எஸ். பட்டதாரி டாக்டர்கள் பஞ்சாயத்து கூட்டு மன்ற ஆஸ்பத்திரிகளில் வேலை செய்து வருகிறார்கள். இந்த நேரத்தில் அவைகளை என் எடுத்துக் கொள்ள வேண்டும் என்று கூட சிந்திக்கவேண்டியிருக்கிறது.

அடுத்தபடியாக, கிராமங்களில் வைத்திய வசதி சரியாகச் செய்து கொடுக்கப்பட்டிருக்கிறதா என்று பார்க்க வேண்டும். குறைந்த பட்சம் 20,000 பேருக்கு ஒரு ஆஸ்பத்திரியாவது இருக்க வேண்டியது மிகவும் அவசியம். லண்டனில் இரண்டாயிரம் பேருக்கு ஒரு ஆஸ்பத்திரி என்ற அளவில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அது அமைச்சர் அவர்களுக்கும் நன்கு தெரியுமென்று நினைக்கிறேன். ஆனால் இன்றையதினம் 95,000 பேருக்கு ஒரு ஆஸ்பத்திரி என்ற அளவில்தான் அமைந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, இரண்டாயிரம் பேருக்கு ஒன்று என்று சொன்னது பிரதம மந்திரியினுடைய கருத்து. அதற்கு 3 மாதம் பயிற்சி பெற்ற ஒரு டாக்டர் அனுகுவார். கையில் மருந்தை வைத்துக்கொள்ளுவார், வாயைத் திறந்து வாய்க்குள் போடுவார். அந்தத் திட்டம் என்றைக்கும் வெற்றிபெறப்போவதில்லை என்று அப்பொழுதே மத்திய மந்திரி தெரிவித்திருக்கிறார். பத்தாயிரம் பேருக்கு ஒரு டாக்டர் என்று முறைப்படுத்த ஒத்துக்கொண்டதுபோல் திரு. கடில்கர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சில தவறுன கருத்துக்களை பெரிய இடத்தில் உள்ள சிலர் உருவாக்கி விடுவதால், இப்படிப்பட்ட எண்ணம் ஏற்படுகிறது.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவரவர்களே, தயவுசெய்து கிராமப்புறங்களில் வைத்திய வசதி பெறுவதற்கு, குறைந்தபட்சம் 20,000 பேருக்கு ஒரு மருத்துவமனை வைத்துக்கொள்வதற்கு கூட்டுறவு மன்றங்களுக்கு அதிகாரம் கொடுத்து அரசாங்கம் உத்தரவு

1973 மார்ச் 23] [திரு. என். சுந்தரேசத் தேவர்]

போட்டால், அவர்கள் பங்கு போட்டு, ஏற்று செயல்படுத்தத் தயாராக இருக்கிறார்கள். அந்த மாதிரி அரசாங்கம் உத்தரவு போட்டால் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் வைத்திய வசதி நல்ல முறையில் கிடைக்கும்.

பத்தாயிரம் பேருக்கு ஒரு மகப்பேறு நிலையம் கொடுத்திருக்கிறோம். இந்த மகப்பேறு நிலையத்தைப் பற்றி நான் பட்ஜெட் விவாதத்தின்போது பேசுகையில், அமைச்சர் அவர்கள் குறுக்கிட்டு "எத்தனை நர்சுகள் வேண்டும், அனுப்பி வைக்கிறேன்," என்று சொன்னார்கள். பத்து நர்சுகள் வேண்டுமென்று சொன்னேன். இதுவரையில் எங்களுடைய மகப்பேறு நிலையங்களுக்கு வரவில்லை. எங்களுடைய கூட்டு மன்றத்தில் ஒன்பது மகப்பேறு இல்லங்கள் இருக்கின்றன. அவைகளிலே மூன்று நிலையங்களில் இப்பொழுது மூன்று ஆண்டுகளாக நர்சுகள் இல்லை. நான் 3×5=15 ஆண்டுகளாக யூனியன் சேர்மனாக இருந்து வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசாங்கத்திற்குக் கடிதம் வருமேயானால் பயிற்சி பெற்ற நர்சுகள் அனுப்பிவைக்கப்படுவார்கள். அவருடைய பஞ்சாயத்து கூட்டு மன்றத்திலிருந்து அப்படி கடிதம் அனுப்பப்பட்டிருக்கிறதா ? இது அன்பழகனுக்கும் சுந்தரேசத் தேவருக்கும் இடையே பேசிக்கொண்டு நடைபெறுவதில்லை. முறைப்படி கடிதம் வந்திருந்தால், நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. என். சுந்தரேசத் தேவர் : தலைவரவர்களே, கிராமப் புறங்களில் வேலைசெய்வதற்கு நர்சுகள் பஞ்சமாகப் போய்விட்டார்கள். நர்சுகள் இன்றைய தினம் கிராமப் புறங்களில் வேலையில் சேர்ந்தவுடனேயே அவர்களை அரசாங்க மருத்துவமனைக்கு மாற்றிவிடுகிறார்கள். அவர்களை அம்மாதிரி மாற்றல் செய்துவிடுகிறார்கள். குறிப்பாக, கொஞ்சம் நல்லபடி வேலை செய்யக் கூடியவர்களை எல்லாம் டிஸ்டிரிக்ட் மெடிகல் ஆபீசர் மாற்றல் செய்து உத்தரவு போட்டுவிடுகிறார். எனக்குத் தெரிந்து மாற்றல் செய்யப்பட்டிருக்கிறார்கள். ஆகவே பஞ்சாயத்து கூட்டு மன்றங்களில் பத்தாயிரம் பேருக்கு ஒரு நிலையம் என்று அமைத்திருந்தாலும் கூட, பலவிடங்களில் நர்சுகள் இல்லாமல் பூட்டிக் கிடக்கின்ற நிலைமை இருந்து வருகிறது. ஆகையினால் கணக்கில் புள்ளி விவரங்களைக் காட்டுவதில் பயனில்லை. உண்மையில் நடப்பது மிகவும் சொற்பமாக இருக்கிறது.

இந்த ஹெல்த் சென்டர்களைப் பொறுத்த வரையில், முன்பு ஒரு தகராறு இருந்தது. சுகாதார நிலையங்கள் பஞ்சாயத்துக் கூட்டு மன்றங்களுக்கு உட்பட்டவை. அவைகளில் வேலை செய்ய வருகின்ற டாக்டர்கள் எம்.பி.பி.எஸ். பட்டம் பெற்ற கெஸட்டட் ஆபீசர்களாக இருக்கின்ற காரணத்தால், ஒரு நான்-கெஸட்டட் பஞ்சாயத்து கூட்டுமன்ற ஆணையாளரின் கீழ் எப்படி வேலை செய்வது என்ற தகராறு ஏற்பட்டது. இன்றையதினம் ஆணையாளர்கள் கெஸட்டட் ஆக்கப்பட்டு விட்டார்கள். இப்பொழுது ஆரம்ப சுகாதார நிலையங்களில் சில வசதிகள் செய்து கொடுக்கப்பட்டு வருகின்ற காரணத்தால், தகராறு எதுமில்லாமல் டாக்டர்கள் அங்கு வேலை செய்ய வருகின்றார்கள். ஆகவே அவைகளை மீண்டும் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களின் கீழ் கொண்டுவரலாம் என்ற கருத்தைத் தெரிவித்துக் கொள்

கிறேன். இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் என்ன வேலை செய்கின்றன என்று பார்த்தால், கிராமப் புறங்களில் சென்று காலரா போன்ற தொத்து வியாதிகள் பரவாமல் கவனித்துக் கொள்வது, திருவிழா காலங்களில் சுகாதார வேலைகளைக் கவனித்துக் கொள்வது ஆகியவை யாகும். இதைக் கண்காணிக்கும் பொறுப்பு, இதிலே அக்கரை காட்டு கின்றார்களா என்று கண்காணிக்கும் பொறுப்பு பஞ்சாயத்து கூட்டு மன்றங் களுக்கு இருக்க வேண்டும். இவைகளை யெல்லாம் ஒரு தெலத் ஆபீசர் ஜில்லா மட்டத்தில், தலைமையில் உட்கார்ந்து கொண்டு கண்காணிப்பதற்கு வாய்ப்பு இல்லை. ஒரு பஞ்சாயத்துக் கூட்டு மன்றத்திற்கு ஒரு ஹெல்த் இன்ஸ்பெக்டர் என்று போட்டிருக்கிறார்கள். அவருக்கும் ஜில்லா அதிகா ரிக்கும் தொடர்பு இல்லை. ஆகவே இவர்களுக்குள் ஒரு லிங்க், தொடர்பு வைக்க ஏற்பாடு செய்ய வேண்டும். அரசாங்கத்தில் வேலை செய்கின்றவர்கள் யார் யார் என்னென்ன வேலைகள் செய்கின்றார்கள், யார் யார் கீழ் யார் யார் இருக்க வேண்டும் என்பதே புரியாத ஒரு நிலைமை இருந்து வருகிறது. ஆங்காங்கேயுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பணி புரிகின்றவர்கள் காலரா தடுப்பு வேலைகள், பூச்சி மருந்து தெளிப்பது போன்ற வேலைகளைச் சரிவரச் செய்து வருகிறார்களா என்று கண்காணித்துக் கேட்பதற்கு முடி யாத ஒரு நிலைமை இருப்பது மிகவும் வருந்தத் தக்கது. ஆகவே இந்த ஆரம்ப சுகாதார நிலையங்கள் மீண்டும் பஞ்சாயத்து கூட்டு மன்றங்களின் கண்ட்ரோலில் வரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கூட்டு மன்ற மருத்துவ மனைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்வதைவிட 20 ஆயிரம் பேருக்கு ஒரு மருத்துவமனை என்று வைப்பது நல்லது என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

இன்னும் மூன்று நிமிஷத்தில் முடித்து விடுகிறேன்.

இந்திய மருத்துவத்திற்காக 19½ லட்சம் ரூபாய் ஒதுக்கி வசதி செய்து தருவதாக இருக்கிறது. இந்த மருத்துவ முறையை அபிவிருத்தி செய்ய லாமென்று கூட்டு மன்றங்களுக்கெல்லாம் ஒரு சர்குலர் அனுப்பிவைத் தால், ஒவ்வொரு கூட்டு மன்றத்திலும் இந்திய மருத்துவ மனை வைத்து பரிசீலனை செய்து பார்க்கலாம் என்று அனுமதி வழங்கலாம். அந்த முறையில் சிறந்த நல்ல மருந்துகள் இருக்கின்றன என்பதை நாம் அறிகிறோம். ஜனத்தொகை அடிப்படையை வைத்து வைத்திய வசதி செய்து கொடுப்பது மிகவும் அத்தியாவசியமாகும். ஆகவே இந்தத் துறைக்கு தக்க கவனம் காட்ட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இந்த நிலைமைகளையெல்லாம் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள் கிறேன்.

கால்நடைத் துறையைப் பொறுத்தவரையில், ஒவ்வொரு கூட்டு மன்றத் திற்கும் இரண்டு கால்நடை ஆஸ்பத்திரிகள் கொடுத்து, அந்த ஒவ்வொரு ஆஸ்பத்திரியின் கீழும் சப்-சென்டர்கள் ஏற்படுத்தினால் தான், சிறப்பாக இருக்கும் என்ற நிலையினைக் கூறிக்கொண்டு எனது உரையை முடித்துக் கொள்கிறேன்.

5-50. P.M. *THIRU M. RAJAH IYER: Mr. Deputy Chairman, Sir, I wish to offer a few remarks congratulating the Government on the very excellent work they have done under "Medical Services and Public

Health". I want to pay a special tribute to them also for the work of the Primary Health Centres which function better than some other conventional dispensaries and hospitals.

(Vice-Chairman, Thiru N. Sundaresa Thevar, in the Chair.)

They do not stop with the general medical care but they follow it up and do much better work than normal dispensaries and hospitals can do. I should certainly congratulate the Government on the excellent work they are doing through these Primary Health Centres in the various villages. Whatever may be done for the environmental sanitation, it depends to a large extent on the civic sense of the people in our villages and we quite well know that their civic sense is very poor. Unless the people are trained to lead a sanitary and hygienic life, these Centres may not fulfil the expectation we have of them. I am conscious of the fact that a beginning has got to be made in schools. Sanitary sense and clean habits have all got to be developed in schools. It is in this particular respect I have a grievance against the Government. Sanitary habits should be developed in village schools and sanitary facilities should be provided in schools. Unfortunately, the provision made for sanitary facilities to be given to schools is ridiculously low. I find that after all, this scheme has been in progress only in 120 schools at the rate of 10 schools per Panchayat Union in the 12 districts, except Kanyakumari district. In thousands of schools the sanitary facilities provided are very poor. We should provide rural latrines and train people to use the latrines. I see a number of latrines here and there. Unfortunately, all these latrines are extremely dirty all around and nobody could enter into these latrines, because people have not been trained to use the inside of the latrines and they pollute it all outside. A beginning has to be made to see that environmental sanitation is ensured by correct habits being inculcated in the children.

Incidentally, I would like to refer to air pollution and environmental pollution in the City of Madras too. Personally, I feel that the Government Estate where we are put up was much better about 10 years ago when we first came into the place. Since then a number of buildings havecome up all around. Under theSlum ClearanceScheme, buildings are coming up at the eastern end also. I am surprised to find a Government Press building coming up next door to the hostel. A lot of smoke will come up and pollute the environment. I am sorry that the Government Estate, of all the places, is not being kept as clean and hygienic, as it should be. A morning walk twice around the place would be an exhilarating experience. It should continue to be so by the atmosphere being kept quite clean.

I congratulate the Primary Health Centres on the follow-up work they do. But I would like to make one general suggestion. I do not know if patients that come to hospitals are merely considered as indivi-

duals who come there or as people who have got a history behind them. Every citizen should have a case history completely put together. There will be no entry if he is a healthy man. It may be full of entries in the case of persons like me. I have a case history with me which I take wherever I go, because I am anxious that a new doctor treating me must not play havoc with me and experiment on me. We give a patta to a person owning a particular portion of land. Should not a person have a book relating to his body? A case history book will give all details about him and his allergies in particular. Some doctors administer injections like penicillin without knowing the allergy of the person. I would very much like the Government to consider the feasibility of providing every person with a case history book which he will take with him wherever he goes, so that when he goes to a doctor or dispensary, no havoc might be done due to ignorance of his past history.

I am happy that the pre-school children are being immunised and the health of the school children is not neglected; but it merely touches the fringe of the problem. The allotment here for School Health Service, I find, is only Rs. 5·83 lakhs out of the total amount of Rs. 534·8 lakhs under Public Health Services. The sector of School Health Service is a small sector, while, in fact, it should be one of the biggest sectors. If we begin with the schools, we may be ensured of a healthy generation. Regarding school health programme, I find, only 18 Primary Health Centres have taken up the job on hand out of our 379 Primary Health Centres; and only in two urban places, Tiruchirappalli and Coimbatore, exactly in these two places, this scheme is being implemented. I would like the Scheme to be implemented on a large scale, so that the school health programme is given the emphasis that it deserves and the health of the nation is ensured in advance.

I should like to refer to the speed and expedition with which the health staff go about attending to the health of the children, particularly when there are infectious diseases and epidemics round the corner. Mass inoculations are being done when some infectious disease is apprehended. The other day I was pleasantly amused to find a considerable number of parents coming to the school to take their children away from the school on one pretext or another. I could not understand how the parents were coming inside and taking their children like that. Later on, I learnt that there was a scare going round the town that the children were given an injection after which the children were falling down. Somebody had created the scare and it worked the havoc. This sort of ignorance among the public is quite ununderstandable. How could there be a thing like that, namely, the children being given an injection and immediately their falling down? So, Sir, this ignorance must be combated at every level and this sort of immunisation programme must be pushed through with vigour and earnestness.

Sir, I find, under Prevention of Adulteration, only 306 out of 1,088 local bodies have opted for this Act. I cannot understand how coming under the Prevention of Food Adulteration Act could be optional, how onlyone- third of the local bodies alone could come under the Act and how about two-thirds of the local bodies are still out of the purview of the Food Adulteration Act. It cannot be left to the option of the local bodies, because in two-thirds of the local bodies in our State of Tamil Nadu, this Act could not be implemented since they have not opted to come into the scheme. I think there is something radically wrong in the system and it must be made compulsory for every local body to come under this scheme, so that the food articles given are healthy and nutritious. The District Food Analysis Laboratories, I find, are to be installed in two District Headquarters Towns. I hope that it would be expanded to all the District Headquarters towns. I am quite aware of the difficulties in having such Laboratories because of the lack of potable water and a number of other facilities that they require. I hope with the expansion of the Laboratories throughout the State, they would be available in plenty all over the State and food adulteration would become a thing of the past altogether.

In the matter of propaganda, I find that only at 146 places we have shown the films, we have loaned 452 films and we have added only four new films and this looks a small record as against the project. I hope 16 MM. documentaries relating to health habits would be produced in plenty and the screening of these documentaries would be made a condition precedent to the licence being given to the various theatres, particularly in the rural areas, and the touring cinemas. The 16 MM. documentary films should be compulsorily exhibited so that visual education scheme, being a very powerful means of propaganda, is used to make our villagers become educated in the healthy way of living.

I shall just say one or two more things. I am very happy things are being done so dynamically with vision and energy. I congratulate our dynamic Hon. Minister and the Services on this. I just want to make one submission with regard to Family Planning. While we are pushing through Family Planning with fresh vigour, I find women Government servants who opt for non-puerperal sterilisation have got special casual leave up to 14 days (before), which I think is now raised to 20 days. But, I find, if women Government servants coming for delivery of a child opt for sterilisation, they are not eligible for these 20 days of special casual leave. Puerperal sterilisation is not covered by special casual leave. It will be well at least to make 10 days' special casual leave available to them over and above the eight weeks of maternity leave available to them, so that it may be an

inducement. At the time of confinement, to opt for sterilisation would be the just and proper time for them, and a week or ten days' special casual leave would certainly act as an inducement to them.

Then Sir, I find modern equipments are being supplied in plenty to our hospitals. I would plead for E.C.G. equipment, for all district headquarters hospitals with not only technicians, but with experts who can study the record and advise the patients, particularly adults, who are prone to heart attacks. This very essential amenity should be there in every district headquarters hospital along with qualified staff who can read and advise on the E.C.G. Thank you; Sir.

6·00 P.M.

திரு. மு. இராமநாதன்: தலைவரவர்களே, மக்கள் நல்வாழ்வுத் துறையினுடைய கொள்கைக் குறிப்பின் மீது என்னுடைய கருத்தைச் சொல்லுகின்ற வாய்ப்பினை அளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இன்றைய தினம் தமிழகத்தைப் பொறுத்தமட்டில், மக்கள் நல் வாழ்வுத் துறையினுடைய சிறிய பகுதியை நான் மனதாரப் பாராட்டி, அவற்றைப் பற்றிச் சில கருத்துக்களைச் சொல்வதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். தமிழ் நாடு மதிப்பீட்டுக் குழுவின் சார்பாக அகில இந்திய ரீதியில் பல்வேறு மாநிலங்களைப் பார்வையிடுகிற வாய்ப்பினை இந்த மன்றத்தில் இருக்கிற உறுப்பினர்கள் பலர் பெற்றிருப்பதைப் போல, நானும் பெற்றேன். அந்த வகையில் இந்தியத் துணைக் கண்டத்தினுடைய பல்வேறு மாநிலங்களில்—ஒரிஸ்ஸா, மத்திய பிரதேசம், உத்திர பிரதேசம், பம்பாய், கல்கத்தா, டெல்லி ஆகிய பகுதிகளில் நாங்கள் மதிப்பீட்டுக் குழுவின் சார்பில் ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருள்களில், மக்கள் நல் வாழ்வுத் துறை இருந்ததால், அதுபற்றி விரிவான ஒரு ஆய்வினை நடத்தியிருக்கிறோம். அந்த மாநிலங்களில் இருக்கிற வசதிகளை ஒப்பிட்டுப் பார்க்கிற நேரத்தில், தமிழ் நாடு மகத்தான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறதென்று சொல்லுதல், அது மிகையாகாது என்பது என்னுடைய தாழ்மையான கருத்தாகும். அங்கொன்றும், இங்கொன்றுமாக சில குறைபாடுகள் இருந்தாலும், மற்ற மாநிலங்களோடு நம் மாநிலத்தை ஒப்பிடும்போது, தமிழகம் தலைசிறந்த, ஒரு முன்னேற்றமான பாதையில் நடை போட்டுக் கொண்டிருக்கிறது என்பதை மறுத்துவிட முடியாதென்றாலும், நம்முடைய தலைமை தாங்கியிருக்கிற தலைவரவர்கள் குறிப்பிட்டது போல, என்னுடைய கருத்தாக, நம்முடைய மக்கள் நல் வாழ்வுத் துறைக்கு இன்னும் கொஞ்சம் அதிகமான நிதி ஒதுக்கீடு செய்யவேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். நம்முடைய நல் வாழ்வுத்துறை அமைச்சரவர்கள் கூட பல கருத்துக்களைச் சொல்கிற நேரத்தில் பணம் இல்லையென்று சொல்லி யிருக்கிறார்களே தவிர, மனம் இல்லையென்று சொல்லவில்லை. ஆகையினால் இப்படிப்பட்ட சில குறைபாடுகள் இருக்கின்றன. என்றாலும் மற்ற மாநிலங்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால், நகரங்களில் உள்ள மருத்துவ மனைகள் தான் சிறப்புக்குரியனவாக இருக்கின்றனவே தவிர, கிராமப் புறங்களில் உள்ள மருத்துவ வசதிகளை எண்ணிப் பார்த்தால், மிகுந்த பரிதாபகரமான நிலை இருக்கிறதென்பதை நேரில் கண்டு வந்திருக்கிறோம். ஆனால் தமிழ் நாட்டில் எல்லா மட்டத்திலும் இந்தத்துறை

யினுடைய முயற்சிகளை நாம் காண்கின்ற அளவுக்கு, மகத்தான முன்னேற்றத்தை நாம் கண்டு வருகிறோம். அப்படிப்பட்ட சிறப்புமிக்க பணியாற்றுகிற மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சரவர்களையும், இந்தத் துறையினுடைய அனைத்து அலுவலர்களையும், அதிகாரிகளையும் நான் பாராட்டுவதற்குக் கடமைப் பட்டிருக்கிறேன். கோவை மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் கோவையிலுள்ள மருத்துவக் கல்லூரியைப்பற்றி ஒரு கருத்தினை வலியுறுத்திச் சொல்ல வேண்டிய வனாக இருக்கிறேன். எனைன்றால் அகில இந்திய ரீதியில் அனுப்பப்பட்ட நிபுணர்குழு, கோவை மருத்துவக் கல்லூரிக்கு ஒரு சில பரிந்துரைகளைத் தெரிவித்திருக்கிறது. ஆனால் அந்தப் பரிந்துரைகள் இன்னமும் அமுல் படுத்தப்படாமல் இருப்பதால், பல்வேறு சங்கடங்கள் இருக்கின்றன என்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்று கூட, கொடுத்திருக்கிற கொள்கைக் குறிப்பில் 100 படுக்கைகள் அதிகமாக்கி, விரிவாக்கப்படுமென்றும் அந்த நிபுணர் குழுவின் பரிசீலனைப்படி, ஒரு மருத்துவக் கல்லூரி இன்னின்ன இலக்கண அடிப்படையில் அமைய வேண்டுமென்று சொல்லிய கருத்துக்கு ஒப்ப, அந்த மருத்துவக் கல்லூரியை விரிவுபடுத்தாத காரணத்தால், அந்த மருத்துவக் கல்லூரியில் பயிற்சி பெற்று வருகிற மாணவர்களுக்கு, அதனால் நடைமுறைச் சங்கடங்கள் பல இருக்கின்றன வென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், மருத்துவக் கல்லூரிக்கும், மருத்துவ மனைக்கும் 10 கிலோ மீட்டர் தூரமிருக்கிறது. அதனால் பயிற்சி பெற்று வருகிற மாணவர்கள் சில சங்கடங்களுக்கு ஆளாகிறார்கள். அதனால் நாங்கள் கூட ஒரு பரிந்துரையைச் சொல்லியிருக்கிறோம். மருத்துவ மனையைச் சேர்ந்திருக்கிற அரசினர் கலைக் கல்லூரிக் கட்டிடத்தை மருத்துவ மனையாகப் பயன்படுத்துகிற வகையில் ஒரு பரிசீலனை செய்து அந்த வகையில் அந்த இடத்தை மருத்துவக் கல்லூரிக்குப் பயன்படுத்துகிற வகையில் அதை மருத்துவ மனையோடு சேர்த்துக் கொள்ள வேண்டுமென்ற ஒரு ஆலோசனை செய்யப்பட்டிருக்கிறது. அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்று இந்த சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், கோவை மாவட்டம் மிகப் பெரிய தொழில் கேந்திரமாக இருப்பதாலும், லட்சக் கணக்கான தொழிலாளர்கள் இருக்கிற மாவட்டம் என்கின்ற அடிப்படையிலும், கடந்த ஆண்டு நிதி நிலை அறிக்கையில்கூட நான் வலியுறுத்திச் சொல்லியிருக்கிறேன். சென்னையில் இருப்பதுபோல் குழந்தைகளுக்காக "சில்ரன்ஸ் ஹாஸ்பிடல்" என்று சொல்லுகிற "குழந்தைகள் மருத்துவ மனை" கோவையைப் போன்ற தொழில் கேந்திரமான நகரத்தில் அமைவது மிக மிக அவசியம் என்று கூறியுள்ளேன். அதுபற்றியும் ஆராய்ந்து, இப்படிப்பட்ட குழந்தைகள் மருத்துவ மனையைக் கோவையில் ஏற்படுத்துவதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

செங்கற்பட்டில் இருக்கிற மருத்துவக் கல்லூரியில் பயிலுகிற மாணவர்களுக்கு, அவர்கள் பயிற்சி பெற, குறைந்த அளவுக்குக்கூட நோயாளிகள் இல்லாத மருத்துவ மனையாக செங்கற்பட்டு மருத்துவ மனை இருக்கிறது. ஆகையினால் இன்றைக்கு அதுபற்றி உடனடியாக ஒரு முடிவு

செய்து, இறுதி ஆண்டு பயிலுகிற மாணவர்களைச் சென்னைக்கு அழைத்து வந்து, அவர்கள் பயிற்சிக்கு வசதிகளும், வாய்ப்புகளும் செய்து தர அரசு முடிவு செய்திருக்கிறது. அந்த முடிவினை விரைவு படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அதுமட்டுமல்லாமல், எதிர்காலத்தில்—நான் அப்படிச் சொல்வதால், செங்கற்பட்டைச் சேர்ந்தவர்கள் தவறுக எண்ணக் கூடாது.—செங்கற்பட்டில் இப்படியொரு மருத்துவ மனை தேவைதானு என்று பரிசிலிக்க வேண்டிய நிலையில் அந்த மருத்துவக் கல்லூரி வசதிகளும், வாய்ப்புகளும் பெற்றிருக்கிற தென்பதை இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்பு கிறேன். எதிர்காலத்தில், விரிவான, வசதி மிக்க சித்த மருத்துவ மனையை ஏற்படுத்த இருப்பதாக நமது அமைச்சரவர்கள் சொல்லியிருக்கி ருர்கள். எனவே அந்த செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியை ஒரு சித்த மருத்துவக் கல்லூரியாக்கிக்கொண்டால், அது பயனுடையதாக இருக்குமென்று நான் கருதுகிறேன். நான் மதிப்பிட்டுக் குழுவின் சார் பில் வாரணுசி ஆயுர்வேத பல்கலைக் கழகத்தைக் கண்டபோது, எனக்கு அந்த எண்ணம் ஏற்பட்டது. மேலை நாடுகளிலிருந்து, "அலோபதிக் டிரிட்மெண்ட்", ஆங்கில முறைப் பயிற்சி பெற்ற டாக்டர்கள், தேர்ச்சி பெற்றவர்கள், ஆயுர்வேதப் பல்கலைக் கழகத்தில், இந்த மருத்துவத் தைப் பற்றிக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல், அந்த மருத்துவக் கல்லூரி முதல்வரவர்களிடத்தில் பேசியபோது, அந்த மருத்துவக் கல்லூரிக்கு வருகின்ற மூலிகை மருந்துகளில் 30 சதவீதம் தமிழ் நாட்டிலிருந்துதான் வருகின்றதென்று சொன்னார்கள். நம்முடைய நாட்டில் சித்த வைத்திய முறையில் இருக்கக்கூடிய மூலிகைகள், மருந்து சாதனங்கள், வாரணுசிப் பல்கலைக் கழகத்திற்குப் பயன்படுகின்ற அளவுக்கு, தமிழ் நாட்டில் பயன்படுத்தப்படாமல் இருப்பதை வருந்தத் தக்க செய்தியாக நான் கருதுகிறேன்.

பி. ப. 6·10

அது மட்டுமல்லாமல், அமைச்சரவர்கள் சித்த மருத்துவத்தில் அதிக ஈடுபாடு உடையவர்கள். இன்றைக்கு இந்தக் கொள்கைக் குறிப்பில் தந்திருக்கிறார்கள். ஆகவே, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி இல்லா விட்டாலும், தமிழ் நாட்டிலே, வாரணுசி ஆயுர்வேதப் பல்கலைக் கழகத்திற்கு ஈடு கொடுக்கின்ற வகையில், சித்த வைத்தியப் பல்கலைக் கழகம் ஒன்று தோன்ற வேண்டும். அதற்கான முயற்சியை அரசு மேற் கொள்ள வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல. இன்னொன்றையும் இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தஞ்சையில் இருக்கிற சரஸ்வதி மஹால் மத்திய அரசாங்கத்தின் கட்டுக் கோப்பில் இருக்கின்ற காரணத்தால், சித்த மருத்துவ முறை பற்றிய பழைய ஓலைச்சுவடிக் களுக்கெல்லாம் இன்றைக்கு தமிழ்நாடு அரசு நேரடியாக உரிமை கொண் டாட முடியாமல் மத்திய அரசாங்க நேரடிப் பொறுப்பில் இருக்கின்றன. கடந்த பத்தாண்டுக் காலமாக அந்த ஓலைச் சுவடிகளை மொழி பெயர்த்து, சித்த மருத்துவ முறைகளைக் கற்றுக்கொண்டு, இன்றைக்கு புதிய சில வெளியீடுகள் வடநாட்டிலிருந்து வந்து கொண்டிருக்கின்றன. இங்கிருந்து தமிழ் ஓலைச் சுவடிகளிலிருந்து தமிழ் மருத்துவத்தைக் கற்று, தமிழ் மருத்துவ முறைகளை சரஸ்வதி மஹால் ஓலைச் சுவடிகளிலிருந்து கற்று, சமஸ்கிருதத்தில் மொழி பெயர்த்து, சித்த வைத்தியமே சமஸ்கிருதத்தி

லிருந்துதான் தோன்றியது என்ற புதியதொரு வியாக்கியானம் செய்து ஆராய்ச்சி நூல் வரத்தக்க பரிதாபம் இருக்கிறது. இப்படித் தமிழ் நாட்டிலிருப்பது வேதனைக்குரிய காரியம் என்பதை இந்த சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அந்தக் காரணத்துக்காகவாவது, ஒரு வேளை மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு ஆலயத்தைப் பற்றிய நிர்வாகத்தில் பங்கு இல்லையென்றாலும், நம்முடைய மருத்துவச் சுவடி களை, சித்த வைத்திய ஓலைச் சுவடிகளையெல்லாம் சரஸ்வதி மஹாலில் இருப்பதால், இந்தக் காரணத்தை வைத்தாவது, பொறுப்பேற்று பராமரிக்கத்தக்க அதிகாரம் நமக்கு இருக்க வேண்டும். அதில் மத்திய சர்க்காரின் மேலாதிக்கம் இருப்பது முறையானதல்ல என்ற கருத்தையும் இந்த சந்தர்ப்பத்தில் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

எல்லா மருத்துவக் கல்லூரிகளிலும் நரம்பியல் மருத்துவத்தைச் சிறப்பாகக் கொண்டு வர வேண்டும். இப்போது வருகிற நோய்களெல்லாம் நரம்பியல் தொடர்பாக இருக்கின்றன. 60 வயதானவர்களுக்கு பரிசோதனை ஒன்றைச் செய்ய வேண்டும். அரசியலில் உள்ள அத்தனை பேரையும் பரிசோதனை செய்து அனுப்ப வேண்டும். 55 வயது தாண்டிவிட்ட பிறகு நிர்வாகம் செய்ய முடியாதென்று அரசாங்க அலுவலர்களை அனுப்பி விடுகிறோம். 55 வயதுக்குமேல் அரசியல் பணியாற்றுகிறவர்களுக்கு இரத்தப் புதளர்ச்சியால் என்னென்னவோ கோளாறுகள் வருகின்றன. எனவே நரம்பியல் மருத்துவம் எல்லாம் மருத்துவக் கல்லூரிகளிலும் இருக்க வேண்டும். இப்போது குறைந்த அளவுக்கு போஸ்ட்-கிராஜுவேட் கோர்ஸ் மெட்ராஸ் மெடிகல் காலேஜில் இருக்கிறது. குரோயில் இருக்கிறது. ஸ்டான்லி மெடிகல் காலேஜிலும் கொண்டு வந்தால் மிகவும் நல்லது. நாளாவட்டத்தில் மற்ற மருத்துவக் கல்லூரி இருக்கிற இடங்களிலும் கொண்டு வர வேண்டுமென்று கேட்டுக் கொண்டு, என்னுடைய உரையை முடித்துக்கொள்ளுகிறேன்.

*திரு. ஆர். சக்திமோகன் : மாண்புமிகு தலைவரவர்களே, மருத்துவம், மக்கள் நல் வாழ்வுக் கொள்கைக் குறிப்புகளை எனது கட்சியின் சார்பில் ஆதரவேற்று, வாழ்த்துகிறேன். மக்கள் நல்வாழ்வுக்கான, மருத்துவத் துறைக்கான திட்டங்களுக்குப் போதிய அளவுக்கு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலும், கல்விக்காகச்செலவிடப்பட்டிருக்கும் பணத்தின் விகிதாச்சாரத்தைப் பார்க்கும்போது, மருத்துவத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ள தொகை மிக மிகக் குறைவு என்று தெரிவித்துக்கொள்கிறேன். இது மக்கள் தேவைக்கு மிகப் பெரிய விஷயம். நேரமில்லாத காரணத்தால், விரிவாகச் சொல்வதற்கில்லை. எனினும் குறிப்பாக முக்கியமான சில வேண்டுகோள்களை, சில கோரிக்கைகளை இந்த மாமன்றத்தில் சொல்லிக் கொள்ளலாமென்று கருதுகிறேன்.

[திரு. ஆர். சக்திமோகன்] [1973 மார்ச் 23

நமது மாநிலத்தில் மருத்துவர்களின் தேவை எவ்வளவு என்பது எல்லோருக்கும் தெரியும். கலைக் கல்லூரிகள் இருக்கிற அளவுக்கு மருத்துவக் கல்லூரிகள் போதவில்லை என்ற கருத்து இருந்து கொண்டிருக்கிறது. நமது மாநிலமெங்கும் பார்க்கிறபோது, 8 மருத்துவக் கல்லூரிகள் இருக்கின்றன. அதை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு கல்லூரியாக அமைக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். குறிப்பாக ஒவ்வொரு இராமத்திற்கும் மின்சாரம், குடி நீர் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்பதை அரசாங்கத்தினுடைய கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறோம். அதே போன்று 1000 பேர் கொண்ட ஊருக்கு அல்லது 1000 பேர் கொண்ட வட்டாரத்திற்கு ஒரு மருத்துவமனை என்று ஆங்காங்கு சிறு சிறு மருத்துவ மனைகள் அமைக்க வேண்டுமென்ற நிலையை நமது அரசின் கொள்கையாகக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மாவட்டவாரியாக இருக்கிற மருத்துவ மனைகளைப் பார்க்கிறபோது, இதர மாவட்டங்களில் மருத்துவ மனைகள் விரிவாக இருந்தாலும் கூட, ராமநாதபுரம் மாவட்டத்தைப் பொறுத்த வரையில், மருத்துவ மனைகள் விரிவான அளவில் இல்லையென்று பொதுமக்கள் அவதிப்படுவதை நாம் உணருகிறோம். ராமநாதபுரம் மாவட்டத்திற்கென தனியாக சிறப்பான தலைநகர் இல்லாத காரணத்தாலோ எனவோ, மாவட்டத்திற்கென பெரியதொரு மருத்துவ மனையில்லை. குறிப்பாக மேற்கு ராமநாதபுரம் மாவட்டத்திற்கென அங்குள்ள நகரங்களில் மருத்துவமனைகள் இருக்கிறதென்றாலும், அருப்புக்கோட்டையில் பெரும்பாலான மக்கள் இருப்பதால், அங்கிருக்கிற மருத்துவ மனையை விரிவு படுத்தி படுக்கை வசதிகளை அதிகப் படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

மி. 6·1

மற்றும் மதுரை மிகப் பெரிய நகரம் என்பது எல்லோருக்கும் தெரியும். அது தென்புலத்தில் பல லட்சக் கணக்கான மக்கள் வாழும் பகுதி. அங்கே அரசாங்க அளவில் எர்ஸ்கின் ஆஸ்பிட்டலை நம்பி, அங்குள்ள மக்கள் இருக்கவேண்டியிருக்கிறது. சுற்று வட்டாரங்களில் தனித்தனியாக சிறுசிறு மருத்துவ மனையில்லாத காரணத்தால், சாதாரண சிறு நோய் கண்ட நோயாளிகள் கூட எர்ஸ்கின் ஆஸ்பத்திரிக்கு வரவேண்டியிருக்கிறது. அங்கு மக்கள் சிட்டு வாங்குவதற்கு படும் அவதி, அதை வாங்கிக் கொண்டு மருந்து கொடுக்கிற அறைக்குப் போவதற்குள் அந்த அறை பூட்டப்படுகிற நிலையைப் பார்த்தால், மிகவும் பரிதாபமாக இருக்கிறது. மதுரை நகரத்தைப் பொறுத்த வரையில், கார்ப்பரேஷன் மருத்துவ மனைகள் இருந்தாலும் கூட சுற்று வட்டாரத்தில் சிறுசிறு மருத்துவ மனையில்லாத காரணத்தால், நகரில் சிறு நோயாளிகள் குவிவதைத் தடுக்கும் பொருட்டு மதுரை நகரைச் சுற்றியுள்ள அவனியாபுரம், பழங்காநத்தம், ஒத்தக்கடை போன்ற பகுதிகளில் கூடுமானவரையில் நிறைந்த வசதிகளைக் கொண்ட சிறு சிறு மருத்துவ மனைகளை அமைத்துத் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் தண்ணீர்த் தட்டுப்பாடு காரணத்தால், துணிகள் சுத்தம் செய்வதற்கு ஸ்டீம் மெஷின் பாதிக்கப் படுவதாக நீண்ட நாளாக ஒரு புகார் இருக்கிறது. எங்கு தண்ணீர் தட்டுப்பாடு இருந்தாலும் கூட, மருத்துவமனையில் தண்ணீர்த் தட்டுப்பாடு கூடாது என்ற நிலையை மாமன்றத்திற்கு எடுத்துச்சொல்லி, அந்தத் 7-10 பி. ப.

1973 மார்ச் 23] [திரு. ஆர். சக்திமோகன்]

தட்டுப்பாடு நீங்குவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு கதிர் வீச்சு வசதி மிகப்பெரிய எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் இல்லையென்ற குறையிருக்கிறது. அதைத் தொடர்ந்து புற்று நோய்க்கான வைத்திய வசதி இல்லையென்ற குறையும் இருக்கிறது. தென் புலத்தில் மிகப் பெரிய நகருக்கு பல லட்சம் மக்களைக் கொண்ட நகரத்திற்கு இந்த இரண்டு மிக முக்கிய வசதிகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன்.

இறுதியாக குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தைப் பற்றி நண்பர்கள் அனைவரும் சுருக்கமாகச் சொன்னார்கள். இதில், 4, 5 குழந்தைகள் உள்ளவர்கள், பண வசதியற்றவர்கள், எதோ பணம் கிடைக்கிறது என்று, உடல் நிலையைக் கருதாது, அறுவை சிகிச்சை செய்து கொண்டு, அதன்மூலம் ஏற்படுகிற நோயால் தாங்க முடியாத நிலையில் அவதிப் படுகிற பல புகார்கள் வந்திருக்கின்றன. குறிப்பாக ஒரு 5, 6 குழந்தைகள் பெற்ற ஒரு நபர் பணவசதி போதவில்லையென்று கருதி 100, 50 ரூபாய் கிடைக்கிறதென்று அறுவை சிகிச்சை செய்து கொண்ட பிறகு அவர் கண்ணொளி மங்கி, காது கேட்கும் சக்தி இழந்து, ஜீவன சக்திக்கான முழு சக்தியையும் இழந்து தவிக்கிறார் என்ற புகார்கூட இருப்பதை இந்த மன்றத்தில் அரசுக்குத் தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, இப்படி சில கருத்துக்களை மதிப்புகுரிய அவையின அங்கத்தினர் அவர்களே சொல்லுகிற நிலைமை இருக்குமானால், பொதுமக்கள் அதனால் தவருன எண்ணம் அடைவார்கள். இரண்டு லட்சத்து நாற்பத்து ஐயாயிரம் அறுவை சிகிச்சை நடைபெற்றிருக்கிறது. யாரோ ஒருவருக்குக் கண் பார்வை மங்கிற்று, காது கேட்கவில்லை, அது குடும்ப நலத்திட்டத்தால் ஏற்பட்ட விளைவு என்று அங்கத்தினர் சொன்னால், அவர் யார் என்ற விவரத்தைச் சொல்லி, அவரை மருத்துவ மனைக்கு அனுப்பி, எதனால் கண்பார்வை மங்கிற்று என்று கண்டுகொண்டு, அதற்குப் பின்னர் சொல்ல வேண்டும். அறுவை சிகிச்சையால் கண் பார்வை மங்காது. அந்தக் கட்டத்தில் கண் பார்வை மங்கிய காலத்தில் அறுவை சிகிச்சை நடைபெற்றிருக்கும் என்றுதான் கருதுகிறேன்.

திரு. ஆர். சக்திமோகன்: என்னிடத்தில் சில கடிதங்கள் வந்திருப்பதால் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேனே தவிர, வேறு ஒன்றுமில்லை. அப்படிப்பட்ட ஒரு நிலை இருக்கிறது. அறுவை சிகிச்சை செய்யும் பொழுது, ஒருவருடைய உடல் நிலைகளைப் பரிசோதித்துப் பார்த்துச் செய்ய வேண்டும் என்பதைச் சொல்லுவதற்காகக் குறிப்பிடுகிறேனே தவிர, குறை கூறும் நோக்கத்தில் அல்ல. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம், அகில இந்திய அளவில் பார்க்கும்பொழுது, தமிழ் நாட்டில் தான் அதிக அளவு வெற்றிகரமாக நடந்திருகிறது என்று பெருமையோடு கூறுகிறோம். அதே சமயத்தில் இப்படிக் குறைபாடுகள் ஆங்காங்கு இருந்தாலும், அவை இல்லாத நிலையை ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டு, இங்கு பேச வாய்ப்பளித்ததற்கு நன்றி கூறி அமருகிறேன். வணக்கம்.

*திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவர் அவர்களே, மருத்துவம், சுகாதாரம் சம்பந்தமாக அமைச்சர் அவர்கள் கொடுத்த கொள்கை விளக்கக் குறிப்பையொட்டி எனது கருத்துக்களை, நமது உதவித் தலைவர் அவர்களிடம் கொடுத்துவிட்டு வாக்குறுதிக்கிணங்க, பத்து நிமிஷத்தில் சொல்லி முடித்துவிட முயற்சிக்கிறேன். இப்போது ரூபாய் 41 கோடி அளவுக்கு நமது வரவு செலவுத் திட்டத்தில் இதற்கென பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இவ்வளவு தொகை செலவாகிற ஒரு திட்டத்தில் மருந்துக்கென மொத்தத்தில் செலவிடக்கூடிய தொகை மூன்று கோடியே எழுபத்தைந்து லட்சத்து அறுபத்து நாலாயிரம் ரூபாய் என்று இந்த "பெர்பார்மனஸ் பட்ஜெட்டில்" ஆறாவது பக்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதில் "அப்ஜக்டிவஸ் கிளாசிபிகேஷன்" என்ற இனத்தில் மருந்துகளுக்கு இவ்வளவு என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதுமட்டுமல்லாமல், மெடிகல் எஜுகேஷன் இனத்தில், இதே "அப்ஜக்டிவஸ் கிளாசிபிகேஷன்", 6-வது பக்கத்தில் ரூபாய் 2,26,30,000 எனறு ஒரு இனம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இரண்டையும் சேர்த்துக் கொண்டு மருந்துக்கென செலவாகும் தொகை ரூபாய் 6,01,94,000 என்று நான் கொள்ளலாமா அல்லது முதலில் நீங்கள் சொன்னபடி ரூபாய் 3,75,64,000 தானா என்று எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இந்த ரூபாய் 6,01,94,000 மருந்துக்கென செலவிடுவதாக வைத்துக் கொண்டாலும் கூட, தமிழ் நாட்டின் ஜனத்தொகையை எடுத்துக் கொண்டு பார்க்கிற போது, தமிழ் நாட்டின் ஜனத்தொகை நாலு கோடியே பதிமூன்று லட்சம். இந்த கு. 6 கோடியைக் கணக்கிட்டால்.....

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: 5, 6, வகையாக மருந்துக்குச் செலவு செய்யப்படுகிறது. மருத்துவத் துறையில், அந்த மருந்துகளுக்கென, தாலுகா மருத்துவ மனை, ஜில்லா மருத்துவமனை, இவைகளுக்குச் செலவு செய்யப்படுகிறது. ஆரம்ப சுகாதார மருத்துவமனைக்கு ஆண்டுக்கு பத்தாயிரம் ரூபாய் அளவு என அதிகப்படுத்தியிருக்கிறோம். இதைத் தவிர ஒன்றிய மருத்துவ மனை ஒவ்வொன்றுக்கு ஐயாயிரம் ரூபாய் வழங்குகிறோம். அதைக் கொண்டு மருந்து வாங்குகிறார்கள். இதைத் தவிர காலராவுக்கு, பெரிய அம்மைக்கு, இவற்றைத் தடுப்பதற்கு சில மருந்துகளை ஆங்காங்கே வழங்குகிறோம். பிறகு ஏற்பட்டால் அதைத் தடுக்கவும் மருந்துவாங்கி வினியோகிக்கிறோம். ஆகவே மருந்து போய் சுருக்கமாகக் கணக்குச் சொல்ல முடியாது. விருந்து போல கணக்கு விரிந்து கொண்டே போகும்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தமிழ்நாட்டின் ஜனத்தொகையில் ஒரு நபருக்கு வருஷம் முழுதுக்கு ரூபாய் 1, 45 பைசா மருந்துக்கென செலவாகின்றது என்று அறிகிறேன். வருஷத்திற்கு ரூபாய் 1,46 பைசா என்றால், மாதம் ஒன்றுக்கு 12 பைசா. நான் ஒன்றுக்கு ½ பைசாவுக்கும் குறைச்சல்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: மக்கள் தினமும் நோயாளியாக இருக்கக்கூடாது. எப்போதாவது நோயாளி ஆகலாம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: எல்லோரையும் எடுத்துக் கொண்டு சொல்லவில்லை. மொத்தத்தில் இந்த வீதாச்சாரம், ஒதுக்கக் கூடிய தொகை, தமிழ் நாட்டின் ஜனத்தொகையைப் பார்க்கிறபோது நாள் ஒன்றுக்கு ஒரு நபருக்கு ½ பைசா மருந்துக்கென செலவாகிறது என்று கொள்ள முடியும் என்பதற்காகச் சொல்லுகிறேன். முதலில் சொன்ன படி அந்த அளவில் இதில் பாதிதான் வருகிறது, அதாவது கால் பைசா வருகிறது. இரண்டு இனத்தையும் சேர்த்தால், ஒரு பைசா செலவாகிறது. இதை அதிகப்படுத்த வேண்டும். நம்முடைய மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கு கடந்த வருஷம் சொன்னது போல உதவி சபாநாயகர் இருக்கிற போதும் சொல்லுகிறேன். நல்வாழ்வு என்பதில் பல அம்சங்கள் இருக்கின்றன. ஆரோக்கியம் என்பதற்கு தமிழில் ஒரு வார்த்தை கண்டு பிடிக்க முடியாதா என்று யோசிக்க வேண்டும். நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் இந்தத் துறையில் விசேஷ அக்கறை காட்டி பல வகையிலும் இதைச் சிறப்பாக நடத்தி மக்களுக்கு நல்ல பலனை அளிக்கத்தக்க வகையில், அதை நடத்திச் செல்ல வேண்டும்; அதற்கான முயற்சிகளைச் செய்ய வேண்டும் என்பதில் மிகவும் ஆர்வம் காட்டி வருகிறார்கள். அதைப்போன்றே அவர்கள் இப்போது பல விவரங்கள் பல்வேறு இனங்களில் நாங்கள் தெரிந்து கொள்வதற்கு தந்துள்ள இந்த புஸ்தகங்கள் அனுகூலமாக இருக்கின்றன. புத்தகங்கள் அதிகமாகக்கூட இருக்கின்றன. ஒரே புத்தகம் 7, 8 வருகின்றன. என்னிடத்தில் வருகின்ற கவர்மெண்ட் கவரைக்கூட டி. சி. டி. ஓ., தாசில்தார் போன்ற ஆபீஸ்களுக்கு அனுப்பிவிடுவேன். அதுபோல ஸ்கூல்கூல் ஹெட்ரிகளுக்கு அல்லது பக்கத்தில் இருக்கின்ற எதாவது ஹெட்ரிக்கு இப்புத்தகங்களை அனுப்பிவிடுவேன். ஆனால் விவரச் சுருக்கமாக, மாநிலத்தில் இன்ன இன்னவைகளுக்கு எவ்வளவு செலவாகிறது, பல்வேறு வகைகளிலே என்ன கொடுக்கப்படுகிறது, கிராமப் புறங்களில் எவ்வளவு கொடுக்கப் படுகிறது, செய்யப்படுகிறது என்பதையெல்லாம் உணர்த்தும்படியாக சாராம்சமாக ஒரு சிறிய புத்தகம் அமையப் பெற வேண்டும். இதில் இருந்த நேரம் செலவழித்து, இந்தப் பெரிய புத்தகங்களிலிருந்து விவரம் கண்டுபிடிப்பதே கஷ்டமாக இருக்கின்றது. இந்தக் குறையை இந்தத் துறை நிவர்த்திக்கும் என்று கருதுகின்றேன். அரசு மொத்தத் தில் ரூபாய் 48 கோடியை மருத்துவத்துக்காகச் செலவழிக்கின்றது. இதில் மருந்துகளுக்காக குறைவான தொகையைச் செலவழிப்பதை யாரும் விரும்பமாட்டார்கள். அவர்களுக்கு மனநிறைவு இருக்கும் என்று நான் நினைக்க வில்லை. அடுத்த வருடத்தில் இந்தத் தொகையை மிக மிக அதிகமாக ஆக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும். இந்தத் துறைக்கு அதிகத் தொகையை ஒதுக்க வேண்டுமென்று நான் தெரிவித்துக் கொள்கிறேன். இன்னொரு வருமானம்கூட இருக்கிறது. மதுபான வரியாக 45 கோடி ரூபாய் வருகிறது. மதுபானம் அமுலில் இருந்து கொண்டிருக்கிறது. மதுபானம் விலக்கு எல்லாம் போய்விட்டது. இந்தத் தொகையையும் கணக்கில் கொண்டு இந்தத் துறைக்கு அதிகத் தொகை ஒதுக்க வேண்டும்.

இப்போது பிரைமரி சென்டர்கள்பற்றிப் பேச நான் விரும்புகின்றேன். அந்த பிரைமரி ஹெல்த் சென்டர் ஒன்றுக்கு வருடத்திற்கு 3 ஆயிரம்

பி. 6-1

பிற்பகல் 7-20

ரூபாய்தான் மருந்துக்கென கொடுக்கிறார்கள். அங்கு ஒரு வேடி டாக்டர், ஒரு "மேல்" டாக்டர் இருக்கிறார்கள். அதற்குத் தகுந்த வசதிகள், கட்டிடங்கள் இருக்கின்றன. ஆனால் மருந்துக்கு 3 ஆயிரம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதுபோல் மாநிலத் திலே பல இடங்களிலே இருக்கும். இந்தக் குறையைக் கனிய விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று அரசைக் கேட்டுக் கொள்கின்றேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன்: ஆரம்ப சுகாதார மருத்துவ நிலையங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு மருந்துக்காக 10 ஆயிரம் ரூபாய் ஒதுக்கப்படுகிறது. மருந்துச் செலவுகளும் சேர்ந்திருக்கின்றன. அங்கே தங்கி மருத்துவம் பெறுபவர்களுக்கு உணவுச் செலவும் ஏற்றுக் கொள்ளப் படுகிறது. பல்வேறு குடும்பக் கட்டுப்பாடு மருந்தகங்களுக்கு இரண்டாயிரம் அல்லது 1,500 ரூபாய் அளவுக்கு மருந்துக்குச் செலவிடப்படுகிறது.

திரு ரா. கிருஷ்ணசாமி நாயுடு: இங்கே கொடுத்திருக்கக் கூடிய விவரங்களில் கூட ஆரம்ப சுகாதார நிலையங்களுக்காக 1,81,15,000 ரூபாய் என்று ஒதுக்கப்பட்டிருக்கின்றது. இதையும் சேர்த்துக் கணக் கெடுத்துப் பார்த்தாலும்கூட, மொத்த மருந்துச் செலவு எல்லாம் குறைவு தான். இதையும் கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன். மொத்தத்தில் இந்தத் துறையில் மருந்துக்காகச் செலவாகின்றதை வைத்துப் பார்த்தால்கூட, நாம் முதலில் பார்த்தபடி, மருந்துக்காக 3,75,00,000 ரூபாய் செலவு என்று கணக்குப் பார்த்தால், அதிலே வேறு இனங்களுக்கும் செலவாகின்றது என்பதால் மருந்துக்குக் குறைவாகத்தான் செலவாகிறது என்பது தெரிகிறது. ஆகவே இதிலே விசேஷ கவனம் செலுத்த வேண்டும். இப்படிப்பட்ட மருத்துவ நிலையங் கள் மொத்தம் 12,055 இருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதிலே சென்னையிலே 79, மதுரையிலே, செங்கற்பட்டிலே, கோவையிலே 410, இப்படி மற்ற ஊர்களிலே மொத்தம் கிட்டத்தட்ட 10 ஆயிரத்து சொச்சம் இருக்கின்றன. இந்தமாதிரி விவரங்களை கடந்த ஆண்டும் நான் கொல்லியிருக்கின்றேன். தலைநகரங்களைக் கவனிக்க வேண்டாமென்று நான் சொல்ல விரும்பவில்லை. ஏனைவைக்கு கிராமங்களுக்கும் இந்த வசதி களை அதிகமாக விஸ்தரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அங்கெல்லாம் மிகமிகக் குறைவாக இருக்கிறதென்பதை அரசு கவனத்தில் கொண்டாவது இதைக் கவனிக்க வேண்டும். அடுத்த ஆண்டிலாவது கிராமப் புறங்கள் கேட்பாரற்றுக் கிடக்கின்றன என்றும், அரசு கிராமப் பகுதிகளைக் கவனிப்பதில்லை என்றும் மக்கள் மனதில் குறை ஏற்படாத படியும், அவர்களுக்கு மன நிறைவு தோன்றும்படியாகவும் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும். மருந்துகள் கொடுப்பதிலும், நிலையங்கள் ஏற்படுத்துவதிலும் அமைச்சர்களும் இந்த அரசும் விசேஷ கவனம் செலுத்த வேண்டுமென்று தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த அறிக்கையிலே பார்த்தால்கூட இந்த வசதிகள் எல்லாம் நகரங்களிலே தான் செய்யப்பட்டிருக்கின்றன. மாநில எட்டுவார்ட்டர்லியில் இம்மாதிரி 7, 8 இருக்கின்றன. 1973-74ல் மேற்கொள்ளப்படவிருக்கும் பணிகளில் கூட, நகரப் பகுதிகளில்தான் விஸ்தரிக்கப்பட்டு வருகின்றது என்பதைப் பார்க்க முடிகிறது. இதையும் கவனித்து ஆவன செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வார்த்தைகளை முடித்துக் கொள்வதற்கு முன்னால் ஒரே ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறேன். குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் சம்பந்தமாகச் சொல்ல விரும்புகின்றேன். அது நம் நாட்டிற்கு அவ சியம்தான். 56 கோடி மக்கள் நாட்டில் இருந்துகொண்டிருக்கின்றார்கள். அவ்வளவு அதிகமாக இருக்க வேண்டாமென்று சொல்லுகின்றேன். எவ்வளவு வருமானம் வருகிறதோ அதற்குத் தகுந்தபடி குடும்பத்தில் பிள்ளைகள் பெறும்படி குடும்பக் கட்டுப்பாடு தேவை என்று சொல்லு கின்றேன். பெரியவர்கள்கூட இதுபற்றி முன்னால் சொல்லியிருக்கின்றார் கள்.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து நவநிதியம்தேடி.
நவநிதியம்தேடி நல மொன்றும் அறியாத நாரியரைக்கூடி.
பூப்பிளக்க எழுகின்ற புற்றீசல்போல
பொல பொலவெனக் கலகலவெனப் புதல்வர்களைப் பெறுவீர்
காப்பதற்கு வகையறியீர் கைவிடவும் மாட்டீர்
கட்டுறுவை மரப்பினலில் வால் நுழைத்துக்கொண்டே
ஆப்பதனைப் பிடித்தசைத்த பேய்க் குரங்கு போல
அகப்பட்டீர் கிடந்துழல அகப்பட்டீரே

என்று அப்போதே எடுத்துக் கூறியிருக்கிறார்கள்.

திரு ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, இந்தப் பாட்டினுடைய அர்த்தம் என்ன என்பதை அறிய விரும்புகின்றேன்.

திரு ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தனியே சொல்கின்றேன். அது வுடைய கருத்துக்களை எல்லாம் தனியே பார்த்துக்கொள்ளலாம். அரசி னுடைய முயற்சிகளைப் பொதுமக்களும் அறிந்து அவற்றில் அக்கறை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொண்டு என்னுடைய வார்த்தைகளை முடித்துக்கொள்கின்றேன்.

* திரு கே. ராஜாராம்: தலைவரவர்களே, நமது மாநிலத்தில் ஜில்லா தலைநகரங்களில் உள்ள பெரிய ஆஸ்பத்திரிகளில் பொதுவாக இட நெருக் கடி அளவுக்கு மீறிப் போய்க்கொண்டிருக்கின்றது. இதைக் குறைக்க வேண்டுமென்றால், ஜில்லா தலைநகரங்களைச் சுற்றி 20, 25 மைல்களுக் குள்ளாக இருக்கும் தாலுக்கா தலைநகரங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளில் எல்லா வசதிகளும் கிடைக்கும்படி செய்ய வேண்டும். அது தவிர, வேறு வழியில்லை. மேன்மேலும் பெரிய நகரங்களில் ஆஸ்பத்திரிகளை அதிகப்படுத்திக்கொண்டு போவதைவிட, ஜில்லா ஆஸ்பத்திரி, எட்டுவார் டர்ஸ் ஆஸ்பத்திரியில் இருக்கக்கூடிய வசதிகள் அனைத்தும் தாலுக்கா தலைநகர ஆஸ்பத்திரியில் கிடைக்கும்படியாகச் செய்வதுதான் அதற்கு வழி என்று கருதுகிறேன். அதற்கு வேண்டிய ஏற்பாட்டை அரசாங்கம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, இந்த டிரிபிள் வாக்சின் போடுவதைப்பற்றிப் பேச விரும்புகிறேன். இந்த முறையில் கிடைக்கும் அனுகூலங்களைப்பற்றி யெல்லாம் சொல்லப்பட்டிருக்கிறது. இதனால் செலவு ஒன்றும் அதிகமாக ஆகப்போவதில்லை. பள்ளிக்கூடங்களில் படிக்கும் மாணவர்களுக்

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 23

காவது கண்டிப்பாக டிரிபின் வாக்சென் போட வேண்டுமென்ற ஏற் பாட்டைச் செய்ய வேண்டும். அதற்காகச் செலவு ஒன்றும் அதிகமாகி விடாது. உடனே அரசாங்கம் இதைக் கவனித்து ஏற்பாடு செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கின்றேன்.

டி. பி. சானடோரியங்களில் இதற்கு முன்னுல் வழக்கமாக அங்கு தங்கியிருக்கும் நோயாளிகளுக்குக் கொடுத்து வந்த உணவை, உணவின் தரத்தைக் குறைத்து, சத்துணவு இல்லாமல் ஆக்கிவிட்டதாகப் புகார் சொல்லப்பட்டிருக்கிறது. எங்கள் திருமங்கலம் தொகுதி சட்டசபை உறுப் பினர் திரு ரத்தினசாமி அவர்கள் டி. பி. சானடோரியத்தில் இருந்தார்கள். அவரைப் பார்க்க, போன வாரத்தில் நான் சென்றிருந்தேன். அப்போது அங்கே நோயாளிகள் வந்து சொன்னார்கள். முட்டை, மாமிசம், பால் போன்ற சத்துணவுகள் டி.பி. நோயாளிகளுக்கு மிக முக்கியமான உணவு. அவைகளைக்கூட குறைத்துவிட்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு அந்த சத்துள்ள உணவும் கிடைக்கவில்லையென்றால், அவர்களுக்கு மிகவும் பாதகம் ஏற்படும். அந்த உணவுப் பொருள்கள் மீண்டும் முன்போல் கிடைக்கும்படியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கின்றேன்.

*மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, அதில் எதாவது அப்பழுத் தவறு ஏற்பட்டிருந்தால், உடனடியாக அரசாங்கம் கவனிக்கும். ஆனால் ஒரு ஐந்து ஆண்டுக் காலத்திற்கு டி.பி. நோயாளிகளை சானி டோரியத்திலே வைத்து சிகிச்சை அளித்தாலும் அவர் தம் வீட்டிலே வைத்து சிகிச்சை அளித்தாலும், எறத்தாழ 1950, 1952-வது ஆண்டிலே கண்டுபிடிக்கப்பட்ட மருந்துகள் பலன் தருவதாக இருக்கிறது. என்ற காரணத்தால் அதற்கு முன்னுலே இருந்த சத்துணவு கொடுத்து உடல் நிலையில் தாங்கும் சக்தியை உண்டாக்கவேண்டுமென்னும் முறை இப்போது கையிடபட்டுவிட்டது. இருபது ஆண்டுக்கு முன்னுலே மருந்துகள் கொடுத்து நோய் தீர்க்கையிலே, தாக்கும் சக்தியுலேதான நோயை எதிர்த்து நின முடியும். அதற்குப் பின்னுல் தாக்குகிற சக்தி உணவினுல எற்படத் தேவையில்லை. மருந்தாலே அந்த நோயைக் குணப்படுத்த முடியும் என்பது காணப்பட்டு அந்தத் துறையினராலே ஒரு 10, 15 ஆண்டுகளாகவே வலியுறுத்தப்பட்டு வருகிறது. அதனுலே அந்த மருத்துவ மனையில் ஒரு வேளை உணவில் மாறுதல் எற்பட்டிருக்கலாம். அளிக்கப்பட வேண்டிய முறையிலே விதிக்கப்பட்ட உணவு குறைந்திருக்குமானுல், அதைக் கவனிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

மி.ப. பகல் 7-30

* திரு கே. ராஜாராம்: சென்ற ஆண்டிலே கொடுத்துக் கொண்டிருந்தது நடப்பு ஆண்டில் குறைக்கப்பட்டிருக்கிறது என்று சொன்னார்கள். அதனுல்தான் கவனிக்க வேண்டுமென்று அமைச்சரவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

அடுத்தபடியாக, நமது மாநிலத்தில் பொதுவாக மாநிலத் தலை நகரில் கொசுத் தொல்லையை ஒழிப்பது. அதுவும் சட்டசபை அங்கத்தினர்கள் தங்கும் சர்க்கார் எஸ்டேட்டில் கொசுத் தொல்லை சகிக்க முடியவில்லை. அதை உடனே போக்குவதற்கு ஏற்பாடு செய்யவேண்டும். டாக்டர்களுக்குக் கூட வேலை வாய்ப்பு இல்லை என்ற நிலை ஏற்படுமென்று இதுவரை யாரும் எண்ணியது கிடையாது. இப்போது டாக்டர்களுக்குக்கூட

1973 மார்ச் 23] [திரு. கே. ராஜாராம்]

வேலையில்லாத் திண்டாட்டம் வந்து விட்டது என்று நினைக்கும்போது மிகவும் மன வேதனைப்படுகின்றேன். கல்வி இலாகாவில் பி.எ., பி.இ.டி., படித்த ஆசிரியர்களின் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்குவதற்காக என்றே, நடப்பு வருஷத்தில் 900 ஆசிரியர்களை நியமிப்பது என்று மத்திய அரசாங்கத்திலிருந்து மானியம் கொடுத்திருக்கிறார்கள். அதே மாதிரி பல ஆஸ்பத்திரிகளில் இன்னும் டாக்டர்கள் இல்லை. பஞ்சாயத்து யூனியன் டிஸ்பன்சரிகளில்கூட டாக்டர்கள் இல்லாமல் இருக்கிறார்கள். டாக்டர்கள் போடுவதற்கு இடமில்லாமலில்லை. இடம் இருக் கிறது. ஆனால் அரசாங்கம் வேலை கொடுக்க முடியாத நிலைமை. உண் மையில் ரூ. 465 கோடி நிதி இருந்தும்கூட வைத்திய வசதி நல்வாழ்வுத் துறையில் டாக்டர்கள் படித்து வந்தவர்களுக்குக் கூட வேலை கொடுக்க முடியாத ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்றால், அது வருந்தத்தக்க நிலைமை. மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்க மும் இதற்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும். நிதி வசதியைச் செய்து கொடுக்க வேண்டிய முக்கியத்துவம், நல்வாழ்வுத் துறையைப் பொறுத்த வரையில், மத்திய அரசாங்கத்திற்கும் இருக்கிறது என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, ஹோமியோபதி முறையை கிராமங்களிலே பிரபலப் படுத்தவேண்டும். எடுத்ததற்கெல்லாம் அலோபதி முறைக்குப் போகிற நிலை மாறி, கிராமங்களிலே ஹோமியோபதி முறை, ஆயுர்வேத, சித்த, யுனானி வைத்திய முறைகளைப் பிரபலப்படுத்த ஏற்பாடு செய்ய வேண்டும்.

தொழுநோயைப் பொறுத்தவரையில், தமிழ்நாடுதான் தொழு நோயாளிகள் அதிகமாக உள்ள மாநிலம் என்று பத்திரிகைகளில் இரண்டு மூன்று தினங்களுக்கு முன்னுல் படித்தவுடன் திகில் வரிப் போட்டது. இந்த நோய் உள்ளவர்கள் அதிகமாக உள்ள இடம் தமிழ் நாடுதான். அடுத்தபடியாக ஆந்திரா. இரண்டும் சேர்ந்து பழைய "மெட்ராஸ் ஸ்டேட்". இதைப் பார்த்தவுடன் நான் மிகவும் ஆச்சரியப் பட்டேன். அதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இதை அடியோடு விலக்குவதற்கு என்ன செய்யவேண்டுமோ அதற்கான ஏற் பாட்டைப் பண்ண வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். இராம நாதபுரம் ஜில்லாவுக்கென்று ஒரு தனி "நெட்குவார்ட்டர்ஸ்" ஆஸ்பத்திரி வேண்டு மென்று கேட்டார்கள். அம்மாதிரிச் செய்வதாக இருந்தால், மதுரை ஜில்லாவுக்குக் கொஞ்சம் "ரிலீப்" எற்படும். ஆகையினுல் கடற்கரை ஓரமாக இருப்பதால் இராமநாதபுரம் ஜில்லாவுக்கு தனியாக ஜில்லா மத்தியில் ஒரு ஆஸ்பத்திரி இருக்க வேண்டுமென்று கேட்டார்கள். மதுரையிலே இராமநாதபுரத்திற்கென்று ஒரு தனி ஆஸ்பத்திரி வைக் கலாம். ஏனென்றால் மதுரையிலே இராமநாதபுரத்திற்கென்று ஒரு கலெக்டர் ஆபீஸ் இருக்கிறது. எல்லா தலைமை உத்தியோக அலுவலகங் களும் அங்கே இருக்கின்றன. மதுரையிலே வைத்தாலும்கூட, இப்போது அகிருக்கிற எர்ஸ்கின் ஆஸ்பத்திரியில் கொஞ்சம் கூட்டம் குறையும்.

கலப்பட ஒழிப்பைப் பற்றி ஒரு சரியான கொள்கை நிர்ணயிக்கப்பட் டில்லை என்பதை வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்ளுகின்றேன். மாநிலத்திலுள்ள முனிசிபாலிட்டிகளில் இரண்டு முனிசிபாலிட்டிகளைத்

[திரு. கே. ராஜாராம்] [1973 மார்ச் 23

தவிர, மற்ற இடங்களில் இதை அமுல் படுத்தியிருக்கிறார்கள். 91 முனிசிபாலிட்டிகளில் 89 முனிசிபாலிட்டிகளில்தான் கலப்பட ஒழிப்பை அமல்படுத்துவதற்கான உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். பேரூராட்சிகள் 598 இருக்கின்றன. அதில் 171-ல் தான் கலப்படத்தைத் தடுத்து அமல்படுத்துவதற்கான உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள். அதை என்னால் புரிந்துகொள்ள முடியும். பேரூராட்சி என்று சொல்லுவது சிறு சிறு கிராமங்களில் பல சேர்ந்து 10,000, 20,000 ஜனத் தொகை கொண்டது. அங்கேயெல்லாம் அமல்படுத்துவது கஷ்டம். நகரிய குழுக்களில் 19-ல் 10-ல்தான் இருக்கின்றது. அங்கேயெல் லாம் கலப்பட ஒழிப்புக்கு ஏற்பாடு செய்யவேண்டும். ஊராட்சி ஒன்றியங்கள் 374-ல், 31-ல்தான் இருக்கின்றது. பெரிய ஊர்களில் கலப்பட ஒழிப்புக்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று தெரிவித்துக் கொள்ளுகிறேன். தவிர இந்தக் கலப்படங்களைக் கண்டு பிடிப்பதற்கு மாநிலம் பூராவிலும் இருந்து இன்டிக்குத்தான் அனுப்ப வேண்டுமென்று இல்லாமல் இன்னும் இரண்டு மூன்று இடங்களில் கோவை, மதுரை போன்ற இடங்களில் கூட நிசர்ச் செய்வதற்கான இயந்தி ரங்கள், வசதிகள் ஏற்படுத்த அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டும். எல்லாவற்றையும் இன்டிக்குத்தான் அனுப்ப வேண்டு மென்று இல்லா மல் மேலும் இரண்டொரு இடங்களில் ஏற்பாடுகள் செய்யவேண்டு மென்று கேட்டுக்கொள்கின்றேன். பொதுவாக நான் கல்வி மானியத்தில் பேசி முடிக்கும்போதே சொன்னேன். கல்வி அமைச்சர் அந்த அமைச்சகம் கோரிய தொகைகள் பூராவையும் கூடுமானவரையில் குறைக் காமல் பெற்றுக்கொண்டார்கள். ஆனால் நமது மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அந்த வகையில் கொஞ்சம் தவறி விட்டார்கள் என்று அப்போதே நான் குற்றஞ்சாட்டினேன். வைத்தியக் கல்வி ஆகிய வற்றிற்கு 1971–72-ல் 1,540 லட்சம் ரூபாய் மொத்தம் செலவாகியிருக் கிறது. ஆனால் வரப்போகிற வருஷத்திற்கு 14 கோடி 35 லட்சம் ரூபாய்தான் நிதி ஒதுக்கியிருக்கிறார்கள். இவ்வளவு குறையும்படியாக இவர் விட்டிருக்க வேண்டியதில்லை. எனென்றால் இது நிதி அதிகமாகத் தேவை இருக்கக் கூடிய ஒரு துறை. இன்னும் எவ்வளவு இருந்தாலும் போதாது. அப்படிப்பட்ட ஒரு துறையில் இப்படி ஒரு கோடி 5 லட்சம் ரூபாயை குறையவிட்டிருக்கக்கூடாதென்று நான் தெரிவித்துக்கொள்ளு கிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : அந்தத் தலைப்பிலே கடந்த ஆண்டு குடும்ப நலத் திட்டத்திற்கு மருத்துவக் கல்லூரியிலே நடைபெற்ற காரியங்களுக்கான தொகையும் இணைக்கப்பட்டிருந்தது. நலத் துறையிலே இணைக்கப்பட்டிருந்த தொகையும் மருத்துவக் கல்லூரித் துறையிலே இணைக்கப்பட்டிருந்த தொகையும் எடுக்கப்பட்டு அது குடும்ப நலப் பகுதி என்ற ஒரு பகுதியிலே தனித்துக் காட்டப்பட்டிருக்கிறது.

திரு கே. ராஜாராம் : இந்த மாதிரி இடங்களில் கீழே "புட் நோட்" போட்டிருப்பார்கள். இதிலே இல்லே. பஞ்சாயத்து யூனியன் மேல் பார்க் கும் டிஸ்பன்சரிகள், சென்ற ஆண்டு அதாவது இந்த மார்ச்சோடு முடிகிற வருஷத்தில், 45 டிஸ்பன்சரிகளை எடுத்துக் கொள்ளுவதற்கு நிதி ஒதுக்கியபடி எடுத்துக் கொண்டிருப்பார்களென்று நம்பு

1973 மார்ச் 23] [திரு. கே. ராஜாராம்]

கின்றேன். ஆனால் வருகிற ஆண்டில் 15 டிஸ்பன்சரிகளுக்கு பணம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இதிலும் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கொஞ்சம் விட்டுக்கொடுத்துவிட்டார்கள். இன்னும் கொஞ்சம் சாமர்த்தி யத்தோடு உதவியைப் பெற்றிருக்கவேண்டுமென்று தெரிவித்துக்கொள் கின்றேன். 15 டிஸ்பன்சரிகளுக்கு மட்டும்தான் நிதி ஒதுக்கப்பட்டிருக் கின்றது. சென்ற வருஷம் இருந்ததைக் காட்டிலும் மூன்றில் ஒரு பாகமாக ஆக்கியிருக்கிறார்கள். அரசாங்கம் எடுத்துக்கொண்டால் அதிக வசதி இருக்கும். நடப்பு வருஷத்தில் 45-ஐ எடுத்துக் கொண்டிருக்கும்போது, வரும் வருஷத்தில் அதிகமாகக் குறைத்திருக்க வேண்டியதில்லையென்று நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக "மெடர்னிடி அன்ட் பிரைமரி ஹெல்த் சென்டர்ஸ்" Actuals of 1971–72, ரூ. 230·98 லட்சம் என்று இருக்கிறது. வரப்போகின்ற வருஷத்தில் 213·67 லட்சம் ரூபாய் என்று இருக்கிறது. இம்மாதிரி கிராம சம்பந்தமான வைத்தியச் செலவினங்களுக்கு தொகை பெரிதும் குறைக்கப்பட்டிருக்கிறது. இந்த இலாகா அப்படிக் குறைக்க விட்டிருக்கக்கூடாது என்று மிகவும் வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறேன். வைத்தியத் துறையில் கிராமங்களுக்கு அதிக கவனம் செலுத்த வேண்டும். கிராமங்களுக்குப் போகும் பணம்தான் மிகவும் குறைந்திருக்கிறது எனறு தெரிவித்துக்கொள்ளு கிறேன். ஒன்றே ஒன்றை மட்டும் சொல்லி முடித்து விடுகிறேன். 7-4 பி.ப

மக்கள் நல்வாழ்வுத் துறை இலாகாவில் எல்லாம் சரியாக நடக்கிற தென்று சொல்ல முடியாது. பப்ளிக் அக்கவுண்ட்ஸ் கமிட்டியில் இரண்டு முக்கியமான குற்றச் சாட்டுகள் வந்தன. நான் பார்த்து மிகவும் வருத்தம் அடைந்தேன். சென்னையில் "ஹீமன அனட் சில்ட்ரன்" ஆஸ்பிட்டலில் "டீப் எக்ஸ்ரே" இயந்திரம் ஒன்று இருக்கிறது. 1950-ல் அது வைக்கப்பட்டு 1966-ல் ரிப்பேராகிவிட்டது. அதை ஒரு கம்பெ னியைக் கூப்பிட்டு ரிப்பேர் செய்திருக்கிறார்கள். அதற்காக 23,635 ரூபாய் செலவழித்திருக்கிறார்கள். ரிபேர் பண்ணி கம்பெனிக்கும் பணம் கொடுத்து விட்டார்கள். ஆனால் அதன் பின் ஐந்து நாட்கள்தான் அது வேலை செய்திருக்கிறது. மறுபடியும் அதை டிபார்ட்மென்டில் ஒப்படைத்து ரிப்பேர் செய்திருக்கிறார்கள். டிபார்ட்மென்டில் ரூபாய் 3,062 செலவு செய்து ரிப்பேர் செய்து மீண்டும் ஓட வைத்தார்கள். ஆறு மாதம் வேலை செய்த பிறகு, மீண்டும் நின்று விட்டது. இவ்வளவு அவசரப்பட்டு அந்தக் கம்பெனிக்கு பில் பணத்தைக் கொடுத்திருக்க வேண்டிய அவசியமில்லை. (குறுக்கீடு) 1966-ல்தான். யாராக இருந்தால் என்ன ? பணம் கொடுத்தது 1967-ல் தான். நபரைப் பொறுத்துக் காரியமல்ல. ரிப்பேர் செய்து சரி பார்த்துக்கொண்டு பணம் கொடுத்திருக்க வேண்டும் என்று சொல்கிறேன். டிபார்ட்மென்டைப் பற்றித்தான் சொல்கிறேன்.

மாண்புமிகு திரு க. அன்பழகன் : தலைவரவர்களே, அரசாங்கம் ஒன்றுதான். அமைச்சரவையில் உள்ள அமைச்சர்களின் வேகத்தையும் ஊர்வத்தையும் ஒட்டி நிர்வாகத்தில், அரசாங்கத்தில் உள்ள அதிகாரிகள் இதமாகவும் செயல்படுகின்றார்கள். ஏற்கெனவே வெளியே கொடுத்து ரிபேர் செய்திருக்கிறார்கள். அது சரியாக இயங்கவில்லை. இலாகாவில்

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 2

கொடுத்துச் செய்தால் கொஞ்சம் தாமதமாகிறது. இப்பொழுது ஒ தனிப பகுதி கூந்த இலாகாவில் ஏறபடுத்தியருக்கிறார்கள். அது நா மூடைய இலாகாவில இல்லை என்று சொல்லுவும, நம்முடைய அரசா கதைச் சேர்ந்ததுதான். இப்பொழுதுகூட, கொஞ்சம் தாமதமாகிறத அனைத்தும் குறைபபதறகு முயறசி எடுகக்பட்டு வருகறது. எந்த அளவுக முடியுமோ அந்த அளவுகுப பயனபடத் தகக முறையில் அமைகக்பபடு

திரு கே. ராஜாராம்: தலிவரவர்களே, அது 1967-கு முன் ஏற்பட்டது எனறு சொனனரகள். 1967-கப் பினனல் ஏற்பட்டதொ றையும் இபபொழுது சொலகறேன். கொடைகானலில் எக்சே பினனை ஒனறு 1967 வரையில் "இனஸ்டால்" செயயப்பட்டது. ரூபாய் 40,00 செலவு செய்து அது "இனஸ்டால்" செய்யபபட்டிருக்கிறது. அத "பினனல்" ஒரு வருஷம், 1968 மார்ச் வரையிலதான் வேலை செய்திரு கிறது. அது இரணடு வருஷமாக ரிபபேர் செய்யப்படாமல் வேல செயயாத நலையில போடடுவிடடாரகள். இனறியமையாத ஒரு பினனல இரணடு வருஷமாக இயககுவதறகு முயறசி எடுத்துககொளளாமல் அ படியே போடடு வைக்கலாமா? அபபக வேலை செயதுகொணடிருந்தவர்க சுயமா தானை சமபளம் வாஙகிகொணடு உடகாரநதுகொணடிருந்தார்கள் அந்த இலாகா கவனித்துருந்தால், அதை ரிபபேர் செயதருக்கலா அலலவா? நடவடிககை எடுகக்வில்லை. அதைத்தான் குறறஞசாட்டி அமைசசர் அவாகள் கொஞசம் சுறுசுறுபபாகவும வேகமாகவும கவனிக்க கூடியவர் எனற காரணததாலே, சொலகறேன். அந்த இலாகாவி இயமாதரி இனி ஏறபடாமல பாரத்துக் கொளவார் எனறு நடபுகிறேன் இலலாவிடடால் நான் சொலலியாடடேன். இபபாதாவது குறைகள அலசிப் பாரத்து இனனும் கொஞசம சுறுசுறுபபாக வேலை செயயுமபட செயய வேணடுமெனறு கேடடுககொளகிறேன்.

அடுத்தபடியாக, எனக்கு முனபு ஒரு நணபர் எடுத்துச்சொன்ன மாதிரி, மகக்ள் நல்வாழ்வுத் துறையில் இந்த வருஷத்தில காலேர அபபைனட விஷயமாக லைஞகொடடுககுப போகாத வருஷம. இரணட வருஷம எனறு சொலலப்படுகிறது. அந்த நிலைமை ஏற்பட்டதறகா நான பெருமைப படுகிறேன். எனது மாநில அரசாஙகம இமமாதிரி திரும்பியிருகிறது எனபது எனகக மிகுந்த சந்தோஷத்தை அளிகக்றத அதறகாக எனது பாராடடுதலை அமைசசர் அவாகளுககுத் தெரிவித்து முடிதத்துக் கொளகிறேன்.

*மாணபுமிகு திரு க. அனபழகன்: மாணபுமிகு மனறத் தலை ரவாகளே, இநத மனறத்தில நல்வாழ்வு, மருத்துவம் ஆகிய துறைகள துடைய நடமுறையை விளககுகிற வகையில தரப்பட்ட கொளை வுகளகளை மது மதிபபிறகுரிய எதிரக் கடசித் தலைவர் அவாகளும் மறறும் பல மாணபுமிகு உறுபபினாகளும் நநத பலவேறு விதமான ஆயவுரைகளுகாகவும் பயனான கருதது்களுகாகவும் எனறுடை உளமாரந்த நனறியையும் வணகக்தையும் தெரிவித்துககொளகிறேன்.

இநதத் துறையைப் பொறுத்த வரையில், இரணடு ஆணடு காலமா இநதத் துறையோடு நான ஈடுபாடு கொணடு பணியாறறி வருகின்றமையாக அதன முறைகளைக் கொஞசம தெரிநதுகொணடிருகக்ிறேன. வரு

1973 மார்ச் 23] [திரு. க. அன்பழகன்]

காலத்தில் இந்தத்துறைகள் மிகப் பெரிய அளவுக்கு மக்களுக்குப்பயன் படுகின்ற வகையில் பணியாற்றகின்ற அமைப்பாக இருக்கின்ற காரணத் தால் அப்படி நிறைவுடையதாகத் தான் இருக்கும் என்று நான் கருதியிருந்தாலும், செயல்படுத்துகின்ற முயற்சியில் போதுமக்களுக்குக் கிடைக்க வேண்டிய பலன்தான் முக்கியம் என்பது குறிக்கோளாக இருக்கின்றபோது, சில குறைகள் வருகின்றன. அவைகளை நிவர்த்தி செய்ய வேண்டுமென்ற எண்ணமும் மக்களுடைய கோரிக்கையைப் பூர்த்தி செய்வதற்கு புதிய, புதிய முயற்சிகளை அரசு மேற் கொண்டாக வேண்டுமென்ற கருத்தும் எனக்கு எப்பட்டிருக்கிறது. குற்றச் சாட்டுகள், குறைபாடுகள் சொல்கின்றபோது எனக்கு வருத்தம் எற்படக் காரணமில்லை. அவற்றையெல்லாம் என்னை ஊக்குவிக்கின்ற வகையில் சொல்லப்படுகின்ற கருத்து என்றுதான் கருதுவேன். இன்னும் சொல்லப் போனால், சில குறைகள் அரசாங்கத்திலுள்ள அலுவலர்களில் மேலிடத் தில் உள்ளவர்கள் காதுக்குக்கூட வந்து சேருவதில்லை. தஞ்சையிலே உள்ள மருத்துவ மனையைப்பற்றியும், அங்கேயுள்ள டாக்டர்களில் சிலர் எப்படிப்பட்ட குறைபாடுகளுக்கு அந்த நிலையக்கை ஆளாக்குகிறார்கள் என்பதைப்பற்றியும் திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள் என்று சொன்னால், அவர் ஒரு ஆண்டில் எத்தனை பத்து மாதம் தஞ்சாவூரில் இருக்கின்றார். நான் ஒரு ஆண்டில் ஐந்து நாட்கள்தான் தஞ்சைப் பகுதிக்குச் செல்கிறேன். அங்கே அங்கேயுள்ளவர்கள் அந்தக் குறைகளை யெல்லாம் கெரிந்து சொல்கின்றபோது, அவற்றை நீக்குவதற்கு தொடர்ச்சி யான முறையில் முயற்சிகளை எடுக்கலாம், இந்த அரசினுடைய நிர்வாகத் தலைவர்கள் அதைப்பற்றிச் சிந்திக்க ஒரு வாய்ப்பாக இருக்கும் என்ற முறையில் அவற்றை வரவேற்கத்தான் செய்கிறோம். ஆனால் குறைகள் இல்லாமல் நிர்வாகம் செய்ய முடியுமா என்று கேட்டால், குறைகள் இருக்கும், ஆனால் அவ்வப்போது அந்தக் குறைகள் நிவர்த்திக்கப்பட வேண்டும் என்றுதான் கூறுவேன்.

பெரிய இயந்திரங்கள், கருவிகள் வாங்கும்போதுசரியாகத்தான் இருக்கும். நடையில் பழுது படும். உடன் பழுது பார்க்கப்பட்டு பயன்படுத்தப்பட வேண்டும். உடலைக்குடன் கவனிக்கின்ற ஆர்வம் நலத்துறையில் மிகவும் அவசியம். நோயாளிகளை உடனுக்குடன் கவனித்தால், அவர்கள் நோய்நீங்கி நலம் பெறுவர் என்பதுதான் அந்த அடிப்படையில் இந்த கோக்கம் மிகப் பெரிய அளவுக்குப் பின்பற்றப்பட வேண்டிய ஒன்றுகும். ஆனால் இன்றையதினம் இந்தத் துறைக்குக் ஒதுக்கீடு செய்துள்ள நிதி வசதியை வைத்துப் பார்த்தால் சென்ற ஆண்டை விட இந்த ஆண்டு எற்காம இரண்டு மூன்று கோடி ரூபாய் அதிகமாக நிதி ஒதுக்கப் பட்டிருக்கிறது என்றாலும் நிறைவாகச் செய்ய முடியாத நிலையில்தான் இந்தக் துறை இயங்குகிறது. ஆனால் மக்களுக்குத் தேவைப்படுகின்ற பலனை நிச்சயமாக எந்த அளவுக்கு விரிவாக, பரவலாக நிறைவேற்ற முடியுமோ, அந்த அளவுக்கு நிறைவேற்ற வேண்டுமென்ற நிதியில் தமிழக அரசு ஆர்வமாக இருக்கிறது.

நம்மைடைய மதிப்பிற்குரிய திரு கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் மருந்துக்காக எறத்தாழ 6 கோடிரூபாய்தான் செலவழிப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது என்று தெரிவித்தார்கள். மெடிசின் பார் லெப்ரஸி

புரோகிராம், ஏறத்தாழ 4 லட்சம் ரூபாய், ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு 57 லட்சம் ரூபாய், மலேரியா முதலியவற்றிற்கும், வேறு பலவற்றிற்கும் ஒரு முப்பது, முப்பத்து ஐந்து லட்சம் ரூபாய்கள், ஆக இப்படியாக 735 லட்சம் ரூபாய், அதாவது 7 கோடி 35 லட்சம் மருந்து களுக்காகச் செலவழிக்கப்படுகிறது. உள்ளபடியே இந்த மருத்துவத் துறை எப்படி இருக்கிறதென்றால் பணக்காரப் பெண் குடும்பம் நடத்து கின்ற மாதிரி இருக்கிறதே தவிர, ஏழைப் பெண் நடத்துகிற முறையில் இல்லை. பணக்காரப் பெண் சமையல்நடத்தி உணவுபரிமாறவந்தாலும்கூட, கை நிறைய வகையல் போட்டுக்கொண்டு வந்தால் தான், அந்தப் பெண் ணுக்கு மரியாதை. அதைப்போல இங்கே டாக்டர், செவிலியர், அவர் களுக்கு உதவியாக மருந்து கலப்பாளர்கள், அவர்களுக்கு உதவியாக துணைச் செவிலியர், இவ்வளவு பணியாளர்கள் இருந்து அதற்குக் கீழே காவல்காரர் அல்லது சுத்தம் செய்கிறவர்கள் இவ்வளவு பேரும் இருந்து தான், ஒரு டாக்டர் பணியாற்றுகிற நிலைமை இருக்கிறது. ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு ஒரு டாக்டருக்கு ஏறத்தாழ 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் ஆகிறது. ஒரு செவிலியருக்கு 5, 6 ஆயிரம் ரூபாய். அதற்குக் கீழே பணியாற்றுகிறவர்களுக்கு எல்லாம் சேர்த்தால் ஏறத்தாழ 30 ஆயிரம் ரூபாய் சம்பளம் ஆகிறது. அகில இந்திய மட்டத்தில் ஏறத் தாழ 8 ஆயிரம் ரூபாய் ஒரு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மருந்துக்குச் செலவிடுவதாக ஏற ஒரு முறை இருந்தது. முதலில் 6 ஆயிரம் ரூபாய் இருந்தது. இப்போது 8 ஆயிரம் ரூபாய் ஆகி இருக்கிறது. தமிழ் நாட்டிலே தான் இது 10 ஆயிரம் ரூபாயாக அதிகப்படுத்தப்பட்டது. ஆகவே 30 ஆயிரம் ரூபாய்க்கு நிர்வாகச் செலவு இருக்கிறபோது தான், 10 ஆயிரம் ரூபாய் மருந்துக்காகப் பங்கிடப்படுகிற நிலை இந்த மருத்துவ முறையில் இருக்கிறது. இந்த மருத்துவ முறையிலே நாம் குறைவு சொன்னாலும், அந்த முறையிலே இல்லையென்றால் அதிலே அவர்கள் ஒழுங்காகப் பணியாற்ற முடியாத நிலைமை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், கிராமப் புறத்திலே இவர்களை பணியாற்றச் செய்வதற்கு அவர்களுக்கு குடியிருப்பு கட்டி முடிப்பதற்கு இரண்டு லட்ச ரூபாய் ஆகிறது. ஒரே ஒரு நல்ல மருத்துவ மனைக்கான குடியிருப்புக்கு ஒரு லட்சத்துப் பத்தாயிரம், ஒரு லட்சத்துப் பதினைந்தாயிரம் ரூபாய் ஆகிறது. ஆக இந்தச் செலவுகள் செய்யாமல் நவீன மருத்துவ அலோபதி துறையில் உள்ள மருத்துவர்களை கிராமத்திலே தங்கச்செய்து அங்கிருந்து மக்களுக்குப் பணியாற்ற செய்ய கூடிய வாய்ப்பு இல்லாத காரணத்தினால், செலவு அதிகமாக ஆகக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அதைத் தவிர்ப்பதற்கு முடியுமா என்றால் முடியாது. அந்தப் பொறுப்பை அரசு ஏற்றுக்கொண்டு மெல்ல, மெல்ல நிச்சயமாக மேலும் வசதிகளைப் பெருக்க முயற்சிக்கும். ஆனால் மருந்து களுக்குச் செலவு குறைவு, இது ஒரு ஆளுக்கு 1 பைசா, 2 பைசா வருகிறது என்ற கணக்கு இருக்கிறதே, அந்தக் கணக்கை அப்படிப் போடக் கூடாது. இப்படிக் கணக்குப் பார்ப்பது 'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்ற தத்துவத்திற்கு மாறுபட்டது. மருந்துச் செலவு ஆகிறது என்பது நம்முடைய குறைபாட்டிற்கு அடையாளமே தவிர, மருந்துக்கு ஏராள மாகச் செலவழிப்பது பெருமைக்கு அடையாளமில்லை. எனக்குச் சாப் பாட்டிற்கு மாதம் 70 ரூபாய், மருந்துச் செலவு மாதத்திற்கு 80 ரூபாய்

7.50 பி.ப.

என்று சொன்னால், அது பெருமையாகாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள், அதிலும் உடல் நலத்தைப் பாதுகாப்பதிலே அக்கறையோடு இருக்கிற பெரியவர் இதை ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதே போல இன்றைக்கு மருந்துகள், "மாடர்ன்" மருந்துகள் தயாரிக்கக் கூடிய முறை சிக்கனமாக இருக்கிறது. ½ பைசா அளவிற்குக்கூட மாத்திரைகள் தயாராகின்றன. அதிலே கொள்ளை அடிப்பவர் கள், அதிக விலைக்கு விற்பவர்கள், கலப்புச் செய்து விற்பவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அதெல்லாம் நூற்றுக்கு 5 சத விகிதம், 10 சத விகிதம் தான். ஆனால் சில மருந்துகள் மலிவாகக் கிடைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆகவே மருந்துச் செலவு, மருந்திற்காகச் செல வழிக்கக் கூடிய தொகை குறைவானது என்ற கருத்து, தவறுதலாக இருக்கிறது.

மற்றொன்று ஒரு மருந்து மட்டும் மருந்திற்குச் சிறப்பு இல்லை.

"நோய் நாடி, நோய் முதல் நாடி, அதைத் தணிக்கும் வாய் நாடி வாய்ப்பச் செயல்".

என்று சொல்லப்பட்ட அடிப்படையில் ஒரு மருத்துவர் இன்ன மருந்து இன்ன நோயாளிக்கு இந்த நேரத்தில் தரப்பட வேண்டுமென்று கருதுகிற அந்த அறிவுதான் அதிகமதிப்புடையதே தவிர, வெறும் பருத்த உடல் அந்த மருத்துவனுடைய அறிவு இல்லாவிட்டால், அந்தமருந்திற்கு மதிப்பு இல்லை. இல்லையானால், சில பேர் சில டேபிலட்டுகளை வாங்கிச் சாப்பிடுகிறார்கள் என்றால், அது உடம்புக்கு நலமா என்றால் அது நண்ட காலத்தில் உடம்புக்குக் கெடுதல் செய்யும் என்று தான் மருத்துவ வல்லுநர்கள் சொல்வார்கள். ஒரு வகையிலே நல்ல பழக்கமும் இல்லை, உடல் நலத்திற்கு நல்லதும் இல்லை. ஆகவே மருத்துவர் தருகிற மருந்து விலை குறைவாக இருக்கிறதா என்று அவருடைய அறிவு ஆற்றலோடு எடை போட்டுப் பார்த்தால், அதைக் குறைவு என்று கருத்துடையது. இன்னும் நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். இந்த மருந்துகளில் எந்த மருந்தை அவர்களுக்குக் கொடுப்பது நல்லது என்று பார்க்கிறபோது, சில வேளைகளில் விலையுயர்ந்த மருந்தை விட மிகக் குறைவான விலையில் இருக்கிற மருந்துதான் சிறந்த பலனைத் தருகிறது. நீண்டகால நோயாளிகளெல்லாம் பென்சிலின் ஊசியைப் போட்டுக்கொள் வது என்பது ஒரு நவீன பழக்கம். சிலிட்டத்திலே, சில வட்டாரத்திலே இந்தப் பழக்கம் உருவாகியிருக்கிறது. இப்படித் தொடர்ந்து பென்சிலின் ஊசியைப் போட்டுக்கொண்டு வந்தால், நோயைத் தாங்குகிற சக்தியை இழந்து விடுவோமென்று சொல்கிறார்கள். ஆகவே சில சாதாரண "டேபிலட் தான் உழைப்பாளிகளுக்கு, தொழிலாளர்களுக்கு நீண்ட காலத்திற்கு நன்மை பயக்கும். வேண்டுமானால் பணக்காரர்கள் வசதிக் காகப் பென்சிலின் ஊசியைப் போட்டுக் கொள்ளலாம். இப்படி இதற்குச் செலவிட அவர்களிடத்திலே பணம் இருக்கிறது. அவசியப் பட்டால், அதிகப் பணம் மருந்திற்காகச் செலவு செய்யலாம். உள்ளபடியே மாண்புமிகு உறுப்பினர் திரு. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் ஒத்துக்கொள்வார்கள் என்பதற்காகச் சொல்கிறேன்'

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 23

சுக்கு, மிளகு, திப்பிலிக்கு இருக்கிற சில்லரையான்கள் மிக உயர்ந்த மருந்திற்குக் கூட இல்லை. ஆகவே மருந்துச் செலவு குறைவு என்பதற்காக அதைக் குறையாகக் கருத முடியாது. அதனுடைய உண்மை என்ன என்று கேட்டால் கிராமப் பகுதியில் இருக்கிற ஏழைக்குடிமக்களுக்கான மக்களுக்குக் கிடைக்க வேண்டிய மருத்துவ வசதி இதுவரையிலே கிடைக்கச் செய்வதற்கு முழு முயற்சி எடுக்க முடியவில்லை. இதை அகில இந்திய அரசுக் கவனத்தோடு எடுத்துச் சொல்லியிருக்கிறது. தமிழ் நாடு அரசும் முனைப்புர்வமாக வற்புக்கொள்கிறது. இது வரையில் படித்த டாக்டர்களில் நூற்றுக்கு 60, 70 பேர் நகரப் பகுதியிலேயே வாழ்ந்து அங்கேயே தொழில் நடத்துகிறார்கள். நூற்றுக்கு 20, 30 பேர் மெடிகல் அசோசியேஷன். "நாம் கிராமத்திலே" என்று ஒரு இயக்கம் அளவில் 20 கிராமங்களுக்கு நடுவில் இருக்கிற சிறு நகரத்தில், சிறு நகரப் பகுதியில் தொழில் நடத்துகிறார்கள். கிராமப் பகுதியில் வாழ்கிற மக்கள் 100-க்கு 70 பேர். நூற்றுக்கு 30 பேர் தான் நகரப் பகுதிகளில் வாழ்கிறார்கள். ஆக இது சமூகரீதியான "டிசோபோர்ஷன்", விநியோகத்தில் இருக்கிறது. அதனால் இன்றைக்கு மருத்துவர்கள் ஒரு சிறு கிராமத்திற்குப் போய்த் தங்க முடியுமா என்று இன்றைய நிலையை வைத்துப் பார்த்தால், சாதாரணமாக எம்.பி.பி.எஸ். படித்த டாக்டருக்கு ஒரு மாதத்திற்கு 800 ரூபாய் கிடைத்தால் கூடப் போதாது. பல வசதிகள், வாய்ப்புகள் தேவை. இவை கிராமத்தில் உருவாகவில்லை. இவற்றை கிராமப் பகுதியில் நம்மாலே உருவாக்க முடியவில்லை. அதனால் 20, 30 கிராமங்களுக்கு நடுவிலே எம்.பி.பி.எஸ். படித்த மருத்துவரை வைத்து அவர் எல்லாம் அந்த வட்டாரத்திலே பணியாற்றுவதற்கு, வைத்திய வசதியைச் செய்து தருவதற்கு அரசாங்கம் கருதுகிறது. அந்த முறையில் ஆரம்ப சுகாதார நிலையப் பணி, குடும்ப நலத் திட்டப் பணி இவை இரண்டும் ஒரு பெரிய ஒன்றியத்தில் ஒரு இடத்தில் இருப்பதை இரண்டாவது இடத்திற்கு விரிவுபடுத்தி, அந்த ஒன்றியத்திலுள்ள ஒரு லட்சம் மக்களுக்குப் பயனாகப் பயன்படச் செய்வதற்கு அரசாங்கம் ஒரு அறிவுரை செய்து வருகிறது. அதை நான் மத்திய அரசாங்கத்திற்கு எடுத்துச் சொன்னேன். அவர்கள் ஒரு திட்டத்தைச் சொன்னார்கள். கிராமத்தில் இரண்டாயிரம் பேர் இருக்கக்கூடிய கிராமத்திற்கு இரண்டாயிரம் பேருக்கு ஒருவர் என்றும் விதத்தில் பணியாற்றக் கூடிய விதத்தில், கிராமத்தில் உள்ள வாலிபர்களிலே ஒருவரை அழைத்து "பெசண்ட் டாக்டர்" என்ற முறையில் எஸ்.எஸ்.எல்.சி. அல்லது 10-வது படித்தவர் களுக்கு ஒரு முன்று மாதம், 6 மாதம் பயிற்சி கொடுத்து, கிராம மக்களுக்குக் காய்ச்சல் வந்தால் இந்த அயுர்வேத மருந்தைக் கொடு, வயிற்று வலி வந்தால் இந்த ஹோமியோபதி மருந்தைக் கொடு, கண்ணிலே நோய்வந்தால் அலோபதி மருந்தைக் கண்ணிலே போடு என்று எளிய முறையில் என்ன மருந்தைக் கொடுக்க வேண்டும் என்று கிராமத்திலேயே இருந்து வைத்தியம் செய்து வருகிற நோயாளிகளிடத்திலே 20, 25 காசு வாங்க வேண்டுமென்ற ஒரு முறையை வைத்து இரண்டாயிரம் பேருக்கு ஒரு டாக்டர் போதும் என்ற வேண்டுமென்று பிரதம மந்திரி தெரிவித்தார். "பேர் புட் டாக்டர்" என்ற கருத்தின் அடிப்படையில் எடுத்துச் சொன்னார். தமிழக அரசாங்கத்தின் சார்பாக நாங்கள் அந்த அடிப்படையை ஏற்றுக்கொள்ளவில்லை.

1973 மார்ச் 23] [திரு. க. அன்பழகன்]

அதற்கு மாறுக நாங்கள் அலோபதி டாக்டரே தான் வேண்டுமென்று சொல்லவில்லை. கிராமத்திலே மருத்துவம் செய்வதாக இருந்தாலும், தமிழகத்தில் கிராம வைத்தியத்தில் பரம்பரையாக அனுபவம் பெற்றவர்தான் தலைமுறைக்கு கிராமத்தில் மருத்துவம் செய்து வருகிறார்கள். பரம்பரை அனுபவம் என்பது மூன்று மாத பயிற்சியிலே கிடைக்காத ஒன்று. ஹோமியோபதி டாக்டர்கள் ஓராண்டு, ஈராண்டு யார்ட்டிலேயாவது பயிற்சி பெற்று வந்து வைத்தியம் செய்கிறார்கள். இப்படிச் செய்கிறவர்களைக்கூட ஒரு தலை முறுலத்த தான் கையாளுவார்கள். மூன்று தலை முறுத்துகளை ஒரே முறுத்துடலாக கையாளும்படி செய்யும்போது, அவர்களுக்கு முழு பயிற்சி இல்லாதபோது, தவறு வரையும். அதனாலே மூன்று, ஆறு மாதப் பயிற்சி பெற்றவர்களை வைத்தியராகளாக ஏற்றுக்கொள்ள முடியாது. நாங்கள் நமது உதவி செய்தால் கிராமத்தில் இரண்டாயிரம் பேருக்கு ஒருவராக அல்ல, 5,000 பேருக்கு ஒரு மருத்துவரை நியமித்து கிராம மக்களுக்கு வைத்திய வசதி செய்ய முடியும், மக்களுக்குப் பணி செய்ய வைக்கவும் முடியும் என்று சொல்லுகிறோம். அந்த இடத்தில் ஒரு ஹோமியோபதி டாக்டரை நியமிக்கலாம், அல்லது 10 ஆயிரம் பேர் கொண்ட 2 வட்டாரத்திற்குச் சொந்தமாக ஒரு எம்.பி.பி.எஸ். டாக்டரை நியமிக்கலாம், அல்லது 10 ஆயிரம் பேர்கொண்ட இரண்டு வட்டாரத்திற்குச் சொந்தமாக ஒரு பி.ஜி.எம். டாக்டரை நாங்கள் பொறுப்பாக்கும் என்று ஒரு திட்டத்தை வரையறுத்து, நாங்கு ஒன்றியத்திற்கு நான் உதவி செய்ய வேண்டும் என்று அனுப்பி வைத்திருக்கிறோம். இதற்காக அவர்கள் ஓராண்டுக் காலம் பல ஆலோசனைகள் கேட்டுவிட்டு, இப்போது அந்தத் திட்டத்தையே நெருங்குவதாகத் தெரிய வில்லை. அவர்களுக்கு இருக்கிற நிதி நெருக்கடி மிகுதியாக இருக்கிற காரணத்தாலோ, மத்திய அரசு இதைச் செய்யத் தயாராக இல்லை என்றே அறிகிறேன். ஆரம்ப சுகாதாரத்தை விரிவுபடுத்த மத்திய அரசு முன்வர வேண்டும். குடும்ப நலத் திட்ட நிலையம் கூடுவதாலும் அவர்கள் நிதி ஒதுக்க வேண்டும் என்பதால் குடும்ப நலத் திட்டத்தில் பணியாற்றுகிற டாக்டர்களின் ஊதியம், பிற செலவுகளை அவர்கள் ஏற்றுக் கொள்வார்களானால், நாம் இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நடத்த முடியும் என்று நான் தெரிவித்துக்கொள்ளுகிறேன். அவர்கள் ஒப்புக்கொள்ளாவிட்டாலும், தொடர்ந்து அதற்கான முயற்சி தமிழக அரசில் நடைபெறும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல கிராமத்தில் மருத்துவ வசதி என்பது அரசாங்கத்தினுடைய நேரடிப் பார்வையிலும் பொறுப்பிலும் மட்டும் நடக்கிற காரியமல்ல. இங்கே பேசிய மானாமதுரை திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் கிராமங்களில் மருத்துவ வசதியை ஏற்படுத்த அரசு அக்கறை எடுத்துக் கொள்ளவில்லையென்று சொன்னார்கள். உண்மையாகவே கிராம மருத்துவ வசதியை வழங்குவதற்கு அரசின் பொறுப்பு ஆரம்ப சுகாதார நிலைய மாகவோ அல்லது அதற்கு முன்னால் ஒன்றியத்தில் நான் ஒப்படைக்கப்பட்டுள்ளது. ஒன்றியங்கள் அப்படிப்பட்ட மருத்துவ மனைகளை நடத்த வேண்டுமென்று விரும்பினால், உள்ளாட்சித் துறை யமைச்சருக்கு எழுதி, அவர்கள் ஒப்புக்கொள்வார்களானால், நிதி நிலை இடம் தருமானால், அவர்கள் ஏற்படுத்தலாம். அப்படி ஏற்படுத்துகிற மருத்துவ மனைகளில் ஒன்றுக்கு 5,000 ரூபாயிலிருந்து 7,000 ரூபாய்

வரை உதவித் தொகை அல்லது மானியம் வழங்கப்படுகிறது. ஒன்றுக்கு மேற்பட்ட மருத்துவ மனைகள் எற்படுத்துவார்களேயானால், அவர்களே
8·00 ஏற்படுத்த வேண்டும். ஆனால் ஆரம்ப சுகாதார நிலையத்தோடு
மி.ப. இணைந்து, 10,000 பேர்களுக்கு ஒரு துணை நிலையம் என்ற அடிப் படையில், எறத்தாழ 80,000 மக்கள் இருக்கிற இடத்தில் 7 துணை நிலையங்களும், ஒரு லட்சத்திற்கு மேல் இருப்பார்களேயானால், 9 துணை நிலையங்களும் இன்றைக்கு ஏற்படுத்தப்பட்டு, நடைமுறைக்கு வந்திருக் கின்றன. இவைகளின் மூலமாகத்தான் கிராமத்திலுள்ள மக்களுடைய குழந்தைகளுக்கு, எதிர்க் கட்சித் தலைவர் சொன்ன "Triple Vaccine" —மூன்று வகையான நோய்களைத் தடுப்பதற்கான ஊசி முறைப்படி போடப்படுகிறது. இந்த இடங்களிலுள்ள மகப் பேறு விடுதியிலே, தாய் மார்கள் மகப் பேறுக்காக வந்து செல்வார்களானால், அது பதிவு செய் யப்படுகிறது. மகப் பேறுக்கு முன்னாலும் கவனிக்கப்படுகிறது. மகப் பேறுக்குப் பின்னரும், தாய்க்கும், சேய்க்கும் சில மருந்துகள் வழங்கப் படுகின்றன. இன்னும் சில வட்டாரத்தில், "Vulnerable sections" என்று சொல்லக்கூடிய வகையில் வருந்தக்கூடிய நிலையில், வறுமையிலுள்ள மக்கள் இருக்கிற இடத்தில், அவர்களுக்கு சத்துணவு வழங்கப் படுகிறது. அந்த இடங்கள் மூலமாகக் குழந்தைகளுக்கு "Triple Vaccine" போடப்படுகிறது. ஆனால் இதை இன்னும் தீவிரமாக தவறாமல் போடுவதற்கான முயற்சியும் இருக்கிறது. ஆனால் அதே நேரத்தில் கிராமத்திலே மருத்துவ வசதியைப் பரப்புவதற்கு பொது மக்களும் ஒரு பங்கைச்செலுத்துகிற நிலை இருக்க வேண்டுமென்ற கருத்து மத்திய அரசாங்கத்திடம் இருக்கிறது. பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள் சில இடங்களுக்கு முன்பு பேசுகிறபோது, தெரிவித்திருந் தார்கள். "கிராம மக்களுக்கு, மருத்துவ வசதியைப் பரப்புவதற்கான முயற்சிகளை எடுத்துக் கொள்கிறபோது, கிராமத்தினுடைய வருமானத் திலிருந்து ஒரு சிறு பங்கையாவது, இந்த மருத்துவப் பணியை நடத்த அவர்கள் வழங்கவேண்டும். ஒன்று, நிலத்தின் வரியுடன் துணை வரியாக அது விதிக்கப்பட வேண்டும் அல்லது அவர்கள் ஒவ்வொரு முறையும் மருத்துவ மனைக்கு வந்து, வசதியைப் பெறுகிறபோது ஒரு கட்டணம் செலுத்த வேண்டும்" என்று அவர்கள் சொன்னார்கள். (குறுக்கீடு) ஆனால் கிராமத்திலே விரிவு படுத்த வேண்டுமென்று சொல்கிறபோது, எல்லா மருத்துவ மனைகளிலும் மருத்துவம் செய்ய நகரம் உட்பட ஒரு கட்டணம் வைக்க வேண்டுமென்ற ஒரு கருத்தை அவர்கள் தெரிவித்திருக் கிறார்கள். அப்படிப்பட்ட கட்டணங்களை கிராம மக்களுக்கு வைப்பதற்கு, அரசாங்கம் முதலில் என்ன முடியாது. அங்கே எல்லா வசதிகளையும் ஏற்படுத்தி, அதிலே மக்களுக்கு ஒரு நிறைவு ஏற்படும் நிலை இருக்குமே யானால், அப்போது செய்யலாமே தவிர, மக்கள் முதலில் வரியைக் கட்டி விட்டு, வசதி கிடைக்கவில்லையென்று சொன்னால், அது வருந்தத்தக்கதாகும்.

அதே போல மக்களுக்கு, தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்கு ஒரு அக்கறை உணர்ச்சியை ஏற்படுத்துவதற்குக்கூட, சில பயிற்சிகளைக் கொடுக்க வேண்டியிருக்கிறது. பல பேர், "இன்றைக்கு இருப்பவரை, நாளைக்கு இருப்பர் என்று அறியேன் பராபரமே" என்று சொல்கிற முறையில், தங்களைப்பற்றி "இன்றைக்கு நடந்த வரையில் சரி, நாளை என்ன வேண்டு

மானாலும் ஆகட்டும்" என்று எண்ணுகிற முறையில் ஒரு மனப்பான்மை நம்மிடத்தில் ஊறிப் போய்விட்டிருக்கிறது, குறிப்பாக கிராம மக்களிடத்திலே. பல பேர் தங்கள் மனம் விட்டுப் பேசுகிற போது, "எனக்கோ நடந்த வரையில் சரி" என்று சொல்கிற மனப்பான்மை இருக்கிறது. ஆகவே எதிர்காலத்தைப் பற்றிய எண்ணம் அவர்களுக்கு இல்லை. அதனாலேதான் இந்த நாட்டிலே குழந்தைகள் பிறப்பதைப்பற்றிக் கவலைப்படுகிற, எண்ணிப் பார்க்கிற ஒரு மனப்பான்மை கிராமத்திலே பெரும்பாலோருக்கு உருவாக வில்லை. இன்றைய தினம் எதிர்க் கட்சியில் துணைத் தலைவராகவுள்ள திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு அவர்கள் அந்தப் பாடலை எடுத்துச் சொல்லி, குழந்தைகள் பெறுவதில் எப்படி ஒரு பொறுப்பற்ற மனப் பான்மை இருக்கிறதென்பதைப் பற்றிச் சொல்லியபோது, நான் மிகப் பெருமளவுக்கு மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் இந்தக் கருத்துக்களைகூட மக்கள் உளவத்தில் இல்லை. ஏழ்மை ஒரு சூழ்நிலை காரணமாக, குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை மனதார ஏற்றுக் கொள்கிறார்களே தவிர, வேறு காரண விளக்கங்கள் அவர்களுக்கில்லை. அப்படிப்பட்ட நிலையில், வாழ்க் கையைச் செம்மைப்படுத்திக் கொள்ள, உடல் நலத்தைப் பாதுகாத்துக் கொள்ள அவர்களுடைய வருமானத்திலே ஒரு சிறு பங்கை உடல் நலத் தைக் கவனிக்க என்று ஒதுக்கி வைத்துக் கொள்ள, பிரித்து வைத்துக் கொள்ள மக்களுக்கு ஒரு மனப்பான்மை இல்லை.

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. சுந்தரேசத் தேவர் அவர்கள் சொன்னதைப் போல, கிராமங்களில் மருந்தகங்களைத் திறந்து, நடத்த முன்றியங்கள் முன்வருமானால், அதை உளவாட்சித துறை மூலமாக ஏற்றுக் கொள்ள நலத்துறை முன்வரும். மாவட்ட ஆட்சிக் கழகத் தால் ஒரு காலத்தில் நடத்தப்பட்ட மருந்தகங்கள், முன்றியங்களிடம் ஒப்படைக்கப்பட்டன. ஆனால் அவர்கள் இலாபத்துக்கு அவற்றை நடத்து வதற்குப் பொருளாதார வசதியில்லை யென்று தெரிவிக்கப்படுகிறது. அப்படித் தெரிவிக்கப்படுகிற மருந்தகங்களில் கடந்த ஆண்டு 45-ம் ஆந்த ஆண்டு 16ஆக எடுத்துக்கொண்டாலும், அடுத்த ஆண்டு இன்னும் கொஞ்சம் அதிகமானாலும் எடுத்துக் கொள்ள வழி செயயப்படும். அப்படி ஆண்டு தோறும் அந்த மருந்தகங்களை எடுத்துக் கொள்ளுவதற்கு வழி செயயப்படும்.

ஆரம்ப சுகாதாரப் பணியை ஒவ்வொரு ஒன்றியத்திலும் விரிவு படுத்துவதற்கும் அடுத்த 5 ஆண்டுத் திட்டத்தில் முயற்சி எடுக்கப்படும். ஆனால் இவ்வளவு செய்தாலும் கூட, குடும்பக் கட்டுப்பாடு வெற்றி பெறு வதால், இந்தப் பணி வெற்றி பெறுதலையதை உள்ளபடியே நினைவு படுத்த விரும்புகிறேன். அதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன, ஏற் படாமல் விடுகின்றனவென்று மாண்புமிகு உறுப்பினர் திரு. சக்திமோகன அவர்கள் சொன்னார்கள். ஒரு சமுதாயக் கடமையாக ஏராளமானவர்களுக் குச் சில கடமைகளைச் செய்கிறபோது, சில குறைபாடுகள் எங்கேயாவது வரத்தான் செய்யும். இன்னும் சொல்லப்போனால், அதில் சில பேர் சுயநலக்காரர்களாகவும், ஏமாற்றுக்காரர்களாகவும் ஆகிவிடக்கூடும். அதை ஒவ்வொரு கட்டத்திலும் பரிசோதிப்பதன் மூலமாக, நடவடிக்கை எடுப்ப தன் மூலமாக, தவறு செய்தவர்களை விலகி வைப்பதன் மூலமாக ஒரு பாதுகாப்பை ஏற்படுத்தவும் வேண்டும். பொது மக்களில், 100-க்கு

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 23

99 பேருக்குப் பயன் எற்படக்கூடிய காரியம் என்பதால், இந்தக் காரியத்தை ஊக்குவிப்பதில் எல்லாத் தலைவர்களும் ஒருமனதாக இருக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

ஒரு புள்ளி விவரத்தைச் சொன்னால், நம்முடைய எதிர்காலம் ஒளி மயமாக இருக்குமா என்ற சந்தேகம் நமக்கு வரும். இந்தியாவிலே இன்று இருக்கிற மக்கள் தொகையை, உலக மக்கள்தொகையோடு ஒப்பிட்டு, நாம் இருக்கிற நிலப்பரப்பையும் ஒப்பிட்டு சொல்லப்பட்ட கருத்து இது. "India has 14 per cent of the world population in a land area which is only 2·4 per cent of the world and sustain it on 1·5 per cent of world income." உலகத்திலுள்ள மக்கள் தொகையிலே நூற்றுக்கு 14 பேர் இந்தியாவில் இருக்கிறார்கள். 7-ல் ஒரு பங்கு மக்கள். 7 பேர் உலகத்தில் வாழ்ந்தால் இந்தியாவில் ஒருவர். நாம் வாழ்கிற நிலப்பரப்பு, உலக நிலப் பரப்பிலே 40-ல் ஒரு பங்கு. அதாவது 2·4 சதவிதம். உலகில், 40 பங்கில் ஒரு பங்கு இடமான இந்தியாவில் 7 பேரில் ஒருவர் இந்தியாவில் இருக்கிறார். அதுவே நம்முடைய வாழ்க்கைத் தரம், வசதி குறைந்து போவதற்கு ஒரு காரணமாக இருக்கிறது. நம்முடைய வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் "It is only 1·5 per cent of the world income." மறுபடியிலே ஒரு பங்கு உலக வருமானத்தில் 100 நபருக்கு 14 பேர்; நமக்குக் கிடைக்கிற வருமானம் 100-க்கு 1½ ரூபாய். 14 பேருக்கு 1½ ரூபாய் வருமானம்தான் இந்தியாவிலே. உலக மக்களிலே நூற்றுக்கு 14 பேராக இருக்கிற இந்தியனுக்கு, உலகத்தின் வருமானத்தில் நூற்றில் 1½ ரூபாய்தான். ஆகவே மேல் நாட்டுக்காரர்கள் உண்ணுகிற உணவை நாம் நெருங்க முடியாது; அவர்கள் வாழ்க்கைத் தரத்தை நாம் சந்திக்க முடியாது; அவர்கள் உடல் நலத்தை நாம் பெறுவதற்கு எவ்வளவு பாடுபட்டாலும் சூழ்நிலை இடம் தராது. அவர்களுக்குள்ள வசதி நமக்குக் கிடைக்காது. ஒருவேளை நம்முடைய அய்ய திறமையினால், மக்களுடைய பரம்பரை ஆற்றலிலே, "Hereditary Talent" அப்படிப்பட்ட தன்மையின் காரணமாக, ஓரளவு வாழ்வைச் சீரான நடத்துகிறோம். இன்னும் சொல்லப்போனால் நம்முடைய ரத்தத்திற்கு தனியான ஒரு ஆற்றல் இருக்கிறது. "Gamaglobin" என்ற மருந்தைத் தயாரிப்பவர்கள் சொல்கிறார்கள். உலகத்திலேயே நோய்களை எதிர்க்கும் தடுப்பாற்றலுள்ள ரத்தம் இந்தியாவில் உள்ள மக்களுக்குத்தான் இருக்கிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய தாய்மார்களுக்கு குழந்தைகள் பிறந்தவுடன், அந்த நஞ்சுக் கொடியை எடுத்து, அவற்றையெல்லாம் நிரட்டி நோய் தடுப்புக்கான மருந்து செய்யும் மூலப்பொருளாய் பயன்படுத்துகிறார்கள். இந்த மருந்தைத் தயாரித்து வெளி நாட்டுக்காரர்களுக்கு அனுப்புகிறார்கள். "Gamaglobin" என்று கருதுகிறேன். பெயரிலே வேறுபாடு இருக்கலாம். அந்த ஊசி போட்டுக் கொண்டு விட்டால், ஒரு நோயும், "Infections diseases" தங்கள் எல்லையில் நெருங்காதென்ற எண்ணம் வெளிநாட்டுக் காரர்களிடம் இருக்கிறது. நம்முடைய பரம்பரை பல நோய்களைச் சந்தித்த பரம்பரை. பலவேறு விதமான நெருக்கடிகளைச் சந்தித்த பரம்பரை. ஆகவே கொஞ்சம் தாங்கும் சக்தி இருக்கிறதென்பதைத்தான் இது

[1973 மார்ச் 23] [திரு. க. அன்பழகன்]

காட்டுகிறது. இந்தக் குருதிக்குக் காரணம் வேறொன்றுமில்லை. இன்றைக்கு இருக்கிற மக்கள் தொகை அளவை வைத்துப் பார்ப்போமானால், எற்பட்டிருக்கிற மக்கள் தொகை பெருக்கத்தைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். ஒரு காலத்திலே, மக்கள் தொகை பெருக்கம், ஒரு 80,000 ஆண்டுக் காலத்தில் இரட்டிப்பு ஆயிற்று. அடுத்த கால கட்டத்தில், எறத்தாழ 10,000 வண்டுக் காலத்தில் இரட்டிப்பு ஆயிற்று. அடுத்த கால கட்டத்தில் 2,000 ஆண்டுக் காலத்தில் இரட்டிப்பு ஆயிற்று. அடுத்த கால கட்டத்தில் எறத்தாழ 150 ஆண்டுக் காலத்தில் இரட்டிப்பு ஆயிற்று. இப்போது மக்கள் தொகை எறத்தாழ ஒரு 35 ஆண்டுக் காலத்தில் இரட்டிப்பாகிற நெருக்கடி நிலையில் இருக்கிறோம். இந்தியாவில் மட்டும் இந்த நெருக்கடி என்பதல்ல. உலக முழுவதுமே மக்கள் பெருக்கம் அஞ்சப்படுகிறது. உலகத்திலே, ரஷிய நாட்டிலே ஒரு சதுர மைலுக்கு 25 பேர் வாழ்கிறார்கள்; அமெரிக்காவில் ஒரு சதுர மைலுக்கு 50 பேர் வாழ்கிறார்கள்; சைனாவில் ஒரு சதுர மைலுக்கு 200 பேர் வாழ்கிறார்கள்; ஆனால் இந்தியாவிலே ஒரு சதுர மைலுக்கு 370, 400 பேர் வாழ்கிறார்கள்.

சைனாவில் நம்மைவிட மக்கள் தொகை அதிகம். ஆனால், அதன் பரப்பு இதைப்போல் 3-4 மடங்கு இருக்கிற காரணத்தால் சதுர மைலுக்கு 200 பேர்கள் தான் இருக்கிறார்கள். அமெரிக்காவில் சதுர மைலுக்கு 50 பேர்கள் இருக்கிறார்கள். அந்த நாடு வளமாக இல்லாமல் எப்படி இருக்கும்? அங்கே ஒன்றும் திறமை தேவையில்லை. ரஷியாவில், இவ்வளவு பெரிய பொதுவுடைமைத் தத்துவம் இப்போவேண்டிய நெருக்கடி அரசியலால் எற்பட்ட அந்த நாட்டில் சதுர மைலுக்கு 25 பேர்கள்.

இந்த நாட்டுக்கு பிரதமராக வருவதற்கும், மாநிலத்தில் முதலமைச்சராக வருவதற்கும் யாரும் பயப்படுகிற ஒரு காலமாகத் தான் இனி இருக்குமே அல்லாமல், மனதார அந்தப் பதவிக்கு விரும்பி வருவார்கள் என்று கூடச் சொல்ல முடியாது. மக்கள் பெருக்கத்தால் எற்படும் பிரச்சினை அனைவ உணர்ந்த யாரும் இந்தப் பொறுப்பை எற்றுக் கொள்ளத் தயங்குவார்கள். மற்ற நாடுகளில் இப்படிப்பட்ட பொறுப்புகள் பயங்கரமானவையல்ல. அவர்களுடைய அரசியல் ஆதிக்க உணர்வு காரணமாக, பிற நாடுகளை அடக்க வேண்டுமென்ற எண்ணத்தின் காரணமாக, எற்படுகிற விளைவுகளைத்தான் அந்த நாட்டு பிரதமரோ, முதலமைச்சரோ சந்திப்பார்கள். ஆனால், நம்முடைய நாட்டில் மக்கள் தொகைப் பெருக்கம் ஒன்றே அரசியல்வாதிகளையெல்லாம் வீட்டுக்கு அனுப்பிவிடக் கூடிய அளவுக்கு, மக்கள் மன்றங்களுக்கு மதிப்பு இல்லாமல் செய்து விடக்கூடிய அளவுக்கு, ஜனநாயகத்தில் இருக்கவேண்டிய நியாயமான மதிப்பைப் போக்கிவிடக்கூடிய அளவுக்கு கலவரமும் பலாத்காரமும் எற்பட்டு, அதன் விளைவாக நல்ல நோக்கத்தையே பொசுக்கிவிடக்கூடிய அளவுக்கு இருக்கிற காரணத்தால், குடும்பக் கட்டுப்பாட்டைத் தவிர இந்தியா முழுவதையும் காப்பாற்றவேறு எந்த வழியும் இல்லை. எக்கேறும் இரண்டொரு கருகது மாறுபாடு இருந்தாலும், அந்தக் கருத்துக்களை நிச்சயமாக மாற்றலாம் என்ற நம்பிக்கையோடும் அதற்குத் தேவையான ஒத்துழைப்பை அனைவரிடமும் பெறலாம் என்ற நம்பிக்கையோடு, அரசு அந்த நடவடிக்கைகளில் மிக்க ஆர்வம் காட்டி

8 10 பி.ப.

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 23

வருகிறது. இதில் எல்லா அங்கத்தினர்களும் அருள் கூர்ந்து குறைகளை எடுத்துச் சொல்வதுடன் பொது மக்களுக்கு ஊக்கத்தை உண்டாக்க உதவ வேண்டுமென்று இந்த அவையில் நான் வேண்டிக் கேட்டுக்கொள்ளுகிறேன். அது மட்டுமல்லாமல், இந்த நாட்டினுடைய பிரச்சினை வளருகிறபோது எப்படியிருந்த "பாப்புலேஷன், பாவர்ட்டி, பொலூஷன்" என்ற மூன்று பிரச்னைகளையும் பிரதமர் அவர்கள் குறிப்பிட்ட அன்னையில், ஒரு உலக மகாநாட்டில் என்று கருதுகிறேன், குறிப்பிட்டுப் பேசினார்கள். இந்த நாட்டிலே மக்கள் தொகைப் பெருக்கம் ஒரு பிரச்சினை. வறுமை மற்றொரு கடுமையான பிரச்சினை. அந்த வறுமையின் காரணமாக இருக்கிற வேலையில்லாத் திண்டாட்டம், போதுமான வேலையின்மை, ஒரு பிரச்சினை. பொலூஷன் என்பது காற்றுத் தூய்மை கெடுகிற தன்மை. இன்றைக்கு விஞ்ஞானத் தொழில் வளர்ச்சி ஏற்பட்டிருப்பதால், நகரப் பகுதி நெருக்கம் காரணமாக, காற்றுத் தூய்மை கெடுதல், நீரின் தூய்மை கெடுதல், சுற்றுபுறச் சூழ்நிலைத் தூய்மை கெடுதல் ஆகிய பிரச்சினைகள் இந்த நாட்டில் மிகவும் வேகமாக ஓங்கி வருகின்றன. கடந்த ஆண்டு இந்த அரசு எர் பொலூஷனை குறைக்க ஒரு குழு நியமித்து சில ஆலோசனைகளை வழங்கச் செய்திருக்கிறது. அது தொடர்ந்து கவனிக்கப்படும். அதைப் போல பல்வேறு விதமான தொழிற்சாலைகளிலிருந்து வெளிவருகிற "எப்புளுவண்ட்" நீரால் ஏற்படுகிற விளைவுகள் எவ்வளவு பாதகம் என்பதை அரசு உணருகிறது. அதைத் தடுப்பதற்காகவும் ஏற்கெனவே ஏற்பட்ட இடங்களில் மாற்றுவதற்கும், அந்த நிலை வடிகட்டுவதற்கு ஏற்படுத்தியிருக்கிற முறைகள் தவறுக இருந்தால், அவைகளைத் திருத்துவதற்கும் புதிய கருவிகள் பொருத்தப் படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. இவைகளை யெல்லாம் கூட விரைவாகவும் துரிதமாகவும் எடுப்பதற்கு தொழிற்சாலை அதிபர்கள் அல்லது அப்படிப்பட்ட நிறுவனங்கள் வைத்திருப்பவர்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளுகிறேன். பல்வேறு தொழில் அதிபர்கள் தாங்கள் ஏற்படுத்தியிருக்கிற தொழிலில் வருமானம் லாபம் ஈட்டுகிறதா என்று மட்டும் பார்க்காமல், அவைகளால் ஏற்படுகிற இம்மாதிரியான விளைவுகளைத் தடுக்க முயற்சிகளை மேற்கொண்டால், நிச்சயமாக இந்தத் துறையில் வெற்றி பெறலாம், அரசாங்கம் மேலும் மேலும் எனன மாற்றம் காணலாம் என்று ஆராயும் என்று தெரிவித்துக் கொள்ளுகிறேன்.

இங்கு திரு. சர்காரியா அவர்கள் பேசும்போது முந்திரித் தொழிற் சாலையில் ஏற்படுகிற விளைவுகளை எடுத்துச் சொன்னார்கள். ஒரு ஆண்டுக்கு முன்னால் அங்கேயுள்ள மாவட்ட நலத்துறை அலுவலர் அவரால் ஏற்படும் கெடுதல்களை விளக்கும் படங்களை எனக்கு அனுப்பினார்கள். நான் அவற்றைச் செயலாளருக்கு அனுப்பி, இந்தத் தொழிலில் உள்ளவர் களுக்கு, கால்கள் புண்ணாகி, முகம்எல்லாம்கூட பாதிப்பட்டு புண்ணாவதை தடுக்க என்ன வழி என்பதை நான் பரிசிலனைசெய்யச் சொல்லியிருக்கிறேன். ஆனால் அந்தத் துறையைச் சேர்ந்தவர்கள் நிட்டவட்டமான முடிவெடுத்து ஆலோசனை வழங்காத காரணத்தால், இன்னும் ஒன்றும் செய்யவில்லை. ஒரு நிட்டவட்டமான முடிவு எடுத்த பிறகு, அந்த ஆலோசனைகளை எதிர்க் கட்சித் தலைவருக்கு வழங்கி அதைச் சட்டமாக்கி நடைமுறைப்படுத்து வதற்கு அரசு முயற்சிக்கும் என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

1973 மார்ச் 23]

திரு. கே. ராஜாராம்: அங்கே லோகல் ஹெல்த் டிபார்ட்மெண்டை கவனிக்கச் சொல்லலாம். ஒரு தொழிற்சாலை தானே?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: அது ஒரு தொழிற்சாலை அல்ல கிராமத்திற்கு ஒன்றிரண்டு இருக்கும். பீடித் தொழிற்சாலையைப் போன்றது. அது மாதிரித் தொழிற்சாலைகள் ஆங்காங்கு இருக்கிற குழந்தை களைப் பயன்படுத்தும் போது, கொட்டையை எடுத்து உடைத்துக் கொடுக்கிற போது, பால் பட்டால், அது நாளடைவில் கையில் தொழு நோய் போல் புண்ணாக ஆகி விடுகிறது. அதைத் எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தொழு நோய் பற்றிச் சொன்னார்கள். தொழு நோய் தமிழ்நாட்டில் நீண்ட நெடுங்காலமாக இருக்கிற ஒன்று. "டிராபிகல் கிளைமேட்" உள்ள இடங் களில் எல்லாம் தொழு நோய் காணப்படுகிறது. ஐரோப்பாவில் தொழு நோய் பயங்கர விளைவுகளை முன்னர் ஏற்படுத்தினாலும் கூட, "டிராபிகல் கிளைமேட்" உள்ள பகுதியாக இல்லாத காரணத்தால், ஒரு குறிப்பிட்ட கால கட்டத்தில் வெல்லக்கூடிய ஆற்றல் அவர்களுக்குக் கிடைத்திருக் கிறது. இப்போது அங்கு இல்லை என்று கூறலாம். ஆப்பிரிகா, இந்தியா, மலேசியா போன்ற பகுதியில் அதுவும் பூமத்திய ரேகை ஒட்டி கிற பகுதியில் இது அதிகமாக இருக்கிறது என்கிறார்கள். அதில் தமிழ் நாட்டிலும், ஆந்திராவிலும், பொதுவாக தென்னாட்டில் அதிகம். தமிழக அரசு பல்வேறு தனியார் நிறுவனங்களின் ஒத்துழைப்போடு இந்தப் பிரச்சினையைச் சந்திக்க முயற்சித்திருக்கிறது. இன்றைக்கு தமிழ்நாட்டில்தான் அப்படிப்பட்ட தனியார் நிறுவனங்கள் இருக்கின் றன. தர்மபுரியில் ஒரு தனியார் நிறுவனம், அதைப் போல் செங்கற் பட்டில் பொன்னேரி பக்கத்தில் ஒரு நிறுவனம் இருக்கிறது. இன்னும் பல இடங்களில் உள்ளன. அதேபோல் செங்கற்பட்டு மாவட்டம், திருமணியில் ஆராய்ச்சி நிலையத்தையொட்டி மருத்துவ நிலையம் மத்திய அரசு மேற் பார்வையில் நடைபெறுகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் இப்படிப்பட்ட நிலையங்கள் இருக்கின்றன. 1969-ம் ஆண்டில் அரசுத்துறை மூலம் 50 லட்சம் மக்கள் உள்ள பகுதியில் தொழு நோய் சிகிச்சை தொண்டு நடைபெற்றது. ஒரு வட்டாரத்திலுள்ள மக்களில் நூற்றுக்கு இரண்டு முதல் பத்து வரை தொழுநோய் அடையாளம் பெற்றவர்களாக, அதற்கு ஆளானவர்களாக இருக்கிறார்கள். சராசரி வட ஆற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களில் நூற்றுக்கு இரண்டு பேர் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். சில கிராமங்களில் நூற்றுக்கு 20–30 பேர் கூட இருக்கிறார்கள். சில இடங்கள் மிக நெருக்கமான தொழு நோயாளிகள் நிறைந்த பகுதிகளாக இருக்கின்றன. சில இடங்களில் பரவலாக இருக்கிறது. ஆனால் குறிப்பாக செங்கற்பட்டு, வட ஆற்காடு, தென்னாற்காடு, தர்மபுரியில் பரவலாகவும் மற்ற மாவட்டங்களில் ஒவ்வொரு வட்டாரம் என்ற அளவி லிருந்து இருக்கின்றன. அப்படி 1969-ல் அரசு நிறுவனங்கள் ஏறத்தாழ இரண்டு மாவட்டங்களில் 50 லட்சம் மக்கள் உள்ள பகுதியில் பணி யாற்றியது. அதே போல் தொண்டு நிறுவனங்கள் "பிரைவேட் இன்டி யூஷன்ஸ்" 69 லட்சம் பேருக்குப் பணியாற்றியது. 1972-ல் அரசுத்துறை ஆற்றிய பணி விரிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இந்த மூன்று ஆண்டுக்காலத் தில் 96 லட்சம் பேருக்கு, ஏறத்தாழ ஒரு கோடி மக்களுக்கு விரிவுபடுத்தியது மூலம் நாம் இந்த ஆண்டில் பரவலாக தொழு நோயாளிகளுக்கு சிகிச்சை

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 23

அளித்திருக்கிறோம். தொண்டு நிறுவனங்கள் 61 லட்சம் மக்களுக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருக்கின்றன. நம்முடைய அரசாங்கத்தின் திட்டத்தில் புதிய பகுதிகள் சிலவற்றைச் சேர்த்து மேலும் 9 லட்சம் மக்களுக்குத் தொண்டை விரிவுபடுத்தியிருக்கிறோம். அடுத்த ஆண்டில் இதை மேலும் விரிவுபடுத்தி அடுத்த ஐந்து ஆண்டுக்குள் தொழு நோய் உள்ள எல்லைப் பகுதிக்கும் சிகிச்சை வழங்க அரசு முயற்சிக்கும். ஆனால் சிகிச்சை வழங்குவோம் என்று சொல்லுகிற போது, பொது மக்களுடைய ஒத்துழைப்பு இல்லாமல், இந்தச் சிகிச்சை எவரையுமே வெற்றி பெறுதல் என்று வெளிப்படையாகச் சொல்லக் கடமைப் பட்டிருக்கிறோம். தொழு நோய் வருகிற ஆரம்ப கட்டத்தில் உடம்பில் எந்த இடத்திலாவது அவர்களுக்கு சொரணை இல்லாமல் மரத்துப்போன தன்மையிருக்குமானால், கொட்டாம் தெரியாமலே அல்லது எதாவது ஒரு பொருள்பட்டால் தெரியாமலேயென்றாலும், அவர்கள் அந்த நிலையிலேயே மருத்துவரை அணுகி கேட்டுக்கொள்ளுவார்களேயானால், தமிழ்நாடு எற்படக் கூடியவர்கள் சிகிச்சையைத் தொடங்கினால் ஒரு ஆண்டுக்காலத்தில் சிகிச்சை யால் தொழுநோய் முற்றுமாகிலிருந்து விடுபடலாம். இது உடம்புக்குள்ளேயே 8 ஆண்டுக்காலம், 10 ஆண்டுக்காலம் இருந்து வெளிவரும் தன்மை உள் வது. காச நோயும் அப்படித்தான். பல ஆண்டுக்காலம் உள்ளேயே இருந்து கடைசி காலத்தில் வெளிப்படையாக அற்றலைக் காட்டக்கூடியது. அப்படி தொடக்க காலத்திலேயே சிகிச்சையைப் பெற்றுக்கொண்டால், மறு படியும் ஒருதாயத்தில் தொழுநோயே வராத மனிதருக்க வாழ முடியும். ஆனால் 5 அல்லது 10 ஆண்டுகள் சட்டையில் மறைத்து வைத்து, துணியில் மறைத்து வைத்து, முகத்தில் வந்தாலும்கூட அதை மூ டி மறைத்து, இன்னும் சொல்லப்போனால் அதிர்ஷ்ட தேவதை என்று தப்பாக யும் எண்ணிக்கொண்டு, உடலையும் எமாற்றுகிற தன்மையில், முற்றிய கட்டத்திற்கு வந்த பிறகு சிகிச்சை கிடைக்குமானால், சிலருக்குப் பூரண குணம் கிடைப்பதில்லை. ஆனால் நோயின் தன்மையிலிருந்து விடு பட்டுவிடலாம். 'infectious part of it' என்று சொல்லுகிற — தொத்து கிற நிலையிலிருந்து விடுபடலாமே தவிர தொழு நோய் அடையாள மாக உள்ள விரல் குறைந்து, கால் விரல் குறைந்து, காது குறைந்து புண் ணாகி முகத்தின் அழகு கெடுகிற நிலைமையில் மருந்து தேடுகிற நிலைமை யிலிருந்து முழு விடுதலை கிடைப்பதில்லை. அவர்களுக்குக்கூட ரீ ஹாபிலிட் டேஷன் சென்டரின் சிலவற்றை ஏற்படுத்தி, அவர்களுக்கு மறுவாழ்வு தொடர், தொழில் பயிற்சி கொள்ளை செய்ய, பயிற்சி தரப்படுகிறது. இன்னாந்த நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்திருக்கிற தொழுநோயாளிகளின் மறு வாழ்வு இல்லங்களில் தொழில்களில் பயிற்சி வழங்குவதற்குக்கூட முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்கின்றன. ஆனால், போது மக்கள் எந்த அளவுக்கு இந்தப் பிரச்சினை பற்றி, தொழுநோய் பற்றி தெரிந்து கொள்ள எவ்வளவு வாய்ப்பு இருக்கிறதோ அந்த அளவுக்கு நோயை ஒழிக்க முடியும். அதைப்போல காச நோய் பற்றி நாம் தடுப்பு முறைகளை மருத்துவ மனையிலும் 20 படுக்கை, 24 படுக்கை என்று படுத்த வைத்திருக்கிறோம். அந்த தொழுநோய்க்குச் சிகிச்சை செய்வது போலவே காச நோய் சிகிச்சைக்கும் பாஸானோரியம் மூலமாக சிகிச்சை நடைபெறுகிறது. தமிழ்நாட்டில் நாம் இந்த காச நோய் தடுப்பு வில்லைகளை மிக அதிகமான அளவுக்கு கடந்த இரண்டு ஆண்டுக

1973 மார்ச் 23] [திரு. க. அன்பழகன்]

காலமாக 5, 6 லட்ச ரூபாய்க்கு விற்றதன் விளைவாக, மத்திய காச நோய்க் கழகம் இரண்டு நாட்களுக்கு முன்பு 20-ம் தேதி எனக்கு நினைக்கி றேன் காச நோய் வில்லை விற்பனைப் பரிசு ஒன்றை அதற்காக உள்ள ஒரு கேடயத்தை அடையாள கேடயமாக தமிழக அரசுக்கு வழங்கி 8·20 யிருக்கிறார்கள். ஆகவே, அந்த முறையிலும் தமிழ்நாட்டிலே பி.ப. காச நோய்த் தீர்க்கும் அளவுக்கு நமக்கு நல்ல பெயர் பெற்றுக் கொண்டு வருகின்றது. ஆனால் இங்கே நான் சொல்லி விரும்புவது நமக் குள்ள பிரச்சினையெல்லாம் மிகச் சாதாரணமானது அல்ல என்பதுதான். உள்ளபடியே குடும்ப நலத்திட்டத்தை மக்களிடத்திலே எடுத்துச் சொல் வதற்கு மட்டும் 5 அமைச்சர்கள் வேண்டும் என்பதுதான் என்னுடைய கருத்து. இந்தப் பிரச்சாரத்தை இன்னும் பத்து ஆண்டுக் காலத்திற்குத் தொடர வேண்டும். இதைத் தவிர, இந்தியாவின் எதிர்காலத்தைத் தீர் மானிக்கப்போவது வேறு எதுவுமில்லை. அரசியலால் தீர்மானிப்பது என் பது மிக சாதாரணம். இந்த நாட்டினுடைய பொருளாதார வளர்ச்சியில் ஏற்படக்கூடிய நன்மைகளாலே நம்முடைய பிரச்சினைகள் தீர்ந்துவிடும் என் பதுகூட உறுதியாக கூற முடியாது குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் வெற்றி பெருமிட்டால் வேறு எதுவும் வெற்றி பெறுது. ஆனால் நம்முடைய சமு தாயத்தில் குடும்பக் கட்டுப்பாட்டை ஒட்டி வெற்றி பெறவேண்டிய இன்னொரு பிரச்சினைதான் கட்டுப்பாடு. தற்போதுஅந்தக் கட்டுப்பாட்டிலே நம் தொடக்க நிலையிலேயே உள்ளோம் 100-க்கு 2 பேர் தொழு நோயாளிகள். 100-க்கு 2 பேர் காச நோயாளிகள். இரண்டு மூன்று நோய்களுக்குச் சேர்த்து உள்ளவர்களும் 100-க்கு ஒருவர் இருந்து இருக்கின்றார்கள். பால் அல்லது வெனிரியல் டிஸீஸ்கள் என்ற நோய்களுக்கு ஆளானவர்கள் மேலும் 100-க்கு 2 பேர்கள் "கேட்டராக்ட்"லே பார்வை மங்கி பார்வை இழந்திருப்ப வர்கள் இருக்கின்றார்கள். 100-க்கு 5 குழந்தைகள் முதல் 15 குழந் தைகள் வரை "மால்நியூட்ரிஷன் டிபெக்ட்", சத்துணவு சரியாக இயற்கை யாகப் பெறுத காரணத்தால், உடல் வளர்ச்சியிலே குறை ஏற்பட்டு, கண் பார்வை மங்கி,காது கேளாமல்,மூளை வளர்ச்சியில் குறைந்துபோய் இருக்கின் றார்கள். குழந்தைகள் தவிர பெரியவர்களும் 100-க்கு 2, 3 பேர்கள் மன நோய்க்கு மெண்டல் டிஸீஸுக்கு ஆளானவர்கள் இருக்கின்றார்கள். அது மன வளர்ச்சி இல்லாத காரணத்தால் அல்லது மனக்குறை காரணமாக ஏற்பட்டது. இதுபற்றி நான் புள்ளி விவரம் பார்த்தேன். 100-க்கு 15 பேர்கள் இந்த நாட்டில் ஏதாவது ஒருவகையில் பாதிக்கப்பட் டிருக்கின்றார்கள். இந்த நூற்றுக்குப்பதினைந்துபேர் பாதிக்கப்பட்டசமுதாயத் திலே தலைப்பை வேண்டிய நிலையில் உள்ள மக்களின் இன்றைய நிலைமை என்ன? 15 வயதுக்குட்பட்டவர்கள், 16 வயதுக்குட்பட்டவர்கள் நூற்றுக்கு 45 பேர்கள் இருக்கின்றார்கள். மொத்த மக்கட் தொகையில் 15 அல்லது 16 வயதுக்குட்பட்ட வயதைச் சேர்ந்தவர்கள் அதாவது 100 பேருக்கு 45 பேர்கள் இன்னும் சொல்லப்போனால், 55 வயது, 60 வயதைத் தாண்டியவர்கள் நூற்றுக்கு 8, 10 பேர்கள் இருக்கின்றார்கள். ஆக நூற்றுக்கு 45 பேர்கள் உழைத்து மற்ற 55 பேருக்கு உதவ வேண்டி யவர்களாக இருக்கின்றார்கள். இவர்கள் நூற்றுக்கு 55 பேர்களைத் தாங்கிக் கொண்டிருக்கின்றார்கள்.

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 23

"The proportionate burden on the people who are capable of supporting others is more and far greater in this country than in anyother country" தாங்கிக்கொள்ள வேண்டிய இளம் பருவத்திலே உள்ளவர்கள் நூற்றுக்கு 45 பேர்கள் இருக்கின்றார்கள். தாங்கமுடியாதவர்கள், அதாவது பிறரைத் தாங்க முடியாதவர்கள், வயோதிக கட்டத்தில் இருப்பவர்கள், பிறருடைய உதவியைத் தேடுகின்றவர்கள், 60 வயது ஆனவர்கள் நூற்றுக்கு 6 பேர்கள் அல்லது 8 பேர்கள் இருக்கின்றனர். இந்த நூற்றுக்கு 45 பேர்கள் தான் மற்றவர்களைத் தாங்கிக்கொள்ள வேண்டிய நிலையில் இருப்பவர்கள். ஆகவே நம்முடைய நாட்டு மக்களில்தாங்கப்பட வேண்டியமக்கள் தொகை அதிகமாக இருப்பதுடன் அவர்களிலே 100-க்கு 15 பேர் நோயாளிகளாக, உடல் நலக் குறைவுள்ளவர்களாக பிறரால் காப்பாற்றப்பட வேண்டிய நிலையில் இருக்கின்றார்கள். மக்களுக்கு ஒரு பொது அறிவும், தகுதியும் உண்டானால் தவிர,இந்தப் பிரச்சினையை டாக்டர்களாலோ அரசாங்கத்தினுடைய மருத்துவ மனைகளாலோ, ஒரு அமைச்சரவையாலோ, ஒரு அரசாங்க வரவு செலவு திட்டத்தாலோ இதை என்றைக்கும் தீர்க்க முடியாது. இந்த நாட்டிலே உள்ளவர்கள் சிகரெட்டுக்கும், புகையிலைக்கும், நாண் ஷட்பட ஷயோகிக்கும் புகையிலைக்கும், எவ்வளவு லட்சம் ரூபாய்கள் செலவழிக் கிறார்கள்? திரு. ம. பிரதிஞ்சாமி நாயுடு அவர்களும் பயன்படுத்துவதாகச் சொல்லுகின்றார்கள். இப்படி நம்மை நாமே கெடுத்துக்கொள்ளுகின்றதற் காகச் செலவிடுகின்ற பணத்தினுடைய அளவை விட மருத்துவத்திற்கும் உடல்நலத்திற்கும் செலவிடுகின்ற பணத்தைக் கணக்கெடுத்துப் பார்த்தால் இதில் எறக்குறைய 100-க்கு 10 விழுக்காடுதான் மக்கள் இதற்காகச் செல விடுகின்றார்கள். ஆகவே இந்த மனப்பான்மை மாற வேண்டும். மற் றொன்று உணவுத் துறையிலே ஒரு பெரிய மாற்றம் ஏற்பட்டால்தான் ஏழை எளிய மக்கள் உண்ணுகின்ற உணவின் தரம் உயர்வதற்கான ஒரு முயற்சியை அரசாங்கம் எடுக்க முடியும். அரசாங்கத்திலே கால்நடை பெரு குவதற்கு, பால் பெருகுவதற்கு, முட்டை உற்பத்தி பெருகுவதற்குத்தேவை யான எல்லாவிதமான திட்டங்களும் போடப்பட்டுள்ளன. அது போலவே மக்களுடைய உணவிலே சத்துணவும் பகுதி அதிகமாக இடம் பெறச் செய்ய வேண்டும். அப்படி அதிகமாக இல்லாவிட்டால் தங்களுடைய உடல் வளம் குறையும் எனறு உணர்கின்ற மனப்பான்மை இருந்து தங்களுடைய உண வினிலே ஒரு குறிப்பிடத்தக்க அளவிலே சத்துணவு பெறத்தகுந்த அளவுக்குச் மக்களின செலவிடுகின்ற மனப்பான்மை உருவாகுமானால்தான், உடல் நலப் பிரச்சினையோ, நல்வாழ்வுப் பிரச்சினையோ, எதுவாயினும் அதை எளிதிலே தீர்க்க முடியும்.

இந்த நாட்டிலுள்ள குழந்தைகளை முறைப்படி வளர்ப்பதற்காக ஒரு பெரிய முயற்சி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும். கல்வி அமைச்சர் அவர்கள் குழந்தைகளுக்குத் தகுந்த கல்விகொடுக்க எப்படி முடியும் என்றும், குழந்தைகளை உடல் வளர்ச்சியிலே மக்கள் காட்டுகின்ற அக்கறை யைப் பொறுத்துத்தான் அவர் கொடுக்கின்ற கல்வியும், மக்கள் மனநிறைவும் குழந்தைகளுடைய அறிவு வளர்ச்சியும்கூட அவர் களை உண்கின்ற உணவு அடிப்படையிலே இருக்கின்றது. சித்த மருத்துவத்தைச் சேர்ந்த பெரியவர்கள் சொல்வார்கள். இன்னின்ன

1973 மார்ச் 23] [திரு. க. அன்பழகன்]

கைகள், இன்னின்ன மூலிகைகள் இன்னின்ன வகையான வளர்ச்சியைத் தருகின்றன என்று. நினைவு ஆற்றல் குறைந்தவர்கள் வல்லாரை கீரையைப் பயன்படுத்தலாம் என்று சொல்லுவார்கள். இப்படியே துளசியைப் பயன் படுத்தினால் நல்ல பயன் ஏற்படும் என்று சொல்வார்கள். எனக்கு அவ்வளவு நினைவு இல்லை. ஆனால் அந்த முறையில் மதிப்பு மட் டும் உண்டு. அப்படிச் சொல்லப்படுகின்ற உண்மைகளின் அடிப்படையில் வைத்துப்பார்த்தால், குழந்தைகளுக்குத் தரப்படுகின்ற உணவு சத்துணவாக இருந்து மூளை வளர்ச்சிக்கும் உடல் வளர்ச்சிக்கும் பயன்பட்டு, அவர் களுடைய நரம்புகள் வலிவு பெற துணை நிற்குமானால், அந்தக் குழந்தை கள் நல்ல அறிவு வளர்ச்சியைப் பெறுகின்றன. நல்ல உணவு இல்லாமல் கண் பார்வை மங்கி, காது கேட்காமல், பொதுமான மூளை வளர்ச்சி இல்லா மல், அந்தஅறிவுத்துறையிலே கவனத்தைச்செலுத்த முடியாமல் உள்ள அந்தப் பிள்ளைகள் அறிவு வளர்ச்சி பெறமுடியாமல் இருக்கின்றன. ஆகவே, நல்ல உணவுத் திட்டம் தேவை என்ற அடிப்படையிலேதான் மக்களின் நல் வாழ்வு இருக்கின்றது. சுகாதாரத் துறையின் ஆரம்ப சுகாதார நிலையங்கள் மூலமாக ஒரளவுக்குத் தாய்க்கும் சேய்க்கும் இந்தச் சத்துணவு வழங்கப்படுகின்றது. மதுரைப் பகுதியிலே டாக்டர் வெங்கடசாமி அவர் களின் முயற்சியின் காரணமாக தமிழக அரசு எற்றுக்கொண்ட திட்டத் தின்படி ஒரு வட்டாரத்திலே—சிறு குழந்தைகளுக்கெல்லாம் "மால் நியூட்ரிஷன் பாக்டர்" என்ற காரணத்தால் நோய்கள் எற்படுகின்றன எனறு அறிந்து அவர்களுக்கு சத்துணவு வழங்குகின்ற திட்டம் நடை முறைக்கு வந்திருக்கிறது. அதற்கான புள்ளி விவரங்கள் தனியாக இருக்கின்றன. வேறு பகுதியிலே இருக்கின்றன. அதேபோல் செல்வநகரில் உயர்நிலைப் பள்ளிக்கூடங்கள் தொடக்கப்பள்ளிக்கூடங்கள்—இவைகளி லுள்ள பிள்ளைகளையெல்லாம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்குள் எப்படி யாவது மருத்துவ பரிசோதனை செய்துவிட வேண்டுமென்ற அடிப்படை யிலேதான் எழு லட்சம் ரூபாய் அரசு ஒதுக்கியிருக்கின்றது. இந்தத் திட்டம் குழந்தைகளினுடைய நலப்பரிசோதனைக்கும் அதற்குப் பின்னர் அவர்களுக்கு மருந்துகள் வழங்குவதற்கும் நடத்தப்படுகிறது. தனியார் முயற்சியில் ராஜபாளையத்திலே உள்ள ரோட்டரி சங்கத்தின் சார்பில் 6,000 குழந்தைகளைப் பரிசோதனை செய்வதற்கு அரசாங்கத்தினுடைய ஒத துழைப்பைக் கேட்டார்கள். அந்த முறையிலே அரசாங்க மருத்துவர்கள் அங்கே சென்று 6,000 குழந்தைகளுக்கு உடல் நலப் பரிசோதனை நடத்தி யிருக்கின்றார்கள். கோயம்பத்தூர் மாவட்டத்திலே ஒரு பகுதியிலே, மதுரை மாவட்டத்திலே, வட ஆற்காடு மாவட்டத்திலே குழந்தைகள், மாணவர்கள் ஆசிரியர்களுடைய உடல் நலத்தைக் கவனிப்பதற்காக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய முயற்சியினாலே, பள்ளித் தலைமை யாசிரியர்களும், கல்வித்துறை அலுவலர்களும், நலத்துறை அலுவலர்களும் சேர்ந்து மாணவர்களிடத்திலே ஒரு ஆண்டுக்கு ஒரு ரூபாய் கட்டணத்தைத் தலைமையாசிரியர்கள் மூலமாகப் பெற்று, உடல் நலப் பரிசோதனைகளை நடத்திவருகின்றார்கள். மற்ற மாவட்டங்களிலும் அதை நடத்த வேண்டும் என்று நாம் ஆலோசனை சொல்லியிருக்கின்றோம். இப்படிப்பட்ட பல்வேறு திட்டங்கள் விரைவாக நடைமுறையில் செயல் முறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கின்றன. ஆனால் எல்லாவற்றையும் ஒருங்கிணைத்து ஒரே வழியாக நடத்த முடியுமா என்று கேட்டால், ஒருங்கிணைக்கும்போது, அரசாங்கமே

[திரு. க. அன்பழகன்] [1973 மார்ச் 23

அந்த முழுப் பொறுப்பை எற்க நேர்வதால், பொது மக்களுடைய ஒத்துழைப்பு குறைந்துபோகிறது. நாடு முழுவதும் கண் சிகிச்சை முகாம் நடத்தும் இயக்கத்தை இந்த அரசாங்கம் ஆரம்பித்திருக்கின்றது இதற்கு மக்களிடமிருந்து ஓரளவுக்கு ஒத்துழைப்புக் கிடைக்கிறது. அதற்கு சில இடங்களில் தனியார் நிதி சேர்த்து அவர்களே முன்னர் நடத்திக் கொண்டிக்கின்றார்கள். இப்போது அரசாங்கம் நிதி சேர்த்துநடத்துகின்றது என்று அறிந்தவுடன், சில இடங்களிலே அரசாங்கமே வந்து நடத்தட்டும், நமக்கு ஏன் செலவு என்று சொல்லும் மனப்பான்மை வருகின்றது. இவைகளையெல்லாம் திட்டவட்டமாக அரசாங்கமே செய்வது என்பதை விட பொதுமக்கள் தங்களுடைய தேவையை உணர்ந்து நிறைவேற்றிக்கொள்கின்ற ஒரு மனப்பான்மையை என்று உருவாக்குகின்றோமோ அன்றுதான் நோய்களைப் போக்குவதற்கு ஒரு வழி ஏற்படும். அந்த முறையிலே எதிர்காலத்தில் சமுதாயத்தினை வளம் பெற்றுத் திகழ வேண்டியவர்களாக இருக்கும் இன்றுள்ள இளைஞர்கள் உடல் நலத்தைப் பாதுகாப்பதில் எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு ஒரு புதிய கருத்தை உருவாக்க வேண்டுமென்று இந்த அவையிலே உள்ள அங்கத்தினர்களை வேண்டிக்கொள்கின்றேன்.

அடுத்து, இங்கே சொல்லப்பட்ட எல்லாக் கருத்துக்களுக்கும் நான் இன்றைக்கு என்னுடைய உரையிலே விளக்கம் தரக்கூடிய நிலையில் இல்லை. இந்த நலத்துறையைப் பற்றி எவ்வளவோ விளக்கங்கள். சொல்ல வேண்டுமென்று எழுதி வைத்திருக்கின்றேன் எழுதி வைத்த எல்லாவற்றையும் எடுத்து என்னால் சொல்ல முடியவில்லை. அவ்வளவு கருத்துக்கள் இருக்கின்றன. காலத்தால் இடந்தரவில்லை.

குறைகளைப் போக்க இந்தத் துறை மேலும் மேலும் தொடர்ந்து முயற்சி செய்துகொண்டிருக்கின்றது. குறைகளைப் போக்குவதற்கும், உடனடியாகக் கடமைகளை நிறைவேற்றுவதற்கும், மக்களுக்கு நிறைந்த பல்வகை இடைப்பட்டதற்கும் தகுந்த ஆலோசனைகளை மேற்கொள்ளும். மருத்துவத் துறையிலே உள்ள ஆசிரியர்கள், பேராசிரியர்கள், பிரைவேட் பிராக்டிஸ் என்ற முறையில் தனியாக மற்றவர்களுக்கும் சிகிச்சை வழங்குவது நியாயமல்ல என்ற கருத்தை திரு. சுவாமிநாதன் அவர்கள் சொன்னார்கள். அந்தக் கருத்தை இந்த அரசு கருத்தளவிலே ஏற்றுக்கொள்கின்றது. செயல் முறையிலே செய்வதிலே தயக்கம் இருக்கிறது. ஏனென்றால் இதைச் சில மாநிலங்களில் செய்து சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டுவிட்டன. அப்படி ஒரு இடர்ப்பாடு நேர்ந்துவிட்டு, ஒரு முறை அதிலே தோல்வி ஏற்படுமானால். பின்னால் அடியோடு அந்த எண்ணம் தோற்றுப் போய்விடும். ஆகவே, அந்தக் கருத்தை ஏற்றுக் கொண்டு தனிப்பட்ட முறையில் சிகிச்சை வழங்குவது என்ற முறையைத் தடுக்க வேண்டுமென்று சொன்னால், அதற்கான ஆலோசனைகளைச் செய்து அந்த நிலையை அடைவதற்கான சாதனங்களை உருவாக்கிக்கொண்டு அதற்குப் பின்னால் அதைச் செய்ய வேண்டும். ஏனையினால் தான் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே அது ஆலோசிக்கப்பட்டு இன்னும் ஆய்வில் வைக்கப்பட்டிருக்கின்றது. அதே போல் ஆனரரி சர்ஜன் என்ற பதவிகள் இருக்கக்கூடாது என்பதைப் பற்றிக் கருத்துக்கள் சொன்னார்கள். அதிகப்

8-30 பி.ப.

1973 மார்ச் 23] [திரு. க. அனபழகன்]

பயிற்சி பெறுதவர்கள், திறமை பெறுதவர்கள் இவர்களை ஆனரரி சர்ஜரை நியமிப்பதில்லை. ஆனால் சில இடங்களிலே சில சூழ்நிலைகளில் சில திறமையான மருத்துவர்களுடைய பணி தேவைப்படுகின்றது.

Particular types of operations cannot be conducted by our doctors who are there as heads of departments.

"பிரைவேட் ப்ராக்டீஸ்" ஐயும், ஆனரரி சர்ஜன் பதவியையும் சேர்த்து நிறுத்திவிடுவதற்குத்தான் கருதவேண்டும். அந்த முறையிலே அந்த இணைப்பு கருதப்படும். இரண்டையும் சேர்த்து நிறைவேற்றுவதற்கு வாய்ப்பான சூழ்நிலை நிச்சயமாக உருவாகுமென்று நம்புகிறேன். அதே போல எதிர்க்கட்சித் தலைவரவர்கள் டாக்டர்களுக்கு வேலை கிடைக்கவில்லை, அந்த நிலை வருந்தத் தக்கது என்று சொன்னார்கள். ஆனால் உண்மையாக அரசாங்கத்தில் வேலை கேட்க வேண்டிய நிலையில்லாத ஒரு சமுதாயம் இந்த நாட்டிலே இருக்குமானால், அது டாக்டர்கள் தான். மற்றத் துறையினருக்கு அரசாங்கம் வேலை கொடுத்தால்தான் செய்ய முடியும். டாக்டர்கள் 10,000 பேர் இருக்கிற வட்டாரத்திலே ஒரு போர்டு போட்டுக் கொண்டு உட்கார்ந்தாலும் கொஞ்சம் கவனமாக ஒரு இரண்டாண்டுக் காலம் முழு முயற்சியோடு வருகிற நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பார்களேயானால், மக்கள் அவர்களை மிகப் பெரிய அளவுக்கு மதித்து ஏற்றுக் கொள்வார்கள். அவர்களிலே பலருக்கு அந்தத் தைரியம் ஏற்படவில்லை. அந்தத் தைரியம் ஏற்பட வேண்டும் என்பதற்காக கடந்த ஆண்டு ரூ. 250 உதவித் தொகையை ஊதியமாகத் தந்து, ஒரு ஆண்டுக்கு 100 பேருக்கு தொடக்க நிலையில் வேலை கிடைக்காத நிலையில் உள்ள அரசு மருத்துவ மனைகளிலே பணியாற்ற வாய்ப்பளிக்க அரசு முன்வந்தது. பின்னால் அவர்கள் தனியாகப் பணியாற்றலாம் அல்லது அரசாங்க வேலைக்கு வரலாமென்று தெரிவித்தோம்; எல்.டி. ஆசிரியர்களுக்கும் மற்றவர்களுக்கும் வேலையில்லாத காலத்தில் உதவித் தொகை கொடுத்து அவர்களைக் கொஞ்ச காலத்திற்கு வேலையில் பயிற்சிக்கு வைத்திருந்து பிறகு வேலைக்கு எடுத்துக்கொள்வது என்ற முறை பயன்படுத்தப்பட்டது போன்ற, முறையை நாங்கள் சொன்னோம். ஆனால் மருத்துவக் கல்லூரியிலே பயிலுகிற, பயிற்சி பெற்றுக் கொண்டிருக்கிற ஹௌஸ் சர்ஜன்கள், மாணவர்கள் ஆகியோர் ஒரு போராட்டம் ஆரம்பித்து, "எங்களுக்கு நீங்கள் ரூ. 250, ரூ. 300 கொடுத்து எங்களை வேலைக்கு வைப்பது என்று சொன்னால், அது எங்களைக் குறைவுபடுத்துவது, அதன் மூலம் நீங்கள் அந்த வேலையைச் செய்தால்தான் அரசு வேலைக்கு வரலாமென்று ஆக்கிவிடுகிறீர்கள். ஆகவே எங்களுடைய உழைப்பை அரசாங்கம் குறைத்து மதிப்பிட்டு வாங்கிக் கொள்ளும் முயற்சி இது" என்று எதிர்ப்பு எண்ணத்தோடு வாதாட ஆரம்பித்தார்கள். அந்த முறையைக் கைவிட்டால்தான் நாங்கள் வேலை நிறுத்தத்தைக் கைவிடுவோமென்று கூடச் சொன்னார்கள். அந்த அளவுக்கு அவர்கள் வாதாடியதற்குப் பின்னால் அவர்கள் பயிற்சிபெற வாய்ப்பளிக்க நாம் அல்லவா கெட்ட பெயர் ஏற்றுக்கொள்ளவேண்டியுள்ளது. அவர்களும் போராட வேண்டாமென்று அந்தத் திட்டத்தைக் கைவிட்டோம். மறுபடியும் அந்த மாணவர்கள் இதன் நன்மையை ஒப்புக்கொண்டு கேட்பார்களேயானால், அந்தத் திட்டத்தைக் கொண்டு வருவதற்கு அரசாங்கம் முயற்சிக்கும், அப்படி ஒரு ஆண்டுக்கு 100 பேருக்கு மாவட்ட மருத்துவ மனைகளிலும், பெரிய சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகளிலும் நல்ல பயிற்சி அளிக்

கப்படும். அந்தப் பயிற்சியைப் பெற்றுக் கொண்டு சென்று அவர்கள் தொழிலைத் தாமே தலையாக நடத்த ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கும். அந்த முறையிலே, "இன்டான்ஷிப்" போல அது பயன்படும். அப்படி 100 பேருக்கு வாய்ப்பு வழங்குவதை அவர்கள் விரும்பாத காரணத்தால் அது கைவிடப்பட்டது. மறுபடியும் அவர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை வருமென்றே எதிர்பார்க்கிறேன்.

அடுத்து சித்த மருத்துவம் வளருவதற்கும் தகுந்த யோசனைகளை அங்கத்தினர்கள் வழங்கியிருக்கிறார்கள். பல முயற்சிகள் இருக்கின்றன. தொடர்ந்து அரசு முயற்சிக்கும், ஹோமியோபதி மருத்துவத்திலும் இந்த ஆண்டு அதற்கான கவனத்தில் மூலமாகப் பலபேரைப் புதிதாக பதிவுசெய்து கொள்வதற்கான முயற்சி தொடங்கப்படுவதுடன் அடுத்த ஆண்டில் அதை விரிவாகப் பயன்படுத்துவதற்கும் தகுந்த நடவடிக்கையையும் அரசு எடுக்கும்.

விரிவான, விளக்கமான பதிலை நான் சொல்ல முடியாவிட்டாலும் உள்ளபூர்வமான பதிலை நான் சொல்லியிருக்கிறேன் என்பதை ஏற்றுக் கொண்டு அங்கத்தினர்கள் மேலும் மேலும் தங்களுடைய நல்ல ஆலோசனைகளை இந்தத் துறைக்கு வழங்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என்னுடைய உரையை நான் முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு சட்ட மன்றத் துணைத் தலைவர் : இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுறுகின்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

8-35 பி.ப.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

5. மன்றத்தின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்

A. Statutory Rules and Orders.

Nil.

B. Reports. Notifications and other papers.

99. Notification issued with G.O. Ms. No. 3475, Revenue, dated the 27th December 1972. in regard to exemption from payment of registration fees in respect of the release deed to be executed by the Director of Agriculture, Madras, in favour of Thiru M.B. Chinnasamy of Mural village, Bhavani taluk, Coimbatore district.

100. A Review on Nationalised Transport in Tamil Nadu 1972–73 (English and Tamil).

101. Fourteenth Report of the Committee on Estimates 1972–73 on the Fire Service Department.

102. Performance Budget for 1973–74 relating to Transport.

103. Commercial Budget for 1973–74 relating to State Transport.

இணைப்பு

[332-ஆம் பக்கத்தில் இனம் 2 (4)க்கான அடிக் குறிப்பை பாருங்கள்]

மருத்துவத் துறை

கொள்கை விளக்கக் குறிப்பு.

மாண்புமிகு மேலவைத் தலைவர் அவர்களே,

"மருத்துவப் பணிகள்" என்ற தலைப்பின்கீழ் அரசுக் கொள்கையின் முக்கியக் கூறுகளை, மேலவையின் முன்னால் உங்கள் முன் எழுந்துள்ளேன்.

குறிக்கோள்

நல்வாழ்வு என்பது நோயற்ற வாழ்வு மட்டுமே அல்ல. உடல் நலமும் மன நலமும் சமூக நலமும் ஒருங்கே அமையப் பெற்ற வாழ்வே நல்வாழ்வாகும். மக்களுக்கு நல்வாழ்வு அளிக்க வேண்டுமென்பதைத் தலையாய நோக்கமாகக் கொண்டுள்ள இந்த அரசு அந்த நல்வாழ்வினைச் சீர்குலையா வண்ணம் காத்து மக்களுக்குத் தொடர்ந்து அளித்து வருவதில் விடாமுயற்சியுடன் செயலாற்றி வருகிறது. இந்த நாட்டிலுள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் நல்வாழ்வு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது நமது கடமையாகும். இந்த வசதிகளைப் பெற்றிருப்பது மக்களின் வாழ்க்கை உரிமையும் கூட. மக்களின் நல்வாழ்வுக்காக நாம் செலவு செய்யும் நிதி தேசியப் பொருளாதார அமைப்பிற்கு முதலீடு செய்வது போலாகும். எனவே, மக்களுக்குச் சிறந்த நல்வாழ்வை அமைத்துக் கொடுப்பதன் மூலம் இந்த நாட்டினை வளமான நாடாக ஆக்க, நம்மிடம் இருக்கக்கூடிய குறைந்த வசதிகளைக் கொண்டு மிகுந்த பயனை அளிப்பதில் இந்த அரசு அதிக நாட்டம் செலுத்திவருகிறது. இந்த நோக்கத்தை எய்தும் பொருட்டு, அனைவருக்கும் மருத்துவ வசதிகள் எளிதில் கிடைக்கும் வகையிலும், சமுதாயம் பெரு மளவில் பயனடையும் வகையிலும் நல்ல பல திட்டங்களை அரசு வகுத்துள்ளது. இவ்வாறு வகுத்த திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி மக்களுக்குச் சேவை புரிவதற்காக போதிய எண்ணிக்கையில், தகுதியுடைய மருத்துவர்கள் செவிலியர் ஆகியோர் நியமிக்கப்படுகின்றனர்; மருத்துவக் கல்விக்கும் அத்துறையில் பட்டமேற்படிப்புக்கும், ஆராய்ச்சிக்கும் நியாயமான வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன. மக்களுக்குப் பணிபுரியத் தொழில் நுட்பப் பணியாளர்கள் போதுமான எண்ணிக்கையில் எப்போதும் இருந்து வருகின்றனர். காச நோய், தொழுநோய் போன்ற கடுமையான தொற்று நோய்கள் பரவாவண்ணம் தடுக்கவும் சிகிச்சை அளிக்கவும் குறிப்பாக நல்ல, தரமான மருந்துகள் வழங்கப்பட்டு வருகின்றன. இதற்காக மருந்துகள் சோதனை ஆய்வுக் கூடம் ஏற்படுத்துவதற்கான புதிய செயற்குறிப்பினை **1973–74**-ஆம் ஆண்டில் செயல்படுத்த பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

[1973 மார்ச் 23

இந்திய மருத்துவ முறைகளுக்கும் குறிப்பாக, நீண்டகாலமாகக் கவனம் செலுத்தப்படாத சித்தமருத்துவ முறைக்கு இம் மாநிலத்தின் நல்வாழ்வுத் துறை நிர்வாக அமைப்பில் நல்லதோர் இடமளிக்க வகை செய்யும் முயற்சியை அரசு தொடர்ந்து மேற்கொண்டுள்ளது.

ஹோமியோபதி மருத்துவ முறை இம் மாநிலத்தில் கடந்த ஆண்டு வரையில் அரசால் சட்டப்படி ஏற்பளிக்கப்படவில்லை. இந்த ஆண்டு அரசு ஏற்பளித்துள்ளது. வரும் ஆண்டுகளில், இம் மாநில மக்கள் நல்வாழ்வுப் பணிகளில் ஹோமியோபதிக்கு உரிய இடம் அளிக்க அரசு ஆவன செய்யும்.

குடும்பநலத் திட்டம் குறித்து இந்த அரசு தொடர்ந்து சீரிய நாட்டம் செலுத்தி வரும். ''அளவான குடும்பமே வளமான வாழ்வுக்கு வழி'' என்னும் கோட்பாட்டினை இம்மாநிலத்திலுள்ள சிற்றூர்களிலும் பேரூர்களிலும் மக்கள் படித்தவராயினும், பாமரராயினும் அனைவரும் அறிந்து கொள்ளும் வகையில் பரப்பப்படும்.

தமிழக மக்களின் வாழ்வு நலம் பெற இந்த நடவடிக்கைகள் அனைத்தும் பெரிதும் உதவும் என்று நம்புகிறேன்.

நிட்டச் செலவு

மக்களுக்குப் பயன் தர மருத்துவ வசதிகளையும் மருத்துவக் கல்விப் பயிற்சியையும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காக முதலாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் அரசு ரூ. 248 லட்சம் முதலீடு செய்துள்ளது. இது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 459 லட்சமாகவும், மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 644 லட்சமாகவும் உயர்ந்துள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இச் செலவு ரூ. 1,731·59 லட்சமாக உயர்ந்துள்ளது; எனவே, ஐந்தாண்டுத் திட்டங்களின்கீழ் வரும் மருத்துவப் பணிகளுக்கும், மருத்துவக் கல்விக்கும் செலவு மிகுதியாகப் பெருகி வந்துள்ளது.

வரவு-செலவு நிட்ட நிதி ஒதுக்கம்

1966–67, 1972–73, 1973–74-ஆம் ஆண்டுகளில், மருத்துவக் கல்வி, மருத்துவப் பணிகள், இந்திய மருத்துவம் ஆகியவற்றுக்காக (திட்டத்தில் சேர்ந்த வேலைத் திட்டங்களும், திட்டத்தில் சேராத வேலைத் திட்டங்களும் இதில் அடங்கும்) ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கம் பின்வருமாறு :—

	1966–67.	1972–73.	1973–74.
	ரூ.	ரூ.	ரூ.
மருத்துவக் கல்வி*		11,17,69,000	12,33,61,400
மருத்துவப் பணிகள்		10,93,06,400	12,35,40,100
இந்திய மருத்துவம்.		12,74,000	19,52,400

1973 மார்ச் 23]

* மருத்துவக் கல்வி, மருத்துவப் பணிகள், இந்திய மருத்துவம் } ரூ. 17,39·56 இலட்சம்.

அப்போது இந்த மூன்று துறைகளும் சேர்ந்து மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலகம் என்ற ஒரே துறையாக இருந்தது.

1972–73-ஆம் ஆண்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கத்தைக் காட்டிலும், 1973–74-ஆம் ஆண்டில் பல பிரிவுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி ஒதுக்கம் கணிசமான அளவுக்கு உயர்ந்து வந்துள்ளதை மேற்கண்ட விவர அட்டவணையிலிருந்து காணலாம்.

மருத்துவக் கல்வி

இம்மாநிலத்தில் தற்போது 8 மருத்துவக் கல்லூரிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இக்கல்லூரிகளில் ஆண்டுதோறும் 1,015 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இவர்கள் தவிர, பல் மருத்துவப் பட்டப்படிப்புக்கு 35 மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இந்த மருத்துவக் கல்வி நிறுவனங்களில் எம்.பி.பி.எஸ். பட்டப்படிப்புடன், பல பட்டமேற்படிப்புப் பாடமுறைகளும், தகுதிப் பட்டயப் பாடமுறைகளும் நடத்தப்படுகின்றன. இந்த மருத்துவக் கல்லூரிகளுடன் மருத்துவ மனைகளும் இணைக்கப்பட்டுள்ளன. 1972–73-ஆம் ஆண்டில், இந்த மருத்துவமனைகளில் உள்ள படுக்கைகளின் மொத்த எண்ணிக்கை 12,047 ஆகும். 1973–74-ஆம் ஆண்டில், இந்த படுக்கைகளின் எண்ணிக்கை 12,314 ஆக உயர்த்தப்படும். இந்தக் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் மருத்துவக் கல்வி இயக்குநரின் நிர்வாகத்தின் கீழ் உள்ளன. 1972–73-ஆம் ஆண்டில் இந்த மருத்துவக் கல்லூரிகளில் நடத்தப்பட்ட பாடமுறைகள் பற்றிய விவரங்கள் I-ஆம் இணைப்பில் கொடுக்கப்பட்டுள்ளன. இந்த மருத்துவக் கல்லூரிபற்றிய விவரங்கள் II-ஆம் இணைப்பில் கொடுக்கப் பட்டுள்ளன.

நான்காம் ஐந்தாண்டுத் திட்டத்தில் மருத்துவக் கல்விக்காக ரூ. 433 லட்சம் ஒதுக்கப்பட்டதில், ரூ. 380 லட்சம், செங்கற்பட்டு, திருநெல்வேலி, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் உள்ள புதிய மருத்துவக் கல்லூரிகளின் கட்டிடத் தேவை நிறைவுக்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. திருநெல்வேலி, கோயம்புத்தூர், செங்கற்பட்டு ஆகிய இடங்களில் புதிய மருத்துவக் கல்லூரிகளுக்குக் கட்டிடங்களும், இந்தக் கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு விடுதிகளும் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. முடிவுறுமலிருக்கும் ஒரு சில பணிகள் 1973-ஆம் ஆண்டு இறுதிக்குள் முடிவுறும். கூடுதலாகச் சில வசதிகளும் அதாவது குளிர்பதனப் பொறி நிறுவுவது, சிறுவிலங்குக்கூடம் அமைத்தல், கண்ணுடி ஊதல் முறையில் கண்ணுடிப் பொருள்கள் அறை அமைத்தல்,

ஆகிவையும், திருநெல்வேலி மருத்துவக் கல்லூரியில் சவக்கிடங்கு கட்டும் பணியும் முடியும் தறுவாயில் உள்ளன. 1973–74-ஆம் ஆண்டில், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரியில் துப்புரவு ஆய்வுப் பயிற்சியாளர்களுக்கு (Sanitary Inspectors) தங்கும் விடுதி கட்டுதல், கோயம்புத்தூர் மருத்துவக் கல்லூரி மருத்துவ மனையில் 100 படுக்கைகள் கொண்ட கூடம் கட்டுதல், கோயம்புத்தூர், செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரிகளுக்கு நீர் வழங்கு ஏற்பாடு செய்தல் போன்ற பணிகள் கூடுதலாக மேற்கொள்ளப்படும்.

சென்னை, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உள்ள மருத்துவக் கல்லூரிகளை மேம்படுத்தும் வகையில் கீழ்க்காணும் பெரும் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன :—

1. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் போதனைக் கூடம் கட்டுதலும், சமூக, தடுப்பு மருந்து ஆய்வுக் கூடங்களை விரிவு படுத்துதலும்.

2. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் வெளி நோயாளி சிகிச்சைப் பிரிவு ஒன்றைப் புதிதாகக் கட்டுதல்.

3. அதே கல்லூரியில் அவசர அறுவைச் சிகிச்சைக் கூடம் ஒன்று கட்டுதல்.

4. அதே கல்லூரியில் மருந்தாக்க இயல் பிரிவுக் கூடம் கட்டுதல்.

5. அதே கல்லூரியில் உடல் அறுவைக் கூடம் கட்டுதல்.

6. சென்னை மருத்துவக் கல்லூரியில் சவக் கிடங்கிற்கு மேலே முதல் மாடி கட்டுதலும், பொதுவான ஆராய்ச்சிப் பிரிவு கட்டுதலும்.

7. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் கட்டுத் தொட்டி (Sump) கட்டுதல்.

8. ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் கூடுதலாகப் போதனைக் கூடங்கள் கட்டுதலும், இரசாயனம், ஆய்வுக் கூடங்களை விரிவுபடுத்துதலும்.

மேலும் மருத்துவக் கல்லூரிகளில் கீழ்க்காணும் பணிகள் தற்போது நடந்தேறி வருகின்றன :—

1. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் புற நிலை நோயாளி சிகிச்சைத் துறைக்காகக் கட்டிடங்கள் கட்டுதல்.

2. சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியின் புதிய கட்டிடத்தில் கூடுதலாக மாடிகள் கட்டுதல்.

3. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் குளிர் பதனப் பொறி நிறுவுவது உட்பட சவக்கிடங்கு கட்டுதல்.

4. தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரியில் போதனைக் கூடம் ஒன்று கட்டுதல்.

மருத்துவக் கல்லூரியுடன் இணைந்த மருத்துவமனைகளுக்கு மேம்பாடுகள்.

கீழ்க்காணும் பெரும்பணிகள் எல்லா வகையிலும் முடிக்கப் பட்டுள்ளன :—

1. சென்னை, அரசு கண்நோய் சிகிச்சை மருத்துவமனையில் வெளி நோயாளி சிகிச்சைப் பிரிவு ஒன்றைப் புதிதாகக் கட்டுதல்.

2. சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் உள்ள அறுவை சிகிச்சைக் கூடத்திற்குக் குளிர் வசதி செய்து கொடுத்தல்.

3. சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் முட நீக்கியியல் கூடத்திற்கும் எக்ஸ்-கதிர்ப் பிரிவு போன்ற வற்றிற்கும் இடவசதியளிக்க மூன்றுமாடிக் கட்டிடங்கள் கட்டுதல்.

4. அரசு மனநோய் மருத்துவமனைக்கு மேம்பாடுகள். (வேலையளித்து சிகிச்சையளிக்கும் கொட்டகைகள் கட்டுதல், தொழுநோய்ப் பிணியாளருக்கான கட்டிடம் கட்டுதல், 'சி' பிரிவு கட்டிடம் கட்டுதல்).

5. சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் உள்ள மூன்று மாடிக் கட்டிடங்களுக்கு மேலே கூடுதலாக இரண்டு மாடிகள் கட்டுதல்.

6. சென்னை, மகப்பேறு-சிசு நல, அரசு மருத்துவமனையில் குடும்ப நலத் திட்டத்திற்காகக் கட்டிடம் கட்டுதல்.

7. மகப்பேறு-மகளிர் நோயியல் மருத்துவ நிலையத்திலும், மகளிர்-சிசு நல அரசு மருத்துவமனையிலும் தாய்மார்களுக்கான அரும்பொருட்காட்சிக் கூடம் கட்டுதல்.

8. சென்னை, கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில், குடும்ப நலத் திட்டத்தின்கீழ் மகளிர் அறுவைச் சிகிச்சை செய்து கொள்ள கூடுதல் கூடமும் அறுவைச் சிகிச்சைக் கூடமும் கட்டுதல்.

கீழ்க்காணும் திட்டப் பணிகள் நடந்தேறி வருகின்றன :—

1. தஞ்சாவூர், ராஜா மிராசுதார் மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட கூடமும், அறுவைச் சிகிச்சைக் கூடமும் கட்டுதல்.

2. மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் 20 படுக்கைகளுடன் நரம்பியல் கூடம் கட்டுதல்.

3. மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில், கண் சமிப்பு விழிவெண்படல மாற்று அறுவை சிகிச்சைப் பிரிவு கட்டுதல்.

4. தோப்பூர், காசநோய் மருத்துவமனையில் 30 படுக்கைகளுக்கு இடவசதியளிக்க, முன்பிருந்த கட்டிடங்களைப் போலவே இரண்டு கட்டிடங்கள் கட்டுதல்.

5. தாம்பரம், அரசு காசநோய் மருத்துவமனையில் 104 படுக்கைகள் கொண்ட கூடம் ஒன்றைக் கூடுதலாகக் கட்டுதல்.

6. சென்னை, மகளிர்-குழந்தைகளுக்கான கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் குறைமாதக் குழந்தை சிகிச்சைப் பிரிவு கட்டுதல்.

7. சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவமனையில் 100 படுக்கைகள் கொண்ட கூடம் கட்டுதல்.

8. மகப்பேறு-மகளிர் நோயியல் மருத்துவ நிலையத்திலும் சென்னை மகளிர்-குழந்தை நல மருத்துவமனையிலும் தாய், சிசு சிகிச்சைக் கூடமும் அவசர நோய்ச் சிகிச்சைப் பிரிவும் கட்டுதல்.

9. சென்னை, அரசு மனநோய் மருத்துவமனையில் பெண் நோயாளிகளுக்காக 17 படுக்கைகள் கொண்ட தொழுநோய் சிகிச்சைக் கூடமும் 'சி' பிரிவு கட்டிடமும் கட்டுதல்.

10. சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் நரம்பியல் அறுவைச் சிகிச்சைப் பிரிவு கட்டுதல்.

1973–74-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பெரும்பணிகளைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது:—

1. சென்னை, அரசு பொது மருத்துவமனையில் சிறுநீரகவியல் பாடமுறை (Nephrology) தொடங்க வசதியளித்தல்.

2. சென்னை, கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனையில் மருத்துவப் பிரிவுக் கட்டிடத்தின் இரண்டாவது மாடிக்கு மேல், அறுவைச் சிகிச்சைக் கூடம் கட்டுதல்.

3. மகப்பேறு பெண் நோயியல் மருத்துவ நிலையத்திலும், சென்னை, மகளிர் — குழந்தை நல மருத்துவமனையிலும் டி. சி. மின்சக்தியில் இயங்கும் லிப்ட்டுக்குப் (தூக்கி) பதிலாக ஏ. சி. மின்சக்தியில் இயங்கும் தூக்கி நிறுவுதல்.

4. குழந்தைகள் நல்வாழ்வு மருத்துவ நிலையத்திலும், சென்னை, மகளிர் — குழந்தை நல மருத்துவ மனையிலும் தொற்றுநோய் நீக்கும் மத்திய அறை கட்டுதல்.

5. சென்னை, அரசு மனநோய் மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட கடும் நோய்ப் (Acute) பிரிவு கட்டுதல்.

6. சென்னை, அரசு இராயப்பேட்டை மருத்துவமனையில் தீவிர நோய்ச் சிகிச்சைப் பிரிவு ஒன்று கட்டுதல்.

எழும்பூர், அரசு கண்நோய்ச் சிகிச்சை மருத்துவமனைக்கும், மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் உள்ள நரம்பியல் அறுவைச் சிகிச்சைத் துறைக்கும் தேவைப்படும் நவீன கருவிகளை வாங்க ஒப்பளிப்பு வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

தென் மதுரைப் பகுதியிலுள்ள மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு அப்பகுதியில் பொது நல மருத்துவமனை ஒன்றைக் கட்டுவதற்காக திருவாளர்கள் டி.வி.எஸ். அற நிறுவனத்தினர் ரூ. 5 லட்சம் நன்கொடை வழங்க முன்வந்துள்ளனர். தென் மதுரைப் பகுதியில் பொது மருத்துவமனை ஒன்று கட்டுவதற்காக மதுரை மாநகராட்சி தென் மதுரைப் பகுதியில் தனக்குச் சொந்தமாகவுள்ள சுமார் 3 ஏக்கர் நிலத்தை நன்கொடையாக அளித்துள்ளது. இவ்விரு நன்கொடைகளையும் ஏற்றுக் கொண்டு, தென் மதுரைப் பகுதி மக்களின் தேவைகளை நிறைவு செய்யும் பொருட்டு பொது நல மருத்துவமனை ஒன்றைத் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இது பெரும் பணியாக இருப்பதால், இது, மூன்று முதல் நான்காண்டுக் காலத்தில் படிப்படியாகச் செயல்படுத்தப்படும்.

மதுரை, அரசு எர்ஸ்கின் மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்று கட்டுவதற்காக இந்தியச் செஞ்சிலுவைச் சங்கத்தின் மதுரைக்கிளை அலுவலகம் ரூ.1·50 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளது. குழந்தைகள் சிகிச்சைப் பிரிவுக்கு ரூ. 10 லட்சத்திற்கான திட்டங்களும் மதிப்பீடுகளும் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மேற்குறிப்பிட்ட நன்கொடைத் தொகைக்கு மேலாகத் தேவைப்படும் தொகை அரசின் நிதியிலிருந்து வழங்கப்படும்.

இது போலவே, தஞ்சாவூர், அரசு ராஜா மிராசுதார் மருத்துவமனையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு ஒன்றைக் கட்டுவதற்காகத் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவர், ஜவஹர்லால் நேரு நினைவு நிதியிலிருந்து ரூ. 2 லட்சம் நன்கொடை வழங்கியுள்ளார். ரூ. 5 லட்சம் செலவிலான இப்பணிக்குத் திட்டங்களும் மதிப்பீடுகளும் வகுக்கப்பட்டுள்ளன. அரசு இந்த நன்கொடையை ஏற்றுக் கொண்டு, எஞ்சிய செலவை அரசு நிதியிலிருந்து சரிக்கட்டுவதன் மூலம் 1972–73-ல் இப்பணியைச் செயல்படுத்த ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

புதிய பயிற்சித் திட்டங்கள்

1972-73-ஆம் ஆண்டில் கீழ்க்காணும் பட்ட மேற்படிப்புத் தகுதிப் பட்டயப் பாடமுறைகளும், பட்டப் படிப்புப் பாடமுறைகளும் தொடங்கப்பட்டுள்ளன :—

1. சென்னை, மதுரை மருத்துவக் கல்லூரிகளில் மனவியல் மருந்துகள் பட்டயப் படிப்பு (Diploma in Psychological Medicines in Madras and Madurai Medical Colleges).

2. சென்னை மருத்துவக் கல்லூரியில் பல் மருத்துவத்தில் பட்ட மேற்படிப்பு. M.D.S. (Operative Surgery) in Madras Medical College.

3. மதுரை மருத்துவக் கல்லூரியில் சட்டம் சார்ந்த மருந்தியலில் பட்ட மேற்படிப்பு. M. D. (Forensic Medicine) in Madurai Medical College.

4. மதுரை மருத்துவக் கல்லூரியில் (முட நீக்கியியல் அறுவைச் சிகிச்சை) பட்ட மேற்படிப்பு (1973 ஏப்ரல் முதல் தொடங்கப்படும்.) M. S. (Orthopaedic Surgery) in Madurai Medical College (from April 1973).

சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரியிலும், அதனுடன் இணைந்த மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் தரம் உயர்த்தப்பட்ட கீழ்க்காணும் துறைகள் செயல்பட்டுவருகின்றன:-

1. மகப்பேறு-மகளிர் நோயியல் துறை (Institute of Obstetrics and Gynaecology).
2. மேகநோயியல் துறை (Institute of Venereology).
3. உடல் இயல் கூறு துறை (Institute of Anatomy).
4. ரேடியம் கதிர்வீச்சுத் துறை (Institute of Radiology).
5. சிசு நல்வாழ்வுத் துறை (Institute of Child Health).
6. நுண்ணுயிரியல் துறை (Institute of Microbiology).
7. உடல் இயங்கு கூறு துறை (Institute of Physiology).
8. காது-மூக்கு-தொண்டை இயல் நிறுவனம் (Institute of Oto–Rhino–Laryngology).

1 முதல் 3 இனங்களில் குறிப்பிட்டுள்ள துறைகள் முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின்போது தரம் உயர்த்தப்பட்டன. 4, 5-வது இனங்களில் குறிப்பிட்டுள்ள துறைகள் இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில் தரம் உயர்த்தப்பட்டன. நான்காம் ஐந்தாண்டுத் திட்டக்காலத்தில், பட்ட மேற்படிப்பு மருத்துவக் கல்வி வளர்ச்சித் திட்டத்தின்கீழ், 6, 7-வது இனங்களில் குறிப்பிட்டுள்ள துறைகள் 1970–71-ஆம் ஆண்டிலும், 8-வது இனத்தில் குறிப்பிட்டுள்ள துறை 1971–72-லும் தரம் உயர்த்தப்பட்டன.

மருத்துவத் துறை அடிப்படை அறிவியல் பட்ட மேற்படிப்பு நிலையம்.

அடிப்படை மருத்துவ அறிவியலில் பட்ட மேற்படிப்பு நிலையம் ஒன்றை சென்னையில் ஏற்படுத்த சென்னைப் பல்கலைக் கழகம் 1965-ல் திட்டமிட்டது. இத்திட்டத்திற்காகும் தொடரா இனச் செலவில் சுமார் மூன்றில் இரண்டு பங்கினையும்,

1973 மார்ச் 23]

தொடர் செலவில் பாதிப் பங்கினையும் ஏற்றுக் கொள்ள பல்கலைக் கழக மானியக் குழு உறுதியளித்துள்ளது. இத்திட்டத்திற்காகும் எஞ்சிய செலவைப் பல்கலைக் கழகம் ஏற்க வேண்டும். எஞ்சியிருக்கும் தொடரா இனச் செலவு முழுவதையும் நான்காண்டுக் காலத்தில் சரிக்கட்டுமாறு அரசினைப் பல்கலைக் கழகம் கேட்டுக் கொண்டது. மேலும், பல்கலைக் கழகம் தமக்குத் தற்போது ஆண்டுதோறும் கொடுக்கப்பட்டு வரும் ரூ. 19 லட்சம் தொடர் மானியத்தை, இத்திட்டத்திற்காகும் தொடர் இனச் செலவைச் சரிக்கட்டும் பொருட்டு ரூ. 20 லட்சமாக உயர்த்துமாறும் அரசைக் கேட்டுக் கொண்டது. பல்கலைக் கழகத்தின் செயற்குறிப்புகளை அரசு கவனமாகப் பரிசிலித்தது; கூடுதலாக ஆண்டுதோறும் கொடுக்கப்படும் ரூ. 1 லட்சம் தொடர் மானியம் தனிப்பட்ட மானியமாகக் கொடுக்கப்படலாம் என்ற மாற்றத்திற்குட்பட்டு அச்செயற்குறிப்புகளை அரசு ஏற்றுக் கொள்ள முடிவு செய்தது.

அவ்வாறே, 1965–66-ஆம் ஆண்டு முதல் நான்காண்டுக் கால அளவிற்கு ரூ. 12·50 லட்சத்திற்கு (ரூபாய் பன்னிரண்டு லட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) மேற்படாத தொடரா இன மானியத் தொகையைச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கவும், 1965–66-ல் இது குறித்து ரூ. 3,12,500-க்கு (ரூபாய் மூன்று லட்சத்து பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு மட்டும்) மேற்படாமல் செலவு செய்யவும் அரசு ஒப்பளிப்பு வழங்கியது. மேற்சொன்ன காரியத்திற்காக 1965–66 முதல் ஆண்டொன்றுக்கு ரூ. 1 லட்சம் (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) தொடர் இன மானியத்தைச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குக் கொடுக்கவும் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஆராய்ச்சி

இந்திய மருத்துவ ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவிலும், பி. எல். 480 திட்டத்தின்கீழ்க் கிடைக்கும் நிதியைக் கொண்டும் இம் மாநிலத்திலுள்ள மருத்துவக் கல்லூரிகளில் முப்பதுக்கு மேற்பட்ட திட்டங்கள், ஆராய்ச்சிப் பணிக்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன. சுமார் 10 திட்டங்கள் குறித்து ஆராய்ச்சிப் பணி முடிவடைந்துள்ளது. எஞ்சியிருக்கும் திட்டங்கள் குறித்து ஆராய்ச்சிப் பணி நடந்தேறி வருகிறது. சில திட்டங்கள் குறித்து மேற்கொண்ட ஆராய்ச்சிப் பணியின் முடிவுகள் இந்திய மருத்துவச் சங்கப் பத்திரிகையில் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகளுடன் இணைந்துள்ள ஆராய்ச்சிப் பணியாளர்கள், தமிழ்நாடு மாநில ஆராய்ச்சிக் குழுவின் ஆதரவில் பல்வேறு பொருள்கள் குறித்து சுமார் 75 ஆராய்ச்சித் திட்டங்களை மேற்கொண்டுள்ளனர்.

பள்ளிக் குழந்தைகளுக்குப் பொதுவாக மருத்துவச் சோதனை செய்தல்

சென்னை மாநகரிலுள்ள பள்ளிகளில் 1-ம் வகுப்பிலும், ஆரும் வகுப்பிலும் படிக்கும் குழந்தைகளுக்குப் பொதுவான மருத்துவச் சோதனை செய்யும் திட்டத்திற்கு அரசு, 1972-ஆம் ஆண்டில் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்தும் பொருட்டு, ஒவ்வொரு மருத்துவமனைக்கும் ஒரு குழுவாக, மாநகரிலுள்ள கீழ்க்காணும் ஆறு மருத்துவமனைகளில் பள்ளிக் குழந்தைகள் உடல்நலக் குழுக்கள் ஆறு அமைக்கப்பட்டுள்ளன :—

1. அரசுப் பொது மருத்துவமனை, சென்னை.
2. அரசு ஸ்டான்லி மருத்துவமனை, சென்னை.
3. அரசு கஸ்தூரிபாய் காந்தி மருத்துவமனை, சென்னை.
4. அரசு கிழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரி-மருத்துவமனை, சென்னை.
5. அரசு சிசு நல நிலையம் & குழந்தை மருத்துவமனை, சென்னை.
6. அரசு இராயப்பேட்டை மருத்துவமனை, சென்னை.

சென்னை, அரசுப் பொது மருத்துவமனையில் இருந்து பணிபுரிய ஒப்பளிப்பு வழங்கப்பட்ட குழு, சென்னை, சிசு நல நிலையம்—குழந்தை மருத்துவ மனைக்கு மாற்றப்படும். இதனால் இங்கு இரு குழுக்கள் இருக்கும். ஆறு குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழ்க்காணும் கூடுதல் பணியாளரை நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

சிசுநோயியல் உதவிப் பேராசிரியர்:
தலைமைச் செவிலியர்.
சமூகப் பணியாளர்.
ஆய்வுக்கூட வல்லுநர்—நிலை II.
பணியாளர்.

மாநகர மருத்துவமனைகளில் பள்ளிக்குழந்தைகள் உடல் நலக் குழுக்களுக்காக மேற்கண்ட பணியாளர்கள் நியமிக்கப்படுவதுடன், மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில், சிவில் அறுவை உயர் மருத்துவர் ஒருவர் பதவித்தரத்திலான மருத்துவக்கல்வி உதவி இயக்குநர் பதவி ஒன்றைக் கூடுதலாகவும், சுருக்கெழுத்துத்தட்டச்சர் பதவி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த இயக்குநர் அலுவலகத்திலுள்ள மருத்துவக்கல்வி உதவி இயக்குநர் (பள்ளிக் குழந்தைகள் உடல் நல அதிகாரி) இத் திட்டத்திற்கு முழுப்பொறுப்பு வகிப்பார். 1972-73-ல் இதற் காகும் செலவினை ஈடுசெய்ய எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து முன்பணம் ரூ. 3,02,000 கொடுக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

இத் திட்டத்தின்கீழ், மாநகர மருத்துவ மனைகளில் பணி புரியும் 2 அல்லது 3 மருத்துவ அதிகாரிகள், மாநகரில் இருக்கும் தொடக்கப் பள்ளிகள், நடுத்தரப் பள்ளிகள், உயர்நிலைப் பள்ளிகளின் குறிப்பிடப்பட்ட வகுப்பில் பயிலும் குழந்தைகளுக்கு, ஒரு வாரத்தில் 5 நாட்களுக்குப் பிற்பகல் 2-30 மணி முதல் மாலை 4 மணி வரை பொதுவாக உடல் நலச் சோதனை செய்யப் பகுதிநேரப் பணியாற்ற அனுப்பப்படுவர். இப் பகுதிநேரப் பணிக்கு, மாநகராட்சி மருந்தகங்களைச் சேர்ந்த 40 மருத்துவர்களின் பணியைப் பயன்படுத்திக் கொள்ளவும் திட்டமிடப்பட்டுள்ளது. பகுதிநேர மருத்துவ அதிகாரிகள், பள்ளிக் குழந்தைகளுக்கு உடல் நலச் சோதனை செய்வர். சிறப்பு மருத்துவரின் ஆலோசனை தேவைப்படும் குழந்தைகளுக்கு அத்தகைய ஆய்வுரை கிடைக்கவும், சிகிச்சை அளிப்பது அவசியமெனில் சிகிச்சை அளிப்பதற்கும் அந்தக் குழந்தைகளை மருத்துவமனையில் இதற்கென நியமிக்கப்பட்டுள்ள வல்லுநரிடம் அனுப்பி வைப்பர்.

வேலைவாய்ப்பு வசதிகளைப் பெருக்குதலும் பணி நிபந்தனைகளை மேம்படுத்துதலும்.

கல்லூரிகளிலிருந்து தேர்ச்சி பெற்று வரும் மருத்துவப் பட்டதாரிகளுக்கும் ஏனையோருக்கும் அதிக வேலைவாய்ப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது பற்றி அரசு மிகுந்த நாட்டம் செலுத்தி வந்துள்ளது. ஆண்டுதோறும் சுமார் 500 பேர் மருத்துவக் கல்லூரிகளிலிருந்து பட்டம் பெற்று வெளி வருகின்றனர். இவர்கள் அனைவரையும் பொதுத்துறையில் அரசு ஈடுத்துக் கொள்வது கடினமான காரியமாகும். ஆண்டுதோறும், அறுவை உதவி மருத்துவர், செவிலியர், மருத்துவம் சார்ந்த ரனைய பணியாளர் பதவிகளைக் கூடுதலாக ஏற்படுத்தி, அதன் மூலம் இயன்றவரை இவர்கள் அனைவருக்கும் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திக் அரசு தொடர்ந்து முயற்சி செய்து வருகிறது.

1972-73-ஆம் ஆண்டில் 280 உதவி மருத்துவர் பதவிகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. 1973-74-ஆம் ஆண்டில், 122 உதவி மருத்துவர் பதவிகள், 73 செவிலியர் பதவிகள், விடுப்பில் செல்லும் அவர்களுக்குப் பதிலாக நியமிப்பதற்காக 27 மருந்தாளுநர்க்க இயல் வல்லுநர் பதவிகள், 10 பல் உதவி மருத்துவர் பதவிகள், மருத்துவக் கல்லூரி இணைந்திராத மருத்துவமனைகளுக்காக 10 பல் சிகிச்சை நிலையங்கள் ஆகியவற்றுக்கு ஒப்பளிப்பு வழங்கப்படும்.

இம் மாநிலத்தில் சுழல் முறையில் கட்டாயப் பயிற்சிப் பணியாற்றிவரும் மனையிட மருத்துவர்கள், பல் சிகிச்சை மனையிட மருத்துவர்கள் அனைவரது ஊதியத்தையும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 175-லிருந்து ரூ. 200 ஆக அரசு 1972-ஆம் ஆண்டில் உயர்த்தியுள்ளது. மருத்துவமனையிலேயே தங்கியிருக்கும் மருத்துவர்களுக்குக் கொடுக்கப்படும் ஊதியமும் திங்கள் ஒன்றுக்கு ரூ. 175-லிருந்து ரூ. 200 ஆக உயர்த்தப்பட்டது. புதிய மருத்துவக்

கல்லூரிகளில் தங்கியிருக்கும் மருத்துவர்கள் பதவிகளுக்கும் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. சென்னையிலுள்ள சென்னை மருத்துவக் கல்லூரி பல் சிகிச்சைப் பிரிவில் பல் சிகிச்சை மனையிட மருத்துவர் பதவிகள் 18 ஏற்படுத்த மருத்துவக் கல்வி இயக்குநருக்கு அதிகாரம் கொடுக்கப்பட்டுள்ளது.

நிலையாக வைத்துக்கொள்ளுதல்.—குடும்ப நலத் திட்டத் துறையில் கீழ்க்காணும் பதவிகளை நிலையாக வைத்துக் கொள்ள அரசு 1972 டிசம்பர் திங்களில் ஒப்பளிப்பு வழங்கியது :—

நல்வாழ்வுப் பணிகள் & குடும்ப நலத் திட்டத் துணை இயக்குநர் (குடும்ப நலத் திட்டம்).	ஒன்று.
நல்வாழ்வுப் பணிகள் & குடும்ப நலத் திட்ட உதவி இயக்குநர் (குடும்ப நலத் திட்டம்).	ஒன்று.
நிர்வாக அதிகாரி (குடும்ப நலத்துறை) ..	ஒன்று.
புள்ளி விவர அதிகாரி	ஒன்று.
முதுநிலைக் கணக்கர்	ஒன்று.
மாவட்ட குடும்பநல மகப்பேறு-சிசு நல அதிகாரி	..பதின்மூன்று.
தகவல் அதிகாரிகள்	..பதின்மூன்று.
உதவி அறுவை மருத்துவர்	.. நூற்று ஐம்பத் தொன்று.

இத் துறையில் உள்ள பதவிகளை நிலையுடையதாக அமைப்பதால் பணியாளர்களுக்குத் தாங்கள் நிலையான பணியாளர் என்ற எண்ணம் ஏற்படும். வரும் ஆண்டுகளில் படிப்படியாக இப்பதவிகளின் எண்ணிக்கை உயர்த்தப்படும்.

தேர்வுத்தரப் பதவிகள் ஏற்படுத்துதல்.—குடும்பநலத் திட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்ட லட்டார வளர்ச்சிக் கல்வி அதிகாரி பதவி, உடல் நலத்துறை ஆய்வாளர்களுக்கு (Health Inspectors) தேர்வுத்தரப் பதவியாகும். உடல்நல ஆய்வாளர்களைத் தவிர சமூக நலத் துறையின் வளர்ச்சி அதிகாரிகளும் (கல்வி) (Extension Officers Education of the C. D. Department) இப்பதவியில் நியமிக்கப்படுகின்றனர். இதனால் அவர்களுக்குப் பதவி உயர்வு பெறும் புதிய வாய்ப்பு ஏற்படுகிறது.

இதைப்போலவே, குடும்பநலத் திட்டத்தின்கீழ் அனுமதி வழங்கப்பட்ட கணக்கிடுபவர் (Computors) பதவிகளின் மொத்த எண்ணிக்கையில் நூற்றுக்கு இருபத்தைந்து பங்கு, உதவியாளர்களாகப் பதவி உயர்வு பெறுவதற்குத் தகுதி பெற்ற

இளநிலை உதவியாளர்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. பயிற்சி பெற்ற செவிலியர்களிடையே உள்ள வேலைவாய்ப்பின்மையைக் குறைக்கவும், அவர்களின் பணியை குடும்ப நலத் திட்டத்திற்குப் பயன்படுத்திக் கொள்ளவும், பயிற்சி பெற்ற செவிலியர்களை, ஆரம்பச் சுகாதார நிலையங்களில் (Health Visitor) (உடல் நலக் கண்காணிப்பாளர்) உடல் நல பார்வையாளராக (மகளிர்) நியமிக்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இவர்களுக்கு அதிகப் படியான அடிப்படை ஊதியம் வழங்கப்படுகிறது.

மாவட்ட விளம்பரப் பிரிவுகள் மூடப்பட்டதைத் தொடர்ந்து, அப்பிரிவில் ஆட்குறைப்புச் செய்யப்பட்ட பணியாளர்களில் சிலர் குடும்ப நலத் துறையில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளனர். அவர்கள் விளம்பரப் பிரிவில் ஆட்குறைப்பு செய்யப்பட்டதிலிருந்து மீண்டும் குடும்ப நலத்துறையில் சேர்த்துக் கொள்ளப் பட்டது வரையில் அவர்களது பணியில் இடை முறிவு ஏற்பட்டது. அவர்களது பணி இடைவிடாத ஒன்றாக இருப்பதற்காக அரசு அண்மையில் அவர்களது பணி இடை முறிவைக் கணக்கில் எடுத்துக் கொள்ளாமல் இருக்க விலக்கு அளித்துள்ளது.

ஏனைய சிறப்புச் சலுகைகள்.—இதுகாறும், ஆண்களுக்கான அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் அரசுப் பணியாளர் ஒருவருக்கு, 6 நாட்கள் சிறப்புத் தற்செயல் விடுப்பு மட்டும்தான் அளிக்கப்பட்டது. தற்பொழுது அது 8 நாட்களாக உயர்த்தப் பட்டுள்ளது. முன்னர், கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொள்ளும் பெண் அரசுப் பணியாளர் ஒருவருக்கு 14 நாட்கள் சிறப்புத் தற்செயல் விடுப்பு மட்டும்தான் வழங்கப்பட்டது. அது, தற்போது 20 நாட்களாக உயர்த்தப்பட்டுள்ளது.

மருந்தாக்குநர்களுக்கு பதவி உயர்வு பெறும் வாய்ப்பை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், மருந்தாக்குநர் பதவிகளில் 10 சதவீதத்தை தலைமை மருந்தாக்குநர் பதவிகளாக உயர்த்தப்பட வேண்டும் என்று ஒரு நபர் குழு பரிவுரைத்தது. இப்பரிவுரையை அரசு பரிசீலித்து வருகிறது.

அரசு, அண்மையில், மருந்தாக்குநர், தலைமை மருந்தாக்குநர், மருத்துவப் பண்டகசாலைக் காப்பாளர் ஆகியோரது ஊதிய விகிதத்தில் இருந்த குறையை நீக்கி திருத்தி அமைத்துள்ளது. அவையாவன :—

பதவி.	இருந்த ஊதிய வீதம்.	திருத்தப்பட்ட ஊதிய வீதம்.
	ரூ.	ரூ.
1 மருந்தாக்குநர்	210—5—245—10—325	225—5—250—10—350
2 தலைமை மருந்தாக்குநர்	275—10—375—15—450	300—10—350 15—500
3 மருத்துவப் பண்டக சாலை காப்பாளர்.	325—15—550—15—600	350—15—500—20—600—25—650

[1973 மார்ச் 23

பி. பார்மசி பட்டதாரிகளுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கத்துடன், சென்னை அரசினர் பொது மருத்துவமனையில் ஒன்றும், மதுரை அரசினர் எர்ஸ்கின் மருத்துவமனையில் ஒன்றும் ஆக மருத்துவமனை மருந்தாக்கியில் பிரிவுகளைத் (Hospital Pharmacy) துவக்கும் செயற் குறிப்பு அரசின் திவிர பரிசிலனையில் உள்ளது.

இந்தத் துறைப் பட்டதாரிகள் அனைவருக்கும் தகுந்த பயிற்சி குறிப்பிட்ட கால அளவுக்குக் கிடைத்தால்தான், உரிய வேலைகள் கிடைக்கும் என்பதால்—அதற்கான பயிற்சி வாய்ப்புக்களையும் வசதிகளையும் பெருக்கவும் தனிப்பட்ட மருந்து உற்பத்தி நிறுவனங்களுடன் தொடர்பு கொண்டு உள்ளது.

கிங் நிறுவனம், கிண்டி

1899-ம் ஆண்டில் தொடங்கப்பட்ட கிண்டியில் உள்ள, நோய்த்தடுப்பு மருந்து உற்பத்தி கிங்நிறுவனம் பொதுச் சுகாதார மருந்துகள் உற்பத்தி பயிற்சி, ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ள பெரியதொரு நிலையமாக வளர்ந்துள்ளது.

தற்பொழுது, இந்த நிறுவனத்தில், 120 இலட்சம் யூனிட் (Unit) உறைய வைக்கப்பட்ட உலர்ந்த அம்மைத் தடுப்பு, ஊசி மருந்து உற்பத்தி செய்யப்பட்டு இம்மாநிலத்தின் நல்வாழ்வுத்துறை பணிகட்கும் சென்னை மாநகராட்சிக்கும் வழங்கப்படுகின்றது. உறையவைக்கப்பட்ட உலர் அம்மை நோய்த் தடுப்பு ஊசி மருந்து உற்பத்திக்கு யூனிசெஃப் (UNICEF), அனைத்து நாடுகள் சுகாதார நிறுவனம் ஆகியவற்றின் உதவி பெறப்படுகிறது.

இத் திட்டத்தின்கீழ், அந்த நிறுவனங்கள் தேவையான கருவிகளை வழங்குகின்றன. தொடர் செலவை மாநில அரசு ஏற்றுக் கொள்கிறது. இம்மருந்து உற்பத்தியில் நாடு தன்னிறைவு பெறக் கூடிய வகையில், கிங் நிறுவனம் இம்மருந்து தயாரிக்கும் நிறுவனங்களில் ஒன்றாகத் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. 170 இலட்சம் யூனிட் ஊசி மருந்து தயாரிப்பதற்குத் தேவையான இயந்திரங்கள் இந்த நிறுவனத்தில் உள்ளன. இந்த நிறுவனத்திற்கு மேலும் கருவிகள் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிறுவனத்திற்கு 300 இலட்சம் ஊசி மருந்து உற்பத்தி திட்ட இலக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்த இலக்கை எய்துவதற்காக இந்திய அரசிடமிருந்து ரூ. 12 இலட்சம் கடன் உதவி கேட்கப்பட்டுள்ளது. இதில், 1971–72-ல் ரூ. 3·18 லட்சமே வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகையையும் பெறுவது பற்றிய இந்திய அரசுடன் கடிதப் போக்குவரத்து நடைபெற்று வருகிறது. ஊசி மருந்து உற்பத்திக்கான கூடுதல் பணியாளர்கள், அதற்குத் தேவைப்படும் கூடுதல் கட்டிடங்கள் ஆகியவற்றிற்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

1973 மார்ச் 23]

மருத்துவப் பணிகள்

நலக்காப்புப் பணி.—குடும்ப நலத்துறை இயக்குநரின் நிர்வாகத்தின்கீழ், தற்பொழுது 803 மருத்துவமனைகளும்-நிலையங்களும் உள்ளன. இவற்றில் உள்ள படுக்கைகளின் கூடுதல் எண்ணிக்கை 14,200 ஆகும். அவற்றின் வகைகள் வருமாறு :—

1	மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ..	13
2	வட்டத் தலைமையிட மருத்துவமனைகள் ..	86
3	ஏனைய மருத்துவமனைகள்	106
4	மருந்தகங்கள்	109
5	தொழிலாளர் காப்புறுதி மருத்துவமனைகள் ..	3
6	தொழிலாளர் காப்புறுதி மருந்தகங்கள் ..	107
7	ஆரம்பச் சுகாதார நிலையங்கள்	379
	மொத்தம் ..	803

இந்த மருத்துவ நிறுவனங்கள் அளிக்கும் பொது மருத்துவ வசதிகளைத் தவிர தொழுநோய், காசநோய் ஆகியவற்றைக் கட்டுப்படுத்துவதற்கான சிறப்புத் திட்டங்களும் உள்ளன.

1971–72-ல் தேனியில் 38 படுக்கைகளுடனும், தாம்பரத்தில் 100 படுக்கைகளுடனும், பாகனேரியில் 10 படுக்கைகளுடனும் புதிய மருத்துவமனைகள் திறக்கப்பட்டன. கீழ்க்கண்ட மருந்தகங்களுக்கு கூடுதல் கட்டிடங்கள் கட்டிக் கொடுத்தும், தங்கிச் சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் செய்து கொடுத்தும், மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

		படுக்கைகள்.
1	ஜெயங்கொண்ட சோழபுரம் (திருச்சி) ..	40
2	திருப்பத்தூர் (முகவை மாவட்டம்) ..	38
3	தேவகோட்டை (முகவை மாவட்டம்) ..	50

தஞ்சாவூர் மாவட்டம், திருவாரூர், கோயம்புத்தூர் மாவட்டம், பவானி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்துவமனைகளுக்குப் புதிய கட்டிடங்கள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. இன்னவும் மருத்துவமனைகளில், கூடுதல் கூடங்கள் கட்டப்பட்டுள்ளன :—

1 மாவட்டத் தலைமையிட அரசினர் மருத்துவமனை, நாகப்பட்டினம்.	8 படுக்கைகள் கொண்ட சிறுவர் பகுதி.
2 மாவட்டத் தலைமையிட அரசினர் மருத்துவமனை, உதகமண்டலம்.	30 படுக்கைகள் கொண்ட மகப்பேறு கூடம்.

[1973 மார்ச் 23

3 அரசினர் மருத்துவமனை, திண்டிவனம்.	32 படுக்கைகள் கொண்ட கூடம்.
4 அரசினர் மருத்துவமனை, பட்டுக்கோட்டை.	32 படுக்கைகள் கொண்ட கூடம்.
5 அரசினர் மருத்துவமனை, மதுராந்தகம்.	24 படுக்கைகள் கொண்ட கூடம்.
6 அரசினர் மருத்துவமனை, பொன்னேரி.	8 படுக்கைகள் கொண்ட மகப்பேறு பகுதி.
7 அரசினர் மருத்துவமனை, மேட்டுப்பாளையம்.	10 படுக்கைகள் கொண்ட கூடம்.
8 அரசினர் மருத்துவமனை, வளவனூர்.	10 படுக்கைகள் கொண்ட மகப்பேறு கூடம்.
9 அரசினர் மருத்துவமனை, பூதப்பாண்டி.	15 படுக்கைகள் கொண்ட கூடம்.
10 அரசினர் மருத்துவமனை, கடையநல்லூர்.	46 படுக்கைகள் கொண்ட கூடம்.
11 அரசினர் மருத்துவமனை, ஆம்பூர்.	48 படுக்கைகள் கொண்ட கூடம்.
12 அரசினர் மருத்துவமனை, இலுப்பூர்.	16 படுக்கைகள் கொண்ட மகப்பேறு கூடம்.

1971–72 ஆம் ஆண்டில், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த பழவன்குடியில் 4 படுக்கைகளுடன் மகப்பேறு மருத்துவமனை ஒன்று கட்டப்பட்டது. கீழ்க்கண்ட மருந்தகங்களில் கூடுதல் கட்டிடங்கள், அகப் பணியாளர்கள் கூடம் ஆகியவை கட்டப்பட்டதைத் தொடர்ந்து அவை மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டன :—

	இருந்த படுக்கைகள்.	இன்றுள்ள படுக்கைகள்.
1 பேராவூரணி (தஞ்சை மாவட்டம்).	3	35
2 பஞ்சப்பட்டி (திருச்சி மாவட்டம்).	இல்லை.	10
3 புதுமடம் (முகவை மாவட்டம்).	இல்லை.	10

கூடுதலான பிணியாளர்கள் தங்கிச் சிகிச்சை பெறத்தக்க வகையில், பின்வரும் அரசினர் மருத்துவமனைகளில் புதிய கூடங்கள் கட்டப்பட்டன:—

1 அரசினர் மருத்துவமனை, மன்னார்குடி ..	32 படுக்கை உள்ள கூடம்.
2 அரசினர் மருத்துவமனை, ஈரோடு ..	80 ஷை

1973 மார்ச் 23]

3 அரசினர் மருத்துவமனை, கள்ளக்குறிச்சி ..	8 படுக்கை உள்ள கூடம்.
4 அரசினர் மருத்துவமனை, நாமக்கல் ..	38 ஷை
5 அரசினர் மருத்துவமனை, பழனி	10 படுக்கை யுள்ளதொற்று நோய் பிரிவு.
6 அரசினர் மருத்துவமனை, வத்திராயிருப்பு ..	8 படுக்கை யுள்ள கூடம்.
7 அரசினர் மருத்துவமனை, கரம்பக்குடி ..	5 படுக்கை யுள்ள மகப் பேறு பிரிவு.

1972-ஆம் ஆண்டில் அரசினால் ஒப்பளிக்கப்பட்ட பின்வரும் புதிய திட்டங்களை நிறைவேற்றும்:—

1. தென்காசி, அரசினர் மருத்துவமனையில் 32 படுக்கை கொண்ட ஒரு கூடம்.

2. கும்பகோணம், அரசினர் மருத்துவமனையில் 32 படுக்கை கொண்ட ஒரு கூடம்.

3. ஆத்தூர், அரசினர் மருத்துவமனையில் வெளி நோயாளி கட்கான பிரிவு ஒன்று.

4. சிதம்பரத்தில் புதிய இடத்தில் வட்ட அரசினர் மருத்துவமனை ஒன்று.

5. செங்கம் (வ.ஆ. மாவட்டம்) 36 படுக்கையுள்ள கூடத் துடன் வட்ட அரசினர் மருத்துவமனை ஒன்று. (அரசினர் மருத்துவமனையில் 36 படுக்கைகள் கொண்ட புதிய கூடம் ஒன்று கட்டுதல்.)

6. மேட்டூர் அணை, அரசினர் மருத்துவ மனையில் 30 படுக்கையுள்ள மகப் பேறு பகுதி.

7. தாளிப்பாடியில் (வட ஆர்க்காடு மாவட்டம்) 16 படுக்கையுள்ள புதிய மருத்துவமனை.

8. திட்டக்குடி (தென் ஆர்க்காடு மாவட்டம்), அரசினர் மருத்துவமனையில் 20 படுக்கையுள்ள மகப்பேறு அறுவைச் சிகிச்சைக் கூடம் ஒன்று.

9. கலவையில் (வட ஆர்க்காடு மாவட்டம்) 10 படுக்கையுள்ள புதிய மருத்துவமனை.

10. பேராவூரணி, அரசினர் மருத்துவமனையில், வெளி நோயாளிகள் பிரிவு, மகப்பேறு அறுவைச் சிகிச்சைக் கூடம், தொற்று நோய் பிரிவு ஆகியவை.

11. உஞ்சனை பேட்டை, அரசினர் மருத்துவமனையில் வெளி நோயாளிகள் பிரிவு ஒன்று, 24 படுக்கையுள்ள மகப்பேறு அறுவைச் சிகிச்சைக் கூடம் ஆகியவை.

[1973 மார்ச் 23

1973–74-ஆம் ஆண்டில் பின்வரும் மேம்பாடுகளைச் செய்யவும் கருதப்பட்டுள்ளது.

1. கரூர் (திருச்சி மாவட்டம்), அரசினர் மருத்துவமனையில் 24 படுக்கையுள்ள கூடம்.

2. இராமேசுவரம் (இராமநாதபுரம் மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையில் 8 படுக்கையுள்ள கூடம்.

3. வாணியம்பாடி (வட ஆர்க்காடு மாவட்டம்) அரசினர் மகளிர்—குழந்தை மருத்துவ மனையைப் பொது மருத்துவ மனையாக மாற்றுவதுடன் ஆண்களுக்கு 24 படுக்கையுள்ள ஒரு கூடம்.

4. பொள்ளாச்சி (கோவை மாவட்டம்) அரசினர் மருத்துவ மனையில், 48 படுக்கையுள்ள கூடங்கள், வெளிநோயாளிகள் பிரிவு, மகப்பேறு அறுவைச் சிகிச்சைக் கூடம், சமையற் கூடம், சவக் கிடங்கு (அறை) ஆகியவை.

வெளியூர் மருத்துவமனைகளில், சிறப்புத் துறைகள் அமைத்துக் கொடுப்பது தொடர்பான வல்லுநர்கள் குழுவின் பரிவுரைகளுக் கிணங்க மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளில் பின்வரும் சிறப்பு வசதிகள் செய்து கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது :—

1. தருமபுரியில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையில் சிசு நோய் மருத்துவத் துறைகளை ஏற்படுத்தல்.

2. செங்கை மாவட்டம் காஞ்சிபுரத்தில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையிலும், நெல்லை மாவட்டத்தில் தூத்துக்குடியில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையிலும், கண் நோய்ச் சிகிச்சைத்துறையினை ஏற்படுத்தல்.

3. தஞ்சை மாவட்டம் நாகப்பட்டினத்தில் மாவட்டத் தலைமையிட மருத்துவமனையிலும், சேலத்தில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனையிலும் காது, மூக்கு, தொண்டை சிகிச்சைத் துறையினை ஏற்படுத்தல்.

4. வட ஆர்க்காடு மாவட்டத்தில் வேலூரிலும், மதுரை மாவட்டத்தில் திண்டுக்கல்லிலும் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவமனைகளில் முடவியல் மருத்துவத் துறையினை ஏற்படுத்தல்.

5. தாம்பரம், உடுமலைப்பேட்டை, பட்டுக்கோட்டை, திண்டிவனம், நாமக்கல், திருவாரூர், ஆம்பூர், கடையநல்லூர், கூடலூர்,

1973 மார்ச் 23]

திருவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளிலும் ஆக கூடுதல் பல் மருந்தகங்கள் பத்து ஏற்படுத்தல்.

6. திருவண்ணாமலை, திருவள்ளூர், திண்டிவனம், கோவில்பட்டி ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளில் இரத்தச் சேமிப்பு வங்கிகள் ஏற்படுத்தல்.

7. தருமபுரியில் உள்ள மாவட்டத் தலைமையிட மருத்துவ மனையிலும், குன்னூர், திருச்செங்கோடு, பத்மநாபபுரம் ஆகிய இடங்களில் உள்ள அரசினர் மருத்துவ மனைகளில் மேகநோய் சிகிச்சைப் பகுதி மருந்தகங்கள் ஏற்படுத்தல்.

1972–73 ஆம் ஆண்டில் அரசு மருத்துவ மனைகளில் பின் வருமாறு படுக்கைகளின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும் நிலை உள்ளது:—

1. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள்.	...	50 படுக்கைகள்.
2. வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள்.	...	100 படுக்கைகள்.
3. இதர மருத்துவ மனைகள்	...	150 படுக்கைகள்.

1973–74 ஆம் ஆண்டில், மருத்துவ மனைகளில் பின்வருமாறு படுக்கைகளின் எண்ணிக்கையை உயர்த்த திட்டமிடப்பட்டு உள்ளது :

1. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள்.	...	100 படுக்கைகள்
2. வட்டத் தலைமையிட மருத்துவ மனைகள்.	...	300 படுக்கைகள்.
3. ஏனைய மருத்துவ மனைகள்	...	200 படுக்கைகள்.

காச நோய்த் தடுப்புத் திட்டம்

விரிவான காச நோய் சிகிச்சைப் பணிக்காக, மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலிருந்து மாவட்டக் காச நோய் தடுப்புத் திட்டம் என்னும் பெயரில் அமைப்பு ஒன்று செயல்படுகிறது. இதுவும் மத்திய அரசு பொறுப்பேற்கும் ஒரு திட்டமாகும். காச நோய் மருந்தகங்களை ஏற்படுத்தவும் அவற்றின் தரத்தை உயர்த்தவும் நிதி அளிக்கப்படுகிறது.

[1973 மார்ச் 23

தமிழ்நாட்டில் ஏறத்தாழ 8 லட்சம் பேர் காச நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மாவட்டக் காச நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் நமது மாநிலத்தில் 4 லட்சத்திற்கு மேற்பட்டவர்கள் காசநோயால் பாதிக்கப்பட்டிருப்பது பரிசோதனையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் உள்ள அரசினர் காசநோய் மருந்தகங்கள், மருத்துவ மனைகள், தனியார் காச நோய் மருந்தகங்கள் மற்றும் அரசினர் மருத்துவ மனைகளுடனும், தனியார் மருத்துவ மனைகளுடனும் இணைந்துள்ள காசநோய்ச் சிகிச்சை பிரிவுகள் ஆகியவற்றில் மொத்தம் 3,217 காசநோய் படுக்கைகளே இருப்பதால், காச நோயாளிகள் அனைவரையும் மருத்துவ மனைகளில் தங்கச் செய்து சிகிச்சை அளிப்பதென்பது இயலாது. காச நோய் மருந்துகள் பல புதியதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை வந்துள்ளதால் பெரும்பாலான நோயாளிகளை அவர்களது வீட்டிலே இருந்தவாறே சிகிச்சை பெறச் செய்ய முடியும். இதனால், சிகிச்சை பெறுவதற்காக குடும்பத்தைப் பிரிந்து இருப்பதனால் ஏற்படும் மனச்சுமையையும் தவிர்க்கலாம்.

காச நோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைக் கண்டறிந்து அவர்களது வீட்டிலேயே அவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதுதான் 1962-ஆம் ஆண்டில் வகுக்கப்பட்ட காச நோய் தடுப்புத் திட்டத்தின் நோக்கமாகும்.

குழந்தைகளுக்கும், சிறார்களுக்கும் முறையாக பி.சி.ஜி. தடுப்பு ஊசி போட்டு மேலும் அவர்களை பாதுகாப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும்.

தமிழ் நாட்டில் சென்னையிலும், 13 மாவட்டங்களிலும் காச நோய்க் கட்டுப்பாடு திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. மாவட்டக் காச நோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் மாவட்ட காச நோய்ச் சிகிச்சை அதிகாரி, தனது பணியாளர்களாகிய புள்ளி விவர உதவியாளர், சிகிச்சை அமைப்பாளர், ஆய்வுக்கூட தொழில் நுட்பப் பணியாளர், கதிர் வீச்சுப் படம் பிடிப்பவர் ஆகியோரின் உதவியுடன் அரசினர் (வட்ட) மருத்துவ மனைகள், ஆரம்பச் சுகாதார நிலையம், ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள், அரசினர் மருந்தகங்கள், தனியார் மருத்துவ மனைகள் ஆகியவற்றின் மூலம் இத்திட்டத்தை நிறை வேற்றுகிறார். தமிழ்நாட்டில் இதுவரையில் 827 சுகாதார நிலையங்களில் காச நோய்த் தடுப்புத் திட்டம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இவற்றில் மாவட்டக் காசநோய் நிலையங்களும், திண்டுக்கல் பாளையங்கோட்டை, அருப்புக்கோட்டை, பூவிலிருந்தவல்லி, விழுப்புரம்,

1973 மார்ச் 23]

புதுக்கோட்டை, திருவண்ணாமலை, ஈரோடு ஆகிய இடங்களில் உள்ள 8 அரசினர் மார்பு நோய்ச் சிகிச்சை மருந்தகங்களும் அடங்கும். இந்தக் காச நோய் கண்டுள்ள இடங்கள் அனைத்திலும் இலவச நோய்க்கண்டுபிடிப்பு மற்றும் வீட்டில் தங்கச் செய்தே காச நோய் சிகிச்சை அளித்தல் போன்ற வசதிகள் உள்ளன.

மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டு அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டியவர்களுக்கும், அறுவை சிகிச்சை செய்ய வேண்டியுள்ளவர்களுக்குமே மருத்துவ மனையில் தங்கச் செய்து சிகிச்சை அளிக்கப்படுகிறது. தமிழ்நாட்டில் 7 அரசினர் காச நோய் சிகிச்சை இல்லங்கள் காசநோய் மருத்துவ மனைகளிலும், 5 தனியார் காச நோயினர் நலம் பேணும் இல்லங்களிலும் மற்றும் அரசினர், தனியார் மருத்துவ மனைகளுடன் இணைந்துள்ள காச நோய் மையங்களிலும் இதற்கான சிகிச்சை வசதிகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் 100 காச நோய்ப் படுக்கைகள் ஏற்படுத்துவதற்கான மத்திய உதவி வழங்க இந்திய அரசு ஒப்புக் கொண்டுள்ளது. அதன்படி, இராமநாதபுரம், தூத்துக்குடி, நாகப்பட்டினம், கிருஷ்ணகிரி ஆகிய இடங்களில் மத்திய அரசின் முழு உதவியுடன் 25 படுக்கைகள் கொண்ட நான்கு காச நோய் சிகிச்சை கூடங்கள் ஏற்படுத்துவதற்கு அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இதனால், இம்மாநிலத்தில் மருத்துவ மனையில் தங்கியிருந்து காச நோய்ச் சிகிச்சை பெறுவதற்கான வசதிகள் பெரும் உயரும்.

மாவட்டக் காச நோய் நிலையம் ஒவ்வொன்றிலும், ஒரு பி.சி.ஜி. குழு உள்ளது. இக்குழு, 0–20 வயது தொகுதியைச் சேர்ந்த, ஊசிக்குத்தத் தகுந்தவர்களுக்கு (நேரடியாக) பி.சி.ஜி. நோய்த்தடுப்பு ஊசி மருந்து போடுகின்றது. மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகளிலும், மகப்பேறு மருத்துவ மனைகளிலும் வார்டுகளிலும் குழந்தைகளுக்கு பி.சி.ஜி. ஊசி குத்தப்படுகிறது. வீடு வீடாகச் சென்று பி.சி.ஜி. ஊசி குத்தும் இக்குழு, பள்ளிகளுக்கும் சென்று ஊசி மருந்தை மாணவர்கட்கு செலுத்துகிறது. சென்னை, சேத்துப்பட்டில் உள்ள மார்பு நோய்ச் சிகிச்சை காச நோய் கட்புல விளக்க—பயிற்சி நிலையம் சென்னைமாநகரில் இப்பணியை மேற்கொண்டுள்ளது. தமிழ் நாட்டில் இதுவரையில் 56 லட்சம் பேருக்கு பி.சி.ஜி. ஊசி குத்தப்பட்டுள்ளது. இவர்களில் 4 லட்சம் பேர் குழந்தைகள்.

தமிழ்நாட்டில், காசநோய்த் தடுப்புத் திட்டத்தின்கீழ் சென்னை, மதுரை ஆகிய இடங்களைத் தலைநகராகக் கொண்ட காசநோய் விளம்பரப் பிரிவு இரண்டு செயல்படுகிறது. இப்பிரிவுகள், காச நோய் பற்றிய திரைப்படங்களை மக்களுக்குக் காட்டி, காசநோய் குறிகளைக் கண்டுபிடித்து சிகிச்சை அளிப்பதற்காக உள்ள வசதிகள் குறித்தும் அந்த நோய்க்குத் தொடர்ந்து சிகிச்சை பெறவேண்டியதன் அவசியம் பற்றியும் கற்பிக்கிறது.

இப்பிரிவுகள் விவாதங்கள், பொதுக்கூட்டங்கள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம், பி.சி.ஜி. ஊசி குத்திக்கொள்ள வேண்டியதன் அவசியம்பற்றி பிரச்சாரம் செய்து அப்பணியை நிறைவேற்றுவதில் பி.சி.ஜி. குழுவிற்கு உதவிபுரிகிறது.

தமிழ்நாட்டில் உள்ள சில காசநோய் சிகிச்சை நிலையங்கள் தமிழ் நாடு அரசிடமிருந்து உதவித்தொகை பெறுகின்றன. இத்தகைய சிகிச்சை நிலையங்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை வருமாறு :

	ஆண்டு ஒன்றுக்கு.
மகாத்மா காந்தி காசநோய் சிகிச்சை நிலையம், தஞ்சாவூர்	ரூ. 44,000
இராமலிங்கம் காசநோய் சிகிச்சை நிலையம், கோயம்புத்தூர்	ரூ. 1.5 லட்சம்
இராஜாஜி காசநோய் சிகிச்சை நிலையம், திருச்சிராப்பள்ளி	ரூ. 52,700

தமிழ்நாட்டில் செயல்படும் காசநோய்த் தடுப்புத் திட்டத்தின் முக்கியக் கூறுகள் இணைப்பு III-ல் கொடுக்கப்பட்டுள்ளன.

சென்னை, காசநோய் கட்டுப்பாட்டுச் சங்கம் 1939-ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இச்சங்கத்தின் தலைவர் ஆளுநர் ஆவார். மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அதன் கூட்டத் தலைவரும், நலத்துறைப் பணி குடும்ப நலத்துறை இயக்குநர் கூட்டத் துணைத் தலைவரும் ஆவர். கீழ்க்கண்டவர்கள் மத்தியக் குழுவில் தம் அலுவலால் உறுப்பினர்களாக இருப்பர்:—

1. தமிழ்நாடு முதலமைச்சர்.
2. அரசுச் செயலாளர் (நல்வாழ்வுத்துறை).
3. தமிழ்நாடு ஆளுநரின் தனிச் செயலாளர்.
4. நலத்துறைப் பணி குடும்ப நலத்துறையின் கூடுதல் இயக்குநர்.

5. தமிழ்நாடு இடைநிலைக் கல்வி இயக்குநர்,
6. இந்திய ஸ்டேட் வங்கியின் செயலாளரும் பொருளாளரும் (Secretary and Treasurer).

இந்நிறுவனம், குடியரசு தலைவரைப் புரவலராகக் கொண்ட இந்திய காசநோய்ச் சங்கத்துடன் இணைந்த தொண்டு நிறுவன மாகும். புது டில்லி, நலத்துறைப் பணிகள் துறையின் தலைமை இயக்குநர் D.G.H.S. அதன் கூட்டத் தலைவராவார். மாவட்டங் களில், மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மாவட்டக் காசநோய் சங்கத்தின் தலைவர்களாவர். மாவட்டச் சங்கங்கள் மாநிலச் சங்கத்துடன் இணைந்தவை.

இவற்றின் முக்கிய நோக்கங்களாவன—

(அ) காசநோய் பரவுவதைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், நிவாரணம் அளித்தல்.

(இ) இச்சங்கங்களின் நோக்கங்களையே கொண்டுள்ள மாவட்ட நிறுவனங்களை ஊக்குவித்தலும் அவற்றிற்கு உதவி அளித்தலும்.

(உ) கழகத்தின் நோக்கங்கள் அனைத்திற்குமாக அல்லது நோக்கங்கள் ஒன்றிற்காகத் திரட்டப்பட்ட அல்லது திரட்டப் படவுள்ள நிதியை வசூலித்தல், நிர்வகித்தல், செலவு செய்தல்.

(எ) மேற்சொன்ன நோக்கங்களை எய்துவதற்கு அல்லது நோக்கங்களில் எவற்றையாவது எய்துவதற்கு இடை நிகழ்வான அல்லது நடத்தப்பட வேண்டிய அத்தகைய காரியங்கள் அனைத் தையும் செய்தல் அல்லது மேற்சொன்ன நோக்கங்களுடன் அல்லது மேற்சொன்ன நோக்கங்களுக்கு துணையாகச் செய்யப்படும் காரியங்கள் அனைத்தும்.

கழகத்திற்கு கீழ்க்குறிப்பிட்டுள்ள வகைகளின் மூலம் முக்கியமாக நிதி வசதி கிடைக்கிறது:—

(1) உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் கட்டணம்;

(2) பொது மக்கள் வழங்கும் நன்கொடை;

(3) காசநோய் வில்லைகள் விற்பனை இயக்கத்தின்போது அதன் மூலம் கிடைக்கும் தொகை.

இந்த இயக்கம் ஒவ்வொரு ஆண்டும் காந்தியடிகள் பிறந்த நாளான அக்டோபர் 2-ஆம் நாளன்று தொடங்கி குடியரசு தினமான ஜனவரி 26-ஆம் நாளன்று முடிவுறுகிறது. மேற்சொன்ன இயக்கத்தின் போது ஒவ்வொன்றும் 10 காசு மதிப்புள்ள காசநோய் வில்லைகள்

[1973 மார்ச் 2

பொது மக்களிடம் விற்பனை செய்யப்படுகின்றன. காசநோய் தடுப்பு சிகிச்சைத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக, ஒவ்வொரு மாவட்டத்தில் வசூலிக்கப்படும் தொகைகள் அந்தந்த மாவட்டங்களில் மட்டுமே செலவிடப்படும் என்று மாநில காசநோய்க் கழகம் முடிவு செய்துள்ளது. மத்திய காசநோய் கழகத்துக்கு பொருள்கள் வாங்கப்பட்டதால் ஏற்பட்ட செலவு விகிதாச்சாரத் தொகை நிர்வாகச் செலவுகள், மத்திய, மாநில காசநோய்க் கழகங்கள் ஒவ்வொன்றுக்கும் 5 சதவீத பங்கு போக மொத்த நிகர வசூலில் மிஞ்சியுள்ள தொகை மட்டுமே மேற்சொன்னவாறு அந்தந்த மாவட்டங்களில் செலவிடப்படும். வசூலிக்கப்பட்ட தொகையில் மாவட்டத்தின் பங்குக்குக் கிடைத்த தொகையை மாநில கழகம் வைத்து வரும்; சம்பந்தப்பட்ட மாவட்டங்களின் பங்குத் தொகையை பயன்படுத்துவதற்கான செயற்குறிப்புகளுக்கு மாநில கழகம் ஏற்பளிக்கும் சமயங்களில் அத்தொகைகள் அந்தந்த மாவட்டங்களுக்குக் கொடுக்கப்படும். மாவட்டக் காசநோய் கழகங்களின் முழுமனதான ஒத்துழைப்புடன் தமிழ்நாடு காசநோய் கழகம் இதுவரை 22 காசநோய் வில்லைகள் விற்பனை இயக்கங்களை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. 21-வது காசநோய் வில்லைகள் விற்பனை இயக்கம் வரை மொத்தம் ரூ. 23,05,699-64 வசூலிக்கப்பட்டது. இத்தொகையில் காசநோயால் பீடிக்கப்பட்டுள்ள ஏழை நோயாளிகளின் உதவிக்காக ரூ. 7,89,128-98 செலவிடப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள மற்ற மாநிலங்களின் காசநோய் கழகங்களைவிட நம் மாநிலக் காசநோய் கழகம், 17-வது விற்பனை இயக்கத்திலிருந்து அதிக அளவில் வில்லைகளை விற்று வருவதால் இந்தியக் காசநோய்க் கழகம் கடந்த 5 ஆண்டுகளாக நம் மாநில கழகத்துக்குச் சுழற் கேடயத்தை வழங்கி வருகிறது. 22-வது விற்பனை இயக்கத்துக்காக இதுவரை வசூலிக்கப்பட்ட தொகை ரூ. 5,80,710-80 ஆகும். 23-வது விற்பனை இயக்கத்துக்காக ரூ. 9,90,000 மதிப்புள்ள 99,00,000 வில்லைகள் வழங்கப்பட்டுள்ளன. 22-வது விற்பனை இயக்கத்தின் போது வசூலிக்கப்பட்ட தொகையைவிட இன்னும் அதிகமாக வசூலிக்க முடியும் என்று எதிர்பார்க்கிறோம். இந்தத் தொகை பின்வரும் காரியங்களில் எவற்றிற்கும் செலவிடப்படலாம்.

(1) காசநோய் மருத்துவ மனை அல்லது சிகிச்சை நிலையங்கள் கட்டுதல்.

(2) காசநோயால் பீடிக்கப்பட்ட நோயாளிகளுக்கு மறு வாழ்வு அளித்தல்.

1973 மார்ச் 23]

(3) மைக்ரோஸ் கோப், எக்ஸ் கதிர் முதலிய கருவிகளை வாங்குதல்.

(4) மருந்துகள் வாங்குதல்.

இந்தியக் காசநோய்க் கழகத்தால் 1972-ல் வரையறுக்கப்பட்ட நிபந்தனைகளின்படி மாநிலக் கழகம் ஒன்று தொடர்ந்து மூன்றுண்டுகள் கடையத்தைப் பெற்றுவந்தால் கேடயத்தின் மாதிரி ஒன்று நிரந்தரமாக வைக்கும் வகையில் தாமே வைத்துக்கொள்ளுமாறு மாநிலக் கழகத்துக்குக் கொடுக்கப்படும். நம் மாநிலம் தொடர்ந்து ஐந்தாண்டுகளாகக் கேடயத்தை வென்றுள்ளது. எனவே, தமிழ்நாடு மாநில காசநோய்க் கழகத்தின் தலைவரான இத்துறை அமைச்சரிடம் இந்திய காசநோய்க் கழகத்தின் தலைமைச் செயலாளர் மாதிரிக் கேடயத்தை நேர்மையில் வழங்கவிருக்கிறார்.

தென் ஆர்க்காடு மாவட்டக் காசநோய்க் கழகம், மாவட்டத்திலுள்ள காசநோயாளிகளைக் கண்டறிவதற்குப் பயன்படுத்துவதற்காகக் காசநோய் வில்லைகள் விற்பனை நிதியிலிருந்து M.M.R. மாட்டார் வேன் ஒன்றை வாங்கியுள்ளது. மாவட்டத்தில் பயன்படுத்துவதற்காகக் கடலூர் மாவட்ட மருத்துவ அதிகாரியிடம் அந்த மோட்டார் வேன் ஒப்படைக்கப்படும். அந்த மோட்டார் வேனைப் பேணுவதற்காகக் கீழ்க்காணும் பணியாளர்களை நியமிக்க அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது:—

1.	"எக்ஸ்" கதிர் படமெடுப்பவர்	1
2.	வலவர்	1
3.	லஸ்கர்	1

காசநோய்க் கழகத்தில் பின்வரும் மூன்றுக் குழுக்கள் இடம் பற்றுள்ளன:—

1. மத்தியக் குழு.
2. நிருவாகக் குழு.
3. தொழில் நுட்பக் குழு.

கழகத்தின் பொதுக்கூட்டம் ஒவ்வொரு ஆண்டிலும் ஒருமுறை கூடைபெற்று வருகிறது.

தொழுநோய் தடுப்புத் திட்டம்.

பழைய காலத்தில் தொழுநோயைக் கட்டுப்படுத்துவதற்காக, தொழுநோயினால் பீடிக்கப்பட்ட நோயாளிகளை ஊருக்கு வெளியில் தனியான குடியிருப்புகளில் பிரித்து வைத்திருந்தனர். அநேக நேர்வுகளில் இம்முறையைச் செயலில் கையாளமுடியாது என்பதுடன் இது நியாயமற்றதுமாகும். இவ்வாறு இந்நோயாளிகளைக் கட்டாயமாகப் பிரித்து வைத்ததால் அப்படிப் பிரித்து வைக்கப்படுவோம் என்ற பயத்தின் காரணமாக நோயாளிகள் தங்கள் நோயை மறைத்து வைத்து வந்தார்கள். இவ்வாறு மறைத்து வைக்கப்பட்டதால் இந்நோய் மேலும் முற்றியதுடன், மறைத்து வைக்கப்பட்ட காலங்களில் மேலும் பல பேருக்கு இந்நோய் பரவியது. முன்னூட்களில் தொழு நோயைக் குணப்படுத்துவதற்காக ஒரு எண்ணெய் மருந்து கொடுக்கப்பட்டது. நோயைப் போக்குவதில் இந்த எண்ணெய் மருந்து மிகவும் மெதுவாகச் செயல்பட்டதால் இந்நோய்க்கு இது சரியான மருந்தாக அமையவில்லை.

நம் நாடு விடுதலை பெறுவதற்குமுன் அரசினால் அல்லது உள்ளாட்சி மன்றங்களால் அல்லது தொண்டு நிறுவனங்களால் நடத்தப்பட்ட மருத்துவ மனைகளில் அனேத்நிலும் தொழுநோய் சிகிச்சை அளிக்கப்பட்டிருந்தாலும் தொழுநோயினால் பாதிக்கப் பட்டுள்ள ஏராளமான பேருக்கு சிகிச்சையளிக்கவோ இந்நோய் பரவுவதைத் தடுப்பதற்கோ எவ்வித மும்முரத் திட்டமும் மேற் கொள்ளப்படவில்லை. விடுதலை பெற்ற பிறகு நாட்டு மக்களின் நல்வாழ்வை மேம்படுத்துவதற்காக, நாளும் பரவுவதால் நாட்டின் முன்னேற்றத்துக்கு இடையூறு விளைவிக்கக்கூடியதாக இருப்பதால் உடனடியாக முனைந்து தடுக்கப்பட வேண்டியது இந்தக் கொடிய தொழுநோய் என்று கண்டறியப்பட்டது. நம் நாட்டில் ஏராளமான தொழு நோயாளிகள் உள்ளனர். அவர்கள் பல்வேறு நிலைகளில் உடலுறுப்பு சிதைந்தவர்களாக இருப்பதால் நலமுள்ள பிறருக்கு ஈடாக அவர்களால் உழைக்க முடியவில்லை. தொழு நோயாளிகளிடமிருந்து அந்நோய் மற்றவர்களுக்குப் பரவாமல் தடுக்கும் வகையில் தொழுநோய் சிகிச்சைக்குச் சிறந்த மருந்தாக சல்போன் (sulphone) இருக்கும் என்று அறியப்பட்டது. எனவே, சல்போன் (Sulphone) சிகிச்சை மூலம் தொழுநோயைக் கட்டுப்படுத்தும் முறை ஒரு திட்டப் பணியாகச் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இதுவரை தொழுநோய் மருத்துவ மனைகளைப் பேணிவந்த தொண்டு நிறுவனங்கள் தொழு நோய்க் கட்டுப்பாட்டுத் தேசியத் திட்டத்தின் கொள்கைகளை ஏற்றுக்

கொண்டுள்ளது; தற்போது அவர்களும் நோய்த் தடுப்புப் பணிகளைப் புரிந்து வருகின்றனர்.

தற்போது தொழு நோயாளிகளுக்குச் சீரமைப்பு அறுவைமுறை சிகிச்சைகள், உடற்கூறு இயல் மருத்துவச் சிகிச்சை ஆகியன செய்யப்படுகிறது. உடலுறுப்பு இழந்தவர்களுக்கும் அவர்கள் இழந்த உடல் உறுப்பைச் சிகிச்சை மூலம் ஈடு செய்வதற்கு முடிறைது. இதுவரை இந்நோயைத் தீர்க்க முடியாது என்று கருதப் பட்டுவந்த, உடலுறுப்பு இழந்த நோயாளிகளுக்கு இச் சிகிச்சை முறைகள் புது நம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தி யுள்ளது.

தமிழ் நாட்டில் இந்நோய் அதிக அளவில் குறிப்பிட்ட வட்டாரங்களில் பரவும் நோயாக உள்ளது. இங்கு ஏறத்தாழ 7·5 லட்சம் தொழு நோயாளிகள் இருப்பதாக மதிப்பிடப்பட்டுள்ளது. 1969 ஆம் ஆண்டுக்கு முன் அரசுச் சிகிச்சை, ஆய்வு நிலையம்—1, தொழுநோய்த் தடுப்புப் பிரிவுகள்—14, துணை நிலையங்கள்—7, பயிற்சிப் பிரிவுகள்—78 ஆகியவை அரசினால் நடத்தப்பட்டு வந்தன. 50 லட்சம் மக்கள் தொகை உள்ள பகுதிக்கு இந்நிலையங்களும், பிரிவுகளும் பணிபுரிந்து வந்தன; 27 தொண்டு நிறுவனங்கள் 61 லட்சம் மக்களுள்ள பகுதிக்கு பயன்பட்டு வந்தன. நடப்பு திட்டத்தின் கடந்த மூன்று ஆண்டுகளில் (1969–72) தடுப்புப் பிரிவுகள்—7, முழுநிலை நோய்த் தடுப்புப் பிரிவுகளாக நிலை உயர்த்தப்பட்ட 7 துணை நிலையங்கள் பயிற்சி பிரிவுகள்—48 ஆகியன ஏற்படுத்தப்பட்டன. இவை மேலும் 46 லட்சம் மக்களுள்ள பகுதிக்குப் பயன்படுகின்றன. இந்த மூன்றாண்டுகளில், அரசு நோய்த்தடுப்புப் பிரிவுகளினால் பயனடைந்த மக்கள் தொகை இரு மடங்காக்கப்பட்டன. 1972 பிப்ரவரி மாதத்தில் மேற்கொண்டு மூன்று பிரிவுகளுக்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதனால் பயன் பெறும் பகுதி மக்கள் தொகை—

1969 ஆம் ஆண்டில் —	
அரசு நிறுவனங்கள் மூலம்	50 லட்சம்.
தொண்டு நிறுவனங்கள் மூலம் ..	61 லட்சம்.
1972 ஆம் ஆண்டில் —	
அரசு நிறுவனங்கள் மூலம் ..	96 லட்சம்
தொண்டு நிறுவனங்கள் மூலம் ..	61 லட்சம்.
1972 மார்ச்சு திங்கள் முடிவில் பயனடையும் பகுதியில் உள்ள மக்கள் தொகை.	157 லட்சம்.

1972-73ஆம் ஆண்டில் திட்டத்தினால் 9 லட்சம் பயனடையும் புதிய பகுதி மக்களின் தொகை.

தமிழ்நாட்டில் 7·5 லட்சம் தொழு நோயாளிகள் உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இவர்களில் 4·03 லட்சம் தொழு நோயாளிகள் அரசு கட்டுப்பாட்டில் மிஷனரிகள், தொண்டு நிறுவனங்கள், மாநகர மருத்துவ மனைகள், பிற நிறுவனங்கள் ஆகியவற்றின் மூலம் பயன் பெற்று வருகின்றனர். எனவே, நோயாளிகளில் 54 சதவிதம் பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர். 1973-74 ஆம் ஆண்டில் 5 சதவிகிதம் பேர் பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்கள் முழுவதிலும் உள்ள தொழு நோயாளிகளின் பயனுக்காக ஏற்கனவே இருந்தவைகளில் புதிய பல தொழு நோய்த் தடுப்பு மையங்கள் தொடங்கப்பட உள்ளன. எனவே, இத்திட்டம் முழுவதற்கும் முழுமையும் போல பணி புரிய அதிக அளவு மருத்துவச் சார்பு பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. இவ்வகையில் 1973 ஜனவரியில் பயிற்சி அளிப்பதற்காக 75 பேர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். 1973-74 ஆம் ஆண்டில் 150 பேருக்கு பயிற்சி அளிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தொழு நோய்த் தடுப்புத் திட்டத்தின் ஒரு பகுதியாக நம்மாழ்வார் கண் மருத்துவமனை, திருத்து குஷ்ட நிவாரண சங்கத்தின் நடமாடும் கண் மருத்துவ முறையில் மேற்கொண்டு வருகிறது. திண்டி, கன்னியாகுமரி மாவட்டங்கள் தவிர மற்ற 11 மாவட்டங்களில் இச் சங்கத்திற்குக் கிளைச் சங்கங்கள் உள்ளன. நெல்லை மாவட்டத்தில் தொழு நோயாளிகள் எவரும் இல்லையென்று தெரியவந்துள்ளது. சென்னையாகுமரி மாவட்டத்தில் தொழு நோய் அறிகுறிகள் மிகவும் குறைவாகக் காணப்படுகின்றன. பிரச்சாரப் பணிகளுக்காக அரசு இச்சங்கத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 13,000 உதவித் தொகை வழங்குகிறது.

நலத்துறை வசதிகளையும், தடுப்பு நடவடிக்கைகளையும் முழுமையுடன் செயல்படுத்தி வருவதால் பொது மக்களின் எல்லாப் பிரிவினரிடையேயும் தொழு நோய் பிரச்சினை குறித்து ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதில் இச்சங்கம் முக்கிய பங்கு வகிக்கிறது. சங்கத்தின் பணியை மேலும் செம்மையாக்கவும், வருங்காலத் திட்டங்களை வகுப்பதற்காகவும் இச்சங்கம் ஆண்டு தோறும் பொதுக் கூட்டத்தை நடத்தி வருகிறது.

பாக்டீரியா திரும் தேர்ச்சியை (Bacteriologically positive) தொழு நோயாளிகளுக்குத், தொழு நோய் தீங்கியவர்கள் உடல் குறை நீக்க அறுவை சிகிச்சைக்காக சேர்த்துக் கொள்ளப்பட்டிருந்தால் அவர்களுக்கும் சிகிச்சையளித்துவரும் கீழ்க் குறிப்பிட்டுள்ள 10 நிலையங்களுக்கு நிங்கள் ஒன்றுக்கு வயது வந்த

ஒவ்வொருவருக்கும் ரூபாய் 25 என்ற வீதத்திலும், சிறுவர் ஒவ்வொருவருக்கும் ரூபாய் 12 என்ற வீதத்திலும் எண்ணிக்கை அடிப்படையில் உதவித் தொகை வழங்கப்படுகின்றன:—

1. (Schieffelin) தொழுநோய் ஆராய்ச்சிக்கூடம், கரிகிரி, வட ஆற்காடு மாவட்டம்.

2. தேபேந்திரநாத முல்லிக் தொழுநோய்மனை, வடதராசலூர், தென்னற்காடு மாவட்டம்.

3. கஸ்தூரிபா காந்தி குட்ட நிவாரண நிலையம், மலவந்தாங்கல், தென்னற்காடு மாவட்டம்.

4. சி. பி. நினைவு தொழுநோய் மருத்துவ மனை, கொளாச்சல், கன்னியாகுமரி மாவட்டம்.

5. புனித இதய தொழுநோய் மருத்துவ மனை, கும்ப கோணம், தஞ்சை மாவட்டம்.

6. தயாபுரம் தொழுநோய் மருத்துவ மனை, மாஞ்மதுரை, இராமநாதபுரம் மாவட்டம்.

7. (Holy Family Hansorium), பாதிமாநகர், திருச்சி மாவட்டம்.

8. தூய சூசையப்பர் தொழு நோய் மருத்துவ மனை, தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டம்.

9. புனித லூக்ஸ் தொழுநோய் மருத்துவ மனை, பெரிய குளம், திருநெல்வேலி மாவட்டம்.

10. (Cheshire) விடுதி, காட்பாடி, வடஆற்காடு மாவட்டம்.

தொழுநோய் பிச்சைக்காரர் மறுவாழ்வு இல்லங்களை ஏற்படுத்துதல்

தொழுநோய் பிச்சைக்காரர்களுக்குச் சிறந்த முறையில் சிகிச்சை அளிப்பதற்கான மறு வாழ்வு இல்லங்களை ஏற்படுத்த அரசு முடிவு செய்தது. இதுவரை 10 மறு வாழ்வு இல்லங்களை ஏற்படுத்த அரசு ஒப்பளிப்பு வழங்கியது. கீழ்க் குறிப்பிடப் பட்ட அந்த இல்லங்கள் குறிப்பிடப்பட்டுள்ள நாள் முதற்கொண்டு செயல்படத் தொடங்கி விட்டன:—

1. பரனூர், செங்கற்பட்டு மாவட்டம் 2—10—1971.

2. உளுந்தூர்பேட்டை, தென் ஆர்க்காடு மாவட்டம் 22—1—1972.

3. பர்கூர், தர்மபுரி மாவட்டம் 18—6—1972.

[1973 மார்ச் 23

4. புதுக்கோட்டை, திருச்சிராப்பள்ளி மாவட்டம் 7-1-1973.

5. மணமேல்குடி, தஞ்சாவூர் மாவட்டம் 17-2-1973.

6. விளாம்பள்ளி, கோயம்புத்தூர் மாவட்டம் 15-2-1973.

கீழ்வரும் இல்லங்கள் விரைவில் செயல்படத் தொடங்கும் நிலையில் உள்ளன:—

1. திருவண்ணாமலை, வட ஆர்க்காடு மாவட்டம்.

2. தேவி குளிச்சி, ஆத்தூர் வட்டம், சேலம் மாவட்டம்.

3. செல்லியம்பட்டி, தருமபுரி மாவட்டம்.

4. புதுப்பட்டி கிராமம், மதுரை வட்டம்.

ஒவ்வொரு இல்லத்திலும் 500 பேர் சேர்த்துக் கொள்ளப் படுவார்கள். தொழுநோயாளிகளின் பாதுகாப்பு, அவர்களுக்கு சிகிச்சையும் மறுவாழ்வும் அளித்தல் ஆகியவற்றை இவ்வில்லங்கள் கவனித்துக் கொள்ளும். இவ்வில்லத்திலிருப்போருக்கு முழு நேர மருத்துவ அதிகாரி ஒருவர் மருத்துவ சிகிச்சை அளிப்பார். பயிற்சி அளிக்கப்பட்ட துணை மருத்துவப் பணியாளர் குழு ஒன்று மருத்துவ அதிகாரிக்கு உதவியாயிருக்கும். ஆக்கபூர்வமான பல்வேறு வாழ்க்கைத்தொழிலில் இவ்வில்லத்தில் இருப்போர் ஈடுபடுவர். இத்தொழிலில் இயன்ற அளவு முதலீடு செய்யப்படும்; இல்லத்திலிருப்போரின் உடலுழைப்பும் குறைவாகயிருக்கும். முடிவில் பிச்சை எடுக்கும் பழக்கத்தை முழுவதுமாக விட்டுவிட்டு தங்கள் சொந்த உழைப்பையே நம்பி வாழ இவர்களுக்கு நன்னம்பிக்கை ஏற்படும் என்று நம்பப்படுகிறது.

இவ்வில்லத்திலிருப்போருக்கு சிகிச்சை, உணவு, உடை, தங்கும் வசதிகள் இலவசமாகக் கொடுக்கப்படுகிறது.

தொழுநோய்க்கான பொது சிகிச்சையுடன் வழக்கமான எல்லா வியாதிகளுக்கும் இந்நிலையங்களில் சிகிச்சையளிக்கப்படுகிறது. அவசியம் ஏற்படின், அவர்களை இல்லத்திலுள்ள சிகிச்சைக் கூடங்களில் சேர்த்துக்கொண்டு சிகிச்சை அளிக்கப்படும். இவ்வில்லங்கள் அரசின் சமூக நலத்துறையின் நிர்வாகத்தின்கீழ் செயல் பட்டு வருகின்றன.

புற்றுநோய்க் கட்டுப்பாடு

அரசின் முக்கிய மருத்துவ மனைகளில் புற்றுநோய்க்கு அறுவை மருத்துவம், இரசாயன மருத்துவ சிகிச்சை முறை (Chemotherapeutic treatment) ஆயின அளிக்கப்பட்டு வருகின்றன. இது தவிர உலகச் சுகாதார நிறுவனத்துடன் இணைந்து, அதிஞர் அன்னை நினைவுப் புற்றுநோய் நிறுவனம் காஞ்சிபுரத்தில்

1973 மார்ச் 23]

ஏற்படுத்தப்பட்டது. இதுவே இந்தியாவில் இவ்வகையில் முதன் முதலில் ஏற்படுத்தப்பட்டது.

பெண்களின் கருப்பைவாய் பாகத்தில் ஏற்படும் புற்று நோயையும், வாய்ப்புற்று நோயையும் தொடக்க நிலையிலேயே அறிவதற்காக அதிகளவு மக்களுக்கு எக்ஸ்கதிர் படம் எடுக்கும் திட்டமொன்று இந்நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும். உலக சுகாதார நிறுவனம் இந்நிறுவனத்துக்கு உதவித் தொகை வழங்குகிறது. தொழில் நுட்ப ஆலோசனை, தேவைகளை பூர்த்தி செய்தல், கருவிகள், படிப்பு உதவிப்பணம் ஆகிய உதவிகளையும் இந்நிறுவனம் வழங்கிவருகிறது. உயிர் நுற்பிரிவு ஆய்வுக்கூடம், சிறு அறுவை சிகிச்சைக் கூடம் ஆகியவற்றிற்கு குளிர்ச் சாதன வசதி ஏற்படுத்த அரசு ரூ. 2,23,850 தொகைக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. கட்டிடத்தின் தரைப்பகுதியின் இருபிரிவுகளிலும், முதல் மாடியிலும், கூடங்கள் கட்டுவதற்காக அரசு ஏற்கெனவே ரூ. 7·3 லட்சம் வழங்கியுள்ளது.

காஞ்சிபுரம் நகரை ஒட்டி செவ்வேயிலிருந்து பெங்களூருக்குச் செல்லும் முக்கிய தேசிய நெடுஞ்சாலை பக்கம், புற்று நோய் மருத்துவமனை ஒன்று கட்டுவதற்காக 20 ஏக்கர் அளவு நிலத்தைக் கையகப்படுத்த அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இம்மனையில் கோபால்ட் 60, கால்சியம் 137 பிரிவுகள் முதலியவற்றிற்கான வசதியுடன் 100 படுக்கைகள் கொண்ட புற்றுநோய் மருத்துவ மனை கட்டுவதற்கு ரூ. 27 லட்சம் செலவிற்கான திட்ட மதிப்பீடு அரசுக்கு வந்துள்ளது. இது குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

கருப்பையில் ஏற்படும் புற்று நோய்க்கான முன் அறிகுறியையும், புற்றுநோயின் தொடக்க நிலையையும் ஆரம்பத்திலேயே கண்டறிவதற்காக 1—1—1972 முதல் 30—9—1978 வரை 1,396 பெண்களுக்கு எக்ஸ்கதிர் படம் எடுக்கப்பட்டது. இத்திட்டம் தொடங்கிவைக்கப்பட்ட நாளான 21—3—1969 முதல் 30—9—1972 வரை மொத்தம் 8,376 பெண்களுக்கு எக்ஸ்கதிர் படம் எடுக்கப்பட்டது.

1—1—1972 முதல் 30—9—1972 வரை எக்ஸ்கதிர் படம் எடுக்கப்பட்ட பெண்களில் 12 பெண்களுக்கு கருப்பை புற்று நோய் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. 1973 ஜனவரி முதல் இத்திட்டத்திற்கு தொடர்ந்து உலக சுகாதார நிறுவனத்தின் உதவியை பெறுவதற்கான செயற்குறிப்புகள் அந்நிறுவனத்துக்கு அனுப்பி வைக்க இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. உலக சுகாதார நிறுவனத்திடமிருந்து கிடைக்கும் அந்நியச் செலாவணி முழுவதையும் உதவித் தொகை மானியமாக (Grant-in-Aid) அளிக்கும்படியும், நோராட் (Norad) நிதியிலிருந்து வாங்கப்படும் கோபால்ட் 60 கருவி போன்ற கதிர் வீச்சியல் சிகிச்சை முறை கருவிகளை முன்னுரிமை அடிப்படையில் இந்நிறுவனத்துக்கு வழங்கும்படி உலக சுகாதார நிறுவனத்திடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

[1973 மார்ச் 28

தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவச கண் சிகிச்சை முகாம் திட்டம்.

நம் மாநிலத்தில் விழி வெண்படல நோயினால் (Cataract) இரண்டு கண்களும் குருடாக அல்லது ஒரு கண் குருடாக உள்ளோர் சுமார் 10 லட்சம் பேர் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது தவிர மற்ற பல்வேறு கண் நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் பல லட்சம்பேர் உள்ளனர். இவர்களில் சுமார் 60 சத வீதம் பேர் கண்ணொளி பெற்றால், திரும்ப இயல்பான வாழ்வைப் பெறமுடியும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. கண்ணொளி இழந்த பல லட்சம் மக்களின் குடும்பங்களுக்கு ஒளியையும், மகிழ்ச்சியையும் தருவதைக் கருத்திற்கொண்டு மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த தினத்தைக் குறிக்கும் வகையில் 3—6—1972 முதற்கொண்டு "முதலமைச்சர் கலைஞர் கருணாநிதி இலவசக் கண்நோய் சிகிச்சை முகாம்" என்னும் பெயரில் பெரிய திட்டம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது. பொது மக்களிடமிருந்தும், உள்ளாட்சி மன்றங்கள், தொழில்-வணிக நிறுவனங்கள் முதலியவற்றிடமிருந்தும் நன்கொடைகள் பெறுவதன் மூலம் இத்திட்டத்துக்கு நிதி வசதி திரட்டப்படுகிறது. இவ்வாண்டிலும், அடுத்த ஆண்டிலும் விழி வெண்படல நோயினால் பாதிக்கப்பட்டுள்ள ஒரு லட்சம் பேருக்கு அறுவை சிகிச்சை செய்தல், மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் கண்நோய் சிகிச்சை முகாம்கள் அமைத்து கண் விழி விறைப்பு நோய் (Glauchoma), கண் அமர நோய் (Trachoma) முதலியவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மற்ற நோயாளிகளுக்கும் சிகிச்சை கிடைக்க ஏற்பாடு செய்தல் ஆகியன அரசின் நோக்கங்களாகும்.

இத் திட்டத்தைச் சிறந்த முறையில் செயல்படுத்துவதற்காக மாநிலம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டது. மதுரை, தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய ஒவ்வொரு மண்டலத்திலும் நடமாடும் கண்நோய் சிகிச்சைப் பிரிவு ஒன்று செயல்படும். சென்னையில் நடமாடும் கண் நோய் சிகிச்சைப் பிரிவுகள் இரண்டு செயல்படும். ஒவ்வொரு பிரிவும் சுமார் இரண்டு, மூன்று மாவட்டங்களில் செயல்படும் விதத்தில் பணி அமைந்துள்ளது. இந்த நடமாடும் கண்நோய் சிகிச்சைப் பிரிவுகள் அருகிலுள்ள அரசு மருத்துவக் கல்வி நிலையங்களுடன் இணைக்கப்பட்டுள்ளன. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் கண்நோய் சிகிச்சை முகாம்கள் நடந்தும் வகையில் இந்த நடமாடும் பிரிவுகள் முழு அளவு வசதியைக் கொண்டுள்ளது.

இந்த ஐந்து பிரிவுகளில் இரண்டு பிரிவுகள் சென்னை அரசு கண்நோய் மருத்துவமனை கண்காணிப்பாளரின் மேற்பார்வையிலும், திர்வாகத்தின் கீழும் உள்ளன ; மீதி மூன்று பிரிவுகள் மதுரை அரசு ராஜாஜியின் மருத்துவமனையின் துணை முதல்வரான கண்நோய் அறுவை சிகிச்சை நிபுணரின் மேற்பார்வையிலும், திர்வாகத்தின் கீழும் செயல்பட்டு வருகின்றன; ஒவ்வொரு

1973 மார்ச் 23]

பிரிவும் ஒரு மாதத்தில் இரண்டு கண்நோய் சிகிச்சை முகாம்களை நடத்தும் ; ஒவ்வொரு முகாமும் குறைந்த அளவு 500 பேருக்கு கண்நோய் அறுவை சிகிச்சை செய்யும். கண்நோய் சிகிச்சை முகாம்களை சிறந்த இலகுவான முறையில் நடத்துவதற்காக ரூ.1,00,000 மதிப்புள்ள தேவையான கருவிகள், அறுவை கட்டில், தள்ளுவண்டி, மேஜை, நாற்காலி போன்ற மரச் சாமான்கள் ஆகியவை ஒவ்வொரு பிரிவுக்கும் வழங்கப்பட்டுள்ளன ; மேலும் ஜீப், வேன், பேருந்து ஆகியவை ஒவ்வொன்று வழங்கப்பட்டுள்ளன. கீழ்க் குறிப்பிட்டுள்ள இடங்களில் 1972 ஆம் ஆண்டு ஜூன் திங்கள் 3 ஆம் நாள் முதல் கண் நோய் சிகிச்சை முகாம்கள் நடத்தப்பட்டன:—

சென்னையிலுள்ள பிரிவு

செங்கற்பட்டு மாவட்டம்

1. அனகாபுத்தூர்.
2. அம்பத்தூர்.
3. காஞ்சிபுரம்.
4. கும்மிடிபூண்டி.
5. திருத்தணி.
6. செங்கற்பட்டு.

தென் ஆர்க்காடு மாவட்டம்

7. விருத்தாச்சலம்.
8. சிதம்பரம்.
9. விழுப்புரம்.
10. கடலூர்.
11. பெண்ணாடம்.

வட ஆர்க்காடு மாவட்டம்

12. வேலூர்.
13. திருவண்ணாமலை.
14. ஆம்பூர்.
15. குடியாத்தம்.
16. செய்யாறு.

தர்மபுரி மாவட்டம்

17. கிருஷ்ணகிரி.
18. தர்மபுரி.
19. ஹோசூர்.

சென்னை மாநகரம்

20. நுங்கம்பாக்கம்.

மதுரையிலுள்ள பிரிவு முதலியவை
தஞ்சாவூர் மாவட்டம்

1. திருவாரூர்.
2. மாயூரம்.
3. குற்றாலம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்

4. டால்மியாபுரம்.
5. திருச்சிராப்பள்ளி.
6. புதுக்கோட்டை.
7. கரூர்.
8. முசிறி.
9. மணப்பாறை.

திருநெல்வேலி மாவட்டம்

10. திருச்செந்தூர்.
11. திருக்குருங்குடி.
12. தூத்துக்குடி.
13. சங்கரன் கோயில்.

இராமநாதபுரம் மாவட்டம்

14. திருப்பத்தூர்.
15. பரமக்குடி.
16. விருதுநகர்.
17. சிவகாசி.

கோயம்புத்தூர் மாவட்டம்

18. குமாரபாளையம்.
19. கோபிசெட்டிப்பாளையம்.
20. கோயம்புத்தூர்.
21. பொள்ளாச்சி.
22. உடுமலைப்பேட்டை.
23. சரோடு.

சேலம் மாவட்டம்

24. பரமத்தி வேலூர்.
25. மேட்டூர்.

கன்னியாகுமரி மாவட்டம்.

26. நாகர்கோயில்.
27. குழித்துறை.

நீலகிரி மாவட்டம்

28. உதக மண்டலம்.
29. குன்னூர்.

மதுரை மாவட்டம்

30. போடிநாயக்கனூர்.
31. பழனி.
32. மேலூர்.
33. உசிலம்பட்டி.
34. திண்டுக்கல்.

இந்த மருத்துவப் பிரிவுகளில் 1973-ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1-ஆம் நாள் வரை அடைந்த சாதனைகள் பின்வருமாறு:—

பிரிவுகள்.	மருத்துவம் அளிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை.	விழிவெண்படல (காடராக்ட்) நோய் கண்டு மருத்துவம் அளிக்கப்பட்டவர் எண்ணிக்கை.	கண் விழிவிழைப்பு மருத்துவம் பெற்றவர்கள்.	நடத்திய பிரசாரங்களின் எண்ணிக்கை.
(1)	(2)	(3)	(4)	(5)
சென்னை	56,000	7,583	64	13,068
மதுரை முதலியவை	166,986	24,102	2,620	21,263
மொத்தம்	223,085	31,685	2,683	34,341

முகாம்கள் நடத்துவதைத் தவிர்த்து, கோயம்புத்தூர் C.S.W. ஆலையைச் சேர்ந்த திருமண மண்டபத்தில் 1972-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24-ஆம் நாளிலிருந்து (தொடர் முகாம்) தற்காலிக கண் மருத்துவமனை தொடங்கப்பட்டுள்ளது. இந்த மருத்துவமனையில் கோயம்புத்தூர் சுற்றிலுமுள்ள கண் நோயாளிகளுக்கு அறுவை மருத்துவம் செய்யப்படுகிறது. இந்த மருத்துவமனை மேலும் ஆறு திங்களுக்குத் தொடர்ந்து நடத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. வாரத்தில் இருநூறு நோயாளிகளுக்காயினும் அறுவை மருத்துவம் அளிப்பதே இதன் நோக்கமாகும். கோயம்புத்தூர் மருத்துவமனையைச் சேர்ந்த கண்மருத்துவ இயலூர்த்திப் பிரிவால் இக் கண் சிகிச்சை முகாம் கவனிக்கப்பட்டு வருகிறது. இந்த கண் சிகிச்சை முகாமில் புறநோயாளிகட்கும் மருத்துவம் அளிப்பதுடன் விழிவெண்படல (காடராக்ட்) நோய்க்கும் 1,234 பேருக்கு மருத்துவம் அளிக்கப்பட்டது. இதைப் போலவே திருச்சிராப்பள்ளி மருத்துவ மனையில் 1972-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 21-ஆம் நாளிலிருந்து மற்றொரு கண் நோய் மருத்துவ மனை தொடங்கப்பட்டுள்ளது. இங்கு, 359 நோயாளிகளுக்கு விழிவெண் படல நோய்க்கு மருத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

நலத்துறைப் பணிகள் குடும்ப நலத் துறை இயக்குநர் இத் திட்டத்திற்கு முழுப் பொறுப்புடையவராவார். கண்முகாம் சம்பந்தப்பட்ட வேலையைக் கவனிப்பதற்காக, சிறப்புத் துணைக் கலெக்டர் ஒருவர், இளநிலை கணக்கு அதிகாரி, இரு உதவியாளர்கள், கடைநிலைப் பணியாளர் மூவர் ஆகியோர் நலத் துறைப் பணி குடும்ப நலத் துறை இயக்குநர் அலுவலகத்திற்காக நியமிக்கப்படுவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. வருவாய்த்துறை, வளர்ச்சி வட்டாரப் பணியாளர் உதவியுடன் மாவட்ட ஆட்சித் தலைவர்கள், மருத்துவப் பிரிவு அதிகாரிகளுடன் கலந்தாலோசித்துக்கொண்டு கண்முகாம்களை நடத்தி வருகின்றனர்.

இந்தப் பணி குறித்த செலவை ஈடு செய்வதற்காக, " முதலமைச்சர் கண் சிகிச்சை முகாம் நிதி " எனப்படும் சிறப்பு நிதி ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. இதற்குத் தாராளமாக நன்கொடை அளிக்குமாறு பொதுமக்களுக்கு முதலமைச்சரும், மக்கள் நல்வாழ்வுத்துறை, அமைச்சரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர். பொதுமக்கள் நன்கொடை மூலம் வசூலிக்கப்பெறும் தொகைகள் "முதலமைச்சர் கண் முகாம் நிதிக்கு" வரவு வைக்கப்படுகின்றன. மேற்படி நிதி நிர்வாகத்தில் அரசுக்கு ஆலோசனை நல்குவதற்கு ஆலோசனைக் குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது. மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் இக்குழுவின் தலைவர் ஆவார். அரசுச் சார்புள்ள ஐவரும் அரசுச் சார்பற்ற நால்வரும் இதில் உள்ளனர். இந்நிதிக்குக் கிடைத்த வசூல் 1—3—1973 நிலவரப்படி ரூ. 44,77,620.43 ஆகும்.

கண்சிகிச்சை முகாம்கள் குறித்த செலவுக்காக மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மருத்துவப் பிரிவு அதிகாரிகளுக்கும் முன் பணமாக 1—3—1973 நாள்வரை ரூ. 19,29,276.00 அனுமதிக்கப்பட்டுள்ளது. 1973–74-ஆம் ஆண்டில் 59,000 விழிவெண்படல (காடராக்ட்) அறுவை சிகிச்சை செய்வதென்று திட்டமிடப்பட்டுள்ளது.

மருந்துக் கட்டுப்பாடு.

இம்மாநிலத்தில் மருந்துக் கட்டுப்பாடு நிர்வாகத்தின் முக்கிய அலுவல், மருந்துகள், ஒப்பனைப் பொருட்களின் தயாரிப்பு, விற்பனை, விநியோகத்தை முறைப்படுத்துவதாகும். மருந்துகள் உறக்குமதிக் கட்டுப்பாட்டை இந்திய அரசு, மருந்துகள் கட்டுப் பாடு அதிகாரி மூலமாக நிர்வகித்து வருகையில், இம்மாநிலத்தில் மருந்துகள் தயாரிப்பு விற்பனை விநியோகக் கட்டுப்பாடு மாநில அரசுச் சம்பந்தப்பட்டதாகும். மருந்துகள், ஒப்பனைப் பொருட்கள்

சட்டத்தையும், ஏனைய சட்டங்களையும் விதிகளையும் முன்னிலும் சிறப்பாகச் செயல்படுத்தும் பொருட்டு, துணைக் கட்டுப்பாடு அதிகாரி, மேலும் ஒரு உதவிக் கட்டுப்பாடு அதிகாரி, மேலும் முதுநிலை மருந்தாய்வாளர் ஐவர் ஆகியோரை நியமித்து 1972-ஆம் ஆண்டில் மருந்துகள் கட்டுப்பாடு பிரிவு வலுப்படுத்தப்பட்டது. 1972-ஆம் அண்டில் (31—12—1972 வரை) மருந்தாய்வாளர்கள் விற்பனை நிறுவனங்களில், 15,301 ஆய்வுகளும், தயாரிப்பு நிறுவனங்களில் 1,022 ஆய்வுகளும், மருத்துவமனை மருந்தகங்களில் 912 ஆய்வுகளும் நடத்தினர். இவர்கள் 674 மாதிரிகள் எடுத்து அரசு பகுப்பாய்வாளர்களுக்குப் பகுப்பாய்வுக்காக அனுப்பி வைத்தனர். இன்றியமையாப் பொருட்கள் சட்டத்தின்கீழ்ப் பிறப்பித்த மருந்துகள் (விலைக் கட்டுப்பாடு) ஆணையை மீறி அதிக விலைகளில் மருந்துகளை விற்றதற்காக தொடரப்பட்ட இரண்டு வழக்குகள் உட்பட 1972-ஆம் ஆண்டில் 124 வழக்குகள் தொடரப்பட்டன. இவ் வாண்டில் 59 வழக்குகள் தீர்ப்பளிக்கப்பட்டு அபராதமும் விதிக்கப் பட்டுள்ளது. 16 பேர்களுக்குச் சிறைத் தண்டனையும் அளிக்கப் பட்டது. முழுவசதி பெற்ற மருந்துகள் சோதனை ஆய்வுக்கூடம் திறக்கப்படுவதற்கு 1973–74-ல் தொடக்க வேலை மேற்கொள்ளப்படும்

1972 ஜூலை—ஆஸ்டில் அரசு, குழந்தைகள் மருத்துவமனையில் நிரடைப்பு நோய் காரணமாக (Anuria) அனுமதிக்கப்பட்ட குழந்தைகள் சில இறக்க நேரிட்டது குறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. புலன் விசாரணை செய்த பிறகு, "பிப்மால்", "பிப்மால்-சி" (Pipmol and Pipmol C) மருந்துகள் தயாரித்த கம்பெனியின் உரிமம் செயல்படுவதை ஓராண்டுக்கு நிறுத்தி வைக்கப் பட்டது. மருந்துகள் தயாரித்த நிறுவனத்தின்மீதும், மருந்துக்கான மூலப் பொருட்கள் வழங்கிய நிறுவனத்தின்மீதும் புகார்கள் தாக்கலா யுள்ளன. இவ்வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

இதைப் போன்ற நச்சுப் பொருள் "கால்னியாசிட் பெப்ரிடின்" "பெப்ரிடின்" (Colniazid Febridin and Febridin) மருந்துகள் தயாரிப்பில் பயன்படுத்தியதாகவும் கண்டு பிடிக்கப்பட்டது. தயாரிப் பாளர்களிடமிருந்து மருந்துகள் யாவும் மருந்து கட்டுப்பாடு, துறை யினரால் கைப்பற்றப்பட்டன. ஏற்கனவே கொடுக்கப்பட்டிருந்த மருந்துகள் யாவும் திரும்பப் பெறுமாறு தயாரிப்பாளர்களுக்குக் கட்டளையிடப்பட்டது. ஏனைய மாநிலத்திலுள்ள மருந்துகட்டுப்பாடு அதிகாரிகள் விழிப்புடன் இருக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டனர். "கால்னியாசிட்", "பெப்ரிடின்" (Colniazid Febridin) மருந்துகள் தயாரித்த நிறுவனங்களின் உரிமங்களும் ஓராண்டுவரை செயல்

படுவதனின்றும் நிறுத்தி வைக்கப்பட்டன. இந்த நிறுவனங்களின் மீது 1940-ஆம் ஆண்டு மருந்துகள், ஒப்பனைப் பொருள் சட்டத்தின் கீழ் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன. இவ் வழக்குகள் நீதிமன்ற விசாரணையில் உள்ளன.

தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம்.

1948-ஆம் ஆண்டு தொழிலாளர் நலக் காப்புறுதி சட்டத்தின் விதித்துறைகளின்படித் தயாரிக்கப்பட்ட தொழிலாளர் நலக் காப்புறுதித் திட்டம், தமிழ்நாட்டில் 1955-ல் கோயம்புத்தூரில் முதன் முதலாகச் செயல்படுத்தப்பட்டுப் பின்னர் பல்வேறு இடங் களில் படிப்படியாகச் செயல்படுத்தப்பட்டது. தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் நீங்கலாகப் பிற மாவட்டங்கள் அனைத்திலும் தற் போது இந்தத் திட்டம் செயலில் உள்ளது. இது தொடங்கப்பட்ட நாள் முதலாக, காப்புறுதி செய்து கொண்டவர் 1,000மும், 1,000 பேருக்கு மேற்பட்டுமுள்ள 39 பெரிய தொழிற்சாலை வட்டா ரங்களில் விரைவான முன்னேற்றம் அடைந்துள்ளது.

காப்புறுதி செய்து கொண்டவர்களுக்கும் அவர் தம் குடும்பத் தினருக்கும் சென்னை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், மதுரை மாநகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், கோயம்புத்தூர் நகரிலும் அதன் சுற்றுப்புறங்களிலும், கோயில்பட்டியிலும் மருத் துவமனையில் தங்கி மருத்துவம் பெறும் வசதி உட்பட இலவச மருத்துவ பராமரிப்பு அளிக்கப்படுகிறது. இத்திட்டம் செயலில் உள்ள எஞ்சிய பகுதிகளில், மருத்துவமனை வசதி உட்பட முழு மருத்துவ பராமரிப்பு காப்புறுதி செய்து கொண்டோருக்கும், மருத்துவமனை வசதி நீங்கலான மருத்துவ பராமரிப்பு அவர்தம் குடும்பத்தினருக்கும் அளிக்கப்படுகிறது.

காப்புறுதி செய்து கொண்டவருக்கும் மட்டும் வசதியளிக்கப் படுமிடங்களில் இத்திட்டத்தின்கீழ் மருத்துவ வசதிகளுக்காகும் செலவு, மாநில அரசுக்கும், காப்புறுதிக் கழகத்திற்குமிடையே 1 : 3 விகிதாச்சாரத்திலும் காப்புறுதி செய்து கொண்டவர் தம் குடும்பத்தினருக்கும் சேர்த்து வசதியளிக்குமிடத்தில் இச் செலவு 1 : 7 எனும் விகிதாச்சாரத்தில் 1969–70 நிதியாண்டுவரையில் பங்கிட்டுக் கொள்ளப்பட்டது. ஆனால் காப்புறுதிக் கழகம் 1—4—1970லிருந்து தொழிலாளர் நலக்காப்புறுதித் திட்டத்தின்கீழ் மருத்துவ வசதிச் செலவுகளுக்கு மேல் வரம்பு ஒன்றை முடிவு

செய்தது. இந்த மேல் வரம்புக்கு மேற்பட்ட செலவை மாநில அரசு முழுவதும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்றும் தெரிவித்தது.

	ரூ.
(அ) வரையறுக்கப்பட்ட மருத்துவ பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும்	50
(ஆ) நீட்டிக்கப்பட்ட மருத்துவ பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும்,	54
(இ) முழு மருத்துவ பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும்	64

மாநில அரசு அடிக்கடி முறையிட்டுக் கொண்டதாலும், தனது நிதி நிலை சிரடைந்ததாலும் காப்புறுதிக் கழகம், 1—4—1972லிருந்து மேல் வரம்பு அளவை மாற்றியமைத்தது.

(அ) வரையறுக்கப்பட்ட மருத்துவப் பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 56.

(ஆ) நீட்டிக்கப்பட்ட மருத்துவப் பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 60.

(இ) முழுமருத்துவப் பராமரிப்புக்கு ஆண்டொன்றுக்கு ஒவ்வொரு தொழிலாளருக்கும் ரூ. 70.

காப்புறுதிக் கழகம் முடிவு செய்து மேற்சொன்ன வரம்பை யொட்டி மாநில அரசு பங்கு உட்பட 1972–73 ஆண்டுக்கு இத்திட்டத்தின்கீழ் மருத்துவ பராமரிப்புக்கு ஏற்படக்கூடிய அதிக அளவு செலவு ரூ. 2,61,17,000 என்று கணக்கிடப்படுகிறது, ஆயினும், 1972–73 ஆண்டுத் திருத்த மதிப்பீட்டின்படி, செலவு ரூ. 3,71,32,200 என்று கணக்கிடப்படுகிறது. இதனால் இத்திட்டம் குறித்து இம்மாநில அரசுக்கு ரூ. 1,10,15,200 அதிகப்படியாகச் செலவாகும். இத்திட்டத்தைப் புதிய பகுதிகளுக்கும் கொண்டுவர இருப்பதால் செலவு அதிகரிக்கவே செய்யும். எனவே, காப்புறுதிக் கழகம் முடிவு செய்த வரம்பு, மாநில அரசுக்கு ஏற்புடையதாய் இல்லை. இதில் நமக்குள்ள நியாயத்தை செவ்வகையாக எடுத்துச் சொல்லி, மேல் வரம்பை நீக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்துவதற்காக பிற மாநில அரசுகளிடமிருந்து தகவல்களை இவ்வரசு சேகரித்து வருகிறது.

காப்புறுதிக் கழகம் தனக்கிருந்த நிதி இக்கட்டு நிலையின் காரணமாக, மூலதனப் பணிகளின் செலவுக்கு 1968-ல் தடை

விதித்தது. எனவே, பெரிய கட்டிடத் திட்டங்கள் பல கைவிட வேண்டியதாயிற்று. இருந்தபோதிலும் இம் மாநில அரசு, சைதாப்பேட்டை, அண்ணாசாலை, எழும்பூர் ஆகிய இடங்களில் தொழிலாளர் நலக் காப்புறுதி மருந்தகங்களுக்குப் புதிய கட்டிடங்கள் அவசியமாகத் தேவைப்பட்டதை முன்னிட்டு மாநில அரசின் செலவிலேயே, மொத்தம் ரூ. 14.30 லட்சம் செலவில் கட்டடங்கள் கட்டப்பட அனுமதி வழங்கியுள்ளது.

மருத்துவ நிறுவனங்கள் அவற்றில் செய்துள்ள படுக்கை வசதிகள் முதலியவை பற்றிய தகவல்கள் இணைப்பு IV ல் கொடுக்கப் பட்டுள்ளன.

நகராட்சி, ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை அரசு ஏற்று நடத்தல்.

ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களில் பல ஆண்டுகளாக நடை பெற்று வந்தவை, நான்காவது திட்டக் காலத்தில் அரசால் படிப் படியாக ஏற்று நடத்தப்படுகின்றன. மருந்தகம் அல்லது மருத்துவ மனையை அரசு ஏற்று நடத்தும் போது, அங்குப் பணியாற்றும் பணியாளர்களை அரசுப் பணியில் ஏற்றுக் கொள்ளப்படுகின்றனர். கிராம மக்களின் மருத்துவ வசதிகளின் அவசியத்திற்கேற்ற வகையில் கூடுதல் பணியாளர் தேவைப்படின் அவர்கள் நியமிக்கப்படவும் அனுமதி வழங்கப்படுகிறது.

1972–73-ல் நாற்பத்தைந்து ஊராட்சி ஒன்றிய மருந்தகங்கள் அரசால் ஏற்று நடத்தப்படுவதற்கு ஆணையிடப்பட்டது.

1973–74-ல் 16 ஊராட்சி ஒன்றிய மருந்தகங்களை மட்டுமே, ஏற்று நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் போதிய நிதி வசதியின்மையாகும்.

தமிழ்நாட்டில் குடும்பநலத் திட்டம் செயல்படுத்துவது பற்றிய குறிப்பு.

குடும்ப நலத்திட்டப் பணிக்கு நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (1969–1974) தலையாய முதலிடம் அளிக்கப்பட்டு, இந்த மாபெரும் பிரச்சினையின் அவசியத்தை முன்னிட்டு, போர்க்கால நடவடிக்கை அடிப்படையில் இப்பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்குத் தமிழ்நாட்டில் நான்காவது திட்ட மொத்த நிதி ஒதுக்கம் ரூ. 29,22.01 லட்சம் ஆகும். இத்திட்டத்தின் நோக்கம், 1,000 பேருக்குச் சுமார் 36 பேர் எனும் பிறப்பு விதத்தை, 1978–79 ஆண்டுக்குள் 1,000-க்குச் சுமார் 25 பேர் எனும் விகிதத்துக்குக்

குறைப்பது என்பதாகும். பல்வேறு முறைகளுக்கு இலக்குகள் விதிக்கப்பட்டிருக்கையில், இத்திட்டத்தை ஒன்று அல்லது இரண்டு முறைகளுக்கு மட்டுமே வரையறுத்து நிறுத்திக் கொள்ளக் கூடாது என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. எனவே ஏற்புடைய எல்லா முறைகளுக்குமே முக்கியத்துவம் தரப்பட்டுள்ளது. வேண்டப்படாத தாய்மைச் சுமையினின்றும் காத்துக் கொள்ளும் வகையில், குடும்பப் பெருக்கினுல் அவதியுறும் தம்பதியருக்குக் கருத்தடை செய்துக் கொள்ள வேண்டியதின் அவசியத்தை எடுத்துச் சொல்லி அறிவுறுத்துவதற்கு எல்லா வகையான முயற்சிகளும் எடுத்துக் கொள்ளப் படுகின்றன. நான்காவது திட்டக் காலத்தில் இந்தப் பணியை மேலும் விரிவுப்படுத்தும் திட்டத்தில், மக்கட்தொகை செறிந்துள்ள பகுதிகளில். பேறுகாலத்திற்குப் பிந்திய அறுவை மருத்துவம், நோய்க்காப்புத் திட்டங்கள், குழந்தைகள், கருவுற்றிருக்கும் தாய்மார்கள் ஆகியோருக்குக் கூடுதலான சத்துணவு ஆகியவை குறித்த பணிகளுக்கு முதலிடம் அளிக்கப்படுகிறது.

கிராம குடும்ப நலத் திட்ட நிலையங்கள்

இம்மாநிலத்தில், கிராமப்பகுதிகளில் குடும்ப நலத்திட்டம், தொடக்கச் சுகாதார நிலையங்களுடன் இணைக்கப்பட்ட குடும்ப நல நிலையங்கள் மூலமாகச் செயல் படுத்தப்பட்டு வருகிறது. இம் மாநிலத்தில், சராசரி 80,000 மக்கட் தொகை கொண்ட 374 வளர்ச்சி வட்டாரங்கள் உள்ளன. இந்த வளர்ச்சி வட்டாரங்கள் அனைத்தும், குடும்ப நலச் சிரமைப்புத் திட்டத்தின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. இந்தச் சிரமைப்புப் பணியின்படி ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் பின்வரும் பணியாளர்கள் பணிபுரிவர். ஒரு மருத்துவ அதிகாரி/வளர்ச்சி வட்டார நல அறிவுரையாளர், பெண் சுகாதாரப் பார்வையாளர்/ஒரு துணைச் செவிலி, மருத்துவச்சி, கணக்குப் பொறி, எழுத்தர்–பண்டகக்காப்பாளர் ஆகியோர். இவர்கள் கிராம குடும்ப நல நிலையத்தில் பணியாற்றுவர். குடும்ப நல மருத்துவத்திற்கு மட்டும் பத்தாயிரம் மக்களுடைய ஒவ்வொரு பகுதியிலும் ஒரு மருத்துவச்சி பணியாற்றும் ஒரு கிளை நிலையம் ஏற்பட்டுள்ளது. வளர்ச்சி வட்டாரப் பகுதியில் குடும்ப நலத் திட்டம் சம்பந்தமாக கணக்கு எடுத்து. மக்களைக் கருத்தடை செய்து கொள்ள நயமுடன் எடுத்துச் சொல்லும் பணி செய்வதற்காக, 20,000 மக்கள் கொண்ட ஒவ்வோரிடத்திலும் கூடுதலாக குடும்ப நல ஆய்வாளர் ஒருவர் உண்டு. தமிழ் நாட்டில் 373 கிராமக் குடும்ப நல நிலையங்கள் உள்ளன. நியமிக்கப்படும் பணியாளர்களுக்கு

வட்டார குடும்பநலத் திட்டப் பயிற்சி நிலையங்கள் ஒன்றில் பயிற்சி அளிக்கப்படுகின்றது.

நகர்ப்புற (குடும்ப நல) நிலையங்கள்

குடும்ப நலத்திட்டப் பணி, தொண்டு நிறுவனங்களாலும், உள்ளாட்சி மன்றங்களாலும், மாநில அரசாலும் நடத்தப்படும் நகர்ப்புற குடும்ப நலத்திட்ட நிலையங்கள் மூலமாக நடத்தப்பட்டு வருகிறது. அரசு நடத்திவரும் நிலையங்கள் 149, உள்ளாட்சி மன்றங்கள் நடத்தி வருபவை 7. தொண்டு நிறுவனங்கள் நடத்தி வருபவை 17. அரசு நடத்திவரும் நகர்ப்புற நிலையங்கள், மருத்துவ மனையில் மகளிர் நோயியல்-மகப்பேறு மருத்துவத் துறையின் ஒத்துழைப்புடன் அமைக்கப்பட்டுள்ளன. இவை தாய்சேய் நலப் பணிகளுடன் இணைந்தவை.

கருந்தடை

இம்மாநிலத்தில், 1971–72-ஆம் ஆண்டு 1,73,888 பேருக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்யத் திட்டமிட்ட இலக்கத்திற்கு மாறாக, 245,784 "வாசக்டமி" அறுவைச் சிகிச்சையும் 43,668 "சால்பின்ஜக்டமி" Salphingectomy அறுவை சிகிச்சையும் நடத்தப்பட்டன. கருத்தடை அறுவை மருத்துவத்தின் அளவு (41.4) சதவிகிதம் அதிகரித்துள்ளதற்குக் காரணம், கன்னியாகுமரி மாவட்டம் நீங்கலாக, தமிழ்நாட்டில் எல்லா மாவட்டங்களிலும் குடும்ப நலத் திட்டம் தீவிரமாகத் தொடங்கி வைக்கப்பட்டதே ஆகும். 1971–72 குடும்ப நலத்திட்ட தீவிர இயக்கத்தின்போது, சுமார் 2 லட்சம் கருத்தடை அறுவை மருத்துவம் நிகழ்த்தப்பட்டன; மற்ற காலங்களில் சுமார் 46,000 கருத்தடைச் சிகிச்சைகள் நடத்தப் பட்டிருந்தன.

தஞ்சாவூர் முறை, தமிழ்நாட்டில் பிறமாவட்டங்களில் பின் பற்றப்பட்டுள்ளதோடு ஏனைய மாநிலங்களிலும் வரவேற்கப்பட் டுள்ளது. 1972–73-க்கு 225,000 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் என இலக்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில், செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, சேலம், கோயம்புத்தூர், மதுரை, இராமநாதபுரம் திருநெல்வேலி, ஆகிய 10 மாவட்டங்களில் குடும்ப நலத் திட்ட தீவிர இயக்கம் தொடங்கப்பட்டுள்ளது. இந்தத் தீவிர திட்டக் காலத்தில்

வாசக்டமி, அறுவை சிகிச்சை ஒவ்வொன்றுக்கும் ரூ. 100 செலவிடுவதற்கு இந்திய அரசு அனுமதி வழங்கியுள்ளது. ஆனால், இந்த இயக்கக் கால அளவில் ஒரு மாவட்டத்தில் குறைந்த அளவு 10,000 அறுவைச் சிகிச்சைகளேனும் நடத்தப்பட வேண்டும். தஞ்சாவூர் முறையின்படி நல்வாழ்வு நிலையங்களை நடத்துவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். 1972–73-ஆம் ஆண்டில் 1973 ஜனவரி முடிய 263,423 கருத்தடை அறுவைச் சிகிச்சைகள் நடத்தப்பட்டன. இவற்றில் 237,613 வாசக்டமியும், 25,810 சால்பின்ஜக்டமி அறுவைச் சிகிச்சையுமாகும். (1972–73) குடும்ப நலத் தீவிர திட்டம் இயக்க காலத்தில் 1972 டிசம்பர் வரை செய்யப்பட்ட வாசக்டமி அறுவைச் சிகிச்சை மட்டும் 194,000 ஆகும்.

கருத்தடை வளையங்கள்

கருத்தடை வளையங்களைப் பொறுத்தும் உத்தியில் வட்டார குடும்ப நலப் பயிற்சி நிலையத்தில் 30 நாள் கால அளவுக்குப் பெண் மருத்துவ அதிகாரிகளுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. புண் இல்லாமல் நல்ல நிலையில் தாய்மார்கள் உள்ளனரா என்று கவன முடன் சோதித்தப் பிறகே பயிற்சி பெற்ற பெண் மருத்துவ அதிகாரிகளால் கருத்தடை வளையங்கள் பொருத்தப்படுகின்றன. கருத்தடை வளையங்களைப் பொருத்தியதில் சிக்கல்கள் ஏதும் ஏற்பட வில்லை. 1971–72-ல் 37,419 கருத்தடை வளையங்கள் பொருத்தப் பட்டன.

1972–73-ல் 70,000 கருத்தடை வளையங்கள் பொறுத்துவதென்று இலக்கிடப்பட்டுள்ளது. 1972–73-ஆம் ஆண்டில் ஜனவரி மாதம் வரை 17,611 கருத்தடை வளையங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

மரபு வழி கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோர்.

மரபு வழி கருத்தடைச் சாதனங்களை உபயோகிப்பது நாளுக்கு நாள் பெருகிவருகின்றன. மரபு வழிச் சாதனங்கள் பயன்படுத்து வோரின் எண்ணிக்கை 125,000 என்று இலக்கமிடப்பட்டுள்ளது. 1971–72, 1972–73 (1973 ஜனவரி வரை) ஆண்டுகளில் மரபு வழி கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்துவோரின் எண்ணிக்கை முறையே 121,128-ம் 88,947-ம் ஆகும்.

தமிழ் நாடு 1958-ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்படி மகப்பேறு நிலையங்களைத் திறந்து பேணி வருவது ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் பொறுப்பாகும். தற்போது மக்கள் தொகையில் பத்தாயிரம் பேருக்கு ஒரு நிலையம் விதம் மகப்பேறு நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. 1—1—1972-ஆம் நாள் வரை நிலையங்களின் மொத்த எண்ணிக்கை 3,801 ஆகும். ஊராட்சி ஒன்றியக் குழு வைத்து வரும் நிலையங்கள், தாங்கள் மேற்கொள்ளும் தொடரினச் செலவில் மூன்றிலிரு பாகத் தொகையை மானியமாக அரசிடமிருந்து பெறுகின்றன. 1971–72 மானியமாக ரூ. 39,74,766 அவற்றுக்குக் கொடுக்கப்பட்டது.

நகராட்சிகளில் 68 மகப்பேறு இல்லங்களும், 303 மகப்பேறு நிலையங்களும் இயங்கி வருகின்றன. இவை, தாங்கள் மேற்கொள்ளும் தொடரினச் செலவில் 25 சதவிகிதம் மானியமாக அரசிடம் பெறுகின்றன.

மேற்சொன்ன மானியத்திற்காக 1971-72-ல் மானியமாக ரூ. 6,59,617-க்கு ஒப்பளிப்பு வழங்கப்பட்டது.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் நடத்தி வரும் மகப்பேறு நிலையங்களுக்குக் கூடுதலாக, அரசு, போருக்குப் பிந்திய மறு சீரமைப்புத் திட்ட வேலையில் ஒரு பகுதியாக 76 கிராமங்களில் மகப்பேறு நிலையங்களை ஏற்படுத்தியுள்ளது. மிகவும் பின்தங்கிய பகுதிகளாக அப்போது கருதப்பட்ட தொலை தூரத்தில் உள்ள கிராமங்களில் இந்த நிலையங்கள் அமைக்கப்பட்டன. இந்த நிலையங்களுக்கு ஏற்பட்ட மொத்தச் செலவு 1971-72-ல் ரூ. 5,31,556 ஆகும். 1972-73 வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் இவற்றுக்கு ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 5,27,500 ஆகும்.

(C) குழந்தைகள் நோய்க் காப்புத் திட்டம்.

1964 அக்டோபர் 1-ஆம் நாள் முதலாக, தொடக்கச் சுகாதார நிலையங்கள் மூலமாக, நிர் மாதிரிக் கிராமப் பகுதிகளில் குழந்தைகள் நோய்க் காப்புத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

தொண்டைப் புண், இசிவு நோய், கக்குவான் ஆகிய மூவகை நோய்த் தடுப்பு ஊசி போட்டு நோயினின்றும் 0–5 வயதுக் குழந்தைகளுக்குத் தற்காப்பு அளிக்கப்படுகிறது. ஒரு வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்கு மிகுந்த நாட்டம் இவ்வகையில் செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு குழந்தைக்கும் ஒவ்வொரு முறை அளிக்கப்படும் மருந்துக்கு ஒரு மாதம் இடைவெளி விட்டு மும்முறை டி.பி.டி. மருந்து கொடுக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ஒவ்வொரு தொடக்கச் சுகாதார நிலையத்திலும் காப்பு அளிக்கப்பட வேண்டிய குழந்தைகள் 900 என்று இலக்கிடப்பட்டுள்ளது.

1969-70-லிருந்து 1972-73 வரை முத்தடுப்பு மருந்து கொடுத்துக் காப்பளிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கைபற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு.	தற்காப்பளிக்கப்பட்ட குழந்தைகளின் எண்ணிக்கை.
1969–70	87,239
1970–71	97,358
1971–72	1,03,667
1972–73 (1972 டிசம்பர் வரை)	71,542

குடும்ப நலத் திட்டத்தை ஏற்றுக்கொள்வதில் தவறான கருத்துக்கள் இருப்பதை எல்லாம் களைந்து, சமுதாயத்தினர் எல்லோருக்கும் இதன் நன்மையை அளிப்பதற்காக, குடும்பநலப் பணிகள் பொதுவாக சமுதாய நலத் திட்டங்கள் மூலமாகவும், குறிப்பாக தாய்-சேய் நலப் பணிகள் மூலமாகவும் கிடைக்குமாறு செய்யப்படுகின்றன.

முதல் நடவடிக்கையாக, கிழ்க்காணும் தாய்சேய் நலப் பணிகள், அரசு, உள்ளாட்சி மன்றங்கள், தனியார் தொண்டு நிறுவனங்கள் நடத்தி வரும் நகர்ப்புற குடும்ப நல நிலையங்கள்

[1973 மார்ச் 23

தாய்-சேய் நல நிலையங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றன :—

(1) தொண்டைப் புன்-இசிவு நோய்-கக்குவான் (D.P.T.) நோயினின்றும் சிசுக்களுக்கும் பள்ளி செல்லும் வயது அடையாத சிறார்களுக்கும் தற்காப்பு அளித்தல்.

(2) இசிவு நோயினின்றும் கருவுற்ற தாய்மார்களுக்குத் காப்பு.

(3) ரத்துக் குறைவினால் ஏற்படும் இரத்தச் சோகை நோயினின்றும் தாய்மார்களுக்கும், குழந்தைகளுக்கும் நோய்த் தடுப்பு மருத்துவம்.

(4) குழந்தைகளுக்கு ஏற்படும் பார்வை மந்த நோய்க்கு மருத்துவம்.

தாய்மார்களுக்கு மேற்சொன்ன சேவைகள் அளிக்கப்படும் போது, தாய்மார்களுக்கு, குழந்தை நலப் பராமரிப்பு பற்றி அறிவுரை அளிப்பதுடன் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றியும் அறிவுறுத்தப்படுகின்றன. விரும்பிய குழந்தைகளை ஏற்கெனவே பெற்றுள்ள தாய்மார்களுடன், குடும்பத்தை உரிய அளவில் வைத்து வருவதன் அவசியம் பற்றிக் கலந்து பேசி அவர்கள் கருத்தடை செய்து கொள்ள ஏற்பாடு செய்யப்படுகிறது.

மேற்சொன்ன திட்டத்தின்கீழ் மூலைக நோய்த் தடுப்பு ஊசி, டெடனஸ் டாக்ஸாயிட், வைட்டமின் A முதலியவற்றை இந்திய அரசு வழங்குகிறது.

1972–73-ல் மேற்சொன்ன திட்டத்தின்கீழ் கிழ்க்காணும் கிட்ட இலக்குகள் முடிவு செய்யப்பட்டுள்ளன :—

(1) டிபிடி நோயினின்றும் தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் தற்காப்பு.	36,000	தாய்மார்கள்.
(2) டெடனஸ் நோயினின்றும் பேறு காலத் தாய்மார்களுக்குத் தற்காப்பு.	2,63,000	தாய்மார்கள்.

1973 மார்ச் 23]

(3) ரத்துக் குறைவால் உண்டாகும் ரத்த சோகை நோய்க்கு தாய்மார்களுக்கும் குழந்தைகளுக்கும் மருத்துவம்.	3,90,000	தாய்மார்கள், குழந்தைகள்.
(4) குழந்தைகளுக்கு உண்டாகும் பார்வை மந்த நோய்க்கு மருத்துவம்.	7,20,000	குழந்தைகள்.

II. மக்கள் சத்துணவு பெறச் செய்வதற்கான மேம்பாட்டுப் பணிகள்.

நமது மாநிலச் சத்துணவுக் கழகம் 1944-லிலேயே தொடங்கப் பட்டது. உணவு, உயிரியல் சோதனைகளில் ரசாயனப் பகுப்பாய்வு நடத்துவதற்கு உரிய சாதனங்களைக் கொண்டு இது அமைந்துள்ளது. இம் மாநிலத்தில் உள்ள உணவுப் பழக்கங்களையும், ஊட்டச் சத்துக் குறைபாடுகளையும் கண்டறியவும், முறையான உடற்கூறு வளர்ச்சி ஆய்வுகள் நடத்தி அதன் மூலம் உடற்கூறு நியதிகளை ஏற்படுத்தவும், சத்துணவுத் திட்டம் பற்றி அறிவுரை வழங்கவும் தனக்குரிய நோக்கங்களாகக் கொண்டு இந்தக் கழகம் அமைக்கப்பட்டது.

இருபத்து நான்கு மணி நேரக் கால அளவில் உட்கொள்ளும் உணவு வகைகளை அறிய விடு-விடை முறை மூலம் உணவு பற்றிய ஆய்வுகள் நடத்தப்படுகின்றன. சமூகத்தில் பின்தங்கிய வகுப்பினரைக் கணிசமான அளவுடைய 4,000—5,000 பேருடைய (கிராம) மக்கள் தொகுதி தெரிந்தெடுக்கப்படுகிறது. பாலர்கள், மகப்பேறுக்கு முற்பட்ட, பிற்பட்ட தாய்மார்கள் குறித்த கணக் கெடுப்பு வேலை சுகாதாரப் பார்வையாளர்களால் நடத்தப்படுகிறது. பாலர்கள், மகப்பேறுக்கு முற்பட்ட, பிற்பட்ட தாய்மார்கள் குறித்து சத்துணவு-உணவு ஆய்வு வேலைகள் நடத்தப்படுகின்றன. 1971 ஜூலையிலிருந்து இதுவரை கிழ்க்காணும் வளர்ச்சி வட்டாரங்களில் மருத்துவ, உணவு ஆய்வுகள் முடிக்கப் பட்டுள்ளன :—

(1) ஆத்தூர் (மதுரை மாவட்டம்).
(2) எருமைப்பட்டி (சேலம் மாவட்டம்).
(3) அகஸ்தீஸ்வரம் (கன்னியாகுமரி மாவட்டம்).

(4) வில்லிவாக்கம் (செங்கற்பட்டு மாவட்டம்).

(5) ஆலங்காயம் (வட ஆர்க்காடு மாவட்டம்).

(6) ஹரூர் (தருமபுரி மாவட்டம்).

(7) கோடைக்கானல் (மதுரை மாவட்டம்).

(8) குறிஞ்சிப்பாடி (தென் ஆர்க்காடு மாவட்டம்).

(9) அறந்தாங்கி (தஞ்சாவூர் மாவட்டம்).

2,044 குழந்தைகள் மகப் பேறுக்கு முற்பட்ட 142 தாய்மார்கள், மகப்பேறுக்கு பிற்பட்ட 352 தாய்மார்கள், ஆகியோரிடையே ஆய்வு வேலை நடத்தப்பட்டது. ஆய்வு விவரங்கள் பின்வருமாறு :—

	உட்கொள்ளும் கலோரி அளவு.	இருக்கவேண்டிய இயல்பான அளவு.	உட்கொள்ளும் புரதம் (பி).	இயல்பான அளவு.	உட்கொள்ளும் வைட்டமின் I.U.	இயல்பான அளவு I.U.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
குழந்தைகள் ..	712	1,200	18·2	19	311	2,500
மகப் பேறுக்கு முற் பட்ட தாய்மார்கள்.	1,704	2,500	65·5	55	401	2,500
மகப்பேறுக்குப் பிற் பட்ட தாய்மார்கள்.	1,854	2,900	48·3	65	426	3,833

புரதம் மிகுந்த நிலக் கடலைப் புண்ணாக்குத் தூள், வறுத்த கடலை, வறுத்த பயறு, வறுத்தக் கொள்ளு, கோதுமை மாவு, பி.எஸ்..எம். பட்டாணி, வெண்ணெய் இவற்றைக் கூட்டாகவோ அல்லது தனித் தனியாகவோ பயன்படுத்தி, பல்வேறு மலிவான சத்துணவுத் தயாரிப்புகள் சோதித்துப் பார்க்கப்பட்டன. சத்துணவில் பயிற்சி பெறுபவர்களுக்கும் மகளிர் மன்ற உறுப்பினர்களுக்கும் பாலர் பள்ளி ஆசிரியைகளுக்கும் கிராமத்திலும் நகர்ப்புறத்திலும்

உள்ள மக்களுக்கும் வலம்வரும் சமையல் ஊர்தி வசதியைப் பயன்படுத்தி சத்துணவு தயாரிப்பு கட்புல் விளக்க முறைகள் மூலம் செய்து காட்டப்படுகின்றன.

சமையற்கூட விளக்கமுறை திட்டத்தின்கீழ் 1972 ஜனவரி முதல் டிசம்பர் வரை உள்ள காலத்தில் 86 கட்புல விளக்க முறைகள் செய்து காட்டப்பட்டன. நிலக்கடலைப் புண்ணாக்குத் தூள், மிட்டாய் தின்பண்டம், கிரைக்கட்டு, கேழ்வரகு பகோடா, கோதுமை பலகாரம், நிலக்கடலைப் புண்ணாக்குத் தூளுடன் பொங்கல், வறுத்தக் கடலை, வறுத்தக் கடலைக் கஞ்சி, கேழ்வரகு, உருளைக்கிழங்கு பஜ்ஜி ஆகிய மலிவான உணவுத் தயாரிப்புகள் செய்து காட்டப்பட்டு வழங்கப்பட்டன. இவ்வாறாக, உள்ளூர் உணவுத் தயாரிப்புகளைப் பயன்படுத்துவதில் மக்கள் ஊக்குவிக்கப் பட்டனர். ஆக இதன் மூலம் 12,004 பேர் பயனடைந்தனர்.

துணை உணவூட்டும் திட்டம் :

துணை உணவூட்டும் திட்டம் இம்மாநிலத்தில் 1950-இல் தொடங் கப்பட்டது. மக்கள் தொகையில், எளிதில் நோய் பீடிக்கும் நிலையில் உள்ளோரில் பெரும் பிரிவினராயுள்ள குழந்தைகள், கருவுற்றிருக்கும் மகளிர், பாலூட்டும் தாய்மார் ஆகியோரிடம் காணப்படும் ஊட்டச் சத்துக் குறைபாட்டைப் போக்குவதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இந்தத் திட்டம் 'கேர்' (CARE) நிறுவனத்தின் உதவியுடன் செயற்படுத்தப்பட்டு வருகிறது. அந்நிறுவனம், தானியம்-சோயாபீன்-பால்மாவு (Corn-soy-milk) 'சால்டு எண்ணெய்' போன்ற உணவுப் பண்டங்களைத் தேவைப் படும் அளவு நன்கொடையாக வழங்குகிறது. இவ்வாறு அளிக்கப் பட்ட உணவுப் பண்டங்கள் தற்போது 1972-ம் ஆண்டில், சுமார் 25 லட்சம் கிலோகிராம் உணவுப் பொருட்கள் 'கேர்' நிறுவனத் திடமிருந்து பெறப்பட்டது. இப்பொருட்கள், 1,11,004 பேர்கள் பயனடையும் பொருட்டு 3,327 உணவு அளிக்கும் நிலையங்கள் மூலம் வழங்கப்பட்டது. 3,327 உணவு நிலையங்களில், 378 தொடக்கச் சுகாதார நிலையங்களும், நகராட்சிகளால் நடத்தப்படுகிற 289 தாய்-சேய் நல நிலையங்களும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களால் நடத்தப் படுகிற 2,525 தாய்-சேய் நல நிலையங்களும், பின்தங்கிய பகுதித் திட்டத்தின்கீழ் நடத்தப்படுகிற 101 மகப்பேறு நிலையங்களும்,

25 பழுதாயறை நிலையங்களும், 9 பிறவகை நிலையங்களும் அடங்கும்.

III. தொற்று நோய்களின் தடுப்பும், கட்டுப்பாடும்.

காலரா.

கடந்த காலத்தில் காலரா தடுக்க முடியாத பேராபத்தான நோய்களில் ஒன்றாக இருந்தது. பைபிரியோ காலரா என்னும் நோய்க் கிருமி இந்த நோய் ஏற்படக் காரணமாகும். தொற்று நோய்க் கிருமி கலந்த நீர் அல்லது உணவு அல்லது அவ்விரண்டின் மூலமாக இந்த நோய் பரவுகிறது. காத்தி அல்லது மலக் கழிவுப் பொருள்கள் மீது உட்காரும் ஈ, கொசு போன்றவை மூலம் நீரிலும், உணவிலும் அவை உட்காரும்போது இக்கிருமிகள் அவற்றில் கலந்துவிடுகின்றன. இத்நோய் கண்டுள்ளவர்கள், தாம் அறியாமலே வைப்படையாக எந்த அறிகுறியும் தோன்றுதபோதே இத்தத் தொற்று நோயைப் பரவச் செய்கின்றனர். நமது மாநிலத்தில் இந்நோய் எங்கோ ஒவ்வோரிடத்தில் மட்டும் கண்டுள்ளது.

பாதுகாப்பான நீர் வழங்கல், துப்புரவான கழிப்பிடங்கள் முதலியவற்றிற்கு வகை செய்வது போன்ற நீண்டகால நடவடிக்கைகளுக்கு மேலாக, இந்நோயைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன :—

கொள்ளை நோய்த் தடுப்பு நடவடிக்கைகளைக் கவனித்துக் கொள்வதற்காக 64 சுகாதார ஆய்வாளர்கள் உள்ளனர். இம்மாநிலத்தில் எப்பகுதியில் காலரா கண்டுள்ளதாக தகவல் கிடைத்தாலும், போதுமான எண்ணிக்கை உள்ள ஆய்வாளர்கள் அப்பகுதிக்கு அனுப்பப்படுகின்றனர். பெரும்பாலோருக்குக் காலரா நோய்த் தடுப்பு ஊசி குத்துதல், குளோரின் கலந்த நீர் வழங்கல், மலத்தின் தொற்றுத் தன்மையை நீக்குவதில் முதலான நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதில் உள்ளூர் பணியாளர்களுக்கு அவர்கள் துணை புரிவர். மேலும், முக்கியமான கிருமிநாக்கள் கடைபெறும் இடங்களில் கிருமிநாக் கடைபெறு வதற்கு முன்பும், கிருமிநாவின் போதும் குழாய்நீரில் குளோரின் கலத்தல் போன்ற முன்னேற்பாட்டு நடவடிக்கைகளை மேற் கொள்வதற்காகவும் இந்த ஆய்வாளர்கள் அனுப்பப்படுகின்றனர். இது முக்கியமான பணியாகும். எனெனில், கிருமிநாக்கள் இத்தொற்று நோயைப் பரவச் செய்வதற்கு ஏற்ற ஒரு வாயிலாக அமையக்கூடும் என்பதை அனுபவம் காட்டுகின்றது.

தற்போது கொள்ளை நோய்க் கட்டுப்பாட்டுப் பிரிவுகள் செயல் படுகின்றன. அவற்றிற்குத் தேவையான சுகாதாரப் பணியாளர் களுக்கும் விரைவு மருத்துவ ஊர்திகளுக்கும், ஜீப் வண்டிகளுக்கும் வகை செய்யப்பட்டுள்ளது. கீழ்க்கண்ட இடங்கள் ஒவ்வொன்றிலும் ஒரு விரைவு மருத்துவ ஊர்தி உள்ளது : பூவிருந்தவல்லி, காஞ்சிபுரம், கடலூர், மதுரை, திருநெல்வேலி, கோயம்புத்தூர், சேலம், வேலூர், இராமநாதபுரம். கொள்ளை நோய்க் கட்டுப் பாட்டுப் பணியைக் கவனித்துக் கொள்வதற்காக ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஜீப் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வண்டிகள் காலரா பரவியுள்ள பகுதிகளுக்குச் சென்று தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அனைவருக்கும் நோய்த்தடுப்பு ஊசிகள் குத்துதல், குடிநீரில் குளோரின் மருந்தைக் கலத்தல், நோய்க் கண்டுள்ளோரை மிக அண்மையிலுள்ள மருத்துவ நிலையத்திற்கு விரைவு மருத்துவ ஊர்தியில் எடுத்துச் செல்லுதல் ஆகிய பணிகளை அவை மேற்கொள்ளும். இந்நோய் பெருமளவில் பரவியுள்ள நிலைமைக்கிணங்க அப்பகுதிகளுக்கு இந்தப் பிரிவுகள் அனுப்பப்படுகின்றன.

காலரா கட்டுப்பாடு திட்டம்.

தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி ஆகிய மாவட்டங்கள் காலரா நோய் பரவியுள்ள இடங்களாகும். இந்நோய் பரவியுள்ள இந்த நான்கு மாவட்டங் களில் 150 வட்டாரங்கள் உள்ளன. நோய் பரவியுள்ள இந்த நான்கு மாவட்டங்களிலுள்ள 75 வட்டாரங்களில் இத்திட்டம் செயற்படுத்தப்படுகிறது.

காலரா கட்டுப்பாடு திட்டத்திற்காக நடமாடும் மருத்துவப் பேருந்து ஒன்றும் உள்ளது. இதில் மக்கள் நல்வாழ்வு அதிகாரி ஒருவர், செவிலியர் இருவர், செவிலி உதவியாளர்கள் இருவர், உடல்நல ஆய்வாளர் ஒருவர், வலவர் ஒருவர் ஆகியோர் பணி புரிகின்றனர். இப்பிரிவில் வண்டி ஒன்றும் உள்ளது.

தலைமையிடத்தில், அதாவது, சென்னையில் காலரா கட்டுப்பாட்டுத் திட்டம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு பிரிவு உள்ளது.

மேற்குறிப்பிட்ட நோய் பரவியுள்ள நான்கு மாவட்டங்களிலுள்ள எஞ்சிய 75 வட்டாரங்களுக்கு இத்திட்டத்தை நீட்டிப்பது குறித்த செயற்குறிப்புகளை மக்கள் நல்வாழ்வு (பணிகள்)—குடும்பநலத் துறை இயக்குநர் பணிந்தனுப்பியுள்ளார். இச்செயற்குறிப்புகள் குறித்து ஆய்வு செய்யப்பட்டு வருகிறது.

காலரா கட்டுப்பாடு திட்டத்திற்காகும் முழுச் செலவும் இந்திய அரசினால் ஈடு செய்யப்படுகிறது.

1972 ஆம் ஆண்டில் இம்மாநிலத்தில் 16,69,731 காலரா நோய்த் தடுப்பு ஊசிகள் குத்தப்பட்டன.

1958 ஆம் ஆண்டில், 6,508 பேருக்கு நோய் கண்டதில், 2,298 பேர் இறந்தனர். ஆனால், 1972 ஆம் ஆண்டில் நோய் கண்டவர்களின் எண்ணிக்கை 3,670 ஆகவும், இறந்தவர்களின் எண்ணிக்கை 205 ஆகவும் குறைந்துள்ளது. அரசு மேற்கொண்ட பல்வேறு தடுப்பு நடவடிக்கைகள் மூலம் நோய் பீடிக்கப்படுபவர்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடிந்தது.

பெரியம்மை.

பெரியம்மை நோய் நச்சுத் தொற்றுள்ள நோயாகும். இந்நோய் ஒருவரிடமிருந்து மற்றொருவருக்குப் பரவும் தன்மை வாய்ந்ததாகும்.

இக்கொடிய நோய், உலகத்தின் பல பாகங்களில் ஒழிக்கப்பட்டபோதிலும், இந்தியாவில் இன்னும் நிலவி வருகிறது. உலகத்தில் கண்டுள்ள பெரியம்மை நோயில் 1971-ஆம் ஆண்டில் இந்தியாவில் 31 சதவிகிதமும், 1972 ஆம் ஆண்டில் 42 சதவிகிதமும் பரவி இருந்தது.

"பெரியம்மை ஒழிப்பு தேசியத் திட்டம்" 1963-64 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. (அ) மக்கள் தொகையில் இந்நோயால் பீடிக்கப்படக்கூடிய அனைவருக்கும் முறையாக அம்மைப் பால் குத்துவதன் மூலமும், (இ) பெரியம்மை கண்டுள்ள ஒவ்வொரு வரையும் கண்டுபிடித்து நோய் பரவாமல் தடுப்பதற்குரிய சரியான நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலமும் சமுதாயத்தில் பெரியம்மை நோய் பரவுவதைத் தடுப்பதைக் குறைப்பதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் பணியாளர்கள் நல்கிய உழைப்பாலும், பொது மக்களின் ஒத்துழைப்பினாலும், நம் மாநிலத்தில் பெரியம்மை பெரும்பாலும் ஒழிக்கப்பட்டுள்ளது. நம் மாநிலத்தில் 1964 ஆம் ஆண்டில் 5,545 பேருக்கு பெரியம்மை நோய் கண்டது. ஆனால், 1972 ஆம் ஆண்டில் நம் மாநிலத்தில் பெரியம்மை நோய் கண்டவர்கள் ஒருவருமில்லை. எனினும், 1972 ஆம் ஆண்டில் வெளி மாநிலத்திலிருந்து வந்த ஒருவருக்கு நோய் கண்டதால் அவர் சென்னை, தொற்று நோய் மருத்துவ மனையில் உடனடியாகச் சேர்க்கப்பட்டார். அவரிடமிருந்து நோய் பரவாமல் இருப்பதற்கு சிறந்த தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

1969 ஆம் ஆண்டிலிருந்து நம் மாநிலத்தில் பெரியம்மை நோய் கண்டவர் ஒருவரும் இல்லையென்றாலும், இந்தியாவின் பிற மாநிலங்களிலிருந்து நம் மாநிலத்திற்கு வரும் ஒருவருக்கு பெரியம்மை நோய் இருந்தால் அதைத் தடுப்பதில் நாம் எப்போதும் விழிப்பாயிருக்க வேண்டும். இந்தியாவில் 1972 ஆம் ஆண்டில் (ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) 27,500 பேர்களுக்கு இந்நோய் கண்டிருந்தது என்பதை நான் ஈண்டு குறிப்பிட விழைகிறேன். பிற மாநிலத்திலிருந்து அத்தகைய நோய் கண்டுள்ளவர் நமது மாநிலத்திற்கு எதேனும் காரியத்தை முன்னிட்டு வர நேர்ந்தால், அவர்கள் நம் மாநிலத்தில் இருக்கும் பட்சத்தில் அந்நோய் பெருகி பரவக்கூடும் என்ற அச்சம் நமக்கு எப்போதும் உள்ளது. அத்தகைய நேர்வுகளைக் கண்டுபிடிப்பது மிக முக்கியமானதாகும். அப்போதுதான் உள்ளூர் மக்களுக்கு நோய் பரவாமல் தடுக்க இயலும்.

பெரியம்மை கண்டுள்ளதாக சந்தேகப்பட்டால் அது குறித்து உள்ளூர் நல்வாழ்வு அதிகாரிகளுக்கு மக்கள் தகவல் தெரிவிக்க ஊக்கப்படுத்தும் பொருட்டு, இந்தாள் வரை

பெரியம்மை நோய் கண்டில்லாத இடத்தில் நோய் கண்டிருந்தால் அது குறித்து முதலாவதாக தகவல் தெரிவிக்கும் நபருக்கு ரூ. 10 சொக்கப் பரிசு கொடுக்க அரசு ஆணையிட்டுள்ளது.

"பெரியம்மை ஒழிப்பு தேசிய திட்டம்" குறித்த பணிகளை மேற்கொள்வதற்கு, மக்கள் நல்வாழ்வுத் துறையில் 1,410 அம்மை குத்துபவர்களும், 97 மேற்பார்வையாளர்களும், 35 தேர்வுத்தர உடல்நல ஆய்வாளர்களும் உள்ளனர். அம்மை குத்துதல், நோய் பரவாமல் கண்காணித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்வதற்காக, கூடுதலாக 199 அம்மை குத்துபவர்கள், 50 மேற்பார்வையாளர்கள், 5 தேர்வுத்தர உடல்நல ஆய்வாளர்கள் ஆகியோரைப் பணிக்கமர்த்த அண்மையில் 1972, டிசம்பர் திங்களில் அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது.

1971–72 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் செய்யப்பட்ட செலவு ரூ. 20.82 லட்சமாகும். 1972, ஏப்ரல் திங்களிலிருந்து 1972, டிசம்பர் வரை செய்யப்பட்ட செலவு ரூ. 15.73 லட்சமாகும். இத்திட்டத்திற்காக 1973–74 ஆம் ஆண்டிற்காக வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 21.28 லட்சமாகும்.

பிளேக்.—கடந்த காலத்தில் பிளேக் ஒரு மிகப் பெரிய கேடு விளைவிக்கும் பிரச்சினையாக இருந்தது. முன்னெல்லாம் பிளேக் நோயால் தாக்கப்பட்ட மக்கள் எண்ணிக்கையில் இறந்து போவது ஒரு வழக்கமாகும். பிளேக் முக்கியமாக எலிகளி போன்ற கொறிக்கும் பிராணிகளைத் தாக்குகின்ற ஒரு நோய் என்று குறிப்பிட வேண்டியுள்ளது. இந்நோய் மனிதர்களுக்கு எலிகளிட மிருந்து எலிப் பிளேஞ்சுப் பூச்சிகளால் பரவுகிறது. 1930 ஆம் ஆண்டில், நமது மாநிலத்தில் பிளேக் நோயைக் கட்டுப்படுத்த சைனோகாஸ் (Cynogas) புகையூட்டு கிருமிகளை ஒழித்து நோய்பரவாமல் தடுக்கும் முறை கொண்டுவரப்பட்டது. அதனால் நிலைமை பெரிதும் கிருக்கியது. இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் பிளேக் நோயைப் பரப்புகின்ற நெஞ்சுப் பூச்சிகளைக் கொல்லுவதற்கு டி.டி.டி. (D.D.T. மருந்து பயன்படுத்தப்பட்டது. ஆனாலும் தென்னிந்தியாவில் இக்கொள்ளை நோய் அடிக்கடி தோன்றிப் பரவும் இடமாகவுள்ள தருமபுரி மாவட்டம் தேனிகூர்

பகுதியில் பிளேக் நோய் அவ்வப்போது தோன்றி, பரவிக் கொண்டு இருந்தது. 1961-62-ல் நெஞ்சுப் பூச்சிகள் டி.டி.டி. மருந்தை எதிர்த்து நாக்குபிடிக்கும் வன்மை பெற்றுவருவதாகக் கண்டறியப்பட்டது. எனவே நெஞ்சுப் பூச்சிகளைக் கொல்ல பல்வேறு பூச்சி மருந்துகளைக் கொண்டு சோதனை செய்யப்பட்டது. இறுதியில் பி.எச்.சி. என்னும் பூச்சிக் கொல்லி மருந்து தெரிந்தெடுக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டிற்குப் பிறகு இம்மாநிலத்தில் பிளேக் நோய் அறவேயில்லை.

22—10—71 முதல் 9—1—72-ம் நாள் முடிய, 931 எலிகள் செத்து விழுந்ததாக செய்திகள் வந்தன. உடனடியாக பிளேக் கட்டுப்பாடு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டன. இதன் விளைவாக, மனிதர்கள் யாருக்கும் பிளேக் நோய் காணப்படவில்லை.

பிளேக் நோய் பரவியுள்ள இடங்களாகிய தருமபுரி, நீலகிரி, வட ஆர்க்காடு, கோயம்புத்தூர் ஆகிய மாவட்டங்களிலும். உதகமண்டலம், கூனூர் வெலூர், ஆகியவற்றிலுள்ள நகராட்சிகளிலும் பிளேக் நோய்க் கட்டுப்பாட்டிற்காக வழக்கமாக எடுக்கப்படும் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

மலேரியா.—இம்மாநிலத்தில் மாநிலத் தலைமையிடத்தில் மலேரியா கட்டுப்பாட்டுக் கழகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. மலேரியாவையும், கொசுக்களினால் பரவும் நோய்களையும் கட்டுப்படுத்துவது குறித்து இக்கழகம் கவனிக்கிறது. நன்கு தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் இதில் பணி புரிகின்றனர். தஞ்சாவூர், கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் இரண்டு வட்டார மலேரியா அமைப்புகள் உள்ளன. அங்கு ஆய்வுக் கூடங்களும், பயிற்சி, ஆராய்ச்சி, ஆய்வு வசதிகளும் உள்ளன.

1958–59 ஆம் ஆண்டிலிருந்து இம்மாநிலத்தில் மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக நம் மாநிலம் 31.45 பிரிவுகளாகப் பிரிக்கப் பட்டது.

திட்டத்தின் முதல்நிலையில் "நன்னிய நோய்க் கிருமிகளின் நெருக்கம்" டி.டி.டி. D.D.T. மருந்து முழ்முமாக தெளிக்கப் படுவதன் மூலம் குறைக்கப்பட்டது. சமுதாயத்தில் பெருமளவில்,

நோய் கண்டுள்ளவர்களை, மலேரியா ஒழிப்பு தேசிய திட்டப் பணியாளர்கள் விடுதோறும் சென்று கண்டுபிடித்தனர். நோய் கண்டுள்ளவர்களுக்கு முழு சிகிச்சை அளிக்கப்பட்டது. அத்தகைய முழுமூர நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் தற்போது பேணுதல் நிலையில் (Maintenance phase, உள்ள 28.75 பிரிவுகளில் மலேரியா ஒழிக்கப்பட்டது.

305 பிரிவுகளில், நோய்க் கட்டுப்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்கும் நிலை Consolidation phase குறித்த பணிகள் இன்னும் மேற்கொள்ளப்படுகிறது. அங்கு, மலேரியா நோய் கண்டுள்ளவர்களைக் கண்டுபிடிக்கும் பணி முழுமூமாக மேற் கொள்ளப்படுகிறது. நோய் கண்டுள்ளவர் கண்டுபிடிக்கப்பட்டதும் அவருக்கு முழு அளவில் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இது வரையில், முக்கியமாக சேலம், தருமபுரி மாவட்டங்களிலும், சேலம், ராசிபுரம், தூத்துக்குடி, திருச்சி, வேலூர் ஆகிய நகரங் களிலும், சென்னை மாநகரத்திலும் 1,450 பேருக்கு மலேரியா நோய் கண்டுள்ளதாகக் கண்டுபிடிக்கப்பட்டது.

நோய்க் கட்டுப்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்கும் நிலையிலிருந்து, பொறுப்பேற்ற செலவுத் தொகையான ரூ. 8.06 லட்சம் போக யூனிட்டுப் பகுதிகளுக்காகும் மொத்தச் செலவை இந்திய அரசு ஏற்கிறது. தலைமையிடம், மண்டல அளவிலுள்ள மேற்பார்வைப் பணியாளரைப் பொறுத்தமட்டில், இத்திட்டத்திற்காகும் மொத்தச் செலவில் 25 சதவிகிதத்தை இந்திய அரசு ஏற்கிறது, 75 சதவிகிதத்தை மாநில அரசு ஏற்கிறது.

நோய்க் கட்டுப்பாட்டுப் பணிகளை ஒருங்கிணைக்கும் நிலைக்காக, 1972-73 ஆம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 30.19 லட்சமாகும், 1973-74 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்த நிதி ஒதுக்கம் ரூ. 30.93 லட்சமாகும்.

மலேரியா ஒழிப்பு தேசியத் திட்டத்தின் பேணுதல் நிலையின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ள பகுதிகளில் அடிப்படை சுகாதாரப் பணிகள் 1—4—69-லிருந்து மேற்கொள்ளப்பட்டுள்ளன. 353 ஊராட்சி ஒன்றியங்கள் பேணுதல் நிலைப் பகுதிகளில் உள்ளன. அடிப்படை சுகாதாரப் பணிகளுக்கான பணியாளமைப்பு முறை பின்வருமாறு :—

10,000 மக்கட் தொகைக்கு ஓர் அடிப்படை உடல்நலப் பணியாளர்.

ஒவ்வொரு 4 அடிப்படை உடல் நலப் பணியாளர்களுக்கும் ஓர் அடிப்படை உடல்நல ஆய்வாளர்.

ஒவ்வொரு தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கும் ஓர் ஆய்வுக் கூட உதவியாளர்.

அடிப்படை உடல்நலப் பணியாளர்கள் பலதோக்குப் பணி யாளர்களாவர். இவர்கள் கீழே குறிப்பிட்டுள்ளது போன்ற பல்வகைப் பணிகளை மேற்கொள்கின்றனர்—

(a) மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப்பட்டவர்களைக் கண்டறிந்து அவர்களுக்குச் சிகிச்சை அளித்தல்;

(b) நல்வாழ்வு செய்திகளைப் பரப்புதல் அதாவது காலரா, காசநோய், பெரியம்மை, பிளேக், தொழுநோய் போன்ற தொற்று நோய்கள் பற்றி அறிந்து அதனைத் தெரிவித்தல்;

(c) பிறப்புகள், சாவுகள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், இறப்புகள், பெரியம்மைத் தடுப்பு ஊசி போடுதல்;

(d) குடும்ப நலத்திட்டப் பணிகள் பற்றித் தகவல் அளித்தல்.

அடிப்படை சுகாதாரப் பணியாளர்களுக்காக யூனிசெஃப் நிறுவனத்திடமிருந்து இதுவரை 3,000 மருந்து பெட்டிகள் வந்துள்ளன. அவை, அடிப்படை சுகாதாரப் பணியாளர்களுக்கு பகிர்ந்து அளிக்கப்பட்டுள்ளன. இப்பெட்டிகள், மலேரியா நோய் கண்காணிப்புப் பணிக்காகவும் பெரியம்மை நோயுள்ளவர்களுக்கு தடுப்பு ஊசி குத்துவதற்காகவும் அடிப்படை சுகாதாரப் பணியாளர்களால் பயன்படுத்தப்படும்.

தென் ஆர்க்காடு, மதுரை மாவட்டங்களில் அடிப்படை உடல் நலப் பணியாளர்கள் முன்னோடித் திட்டமாகப், பெரியம்மை நோய் தடுப்பு ஊசி குத்தும் பணியைத் தற்போது மேற்

கொண்டுள்ளனர். இத்திட்டம் செயல்புரிவது குறித்து, அத்திட்டம் பிற பகுதிகளுக்கு நிட்டிக்கப்படுவதற்கு முன்னர் விரிவாக ஆய்வு செய்யப்படும்.

"அடிப்படை உடல் நலப் பணி" மத்திய அரசால் தொடங்கப்பட்ட ஒரு திட்டமாகும். இப்பணிக்காகும் முழுச் செலவையும் இந்திய அரசு ஏற்கிறது. இப்பணிக்காக 1972-73 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 146.30 லட்சம் ஆகும். இப்பணிக்காக 1973-74 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் செய்யப்பட்ட நிதி ஒதுக்கம் ரூ. 162.81 லட்சமாகும்.

3,242 அடிப்படை உடல்நல ஊழியர்களும், 496 அடிப்படை உடல்நல ஆய்வாளர்களும் உள்ளனர். அடிப்படை உடல்நல ஊழியர்களின் பணிகளை முறைப்படுத்தும் பணியைக் கவனித்துக் கொள்வதற்காக மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகத்தில் சிறப்புப் பணியாளர்களுக்காக ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது. அடிப்படை உடல்நல ஊழியர்களில் பலர் அடிப்படை உடல்நல ஆய்வாளர்களாகப் பதவி உயர்த்தப்பட்டுள்ளார்கள். அடிப்படை உடல்நல ஊழியர்கள் என்கின்ற பதவித் தரத்தில் அவர்களுடைய பணிகள் முறைப்படுத்தப்பட்டு அவர்களுடைய தகுதிக்காண் காலம் அறிவிக்கப்பட்ட பின்னர்தான் அவர்களை அடிப்படை உடல் நல ஆய்வாளர்கள் என்கின்ற பதவித் தரத்தில் முறைப்படுத்த வியலும். அடிப்படை உடல்நல ஊழியர்களில் பலர் தத்தம் பதவி களுக்கான தகுதிகள் பெற்றவர் அல்லர். ஆகவே, பொருத்த மான விதிகளை அவர்களுக்கு ஆதரவாகத் திருத்துமாறு மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநர் அரசுக்கு செயற் குறிப்புக்களை அனுப்பிக் கொண்டுள்ளார். அதற்கேற்ப, அவர்கள் அடிப்படை உடல்நல ஊழியர்களாக முறைப்படி நியமிக்கப்பட இயலும் வகையில் பொருத்தமான விதிகளை அவர்களுக்கு ஆதரவாக அரசு தளர்த்துகிறது. இதுவரை அரசு தம் பதவி களுக்கு எற்ப தகுதி பெறாதவர், முறைப்படி அடிப்படை உடல்நல ஊழியர்களாக நியமிக்கப்படும் வகையில் 2,259 பேருக்கு விதி தளர்த்தும் சலுகை காட்டியுள்ளது. அவ்வாறு தகுதி பெற்றிராதவர்களின் தகுதிகள் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநரால் முறைப் படுத்தப்

படுகிறது. மேற்சொன்ன தகுதி பெற்றிராதவர்களைத் தவிர, தகுதிபெற்றுள்ள 1,202 பேருடைய பணிகளையும் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநர் முறைப்படுத்தியுள்ளார். இவ்வாறு அடிப்படை உடல்நல ஊழியர்கள் என்ற வகையில் இதுவரை 3,461 பேர்கள் பணி முறைப்படுத்தப் பட்டுள்ளனர். அடிப்படை சுகாதார ஊழியர்கள் என்கின்ற வகையில் எஞ்சி யுள்ள 277 பேர்களுடைய பணிகளையும் மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத்துறை இயக்குநர் விரைவில் முறைப்படுத்துவார்.

நகர்ப்புற மலேரியாத் திட்டம்.

1972-73-ல் இம்மாநிலத்திலுள்ள சேலம், இராசிபுரம், தூத்துக்குடி, இளம்பிள்ளை ஆகிய நான்கு நகரங்களை இந்திய அரசு நகர்ப்புற மலேரியாத் திட்டத்தில் சேர்த்துள்ளது. அந்த அரசால் விதிக்கப்பட்ட முறைக்கு ஏற்ப, 1971 ஏப்ரல் 1 ஆம் நாள் உள்ளவாறு பணியாளர்களுக்காக உள்ளாட்சி மன்றங்களால் செய்யப்பட்ட செலவினை இந்திய அரசு ஒப்புக்கொண்ட செலவாகக்கருதும். நான்காவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் ஒப்புக் கொள்ளப்பட்ட செலவிற்கு மேல் பணியாளருக்காக செலவு செய்யப்பட்டால் (இந்திய அரசால் விதிக்கப்பட்ட முறைக்கு ஏற்ப இருக்க வேண்டும்). அச்செலவு முழுவதையும் இந்திய அரசு திருப்பித்தரும்.

1—4—71-ல் உள்ளவாறு பணியாளருக்காக ஏற்பட்ட செலவுகள் நீங்கலாக, இத்திட்டத்திற்குத் தேவையான பொருட்கள், சாதனங்கள் ஆகியவற்றிற்கு ஆகும் செலவு முழுவதும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், இந்திய அரசால் திருப்பித் தரப்படும். சேலம், இராசிபுரம், தூத்துக்குடி ஆகிய மூன்று நகரங்களுக்கு நகர்ப்புற மலேரியாத் திட்டத்திற்கு தமிழ்நாடு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இளம்பிள்ளை நகரத்திற்கு இத்திட்டத்திற்காக ஒப்பளிப்பு வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்து வருகிறது.

மேற்சொன்ன நான்கு நகரங்களுக்கு 1972-73 ஆம் ஆண்டிற்கான மத்திய உதவி என்ற வகையில் இந்திய அரசு ரூ. 5.44

லட்சம் ஒதுக்கியுள்ளது. மேற்கூறப்பட்ட தொகை ரூ. 5.44 லட்சத்திற்கான விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

நகரம்.	செய்முறைச் செலவு.	தொடரா இனச் சாதனங்கள். (ரூபாய் லட்சத்தில்.)	தொடரும் இனப் பொருட்கள்.	மொத்தம்.
(1)	(2)	(3)	(4)	(5)
சேலம் ..	0·64	0·36	1·37	2·37
இராசிபுரம் ..	0·28	0·02	0·17	0·47
திருச்செங்கோடு ..	1·04	0·35	0·69	2·08
இளம்பிள்ளை ..	0·41	0·03	0·08	0·52
மொத்தம் ..	2·37	0·76	2·31	5·44

தற்போது இந்திய அரசு சென்னை மாநகரத்தையும் நகர்ப்புற மலேரியாத் திட்டத்தின்கீழ் சேர்ப்பது என்று முடிவு செய்துள்ளது. சென்னை மாநகரத்திற்கு நகர்ப்புற மலேரியாத் திட்டத்திற்காக ஒப்பளிப்பு அளிப்பது குறித்து ஆய்வு செய்யப் பட்டு வருகிறது.

யானைக்கால் நோய்.—1957-58-லிருந்து, தேசிய யானைக்கால் ஒழிப்புப் பிரிவுகள் நான்கு, செங்கற்பட்டு, வேலூர், சிதம்பரம், கும்பகோணம் ஆகியவற்றை முறையே தலைமையிடங்களாகக் கொண்டு, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு, தஞ்சாவூர் ஆகிய நான்கு மாவட்டங்களில் செயற்பட்டு வருகின்றது. ஒவ்வொரு பிரிவிலும் மாவட்ட சுகாதார அதிகாரி தலைமையில் யானைக்கால் ஒழிப்பு அதிகாரி ஒருவர், கிருமியல் உதவியாளர் ஒருவர், உடல்நல ஆய்வாளர்கள் 6 பேர், பராமரிப்புக் கூடு உதவியாளர்களிலிருந்து களப்பணி உதவியாளர்கள் 6 பேர் மற்றும் 60 பேர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பிரிவும் சிறு பொறியியல் சாதனங்களின் துணையோடு, தொகு முட்டைப்புழு ஒழிப்பு எண்ணெயைத் தெளிப்பதால்

முட்டைப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்கிறது. இதனால் யானைக்கால் வரக்கூடிய ஆபத்தினின்றும் தடுக்கப்பட்டு 3.75 லட்சம் பேர் பயனடைகிறார்கள். இந்த நான்கு பிரிவுகளுக்கும் தொகு முட்டைப்புழு ஒழிப்பு எண்ணெயை மத்திய உதவியாக இந்திய அரசு வழங்குகிறது. அவற்றிற்கான செய்முறைச் செலவு மாநில நிதிகளிலிருந்து சரிக்கட்டப்படுகிறது.

இத் திட்டத்தினால் ஒரு மொத்தமாக 15 லட்சம் பேர் பயனடைகிறார்கள்.

சீரமைக்கப்பட்ட தேசிய யானைக்கால் ஒழிப்புத் திட்டம்.—மத்திய அரசால் தொடங்கப்பட்ட இத்திட்டம், முழுக்க முழுக்க மத்திய உதவி பெறும் திட்டமாகும். மேற்கூறப்பட்ட நான்கு பிரிவுகள் ஒவ்வொன்றிலும் ஒரு கூடுதல் உடல்நல ஆய்வாளர், ஒரு கூடுதல் களப்பணி உதவியாளர், 15 கூடுதல் தலைமை மஸ்தூர்கள், 15 கூடுதல் மஸ்தூர்கள் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர். சீரமைக்கப்பட்ட இந்த திட்டத்தின்கீழ், காஞ்சிபுரம், விழுப்புரம், கடலூர், தஞ்சாவூர், நாகப்பட்டினம், ஸ்ரீரங்கம் புதுக்கோட்டை, சென்னை மாநகர் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றிலும் 8 புதிய பிரிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சென்னை மாநகரிலுள்ள பிரிவு நீங்கலாக புதுப் பிரிவுகள் அனைத்தும் மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத் துறையின் பொறுப்பின்கீழ் இருக்கும். சென்னை மாநகரிலுள்ள பிரிவு பெரும்பிரிவு ஆனதால் அது சென்னை மாநகராட்சியின் பொறுப்பில் இருக்கும். இந்த எட்டு புதிய பிரிவுகளால் 30 லட்சம் பேர் பயன் பெறுவர்.

சீரமைக்கப்பட்ட திட்டத்தின்கீழ் நகர்ப்புறப் பகுதிகளில் 'வெக்டார்' தொக பெருகுவதை குறைப்பதற்காக முட்டைப் புழு ஒழிப்புப் பணி தீவிரப்படுத்தப்படுகிறது. ஆதாரப் புள்ளி விவரங்களைப் பெறுவதற்காக யானைக்கால் நோய் குறித்த மாதிரி ஆய்வுகள் நடத்தப்படும்.

அனைத்தும் சேர்ந்து மொத்தமாக தற்போது இம் மாநிலத்தில் 12 பிரிவுகள் செயல்படுகின்றன. இவற்றால் தன்மை பெறும் மக்கட்தொகை 45 லட்சமாக இருக்குமென்று மதிப்பிடப் பட்டுள்ளது.

இப் பிரிவுகளின் மொத்தப் பொறுப்பு, மேற்பார்வை, இப்பிரிவுகளுக்கு கட்டளைகள் இடுதல் ஆகியவற்றிற்காக 18—2—1972-லிருந்து உதவி இயக்குநர் பொறுப்பில் கலேமையிடப் பிரிவு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. ஸ்கேடுகள் முதலியவற்றைக் குறுக்காய்வு செய்வதற்காக அவருக்கு இரண்டு தொழில் நுட்ப உதவியாளர்கள் உதவி செய்கின்றனர்.

தற்போதுள்ள தான்கு பிரிவுகள் கூடுதல் பணியாளர்களின் முழுச் செலவு, புதிய எட்டு பிரிவுகளின் முழுச் செலவு, கலேமையிடப் பிரிவின் முழுச் செலவு ஆகியவை இந்திய அரசிடமிருந்து திரும்பப் பெறப்படும்.

1973-74-ம் ஆண்டிற்கான வரை-செலவுத் திட்டத்தில் இப் பிரிவுகளுக்காக எண்ணெய் பொருட்கள், சாதனங்கள் ஆகியவற்றுக்கான செலவுகள், சில்லறைச் செலவுகளுக்கான ரூ. 7.50 லட்சம் உட்பட ரூ. 29.37 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப் பட்டுள்ளது.

உதவி மானியத் திட்டம்.—யானைக்கால் கண்டுள்ள சில பகுதிகளில், அரசால் செயற்படுத்தப்படும் யானைக்கால் நோய்த் தடுப்புத் திட்டத்தைத் தவிர இம் மாநிலத்திலுள்ள சில நகராட்சி மன்றங்கள் தம்முடைய ஆட்சி எல்லேக்குள் முட்டைப்புழு ஒழிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யானைக்கால் நோய் ஒழிப்புத் திட்டங்களைச் செயற்படுத்துகின்றன. போர் குழுவின் (Bhore Committee) பரிந்துரைகளின் அடிப்படையில் இத் திட்டங்களுக்காகும் செலவின் ஒரு பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு உதவி மானியத் திட்டமாக அரசால் ஏற்கப்படுகிறது. 167 உள்ளாட்சி மன்றங்கள் இம் மாநிலத்தில் யானைக்கால் நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை நிறைவேற்றி வருகின்றன. அந்தகைய திட்டங்களுக்கு உதவி மானியங்களுக்கென ரூ. 6 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த உதவி மானியத் திட்டங்கள், வட்டார மலேரியா நோயியல் வல்லுநர் குழுவால் ஆய்வு செய்யப்படுகின்றன. இத் திட்டங்களின்கீழ் செய்யப்பட்ட முன்னேற்றத்தை மதிப்பிடுவதற்காக குறைந்தது ஆண்டிற்கு இரு முறையாவது இவர்கள் ஆய்வு நடத்துவர்.

சரும நோய் (Yaws)

'யாஸ்' என்னும் நோய், மேக நோயைப் பரப்புகின்ற ட்ரபானிமா பாலிடா (Trepanema Pallida) என்னும் கிருமிகளைப் போன்ற "ட்ரபானிமா பெர்ட்டினுயி" (Trepanema Pertenue) என்னும் ஒரு வகைக் கிருமியினால் ஏற்படுகிறது. மேக நோயைப் போல் அல்லாமல், இச்சரும நோய் உடலுறவு அல்லாத பிற வகையில் பரவுகிறது. சரும நோயின் தமிழ் பெயர்கள் "பிகலிமாரியாயி, காட்டு மாரியாத்தா" ஆகும். சரும நோய் மலேவாழ் மக்களிடையே இருப்பதோடு அன்றி, சமவெளிகளில் தங்கள் உடல்நலனை நன்கு கவனித்துக் கொள்ளாத மக்களிடையேயும் காணப்படுகிறது. இந்த நோயை பென்சிலின் மூலமும் குணப்படுத்தலாம். சாதாரணமாக ஒரு முறை ஊசி குத்திக்கொண்டாலே போதுமானது. ஒருவரோடு ஒருவர் தொடர்பு கொள்வதன் மூலம் பரவும் நோய்களுக்கும் பென்சிலின் மருந்து மூலம் சிகிச்சை அளிக்கப்படுகிறது. இதைத் தவிர மக்களிடையே நல்வாழ்வுக் கல்வியும் பரப்பப் படுகிறது. நோயாளிகளுக்கு சோப்பும் அளிக்கப்படுகிறது. மருத்துவப் பணியாளர் பிற வகையான சிறு நோய்களுக்கும் சிகிச்சை அளிக்கின்றனர்.

தற்போது தர்மபுரி, திருச்சிராப்பள்ளி, மதுரை ஆகிய மாவட்டங்களில் சரும நோய் ஒழிப்புத் திட்டம் செயல்படுகிறது. பெரிய குளம், பழனி, கரூர் ஆகிய இடங்களிலுள்ள மூன்று பிரிவுகளில் உடல்நல ஆய்வாளர்கள் மூவர் நியமிக்கப் பட்டுள்ளனர். அவர்கள் தொடக்கல்வியிலுள்ள சிறப்பு சுகாதார அதிகாரி ஒருவரின் கட்டளைப்படி நடப்பர். ஒவ்வொரு பிரிவிற்கும் ஜீப் வண்டி ஒன்று கொடுக்கப்படுகிறது. 1972-ம் ஆண்டில் 617 கிராமங்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. நோயுற்றோர் 251 பேர் கண்டுபிடிக்கப்பட்டு, அவர்களில் 122 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

ஆய்வு, நோயுற்றோரைக் கண்டுபிடித்தல், நோயுற்றோர்க்கு சிகிச்சை அளித்தல் ஆகியவை 1973-74-ம் ஆண்டிற்கான இலக்காகும்.

நரம்புச் சிலந்தி நோய்.—இந்நோயினால் பீடிக்கப்பட்டுள்ள மனிதனின் அடிப்புறத் தசையில் வாழ்கின்ற நரம்புச் சிலந்தியினால் இந்நோய் பரவுகிறது. அவர் தண்ணீரில் இறங்கும் போது, அவருடைய தோலில் உள்ள சிற்புண்ணிலிருந்து நரம்புச் சிலந்தி இறங்கி தண்ணீரில் புழுக்களை விட்டுவிடுகின்றது. இந்த புழுக்களை 'சைக்லாப்ஸ்' என்னும் ஒரு நீர்க்கிருமி விழுங்கி விடுகிறது. மனிதர்கள் நீரை அருந்தும்போது இந்த சைக்லாப்ஸ்கள் மனிதனின் உடலில் சென்று விடுகின்றன. இவ்வாறாக, இந்த நோய் பரவுகிறது. இதைக் கட்டுப்படுத்துவதற்காக, இதனால் பாதிக்கப்பட்டுள்ளவர்களைக் கண்டுபிடித்து 4 சதவிகிதம் கார்பாலிக் நீர்மத்தில் தோய்ந்த பஞ்சால் நோயினால் பாதிக்கப்பட்ட உடல் பகுதியைச் சுத்தம் செய்து அணியால் கட்டப்படுகின்றன. ஒரு மில்லியன் பாகம் நீரில் 5 பகுதி என்றபடி 50 சதவிகிதம் டிடிடி கரைசல் நீர்நிலைகளில் தெளிக்கப்படுகிறது. இவ்வாறு 6 வாரத்திற்கு ஒரு முறை தெளிக்கப்படுகிறது. இதைத் தவிர, இந்த நோய் பரவுகின்ற விதம்பற்றி உடல்நலக் கல்வி அளிக்கப்படுகிறது. இரசாயன முறையில் சுத்தம் செய்யப்பட்ட நீர்நிலைகளிலிருந்து அல்லது வடிகட்டப்பட்டு, கொதிக்க வைக்கப் பட்ட நீரை அருந்தும்படி அவர்களுக்கு அறிவுரை கூறப்படுகிறது. கடந்த காலத்தில் கன்னியாகுமரி, நீலகிரி நீங்கலாகத் தமிழ் நாட்டின் எல்லா மாவட்டங்களிலும் இந்த நோய் பரவி இருந்தது. தமிழால் மேற்கொள்ளப்பட்ட பொதுச் சுகாதார நடவடிக்கையின் விளைவாக உள்ளிடைத் தொற்று நோய் பரவும் எல்லை குறைக்கப்பட்டுள்ளது. அண்மையில் தென்னார்க்காடு மாவட்டம் கடலூர், விருதாச்சலம் வட்டங்களிலும், திருச்சிராப் பள்ளி மாவட்டம் முசிறி வட்டத்திலும், செந்துறை, அரியலூர் வட்டங்கள், தஞ்சை, திருச்சிராப்பள்ளி மாவட்டங்களின் ஒரு பகுதியிலும் இந்நோய் பரவியுள்ளது. எனினும், இத் திட்டம் கன்னியாகுமரி, நீலகிரி ஆகிய இம்மாவட்டங்களைத் தவிர மாநிலம் முழுவதும் நிறைவேற்றப்படுகிறது. இவ்விரு மாவட்டங்களிலிருந்தும் அந்நோய் பரவியுள்ளதாகத் தகவல் எதும் வரவில்லையாதலால், இத்திட்டத்திற்கு அங்கு அவசியம் இல்லை. இத் திட்டத்திற்காகப் போதிய பணியாளர்களுக்கு வகை செய்ய படுகின்றது. வண்டிகளும் வழங்கப்படுகின்றன.

1972-ம் ஆண்டில் 5,388 கிராமங்களில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டு, 182 பேர் நோயுற்றிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. 200 பேர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

1973-74 ஆம் ஆண்டிற்கான இலக்கு, நரம்புச் சிலந்தி நோய் ஆய்வு, நரம்புச் சிலந்தி நோய் பரவியிருக்கும் பகுதியிலுள்ள குடிநீர் வாயில்களில் உள்ள நீரை இரசாயன முறையில் சுத்தம் செய்தல், நோயாளிகளுக்குச் சிகிச்சையளித்தல் முதலியவை யாகும்.

கருங்காய்ச்சல் (Kala-Azar).—'கருங்காய்ச்சல்', 'லேஷ்மான் டொனெவான்' (Leishman Donovan) என்னும் கிருமியினால் ஏற்படுகிறது. இது மணல் ஈக்களினால் பரப்பப்படுகிறது. இந்த நோய் கண்டவர்களுக்கு முறையற்ற கருங்காய்ச்சல் ஏற்படும். இது முற்றினால் இரத்தச் சோகை ஏற்படும். இதைக் கவனிக்காது விட்டால் மரணம் ஏற்படும். தேசிய மலேரியா ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றும்போது எல்லா வீடுகளிலும் D.D.T. மருந்து தெளிக்கப்பட்டமையால் மணல் ஈக்களும் ஒழிக்கப்பட்டு, இந்நோய் பல ஆண்டுகளாக ஏற்படவே இல்லை. மலேரியா ஒழிக்கப்பட்ட நிலையில், D.D.T. மருந்து தெளிக்கப் படுவது நிறுத்தப்பட்டது. மணல் ஈக்கள் மீண்டும் வரத் தொடங்கின.

இத்திட்டமானது, இராமநாதபுரத்திலுள்ள ஒரு பிரிவோடு 1969 முதல் இயங்கி வருகிறது. இராமநாதபுரம் மாவட்டத்தில் இந்த நோய் முன்னதாக பரவியிருக்கக்கூடிய பகுதிகளில் நோய் கண்டுள்ளவர்களைக் கண்டறிவதும், மணல் ஈ (Sand flies) என்ற கிருமிகளைப் பற்றிய விவரம் சேகரித்து அந்நோய்க் கிருமிகள் எந்த அளவிற்குப் பரவியுள்ளன என்பது குறித்துத் தீர்மானிப்பதும். இதன் முக்கிய பணிகளாகும். இந்நோய் கண்டுள்ள நோயாளிகள், சிகிச்சை அளிக்கப் படுவதற்காக, அண்மையிலுள்ள அரசு மருத்துவமனைகள், தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் ஆகியவற்றிற்கு எடுத்துச் செல்லப்படுகின்றனர். 1972-ஆம் ஆண்டில் 972 கிராமங்களில் ஆய்வு நடத்தப்பட்டது. நோயுற்றவர் ஒருவர் கண்டுபிடிக்கப்பட்டு, அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டது.

IV. பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைப் பதிவு செய்தல்.

பிறப்பு இறப்பு பற்றிய புள்ளிவிவரங்கள், சிறப்பாக பிறப்புகள், இறப்புகள், குழந்தைகளின் இறப்பு ஆகியவை சமுதாய சுகாதாரத்தைக் காட்டும் அடிப்படை நிகழ்வுகளாகும். சமுதாய

சுகாதாரத்தின் அளவினைக் காட்டும் அளவு கோலாக அவை அமைகின்றன. சமுதாயத்தில் நிகழ்கின்ற பிறப்பு இறப்பு பற்றிய புள்ளி விவரங்களைப் பற்றிய அறிவு, உடல்நலப் பணியாளர்களின் தேவைகளையும், தடுப்பு, பாதுகாப்புப் பணிகளைப் புரிவதற்கான சாதனங்களின் தேவையையும் மதிப்பிடுவதற்கு அவசியம் என்பதோடு மட்டுமல்லாமல், சமுதாய நல்வாழ்வில் காலப்போக்கில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை கணிப்பதற்கும், டனைத் திட்டங்களின் விளைவுகளை மதிப்பிடுவதற்கும், அவை தேவையாகும். சமூகத்தில் நிகழும் பிறப்புகள் இறப்புகள் அனைத்தையும் முழுமையாகவும், சரிவரவும் பதிவு செய்தால்தான் ஆண்டுக் காண்டு குறிப்பிட்ட ஒரு பகுதியில் நிகழும் பிறப்பு, இறப்பு விகிதங்களைக் குறித்தும், அவற்றின் போக்கைக் குறித்தும் தொடர்ந்து ஆய்வு ஒன்றை நடத்துவது சாத்தியமாகும். ஆனால், இம்மாநிலத்தின் பல்வேறு பகுதியில் நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுகளின் மூலம், பிறப்புகள்-இறப்புகள் குறித்துப் பதிவு சரியாகவும், முழுமையாகவும் இல்லை என்று தெரிய வந்துள்ளது. இம் மாநிலத்தின் பிறப்பு-இறப்பு புள்ளி விவரங்கள் சேகரிக்கும் பணியை மேம்படுத்த எல்லா நடவடிக்கைகளும் மேற்கொண்டு வருகின்றன.

1971 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்புப்படி, தமிழ் நாட்டின் மக்கள் தொகை 4,11,03,125 ஆகும். 1972-ல் அது 4,28,19,000 ஆக உயர்ந்திருக்கும் என்று மதிப்பிடப்பட்டுள்ளது.

இம்மாநிலத்தில் 1971 ஆம் ஆண்டின் இடையில் நடத்தப்பட்ட மதிப்பீட்டின்படி பிறப்பு விகிதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 25.3 ஆகவும், இறப்பு விகிதம் மக்கள் தொகையில் 1,000-க்கு 8.7 ஆகவும் இருந்தன. குழந்தை இறப்பு விகிதம் 1,000 பிறப்புடன் பிறந்த குழந்தைகளுக்கு 54.9 ஆக இருந்தன.

முந்திய ஆண்டுகளின் பதிவாகிய விகிதங்களோடு ஒப்பிடும் போது 1971-ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட பிறப்பு விகிதம் குறைவாகும். பிறந்த ஆண், பெண் குழந்தைகள் விகிதம் 1971 ஆம் ஆண்டில் தமிழ் நாட்டில் 107 : 100 ஆக இருந்தது.

பிறப்பு-இறப்பு விதங்களைப் பதிவு செய்தலை மேம்படுத்துவதற்கானப் பல திட்டங்கள் முன்னேற்றத்துடன் செயல் படுகின்றன.

V. உணவுப் பொருட்களில் கலப்படம் செய்தலைத் தடை செய்தல்.

இம்மாநிலத்தில் நீண்ட காலமாகவே உணவுப்பொருள் கலப்படத் தடை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. கீழே குறிப்பிட்டுள்ளவாறு 1,088 உள்ளாட்சி மன்றங்களுக்கு மாறாக, உணவுப்பொருள் கலப்படத் தடைச் சட்டம் தற்போது, 306 உள்ளாட்சி மன்றங்களால் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

	இம் மாநிலத்தில் தற்போதுள்ள உள்ளாட்சி மன்றங்கள்.	சட்டத்தைச் செயல்படுத்தும் உள்ளாட்சி மன்றங்கள்.
மாநகராட்சிகள்	2	2
நகராட்சிகள்	91	89
பேரூராட்சிகள்	598	171
நகரியக் குழுக்கள்	19	10
பாளைய வாரியங்கள்	2	2
ஊராட்சி ஒன்றியங்கள் ..	374	3
எனையவை	2	29
	1,088	306

உள்ளாட்சி மன்றம் ஒவ்வொன்றும், உணவுப்பொருள் கலப்படத் தடைச் சட்டத்தைச் செயல்படுத்த ஒப்புக் கொள்ளும் மன்றத்தின் தீர்மானத்துடன் தன் நிதி நிலையைக் கருத்தில் கொண்டு, செயற் குறிப்புகளை, கண்டி, கிங் நிறுவனம், அரசு பகுப்பாய்வாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். கண்டி, கிங் நிறுவனம், அரசு பகுப்பாய்வாளர் அந்தச் செயற்குறிப்புகளை ஆய்வு செய்து பின்னர் அவை குறித்து மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநருக்குப் பரிவுரை செய்கிறார். பின்னர், இவர் அச்செயற்

குறிப்புகள் பற்றி அரசுக்குப் பரிவுரை செய்கிறார். உள்ளாட்சி மன்றங்கள் பகுப்பாய்வு செய்வதற்காக அனுப்ப வேண்டிய மாதிரிகளின் எண்ணிக்கையையும், உள்ளாட்சி மன்றங்கள் ஆண்டு தோறும் கொடுக்க வேண்டிய பங்குத் தொகையையும் அரசு முடிவு செய்கிறது. உணவுப் பொருள்களைப் பகுப்பாய்வு செய்யத் தற்போதுள்ள ஆய்வுக்கூட வசதிகள் போதுமானதாக இல்லை. இச் சட்டம், இம் மாநிலத்தில் இரு மாநகராட்சிகளிலும், அதேசமயம், எனைய நகராட்சிகள் அனைத்திலும் செயலில் இருக்கும்போது, பல பேரூராட்சிகளிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் இன்னும் செயல் படுத்தப்படவில்லை. பல பேரூராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங் களும், உணவுப் பொருள் கலப்படத் தடைச் சட்டத்தின்கீழ் உணவுப்பொருள் மாதிரிகளை, கிணடி, அரசு பகுப்பாய்வாளருக்கு அனுப்ப அனுமதி கேட்டுள்ளன. ஆனால், ஆய்வுக்கூட வசதிகள் இல்லாததன் காரணமாக இவர்களின் வேண்டுகோளை ஏற்றுக் கொள்ள முடியவில்லை.

கிண்டி, கிங் நிறுவனத்தில் உள்ள உணவுப்பொருள் பகுப்பாய்வுத் துறையுடன் இணைக்கப்பட்ட ஆய்வுக்கூடம், சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்ட பகுப்பாய்வு ஆய்வுக்கூடம் ஆகியவற்றின் உதவியோடு உணவுப் பொருள்கள் தற்போது பகுப் பாய்வு செய்யப்படுகின்றன. கோயம்புத்தூர், சேலைமைப் பொது மருத்துவ ஆய்வுக்கூடத்துடன் இணைக்கப்பட்டுள்ள ஆய்வுக்கூடம் குறிப்பிட்ட அளவுக்கே செயல்பட்டு வருகிறது.

உணவுப் பொருள்களைப் பகுப்பாய்வு செய்வதற்காக ஆய்வுக் கூட வசதிகளை ஏற்படுத்தும் பொருட்டு, மதுரை, தஞ்சாவூர் ஆகிய இடங்களில் உணவுப்பொருள் பகுப்பாய்வு மாவட்ட ஆய்வுக்கூடங்களை நிறுவுதற் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரையில், உணவுப்பொருள் சோதனையிடும் ஆய்வுக்கூடம் ஒன்றை ஏற்படுத்து வதற்காக மதுரை நகராட்சி, மதுரையில் தனக்குச் சொந்தமாகவுள்ள ஓர் இடத்தை ஒப்படைப்பதாக உறுதியளித்துள்ளது. மேற்குறிப்பிட்ட இடத்தில் மிகவும் சிறுமின்சி போதுமான அளவு தண்ணீர் கிடைக்குமா அல்லது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பது பற்றி அறிக்கை ஒன்று, மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை இயக்குநரிடமிருந்து எதிர்ப் பார்க்கப்படுகிறது. அவரிடமிருந்து அறிக்கை வந்த பின்னர்,

மதுரையில் உணவுப்பொருள் சோதனை ஆய்வுக்கூடம் ஒன்றைக் கட்ட ஒப்பளிப்பு வழங்கப்படும். தஞ்சாவூரில் பார்ஸ்டல் பள்ளிக்குச் சொந்தமான ஓரிடத்தில் உணவுப்பொருள் சோதனை ஆய்வுக்கூடம் ஒன்றைக் கட்ட வருவாய்த்துறை வாரியம் கருத்துத் தெரிவித்துள்ளது. மாவட்ட வருவாய் அதிகாரி, ஏற்பளிக்கப் பட்ட பள்ளிகளின் தலைமை ஆய்வாளர் ஆகியோருடன் சென்று தஞ்சாவூரிலுள்ள அந்த இடத்தைப் பார்வையிட்டு, ஆய்வுக்கூடம் கட்ட தேவையான நிலத்திற்கு எல்லை வரையறுக்குமாறும் தஞ்சாவூர் மாவட்ட உடல்நல அதிகாரிக்கு மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை இயக்குநர் கட்டளையிட்டுள்ளார். இது குறித்த மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை இயக்குநரிடமிருந்து மேலும் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது. தஞ்சாவூரில் குறிப்பிட்ட அந்த இடத்தில் போதுமான அளவுக்குத் தண்ணீர் கிடைக்குமா அல்லது கிடைப்பதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்பது குறித்தும் அறிக்கை ஒன்று மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை இயக்குநரிடமிருந்து எதிர்பார்க்கப்படுகிறது. அவரிடமிருந்து அறிக்கைகள் வந்த பின்னர், தஞ்சாவூரில் உணவுப் பொருள் சோதனை ஆய்வுக்கூடம் ஒன்றைக்கட்ட ஒப்பளிப்பு வழங்கப்படும்.

1972 ஆம் ஆண்டில், இச்சட்டத்தின்கீழ்ப் பகுப்பாய்வு செய்யப்பட்ட மாதிரிகளின் எண்ணிக்கை 19,397 ஆகும். இவற்றில், 4,984 மாதிரிகள் கலப்படமெனக் கண்டறியப்பட்டது. உணவுப் பொருள்களில் கலப்படம் செய்த குற்றத்திற்காக 3,939 பேர் மீது வழக்குத் தொடரப்பட்டது. இவர்களில், 3,092 பேர் குற்றவாளிகளெனத் தீர்ப்பளிக்கப்பட்டனர். 48 பேருக்குச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இவர்களுக்கு அபராதம் விதித்ததன் வாயிலாக கிடைத்த தொகை ரூ. 1,74,700 ஆகும்.

VI. பள்ளிக் குழந்தைகளின் நல்வாழ்வு.

பள்ளிக்குழந்தைகளை மருத்துவச் சோதனை செய்யும் திட்டம் என்ற 18 தொடக்க நல்வாழ்வு நிலையங்களில் செயலில் உள்ளது.

இத்திட்டத்தின்படி, தெரிந்தெடுக்கப்பட்ட இந்தத் தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த மருத்துவ அதிகாரிகள் ஆண்டு தோறும் 6-11 வயதுக் தொகுதியிலுள்ள பள்ளிக் குழந்தைகள் 2,000 பேரைச் சோதனை செய்கின்றனர். நோயுற்றிருப்பதற்கான அறிகுறிகள் தெரியும் பள்ளிக் குழந்தைகளுக்கு இந்த மருத்துவ

அதிகாரிகள் மருந்துகளையும், தேவையான சத்து உணவையும் வழங்குகின்றனர். சிறப்பாகச் சிகிச்சையளிக்க வேண்டியது அவசியம் எனக் கருதப்படுகிற குழந்தைகள் சிகிச்சைக்காக அருகிலுள்ள மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். கோயம்புத்தூரிலும், திருச்சிராப்பள்ளியிலும் இத்திட்டத்தைச் செயற்படுத்த இரு மருத்துவப் பிரிவுகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவ்விரு பிரிவுகளிலும் இரு மருத்துவ அதிகாரிகள் உள்ளனர். ஒவ்வொருவரும் ஆண்டுதோறும் 10,000 குழந்தைகளைச் சோதனை செய்கின்றனர். பிற்காப்பு நடவடிக்கைகளையும் அவர்கள் எடுக்கின்றனர்.

உடல்நலக் கல்விக் கழகம்.

மாநில உடல்நலக் கல்விக் கழகம் 1960 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது. கடந்த 13 ஆண்டுகளில் இக்கழகம் ஒரே சீராக வளர்ந்து வந்துள்ளது. இந்திய அரசு பரிவரை செய்த ஐந்து பிரிவுகளைத் தற்போது இக்கழகம் கொண்டுள்ளது. இந்த நாட்டில் உள்ள மாநிலங்களில் உடல்நலக் கல்வி வளர்ச்சியில் இது I -ம் வகையாக இடம் பெற்றுள்ளது. மாநில உடல்நலக் கல்விக் கழகம் கீழ்க்காணும் பயிற்சித் திட்டங்களை நடத்தியுள்ளது :—

பணியிருப்புப் பயிற்சித் திட்டம்.—13 மாவட்டங்களிலும் இத் திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த 114 மருத்துவ அதிகாரிகள், 135 சுகாதார ஆய்வாளர்கள், 128 சுகாதாரப் பார்வையாளர்கள் ஆகியோர் 27 தொகுதிகளாக இதுவரை பயிற்சி பெற்றுள்ளனர். மாவட்ட நல்வாழ்வு அதிகாரிகள் 22 பேர், மாவட்ட நல்வாழ்வு உதவி அதிகாரிகள் 6 பேர், ஆராய்ச்சி-செயல் திட்டங்களைச் சேர்ந்த பொது உடல்நல உதவிப் பொறியாளர் 3 பேர் ஆகியோர் இப் பயிற்சித் திட்டத்தில் கலந்து கொண்டனர்.

1972-73-ஆம் ஆண்டில், 2 தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தொடக்க நல்வாழ்வு நிலையங்களைச் சேர்ந்த 10 மருத்துவ அதிகாரிகள், 10 சுகாதார ஆய்வாளர்கள், 10 உடல்நலப் பார்வையாளர்கள், மாவட்ட உடல்நல உதவி அதிகாரி

ஒருவர் 31—12—1972 வரை இப்பயிற்சியில் கலந்து கொண்டனர். நடப்பு நிதியாண்டில் மேலும் ஒரு தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படும்.

மாநிலப் பொது நல்வாழ்வு அச்சகம்.—இது 1971 நவம்பர் முதல் செயல்பட்டு வருகிறது. பல்வேறு நல்வாழ்வு கூறுகள் பற்றி சுவரொட்டிகளையும், துண்டு வெளியீடுகளையும் இது வெளியிட்டுள்ளது. அச்சிடப்பட்ட வெளியீடுகளும், சுவரொட்டிகளும் இம்மாநிலத்திலுள்ள பல்வேறு தொடக்க நல்வாழ்வு நிலையங்களிலும் மருத்துவ மனைகளிலும் வைப்பதற்காக அனுப்பப் பட்டன.

பொருட்காட்சி இயல் ஊர்திப் பிரிவு.—இம்மாநிலத்தில் சேலத்தில் நடந்த அனைத்து இந்திய கதர்-தொழில் சுதேசி பொருட்காட்சி, கோடைக்கானலில் நடந்த படகுப் போட்டி, பெரியபாளையத்தில் நடந்த ஸ்ரீ பவானியம்மன் தேர்த் திருவிழா போன்ற பல பெரிய சிறிய பொருட்காட்சிகளில் இப்பிரிவு பங்கு கொண்டது.

15—8—1972-ல் நடந்த விடுதலை நாள் ஊர்வலத்தில், கண் நோய்ச் சிகிச்சை முகாம் பற்றி விளக்கும் அலங்கார வண்டி ஒன்றுடன் இது பங்கெடுத்துக் கொண்டது. இந்த அலங்கார வண்டி பொதுமக்களைப் பெரிதும் கவர்ந்தது.

போம்மலாட்டக் காட்சிப் பிரிவு.—சந்தைகள், திருவிழாக்களின் போது, குடும்பநலத்திட்டம், ஊட்டச்சத்து பற்றி பொது மக்களுக்குக் கற்பிக்க பொம்மலாட்டக் காட்சிகள் நடத்தப் பட்டன. 1972 ஆம் ஆண்டில் 80 பொம்மலாட்டக் காட்சிகள் நடத்தப்பட்டன. குடும்பநலத் திட்டம், ஊட்டச்சத்து, காலரா நோய்த் தடுப்பு ஆகியவை குறித்த புதிய கட்டுரைகளும் பொம்மலாட்டக்காரரால் தயாரிக்கப்பட்டன.

திரைப்படப் பிரிவு.—இவ்வாண்டில், உடல்நலக் கல்வி பற்றிய பல்வேறு திரைப்படங்கள் இம்மாநிலத்தில் மொத்தம் 146 இடங்களில் திரையிடப்பட்டன. பல்வேறு உடல்நலக் கூறுகள் குறித்து மொத்தம் 452 திரைப்படங்கள் இம்மாநிலத்தில் பல் வேறு உள்ளாட்சி மன்றங்களுக்கும், தனியார் அமைப்புகளுக்கும்,

தொடக்க நல்வாழ்வு நிலையங்கள், மருத்துவ மனைகள் ஆகிய வற்றுக்கும், மாவட்ட நல்வாழ்வு அதிகாரிகளுக்கும், நகராட்சி நல்வாழ்வு அதிகாரிகளுக்கும் கடனுதவி கொடுக்கப்பட்ட. நான்கு புதிய திரைப்படங்கள் வாங்கப்பட்டு பிரச்சாரப் பிரிவின் திரைப்பட நூலகத்திற்கு வழங்கப்பட்டன.

ஆய்வுப் பிரிவு.—இப்பிரிவு இதுவரை ஏறக்குறைய 10 ஆய்வுகளை நடத்தியுள்ளது. தமிழ் நாட்டில் முத்தடுப்பு ஊசி குத்தும் திட்டம்பற்றி அண்மையில் இப்பிரிவு ஆய்வு நடத்தியுள்ளது. இந்த ஆய்வுக்காக, 394 தாய்மார்கள், 11 மருத்துவ அதிகாரிகள், 8 உடல் நலப் பார்வையாளர்கள் ஆகியோரைப் பேட்டி காணப்பட்டது. மொத்தத்தில் 394 தாய்மார்களுக்கு 0-5 வயதுத் தொகுதியில் மொத்தம் 597 குழந்தைகள் இருப்பதாகத் தெரியவந்துள்ளது. 394 தாய்மார்களைப் பேட்டி கண்டதில், 164 தாய்மார்கள் (41.6 சதவீதம்) மட்டுமே முத்தடுப்பு ஊசி குத்தும் திட்டத்தைப்பற்றி அறிந்திருந்தனர். ஒரு மாதத்திற்கு ஒரு தடவை ஊசி போடுவது என்பது பற்றி 79 தாய்மார்கள் (20.1 சதவீதம்) மட்டுமே அறிந்திருந்தனர்.

இத்திட்டத்தை வலுப்படுத்த கீழ்க்காணும் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன :—

இத்திட்டத்திற்கு முக்கியமானவராக இருக்கும் உடல்நலப் பார்வையாளர் இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில் ஒழுங்கான முறை ஒன்றைப் பின்பற்ற வேண்டும்.

முத்தடுப்பு ஊசிகுத்தும் திட்டத்தை முறையாகச் செயல் படுத்துவது பற்றி வழிகாட்டி நூல் ஒன்று தொடக்க நல்வாழ்வு நிலையங்கள் அனைத்திற்கும் வழங்கப்படலாம்.

உடல்நலக் கல்வியில் பணியிருப்புப் பயிற்சி நடத்தி வருவது பற்றியும் இப்பிரிவு மதிப்பிட்டு வருகிறது. 27 தொகுதியினர் பயிற்சி பெற்றுள்ளது பற்றி இதுவரை மதிப்பிடப்பட்டுள்ளது.

உடல்நலக் கல்வி ஆசிரியர் பயிற்சிப் பிரிவு.—பயிற்சிப் பள்ளி, பயிற்சிக் கல்லூரி ஆசிரியர்களுக்குச் சுகாதாரக் கல்வியால் பயிற்சியளிக்கும் நோக்கத்துடன் இந்தப் பிரிவு அமைக்கப்

பட்டுள்ளது. ஆகவே, இவர்கள் அவரவருடைய நிறுவனங்களில் பயிற்சி பெறும் ஆசிரியர் அனைவருக்கும் பயிற்சியளிக்க முடியும்.

பயிற்சிக் கால அளவு 45 நாட்களாகும். இதில் நேரிடப் பயிற்சியும் ஒன்றாகும். நேரடியாகச் செயல்முறைப் பயிற்சி பெறும் பகுதி ஒன்று போளூரில் தெரிந்தெடுக்கப்பட்டுள்ளது. பயிற்சியாளர்கள், போளூர் ஊராட்சி ஒன்றியத்தின் உயர் தொடக்கப் பள்ளியில் உள்ள மாணவர்களின் சுகாதாரப் பிரச்சினைகள் பற்றி அறிந்துகொள்கின்றனர். நாங்கள் பெறும் பயிற்சியில் ஒரு பகுதியாக, நேரிடப்பகுதியில் உடல்நலன் பற்றிக் கற்பிக்க அவர்கள் பயிற்சிபெறுகின்றனர்.

பள்ளிக்குழந்தைகளுக்கு 'மாண்டெக் சோதனை' (Montoux Test) செய்வதோடு B. C. G. ஊசியும் போடப்பட்டுள்ளது. நோயுற்றதாக அறிகுறிகள் காணப்படும் குழந்தைகளுக்கு நன்கு மருத்துவச் சோதனை செய்யப்பட்டது. பள்ளிக்குழந்தைகளிடையே காசநோய் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகள் சிகிச்சைக்காகத் தொடக்க நல்வாழ்வு நிலையத்திற்கு அனுப்பப் பட்டனர். சிகிச்சைக்குப் பின்னர் அவர்களைக் காப்பதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

குழந்தைகளில் 48 சதவீதத்தினருக்கு மைட்டமின் 'A' சத்துக்குறைவின் அறிகுறிகள் காணப்பட்டன. மைட்டமின் 'A' சத்து பெற்றுள்ள பொட்டு மருந்துகள் அவர்களுக்கு வழங்கப்பட்டன. சுமார் 30 சதவீதம் குழந்தைகளுக்கு இரத்த சோகை கண்டிருந்தது. அவர்களுக்கு இரும்புச்சத்துள்ள மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. குழந்தைகளுக்கு முத்தடுப்பு ஊசிபோடப்பட்டுள்ளது. ஆறு வயதுக்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு டெடானஸ் டாக்சிடேஸ் மருந்து வழங்கப் பட்டுள்ளது.

இதுவரை 102 மாணவர்கள் ஆறு தொகுதிகளாகப் பயிற்சி பெற்றுள்ளனர். ஏழாவது தொகுதியினர் 12—2—1973 அன்று பயிற்சியைத் தொடங்கியுள்ளனர்.

இப்பயிற்சிக் கால அளவை 45 நாட்களிலிருந்து 30 நாட் களாகக் குறைக்கக் கருதப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து ஓர்

ஆண்டில் பயிற்சி பெறும் தொகுதிகளின் எண்ணிக்கை ஆறாக உயரும். இதன்மூலம் ஓராண்டில் பயிற்சிபெறும் ஆசிரியர்களின் எண்ணிக்கை 150 ஆக உயரும்.

பள்ளிகளில் நல்வாழ்வு குடும்பநலத் திட்டக்கல்வி கற்பிப்பது குறித்து மாதிரி அளவிலான பணிக்களைத் தொடங்கி, உலக நல்வாழ்வு நிறுவனம், புதுடில்லி உடல்நலக் கல்வி மத்தியக்கழகம் ஆகிய வற்றின் உதவியோடு சென்னை, எழும்பூர் ஆவணைக் காப்பக இயக்குநர் அலுவலகத்தில் உள்ள மாநாட்டுக் கூடத்தில் 18-12-1972 முதல் 23-12-1972 வரை நடத்தப்பட்டது. கல்வி அமைச்சர் இந்தப் பணிக்களரியைத் தொடங்கி வைத்தார். மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் இதற்குத் தலைமை வகித்தார். சுகாதாரத் துறை யிலிருந்தும், கல்வித் துறையிலிருந்தும் 32 பேர் இப்பணிக் களரியில் பங்கெடுத்துக் கொண்டனர். இம்மாநிலத்தில் நல் வாழ்வுத் தொண்டு நிறுவனங்கள் போன்ற தொண்டு நிறுவனங் களிலிருந்தும், பாடப் புத்தகச் சங்கம், பெற்றோர்-ஆசிரியர் சங்கம் ஆகியவற்றிலிருந்தும், பல்கலைக் கழகங்களிலிருந்தும் அதிகாரிகள் மேற்சொன்ன பணிக்களரியில் பங்கெடுத்துக் கொண்டனர். அரசு நலத் துறை அமைச்சர் முடிவுரை யாற்றினார்.

மாணவர் நல்வாழ்வுக் கல்வி பயிற்சிப் பிரிவு.—பள்ளிகள், கல்லூரிகள், கல்வி நிலையங்கள் ஆகியவற்றில் தற்போதுள்ள பாடத்திட்டத்தைப் பகுத்தாய்ந்து, மாணவர்களுக்குச் சுகாதாரம் பற்றிக் கற்பிப்பதைப் பாடத் திட்டத்தில் புகுத்துவதற்காக இப்பிரிவு அமைக்கப்பட்டுள்ளது.

1-ம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரையிலான பாடத்திட்டம் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. 1-ம் வகுப்பு முதல் ஐந்தாம் வகுப்பு வரை ஒவ்வொரு வகுப்பிற்கும், ஒவ்வொரு பாடத்திட்டத் திலும் சுகாதாரம் பற்றி போதுவே அளிப்பதற்கு ஏதுவாக ஆசிரியர் வழிகாட்டி நூல் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த வழிகாட்டி நூல், பயன்பாட்டுக்காகக் கல்வித் துறைக்கு அனுப்பப் பட்டுள்ளது.

பள்ளி நல்வாழ்வு குறித்து கீழ்க்கண்டவை தயாரிக்கப் பட்டுள்ளன :—

(1) 4, 5-வது வகுப்புகளின் பயன்பாட்டுக்காக "சுத்தம் சுகம் தரும்" என்ற தலைப்பு வெளியீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இது மேடவாக்கம் பள்ளியில் பயன்படுத்தப்பட்டு பயனுள்ளதெனக் கண்டறியப்பட்டுள்ளது.

(2) ஆசிரியர்களுக்காகச் சுகாதாரம், குடும்பநலத் திட்டக் கல்வி குறித்து "மக்கள் தொகையியல் கல்வி" என்னும் வழி காட்டி சிறுநூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

பொது நல்வாழ்வு நிறுவனம், பூவிருந்தவல்லி.—இந்த நிறுவனம் கீழ்க்காணும் மூன்று பிரிவுகளைக் கொண்டது :—

(1) நல்வாழ்வுப் பிரிவு—பணிப் பிரிவு.

(2) மறுபயிற்சி நிலையம்—பயிற்சிப் பிரிவு.

(3) ஆராய்ச்சி-செயல் திட்டம்—செயல்பிரிவு பின்பற்றும் ஆராய்ச்சி.

இந்த நல்வாழ்வுப் பிரிவு, ராக்பெல்லர் நிறுவனத்தின் உதவி யுடன் 1935-ல் தொடங்கப்பட்டது. பின்னர், மேற்சொன்ன நிறுவனத்தின் உதவி முடிவடைந்த பின்னர் இதனைத் தமிழ்நாடு அரசு மேற்கொண்டது.

இப்பிரிவின் நோக்கங்களாவன :—

(1) சோதனை முயற்சியாக, மும்முனைச் சுகாதாரப் பணி களுக்கு ஏற்பாடு செய்வதின் மூலம் குறிப்பிட்ட கிராமப்புறப் பகுதி ஒன்றில் பொது நல்வாழ்வினை மேம்படுத்துதல்.

(2) பொது நல்வாழ்வு தன் முயற்சியுடன், கிராம மக்களுக்கு நோய்த்தடுப்பு முறைகளைக் கையாள என்ன செய்யலாம் என்பது குறித்து விளக்குதல்.

(3) பொது உடல்நலக் கூறுகள் அனைத்திலும் மருத்துவப் பணியாளர்களுக்கும் துணை மருத்துவப் பணியாளர்களுக்கும் பயிற்சியளிக்க வசதி அளித்தல்.

இப்பிரிவின் அலுவல்களாவன :—

(1) மகப்பேறு, குழந்தை நலப் பணிகளுக்கு வகை செய்தல்.

(2) குடும்பநலத் திட்டம்.

(3) தொற்று நோய்கள் பரவாவண்ணம் கட்டுப்படுத்துதல்.

(4) சுற்றுப்புறத் துப்புரவு.

(5) உடல்நலக் கல்வி.

(6) பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைத் தொகுத்தல்.

(7) பயிற்சித் திட்டங்கள் நடத்துதல்.

(1) மகப்பேறு, குழந்தை நலப் பணிகள்.—கருவுற்றிருக்கும் தாய்மார்களுக்கும், பாலூட்டும் தாய்மார்களுக்கும் விடுகளுக்குச் சென்று மருத்துவச் சிகிச்சையளிப்பதோடு மருத்துவ நிலையங்களிலும் அவர்களுக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. கைக் குழந்தைகளுக்கும், பாலர்களுக்கும் 8 மகப்பேறு இல்லங்கள், நிலையங்கள் மூலமாக மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

1972-ல் முன்னேற்றம்.

மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு வரும் தாய்மார்களின் எண்ணிக்கை 5,145.

மகப் பேறுகாலத்திற்கு முந்திய நிலையில் மருத்துவப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட தாய்மார்களின் எண்ணிக்கை 4,830.

சுகாதாரப் பிரிவு இருக்கும் பகுதியில் பிறந்த குழந்தைகளின் மொத்த எண்ணிக்கை 3,029.

(2) குடும்ப நலத் திட்டம்.—மகப்பேறு குழந்தை நல நிலையங்களுடன் ஒருங்கிணைந்த இப்பணி நடத்தப்பட்டு வருகிறது. குடும்ப நலத் திட்டத்தை மேற்கொள்ளுமாறு தாய்மார்களுக்கு அறிவுரை கூறப்படுவதோடு வாசக்டமி அறுவை சிகிச்சை செய்து கொள்ளுமாறு ஆடவருக்குந் தாய்மார்கள் மூலமாகவும் அறிவுரை கூறப்படுகிறது. ஊர்ஜிதக் உறைகளை இலவசமாக வழங்குதல், மகளிர்க்கு 'லூப்' வகையம் பொருத்துதல் ஆகியவை குடும்ப நலத் திட்டத்தின் முக்கியப் பணிகளாகும்.

(3) தொற்று நோய்களைப் பரவாவண்ணம் கட்டுப்படுத்துதல்.—அம்மை குத்துதல், காலரா நோய்த் தடுப்பு ஊசி போடுதல், முத் தடுப்பு ஊசி போடுதல் முதலிய நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் முறையாக மேற்கொள்ளப்படுகின்றன.

(4) சுற்றுப்புறத் துப்புரவு.—112 குழாய்க் கிணறுகள், தூசுக் கிணறுகள் அமைத்து அவற்றின் மூலமாக மக்களுக்குத் தூநீர் வழங்கப்படுகிறது. தனிப்பட்டோர் விடுகளில் 4,000 கழிப்பிடக் குழிகளும் தூசுக் கழிப்பிடங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

(5) **நல்வாழ்வுக் கல்வி.**—திரைப்படக் காட்சிகள், பலர் கூடி உரையாற்றுதல், ஒவ்வொருவரோடு தனித்தனியாகத் தொடர்பு கொண்டு நல்வாழ்வு பற்றி உரையாடுதல், கிராமத் தலைவர்கள் பயிற்சித்திட்டம் ஆகியவை மூலமாக நல்வாழ்வு பற்றி முறையாகக் கற்பிக்கப்படுகிறது.

(6) பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்கள்.—பிறப்பு, இறப்புப் புள்ளி விவரங்களைச் சுகாதார நேரிட ஆய்வாளர் பதிவு செய்கிறார். புள்ளி விவர உதவியாளர் ஒருவர், இந்தப் புள்ளி விவரங்களில் எவையேனும் விட்டுவிடப்பட்டிருந்தால் அவற்றைக் கண்டு பிடிப்பதோடு புள்ளி விவரங்களைத் தொகுத்து வருகிறார்.

(7) பயிற்சித்திட்டம்.—பயிற்சித்திட்டங்கள் கீழ்க்காணும் பணியாளர்களுக்காக நடத்தப்படுகின்றன :—

(a) சென்னை மருத்துவக் கல்லூரி மகளிர் மருத்துவர்கள்—பொதுச் சுகாதார நடவடிக்கைகளில் ஒரு மாதம் பயிற்சி அளித்தல். 1971-ல் 155 மகளிர் மருத்துவர்களும், 1972-ல் 200 மகளிர் மருத்துவர்களும் பயிற்சி பெற்றுள்ளனர்.

(b) சென்னை மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்கு மகப் பேறு—குழந்தை நலம் தருப்பட்டயப் பயிற்சி வகுப்பு பயிற்சிக் காலம் ஒரு வாரம்—ஆண்டொன்றுக்கு ஒரு தொகுதியினர் பயிற்சி பெறுதல்.

(c) சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, செங்கற்பட்டு மருத்துவக் கல்லூரி மாணவர்களுக்குத் துப்புரவு ஆய்வாளர் பயிற்சி வகுப்பு—பயிற்சிக் கால அளவு 15 நாட்கள்—ஓராண்டில் 3 தொகுதிகளாகப் பயிற்சி பெறுதல்.

(d) பொது நல்வாழ்வு பார்வையாளர் பயிற்சி (முறையானது ஒருங்கிணைக்கப்பட்டது)—15 முதல் 30 நாட்கள் பயிற்சி பெறுதல்—ஓராண்டில் 4 தொகுதியினர் பயிற்சி பெறுதல்.

பி. எஸ். எஸ்சி. மாணவர் பயிற்சி வகுப்பு பயிற்சிக் காலம் 15 நாட்கள்—ஓராண்டில் ஒரு கடவை பயிற்சி வகுப்பு நடத்துதல்.

(f) சென்னை, மகப்பேறு மருத்துவமனைகளைச் சேர்ந்த தாதிச் செவிலி மாணவியர்—பயிற்சிக் காலம் 15 நாட்கள்—ஓராண்டில் நான்கு பயிற்சி வகுப்புகள் நடத்துதல்.

நல்வாழ்வு பிரிவு உள்ள பகுதி என்பது, மற்ற பயிற்சி நிலையத்தின் பயிற்சியாளர்கள் செயல்முறை பயிற்சி மேற்கொள்ளும் பகுதியாகும். காசநோய் தனி மருத்துவமனை, மனநோய் தனி மருத்துவமனை, குழந்தை நல தனி மருத்துவமனை ஆகியவை முறையாகச் செயல்பட்டு வருகின்றன. இரத்த சோகை ஏற்படுவதற்கான காரணங்கள் குறித்து ஆய்வு செய்யும் பொருட்டு, கருவுற்றிருக்கும் போது இரத்தசோகை ஏற்படுதல் குறித்த சிறப்பு ஆய்வு ஒன்று நடந்தேறி வருகிறது. இதுவரை 283 தாய்மார்கள் மருத்துவச் சோதனை செய்யப்பட்டுள்ளனர். பேறு காலத்திற்கு முந்திய நிலையில் 50 தாய்மார்களுக்கு மருத்துவச் சோதனை செய்ததில் புழுவினால் ஏற்படும் தொற்று நோயே இரத்த சோகைக்கு முக்கியக் காரணம் என்று தெரிய வந்துள்ளது.

மறு பயிற்சி நிலையம்.—இந்த நிலையம் 1954 ஆம் ஆண்டில், ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. மேற்படி உதவி நிறுத்தப்பட்ட உடன், இந்த நிலையத்தை அரசே ஏற்றுக்கொண்டது. ஆரம்பச் சுகாதார நிலையங்களில் பணி புரியும் மருத்துவர்களுக்கும் மருத்துவ உதவியாளர்களுக்கும் மறு பயிற்சி அளிக்கப்படுகிறது. இது 8 மாத கால பயிற்சியாகும்.

இப்பயிற்சியின் நோக்கங்களாவன—

(1) ஆரம்ப சுகாதார நிலையத் தொகுதியைச் சேர்ந்த சுகாதாரப் பணியாளர்களிடையே ஒருங்கு சேர்ந்து உழைக்கும் தன்மையை வளர்த்தல், வேலைவாய்ப்பையே நோக்கமாகக் கொண்டே பயிற்சி அளித்தல்.

(2) ஆரம்ப நல்வாழ்வு நிலையங்களில் பணிபுரியும் உடல்நலப் பணியாளர்களுக்கு கிராமச் சுகாதாரப் பணியில் செய்முறைப் பயிற்சி அளித்தல்.

தற்பொழுது, ஆண்டு ஒன்றுக்கு, ஐந்து தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு தொகுதியிலும், 15 மருத்துவ அதிகாரிகள், 5 உடல் நல ஆய்வாளர்கள், 5 சுகாதாரப் பார்வையாளர்கள் ஆகியோர் உள்ளனர். 1972 ஆம் ஆண்டில் 98 பேர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1972 ஆம் ஆண்டு இறுதி வரையில், 2,139 பேரைக் கொண்ட 97 தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. தற்பொழுது, 98-வது தொகுதியினருக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது.

ஆராய்ச்சி-செயல் திட்டம்.—இத் திட்டம், 1956 ஆம் ஆண்டில், ஃபோர்டு நிறுவனத்தின் உதவியுடன் தொடங்கப்பட்டது. கிராமச் சுகாதார மேம்பாட்டு பணிகள், அவற்றின் அணுகுமுறை ஆகியவை பற்றிய உத்திகளை மேம்படுத்துவதற்கான ஆராய்ச்சி திட்டம் ஒன்றை மேற்கொள்வதற்காக இத்திட்டம் தொடங்கப் பட்டது. முதலில், கிராமப்புறக் கழிப்பிட வசதித் திட்டத்தின் 1956 முதல் 1960 வரையில் நான்கு ஆண்டுகளுக்கு ஆராய்ச்சி நடத்தப்பட்டது. ஒவ்வொரு வீட்டிலும், குறைந்த செலவிலும், எளிமையான முறையிலும் துப்புரவு வசதியுடன் கூடிய நீராடக் கழிப்பிடங்கள் அமைத்துக் கொடுப்பதற்கான வழிவகைபற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டது. ஃபோர்டு நிறுவனத்தின் உதவி நிறுத்தப்பட்டவுடன், 1961-லிருந்து இத்திட்டத்தை அரசே மேற்கொண்டது.

கிராமப்புற கழிப்பிட வசதித் திட்டம் தொடக்கத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் நான்கு வட்டாரங்களில் செயல்படுத்தப் பட்டு, பின்னர், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி மாவட்டங்களைச் சேர்த்து 15 வட்டாரங்களுக்கு நீட்டிக்கப்பட்டது. 1972 இறுதி வரையில், 19 வட்டாரங்களில், 9,923 ஆராய்ச்சி-செயல் திட்டம் கழிப்பிடங்கள் அமைக்கப்பட்டன. செங்கற்பட்டு மாவட்டத்தில் 4 பணிக் கூடாரங்களிலும், திருநெல்வேலி மாவட்

டத்தில் ஒரு பணிக்கூடாரத்திலும் மட்டும் தான் ஆராய்ச்சி—செயல் திட்ட கழிப்பிடங்களுக்கான பாகங்கள் தயாரிக்கப் படுகின்றன.

(a) கல்கத்தாவில் உள்ள, அகில இந்திய சுகாதார மக்கள் நல்வாழ்வு நிறுவனம், காந்தி கிராமம், கிராம நல்வாழ்வு குடும்பக் கட்டுப்பாட்டு நிறுவனம் ஆகியவற்றைச் சேர்ந்த சுகாதாரக் கல்வி பட்டைய வகுப்பு மாணவர்களுக்கு மேற்பார்வையுடன் கூடிய களப் பயிற்சி. இது 2 மாத காலப் பயிற்சியாகும்.

(b) தேசியப் பணித் திட்டத்தின்கீழ் கல்லூரிகளுக்கான பயிற்சித் திட்டம். இது இரண்டு நாள் பயிற்சியாகும்.

(c) மனிப்பால் மருத்துவக் கல்லூரியைச் சேர்ந்த துப்புரவு உதவியாளர் பயிற்சித் திட்டம்—இது ஒரு மாத காலப் பயிற்சியாகும்.

1966-67 முதல் 1969-70 வரையிலான கால அளவில், ஆராய்ச்சி—செயல் திட்டப் பிரிவு, 91 தொடக்கப் பள்ளிகளில் பள்ளித் துப்புரவுகளை மேற்கொண்டது. 1969-70 ஆம் ஆண்டிலிருந்து, அதே திட்டத்தை கிராம-வளர்ச்சி-உள்ளாட்சித் துறை நிறை வேற்றி வருகிறது. ஆராய்ச்சி-செயல் திட்டப் பிரிவு தயாரித்த திட்டத்தின்படி இத்துறை நிறைவேற்றி வருகிறது.

VII. பல்வகை

சந்தைகளும் திருவிழாக்களும்.

மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலும் எடுத்தாழு, 690 பெரிய கிராம திருவிழாக்கள் நடைபெற்றன. இவ்விழாக்கள் அனைத்திற்கும் போதுமான சுகாதாரத் துப்புரவு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. பெரிய திருவிழாக்களுக்கு, ஏற்பாடு செய்யப்பட்ட துப்புரவுப் பணிகளை மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத் துறை உதவி இயக்குநர்களும் கூட்டு இயக்குநரும் நேரில் பார்வையிட்டனர். விழாக்களின்போது தொலையேற்படுமென எதிர்பார்க்கப்பட்ட நேர்வுகளில் காலரா தடுப்பூசி போடும் பணியைச் செய்ய கொள்ளை நோய்ப் பிரிவுச் சிகிச்சைக்கான இயங்கும் நிலையங்களின் வண்டிகளின் பணியாளர்களும் வண்டிகளும் அந்த இடத்திற்கு அனுப்பப்பட்டனர்.

பெருவாரியாகப் பரவக்கூடிய நோய்த்தடுப்புக்குப் பொறுப்பு வகிக்கும் உதவி இயக்குநர் சமீபத்தில் சேலம், தென் ஆர்க்காடு, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர் மாவட்டங்களில் எற்பட்ட வெள்ளங்களினால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் சென்று, பெருவாரியாகப் பரவக் கூடிய நோய்த் தடுப்பு கட்டுப் பாட்டுப் பணிகளை மேற்கொள்வது பற்றி நல அதிகாரிகளுக்கு பொருத்தமான உத்தரவுகள் பிறப்பித்தார். இத்துடன் மக்கள் நல்வாழ்வு—குடும்ப நலத் துறை கூடுதல் இயக்குநரும், கோயம் புத்தூர், சேலம் ஆகிய மாவட்டங்களில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சென்று அப்பகுதிகளில் பெருவாரி யாகப் பரவக்கூடிய நோய்களைக் கட்டுப்படுத்த நல அதிகாரிகள் செய்த பணிகளை மேற்பார்வையிட்டார். அந்த மாவட்டங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக காலரா கண்டுள்ளதாக மட்டுமே இதுவரையில் அறிவிக்கப்பட்டுள்ளது.

சுற்றுப்புறத் துப்புரவு :

பள்ளி செல்லும் இளஞ்சிறார் உடல்நல வாழ்க்கை முறைகளை கடைப் பிடிக்கக் கற்றுத் தருவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டம் பள்ளிகளில் கழிப்பிடங்கள், பாதுகாப்பான நீர் வழங்கல் ஆகிய வசதிகளை ஏற்படுத்தித் தர வகை செய்கிறது. இத்திட்டம் 1966-ல் கொண்டு வரப்பட்டு தொடர்ந்து செயற் படுத்தப்பட்டது. பின்னர், இத்திட்டத்தை தமிழ் நாடு முழுவதும் நீட்டிப்பதை முடிவு செய்து, கன்னியாகுமரி நீங்கலாக ஒவ்வொரு மாவட்டத்திலும், 10 பள்ளிகள் என்னும் விதத்தில், 120 பள்ளிகளில் இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்காக 1970-ல் அரசு ரூ. 4 லட்சம் வழங்கியது. இத்திட்டத்தை மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத் துறை இயக்குநரும், கிராம வளர்ச்சித் துறை இயக்குநரும் இணைந்து நிறைவேற்றி வருகின்றனர்.

காற்றின் தூய்மை கெடுதல்.

தமிழ்நாடு மேற்கொண்ட பல்வேறு தொழில் மேம்பாட்டு நட வடிக்கைகள் காரணமாக, இங்கு தொழிற்சாலைகள் பல நிறுவப் பட்டுள்ளன. நகர்ப்புறங்களும் கடிதே வளர்ந்து வருகின்றன. இங்கு, பெட்ரோல், டீசல் வண்டிகளின் எண்ணிக்கையும் கணிச மான அளவுக்கு உயர்ந்து விட்டது. பயன்படுத்தப்படும் பொருள்

களின் எண்ணிக்கை மேலும் மேலும் பெருகிக் கொண்டே போவதால், கழிவுகளும் அதிகமாகின்றன. இவையெல்லாம் காலவது ஒரு வழியில் காற்றின் தூய்மையைக் கெடுக்கின்றன. தமிழ் நாட்டில் காற்றின் தூய்மை பெரிதும் கெட்டுவிட வில்லையா யினும், அபாய நிலை உணர்ந்து முன்னதாக நடவடிக்கை எடுத்துள்ளது. இம்மாநிலத்தில் காற்றுத் தூய்மை கேடல் பிரச்சினை பற்றி, அறிக்கையாக ஆய்வு செய்து, எடுக்க வேண்டிய பொருத்தமான நடவடிக்கைகள் பற்றிய அறிக்கைப் பரிந்துரைக்க 1971-ல் மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத் துறையின் கூடுதல் இயக்குநரை அமைப்பாளராகக் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட்டது. முதலில் மாநகரில் உள்ள நிலைமையை அறிந்து அறிக்கை அளிக்குமாறு இக்குழு கேட்டுக் கொள்ளப்பட்டது. இம் மாநகரில், 2.5 மில்லியன் மக்கள் வசிக்கின்றனர். மோட்டார் வண்டிகள் ஏராளம். பல தொழிற்சாலைகளும் இரண்டு பெரிய இரயில் நிலையங்களும் உள்ளன. இந்த இரயில் நிலையங்களில் லோக்கோ கொட்டகைகளும் மாசுபடுத்தும் யார்டுகளும் உள்ளன. இவைதவிர நிலக்கரியைப் பயன்படுத்தும் மின்சக்தி நிலையங்கள் இரண்டும் உள்ளன. விமான நிலையம் ஒன்று உள்ளது. சில தொழிற்சாலை மோட்டார்கள், இரயில் இயந்திரங்களும் அனல் மின்சக்தி நிலையக்களும் சேர்ந்து வெளிவிடும் கழிவுப் பொருள்களினால் ஏற்படுகின்ற காற்றுத் தூய்மை பற்றி, மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத்துறை இயக்குநர் அலுவலகம், கிண்டி பொறியியல் கல்லூரி, இந்தியன் தொழில் நுட்பக் கல்லூரி, மத்திய பொது நல்வாழ்வு ஆராய்ச்சி நிலையம் ஆகிய இடங்களில் உள்ள நிலைய நீர் ஆய்வாளர் ஆய்வுக் கூடங்களில் ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன. நந்தன் பொறியியல், நாடு தொழிற்சாலைகள் ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் காற்றுத் தூய்மை கேடல் பற்றியும், குறிப்பாக நிலைய நீர் ஆய்வாளர், மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறையின் உதவி இயக்குநர் ஆகியோரால் ஆய்வு நடத்தப்பட்டு, இவற்றைக் கட்டுப்படுத்த மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகளும் பரிந்துரைக்கப்பட்டன. ஆக, இப் பரிந்துரைகளை ஏற்றுக்கொண்டுள்ளது. காற்றுத் தூய்மை கேடல் பற்றிய குழு, மாநகரத்திலுள்ள இப் பிரச்சினைபற்றி விரிவாக ஆய்வு செய்த பின்னர் தொழிற்சாலைகள், மோட்டார் வண்டிகள், இரயில் இயந்திரங்கள், அனல் மின்நிலையம், மற்றும் ஆவற்றின் கழிவுப் பொருட்கள் ஆகியவற்றினால் மாநகரத்தின் தூய்மை கெட

வாய்ப்பு இருக்கிறது. ஆனால் மாநகரின் பல்வேறு இடங்களில் ஏற்படுகின்ற இவற்றின் விளைவுகள் வானிலைக் கூறுகளைப் பொறுத்தவையே. விண்வெளியில் புகையை நிலவுகை இயன்ற அளவுக்குக் குறைத்து அதன்மூலம், உடல் நலனிற்கும் பொருள் களுக்கும் ஊறுவினைவிக்கின்ற அளவுக்கு காற்று தூய்மை கெடுவதைத் தடுப்பதற்கான சில நடவடிக்கைகளை அவர்கள் தெரிவித்துள்ளனர். காற்று தூய்மை கெடுதலைக் கட்டுப்படுத்தல், இதற்காகச் சட்டப்பாதுகாப்பை வரையம் ஒன்றை அமைத்தல் ஆகியவை தொடர்பான சட்ட விதித் துறைகள் சிலவற்றையும் இக் குழு தெரிவித்துள்ளது. காற்றின் தன்மை எவ்வாறு கெடுகிறது என்பது பற்றிக் கண்டறிய வேண்டியது அவசியம் என்றும், கிண்டி, கிங் நிறுவனத்தில் உள்ள நீர்—கழிநீர் ஆய்வுக் கூடங்களில் மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை இயக்குநர் அலுவலகத்திலும் விரிவான ஆய்வு நடத்தப்பட வேண்டும். இதற்கு அந்த ஆய்வுக் கூடங்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட வேண்டும். காற்று தூய்மை கெடுவதனால் மனிதர்களிடையே எந்த அளவுக்கு கொள்ளை நோய் பரவுகிறது என்பதுபற்றி ஆய்வு செய்யவேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. இக் குழுவின் அறிக்கையை அரசு பரிசீலித்து வருகிறது.

நீரின் தூய்மை கெடுதல்.

தொழில்மயமாதல், நகரப்புறமாக மாற்றப்படுதல் ஆகிய மற்றவற்றால் ஏற்படும் மற்றொரு சுற்றுப்புற குறைபாடு நீரின் தூய்மை கெடுவதாகும். பெரும்பாலும் சர்க்கரைகளாலும் தொழிற்சாலைகளின் கழிவுகளாலுமே நீரின் தூய்மை கெடுகிறது. தமிழ் நாட்டில், தோல் பதனிடு தொழிற்சாலைகள், இரசாயனத் தொழிற்சாலைகள், சர்க்கரை ஆலை, வடிசாலைகள், எண்ணெய் தயாரிப்புத் தொழிற்சாலைகள், உர-அமிலத் தயாரிப்புத் தொழிற் சாலைகள், காகித தயாரிப்பு ஆலைகள், துணி செய்முறைப்படுத்தும் தொழிற்சாலைகள், சோடா தயாரிப்புத் தொழிற்சாலை, சவ்வரிசி ஆலை, முலாம் பூசுதல் தொழிற்சாலைகள், புகைப்படச் சுருள் தயாரிப்புத் தொழிற்சாலை, புரதச்சத்துப் பொருள்கள் தயாரிப்பு ஆலைகள் முதலிய போன்ற ஏராளமான தொழிற்சாலைகள் உள்ளன. இத் தொழிற்சாலைகளிலிருந்து பல்வேறு வகையான

[1973 மார்ச் 23

கழிவுப்பொருள்கள் வெளியேறுகின்றன. தமிழ்நாட்டில் பெரும் பகுதிகளில், கழிவுநீர் அகற்று வசதிகள் இடையா. கழிவுநீர் அகற்று வசதிகள் செய்துகொடுக்கப்படுகின்ற இடங்களில், கழிவு நீரை அப்புறப்படுத்துவதற்கான பணிகள் இன்னும் நிறைவு பெறவில்லை. சில தொழிற்சாலைகள் கழிவுநீரை நிலங்களில் ஓட விட்டு விடுகின்றன. சில, ஆற்றில் கலக்க விட்டு விடுகின்றன. இன்னும் சில கடலில் கலக்கவிட்டு விடுகின்றன. இவ்வாறு கழிவு நீரைப் அப்புறப்படுத்துவதனால், நீரின் தூய்மை கெடுகின்றது. இவ்வாறு நீர் தூய்மை கெடுவதைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. தோல் பதனிடு தொழிற்சாலை கழிவுப் பொருள்களினால், குறிப்பாக வட ஆர்க்காடு மாவட்டத்தில், ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றி விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. தமிழ்நாடு அரசும் இந்திய அரசும் சேர்ந்து ஆராய்ச்சித் திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளன. இத்திட்டத்தின் கீழ், மக்கள் நல்வாழ்வு—குடும்பநலத் துறை இயக்குநர் அலுவலகத்தின் நீர்-கழிவுநீர் ஆய்வுக் கூடத்தின் விஞ்ஞானிகள், கழிவுநீரைத் தூய்மைப்படுத்துவதற்கான பொருத்தமான நடவடிக்கைகளைக் கண்டுபிடிக்க விரிவான முன்னெடு ஆய்வு ஒன்றை நடத்தினர். இந்த ஆய்வுகளிலிருந்து கண்டறிந்தவற்றைக் கொண்டு, கழிவுநீரைத் தூய்மைப்படுத்துவதற்கான இயந்திரங்களின் வடிவமைப்பு, அவற்றிற்கான நடவடிக்கை முறைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இந்த வடிவமைப்புகள் அச்சிடப்பட்டு தோல் பதனிடு தொழிற்சாலைகளுக்குக் கொடுப்பதற்காகத் தயாராக உள்ளன. இம் மாநிலத்திலுள்ள வேறுசில தொழிற்சாலைகளில் கழிவு நீரைத் தூய்மைப்படுத்துவதற்கான இயந்திரங்கள் உள்ளன. தொழிற்சாலைகளின் கழிவுநீர்களினால் எந்த அளவுக்கு நீரின் தூய்மை கெடுகின்றது என்பது பற்றித் தலைமை நீர்ப் பகுப்பாய்வு ஆய்வுக் கூடங்களினால் மதிப்பிடப் படுகின்றன. இவற்றின் தொடர் நடவடிக்கையாக, எவ்விதத் தீங்கும் ஏற்படா வகையில் கழிவு நீர்களை ஒருவகை செய்யுமாறு தொழிற்சாலைகளுக்கு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. நீரின் தூய்மை கெடுவதுபற்றிக் கவனித்துக் கொள்ளவும், புதிதாகத் தொடங்கப்பட்ட தொழிற்சாலைகளினால், நீரும், காற்றும் தூய்மை கெடுவதைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக அரசைக் கலந்தாலோசிக்கும் ஓர் அமைப்பாகச் செயல்படவும், "நீர்—கழிவுநீர் தூய்மைப்படுத்தல் குழு" என்னும் பெயரில், உயர் அதிகார நிலைக்குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

1973 மார்ச் 23]

பல்வேறு பொதுச் சுகாதாரத் திட்டங்களில் பணி புரியும் உடல் நல ஆய்வாளர்கள், தேர்வுத் தர உடல்நல ஆய்வாளர்கள் ஆகியோரின் பணிகள் முதலியவற்றை முறைப்படுத்தல் :

உடல்நல ஆய்வாளர்கள்.—தற்போது 3,033 சாதாரண தர உடல் உடல்நல ஆய்வாளர்கள் உள்ளனர். 1972-ம் ஆண்டுத் [illegible] 1972 [illegible] மக்கள் நல்வாழ்வு-குடும்பநல துறை இயக்குநர் அலுவலகத்தில் உடல்நல ஆய்வாளர்கள் தொடர்பாக முடிவுறு நிலையில் இருந்த பணிமுறைப்படுத்தல், நிலைப்படுத்தல், ஊதிய நிர்ணயம் முதலியன தொடர்பான பணிகளின் விவரம் வருமாறு :—

1. பணிகளை முறைப்படுத்துதல்	2,071
2. பணிகளை நிலைப்படுத்துதல்	270
3. தகுதிகாண் பருவகாலத்தை அறிவித்தல்	274
4. கடந்த ஒரு தேதியிலிருந்து பணிமுறைப் படுத்தப்பட்டதை அடுத்து திருத்த விதத்தில் ஊதியத்தை நிர்ணயித்தல்	141

மக்கள் நல்வாழ்வு-குடும்பநலத் துறை இயக்குநர் அலுவலகத்தில் மேற்படி வேலைகள் அதிக அளவில் முடிவுறு நிலையில் உள்ளதால், உடனடி நடவடிக்கை எடுத்து அப்பணிகளை முடிப்பதற்காக ஒரு மேற்பார்வையாளர், 2 உதவியாளர்கள், தட்டச்சர் ஒருவர் ஆகியோர் அடங்கிய பிரிவு ஒன்று 1972-ல் ஏற்படுத்தப்பட்டது. மக்கள் நல்வாழ்வு-குடும்ப நலத் துறை அலுவலகத்தினால் இது வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தேர்வுகளின் விவரங் களாவன :—

1. முறைப்படுத்தல்	1,457
2. நிலைப்படுத்துதல்	276
	(முடிக்காமல் எதுவும் இல்லை.)
3. தகுதிகாண் பருவத்தை அறிவித்தல்	170
4. திருத்தப்பட்ட விதங்களில் ஊதியங்கள் நிர்ணயித்தல்	139

[1973 மார்ச் 23

2. தேர்வுத் தர உடல் நல ஆய்வாளர்கள்.—தேர்வுத் தர உடல் நல ஆய்வாளர்களின் தற்போதைய எண்ணிக்கை 258

குடும்ப நலத் துறை நிலையங்களில் தேர்வுத் தர உடல்நல ஆய்வாளர்களின் தரத்தில் பணி உடல்நல ஆய்வாளர்களின் தரத்தில் பணி புரிகின்ற வட்டார வளர்ச்சிப் பணி அதிகாரிகள் 334

சாதாரண தர உடல்நல ஆய்வாளர்களின் எண்ணிக்கையை 10 சதவிதத்திலிருந்து 25 சதவிதமாக சதவிதமாக உயர்த்தி இரண்டாவது சம்பள உயர்த்தி இரண்டாவது சம்பள ஆணைக்குழு பரிசீலனை செய்ததை ஒட்டி உருவாக்கப்பட்ட கூடுதல் பதவிகள் 135

தேர்வுத் தர உடல்நல ஆய்வாளர்களின் தற் போதைய எண்ணிக்கை 728

எல்லாப் பதவிகளும் நிரப்பப்பட்டு விட்டன. 728 தேர்வுத் தர உடல்நல ஆய்வாளர்களில் 138 ஆய்வாளர்களின் பணி இன்னும் முறைப்படுத்தப்படவில்லை.

நகரமைப்புத் திட்டங்கள்.

சமுதாயத்தின் நலனைப் பெருக்குவதற்கான தேசிய, மாநிலத் திட்டங்களோடு சேர்ந்த பொருளாதார, சமூக நோக்கங்களோடு எப்படியோ நகர்ப்புற-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்தின் நோக்க மாகும். இதன்மூலம் மக்களுக்கு இன்பமயமான வாழ்க்கை உருவாக்கப்பட வேண்டும்.

மேலும், நகரமைப்புத் திட்டம் என்பது உள்ளாட்சி மன்றங்களின் சட்ட பூர்வமான வரம்பிற்கு உட்பட்டே இருக்க வேண்டும் என்பதல்ல. ஒன்று பெருநகர்ப் பகுதியை முழுவதும் அல்லது வட்டாரப் பகுதியை முழுவதும் அல்லது வளர்ச்சி வாய்ப்புக்கள், தொழில் வாய்ப்பு, மனித வாழ்க்கை ஆகியவற்றைப் பொறுத்து நகர-நாடாப் பகுதி முழுவதும் இதில் அடங்கியதாக இருக்க வேண்டும்.

1973 மார்ச் 23]

எனவே நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்தின் வட்டாரக் கொள்கையினை விரிவானதொரு சட்டவரைவு மூலமாகக் கொண்டு வருவது அவசியமெனக் கருதப்பட்டது. அதன்படி, திருத்தி அமைக்கப்பட்ட நகர-நாட்டுப்புறத் திட்டமைப்புச் சட்டம் ஒன்று கொண்டு வரப்பட்டது. விரிவான நகர-நாட்டுப்புற அமைப்புச் சட்டவரைவு, சட்டமன்றத்தின் நிறைவேற்றப்பட்டவாறே தற்பொழுது குடியரசுத் தலைவரின் இசைவைப் பெற்றுள்ளது. புதிய சட்டத்தின்கீழ் நகர-நாட்டுப்புற அமைப்புத்திட்ட அதிகார மன்றம் ஒன்றை அமைப்பது பற்றி அரசு பரிசீலித்து வருகிறது.

வட்டாரத் திட்டங்கள் தயாரித்தல்.—திட்டமிட்ட முறை யிலேயே வளர்ச்சித் திட்டப்பணிகள் நடைபெற மாநிலம் 8 வட்டாரத் திட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. சேலம் மாவட்டத்திற்கும் திருச்சிராப்பள்ளி-தஞ்சாவூர் வட்டாரத் திற்கும் நீண்டகால வட்டார திட்டங்கள் தயாரிக்கப்பட்டு விட்டது. எஞ்சியுள்ள வட்டாரங்களுக்கான நீண்டகால திட்டங்கள் 1973 மார்ச் திங்கள் இறுதிக்குள் தயாரிக்கப்பட்டு விடும். 1971-ஆம் ஆண்டு புதிய நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டச் சட்டத்தின்கீழ் அமைக்கப்படவிருக்கிற வட்டார திட்ட அமைப்பு-வளர்ச்சி அதிகார மன்றங்கள் மேற்கொள்ளவிருக்கும் செயல் திட்டங்களுக்கும் வட்டார அளவிலான ஆய்வுகளுக்கும் நிலை அடிப்படையாக அமையும்.

சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றங்கள் அமைத்தல்.—சென்னைப் பெருநகர்த்திட்டம் 1971-1991-ல் குறிப்பிட்டுள்ளவாறு, பெருநகர் முறையாக வளர்ச்சியடைவதை உறுதிசெய்து கொள் வதற்காக நகர-நாட்டுப்புற அமைப்புத் திட்டத்திற்குப் பொறுப்பு வகிக்கும் அமைச்சரைத் தலைவராகவும் உள்ளாட்சித்துறை அமைச்சரை துணைத் தலைவராகவும் கொண்டு 17 உறுப்பினர் களைக்கொண்ட சென்னை பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றம் என்னும் அதிகார மன்றம் ஒன்றை அரசு அமைத்துள்ளது.

சென்னைப் பெருநகர்ப் பகுதியின் வளர்ச்சிக்காக ஒருங்கிணைந்த திட்டம் ஒன்றை வகுப்பதில், பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்திற்கு ஆலோசனை நல்க, வாழ்க்கையின் பல்வேறு துறைகளைச் சேர்ந்த அதிகாரிகள் அதிகாரிகளல்லா

தோர் ஆகியோர் அடங்கிய 27 உறுப்பினர்களைக் கொண்ட ஆலோசனைக் குழு ஒன்று இந்த அதிகார மன்றத்திற்கு உதவி புரியும்.

நகர்ப்புறப் பகுதி வளர்ச்சி.—பெருநகர்ப் பகுதி வளர்ச்சி அடைவதற்கான வருங்காலத் தேவைகள் மாநகரிலிருந்து மூன்று திசைகளில் தொடங்கும் மூன்று முக்கியத்துறைகளை யொட்டியே அமையவேண்டும் என்று சென்னைப் பெருநகர் வளர்ச்சித் திட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளது. முதற் கட்டத்தில், 30 லட்சம் மக்களுக்கு இடவசதி அளிக்கும் வகையில் மாநகர் மாற்றியமைக்கப்படும். இரண்டாவது கட்டத்தில் ஒவ்வொரு பகுதியிலும் இரண்டு முதல் மூன்று லட்சம் வரை மக்கள் தொகையுடன் வசதிகள் அனைத்தும் நிறைந்த ஆறு நகர்ப்புற மாநகருக்கு வெளியே அமைக்கப்படும். மாநகரிலிருந்து தொடங்கும் மூன்று போக்குவரத்து இடைவழிகள் (Transportation Corridors) இவற்றுடன் அமைத்திருக்கும் நகர்ப்புறப் பகுதிகள், தகுந்த ரயில், சாலை வசதிகள் மூலம் மாநகருடன் இணைத்திருக்கும். மூன்றாவது கட்டத்தில் நகர்ப்புறப் பகுதிக்கும், சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கும் இடையே ஒவ்வொரு போக்குவரத்து இடைவழிக்கும் ஒன்றாக மூன்று துணை நகரங்கள் அமைக்கப்பட்டு, அவை இடையே உள்ள கிராமங்களினைல் பிரிக்கப்படும்.

பெருநகர்ப் பகுதியின் ஒருங்கிணைந்த வளர்ச்சிக்கு மணலி, எண்ணூர் ஆகிய பகுதிகள் மிக முக்கியமான நகர்ப்புறப் பகுதிகளாக அமையும் என்று பெருநகர்த் திட்டத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. மணலியில் தொழில்கள் விரைந்து வளர்ச்சி யடைந்து வருவதைக் காணும்போது, பிற நகர்ப்புற பகுதிகளின் வளர்ச்சிப் பணியை மேற்கொள்ளுவதற்கு முன்பு எண்ணூர்-மணலி நகர்ப்புறப்பகுதி குறித்த [illegible] வகையாகத் திட்டமிட்டு அதனை வளர்ச்சிபெறச் செய்ய வேண்டிய நிலை உருவாகியுள்ளது. எண்ணூர்-மணலி நகர்ப்புற வளர்ச்சிக்கான விரிவான திட்டம் ஒன்றை வகுத்து, மாநில விட்டு வசதி வாரியத்தின் முகவரமைப்பின் மூலமாக அதனை நிறைவேற்றுமாறு சென்னைப் பெருநகர் வளர்ச்சி அதிகார மன்றத்தைக் கேட்டுக்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. இதற்காக 1973-74 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. 10 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

துணை நகரங்களை ஏற்படுத்துதல்.—வருங்காலத்தில் மாநகரில் ஏற்படக்கூடிய இடநெருக்கடியைக் கட்டுப்படுத்தும் முறையாக, சென்னை மாநகரிலிருந்து 25 முதல் 30 மைல் தொலைவு வரையுள்ள இடங்களில் துணை நகரங்களை வளர்ச்சியடையச் செய்யும் திட்டத்தை அரசு ஒப்புக்கொண்டுள்ளது. செங்கற்பட்டுக்கு அருகிலுள்ள பொன்னேரியை துணை நகரமாக வளர்ச்சியடையச் செய்யும் திட்டத்தை முதலில் மேற்கொள்ள முடிவு செய்யப் பட்டுள்ளது. இந்நகரம் "மறைமலை நகர்" என்று அழைக்கப்படும். இப்புதிய நகரத்தை வளர்ச்சியடையச் செய்வதற்கான செயல் திட்டங்களை விரிவாக வகுக்கும் திட்டம் புதிதாக அமைக்கப் பட்டுள்ள சென்னை பெருநகர்த்திட்ட அதிகார மன்றத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

பாதாள இருப்புப்பாதை அமைக்கும் திட்டம்.—வருங்காலத்தில் போக்குவரத்து நெரிசல் அதிகமாகும் என்று எதிர்பார்க்கப் படுவதால் மக்களால் பெருமளவில் பயன்படுத்தப்படும் போக்கு வரத்து ஏற்பாட்டை நிறுவுவது மிகவும் அவசியம்; இதனைக் கருத்திற்கொண்டு மாநகரத்தின் வட எல்லை, தென் எல்லையாக அமைந்துள்ள எண்ணூர், திருவான்மியூரை இணைக்கும் பாதாள இருப்புப்பாதையை சென்னையில் அமைப்பதற்கான திட்டம் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் என இந்திய அரசின் ரயில்வே அமைச்சகத்தை தமிழ்நாடு அரசு வலியுறுத்திக் கேட்டு கொண்டுள்ளது. இது தொடர்பாக நகரமைப்புத் திட்ட இயக்குநர் அலுவலகம் தொழில் நுட்ப அறிக்கை ஒன்றை தயாரித்து ரயில்வே அமைச்சகத்துக்கு அனுப்பியுள்ளது. ரயில்வே அமைச்சகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ள வாய்ப்புக்கூறு ஆய்வுக்கு இந்த தொழில் நுட்ப அறிக்கை அடிப்படையாக அமையும். இது காரியத்துக்காக ஐந்தாவது திட்டத்தில் போது மான நிதியுதவி ஒதுக்குமாறும் மத்திய அரசிடம் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

நகரமைப்புத் திட்டப்பணியில் வல்லுநர்களுக்குப் பயிற்சி.—நகர-நாட்டுப்புறத் திட்டம் தனிப்பட்டதோர் தொழிலாகவே ஆகிவிட்டது. இப்பயிற்சிக்கு பொறியியல், கட்டிடக்கலை, பொருளியல், சமூகவியல் ஆகியவற்றில் தேர்ச்சி தேவை. இத் துறைக்கும் உள்ளாட்சி மன்றங்களுக்கும் திட்டமிடுபவர்களின் தேவை அதிகரித்து வருகிறது. இத்தேவையை நிறைவு செய்ய

அதிகாரிகள் அளவிலும் தொழில் நுட்ப வல்லுநர்கள் அளவிலும் பயிற்சியாளர்களைப் பயிற்றுவிக்கும் திட்டமொன்று செயல்பட்டு வந்துள்ளது.

1973-74 ஆம் ஆண்டில் நகர-நாட்டுப்புறத் திட்டம், போக்கு வரத்துத் திட்டம், இயற்கை (நில)க் காட்சியைப் பேணும் பணி ஆகியவற்றில் பட்ட மேற்படிப்பு பயிற்சி, நகரமைப்புத் திட்டத்தில் தகுதிப்பட்டயச் சான்றிதழ் மேல்படிப்பு (Post-Licentiate Course) ஆகியவற்றில் பயிற்சியளிக்கவும் திட்டமிடப் பட்டுள்ளது.

இக் காரியங்களுக்காக 1973–74 வரவு-செலவுத் திட்டத்தில் ரூ. ஒரு லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களுடன் மாநில விட்டு வசதி வாரியமும் குடிசைப்பகுதி மாற்று வாரியமும் மேற்கொள்ளும் விடு கட்டும் திட்டங்கள் குறித்து அவற்றிற்கு ஆலோசனை வழங்கும் பணியிலும் நகராட்சி அலுவலகக் கட்டிடங்கள், சமுதாயக் கூடங்கள், வருவாய் தரத் தக்க பேருந்து நிலையங்கள், அங்காடிகள் போன்றவற்றிற்கு வடிவமைப்பு தயாரித்தல் ஆகியவை குறித்து உள்ளாட்சி மன்றங்களுக்கு ஆலோசனை கூறும் சிறப்புப் பணியிலும் இத்துறை ஈடுபட்டுள்ளது.

மாநிலம் முழுவதிலும் திட்டப்பணிக்கு வழிகாட்டும் இன்றியமையாப் பணியை மேற்கொள்ள இத்துறை விரைவு படுத்தப்பட்டுள்ளது. வருமாண்டுகளில், சிறப்பான வகையில் திட்டமிட்ட வளர்ச்சி சகாப்தத்தை அடைவோம் என்று மக்கள் எதிர்பார்க்கலாம்.

சென்னை மாநகர் குடிநீர் வழங்கல், கழிவு நீர்த் திட்டங்கள்.—இந்தக் கோரிக்கையில், குடிநீர் வழங்கல்-கழிவு நீர்த் திட்டங்களுக்காக, சென்னை மாநகராட்சிக்கு மானியங்கள் வழங்குதல் அடங்கும். இவை பின்வருமாறு :—

1973-74 ஆம் ஆண்டில் சென்னை மாநகராட்சிக்கு மானியங்கள்.

	மானியம்.	கடன்.	மொத்தம்.
குடிநீர் வழங்கல் ..	73·08	71·84	144·92
கழிவுநீர் அகற்றுதல் ..	33·50	87·00	120·50

தொழில் நுட்பத் தகுதிபெற்று வேலையில்லாமல் இருப்போருக்கு பயிற்சியளிப்பதற்காக தொடங்கப்பட்ட தொழில் பழகுவோர் திட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியுதவியும் இதில் அடங்கும்.

குடிநீர் வழங்கு திட்டங்கள்.—மாநகருக்கு வழங்கப்படும் குடிநீர் அளவைப் பெருக்குவதற்காக, நிலையான செயற்குறிப்பை, அதாவது காவிரி நதி விரிவாக்கத்திலிருந்து மாநகருக்குக் கொண்டுவரும் திட்டத்தைச் செயல்படுத்தும் வரையில், மாநகரத்தின் பெருகிவரும் தேவையை நிறைவேற்ற பல்வேறு குறுகிய காலச் செயற்குறிப்புகள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. பல நிலைகளாக இத்திட்டங்கள் நிறைவேற்றப் பட்டன. இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து மாநகராட்சி அதிக அளவில் மாநகருக்கு குடிநீர் வழங்க முடிந்தது. மாநகராட்சியில் 1968-69 இல் நாளொன்றுக்கு 35 மில்லியன் காலன் (160 மெகா லிட்டர்) குடிநீர் வழங்கப் பட்டது ; மேற்சொன்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டதன் பயனாய் 1973 இல் 50 மில்லியன் காலனுக்கு அதிகமாக (230 மெகா லிட்டர்) குடிதண்ணீர் வழங்க முடிந்தது. வழக்கமான வட கிழக்குப் பருவமழை பொய்க்காமலிருந்தால், மாநகருக்கு காவிரி நீர் கிடைக்கச் செய்யும் வரை இதே அளவு குடிநீர் தொடர்ந்து வழங்கப்பட்டுவரும்.

மாநகருக்கு குடிநீரை அதிக அளவில் வழங்கி வருவதுடன், குடிநீர் அளவு சமமாகவும் வழங்கப்பட்டு வருகிறது. இதற்காக சில மண்டலத் திட்டங்கள் படிப்படியாக நிறைவேற்றப்பட்டன ; சில மண்டலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன. இத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டவுடன் குடிநீர் சீராக வழங்கப் படும் என்றும், மாநகரின் கடைகோடிப் பகுதிகளுக்கும் குறைந்த அளவுத் தேவையை நிறைவு செய்யும் வகையில் குடிநீர் வழங்க இயலும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

1973-74 ஆம் ஆண்டில் ரூ. 144.92 லட்சம் நிதி ஒதுக்க (மானிய மாக 73.08 லட்சமும், கடனாக 71.84 லட்சமும்) அரசு திட்ட மிட்டுள்ளது.

கழிவுநீர் அகற்று திட்டம்.—தற்போதைய தேவையை நிறைவு செய்வதற்கு போதுமான அளவில் ஏற்கெனவே உள்ள கழிவுநீர் அகற்று ஏற்பாடுகள் இல்லாததால் பெரும் திட்டத்தின் அடிப்

[1973 மார்ச் 23

படையில் மாநகரிலுள்ள கழிவுநீர் அகற்று ஏற்பாடுகள் அனைத்தையும் மேம்படுத்த வேண்டியுள்ளது. எனவே, இது காரியத்துக்காக அரசு கழிவுநீர் அகற்று அடங்கல் திட்டம் ஒன்றுக்கு அரசு ஒப்பளிப்பு வழங்கியது. இதன்படி மாநகரம் ஐந்து மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. கழிவு நீரை அகற்று வதற்குத் தனித்தனி ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இது தவிர. படிப்படியாக நிறைவேற்றும் முறையில் மழைநீர் வடிகால் திட்டங்களையும் தேவைப்படும் நேர்வுகளில் ஏற்கெனவே உள்ள நீரிறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல் தொடர்பான பணி களையும் மாநகராட்சி மேற்கொள்கிறது. மாநகராட்சியால் மேற் கொள்ளப்பட்டு அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ள கழிவுநீர் அகற்று திட்டங்கள் அனைத்துக்குமான மொத்த மதிப்பீட்டுச் செலவு ரூ. 1,392.71 லட்சம் ஆகும். மழைநீர் வடிகால்களைக் கட்டுதல், நீரிறைக்கும் நிலையங்களை மேம்படுத்துதல் ஆகிய திட்டங்கள் தவிர மற்ற திட்டங்கள் அனைத்தும் உதவித்தொகை மானியம் பெறும் பணித் திட்டமாக மாநகராட்சியினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அத்தகைய திட்டங்களுக்காக கடனுதவியும், மானிய மாகவும் இதுவரை வழங்கப்பட்டுள்ள மொத்த நிதியுதவித் தொகை ரூ. 596.15 லட்சம் ஆகும். திட்டங்கள் அனைத்தும் மேற் கொள்ளப்பட்டு மிகவும் விரைவாக நிறைவேற்றப்பட்டு முடியும் நிலையில் உள்ளன. அவை விரைவில் பயனுக்கு வரும். 1973-74 ஆம் ஆண்டில் கழிவுநீர் அகற்று திட்டங்கள் அனைத்துக்கும் ரூ. 120.50 லட்சம் (கடனுதவி ரூ. 87 லட்சமும், மானியமாக 33.50 லட்சமும்) நிதி ஒதுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

தொழில் நுட்பத் தகுதி பெற்று வேலையற்றிருப்போர்க்குப் பயிற்சியளித்தல்.—தொழில் நுட்பத் தகுதி பெற்றுள்ளவர் களிடையே வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்க, மாநிலத் திலுள்ள தொழில் நுட்பப் பணியாளர்களுக்கு பயிற்சியளிப் பதற்காக 'தொழில் பழகுநர்' திட்டமொன்றை அரசு தொடங்கியுள்ளது. இத்திட்டத்துக்காக 1973-74 ஆம் ஆண்டுக்காக அரசு ரூ. 3.25 லட்சம் ஒதுக்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ், பல்வேறு தொழில் நுட்பத் தகுதி பெற்றுள்ள தேர்ச்சி பெற்றவர்கள், தேர்ச்சி பெறுகிறவர்கள் ஆகியோர் பயிற்சியாளர் களாகச் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். பயிற்சிகாலத்தின் போது பயிற்சியாளர்களுக்கு பயிற்சி உதவித்தொகை அளிக்கப் படுகிறது.

1973 மார்ச் 23]

1962-63 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு ஆண்டிலும் இம் மாநிலத்தில் பொது நல்வாழ்வுக்காக செலவிடப்பட்ட தொகை குறித்த விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

ஆண்டு	செலவிடப்பட்ட தொகை. (ரூபாய் லட்சத்தில்.)
1962-63	210.84
1963-64	241.41
1964-65	289.43
1965-66	362.07
1966-67	502.16
1967-68	519.25
1968-69	595.60
1969-70	748.06
1970-71	850.08
1971-72	11,46,07,495
1972-73	16,10,73,800 (1972-73 ஆம் ஆண்டுக்கான திருத்திய மதிப்பீடு.)
1973-74	17,53,30,000 (1973-74 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு.)

POLICY NOTE ON PUBLIC HEALTH.

Mr. Chairman, Sir,

I rise to place the salient features of the policy under Public Health before this House.

The improvement of the health of our people has always been engaging the attention of our Government. Health is not merely absence of disease. It is a state of complete physical, mental and social well-being. Every individual should be assured reasonable opportunity to maintain his health at the highest possible level so that he can contribute his best to the society by his productive efforts. Towards this aim, the Government of Tamil Nadu have taken steps to provide various community health services for the promotion of community health care including maternal and child health, the improvement of nutritional status of people, prevention and control of communicable diseases, the registration of vital events and the spread of health education among the people and the promotion of environmental sanitation.

Our State has an area of 1,29,901 sq. km. The population of the State as per 1971 census is 41,103,125 of which 28,656,265 live in rural areas while 12,446,860 live in urban areas. The rural and urban population are roughly in the proportion 70 :30.

I. Promotion of community health care including maternal and child health.

(A) *Primary Health Centres.*

The Primary Health Centre is an institution which offers a package of services to the people living in its jurisdiction which is usually the area covered by a block (now Panchayat Union). There are 374 blocks in our State. Primary Health Centres have

been established in all the blocks except in two blocks in Salem district, namely, Ellichipalayam and Rasipuram blocks. The following 7 blocks have two Primary Health Centres each :—

Name of district.	*Name of block.*	*Name of Primary Health Centre.*
North Arcot	Thurunjapuram ..	Mangalam. Northampoondi.
North Arcot	Kilpennathur	Vettavalam. Kilpennathur.
Coimbatore	Modakurichi	Ganapathipalayam. Modakurichi.
Coimbatore	Kodumudi	Kolanalli. Sivagiri.
Coimbatore	Vellakoil	Muthur. Vellakoil.
Coimbatore	Thookanaickenpalayam.	Thookanaickenpalayam. Kasipalayam.
Madurai	Attur	Attur. Chinnalapatti.

Thus, there are 379 Primary Health Centres in our State.

The circumstances that led to the existence of two Primary Health Centres in each of the seven blocks referred to above are given below.

In 1948, the Government sanctioned the opening of several Rural Health Centres under the Post-War Reconstruction Scheme. The following Primary Health Centres of North Arcot come under the said scheme :—

(1) Mangalam.
(2) Northampoondi.
(3) Vettavalam.
(4) Kilpennathur.

Later while the development blocks were formed, the Primary Health Centres of Mangalam and Northampoondi got within the limits of Thurunjapuram block and so continued as Primary Health

Centres of that block. Similarly, the Primary Health Centres of Vettavalam and Kilpennathur got included in the Kilpennathur block and so continued to function in the same block. No Primary Health Centres were opened in these blocks under the Community Development Block Scheme. These Post-War Centres were regularised as Primary Health Centres under the Block Schemes in 1958.

In the Coimbatore district, Rural Centres under the Post-War Reconstruction Scheme were opened at Ganapathipalayam, Kolanalli, Sivagiri, Muthur, Kasipalayam and Thookanaickenpalayam. Primary Health Centres were opened under the National Extension Service and Community Development block schemes in Modakurichi and Vellakoil, respectively. Subsequently, during the demarcation and delimitation of blocks, the Primary Health Centres at the Modakurichi and Ganapathipalayam were included in Modakurichi block; the Primary Health Centres at Kolanalli and Sivagiri were included in Kodumudi block; the Primary Health Centres at Muthur and Vellakoil were included in Vellakoil block and the Primary Health Centres at Kasipalayam and Thookanaickenpalayam were included in Thookanaickenpalayam block.

A Primary Health Centre was sanctioned for Chinnalapatti in the year 1955 along with a dispensary for Attur for the Attur block in Madurai district. Subsequently, when a pilot health project was started in Gandhigram, with the co-operation and concurrence of the Government, the dispensary at Attur was converted into a Primary Health Centre as per the specific provisions of the Pilot Project arrangement. Thus, the Attur block in Madurai district has two Primary Health Centres.

All the Primary Health Centres serve the rural population of our State.

The services rendered by a Primary Health Centre include general medical care, improvement of maternal and child health, family welfare planning, improvement of environmental sanitation with emphasis on sanitary disposal of excreta, safeguarding drinking water sources, control of communicable diseases by immunisation with suitable vaccines, and by surveillance to detect the occurrence of communicable diseases like smallpox, cholera and

malaria, nutrition education and control of nutritional diseases, collection of vital satistics and improving the registration of vital events of births and deaths and health care and education of school children.

For the purpose of medical care, every Primary Health Centre has an out-patient department and an in-patient section with 6 beds. At the out-patient department the patient is examined and given appropriate treatment. In the conventional dispensaries and hospitals, while the services stop sharp at the level of dispensing drugs, at the Primary Health Centre, further services extend from these patients to their contacts who are given appropriate treatment both preventive and curative. The patient and the contacts are educated about the nature of the disease, its mode of spread and about the methods of disinfection of infective materials.

The average daily attendance of out-patients per Primary Health Centre is 70 new cases and 40 old cases. The average attendance per day at all the Primary Health Centres is about 42,000. The average annual attendance at all the Primary Health Centres is about 15 million.

Out of the 379 Primary Health Centres now functioning, 149 Primary Health Centres are now functioning in their own buildings. Buildings for 22 Primary Health complex, i.e., dispensary plus staff quarters and 21 staff quarters are under construction. The other 187 Primary Health Centres are functioning in rented buildings.

The particulars regarding the number of blocks with their population range are as follows :—

	Population range.	*Number of blocks.*
1.	Less than 80,000	128
2.	80,000 to 1,00,000	120
3.	1,00,000 to 1,20,000	91
4.	1,20,000 to 1,40,000	24
5.	Above 1,40,000	11

The Government of India have recommended that, in order to serve a larger section of the rural people, a Second Primary Health Centre may be established in each block. The State Government are examining the question of establishing Second Primary Health Centres in the blocks in a phased manner, the blocks having a population of one lakh and more being selected for the establishment of Second Primary Health Centres in the first phase.

The total amounts allotted for the Primary Health Centres for the last two years, the current financial year and for the year 1973-74 are as follows :—

Year.	*Amount.* (IN LAKHS.)
1970–71	127.57
1971–72	177.10
1972–73 Revised estimate	176.48
1973–74 Budget estimate	181.15

(B) Maternity and Child Health Services.

In maternity and child health services, the emphasis is on ensuring the birth of a healthy child to a healthy mother and safeguarding the health of mother and child thereafter. For this purpose, at present, mothers, when they are in the 5th month of pregnancy, are enrolled for ante-natal care. The ante-natal registration is done by the Maternity Assistants/Auxiliary Nurse Midwives of the Primary Health Centres and the various maternity centres in the panchayat union blocks.

Every ante-natal mother is given a health check-up especially to detect any abnormality in her or in the lie of the foetus. Special emphasis is given to detect anaemia, signs of toxaemia and mal-nutrition in the pregnant woman. She is given proper advice on the diet to be taken and on her personal care during pregnancy. She is educated on infant feeding, immunisation schedule and childhood diseases and on family planning methods.

Natal services are mainly domiciliary. The Auxiliary Nurse Midwife visits the home of the expectant mothers at the time of delivery and conducts delivery by aspective techniques. She follows the infant for ten days after birth.

The Health Visitor supervises the work of Auxiliary Nurse Midwives and also takes active part in conducting ante-natal clinics at the various maternity centres. She refers such cases requiring further attention to the Medical Officer of the Primary Health Centre. She advises the mothers regarding prophylactic immunisation and actively participates in D.P.T. immunisation.

As per the Tamil Nadu Panchayats Act, 1958, it is the responsibility of the panchayat union councils to open and maintain maternity centres. At present, maternity centres are established at the rate of one per ten thousand population. The total number of maternity centres as on 1st January 1972 is 3,801. The centres maintained by the panchayat union councils are in receipt of a Government grant equivalent to two-thirds of the recurring expenditure incurred by them. A sum of Rs. 39,74,766 was given to them as grant during 1971-72.

There are 68 maternity homes and 303 maternity centres functioning in the municipalities. They are in receipt of the Government grant equivalent to 25 per cent of the recurring expenditure incurred by them. During 1971-1972, a sum of Rs. 6,59,617 was sanctioned for the purpose of the above grant.

In addition to the maternity centres maintained by the panchayat unions, the Government have established at 76 villages maternity centres as a part of the post-war reconstruction programme. These centres have been located in remote villages then considered as backward areas. The total expenditure on these maternity centres for 1971-72 was Rs. 5,31,556 and provision made for them in the Budget Estimate for 1972-73 is Rs. 5,27,500.

(C) Children Immunisation Programme.

The immunisation of pre-school children is being implemented in rural areas of this State from 1st October, 1961 through the agency of Primary Health Centres. The children in the age group 0–5 years are taken up for immunisation with triple vaccine as a prophylatic against diphtheria, tetanus and whooping cough concentration being made on children under one year of age. Each child is given three doses of D.P.T. at intervals of one month between each dose. The target for immunisation is 900 children per Primary Health Centre per year. The particulars regarding

the number of children immunised with all the three doses during the period from 1969-70 are as follows :—

Year.	*Number of children immunised.*
1969-70	87,239
1970-71	97,358
1971-72	1,03,667
1972-73 (up to December 1972)	71,542

To penetrate the barriers of prejudices and reach the community, strategy was altered, in that Family Planning services were sought to be offered through the community health services in general and maternity and child health services in particular.

As a first step, the undermentioned maternity and child health services are being implemented through the Urban Family Welfare Planning Centres/Maternity and Child Health Centres maintained by the Government, local bodies and voluntary organisations :—

(1) Immunisation of infants and pre-school age children against D.P.T.

(2) Immunisation of expectant mothers against Tetanus.

(3) Prophylaxis against nutritional anaemia for mothers and children.

(4) Prophylaxis against blindness in children.

While offering the above services, the mothers are given advice about Family Planning methods along with the health care of the baby and mother. For mothers already having the desired number of children, the question of optional family size is discussed and they are motivated to undergo sterilisation operations.

Under the above programme, triple vaccine, Tetanus Toxoids, Vitamin 'A', etc., are supplied by the Government of India, and the cost thereof is reflected in the State accounts by books transfer.

The following targets are fixed under the above programme for the year 1972-73 :—

(1) Immunisation of mothers and infants against D.P.T. -- 36,000 mothers.

(2) Immunisation of expectant mothers against Tetanus—2,63,000 mothers.

(3) Prophylaxis against nutritional anaemia among mothers and children—3,90,000 mothers and children.

(4) Prophylaxis against blindness in children—7,20,000 infants.

II. Improvement of nutritional status of people.

(*a*) The Nutrition Bureau of our State was started as early as 1944. It is equipped to conduct chemical analysis of food and biological experiments. The objects of this bureau are to find out the dietary habits and nutritional deficiencies prevalent in the State, to make regular anthropometric survey thereby establishing norms for the State and to advise on the nutrition programme.

The diet surveys are conducted by Oral Questionnaire method with actual observation of dietary intake for a twenty-four hour period. Usually a population group (village) consisting of 4,000-5,000 population, having a fair representation of socially backward community is selected. Enumeration of pre-school children, ante-natal and post-natal mothers is made by the Health Inspectors. The nutrition and diet survey is carried out in respect of all available pre-school children, ante-natal and post-natal mothers. So far clinical and diet surveys have been completed in the following blocks since June, 1971 :—

(1) Athoor (Madurai district).

(2) Erumaipatti (Salem district).

(3) Agastheeswaram (Kanyakumari district).

(4) Villivakkam (Chingleput district).

(5) Alangayam (North Arcot district).

(6) Harur (Dharmapuri district).

(7) Kodaikanal (Madurai district).

(8) Kurinjipadi (South Arcot district).

(9) Arantangi (Thanjavur district).

A survey was conducted among 2,044 children and 142 ante-natal mothers and 352 post-natal mothers. The details of the survey are as follows :—

	Calorie in take.	*Norm.*	*Protein in take (gm.)*	*Norm. (gm.)*	*Vit. A in take (I U.)*	*Norm (I.U.)*
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
Children	712	1,200	18·2	19	311	2,500
Ante natal mothers ..	1,704	2,500	66·5	55	401	2,500
Post natal mothers	1,854	2,900	48·3	65	426	3.833

Different cheap nutritious receipes were tried utilising protein rich groundnut cake powder, roasted Bengal gram, roasted green-gram, roasted horsegram, wheat flour, C.S.M. and pea-nut butter either in combination or singly. Demonstration on the preparation of such receipes were made to the trainees undergoing training in nutrition, to members of Mahalir Sangams, teachers in Balwadies and to the public in rural and urban areas utilising the mobile kitchen van.

Under kitchen demonstration programme, a total of 86 demonstrations were held during the period January to December 1972. Cheap receipes like groundnut cake power, keeraikoottu, ragai pagoda, balahar wheat, pongal with groundnut oil cake powder, roasted bengalgram, conjee and ragi potato bajji were prepared and distributed, thus encouraging use of indigenous food products. The number of beneficiaries were 12,004.

(b) Supplementary feeding programme.—This is in vogue in this State from 1950 onwards. The object of the programme is to combat mal-nutrition among pre-school children, expectant and nursing mothers who constitute the major segment of the most

vulnerable group of population. At present, the programme is being implemented with the assistance of CARE, which donates as gift the required quantity of food commodities such as cornsoy milk and salad oil. During the year 1972, about 25 lakhs kgms. of food items were received from the CARE and distributed through 3,327 feeding centres with a number of 114,004 beneficiaries. The 3,327 feeding centres comprise 378 primary health centres, 289 maternity and child welfare centres maintained by municipalities, 2,525 maternity and child welfare centres maintained by panchayat union councils, 101 maternity centres under backward area scheme, 25 community welfare centres and 9 other miscellaneous centres.

III. Prevention and control of communicable diseases.

Cholera.

Cholera was one of the major problems in the past. The causative organism is the Vibrio Cholera. The disease is transmitted through the consumption of infected water and/or food. Water and food get contaminated by the vomit or motion of cases or carriers. Carriers are individuals, who can harbour and transmit infection without their exhibiting signs of the disease. Our State was considered as one of the endemic areas in the country.

Besides the long-term measures like provision of safe water-supply, sanitary latrines, etc., the following steps are taken to prevent and control the out-breaks :—

There is a reserve of 64 Health Inspectors available to attend to epidemic control measures. On receipt of information about occurrence of cholera anywhere in this State, adequate number of Inspectors are sent to the area to strengthen the local staff : in carrying out control measures like mass anti-cholera inoculation, chlorinating water-supply and disinfection of stools. Inspectors from this reserve are also utilised for chlorination of water and mass inoculation in important festival centres before and during the festivals as the past experience has shown that festivals could form focal centres from where cholera can spread.

There are mobile epidemic units which are provided with necessary health staff and ambulance vans and jeeps. One ambulance van is located in each of the following places; Poonamallee, Kancheepuram, Cuddalore, Madurai, Tirunelveli, Coimbatore, Salem, Vellore and Ramanathapuram. Jeeps are provided for each district to attend to epidemic control work. The functions of these units are to go to the infected area and attend to preventive measures like mass inoculation, chlorination of water-supply and to arrange for transport of the cases to the nearest treatment centre in the ambulance. These units are diverted to infected areas as and when necessary according to epidemic situation.

Cholera Control Programme.

The four districts of South Arcot, North Arcot, Coimbatore and Tiruchirappalli are endemic for cholera. There are 150 blocks in the said four endemic districts. This programme is implemented in 75 blocks in these four endemic districts.

There is also one Mobile Medical Unit for the Cholera Control Programme with one Health Officer, two Nurses, two Nursing Orderlies, one Health Inspector and one Driver. A van is attached to this Unit.

There is also one cell at the Headquarters, namely, Madras for attending to the works relating to the Cholera Control Programme.

The Director of Health Services and Family Planning has submitted proposals for the extension of the Programme to the remaining 75 blocks in the four endemic districts referred to above and this is under examination.

The entire expenditure on the Cholera Control Programme is reimbursable by the Government of India.

The number of anti-cholera inoculations done in the State during the year 1972 was 1,669,731.

As against attacks of 6,508 and deaths of 8,298 in 1958, the number has been reduced to 3,670 attacks and 205 deaths in 1972. This reduction has been possible through the various preventive measures adopted by the Government.

Small-pox.—This is a virus disease spread from one person to another. This dreadful disease, though eradicated in many parts of the world is still present in India. India contributed to 31 per cent of world's small-pox cases in 1971 and 42 per cent in 1972.

The "National Small-pox Eradication Programme" was launched during 1963–64. The objective of this programme is to interrupt effectively the transmission of small-pox in the community through *a)* systematic vaccination of all vulnerables in the population and *(b)* through active detection of every case of small-pox that may occur, so as to institute prompt containment measures. Thanks to the sincere work of all the staff of this programme and thanks to the active co-operation of the public, small-pox has been practically eradicated in our State. As against an incidence of 5,545 small-pox cases in 1964 in our State, during 1972 our State was completely free from any indigenous small-pox case. However, one case imported from out side our State in 1973 was immediately admitted in the Infectious Diseases Hospital, Madras and effective action taken to prevent any spread from this case.

Even though we are free from small-pox from 1969, we have to be always alert to detect the first case of small-pox that is brought into our State from other States of India. Here I may mention that about 27,500 cases of small-pox had occurred during 1972 (January to December) in India, and so we always have the danger of any contacts of these cases coming to our State on some purpose or other and develop the disease while they are in our State. Detection of these cases is very important, so as to prevent the spread of the case to local people.

In order to encourage the people to inform the local health authorities about the presence of any suspected small-pox case, the Government have ordered a cash prize of Rs. 10 to the informant who reports first, the presence of a small-pox case in a locality which has been free from small-pox till that date.

There are 1,410 Vaccinators, 97 Supervisors and 35 Selection Grade Health Inspectors in the Public Health Department for

attending to the works of the National Small-pox Eradication Programme. The Government have recently sanctioned in December 1972 the employment of 199 additional Vaccinators, 50 additional Supervisors and 5 additional Selection Grade Health Inspectors to improve the coverage of vaccination and for greater vigilance.

to control future immigration in the city. It has been decided to take up Sengundram near Chingleput to be called 'Marai Malai Nagar' for development first. The task of formulating detailed operational plans of development of this new Town has been entrusted to the newly constituted Madras Metropolitan Development Authority.

Provision of underground railway.—The Government have urged the Government of India in the Ministry of Railways to take immediate steps for the provision of an underground railway in Madras connecting Ennore and Tiruvanmiyur, the city's northern and southern suburbs in view of the pressing need for a mass transportation system to meet the anticipated increase in traffic. In this connection, Directorate of Town Planning has prepared and communicated to the Railway Ministry a technical report which will form the basis for the feasibility study to be carried out by the latter. The Central Government have also been requested to provide adequate financial assistance in the Fifth Plan for this purpose.

Training of specialists in Town Planning.—Town and Country Planning has emerged as a separate profession, the training for which involves study in the fields of engineering, architecture, economics, sociology, etc. The requirement of the departmental and local bodies for planners is increasing and to meet this demand, a scheme to train planners both at the officers level and at the level of technicians has been in operation. During 1973–74 it is proposed to train candidates in the post-graduate course in Town and Country Planning, Traffic Planning and Landscape Architecture and Post-Licentiate in Town Planning.

A sum of Rs. 1.00 lakh has been provided in the Budget Estimate, 1973–74 for this purpose. Apart from the above scheme taken up under plan programmes, the department is engaged in other specialised work such as advising the State Housing Board and Slum Clearance Board on the lay-out of their housing projects and designing for the local bodies civic buildings like municipal offices, community halls, etc., and remunerative enterprise buildings such as bus stands and markets.

The department is now geared up to take up the important task of guiding planning work throughout the State and the people can look forward to an era of planned development of a higher order in the coming years.

Madras City Water Supply and Drainage Schemes.—This demand includes provision for payment of grants to the Corporation of Madras for its Water Supply and Drainage Schemes as indicated below :—

Grants to Corporation of Madras during 1973–74 :—

	Grant	*Loan*	*Total*
Water Supply Scheme	73.08	71.84	144.92
Drainage Schemes	33.50	87.00	120.50

It also includes provision for an apprentice scheme for the training of un-employed technical personnel.

Water Supply Schemes.—Pending implementation of the permanent proposals to augment the City Water Supply, viz., bringing Cauvery Water from Veeranam to the City, various short term proposals were implemented to meet the needs of the growing city. They were completed in stages and consequent on completion of these schemes, the Corporation was able to increase the daily supply from 35 million gallons (160 megalitres) in 1968–69 to more than 50 million gallons (230 megalitres) in 1973. This will be maintained till the Cauvery Water is made available to the City, provided there is no failure of the usual North East Monsoon.

With this increase in the supply to the City the supply also is being distributed equally for which, some of the Zonal Schemes have been completed in stages and some are in progress and on completion of these schemes, it is expected that the distribution will be uniform and the tail-ends of the City will also have its minimum requirements.

For the year 1973–74, the Government have proposed to provide 144.92 lakhs (73.08 lakhs as grant and 71.84 lakhs as loan).

Drainage scheme.—The entire drainage system of the City had to be improved on the basis of Master Plan as existing system was found to be inadequate to meet the present day demand. Hence for this purpose the Government have sanctioned the Comprehensive Drainage Schemes dividing the City into 5 zones with independent disposal points. Apart from this, the Corporation is also taking up works relating to the construction of Storm Water Drains in a phased manner and also improving the existing pumping station wherever necessary. The total estimated cost of all the drainage schemes taken up by the Corporation and sanctioned by the Government works out to Rs. 1,392.71 lakhs. These schemes, except the construction of Storm Water Drainage and improvement to the Pumping Stations, are being taken up by the Corporation as Grant-in-aid work. So far the total financial assistance by way of loan and grant for such schemes works out to Rs. 596.15 lakhs. All the schemes have been taken up for execution and are in a very advanced stage and will be put into commission early. For the year 1973–74, the Government have proposed to provide Rs. 120.50 lakhs (i.e.) Rs. 87.00 lakhs as loan and Rs. 33.50 lakhs as grant for all drainage schemes.

Training of unemployed technical personnel.—In order to relieve the unemployment problem among the technically qualified persons, the Government have introduced an apprenticeship scheme for the training of unemployed technical personnel in the State. A provision of Rs. 3.25 lakhs has been made under this head for 1973–74. Skilled and unskilled candidates in various trades are being recruited as trainees under this programme and stipend to them is being paid during the period of training.

The particulars regarding the amount spent on Public Health during each year from the year 1962–63 in the State are as follows :—

Year.	*Amount spent (Rs. in lakhs).*
1962–63	210·84
1963–64	241·41
1964–65	289·43
1965–66	362·07

Year.	Amount spedt (Rs. in lakhs).
1966–67	502·16
1967–68	519·25
1968–69	595·60
1969–70	74806
1970–71	850·08
1971–72	11,46,07,495
1972–73	16,10,73,800
(Revised Estimate for 1972–73)	
1973–74	17,53,30,000
(Budget Estimate for (1972–73)	

தமிழ் நாடு சட்ட மன்றம்.

சனிக்கிழமை, 1973 மார்ச் 24.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்ட மன்ற மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் (திரு. கே. வி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் சட்ட மன்றம் கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

ஒதுக்குறியிடப்பட்ட வினாக்கள்.

Teachers, Salaries.

*246 Q.—THIRU SAW. GANESAN (on behalf of THIRU G. SWAMINATHAN) : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether. at the time of abolition of school fees in Standards I to V in aided elementary schools in 1959, orders were issued through G.O. Ms. No. 1450, Education, dated 8th July 1959, to pay the teachers salaries as per their service register;

(b) whether any such order was issued in 1965 at the time of abolition of school fees in Standards VI to VIII in such schools; and

(c) if not, the reasons therefor?

ஆசிரியர்கள் சம்பளம்

*திரு. சா. கணேசன் (திரு. ஜி. சுவாமிநாதன் சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் பிற்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1959-ல் உதவிபெறும் தொடக்கப் பள்ளிகளில் I முதல் V -வது வகுப்பு வரையில் பள்ளிக் கட்டணங்கள் ரத்து செய்யப்பட்டபோது, ஆசிரியர்களுக்கு அவர்களின் பணிப் பதிவேட்டின்படி சம்பளங்கள் வழங்கும்படி, கல்விக் குறை, 8—7—1959-ஆம் நாளிட்ட 1450-ஆம் எண் அரசாணையில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டனவா ?

(இ) 1965-ல் அத்தகைய பள்ளிகளில் VI முதல VIII வது வகுப்பு வரையில் பள்ளிக் கட்டணங்கள் ரத்து செய்யப்பட்டபோது அத்தகைய ஆணைகளும் பிறப்பிக்கப்பட்டதா ?

(உ) இல்லை எனில், அதற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: அவையில் ஓர் அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

Students passed from Engineering Colleges.

*247 Q.—THIRU R. KRISHNASWAMY NAIDU: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) the number of students who have passed in First class from the Engineering Colleges in Tamil Nadu (College-wise) from the year 1968–69; and

(*b*) the number of students who have passed in Second Class?

பொறியியல் கல்லூரிகளில் தேறிய மாணவர்கள்

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் மாநிலத்திலுள்ள என்ஜினீயரிங் கல்லூரிகளில் 1968-69-ஆம் ஆண்டு முதல், முதல் வகுப்பில் தேறியவர்களின் எண்ணிக்கை கல்லூரி வாரியாக என்ன?

(இ) அதே போல இரண்டாம் வகுப்பில் தேறியவர்களின் எண்ணிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) பொறியியற் கல்லூரிகளில் முதல், இரண்டாம் வகுப்புகளில் 1963-69 முதல் 1970-71 ஆண்டு வரை தேறியவர்களின் விவரம் கொண்ட அறிக்கை * அவை முன் வைக்கப் பட்டுள்ளது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு: தலைவரவர்களே, இந்தக் கேள்வி கேட்ட தேதி என்னிடத்திலே இல்லை. இதை சுமார் 1½ ஆண்டுக்கு முன்னால் கேட்டிருக்கவேண்டுமென்று கருதுகிறேன். பொறியியல் வல்லுநர்களை அரசு தெரிந்தெடுத்தபோது, முதல் வகுப்பில் தேறியவர்கள் எவ்வளவு பேர்கள், அதிலே அவர்களிலிருந்து எவ்வளவு பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக இந்தக் கேள்வி கேட்டேன். ஆகையினாலே

@ 706-707 ஆம் பக்கங்களில் இணைப்பு 1 ஆக அச்சிடப்பட்டுள்ளது.

* 708-714 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப்பட்டுள்ளது.

முதல் வகுப்பில் தேறியவர்களிலிருந்து அல்லருமும் தேர்வு செய்யப்பட்ட என்ஜினியர்கள் எத்தனை பேர் என்பதைத் தெரிவிப்பார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இங்கே கல்லூரிகளைப் பொறுத்த வரையிலும், முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்புகளில் எவ்வளவு பேர்கள் தேர்வு பெற்றார்கள் என்று சொல்ல முடியும். இதிலே எவ்வளவு பேர்கள் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள் என்றால், அந்த விவரங்களைப் பல்வேறு துறைகளிலிருந்து நிரட்டுவது என்பது எளிதான ஒன்று அல்ல. குறிப்பிட்ட பொதுப் பணித் துறை போன்ற துறைகளில் எவ்வளவு பேர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார்கள் என்று கேட்கலாமே தவிர, பொதுவாகக் கேட்பதற்குப் பதில் கூறுவது கடினமாக இருக்கும்.

Technical University for Tamil Nadu.

*248 Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the State Government has presented its case to the Union Government's Three-Man Committee for the creation of a Technical University in this State recently; and

(*b*) if so, the details thereof?

தமிழ் நாடு தொழில் நுட்பப் பல்கலைக் கழகம்.

திரு. வ. ஈஸ்வரமூர்த்தி: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இம்மாநிலத்தில் தொழில் நுட்பப் பல்கலைக்கழகம் ஒன்றை ஏற்படுத்துவதற்காக மாநில அரசு அண்மையில் காமராசர் அரசின் மூவர் குழுவுக்கு எதிர்வுரைத்ததா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம். அம்மூவர் குழு, பல்கலைக் கழக மானியக் குழு அமைத்துள்ள பொறியியல் கல்வி நிலைக் குழுவின் உட்குழுவாகும்.

[1973 மார்ச் 24

(இ) இம்மாநிலத்தில் பொறியியல் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் ஒன்று நிறுவுவதின் இன்றியமையாமை குறித்து அக்குழு மாநில அரசு பிரதிநிதிகளோடு கலந்துரையாடியது. அப்பல்கலைக் கழகம் எவ்வகைப் பட்டதாக இருக்கவேண்டும், அதற்கும், பொறியியற் கல்லூரிகளுக்கும் தொடர்பு எத்தகையதாயிருக்கவேண்டும், அதற்குத் தேவையான நிதி வசதிகள் ஆகியவை பற்றிப் பேசப்பட்டது. அக்குழுவின் பரிந்துரைகள் விரைவில் எதிர்பார்க்கப்படுகின்றன.

திரு. வ. ஸ்ஸ்வாமூர்த்தி : தலைவரவர்களே, இந்தத் தொழில் நுட்பப் பல்கலைக் கழகம் தொடங்குவதற்கு மாநில அரசு எவ்வளவு ரூபாய் செலவு செய்யத் திட்டமிட்டுள்ளது என்பதையும், அதே போல ஜெனரல் அகாடமிக் யூனிவர்சிடி, பொதுவான பல்கலைக் கழகம் தொடங்க அரசாங்கத்திற்கு உத்தேசம் இருக்கிறதாவென்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இங்குள்ள எல்லா பொறியியல் கல்லூரிகளையும் ஒன்றாக இணைத்த வகையில் பல்கலைக் கழகம் துவக்க வேண்டுமென்று கோரி மத்திய அரசுக்கும், பல்கலைக் கழக மானியக் குழுவிற்கும் தெரிவித்திருக்கிறோம். அந்த நிர்வாகக் குழுவின் உட்குழுவினர் சென்ற ஆண்டு ஜூன் மாதம் வந்து பேச்சுவார்த்தை நடத்தி விட்டுச் சென்றிருக்கிறார்கள். இப்போது இந்திய அரசாங்கத்தின் ஒப்புதலை, பல்கலைக் கழக மானியக் குழுவின் ஒப்புதலை எதிர்பார்த்திருக்கிறோம். அது வந்த பிறகு சட்டம் செய்வதற்கு குறிப்புகள் தயாரித்து சட்டத் துறைக்கு அனுப்பிவைத்திருக்கிறோம். ஒப்புதல் கிடைத்த பிறகு சட்டமாக்கப்பட்டு, நடைமுறைக்கு வரும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. ஸ்ஸ்வாமூர்த்தி : தலைவரவர்களே, பல்கலைக் கழகம் தொடங்க வேண்டுமானால், மத்திய அரசின், மானியக் குழுவின் ஒப்புதல் பெறவேண்டுமென்றிருக்கிறது. பொதுவாக பல்கலைக் கழகங்களைத் தொடங்க அனுமதி கிடைப்பதில்லை, காரணம் அதற்குத் தொடர்ந்து நிதியுதவி அளிக்கவேண்டியிருக்கிறது. அரசாங்கமே முன் வந்து இந்தப் பல்கலைக் கழகங்களைத் தொடங்கி விட்டால் இன்பு மானியம் வாங்க வசதியாக இருக்கும். அந்த முறையில் ஏதாவது நடவடிக்கை இந்த அரசு எடுக்கவிருக்கிறதாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, நாம் பல்கலைக் கழக மானிய உதவி தேவையில்லையென்ற முடிவிற்கு வந்து, நாம் செலவழித்தால், நாம் பல்கலைக் கழகத்தை அமைத்து விடலாம். பல்கலைக் கழகம் அமைக்க வேண்டுமென்றால், அதனுடைய தொடக்கச் செலவு மதிப்பீடு

[1973 மார்ச் 24

ஆய்வுக் கூடம் இவைகளை அமைக்க, பெரும் செலவு ஏற்படுகிற காரணத்தினால் தான், மானியக் குழுவினுடைய உதவியைப் பெற வேண்டியவர்களாக இருக்கிறோம். அவர்களைக் கேட்காமல், புறக்கணித்து விட்டு நாம் தொடங்கினால், என்ன காரணத்தைக் கொண்டும் நிதி வழங்க மாட்டார்கள். இப்படித் தான் ஆந்திராவில் சட்டம் கொண்டுவந்து பல்கலைக் கழகத்தைத் துவக்கி விட்டார்கள். இப்போது நிதியுதவி கிடைக்காத அளவிற்கு, ஒப்புதல் பெற முடியாமல் தவித்துக்கொண்டிருக்கிறார்கள். கட்டுப்பாட்டை மீறினோம், மதிக்க வில்லை என்ற நிலைமை ஏற்படாமல் ஒப்புதல் பெற்றுத் துவங்க வேண்டுமென்பதற்காக நாம் வற்புறுத்தி வருகிறோம்.

திரு. வ. ஸ்ஸ்வாமூர்த்தி : தலைவரவர்களே, பொதுவாக பல்கலைக் கழகம் தொடங்க வேண்டுமானால், எவ்வளவு ரூபாய் செலவாகும் என்ற கணக்கு அரசிடம் இருக்கிறதா ? சென்னைப் பல்கலைக் கழகம் போன்று துவங்க எவ்வளவு செலவாகும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, மதுரைப் பல்கலைக் கழகம் துவக்குவதற்கு கிட்டத்தட்ட 10 கோடி ரூபாய் தேவைப் பட்டிருக்கிறது. இன்னும் பல கட்டிடங்கள் கட்ட வேண்டிய நிலைமை இருக்கிறது. பத்து கோடி ரூபாய் இருந்தால்தான், பல்வேறு பிரிவுகளுக்கான வசதிகள், வாய்ப்புகளைச் செய்து தர முடியும். கட்டிடங்களுக்கு, மற்றவைகளுக்கு பல்கலைக் கழக மானியக் குழுவின் உதவியிருந்தால் தான், சிறப்புற நிறைவேற்ற முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

Property Taxes due to Panchayats.

*249 Q.—THIRU L. BALARAMAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state whether the Government have paid property taxes due to the panchayats for the Industrial Training Institute Students Hostel and Tuberculosis Hospital in Kaniyambadi taluk, North Arcot district?

ஊராட்சி மன்றங்களுக்கு செலுத்த வேண்டிய சொத்து வரிகள்.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

வட ஆற்காடு மாவட்டம், கனியம்பாடி வட்டம், ஊராட்சி மன்றங்களுக்கு தொழிற் பயிற்சி மாணவர் விடுதி, சுய நோய் மருத்துவமனை ஆகியவற்றிற்காக அரசு செலுத்த வேண்டிய சொத்து வரிகள் கொடுக்கப்பட்டுள்ளனவா ?

[1973 மார்ச் 24

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: கணியம்பாடி ஜாராட்சி ஒன்றியத்தில் உள்ள இடையஞ்சாத்து ஜாராட்சியில் உள்ள தொழிற் பயிற்சி மாணவர் விடுதிக்கு 1967-68 முதல் 1972-73-ம் ஆண்டு இரண்டாவது அரை யாண்டு முடிய செலுத்தப்பட வேண்டிய சொத்து வரி ரூ. 27,750 செலுத்தப் பட்டுவிட்டது. ஆனால், பெண்ணாத்தூர் ஜாராட்சியில் உள்ள காசநோய் மருத்துவமனைக்கு செலுத்தப்பட வேண்டிய சொத்துவரி ரூ. 11,002.40 இன்னும் செலுத்தப்படாமல் உள்ளது.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, இது போன்ற ஒரு நிலை மேலும் ஏற்படாமலிருப்பதற்கு அரசாங்கமே பஞ்சாயத்து யூனியன் நிர்வாகச் செலவிற்குக்கூட பணம் வழங்காமலிருப்பதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் எதாவது உத்தரவிடுமா? மேலும் இது போன்ற நிலைமைகள் இல்லாமல் தவிர்ப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்வார்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இந்த மருத்துவ மனையைப் பொறுத்த வரையிலும், அத்தகு நிறையினர்தான் வரி செலுத்தவேண்டியவர்களாக இருக்கிறார்கள். மாவட்ட மருத்துவ அலுவலர் இது பற்றி டிமாண்டு கேட்டிருக்கிறார்கள். அதை அனுப்பி வைக்குமாறு மணியக்காரர் அறிவுரைக்கப்பட்டிருக்கிறார். காசநோய் மருத்துவ மனைக்குச் செலுத்தப்படவேண்டிய சொத்து வரி ரூ. 11,002.40-ஐ விரைவிலே கட்டுவதற்கான நடவடிக்கைகளை முறைப்படி எடுத்துக்கொள்ளலாம்.

Teaching and Non-teaching Staff for Tamil Colleges.

*250 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether any representation has been received by the Government to appoint Tutors, Junior Assistants, Attenders Librarian, Physical Director, Watchman and Sweepers in Tamil Colleges, as in the case of other colleges; and

(b) if so, the action taken thereon by the Government?

1973 மார்ச் 24]

தமிழ்க் கல்லூரிகளுக்கு ஆசிரியர், ஆசிரியரல்லாத பணியாளர்கள்

*தவத்திரு குன்றக்குடி அடிகளார்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வேறு கல்லூரிகளைப் போன்று தமிழ்க் கல்லூரிகளில் பயிற்சியாளர் (டியூட்டர்) இளநிலை உதவியாளர், தேற்றெழுத்தர், நூலகர், உடற்பயிற்சி ஆசிரியர், காவற்காரர், குப்பைகூட்டி ஆகியோரை நியமனம் செய்ய வேண்டுமென்று அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா?

(இ) ஆமெனில், அத்தகு கோரிக்கையின் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) ஆம்.

(இ) தமிழ்க் கல்லூரிகளில் கலைக்கல்லூரிகளைப்போல் மாணவர் எண்ணிக்கை அதிகமாக இல்லாததாலும் இங்கு மாணவர்களிடமிருந்து கட்டணம் ஏதும் வசூலிக்கப்படாததாலும் சில பதவிகளை அரசு மாவியத்திற்கு அனுமதிக்க இயலாது.

திரு. வ. சுப்பரமூர்த்தி: தலைவரவர்களே, பணியாளர்கள் அனைவரும் தேவைப்படுகிறார்கள் என்றாலும், குறிப்பாக உடற்பயிற்சி ஆசிரியர்களைப் போடுவது அவசியமென்று கருதுகிறேன். எனென்றால், தமிழ் ஆசிரியர்களுக்கு உடற்பயிற்சி தேவையில்லையென்ற மனப்பான்மை ஏற்பட்டு விடக்கூடாது. ஆகவே உடற்பயிற்சி ஆசிரியர்களை தமிழ்க் கல்லூரிகளில் போட அரசு முன் வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, இத்தகு கல்லூரிகளில் பெரும்பாலும் 300 மாணவர்களுக்குட்பட்ட வகையில் இருந்து வருகிறார்கள். உடற்பயிற்சி கட்டாயமாக இல்லாததினால், போதுமான போட வில்லை. அவர்களை நியமிப்பதைப்பற்றித் தனியாகப் பரிசீலிக்க வேண்டும். அது பற்றி விண்ணப்பங்கள் வந்து, உடற்பயிற்சி கொடுக்க வேண்டிய அவசியம் வந்தால், அதைப்பற்றித் தனியாகப் பரிசீலிக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறேன். பி.ப. 4-10

திரு. சா. கணேசன்: தமிழ்க் கல்லூரிகளிலே எல்லா வசதியும் செய்து கொடுக்க வேண்டும் என்பது நியாயமே. ஆனால் மாணாக்கர் எண்ணிக்கை குறைவு என்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். அதோடு உடற்பயிற்சி ஆசிரியர் முதலிய நிர்ப்பந்தங்களைச் செய்தால் பல கல்லூரிகள் மூடப்பட

வேண்டிய நிலைமை ஏற்பட்டு விடும். கல்லூரி புதிய கட்டிடத்தில் இருக்கின்ற காரணத்தினால், உடற்பயிற்சிக்கு விளையாட்டு இடம் முதலிய வசதிகளே பல கல்லூரிகளில் உள்ளது போல தமிழ்க் கல்லூரியில் இருப்பவர்கள் செய்வது சாத்தியமாக இருக்குமா? இல்லாவிட்டால் அரசுக் கல்லூரிகளைப் போன்று இவர்களும் இன்றைக்கு உடற்பயிற்சி, விளையாட்டு இடம் ஆகியவைகளுக்கு 5 ஏக்கர், 10 ஏக்கர் இருக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்தால், தக்க வசதிகளைச் செய்து கொடுக்க அரசு உத்தேசித்திருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, உடற்பயிற்சி ஆசிரியர்களை நியமிப்பது என்ற கட்டத்திற்கு வருவோமானால், அந்த நிபந்தனைகளையெல்லாம் வைக்க வேண்டிய அவசியம் ஏற்படும். ஆகவே அந்த இடம், அப்படி வசதி, விளையாட்டு அரங்கம் மற்றவைகளெல்லாம் இருக்க வேண்டிய அவசியத்தை வற்புறுத்த வேண்டி வரும். இந்தச் சூழ்நிலை இல்லாத காரணத்தினால்தான், அது வற்புறுத்தப்படாமலிருக்கிறது. இப்போதுகூட பல தமிழ்க் கல்லூரிகளில் இவைகள் பரவலாக உள்ளன. எவ்வளவு எண்ணிக்கையில் ஆசிரியர்கள் இருக்க வேண்டுமென்ற முறையில் ஆசிரியர்கள், முதல்வர் ஆகியவர்கள் மானியத்திற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இது தவிர இளநிலை உதவியாளர் ஒருவர், ஆவண உதவியாளர் ஒருவர், கடை நிலை ஊழியர் ஒருவர், காவல்காரர் ஒருவர், துப்புரவு செய்பவர் ஒருவர் மற்றும் தண்ணீர்ப் பையன், ஒரு தோட்டி ஆகியவர்களுக்கு எல்லா கல்லூரிகளிலும் வசதி செய்யப் பட்டிருக்கின்றது.

Grants to the Dravidian Linguistic Association, Trivandrum

* 251 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(*a*) whether the Government have sanctioned any grants to the Dravidian Linguistic Association, Trivandrum, during 1971–72 and 1972–73; and

(*b*) if so, the details thereof?

திருவனந்தபுரத்திலுள்ள திராவிட மொழிகள் மொழியியல் கழகத்திற்கு மானியம்

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1971-72, 1972-73 ஆம் ஆண்டுகளில், திருவனந்தபுரத்திலுள்ள திராவிட மொழிகள் மொழியியல் கழகத்திற்கு, மாநில அரசு, மானியம் எதும் வழங்கியதா?

(இ) ஆமெனில், அதுபற்றிய விவரங்கள் யாவை?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: (அ) & (இ) திராவிட மொழிகளின் ஒருமுகப்பட்ட வளர்ச்சி குறித்து ஆய்வு நடத்தும் நோக்கத்துடன் திருவனந்தபுரத்திலுள்ள திராவிட மொழிகளின் கழகம் வருத்துள்ள திட்டத்திற்கு 1972-73 ஆண்டில் ரூ. 40,000 மானியம் வழங்கப் பட்டது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: கேரள மாநிலத்திலுள்ள பல்கலைக் கழகங் களுக்கு இது போன்ற மானியம் வழங்கப்பட்டதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: என்ன கேட்கிறீர்கள் என்றே புரிய வில்லை. மானியம் வழங்கப்பட்டதா என்று கேட்கிறீர்களா?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: எல்லாப் பல்கலைக் கழகங் களுக்கும் வழங்கப்படுவதில்லை. திருவனந்தபுரத்திலுள்ள பல்கலைக் கழகம் திராவிட மொழிக் கழகம் ஒன்றை ஏற்படுத்தி செய்து, அதிலே அறிஞர் சிறந்த முதுநிலைகள், திராவிட மொழிக் கல்வியைச் சிறப்பாகக் கொண்டிருக்கும் இளைய அறிஞர்கள், 4 முதுநிலை மாணவர்களான பட்டதாரிகளுக்கு ஆசிரிய ஊதியம், 4 இளைய மாணவர்களான பட்டதாரிகளுக்கு ஆசிரிய ஊதியம் ஏற்படுத்தி, அதன் மூலம் அவர்களையெல்லாம் ஒரு கருத்தரங்கிலே கூட்டி வைத்து புத்தாய்வு செய்யவும், கலந்து உரையாடவும் திராவிட மொழிகளுக்குள் உள்ள பொதுத் தன்மை, இலக்கணம், பிரிய பிராத நிலை, சொல் வகை, இசை முதலியவைகளைப் பற்றிக் கலந்து உரையாடி ஒவ்வொரு ஆண்டும் ஒரு தலைப்பின்கீழ் ஒரு நூல் வெளியிடத் திட்டமிட்டது, அந்தக் குழு தென்னக மாநில அரசுகள் அனைத்து நிதி ஒதுக்க கோரிக்கையை வைத்தது. அதன் அடிப்படையிலேதான் தமிழக அரசின் சார்பாக, இதனுடைய இன்றி யமையாத தன்மையை ஆராய்ந்து, அந்தச் சிறப்புப் பணியை விரும்பி வரவேற்கின்ற காரணத்தினால், 40 ஆயிரம் ரூபாயை மானியமாக வழங்கிற்று.

திரு. எல். பலராமன்: தலைவரவர்களே, திராவிட மொழிகள் பற்றிய ஆராய்ச்சிக்குத்தான் இப்படி அரசாங்கம் மானியம் வழங்குகிறதா அல்லது மேலும் எதாகிலும் பல மொழிகள் ஆராய்ச்சி எதாகிலும் செய்வதற்கு பல்கலைக் கழகங்களுக்கு மானியம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவரவர்களே, எந்த மொழியும் புதிதாகச் சேர்க்கப்பட முடியாது. வரலாற்றினுடைய அடிப் படையில் தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், துளு ஆகியவை திராவிட குழு மொழிகள், ஒரே குடும்பப் பிரிவு என்று சொல்லப்படுகிறது. மொழி வல்லுநர்கள் எல்லாம் இதைச் சொல்கிறார்கள். எனவே அந்த அடிப்படையில் ஆராய்வதற்காகத்தான் இந்தக் கழகம் அமைக்கப்பட்டிருக்கிறது.

Open Air Jail

*252 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to open an Open Air Jail in Coimbatore District; and

(*b*) if so, the details thereof?

திறந்த வெளி சிறைக்கூடம்

*திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் திறந்த வெளி சிறைக்கூடம் ஒன்றைத் திறப்பதற்கான செயற்குறிப்பு எதும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) & (இ) மேட்டுப்பாளையத்திற்கு அருகில் ஒட்டன்குறை ஒதுக்கக்காட்டில் சுமார் 60 ஏக்கர் நிலத்தில் திறந்த வெளி சிறைச்சாலை ஒன்று அமைப்பது பற்றிய செயற்குறிப்பு பரிசீலனையில் இருக்கின்றது. இது சம்பந்தமாக சிறைத்துறைத் தலைவர் அனுப்பியுள்ள திட்டவட்டமான செயற்குறிப்புகள் ஆய்வில் உள்ளன.

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: தலைவரவர்களே, இது போன்ற சிறைகள் ஜெர்மன் நாட்டிலே கூட இருப்பதாகவும், 18 வயது முதல் 23 வயது வரை உள்ளவர்கள் அந்தச் சிறையில் வைக்கப்படுகிறார்கள் என்றும் தெரிகிறது. பகல் எல்லாம் வெளியில் இருந்து விட்டு "கைட்"டில் இரவில் சிறைக்கு வந்து விடுகிறார்கள். பகலில் சிறையில் இருக்க வேண்டிய அவசியமில்லை. பகலில் அவர்கள் இஷ்டம் போல் வேலை செய்து விட்டு இரவுத்தில் அவர்கள் சிறைக்கு வர வேண்டுமென்ற ஒரு முறை இருப்பதாக கூறுகிறேன். இந்தத் திட்டம் நமது மாநிலத்தில் கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: நீங்கள் என்ன சொல்கிறீர்கள் என்றே தெரியவில்லை. கொஞ்சம் தெளிவாகச் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: நாம் தமிழகத்திலே இருக்கிறோம். ஜெர்மனியில் இல்லை. தமிழ் நாட்டு மக்களுக்கு எற்ற சிக்கிருத்தங்கள், வசதிகள் அளிக்கப்பட்டு வருகின்றன. இதுவே புதுமையான முறைதான். "ஓபன் எர் ஜெயில்" என்றும்போது, ஒரு கட்டடத்திற்குள் இல்லாமல் அவர்கள் எல்லாம் வேலை செய்யக் கூடிய வசதிப்புக் கொடுத்தால், இயற்கையிலே சமுதாயம் வளர்வதற்கு எற்ற முறையிலே அவர்கள் வளர்க்கப்பட முடியும். தான்கு கவர்களுக்குள் இருந்தால், அப்படிப்பட்ட ஒரு எண்ணம் அவர்களிடத்திலே வளர வாய்ப்பு இருக்காது. சிறைத்துறை இதற்கான பணிகளைச் செய்து கொண்டிருக்கிறது. ஜெர்மன் நாட்டைப் பற்றி இப்போது கவலைப்பட வேண்டாம்.

திரு. அய்யனார் அம்பலம்: மதுரை மாவட்டத்தில் ஒரு திறந்த வெளிச் சிறை அமைப்பதாகப் பரிசீலனையில் இருந்தது. அது எந்த அளவில் நடை பெற்றுக் கொண்டிருக்கிறது, அது எங்கே அமைக்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் திட்டம் கேட்டிருக்கிறோம். எந்தெந்த இடங்களில் ஏராளமாக நிலம் உபயோகப் படுத்தப்படாத அரசுக்குச் சொந்தமாக இருக்கிறதோ, அங்கே இந்த முயற்சி மேற்கொள்ளப்படும். மதுரையில் பெருமளவிற்கு இடம் கிடைக்கவில்லை.

திரு. எஸ். ஜெயராம செட்டியார்: பெல்லாரியில் அலிப்புரம் சிறையில் "ஓபன் எர்" சிறையில் நான் இருந்திருக்கிறேன். ஆனால் இப்போது நீங்கள் அமைக்கப்போகும் இடமானது மலைப் பிரதேசத்திற்கு அடுத்த இடமாக இருப்பதனாலே இந்த இடத்தில் வைப்பது நல்லதா என்று கேட்கிறேன்.

[1973 மார்ச் 24

இதை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு யோசிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது தமிழகத்தில் இருக்கின்ற சிறைகள் பழைய காலத்திலுள்ள சிறைகளாம். இரண்டாண்டுகளில் அந்தச் சிறைகளிலே ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தைப் பார்த்தால், போக வேண்டுமென்று சொல்லவில்லை—போய்ப் பார்த்தால், எந்த அளவிற்கு முயற்சி எடுக்கப்பட்டிருக்கிறது என்பது தெரியும். தஞ்சாவூரிலே உள்ள "ஓபன் ஏர் ஜெயில்" மிக நல்ல முறையில் இருக்கிறது. விவசாயத்திலே அதிக உற்பத்தியைத் தரும் புதிய ரகங்களைக் காண்கின்ற வாய்ப்பை கோயம்புத்தூரைப் பொறுத்த வரையில், அந்த (Open air Jail) பெற்றிருக்கின்றது. எனவே திண்டுக்கல்லுக்குப் பக்கத்திலே ஒரு திறந்த வெளிச் சிறை ஏற்படுத்த ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. அங்கு நிலம், தண்ணீர் வசதி இல்லாத காரணத்தினால், அந்த மாவட்டத்தில், இப்போது காட்டிலாகாவிற்குச் சொந்தமான இடத்தில், ஒரு திறந்த வெளிச் சிறை வைக்கும் அடிப்படையில் பரிசீலிக்கப்பட்டு வருகிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப்: திறந்த வெளி சிறைக் கூடங்கள் தமிழகத்தில் மொத்தம் எத்தனை இருக்கின்றன? எந்தெந்த இடங்களில் இருக்கின்றன? இருக்கக்கூடியதில் எது திறந்ததாக அமைந்திருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தஞ்சாவூரில்தான் இது நல்ல முறையிலே வெற்றி பெற்றிருக்கிறது. இன்னொன்று சேலத்தில் இருக்கிறது. கோயம்புத்தூர் மாவட்டத்தில் திண்டுக்கல்லாரில் ஒரு திறந்தவெளிச் சிறை இருக்கிறது.

MR. CHAIRMAN: Does the hon. Member want to ask anything?

திரு. எஸ். டி. ஆதித்தன்: தலைவரவர்களே, தமிழ் நாட்டைத் தவிர வேறு மாநிலங்களில் இது மாதிரி இருக்கிறது. அது சம்பந்தமாக எற்கெனவே உள்ள "எக்ஸ்பிரியன்ஸ்" என்ன?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அத்தகவல் என்னிடத்திலே இல்லை.

திரு. எல். பலராமன்: நம்முடைய தமிழ் நாட்டில் இருக்கக்கூடிய சிறைக் கைதிகள் சிறைகளிலிருந்தும் தப்பித்து ஓடி விடுகிறார்களே, இது போன்ற "ஓபன் ஏர்" ஜெயில்களிலிருந்து அவர்கள் தப்பித்துச் செல்வதற்கு வழி வகைகள் இருக்கின்றனவா? இருந்தால் அவர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசாங்கம் மேலும் என்ன செய்ய இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

1973 மார்ச் 24]

இது போன்ற சிறைகளில் அடைக்கப்படுபவர்கள் எத்தனை ஆண்டுக் காலம் தண்டனை பெற்றவர்கள், அல்லது ஆயுள் கைதிகள் போன்றவர்கள் இத்தச் சிறையில் வைக்கப்படுகிறார்களா என்பதை விளக்க அமைச்சரவர்கள் முன் வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: சிறையில் பலகரப்பட்டவர்கள் இருக்கிறார்கள். இந்தச் சிறையிலிருந்து தப்பித்துச் செல்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்று கேட்டார்கள். சில இடங்களில் இருக்கும். ஆனால் இப்படிப் பட்ட சிறைகளில் பெரும் அளவிற்கு சிறைக் கைதிகளுடைய நடைமுறைகளைக் கண்காணித்த பின்னாலே பொருத்தமான சிறைக் கைதிகளைத் தான் இன்னைக்குத் தேர்ந்தெடுக்கும் முறை இருக்கிறது. இதுவரையில் இப்படிப் பட்ட சிறைகளில் அத்தகைய தவறுகள் அதிக அளவிற்கு வந்ததாகத் தெரியவில்லை.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: சிறை பற்றி எல்லோரும் கேள்வி கேட்பதைப் பார்த்தால், எல்லோரும் சிறைக்குப் போய் விட்டு வந்தவர்களா அல்லது சிறைக்குப் போகப் போகிறவர்களா?

திரு. வே. தங்கப்பாண்டியன்: இப்படித் திறந்த வெளிச் சிறை மூலம் ஏற்பட்டிருக்கக்கூடிய புதிய அனுபவத்தை வைத்து அரசாங்கம் இதனாலே நிரந்தரமான பலன் கிடைத்திருக்கிறது என்ற நம்பிக்கையைப் பெற்றிருக்கிறதா? அது எந்த வகையிலே பயன் உள்ளதாக இருக்கிறது என்ற தகவலை இந்த மன்றத்தில் வைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இத்தச் சிறையில் இருக்கிற காரணத்தினாலே, சிறையில் வாழ்கிறோம் என்ற எண்ணம் இல்லாது மாற்றப்படுகிறது. உழைப்புக்கு வாய்ப்பு ஏற்படுகிறது. விவசாயக் குடும்பத்திலிருந்து சிறைக்குச் செல்பவர்கள் தஞ்சைக்குப் பக்கத்திலுள்ள திறந்த வெளிச் சிறைக்கு, பின்னாலே மாற்றப்பட்டு, தங்களுடைய வீட்டிலே, குடிசையிலே வாழ்ந்து வருகிறோம், நிலத்திலே பாடுபடுகிறோம் என்ற எண்ணம் அவர்களுக்கு ஏற்படுகிறது. இதனாலே சிறையிலே இருக்கிறோம் என்ற எண்ணம் ஏற்படுவதில்லை. சிறையிலே இருக்க வேண்டிய அவசியமும் இல்லை. உழைத்துப் பலன் பெறுகிற வாய்ப்பும் ஏற்படுகிறது.

திரு. வி. வெங்கா: சென்னை மத்தியச் சிறையில் அதிகமான இட நெருக்கடி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே செங்கற்பட்டு மாவட்டத்திற்கு ஒரு திறந்த வெளிச் சிறை அமைக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

[1973 மார்ச் 24

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இப்படி ஒரு முயற்சி எடுக்கப்பட்டது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் பொருத்தமாக இல்லை என்ற காரணத்தினால், வேறு இடம் கிடைக்காமல் இது பரிசிலனையில் இருந்து வருகிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி நாயுடு : மாண்புமிகு உறுப்பினர் திரு. வெள்ள பாண்டியன் அவருடைய உப கேள்வியிலே, ஜெர்மனியிலே இவ்வாறெல்லாம் சிறைச்சாலைகள் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது, அது போல நம்முடைய நாட்டிலே இந்தத் தரத்த வெளி சிறைச்சாலை அமைப்பதற்கு ஏற்பாடு செய்வீர்களா என்று கேட்டபோது, அமைச்சர்கள் நாம் தமிழ் நாட்டிலே இருக்கிறோம், ஜெர்மனி நாட்டில் உள்ள பழக்க வழக்கங்களைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமென்றார்கள். மறைமுகமாகப் பல்லிப் பிள்ளைகளை அடக்குவது போல அந்த பதில் இருக்கிறது. அமைச்சர்கள் இப்படித் தெரிவித்தது பொருத்தமாக இருக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, கேள்வி கேட்பதுதான் பொருத்தமாகத் தெரியவில்லை.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் வர்கள் பழங்காலச் சிறைச்சாலைக்கும், இன்றைய சிறைச்சாலைக்கும் வேறுபாடு இருப்பதாக அவையில் அறிவித்தார்கள். அதனுடைய விவரத்தை இந்த அவையில் சொல்லுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

வி.ப. 4.20

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, திரு. ஜெயராம ரெட்டியார் அவர்கள் பழைய காலத்தில் சிறைச்சாலைக்குப் போயிருந்தோமென்று சொன்னார்கள். இப்போது நம்முடைய புதிய அரசு வந்ததற்குப் பின்னால், சிறைச்சாலைகளிலெல்லாம், 'மினஸ்-அவுட் லெட்டரின்'-கள் அமைத்திருக்கிறோம். மின்சார வசதி அதிகமாக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. சிறைச்சாலையில் உணவு முறை மாற்றப்பட்டு, சென்னை போன்ற சிறைச்சாலைகளில் 'பிரபேரைஸ்ல்'. நடைமுறையில் இருக்கிறது. உடையிலே சில மாற்றம் ஏற்பட்டிருக்கிறது.

திரு. அய்யணன் அம்பலம் : தலைவரவர்களே, இந்த நல்ல திட்டத்தின் வெற்றிக்கு முன்னோடியாக 'தேர் ஆங்கே' என்ற படத்தை நம்முடைய மாவட்டங்களிலுள்ள எல்லா சிறைச்சாலைகளிலும் போட்டுக் காண்பிக்க ....

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : 'தேர் ஆங்கே, பாரா ஹாத்'—2 கண்கள், 12 கைகள்.

1973 மார்ச் 24]

திரு. அய்யணன் அம்பலம் : திரு. சாந்தராமின் வெற்றிப் படமான அந்த 'தேர் ஆங்கே, பாரா ஹாத்' என்ற படத்தை எல்லா சிறைச்சாலைகளிலும் போட்டுக் காண்பிக்க அரசு ஆவன செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தலைவரவர்களே, படம் போட்டுக் காண்பிப்பது ஒவ்வொரு இடத்திலும் நடைபெறுகிறது. எத்தெத்தப் படங்கள் சிறைச்சாலைக்கு ஏற்றவை என்று கருதப்படுகின்றனவோ, அவை காண்பிக்கப்படுகின்றன. நான் அந்தப் படத்தைப் பார்த்ததில்லை. நல்ல கருத்துக்கள் அதில் இருந்தால், அதைப் பின்பற்றுவதில் ஆட்சேபனையில்லை.

District Munsifs and Sub-Divisional Magistrates

@ * 222 Q.—THIRU M. RAJAH IYER (on behalf of THIRU D. SANTOSHAM) : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether there are District Munsifs and Sub-Divisional Magistrates holding those posts on a temporary basis for more than three years and drawing the pay of the Sub-Magistrates only;

(b) if so, the number of such persons; and

(c) whether there is any proposal to regularise their services in the cadre in which they have worked for such a long period ?

மாவட்ட முன்சிபுகள், துணைக்கோட்ட மாஜிஸ்திரேட்டுகள்

திரு. எம். ராஜா. அய்யர் (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மாவட்ட முன்சிபுகள், துணைக்கோட்ட மாஜிஸ்திரேட்டுகள் பதவியில் தற்காலிகமாக மூன்றாண்டுகளுக்கும் மேலாக இருந்துகொண்டு, துணை மாஜிஸ்திரேட்டுகள் சம்பளம் மட்டுமே வாங்கிக்கொண்டிருப்பவர்களும் உள்ளனரா ?

(இ) ஆமெனில், அவ்வாறு உள்ளவர்கள் எத்தனை பேர் ?

(உ) அவர்கள் அவ்வளவு நீண்ட காலம் பணியாற்றியுள்ள அப்பதவியிலேயே அவர்களது பணியினை முறைப்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் உள்ளதா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) (இ) & (உ) அப்படி ஒரே ஒருவர்தான் இருக்கிறார். அவர் ஒரு நிலையான துணை மாஜிஸ்திரேட்டும் தற்காலிக

@ 21—3—73 ஆம் தேதி வினாப்பட்டியலிலிருந்து ஒத்திபோடப்பட்டது.

கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டும் ஆவார். விதிகளின்படி, ஒரு துணை மாஜிஸ்ட்ரேட் அல்லது ஒரு கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் தற்காலிக மாக மாவட்ட முன்சிப்பாக நியமிக்கப்படும்பொழுது, அவரது நிலையான ஊதியம் அல்லது மாவட்ட முன்சிப் பதவிக்கான குறைந்த அளவு ஊதியம் இவற்றில் எது அதிகமோ அதனை மாவட்ட முன்சிப் பதவியில் தமது ஊதிய மாகப் பெறுவார். இங்கு குறிப்பிடப்படும் அதிகாரி, அவருக்கு அளிக்கப்பட்ட ஊதியப் பாதுகாப்பு காரணமாக 1—10—70 வரையில் தற்காலிக கூடுதல் முதல் வகுப்பு மாஜிஸ்ட்ரேட் பதவிக்குரிய ஊதியத்தைப் பெற்றார். 2—10—70-லிருந்து, அவர் துணை மாஜிஸ்ட்ரேட் பதவிக்கான ஊதியத்தைப் பெறுகிறார். ஏனெனில், திருத்தப்பட்ட சம்பள விதி விதிகளின் கீழ், துணை மாஜிஸ்ட்ரேட்டாக அவர் பெற்ற தற்காலிக ஊதியம் மாவட்ட முன்சிப்பின் சம்பள விதத்தில் குறைந்த அளவு ஊதியத்தைவிட அதிகம்.

Development of Functional Chemical Complexes

@ *223 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Tamil Nadu Small Industries Development Corporation Limited have commissioned any studies into the development of functional chemical complexes in Tamil Nadu; and

(b) if so, the details thereof?

இரசாயன தனித் தொழிற்போட்டைகளின் வளர்ச்சி

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாட்டில், இரசாயன தனித் தொழிற்பேட்டைகளின் வளர்ச்சி குறித்து, தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகம் ஆய்வு ஏதும் நடத்தி யுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) ஆம்.

(இ) இரசாயனத் தொழில் பற்றிய வல்லுநர் குழுவின் ஆலோசனையின் பேரில், சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், மாநிலத்தின் சில பகுதிகளில் இரசாயனத் தொழிற்சாலைகள் அமைப்பதுபற்றி ஆலோசகர்கள் செய்ய

@ 21—3—73 ஆம் தேதி வினுப்பட்டியலிலிருந்து ஒத்திப்போடப்பட்டது.

வேண்டிய ஆய்வுகளைத் தொடங்கியுள்ளது. குளோரினூட்டப்பட்ட பாராபின் மெழுகு, திரவ உரத்தொழிற்சாலைகள் அமைப்பதற்கான தொழில் நுட்ப பொரு ளாதார சாத்தியக்கூறுகள் பற்றி ஆராய்ச்சி செய்வதற்காகவும் இக்கழகம் ஆய்வுகள் நடத்தியுள்ளது. மேற்படி மதிப்பீட்டைச் செய்து முடித்தபின்னரே, சிறுதொழில் வளர்ச்சிக் கழகம், இரசாயனங்களுக்கென தனித் தொழிற் பேட்டைகளை அமைப்பதுபற்றிப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

Schemes executed by the Public Works Department in Sathur Taluk

*253 Q.—THIRU V. THANGAPANDIAN (on behalf of THIRU S. S. THENNARASU): Will the Hon. he Minister for Public Works be pleased to state—

(a) the names of Schemes which have been executed after 1967 by the Public Works Department in Sathur Taluk, Ramanathapuram District;

(b) the estimated amount thereof; and

(c) the names of schemes in the same taluk which are still under examination?

சாத்தூர் தாலுக்காவில் பொதுப் பணித் துறையின் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள்

திரு. வே. தங்கப்பாண்டியன் (திரு. எஸ். எஸ். தென்னரசு சார்பில்): மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சாத்தூர் தாலுக்காவில் பொதுப் பணித் துறையின் மூலம் 1967-க்குப் பின் என்னென்ன திட்டங்கள் நிறைவேற்றப் பட்டுள்ளன?

(இ) அவைகளின் மதிப்பு என்ன?

(உ) அதே தாலுக்காவில் இன்னும் பரிசீலனையில் உள்ள திட்டங்கள் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ), (இ) & (உ) மன்றத்தின் முன் ஒரு விவர அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

@ 95-102 ஆம் பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பட்டுள்ளது.

Demonstration by the Field Workers of the Public Works Department

*254 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the field workers of the Tamil Nadu Public Works Department in Madras City went on a demonstration about 5th October, 1972;

(b) if so, the reasons therefor; and

(c) the steps taken thereon?

பொதுப் பணித் துறை நேரிடப் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சென்னை மாநகரில் பொதுப் பணித் துறையைச் சேர்ந்த நேரிடப் பணியாளர்கள் 1972 அக்டோபர் 5-ஆம் நாள் வாக்கில் ஆர்ப்பாட்டம் நடத்தினார்களா?

(இ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

(உ) அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) & (உ) வேலையாட்களின் முக்கியமான கோரிக்கை, வேலையாட்களுக்கு திருத்திய அடிப்படையில் நகைப் பொறியாளரால் பரிந்துரைக்கப்பட்டுள்ள ஊதிய விகிதங்கள் வரையில் வழங்கப்படவேண்டும் என்பதாகும். இது குறித்து 3—2—73-தேதிய அரசு ஆணை எண் 142-ல் ஆணைகள் தற்போது பிறப்பிக்கப்பட்டுள்ளன.

Diploma Engineers Council of Tamil Nadu

*255 Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the Executive Committee of the Diploma Engineers Council of Tamil Nadu, has requested the Government to do away with the differences in pay scales and status existing between them and degree engineers in October, 1972; and

(b) if so, the action proposed to be taken thereon?

தமிழ் நாடு டிப்லொமா பொறியாளர்கள் மன்றம்

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாடு டிப்லொமா பொறியாளர்கள் மன்றத்தின் நிர்வாகக் குழு, சம்பள விகிதம், பதவி நிலை ஆகியவற்றில் தமக்கும் பட்டதாரி பொறியாளர்களுக்கும் இடையில் நிலவும் வேறுபாடுகளை அகற்றுமாறு 1972 அக்டோபரில் அரசைக் கேட்டுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கக் கருதியுள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) தமிழ்நாடு பட்டயப் பொறியாளர் சங்கம் அரசின் ஏற்பளிப்பைப் பெறுவதால், அச்சங்க நிர்வாகக் குழுவின் கருத்தை அரசு பரிசீலிக்கவில்லை.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : கனிவரவர்களே, அவர்கள் இருவரும் ஒரே வேலை செய்யும்போது, சம்பள விகிதத்தையும், பதவி நிலையையும் பட்டத்தின் அடிப்படையில் பார்த்து, ஏன் வேற்றுமையை எற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனிவரவர்களே, அவர் களுடைய படிப்பில் வித்தியாசம் இருக்கிறது. இவர்கள் டிப்லோதாரர்கள்; அவர்கள் 'இராஜுவேட்ஸ்' ஆக இருக்கிறார்கள். அந்த அடிப்படையில் பல்லாண்டுக்காலமாக இந்த வித்தியாசம் இருக்கிறது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன் : கனிவரவர்களே, இந்தப் பதவி உயர்வு கொடுக்கப்படுவது வேலையின் அடிப்படையிலா அல்லது பட்டத்தின் அடிப்படை யிலா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கனிவரவர்களே, உயர்வு பற்றிய பிரச்சினை இல்லை. இது சம்பளத்தைப் பற்றிய பிரச்சினையாகும். வேலை வாய்ப்பு கொடுக்கும்போது, டிப்லமோ கோர்ஸ் படித்தவர்களுக்கு ஒரு இடமும், 'இராஜுவேட்ஸ்'-க்கு ஒரு இடமும் கொடுக்கப்பட்டு வருகிறது. இது நீண்ட நாட்களாக இருந்து வரும் பிரச்சினையாகும்.

Scheme to construct Dam Across the Cauvery in Upper Anicut

*256 Q.—THIRU M. K. D. NATARAJAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether there is any scheme to construct a dam across the Cauvery in Upper Anicut area to protect the delta area of Thanjavur from damages by heavy rain and floods; and

(b) if so, the present stage of the scheme?

காவிரியின் குறுக்கே மேல் அணை பகுதியில் அணை கட்டும் திட்டம்

திரு. எம். கே. டி. நடராசன்: மாண்புமிகு பொதுப் பணி அமைச்சர் அவர்கள் கேட்கவிருக்கும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தஞ்சை டெல்டா பகுதியை பெருமழை, வெள்ளம் ஏற்படும் காலங்களில் உண்டாகும் சேதங்களிலிருந்தும் பாதுகாப்பதற்கு காவிரியின் குறுக்கே மேல் அணை பகுதியில் ஒரு அணை கட்டும் திட்டம் ஏதேனும் உள்ளதா?

(இ) ஆமெனில், அது எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: (அ) ஆம். மேல் அணைப்பகுதியில் காவிரியின் குறுக்கே ஒரு அணைக்கட்டு அமைக்க திட்டமிடப்பட்டிருக்கிறது.

(இ) இத்திட்டம் மத்திய அரசின் நீர் மின் குழுவினரின் தொடர்ப ஆய்வில் உள்ளது.

திரு. எம். கே. டி. நடராசன்: தலைவரவர்களே, அதிக மழை பெய்யும்போது, தஞ்சைக்கும், திருச்சிக்கும் தண்ணீர் தேவையில்லையென்றால், மேட்டூர் டேமை அடைக்கிறார்கள். அப்படி அடைத்து, குறைந்தது 5 நாட்களிலிருந்து 7 நாட்கள் வரை நிறுத்திவிட்ட தண்ணீரானது பாய்ந்துவந்து வெள்ளத்தை ஏற்படுத்துகிறது. அதைப் போலவே தண்ணீர் தேவையென்றாலும், அங்கே மேட்டூர் டேமைத் திறந்துவிட்டால், 5 நாட்களிலிருந்து 7 நாட்கள் வரையும் தண்ணீர் வந்து சேர்வதற்குக் காலமாகிறது. அதைத் தவிர்ப்பதற்கு அந்த மேலணையில் இரு புறத்துக் கரைகளையும் அதிகமாக உயர்த்தி, சிறிய அணை போல தண்ணீரைத் தேக்கி வைத்தால், நலமாக இருக்கும். அந்தச் செயலைச் செய்வதற்கு அரசு முன்வருமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: தலைவரவர்களே, அதைத்தான் நான் சொன்னேன். அதை அணைக்கட்டு என்று சொல்லக்கூடாது. வடிகால் வெள்ள நிவாரணத் திட்டமென்று சொல்லி, 2 கோடியே 12 லட்சத்திற்கு திட்டம் போடப்பட்டு, மத்திய அரசுக்கு அனுமதிக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. சென்ற ஆண்டு 10 லட்சம் ஒதுக்கப்பட்டு, மத்திய அரசு அனுமதி தராத காரணத்தினால், செய்ய முடியவில்லை. இந்த ஆண்டு 50 லட்சம் ஒதுக்கியிருக்கிறோம். அதற்கு மத்திய அரசினுடைய அனுமதியை எதிர்பார்க்கிறோம். மேலும் அந்த அனுமதி வருவதற்குக் காலதாமதமானால், அந்த அனுமதியை எதிர்பார்த்து வேலையை ஆரம்பிக்கலாமாவென்று பரிசீலிக்கப்படுகிறது.

Coconut Plantations

*257 Q.—THIRU S. VELLAPANDIAN: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(a) whether there are proposals to secure Agricultural Refinance Corporation's financial assistance to Coconut plantations in Madurai District; and

(b) if so, the details thereof?

தென்னந்தோப்புகள் வளர்த்தல்

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கேட்கவிருக்கும் வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரை மாவட்டத்தில் தென்னந்தோப்புகள் வளர்ப்பதற்கு வேளாண்மை மறுநிதியுதவிக் கழகத்திடமிருந்து நிதியுதவி பெறுவதற்கான செயற்குறிப்புகள் எவையேனும் உள்ளனவா?

(இ) ஆமெனில், அவை குறித்த விவரங்கள் யாவை?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: (அ) ஆம்.

(இ) வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்திடமிருந்து நிதி உதவி பெற்று மதுரை மாவட்டத்தில் தென்னந்தோப்புகள் வளர்ப்பதற்கான திட்டம் முன்மொழிப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் ரூ. 1.45 கோடி நிதி மூலதனத்துடன் 5,000 எக்கரில் தென்னந்தோப்புகள் வளர்க்கத் திட்டமிடப்பட்டுள்ளது. வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் ஒப்புதலைப் பெறுவதற்காக இத் திட்டம் 27—9—72 அன்று அக்கழகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

திரு. எஸ். வெள்ளபாண்டியன்: தலைவரவர்களே, இந்தத் திட்டம் எல்லா மாவட்டங்களுக்கும் விஸ்தரிக்கப்படுமாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவரவர்களே, தற்போது மதுரை மாவட்டத்திற்கும், அதற்கு அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்திற்கும், நெல்லை மாவட்டத்திற்கும் இத்தகைத் திட்டம் பரிசீலனை செய்யப்பட்டு, அனுப்பப்பட்டிருக்கிறது. அதற்குப் பிறகு வேளாண்மை மறுநிதி உதவிக் கழகத்தின் சார்பில் வேறு பல திட்டங்களை எடுத்துக் கொள்வதாக இருந்தால், எல்லா மாவட்டங்களுக்கும் பரிசீலனை செய்யப்படும்.

Scholarship to the Backward Class Students

* 258 Q.—THAVATHIRU KUNDRAKKUDI ADIGALAR : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state whether, instead of the present system of disbursing the scholarship amount direct to the Backward Class students, the Government will come forward to pay the amount to the colleges as is done in the case of compensated tuition fees for Pre-University Course?

பிற்பட்ட சமூக மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் : மாண்புமிகு பிற்பட்ட வகுப்பினர் நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

கல்லூரிகளில் பயிலும் பிற்பட்ட சமூக மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை மாணவர்களுக்கு வழங்குவதற்குப் பதிலாகக் கல்லூரிகளுக்கே (கல்லூரி புகுமுக வகுப்புச் சம்பள சுட்டுத் தொகையைப் போல) வழங்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு க. இராசாராம் : கல்லூரிகளில் பயிலும் பிற்பட்ட சமூக மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை மாணவர்களுக்கு வழங்குவதற்குப் பதிலாக கல்லூரிகளுக்கே வழங்கும் குறிப்பு ஏதும் அரசிடமில்லை.

உடுக்குறியிடப்படாத வினுக்கள்

Office of the Public Relations Officer

32 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state the cost of the construction of the office of the Public Relations Officer at the Secretariat ?

A.—The cost of construction of the Public Relation Officer's Office in the Secretariat is Rs. 12,850.

Investigation into the Staff requirements of the Secretariat

33 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any investigation into the staff requirements of (i) the various departments of the Secretariat, and (ii) the other departments of Government has been undertaken in this State : and

(*b*) if so, the details thereof?

A.—(*a*) Yes.

(*b*) A preliminary work study has been conducted by the Organisation and Methods Cell of the Finance Department in four departments, *viz.*, Rural Development and Local Administration, Industries, Education and Public Works Department in the Secretariat in order to fix norms to assess staff requirements.

Investigation into the out-turn of work done by the staff of the Departments of Secretariat

34 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) whether any investigation into the out-turn of work done by the staff of the Departments of the Secretariat has been undertaken ; and

(*b*) if so, the details thereof?

A.—(*a*) Yes.

(*b*) A preliminary work study has been conducted by the Organisation and Methods Cell of the Finance Department, in four departments viz. Rural Development and Local Administration, Industries, Education and Public Works Departments in the Secretariat, in order to fix norms to assess staff requirements.

Slum Dwellers

35 Q.—THIRU V. ISVARMURTI : Will the Hon. the Chief Minister be pleased to state the details of the strength added to the Slum dwellers by the Petty Shop owners as referred to in the Booklet " Slum Clearance in Tamil Nadu 1971–72 " placed on the table of the House during the Budget Session ?

A.—The following are the details of the petty shop owners who live in slums.

Tea shops (tea shops, hotel, Appakkadai, sweet meat shall, etc.)	738
Betel-nut shop (bunk, Beeda, etc.) ...	1,206

Maligai Kadai (provisions, oil, rice, pattani, etc.)	1,173
Vegetable and Fruits	319
Firewood	171
Mutton and Fish	146
Bakery (Bakery and Biscuits)	35
Saloon	218
Laundry	224
Tailoring	420
Cycle shops	228
Miscellaneous (Lime shop, Milk Depot, Timber and Bamboo)	19

கோவை மாவட்ட விவசாயிகள் கிளர்ச்சி

36. கே.—திரு. எல். பலராமன்: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) கோவை மாவட்டத்தில், விவசாயிகள் செய்த கிளர்ச்சியின் போது கைது செய்யப்பட்டவர்கள் 1972 மே மாதத்தில் இருந்து எத்தனை பேர்?

(இ) மற்ற மாவட்டங்களில் மின்சாரக் கட்டணம் போன்றவைகளை குறைக்கக் கோரி விவசாயிகள் செய்த கிளர்ச்சியில் கைதானவர்கள் மாவட்ட வாரியாக எத்தனை பேர்?

ப.—(அ) & (இ): அறிக்கை @ அவையுன்பு வைக்கப்பட்டுள்ளது.

Appointment of Judges for High Courts

37. Q.—THIRU V. ISVARMURTI: Will the Hon. the Chief Minister be pleased to state—

@ 723 ஆம் பக்கத்தில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.

(a) whether the Government are aware of the move of the Central Government to initiate the appointment of Judges for State High Courts; and

(b) if so, the details thereof?

A.—(a) No.

(b) Does not arise.

சிறு சேமிப்பு

38. கே.—திரு. செ. முத்துசாமி: மாண்புமிகு முதல் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ் நாடு பூராவும் சென்ற ஆண்டு செலுத்திய சிறுசேமிப்பு தொகை எவ்வளவு?

(இ) இதில் (1) ஆசிரியர்கள் (2) மற்றவர் செலுத்தியது எவ்வளவு?

ப.—(அ) தமிழ் நாடு பூராவும் சென்ற ஆண்டு செலுத்திய சிறு சேமிப்பின் வளரும் மாதச் சேமிப்பு, மற்றும் தொடர் வைப்புத் தொகை முதலிய இனங்களில் முறையே மொத்த வசூல் ரூபாய் 480.20 லட்சமும், 92.72 லட்சமும், நிகர வசூல் முறையே ரூபாய் 57.96 லட்சமும், 85.83 லட்சமும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

(இ) மேற்கண்ட தொகை அஞ்சலக வங்கிகளில் செலுத்தப்படுவதால் கணக்குகளும் அஞ்சலகத்தார்களே வைத்துக்கொள்கின்றனர். தொழில் முறைப்படி தனித்தனிப் பிரிவினராக அவர்கள் கணக்கு வைத்துக்கொள்ளாததால் ஆசிரியர்கள் எவ்வளவு தொகை செலுத்தினர்கள் என்ற வகைக்குரிய விபரங்கள் கிடைக்கப் பெறவில்லை.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: வினுக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அறிவிப்பு.

உடுக்குறியிடப்பட்ட வினுக்களுக்கான விடைகள் உடுக்குறியிடப்படாத வினுக்களாக விடைகள். பி.ம. 4-30

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர்: அரசிடமிருந்து வரப்பெற்ற, ஏழு உடுக்குறியிட்ட வினுக்களுக்கான விடைகள், 32-லிருந்து 38 வரையிலுள்ள

உடுக்குறியிடப்படாத வினுக்களுக்கான விடைகளாக, சட்ட மன்ற மேலவையில் இன்று வைக்கப்பட்டுள்ளன என்பதை இம் மன்றத்திற்குத் தெரிவித்துக்கொள் கின்றேன்.

3. அரசினர் தீர்மானம்.

"தமிழ்நாட்டில் 1972-73-ல் தொழில் வளர்ச்சி" என்னும் அறிக்கைகள் மீது விவாதம்.

MR. CHAIRMAN : The Hon. the Minister for Industries will now move the Government Motion.

THE HON. THIRU S. MADHAVAN : Mr. Chairman, I move

"That the papers relating to Industrial Growth in Tamil Nadu during 1972–73 placed on the table of the Council be taken into consideration.

மாண்புமிகு சட்டமன்றத் தலைவர் : மன்றத்தின் முன் உள்ள கேள்வி :

"சட்ட மன்றத்தின் முன் வைக்கப்பட்டுள்ள 'தமிழ்நாட்டில் 1972-73-ல் தொழில் வளர்ச்சி' என்னும் அறிக்கைகள் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப் படவேண்டும்".

திரு. எஸ். ஜெயராம செட்டியார் : தலைவரவர்களே, நம்முடைய தொழில் துறை அமைச்சர் அவர்கள் பல்வேறு தொழிற் துறைகளிலே அவர்கள் எடுத்துக் கொண்ட முயற்சிகளைப் பற்றியும், தொழில் நிறுவனங்களுக்கு எந்தெந்த வகையில் பண உதவி நிதர்வ் பாங்கு மூலமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது, மற்ற உதவிகள் எல்லாம் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதைப் பற்றியும் விரிவாக வினக்கி அவருடைய அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கின்றார்கள். அந்த அறிக் கையில் உள்ள விவரங்களை ஒவ்வொன்றாக எடுத்து விவரிப்பது மிகவும் முடியாத காரியமாக இருக்கும். சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், எல்லாத் தொழிற் துறைகளிலும் நமது தமிழ் நாடு நல்ல முறையில் முன்னேறவேண்டும் என்ற ஆவலுடன் பல காரியங்களைச் செய்துகொண்டு வந்திருக்கிறார்கள். இதற்கு முன் இருந்த அரசாங்கம்கூட நம்முடைய மாநிலமானது தொழிற் துறைகளில் முன்னேறவேண்டுமென்று திட்டமிட்டுச் செயல்பட்டு வந்தது. அதன் காரணமாகத்தான் பஞ்சாலைகள் நமது மாநிலத்தில், மகாராஷ்ட்டிரம் குஜராத்துக்கு அடுத்தாற்போல் இருந்தாலும், எற்கெனவே ஏராளமாக இருந்தன. திருச்சி, இராமநாதபுரம், தஞ்சாவூர் போன்ற மாவட்டங்களிலே

ஒவ்வொரு தாலுக்காவுக்கும் ஒவ்வொரு பஞ்சாலை கொடுக்கவேண்டுமென்ற அடிப்படையிலே ஒவ்வொரு தாலுக்காவுக்கும் கொடுக்கப்பட்டு வந்தது. முது குளத்தூர் தாலுக்காவிற்குக் கொடுக்கப்படவில்லை. அதை விட்டுவிடக் கூடாது என்று இந்த சந்தர்ப்பத்திலே தொழில் துறை அமைச்சர் அவர்களிடத்திலே சொல்லி, அந்தத் தாலுக்காவிலே ஒரு பஞ்சாலையை ஏற்படுத்தவேண்டும் என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகின்றேன். இராமநாதபுரத்தைப் பற்றிச் சொன்னால், 'நான் தென்பாண்டி நாட்டுக்கே கேட்கிறேன்' என்று யாரோ ஒருவர் சொன்னதாக எண்ணுகிறேன். பின் தங்கிய வகுப்பினர்களாக அவர்கள் இருக்கின்றார்கள், அவர்கள் முன்னேற்றம் அடையவேண்டுமென்ற காரணத்தினாலே நான் கேட்கின்றேனேயொழிய வேறில்லை. நான் மேற்கு இராமநாதபுரத்தைச் சேர்ந்தவன், அதனால் மேற்கு இராமநாதபுரத்தில் தொழில் துறை வரவேண்டும் என்று கேட்கவில்லை. அது பின் தங்கியிருக்கின்றது, ஆகவே செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். நம்முடைய தொழில் அமைச்சர் அவர்கள் தமிழ் நாட்டினுடைய தொழில் துறையை விஸ்தரிக்க வேண்டுமென்று, உலகம் பூராவும் சுற்றி வந்து தனது அனுபவத்தைக்கொண்டு இங்கே பல்வேறு திட்டங்களைப் போட்டு அமுலாக்கவேண்டுமென்று ஆசைப் பட்டுக்கொண்டிருக்கின்றார்கள். அது மாத்திரமல்லாமல், தொழிலாளர்களையும், பஞ்சாலைகளையும் சுற்றிப் பார்த்துவிட்டு வந்தார்கள். இராமப்புறங்களிலே சிறு தொழில் நிறுவனங்களை ஏற்படுத்துவதற்கு அங்கு போய்ப் பார்த்து, தம் மாநிலத்தில் அப்படிப்பட்ட நிறுவனங்களை எப்படி நாம் முன்னேற்றகரமாக அமைப்பது என்பதற்கான அனுபவத்தைப் பெருக்கிக் கொண்டு வந்தார்கள். இந்த நேரம் எப்படி இருக்கின்றது என்றால், 'வெண்ணெய் திரளுகின்ற நேரத்தில் பானை உடைந்த போன மாதிரி' இப்போது மின்சாரப் பற்றாக்குறையினாலே எந்தத் தொழிலும் ஆரம்பிக்கப்பட முடியாமல் இருக்கின்றது. ஆரம்பித்த தொழில்களை இந்த நேரத்தில் நாம் எப்படி நடத்திச் செல்வது என்பதைப்பற்றியும் நம் எல்லோருக்கும் கவலையாக இருக் கின்றது. அதனால் தொழில் ஆரம்பிப்பதற்கு முன்னாலே, அதற்கு அடிப்படை யான மின்சாரம் எவ்வளவு வேண்டுமென்று தெரியவேண்டும். அந்த மின்சாரம் எரி பொருள்கள் மூலமாகக் கிடைத்தாலும் சரி, ஹைடல் புராஜெக்ட் மூலமாகக் கிடைத்தாலும் சரி, எவ்வளவு மெகா வாட் நமக்குத் தேவையென்று ஒரு கணக்கிட்டுக்கொண்டு, பிறகு செய்தால் நலமாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கின்றேன். இந்த நேரத்தில் பார்த்தால், தொழில் துறையே மிகவும் இக்கட்டான நிலைமையில், கவலை தரக்கூடிய நிலைமையில் இருக்கின்றது. இப்போது நம்முடைய தமிழ் மாநிலத்திலே பஞ்சாலைத் தொழில், மோட்டார் பம்புசெட்டு செய்யும் தொழில், நடந்துகொண்டிருக்கின்றது. குறிப்பாக கோயம்புத்தூர் மாவட்டத்திலே, மோட்டார் பம்புசெட்டு செய்கின்ற தொழி

[திரு. எஸ். ஜெயராம செட்டியார்] [1973 மார்ச் 24

வானது மிகவும் சிருத்தியடைந்திருக்கின்றது. மிடில் ஈஸ்டு, மத்திய கிழக்குப் பகுதிகளுக்குக்கூட எக்ஸ்போர்ட் ஆகி, ஃபாரின் எக்ஸ்சேஞ்சு நமக்கு ஏராள மாக சம்பாதித்துத்தருகின்ற அளவுக்கு அவர்கள் திறமையாக நடத்தி வருகின் றார்கள். மத்திய நிறுவனங்களான நிருச்சி கன ரக மின் நிலையம், பெம்பூர் கோச் பாக்டரி, டி.ஐ. சைக்கிள் தொழிற்சாலை, டி.வி.எஸ். ஹாகால், மெட்ராஸ் பிளைவுட், தாரங்கதாரா கெமிக்கல்ஸ் தொழிற்சாலை இப்படிப்பட்ட பெரிய தொழிற்சாலைகள் எல்லாம் இருக்கின்றன. இந்தச் சந்தர்ப்பத்தில் இன்னொரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். பல வருஷங்களுக்கு முன் பாக ஏ.வி. தாமஸ் கம்பெனி என்று ஒரு கம்பெனி இருந்தது. அந்தக் கம்பெனியுடன் நான் தொடர்பு கொண்டு இருந்த காலத்திலே—மறுபடியும் முதலமைச்சர் தாலுக்காவைப் பற்றிச் சொல்கிறேன் என்று குற்றமாக நினைக்கக் கூடாது—வாலி நோக்கம் என்ற ஒரு இடத்திலே சோடா ஆஷ் கம்பெனி ஒன்று ஆரம்பிக்க வேண்டுமென்று அப்போது லீசென்ஸ் கொடுத்தார்கள். அப்போது நான் ஏ.வி. தாமஸ் அவர்களின் கம்பெனியில் இருந்தேன். ஏ. வி. தாமஸ் கம்பெனி பல காரணங்களுக்காக அதை ஆரம்பிக்க முடியாத காரணத்தால், ஜெயின் கம்பெனிக்காரர்கள் சாகுபுரத்தில் ஏற்பாடு செய்திருக்கின்றார்களே தாரங்கதாரா கெமிக்கல்ஸ் கம்பெனிக்காரர்கள், அதை இப்போது ஆரம்பித் திருக்கின்றார்கள். ஆனால் வாலி நோக்கம் என்ற இடத்திலே அதற்கு வேண்டிய தாதுப் பொருள்கள் இருக்கின்றன என்பதை நாங்கள் அப்போதே ஆராய்ந் திருக்கின்றோம். தமிழ் நாடு வளருகிறது, தென்னாடு வளர்ச்சியடைகிறது என்று யாரோ சொல்லுகின்றார்கள் என்பதற்காக அதை விட்டுவிடக்கூடாது. அதை ஆராய்ந்து, அந்தப் பிற்பட்ட பகுதிகளை முற்பட்ட பகுதிகளாக ஆக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

இந்தச் சமயத்திலே நான் இன்னொன்று சொல்லவும் விரும்புகின்றேன். நான் அடிக்கடி காரிலே வருகின்றபோது, எனக்குத் தோன்றுகின்ற ஒரு விஷயத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றேன். சமயபுரத்தை விட்டு நாம் காரிலே உளுந்தூர்பேட்டை வரையிலும்—கிட்டத்தட்ட 70 மைல் இருக்கும் என்று நினைக்கின்றேன்—நம்முடைய அமைச்சர் திரு. தர்மலிங்கம் அவர்களுக்குக் கூடத் தெரியும் என்று நினைக்கின்றேன்—இடைத்தூரத்தில் எங்கேயாவது காரை நிறுத்தி தண்ணீர் கேட்டுக் குடிக்கக்கூட ஒரு கிராமம் கிடையாது. பாலைவனம் மாதிரி இடம் பாழாகக் கிடக்கின்றது. இனிமேலாவது அமைக்கின்ற தொழிற் சாலைகளை இதுபோன்ற இடங்களில் அமைத்து, அங்கு இருக்கின்றவர்களுக்கும் அந்த இடத்திற்கும் ஊக்கமும் ஆக்கமும் கொடுத்து அந்த இடங்கள் வளம்பெறு வதற்கான முயற்சிகளை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின் றேன்.

1973 மார்ச் 24] [திரு. எஸ். ஜெயராம செட்டியார்]

இப்போது பின் தங்கிய மாவட்டங்கள் என்று தர்மபுரி மாவட்டம், இராம நாதபுர மாவட்டம், கோவில்பட்டி, உசிலம்பட்டி, திருமங்கலம் இப்படிப்பட்ட இடங்களை அவர்கள் 'நோட்டிபை' செய்திருக்கின்றார்கள். அந்த இடங்களுக்கு சப்சிடி கொடுத்துக்கூட ஊக்கம் கொடுப்பதற்கு முன்வந்திருக்கின்றார்கள். அது மட்டுமல்லாமல், இந்தியா கவர்ன்மென்டும் பிற்பட்ட மாவட்டங்களில் மாநில அரசு 'நோட்டிபை' செய்கின்ற இடங்களுக்கு 10 வருடத்திற்கு வருமான வரி வசூலிப்பதில்லை என்ற ஒரு சலுகையும் அளித்திருக்கின்றார்கள். இந்த அடிப் படையில் அரசு உதவி செய்து, நல்ல காரியங்களையெல்லாம் செய்ய வேண்டு மென்று நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

எங்கள் மாவட்டத்திலே பெரிய டயர் தொழிற்சாலை வந்திருக்கின்றது. அங்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் அந்தத் தொழிற்சாலையைக் கொண்டு வந்திருக் கின்றார்கள். 4 ஆயிரம், 5 ஆயிரம் பேர்கள் வேலை செய்யக்கூடிய ஒரு பெரிய தொழிற்சாலையை ஏற்படுத்தி வேலை வாய்ப்பினை அவர்களுக்கு உண்டாக்கி யிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட பல தொழிற்சாலைகளை அவர்கள் ஏற்படுத்த வேண்டும்.

நண்பர் ஒருவர் எனக்கு ஞாபகப்படுத்தியிருக்கின்றார்கள். இப்போது எங்க ளுடைய மாவட்டத்திலே முந்திரி சாகுபடி செய்ய திருப்பத்தூர், சிவகங்கை ஆகிய வட்டாரங்களில் ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். நான் அந்த ஜில்லா வின் மார்க்கெட்டிங் கமிட்டிக்குத் தலைவன் என்ற முறையிலே சொல்லுகின்றேன். முந்திரி சாகுபடி என்ன என்று எனக்குத் தெரியும். அங்கு அதற்கு ஒரு மார்க்கெட்டிங் சொஸைட்டியும் ஏற்படுத்தியிருக்கின்றார்கள். சாகுபடி செய்த முந்திரியைப் பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கு அங்கே ஒரு பாக்டரி ஏற்படுத்த வேண்டுமென்று ஒரு நண்பர் எனக்கு ஞாபகப்படுத்தியிருக் கின்றார்கள். அதை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவர ஆசைப்படுகின்றேன். எல்லாம் இராமநாதபுரத்திற்கு என்று சொல்லுகின்றேன் என்ற எண்ணம் வரக்கூடாது. மற்ற ஜில்லாக்களிலேயும் எந்தெந்த இடத்திலே செய்யவேண்டுமோ அங்கே செய்யவேண்டும். இதை ஏன் சொல்லுகின்றேன் என்றால், இனிமேல் பெரிய தொழிற்சாலைகளையெல்லாம் நகரங்களுக்குப் பக்கத் திலேயே அமைக்காதபடி, நகரங்களுக்கு அப்பாற்பட்டு, 20 மைல்கள் 30 மைல் கள் தள்ளி, அமைக்க லீசென்ஸ் கொடுக்கவேண்டும். அப்போதுதான் அங்கே இருக்கின்ற ஜனங்களுக்கும் தாகரிகமும், தென்பும், உற்சாகமும் இருக்கின்ற ஒரு நிலைமை ஏற்படும். மக்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும். எல்லாமே அம்பத்தூரிலும், இந்தப் பக்கத்தில் தாம்பரத்திலும், இப்படி நகரங்களுக்கு அருகில் அமைத்திருக்கின்றன. நான் தாம்பரம் கிரிஸ்டியன் காலேஜில் படித்துக்கொண்டிருந்த அந்தக் காலத்தில், காலேஜுக்குப் போய்வருகின்ற

[திரு. எஸ். ஜெயராம செட்டியார்] [1973 மார்ச் 24

போது பார்த்தால், அது காட்டிலே இருந்தது. இப்போது தாம்பரம் வரைக்கும் பாக்டரியாகவே ஆகிவிட்டது. அதேபோல் மதுரையைச் சுற்றிலும், கப்பலூரிலே 700, 800 எக்கர் வாங்கி அங்கே டெவலப்மெண்ட் செய்கின்றார்கள்; வரிச்சூர் பக்கத்திலே இப்போது தைலான் பாக்டரி போடப்போகிறார்கள். நமது நண்பர் திரு. அய்யனன் அம்பலம் அவர்கள் ஊரின் எல்லையில் இருக்கின்றது அந்த இடம். ரூபாய் 10 கோடி வரை போட்டு அமைக்கப்போகின்றார்கள். அப்படிச் செய்யாதபடி, அந்த பாக்டரிகளையெல்லாம் காடாந்தரமாக இருக்கின்ற இடங்களிலே போட்டு, பரவலாக எல்லா இடங்களிலும் ஏற்படுத்தி, எல்லா இடங்களும் வளர்ச்சியடையவேண்டுமென்ற எண்ணத்தில் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பொதுவாக இப்போது ஒரு விஷயத்தை நான் சொல்ல ஆசைப்படுகின்றேன். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் நிதி அறிக்கையிலே மால்கோ கம்பெனியை தேசிய உடைமையாக்குகின்ற ஒரு சங்கதியைச் சொன்னார்கள். அது சம்பந்தமாக இன்று காலையிலே பத்திரிகையிலே பார்த்தால், மத்திய அமைச்சர்கள் 'எங்களுக்கு ஒன்றுமே தெரியாது' என்று சொல்லியிருக்கின்றார்கள். எங்களுக்கு ஒரு விஷயம் தெரியவேண்டியிருக்கின்றது. இந்த மால்கோ கம்பெனியை எதற்காக நாம் எடுக்கிறோம் என்பதைப் பற்றி ஒரு விளக்கம் அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் என்றால், அதைப்பற்றிப் புரிந்து கொள்ள முடியும். அலுமினியம் செய்ய வேண்டிய மூலப்பொருள்களை நமக்குக் கொடுக்க மாட்டேன் என்று அவர்கள் சொல்லுகின்றார்களா அல்லது வேறு ஏதாவது இடைஞ்சல்கள் இருக்கின்றனவா என்று தெரியவில்லை. எதற்காக நாம் அதை எடுத்துக் கொள்ள வேண்டும்? ஏன் இதைச் சொல்லுகின்றேன் என்றால், ஜாயின்ட் செக்டாரில் பல நண்பர்கள் எனக்குப் பழக்கப்பட்டவர்கள். எனக்கு சொம்பத் தெரிந்தவர்கள் இருக்கின்றார்கள். அவர்களுக்கெல்லாம் ஒரு அச்சம் ஏற்பட்டிருக்கின்றது. சமீபத்தில்கூட கொலாபரேஷன் செய்வதற்காக என்னுடைய நண்பர் ஒருவர் மேல் நாட்டிற்குச் சென்றிருந்தார்கள். அவர்கள் விஸ்கோஸ் கம்பெனியில் ஒரு பங்குதாரராக பெரிய பெரிய தொழில்கள் எல்லாம் நடத்திக் கொண்டிருக்கின்றார்கள். மெஷின் ஒர்க்ஸ் ஒன்று ஏற்படுத்தி அதில் உற்பத்தியாகின்ற சாமான்களை வைத்து இந்தோனேஷியாவிலும், சிலோனிலும் போய் டெக்ஸ்டைல் மில்களை ஏற்படுத்தி, நம்முடைய சாதனங்கள் அயல் நாட்டு சாதனங்களை விட நல்ல சாதனங்கள் என்று நம்பும்படியாக அவர்கள் அங்கே செய்துவிட்டார்கள். அங்கே பத்து வருடங்கள் பதினைந்து வருடங்களுக்கு கொலாபரேஷன் செய்திருக்கின்றார்கள். வெளிநாடுகளுக்கு கொலாபரேஷனுக்கும் நாம் போகிறோம், அதுபோல் இந்தோனேஷியாவிலிருந்தும் சிலோனிலிருந்தும் அவர்களிடத்திற்கு வந்து கொலாபரேஷன் செய்கின்றார்கள். அந்த

1973 மார்ச் 24] [திரு. எஸ். ஜெயராம செட்டியார்]

முறையிலே அவர்கள் ஸ்பின்னிங் மில்ஸ் எல்லாம்கூட அமைய ஏற்பாடு செய்திருக்கின்றார்கள். இப்படி ஊக்கமாகச் செய்கிற நம்முடைய நாட்டிலே இருக்கிறவர்களுக்கு, ஏதாவது இனிமேல் செய்தால் இப்படிக் கஷ்டப்பட்டுச் செய்கிறோமே, ஆபத்து வந்துவிடுமோ, எப்போது எடுத்து விடுவார்களோ, என்ற அச்சம் வராது உறுதியளிக்கிற வகையில் கொள்கையை தொழில் அமைச்சர் அவர்கள் இங்கே சொல்ல வேண்டுமென்று ஆசைப்படுகிறேன். மொத்தத்தில் நம் மாநிலத்தில் இருக்கிற பல தொழில் அதிபர்கள், இன்னும் அவர்களுக்கு ஊக்கம் கொடுத்தால், வேலை செய்யத் தயாராயிருக்கிறார்கள். அந்த முறையில் அவர்களுடைய எண்ணம், கொள்கை இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மந்திரியாவதற்கு முன்னால் அவர்களுடன் பழகிக்கொண்டிருக்கும் போது, சாதாரண வக்கீலாக இருந்தார் என்று நினைத்தேன், தொழில் தெரியும் என்று நினைக்கவில்லை. அவர் மந்திரியான பிறகு, தொழில் அதிபர்களுக்கு ஆலோசனை சொல்லக்கூடிய அளவுக்கு தாராளமாகத் தெரிந்து வைத்திருக்கிறார். முதலமைச்சர் அறிக்கையில் இன்னும் 10, 15 தொழில்கள் சென்ட்ரல் கவர்ன்மென்டு செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். விவரமாகச் சொல்ல முடியவில்லை. தலைவராவர்கள் மனி அடித்து விட்டார்கள். அந்தத் தொழில்களை இங்கே செய்ய வேண்டும். அதற்கான ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து தமிழ் நாட்டில் செய்ய வேண்டும். தென் பாண்டிய நாட்டில் தான் செய்ய வேண்டுமென்று சொல்லவில்லை. சோழ நாட்டில் செய்யட்டும். தமிழ் நாட்டிலே செய்யட்டும். நன்றாகச் செய்ய வேண்டுமென்று ஆசீர்வாதத்தைச் சொல்லி என் வார்த்தையை முடித்துக்கொள்ளுகிறேன்.

பி ப 4-40

திரு. சா. கணேசன்: தலைவர் அவர்களே, நமது மாநிலத்திலே தொழில் வளம் சீராக வளர்ந்து வருகிறது என்பதை முதலிலே மனப்பூர்வமாக நான் வரவேற்கிறேன். அதே காலத்தில் வளர்ந்து வருகிற தொழில் செம்மையாக, திறமையாக, பயனுள்ளதாக அமைவதற்குரிய நெறிமுறைகளை, அரசு தொழில் வளர்ச்சி நோக்கம் ஒன்றை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, கவனிப்பதில் இந்த அரசும் சரி, முந்தைய அரசும் சரி, கவனம் செலுத்தவில்லை என்பதை நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். தொழில் துறை வளம் பெற வேண்டுமென்றால், அரசு முழுக்க முழுக்க அத்துறைக்கு உதவ வேண்டும். அதற்கு உதவுவதோடு மட்டுமின்றி, அதற்குக் காப்பும் அளிக்க முன்வர வேண்டும். அவைகளுக்கு முடிந்ததையெல்லாம் செய்வதோடு மட்டுமின்றி, முடியாத இடங்களில்; உதவி செய்ய முடியாவிட்டால், அத்தொழில் தன்னிலையில் வளருவதற்கு இடையூறு இல்லாமல், உபத்திரவம் இல்லாமலாவது அரசு செயல் படவேண்டும். பல்வேறு வெளிநாடுகளோடு ஒப்பிட்டுப் பார்க்கிறபொழுது, நம்முடைய நாட்டிலே தொழில்கள் எந்த இயங்கிக்கொண்டிருக்கிற

[திரு. சா. கணேசன்] [1973 மார்ச் 24

நிலைமையை காணுகிறேமேயன்றி, நாடு வளம் பெறுவதற்குரிய நிலையிலே இந்தத் தொழில்கள் எல்லாம் செயல்படுகின்றனவா, நாட்டு மக்கள் செம்மையாக, நிறைவாக மகிழ்வோடு துய்ப்பதற்கு உரியவற்றை உற்பத்தி பண்ணுகிற முறையில் அவை செயல்படுகின்றனவா என்பவற்றையெல்லாம் கணித்துப் பார்த்தால், மிக வருத்தத்தோடு இல்லையென்ற முடிவுக்கு வருவதிலே இரண்டு விதமான அபிப்பிராயமே இருக்க முடியாது. காரணம், தொழில் துறை வளருவதற்கு இடையூறாக பலவகையான நிர்ப்பந்தங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. உற்பத்தியைத் திறமையாகவும் செம்மையாகவும் அளவிலும் தரத்திலும் உயர்த்துவதற்கு முயல்கிற முதலிடுபவனும் உழைப்பவனும் அதை நிர்வகிப்பவனும் தங்களுடைய கவனத்தைச் செலுத்துவதற்கு பூரண வாய்ப்பு இல்லாத நிலையிலே கணக்குகளுக்கும் வழக்குகளுக்கும் அவற்றிற்கும் இவற்றிற்கும் பதில் சொல்வதற்கென்றும் இந்த பாரம், அந்த நஷ்ட ஈடு செய்வதற்கும், இத்தியாதி தேவையற்ற—பயனற்ற என்றுகூட கருதுகிறேன்—அந்த முறையிலே பெரும்பாலோருடைய உடல் உழைப்பு முழுதும் விரயம் ஆவதை ஒவ்வொரு தொழில் துறையிலும் காண்கிறோம். அந்த நிலையை மாற்ற அரசு முயலவேண்டும். வரி விதிதம் குழப்பமில்லாமலும் தாங்கக்கூடியதாகவும் அமைக்கப்பட வேண்டும். இது மட்டுமல்ல. வரிவிதிப்பு முறையும்கூட செம்மையாக, ஒழுங்காக மாற்றப்படவேண்டும். அது மட்டுமல்ல. இந்த வரிவிதிதமும் வரிவிதிப்பு முறையும் மிகக் கடுமையாக இருப்பதாலே நான் இந்த நாட்டிலே, வள்ளுவன் பிறந்த நாட்டிலே, காந்தி அடிகள் உரைத்த நாட்டிலே, கள்ளக் கணக்கு எழுதுவது சர்வசாதாரணமாகிவிட்டது. இரண்டு கணக்கு வைத்துக்கொள்வது தவறு இல்லையென்று எண்ணுகிற அளவுக்குக் கூட மக்கள் சமுதாயம் கருதத் தொடங்கிவிட்டது. அப்படி ஒரு எண்ணப்பாடு உள்ளத்தில் ஊன்றிவிட்டது. இதைத் துடைக்க அரசு முழுக்க முழுக்க முயல வேண்டுமென்று நான் பணிவோடு விண்ணப்பித்துக் கொள்ளுகிறேன். ஒரு தொழில் துறை பல்வேறு சிறு தொழில்களிலிருந்து பெரும் தொழில் வரையில் அனைத்தும் வளர்ந்து செழித்து நின்றால்தான், நாடு நல்ல நலனுடையதாக அமைய முடியும் என்பதில் இரண்டுமில்லாக் கருத்து இருக்கவே முடியாது. அப்படி இருக்க வேண்டுமென்று நாம் எண்ணுகிறோம் அந்த எண்ணம் நிறைவேற வேண்டுமென்றால், தொழில் துறை இயங்குவதற்கு உற்பத்தி செய்கிற பண்டங்கள், இவற்றிற்கான அடிப்படைப் பண்டங்கள் யாவும் செம்மையாகவும் எளிதாகவும் சுலபமாகவும் கிடைப்பதற்குரிய வழிவகைகளை நாம் செய்ய வேண்டும். பெட்ரோல் பற்றாக்குறை ஏற்படாத முறையில் கவனித்துக்கொள்ள வேண்டும். டீசல் பற்றாக்குறை ஏற்படாத முறையில் கவனித்துக்கொள்ள வேண்டும். அவ்வாறே சிமெண்டு போதிய அளவு கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். அதற்கு மேலே

1973 மார்ச் 24] [திரு. சா. கணேசன்]

மின் உற்பத்தியும் செம்மையாகக் கிடைக்கும்படி செயல்பட வேண்டும். கட்சிக் கருத்துக்களையும் தேர்தலையும் மனதில் கொண்டு அரசியல் வாதிகளாகிய நாம் பின்னிக்கையைப் பெருக்குவதிலேயே கவனத்தைச் செலுத்திக் கொண்டு வருகிறோமேயன்றி, தரத்தையும் நிலையான போக்கையும் கருத்தில் கொண்டு செயல்படவில்லை. ஆதலினாலேதான் மின்சாரப் பற்றாக்குறையெல்லாம் நம்மைப் பெரிதும் தாக்கியிருக்கிறது. அதன் காரணமாக சிமெண்டு உற்பத்தி ஆகவில்லை. போன கூட்டத்திலே தலைவர் அவர்கள் மூலமாக விண்ணப்பித்துக்கொண்டேன். சிமெண்டு பற்றாக்குறை ஏற்படுமானால் எங்களவையெல்லாம் தொழில் துறையை, உழைப்பாளிகள் துறையை, அது பாதிக்கும்? இன்று பல ஊர்களில் 'ஒட்டர்கள்' என்று சொல்லுகிற தொழிலாளர்கள் எல்லாம் ஊர்வலம் வருகிற நிலையைப் பார்க்கிறோம். இந்த நிலையில் வீடு கட்ட முடியாது. தொழிற் சாலைகளில் கட்டிடங்கள் கட்ட முடியாது. அது மட்டுமல்ல. அந்தத் தொழிலில் ஈடுபடுகிறவர்களுக்கு தொழில் கிடைக்காமல் போகிற நிலை. இவற்றை மனதில் கொண்டு செயல்பட வேண்டும். இதுமட்டுமல்ல. இவையெல்லாம் எவ்வளவு எளிதாகவும் சுலபமாகவும் கிடைக்கிறதோ, விலை மலிவாக இருக்கிறதோ அவ்வளவுக்குத் தான் உற்பத்தியாகிற பண்டங்களின் விலையும் மிகக் குறைவாக இருக்கும். ஏதோ அந்தக் காலத்தில் பாட்டி கதை மாதிரி சொல்லுவோம், சுண்டக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்று. சுண்டக்காய் கால் பணம் சுமை கூலி முக்கால் பணம் என்று சொல்வதன் பொருள் உற்பத்திச் செலவைவிட, உற்பத்திக்கு ஏற்படுகிற விலையைவிட அந்தப் பண்டங்களைக் கொண்டு சென்று பல்வேறு இடங்களிலும் சேர்ப்பதற்கு ஏற்படுகிற செலவு ஏராளம் என்பதை நமக்குப் புலப்படுத்துவது தான். இந்த பன்னெடுங் காலத்து பழமொழியை மனதில் கொண்டு 'டிரான்ஸ்போர்ட்' போக்குவரத்து இவற்றையெல்லாம் கடத்தி வேறு இடத்திற்குச் செல்வதற்கு வழிவகை செய்வதற்குரிய அடிப்படைப் பண்டங்களான பெட்ரோல், டீசல் முதலியன மிகக் குறைந்த விலையில் கிடைத்தால்தான் தொழில் வளம் பெருகும்; பிற மாநில அல்லது பிற நாட்டு தொழில்களோடு நம்மால் போட்டி போட முடியும். இதையெல்லாம் நாம் மனதில் கொள்ள வேண்டுமென்று விண்ணப்பித்துக்கொள்ளுகிறேன்.

இதோடு தொழில்களையெல்லாம் அரசுடைமையாக்குவதனாலே எற்படுகிற பி.ப. சிக்கல்களையெல்லாம் நல்ல அனுபவம் நிறைந்த அமைச்சரவர்கள் நன்றாக 4-50
உணர்ந்துகொண்டிருப்பார்களென்றே நான் நம்புகிறேன். அரசுடைமையாக்கிய தொழில்களிலே மிகப் பல நஷ்டத்திலேயே செயல்படுவதை நாம் காண்கிறோம். அதை மறைக்கவும் முடியாது; மறக்கவும் முடியாது. இந்த நிலை நமக்கு ஏன் தேவை? நன்றாக, செம்மையாக, லாபத்தோடு நடந்த, அரசுக்கும் நிரம்ப

[திரு. சா. கணேசன்] [1973 மார்ச் 24

வசியைக் கொடுத்துக்கொண்டு, வருமான வரியையும் செலுத்திக்கொண்டு, ஏராளமான போனஸ்களையும் தொழிலாளர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்த தொழில்களையெல்லாம் அரசு மேற்கொண்டு, அதன் பயனாக நஷ்டம் ஏற்பட்டு அந்த நஷ்டம் முழுவதும் வரி கொடுப்போர் தலையிலே விழும்படியான நிலையில் செயல்படுவது நாட்டுக்கு நலம் பயக்குமா என்பதைச் சிந்திக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். ஆகவே நடந்த வரையிலே சரி. இனி யாவது எல்லாவற்றையும் அரசுடைமையாக்குகிறோம் என்ற போக்கிலே சென்று மேலும் மேலும் நஷ்டத்தைப் பெருக்கி மக்கள் தலையிலே போடக்கூடாது. இந்த வரி விதிதம் ஏன் இவ்வளவு கூடுகிறது என்பதை ஒட்டுமொத்தமாக சிறிது கண்கூடாகப் பார்ப்போமானால், அரசு ஏற்கிற பல்வேறு துறைகளிலே விரயகின்ற நஷ்டத்தை ஈடுசெய்வதற்குத்தான் வரியிலே பெரும் பகுதி செலவழிக்கப் படுகின்றது என்பதை நாம் மறந்து விடக்கூடாது. இந்த நிலை நமக்கு லாபமா? நன்மையா? இதை ஆழச் சிந்தித்து, சீர்தூக்கிப் பார்த்து வழிவகைகளை அரசு ஆராய்ந்து இந்த நாட்டுக்கும் அமைச்சரவைக்கும் நல்ல பயனையும், பெயரையும், பலனையும் ஈட்டித்தர வேண்டுமென்று நான் வேண்டிக்கொள்கின்றேன்.

அதோடு கூட இந்தத் தொழில் துறைகளைப் பின்பற்றுகின்ற போது நாம் கண்ட தேசங்களையெல்லாம் முன் மாதிரியாகக் கொள்ளாமல், குறிப்பாக ஜப்பானை முன் மாதிரியாகக் கொண்டு கிட்டத்தட்ட அதையே காப்பியடிப்பது என்று வைத்துக்கொண்டால் கூட, இந்த மாநிலம் மிகத் தீவிரமாக விரைவிலே வளம் பெற்றுவிடும், வளர்ச்சி பெற்றுவிடும் என்று நான் சொல்ல ஆசைப்படு கிறேன். அங்கே உள்ள தொழில்களுக்கெல்லாம் இங்கு இருப்பதிலே உள்ள அளவிலே நாற்றிலே ஒரு பங்குகூட நிர்ப்பந்தங்கள் கிடையாது. தொட்டதற் கெல்லாம் லீசென்ஸ், பர்மிட் வேண்டுமென்று சொல்லுகிற காரணத்தாலே தொழிலாளி தொழில் செய்ய முடியாமல் அவற்றை வாங்குவதற்கு அலுகின்ற காலமும், அதைப் பூர்த்தி பண்ணுவதற்கு ஏற்படுகிற சிக்கல்களும், செலவுகளும், நிர்ப்பந்தங்களும், இவற்றினாலே எத்தனை அளவு மனித சக்தி விரயமாக்கப்படு கின்றது அல்லது பயன்படுத்த முடியாமல் தேங்கிக் கிடக்கின்றது என்பன வற்றையெல்லாம் கணித்துச் செயல்பட வேண்டும். ஜப்பானில் பெட்ரோல் லிலை என்ன? ஜப்பானிலே மொத்தப் புள்ளி விவரத்தைப் போட்டு எத்தனை சதம் போக்குவரத்துக்கு செலவு ஏற்படுகிறது, உற்பத்திக்கு எவ்வளவு செலவு ஏற்படுகிறது, என்பதைப் பார்த்து அவற்றை வெளிநாடுகளுக்குக் கொண்டு செல்வதற்குக்கூட—ஏற்படுகிற வெளிநாட்டுப் போட்டிகளை நிர்ப்பதற்குக் கூட —கப்பல் கம்பெனிகள் முதலியன இந்தப் போட்டியுள்ள சரக்குக்கென்று, கட்டணங்களையெல்லாம் மிகக் குறைவாக போடுகின்ற நிலையை எல்லாம் நாம் மனதிலே கொண்டு செயல்பட வேண்டும். ஆகவே வரிவகைகளை முடித்த

1973 மார்ச் 24] [திரு. சா. கணேசன்]

அளவுக்குக் குறைக்க முயல வேண்டும். அதே நேரத்தில் மூலப்பொருள்கள் தடையின்றிக் கிடைப்பதற்கு அவர்களுக்கு வழி செய்ய வேண்டும். வழி செய்யாவிட்டாலும், அவர்களே பெற்றுக்கொள்வதற்குரிய மார்க்கங்களை நாம் வகுத்துக் கொடுக்க வேண்டும். போக்குவரத்துச் சாதனப் பொருள்களின் விலை யெல்லாம் மிக மலிவாக இருக்கும்படி அரசு வகைப்படுத்தி, நெறிப்படுத்திக் கொடுத்துவிட வேண்டும். அதற்கு மேலே போட்டா போட்டி, உற் பத்தியாளர்களிடையே ஒருவருக்கொருவர் போட்டி, இருக்கும் நிலையைச் செய்ய வேண்டும். அப்படிச் செய்தால், நாட்டிலே தொழில் வளம் பெருகும். எனக்குப் பற்றாக்குறை இருக்கிறது என்று சொன்னால், நான் விரும்புகின்ற பண்டத்தை நான் பேரம் பேசி பின்னால் பொறுக்கியெடுத்து நிலை நிறுத்தும் உரிமை வாடிக்கையாளருக்கு இருக்கவேண்டும். இன்று அந்த நிலை இல்லை. எப்படியாவது எதாவது கிடைத்துவிட்டால் போதுமென்ற மட்டுமின்றி இன்றைய தேவை களை நிறைவேற்றி வைக்க முடியுமா என்ற நிலைமையிலே நாம் ஒவ்வொருவரும் இருக்கின்றோம். இந்த நிலையிலே நாம் செயல்படுவதற்கு சௌமையான முறை யிலே இந்தத் தொழில் துறைகளை அமைப்பதற்கு உரிய வழி வகை செய்ய வேண்டும். இவற்றைச் செம்மைப்படுத்தினிட்டு பிறகு நாம் மற்றவற்றிலே கவனத்தைச் செலுத்தலாம். அரசுடைமையாக்கிய அனைத்திலும் எவ்வளவு லாப நஷ்டம் என்று கணக்குப் பார்த்துவிட்டு, பிறகு அரசுடைமையாக்கலாம். மேலும் மேலும் நஷ்டம் வந்துகொண்டே இருக்கிறது. அரசுடைமையாக்கிக் கொண்டே போனால், இது அரசுக்கும் நல்லதல்ல, பொதுமக்களும் அவதிப் படுகிறார்கள். அடுத்த ஜனரிலே செய்திருக்கள் என்பதற்காக நாமும் போட்டி போட்டுக்கொண்டு கஷ்ட நஷ்டத்தைப் பகிர்ந்துகொண்டு செய்யும் இந்தச் செயல் பரிதாபமுள்ள செயலாக இருக்குமா என்பதை மட்டும் சிந்திக்க வேண்டும்.

தம்முடைய துறையிலே உள்ள சில குறைகளைப்பற்றிச் சொல்ல ஆசைப்படு கிறேன். நம்முடைய தமிழ் நாடு சிறு தொழில் நிறுவனம் இருக்கிறதே, எல்லோரும் அதற்கு உதவி செய்ய வேண்டுமென்று எனக்கு ஆசை. நானே ஒரு ஆர்டர் கொடுத்தேன், மூன்று மாதத்திற்கு முந்தி. மூன்று நாளில் தருகி றேன் என்று சொன்னால் நான் கேட்ட டீபாயை, ஒரு டெலிபோன் வைக்கக் கூடிய மேஜையை. ஆனால் கிட்டத்தட்ட இரண்டு மாதம் ஆயிற்று. இதுவரை வரவில்லை. நம்மைப் போன்றவர்களுக்கே இப்படி இருக்குமானால், வெளியே இருப்பவர்கள் எப்படி இருப்பார்கள்? நான் சொல்லிவிட்டேன், விலையைப் பற்றிக் கவலை இல்லை. அதை உரிய நேரத்தில் கொடுங்கள் என்று டெலிபோன் ஸ்டாண்ட் ஒன்று கேட்டு இரண்டு மாதத்திற்கு மேலே ஆயிற்று. நான் போன முறைக்குப் போன முறை வந்தபோது கேட்டேன். அப்போது, "இன்னும் அதைச் செய்யவே தொடங்கவில்லை. ஸ்டாண்டர்டு சைஸ் வேண்டுமானால் இருக்

[திரு. சா. கணேசன்] [1973 மார்ச் 24

கிறது. வேண்டுமானால் தருகிறோம்" என்று சொன்னார்கள். இப்படிச் சொன்னால், இயங்குகின்ற தொழில் துறை எப்படி வளரும்? எனக்கே தோன்றிவிடும். இதை விட்டு விட்டு வேறு யாராவது ஒரு தச்சரிடம் கொடுத்தால் 4 நாளில் அதை முடித்துக் கொடுப்பார் என்றுதான் என்னுடைய எண்ணம் போகும். (குறுக்கீடு.) தான் பேசி முடித்தவுடன் பதில் சொல்லலாம். விளக்கங்கள் சொல்லலாம்.

திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, அரசாங்கத் தொழில் நிறுவனத்திலே இப்படி ஒரு நிலைமை இருப்பதாகச் சொல்லுகிறார்கள். நான் காட்சேஜ் கம்பெனியிலே மேஜை வேண்டுமென்று கேட்டேன். அவர்கள் மூன்று மாதம் ஆகுமென்று சொல்லுகிறார்கள். அதற்கு என்ன பதிலளிப்பார்?

திரு. சா. கணேசன்: தயவு செய்து காட்சேஜ் கம்பெனிக்காரனைக் கேட்க வேண்டிய கேள்விகளை அப்பாவி கணேசனைக் கேட்டால் என்ன செய்வது? இவர் போய் வேறு எங்கோ உள்ள ஒரு கம்பெனியிடம் இரும்பு அலமாரியைச் செய்கிற ஆர்டரைக் கொடுத்திருக்கிறார். இங்கே உள்ள கம்பெனியிடம் கொடுத்திருக்கலாம். நான் இங்கே உள்ள நம்முடைய தமிழ் நாடு நிறுவனத்திடம் கொடுத்தேன். அவர்கள் சொன்னதைத்தான் சொன்னேன். நான் கேட்ட எண்ணத்திலே சொல்லவில்லை. "Fair criticism" என்று சொல்லுவார்கள். அந்த வகையிலே சொல்லுகிறேன். ஆதாயம் பெறவேண்டும் என்பதற்காகச் சொல்லுகிறேன். இந்தத் துறையிலே ஒரு சாதாரண டீபாய், டெலிபோன் ஸ்டான்ட், மூன்று மாதமாகச் செய்யவில்லையென்று சொன்னால், இதனால் ஒரு மன சடைப்பு ஏற்பட்டு, இதை விட்டு விட்டு வேறு எங்கேயாவது போகலாமென்ற எண்ணம் வந்தால், இந்தத் துறைக்கு லாபம் வராது, நஷ்டம் தான் வரும். வேறு ஒன்றும் பேசவில்லை, பேசம் பேசவில்லை. கேட்ட பணத்தைத் தருகிறோம் என்று சொல்லுகிறோம். சொன்ன பிறகும் வாரமிருக்கிறது. தனியார் துறை உயர்ந்தது, இது தாழ்ந்தது என்று சொல்லவில்லை. தனியார் துறையில் லாப நஷ்டம் நம்மைப் பாதிக்கிறது என்று பயப்படுகிறான். பொதுத் துறையிலே லாப நஷ்டத்தைப்பற்றி யாரும் கவலைப்படுவதாக இல்லை. அந்த உணர்ச்சி நமக்கு வர வேண்டும். இந்தத் துறை என்னுடையது என்று நான் கருத வேண்டும். பொதுத் துறையிலே எனக்கும் பங்கு உண்டு, லாப நஷ்டம் உண்டு, உரிமை உண்டு, கடமை உண்டு என்ற உணர்ச்சியோடு செயல்பட வேண்டும். அந்த உணர்ச்சியை வளர்க்க வேண்டும். அதற்குத் தகுந்த காரியங்களை நாம் செய்ய வேண்டுமென்றுதான் நான் இந்த அவையின் மூலமாக தமது அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

1973 மார்ச் 24] [திரு. சா. கணேசன்]

இவ்வளவிற்கும் அடிப்படைக் காரணம் சொல்வார்கள் சுலபமாக, வள்ளுவன் சொன்ன மாதிரி: பி.ப. 5-00

"விசும்பின் துளி வீழின் அல்லால் மற் றாங்கே
பசும்புல் தலை காண்பரிது"

என்பது உண்மை. நான் மறுக்கவில்லை. மழை இல்லாததுதான் இவ்வளவு கஷ்டத்திற்கும் காரணம், அனைத்திற்கும் காரணம். மழை இல்லாததினாலே தான் தண்ணீர் கிடையாது. தண்ணீர் இல்லாததினாலே தான் எலெக்ட்ரிசிடி வரவில்லை. எலெக்ட்ரிசிடி கிடைக்காததினாலே தான் சிமெண்டு முதலிய அனைத்தும் போதிய அளவிற்கு உற்பத்தி செய்ய முடியவில்லை. இந்தக் குறையை, கஷ்டத்தை, நிர்ப்பந்தத்தை உணர்கிறேன். அதே நேரத்தில் இவற்றைப் போக்காமல் வேறும் கஷ்டம் என்ற காரணத்தைச் சொல்லி, தப்பித்துக் கொள்வது சரியல்ல. என்னைப்போல விதியில் போகிறவனாக இருந்தால் சொல்லிவிட்டுப் போகலாம். ஆனால் பொறுப்பில் இருக்கிற அரசு இதை நிக்குவதற்கு முழுக்க முழுக்க முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இதிலிருந்து அரசு ஒரு படிப்பினையை எடுத்துக்கொள்ளவேண்டும். இந்த வைஸ்ட்ரோ எலெக்ட்ரிக் சிஸ்டத்தை மட்டும் மனதில் கொள்ளாமல் ஆங்காங்கே உள்ள தெர்மல் ஸ்டேஷன்களை மட்டும் எண்ணிக்கொள்ளாமல், பெரிய பெரிய ஜெனரேட்டர்களை வைத்து ஆங்காங்கே உற்பத்தி செய்வதற்கு முன்னே வேண்டுமென்று இறுதியாக மிக அழுத்தமாக அரசைக் கேட்டுக்கொண்டு, அமைகிறேன்.

*திரு. க. அறிவழகன்: மதிப்பிற்குரிய மன்றத் துணைத் தலைவரவர்களே, தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி என்பது இன்றைக்கெனம் எவ்வளவு பரவலாக்கப்பட்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக் காட்டாக பல்வேறு கழகங்கள், உருவாக்கப்பட்டு, தொழில் வளர்ச்சிக் கழகம் என்றும், தொழில் நிறுவனக் கழகம் என்றும், சிறிய தொழில்களுக்கான கழகம் என்றும், பல்வேறு தொழில்கள் செயல்படுவதற்கு ஏற்ற முறையில் நிதியுதவி செய்வதற்கான கழகம் என்றும் இப்படிப் பல்வேறு கழகங்கள் உருவாக்கப்பட்டு, இதிலே ஜனநாயக அமைப்பு முறையிலே அதிகாரங்கள் பரவலாக்கப்பட்டு, தொழில் செய்ய விரும்புபவர்கள் உடனே தொழில்களுக்கு உதவி பெறுவதற்கும் பல்வேறு வசதிகளைச் செய்திருக்கிற இந்தத் தொழில் துறையை, தொழில் துறை அமைச்சரவர்களை, நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். நம்முடைய நாட்டில் கடந்த காலத்தில் பல்வேறு திட்டங்களின் காரணமாக நல்ல வருமான வளர்ச்சி இருந்தாலும், அதனால் ஏற்பட்ட வருமான வளர்ச்சி ஏழைகளுக்குக் கிடைக்கவில்லை என்ற காரணத்தினால், ஏற்பட்டிருக்கிற வளர்ச்சி சமுதாய நீதியோடு

[திரு. க. அறிவழகன்] [1973 மார்ச் 24

கிடைக்கவேண்டும் என்ற எண்ணம் மிகவும் வற்புறுத்தப்பட்டு வருகிறது. இன்றையதினம் நாட்டிலே தொழில் வளர்ச்சியானாலும், திட்டங்களானாலும் ஏற்பட்டிருக்கிற வளர்ச்சியில் ஏறக்குறைய 40 சதவித ஏழை மக்கள் அதனுடைய பலன் எதையும் பெறவில்லை என்பதை பல்வேறு விதமான திட்டங்களைப் பற்றிய விமரிசனங்கள் எடுத்துக் கூறுகின்றன.

A study undertaken of 44 developing economics has shown that the highest percentage share in total national income goes to the highest 20 per cent group of population and the lowest share to the poorest 20 per cent group of the population in the distribution process.

என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதிலே மிகத் தாழ்ந்த ஏழை மக்களுக்கு வளர்ச்சி வருமானம் கிடைக்காத நிலைமையிலே, அதுவும் தமிழகத்தைப் பொறுத்தவரையிலே 40.4 சதவிதம் என்ற அளவில் மக்கள் வறுமையில் இருப்பவர்கள் என்று சொல்லப்படுகிற நிலைமையில், தொழில் துறையிலே மிகுந்த அக்கறை காட்டி பல்வேறு விதமான திட்டங்களைத் தந்திருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். உண்மையில் ஏழை மக்களுக்கு வருமானம் கிடைக்க வேண்டுமானால், சீன நாட்டிலே என்ன செய்தார்கள் என்பதை ஒரு உதாரணமாக 5 ஆண்டுத் திட்டம் பற்றிய வரைவிலே எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அதிலே ஏழை மக்களுடைய மிகக் கடுமையான வறுமையைப் போக்குகிற திட்டங்களை உருவாக்கியிருக்கிறார்கள் என்பது தான் அவர்கள் குறிப்பிட்டிருப்பதாகும். (per capita) (பர் கேபிடா) இன்கம், ஒவ்வொருவருக்கும் வருகிற வருமானம் எவ்வளவு, நாட்டினுடைய மொத்த வருமானம் எவ்வளவு என்பதை விட்டு, ஏழைகள் மிகக் கடுமையான வறுமையில் நெளிந்துகொண்டிருப்பவர்களைத் தூக்கி விடக்கூடிய நல்ல திட்டங்கள் மேன்மேலும் உருவாக்கப்பட வேண்டும். எனக்கு முன் பேசிய உயர்திரு சா. கணேசன் அவர்கள்போல ஜப்பான் நாட்டுத் திட்டம் என்று சொன்னால், அந்த ஜப்பான் நாட்டின் திட்டத்தில் ஒவ்வொரு குடும்பமும், அந்தத் தொழில்களை ஏற்றுச் செய்வதற்கு ஏற்ற அளவு, அது கடினமாகத் தொழிலாக இருந்தாலும், மிக எளிமையான குடும்பங்களிலே இருப்பவர்கள் செய்யக்கூடியதாக உள்ளது. கூடிகாரம் எல்லாம் இணைக்கிற தொழில். டிசான் சிஸ்டரை இணைக்கிற தொழில் போன்றவற்றைக்கண்டு, ஒவ்வொரு குடும்பமும் அந்த வேலையை பெறத் தக்க நிலைமையை உருவாக்கினால், அதுபோல நாட்டில் ஏழை எளியவர்களாக இருப்பவர்களுக்கு வேலை வாய்ப்பை நல்கத் தக்க அளவிற்குச் செய்ய முடியும். குடும்பங்களில் செய்கிற பிடித் தொழிலில் தல்கப் படுகிற வேலையினுடைய அளவு அவர்களை மேலும் வறுமையாளர்களாக

1973 மார்ச் 24] [திரு. க. அறிவழகன்]

ஆக்கிக்கொண்டிருக்கிறது. உலக மார்க்கெட்டில், இந்திய மார்க்கெட்டில் மேன்மேலும் வாங்கக்கூடிய பொருள்களை ஏழை எளிய மக்கள் குடும்பங்களிலே உற்பத்தி செய்து பிழைக்கத்தக்க பல்வேறு தொழில்களை நாம் கண்டாக வேண்டும். தம்முடைய பட்ஜெட்டிலே மாண்புமிகு அமைச்சர் தொழிற் சாலையை, தேசிய மயமாக்குகிற திட்டத்தை அறிவித்தார்கள். நான் இன்றையதினம் கேட்டுக்கொள்வேன். நாட்டில் உள்ள கனிவளங்களை, அது எந்தக் கனி வளமாக இருந்தாலும், பாக்சைடாக இருந்தாலும், மாங்கனைட்டாக இருந்தாலும், கிடைக்கிற கனி வளங்கள் அத்தனையையும் தனியார் எடுத்து அதை ஜப்பான் நாட்டிற்கோ, வேறுநாட்டிற்கோ அனுப்புகிறார்கள், அல்லது வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்கிறார்கள். அல்லது வேறு பல தொழில் களைச் செய்பவர்களுக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்கள். இதிலே இடைத் தரகர்கள் கொழுத்த லாபம் அடையாமல், கனி வளங்கள், நில வளங்களை மாநில அரசுக்கு அது சொந்தம் என்ற முறையில், நிலத்தைத் தேசிய மயமாக்குகிற முறையிலே, நிலத்திலே கிடைக்கிற கனி வளங்களை அரசுக்குச் சொந்தமாக்க வேண்டும். கனி வளத்திற்கென்று மத்திய அரசில் அமைச்சர் இருக்கிறார், கல்வித்துறைக்கு ஒரு அமைச்சர் இருக்கிறார். அப்படி மத்தியில் அமைச்சர்கள் இருந்தாலும், அதிகாரம் இருப்பதாகக் கருதப்பட்டாலும், கனி வளங்களைத் தேசிய மயமாக்குகிற ஒரு திட்டத்தை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்வேன். முக்கியமாக நாம் குடிசைத் தொழில்களைக் கவனிக்க வேண்டும். குடிசைத் தொழில் என்று சொன்னால், மகாத்மா காந்தி படிகள் சொன்ன குடிசைத் தொழிலை இன்றையதினம் காதி இயக்கத்தில் செய்கிறார்கள். அது ஓளவிற்கு வெற்றி பெற்று வருகிறது. ஆனால் குடிசைத் தொழில்கள் என்றால், ஒரு குடும்பத்திற்கு ஏற்ற வருமானம் தரத் தக்கதாக, அமையத் தக்க குடிசைத் தொழில்களை நாம் கண்டு பிடிக்கவேண்டிய நிலைமையில் இருக்கிறோம். இன்னும் சொல்வதானால் நாம் நிறுவியிருக்கிற பல்வேறு தொழில் நிறுவனங்கள், மூலப் பொருள்கள் தயாரிக்கிற தொழிலாக இருந்தாலும் சரி, அல்லது இயந்திரத்தை, மெஷினரியைத் தயாரிக்கிற தொழிலாக இருந்தாலும் சரி, வெளி நாட்டிலிருந்து மெஷினரி வரவழைக்கப்பட்டு செய்கிற தொழிலாக இருந்தாலும் சரி, அந்தத் தொழில்களிலே முழுவதும் தலையிட்டு, வெளி நாட்டிலிருந்து மெஷினரி கொண்டு வரவேண்டுமானால், அந்த மெஷினரி கொண்டு வருவதற்குரிய முழு வேலையையும் அரசு எடுத்துக்கொண்டு அதைச் செய்வதன் மூலம் தொழில்களைப் பாலனாக்க வேண்டும். உதாரணத்திற்குச் சொல்ல முடியும். மிகப் பெரும் கார் உற்பத்தி தொழிற்சாலை, பாட்டரி உற்பத்தித் தொழிற்சாலை, கார் வீல் தொழிற்சாலை சென்னை நகரத்திலே மிகப் பெரும் தொழிற்சாலைகளாக இருக்கின்றன. இதிலே பகுதி பகுதியாகத் தொழில்களைப் பிரித்து அந்தப் பகுதியிலே இருக்கிற எல்லா மக்களுக்கும் வேலை

அளிக்க வேண்டுமென்ற முறை இல்லாமல், தொழிலாளர்களை ஒருங்கிணைத்து வைத்துக்கொண்டு செய்வதன் மூலம் தான், பெருத்த லாபம் அடைய முடியும் என்று பெரும் தொழில் அதிபர்கள் கருதுகிறார்கள். அதைப் போக்குகிற முறையில் வெளிநாட்டிலிருந்து மெஷினரி வாங்குவதில் ஸ்டேட் மானுபலி நிச்சயமாக இருக்க வேண்டும். அது மாத்திரம் இருந்தால் போதாது. வெளி நாட்டிலிருந்து வரவழைக்கிற பல்வேறு மெஷினரிகளை அரசு வரவழைப்பதன் மூலம் நாம் தொழில் நிறுவனங்களுக்கு வேண்டிய மெஷினரிகளை இறக்குமதி செய்வதன் மூலம் நேரடியாக தொழில் நிறுவனங்களை நாம் கட்டுப்படுத்தவும் அதன் மூலம் தொழில்கள் வளம் பெருவதற்கும் பெரும் வாய்ப்பு ஏற்படும். இந்திய நாட்டில் பிர்லாக்களும், டாட்டாக்களும் அல்லது பெரும் தொழில் செய்கிறவர்கள் தான் மேன்மேலும் தொழில்களை வளர்க்க வாய்ப்புப் பெற்றிருக் கிறார்கள். நல்ல காலமாக மானுபலிஸ் கமிஷனுடைய குறிப்புகளின் காரணமாக மிகப் பெரும் தொழில் செய்கிற 30, 35 நிறுவனங்களைக் கட்டுப்படுத்த முடிந் ததே தவிர, தொழில்களில் இறங்கி விட்ட தொழில் அதிபர்களை மேலும் தொழில்களைத் துவக்கத் தக்க அளவிற்கு வசதி வாய்ப்புகளைப் பெற்றிருப் பதைத் தடுக்க முடியவில்லை.

*திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, அண்மையில் தொழில் அமைச்சர் பேசுகிறபோது, பெரிய தொழிற்சாலைகளை நடத்துகிறவர்களுக்குத் தான் புதிய தொழில்களை ஏற்படுத்தக்கூடிய வசக்கமும், தன்மையும் இருக்கிற காரணத்தைக் காட்டி, அதனால் அவர்களுக்குக் கொடுக்காததன் மூலம் புதிய தொழில்கள் தடைபடக் கூடாது என்று சொன்னார்கள். உறுப்பினர் அவர்கள் கருத்து அதற்கு மாறாக இருக்கிறது என்று தெரிவித்துக்கொண்டு, அதற்கு அவர் என்ன பதில் சொல்கிறார் என்று அறிய விரும்புகிறேன். பதில் உறுப்பினர் அவர்கள் சொன்னால், நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவரவர்களே, உறுப்பினர் அவர்களுக் குச் ஆத்தேகம் இருந்தால், அவரிடம் கேட்கக் கூடாது. அவர் தான் சொன்ன தைச் சொன்னார்கள். அடுத்தாற்போல சொன்னதையும் சேர்த்துச் சொல்ல வேண்டும். மானுபலியைத் தடுக்க வேண்டுமென்று சொல்லிவிட்டு, அவர்களும் வளர்க்காமல், அரசாங்கமும் வளர்க்காமல் இருப்பது தப்பு. ஆக, மானுபலி வேண்டாமென்று முடிவு கட்டி விட்டார்கள் என்றால், உடனே இவைகளை அரசாங்கம் எடுத்துக்கொள்ளும். அப்போது தான் அவர்களுக்கு இருக்கக் கூடிய ஆற்றலை வைத்து தொழில்கள் வளர முடியும். நான் இதைத் தான் தொழில் அமைச்சர்கள் மாநாட்டில் சொன்னேன்.

*திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, உறுப்பினர் கூறியது மானுபலி மூலம் தொழில்களை வளர்க்கக் கூடாது என்பது. அமைச்சரவர்கள் சொல்வதைச் சேர்த்துச் சொல்ல வேண்டும். இல்லாவிட்டால், ஏறுமாறுகத் தெரிகிறது என்ப தற்காகச் சொல்கிறேன்.

*திரு. க. அறிவழகன்: தலைவரவர்களே, மானுபலிஸ் கமிஷன் அமைத்து, பெரும் தொழில் அதிபர்களாக இருப்பவர்கள் மேலும் தொழில்களை நடத்த முடியாத நிலைமையை மத்திய அரசு உருவாக்கியிருக்கிறது. அதே நேரத்தில் அவர்கள் வேறு பல லிசென்ஸ் வாங்கி வைத்துக்கொண்டு, மற்றவர்களும் தொழில் நடத்த முடியாமல் தடுக்கக் கூடாது என்பதைத் தான் அமைச்சர வர்கள் குறிப்பிட்டார்கள் என்பதையும் சொல்லி, அது மேலும் என் கருத்துக்கு வலிவு தருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சுதந்திரா கட்சி நண்பர்கள் சொன்னபடி, நாட்டுடைமையாக்கியதாலே தொழில்கள் கெட்டு விடுகிறதென்றால், நாட்டுடைமையாக்காமல் தனியார் வைத்துக்கொண்டு நடத்தி வந்த கோவை மில்கள் மூடப்பட்டு, அதனால் தொழிலாளர்களுக்கு வேலை யில்லாத நிலைமை ஏற்பட்டபோது நம்முடைய அரசு, மத்திய அரசு, அரசுடை மையாக்கிய பிறகுதான் மேற்படி தொழிலாளர்களுக்கு வேலை வாய்ப்புத் தர வேண்டி வந்ததேயொழிய, தனியார்கள் வைத்துக்கொண்டிருந்த காலத்தில் தொழிலாளர்களுக்கு வேலை போகிறதே என்று யாரும் வருந்தி அந்தத் தொழில்களை தொடர்ந்து நடத்தி விடவில்லை. இந்த நாட்டிலே வரி அதிகமாகப் போடுகிறார்கள், அதன் காரணத்தினால்தான் தொழில் வளரவில்லை என்று குறைப்பட்டுப் பேசினார்கள்.

திரு. ஜி. சுவாமிநாதன்: தலைவரவர்களே, தனியார் தொழில் நடத்தி நஷ்டம் வந்தால், தனியாருக்கு நஷ்டம் வருகிறது. அரசாங்கம் நடத்துகிற தொழிலில் நஷ்டம் வந்தால், பொதுமக்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. தனியார் தொழில்கள் சூன்யநிலையில் செயல்படவில்லை. சுற்றுச் சார்புகள், அரசாங்கத் தால் ஏற்படுகிற உத்தரவுகள், அதனால் ஏற்படுகிற விளைவுகள் இதன் காரணமாக தனியார்களுக்கு நஷ்டம் வர வாய்ப்பு உண்டு. அரசுக்கு நஷ்டம் ஏற்படுகிறதென்றால், அது மக்களைப் பாதிக்கிறது என்பதை உறுப்பினர் அவர்கள் உணர வேண்டுமாவென்று அறிய விரும்புகிறேன்.

திரு. க. அறிவழகன்: இதைப்பற்றி ஆய்வு நடத்திய பொருளாதார அறிஞர் கோவை மில்களிலே நஷ்டம் வந்ததற்கு அப்படி ஒரு காரணத்தைச் சுட்டிக் காட்டினார். மதிப்பிற்குரிய உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் கல்வெட்டு எழுதுகிறார்கள், கறுப்புக் கணக்கு எழுதுகிறார்கள், இதையெல்லாம்

5–1 பி.ப.

[திரு. க. அறிவழகன்] [1973 மார்ச் 24

எழுதுகின்ற முறை போக வேண்டுமானால், வரி குறைய வேண்டுமென்று சொன்னார்கள். ஆனால், அதையே நான் குற்றச்சாட்டாகச் சொல்கிறேன். இப்படியெல்லாம் கணக்கு எழுதிக் காட்டி மில்களை மூடிவிட்டு அவர்களெல்லாம் மாடமாளிகைகளிலே மிக்க வசதியோடு தான் இருக்கிறார்கள். அதிலே வேலை பார்த்த தொழிலாளர்கள் தான் தொல்லைக்கு ஆளாக்கப்படுகிறார்கள். ஆகவே மில்களை நடத்திக்கொண்டிருந்த தனியார் தங்கள் சொந்த வாழ்க்கையிலே எந்த நஷ்டமும் பெருமல், வேலை பார்க்கின்ற தொழிலாளர்களுக்கு வேலை இல்லை என்று சொல்லத் தக்க நிலைமையைத் தான் உருவாக்கினார்களே தவிர, நாட்டிலுடைய சமுக நீதி, வளர்ச்சியோடு கூடிய ஒரு நீதியை நாட்டிலுள்ள எல்லோருக்கும் தர வேண்டுமென்று முயற்சித்திருப்பார்களானால், நாட்டுடமை ஆக்க வேண்டுமென்ற எண்ணம் வேகமாக எங்கும் ஏற்பட்டிருக்காது. இது ஏற்பட்டதற்கான பல்வேறு காரணங்களில் தனியார் நிறுவனங்கள் தங்களுடைய லாபத்தை அடிப்படையாகக் கருதினார்கள். நஷ்டம் வந்தாலும் தொழிலாளர்கள் தான் துன்பம் பெற வேண்டும், நாட்டு மக்கள் துன்பம் பெற வேண்டும் என்ற எண்ணத்தில் இதை .....

திரு. ஜி. சுவாமிநாதன்: தனியார் நடத்துகிற தொழில்களை லாபத்திற்காகத்தான் நடத்துகிறார்கள். நாட்டிலுள்ள மக்களுக்காக, தொழிலாளர்களுக்காக மட்டும் தொழில்களை நடத்த முடியாது. அவர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டால், அவர்களை அது பாதிக்கிறது. அதற்கு மேல் தொழிலை அவர்கள் நடத்த முடியாது. அரசாங்கமாக இருந்தால், வரிப்பணத்தைப் போட்டு நஷ்டத்தோடு நடத்த முடியும். ஆக, லாப நோக்கோடுதான் நடத்துகிறார்கள் என்றால் அது குற்றமில்லை. லாப நோக்கோடு நடத்துகிற காரணத்தினால் தான், ஜப்பான் போன்ற நாடுகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கின்றது என்பதைத்தான், தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்கள் தெரிவித்தார்கள்.

திரு. க. அறிவழகன்: நான் குற்றம் என்று சொல்கிறேன். அவர் குற்றம் இல்லை என்று சொல்கிறார். லாப நோக்கோடு நடத்துவார்கள் ....

திரு. சா. கணேசன்: நாங்கள் எங்கள் கருத்தைச் சொல்கிறோம். எங்கள் கருத்தை மறுக்க அமைச்சர்கள் இருக்கிறார்கள். இப்படி. அது சரி, தப்பு என்று சொல்வதற்காக. திருப்பித் திருப்பி ஒவ்வொரு அங்கத்தினரும் பரிமாறிக்கொண்டிருந்தால், சபையின் நேரமும், காலமும் விரயமாகும் என்பதைத் தலைவரவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

1973 மார்ச் 24]

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவரவர்களே, இதை நண்பர் திரு. சுவாமிநாதன் அவர்களுக்குச் சொல்லும்படியாக மாண்புமிகு உறுப்பினர் திரு. சா. கணேசன் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

திரு. க. அறிவழகன்: நான் அடுத்த கருத்திற்குச் செல்ல விரும்புகிறேன். தம்முடைய அரசு வேறு நல்ல திட்டங்களையெல்லாம் செய்துகொண்டிருப்பதன் மூலம் நம்முடைய நாட்டிலே பொதுவாக மக்களிடத்திலே வளர்ச்சியோடு கூடிய ஒரு பெரிய சமுக நீதியை உருவாக்கிக்கொண்டிருக்கிறது. இந்த நீதியிலே நான் அரசிடத்திலே கேட்டுக்கொள்வது மிக எளிதாக எல்லாக் குடும்பங்களும் செய்யக் கூடிய குடிசைத் தொழிற்சாலை ஒன்றினை உருவாக்கித் தர வேண்டும் என்பது. எச்.எம்.டி. ஒன்று நான் இந்தியாவிலேயே மிகச் சிறப்பான கடிகாரங்களைச் செய்யக் கூடிய தொழிற்சாலையாக இருக்கிறது. அது மைசூர் மாநிலத்திலே அமைந்திருக்கிறது. குடிசைத் தொழிற்சாலை பல்வேறு குடும்பங்களுக்குத் துணைத் தொழில்களைச் செய்யக் கூடிய அளவிற்கு நல்ல வாய்ப்புகளைத் தரக் கூடியதாகும். அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, கனி வளங்கள் அனைத்தையும் தேசியமயமாக்க வேண்டுமென்ற கருத்தினை எடுத்துச் சொல்லி, எனக்கு இந்த சந்தர்ப்பத்திலே பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன்.

* THIRU S. NARAYANASWAMY: Mr. Chairman, Sir, I am deeply beholden to you for the opportunity given to me to speak on the very interesting papers submitted by the Hon. the Minister for Industries. I have gone through them with the utmost interest. I owe to him my first job of congratulating him on giving information to Members and to the public on the various aspects of industrial growth in Tamil Nadu starting with financial institutions, large-scale industries and small-scale industries. These institutions that have been established in Tamil Nadu have been in existence for quite some time, the Industrial Investment Corporation being the oldest financial corporation at the State level, and that this has functioned very purposefully over the years. I want to congratulate the Government on piloting this institution about which few have complained so far over the years, which speaks for the care with which they have scrutinised the projects and given financial support. I also congratulate the All India institutions, which have extended to Tamil Nadu industries, a great deal of support to which you have testified in your book, in order to prove that industrial development in Tamil Nadu has been at a fairly fast pace in the past. A word about this matter. There is a great deal of misunderstanding about promoters. It did not start here.

[Thiru S. Narayanaswamy] [1973 மார்ச் 24

Pandit Jawaharlal Nehru pounced on people in Parliament saying, 'We are supporting you—you industrialists—through loans but you come and criticise us here. We are giving you all the support''. It was left to one of the Members of the Opposition to tell him that because of the way in which the capital market was systematically paralysed over the years by taxation, they could not get the needed capital from investors but only loans through the industrial and Government institutions, to the extent of the finance that they needed– if the climate was good as it was in other countries, we would not have to been on any Government institution for finance.' He will get our money from the capital market and we will be able to operate it without unnecessary dependence on Government and public revenues for supporting such industries. But as to the financial institution in this State, the record has been very good and notable. I, therefore, in the first instance with to congratulate these institutions on the purposeful way in which they have functioned and helped the industries from time to time without fear or favour. I must on this occasion, place on record, my feeling that this has been done without any prejudice being imported and on merits of various industrial projects that have come up to them. It is true that the entrepreneur is not an experienced man. It is true that it is not possible for him to ensure that the project will make all the profits as set out in the prospections. But, nevertheless, there has been a great deal of understanding in giving the support that a project deserves.

Now, Sir, I am glad that the booklet on industrial growth, starts with recognition of the tremendous population pressures in this State as elsewhere. But it is very, very important that it has been recognised in this book that our mineral resources are very limited, that our population pressure is high, that technological and engineering skills are very large and are still being exported in a big way from this State to other States. It has disturbed me more than any other single factor, that so many engineers, so many technicians, technologists and specialists who came qualified from outside had to leave this State and seek assignments elsewhere. If, for no other reason, for this alone, we have to ask this State to see that more industries are established, that more industries are established by those who have the competence to do so. I have no particular prejudice against the public sector. But I do have a very strong objection to a public

1973 மார்ச் 24] [Thiru S. Narayanaswamy]

sector company systematically incurring losses and public opinion not expressing itself freely on this subject. I have said from time to time from this platform as from my chambers and in my articles that there are three ways in which the inflation is going up. The first is the deficit financing by the Central Government. The second is the peculiar deficit financing at State levels by over-drafts with the Reserve Bank. The third is the loss of public sector enterprises which is one of the biggest sources of inflation in this country. The Hindustan Steel incurs a loss of 65 crores of rupees, some other project incurs a loss of 35 crores of rupees; the Surgical Instruments Project in Nandambakkam incurs a loss of 6 crores of rupees. All these are finally passed on to the Centre and it becomes a part of the consolidated deficit financing of the Centre. To that extent and in that manner, I think it is essential that we reduce inflation, that we see to it that these losses are prevented from time to time and that these units are run prudently. I wish that there is a review of operations of several public sector enterprises, operating in this State and owned by the Government of India. We should all see that these enterprises produce goods at low cost. There is not point in saying that tsese enterprises are in this State. If they produce electricity as Neyveli is producing, if they produce fertiliser as Neyveli is producing, if they produce surgical instruments as Nandambakkam is producing, because of the high cost, the consumer has no interest in them. If they are not sold at low prices, it is not a matter of satisfaction either to the consumer or to the tax-payer because ultimately, these losses are recouped by taxes. It is not a good thingeither. You may ask well, what have I do with this. There is something the State Government can do. The State Government can ensure that there is no intervention by labour unions to put up labour costs. Today the Central Government are ready to write off Neyveli. The wages are somewhat excessive. Let it not extend to other public sector enterprises. I want wage cost to be kept down. To cure unemployment the solution is not to put 500 people where 200 people will do the job. It is wrong to put more manpower than what is necessary, than what is economically feasible, and this is very, very important.

In the report I see an extremely interesting table, the table which shows the rate of growth in Tamil Nadu as compared to all India States. I hope and trust that in future such tables would

be omitted, because several of the States are newly formed and they are completely backward. We are industrially developed even compared to the other Southern States and it is very wrong and dangerous statistics to draw upon. There are Nagaland and other newly formed States where industrial development has not taken place and were warzones and the average of such State produces a very peculiar figure. Tamil Nadu, when all is said and done, is industrially better developed and we look forward to a going-forward position and not to a position derived from a table of averages with such States. This, I think, should be avoided.

Sir, the tertiary sector has been very nicely referred to. Every industry which employs 500 people directly benefits 2,500 people indirectly. I am not referring to the families of the employees and that will also come to 2,500, an average family being five-strong. I am not referring to that. But, 2,500 others get employment in the carriage of raw materials, the transportation of goods, etc. This is what we call the tertiary sector. It is not the secondary sector, but the tertiary sector. When I made a random sample survey with regard to the Pallipalayam Paper Mills, I found that when 1,500 people are directly employed in the Paper Mills, there are 4,000 families who are benefited by employment in the tertiary sector. This is very important. The creation of new industries in a big way becomes important because of their capacity to provide employment in the tertiary sector.

Sir, there was a reference to the Salem Steel Plant here. So far as Salem Steel Plant is concerned, I only want that we should bring in the experience of so many other public and private sector industries. We must benefit by the mistakes we have committed, for instance, in over-manning of the plant, wage-level being kept at a high level, large transportation becoming difficult and such other things. These are all factors which should be looked into for the purpose of keeping down the costs at Salem. I want our Steel Plant should be proved viable and it should produce at low cost the steel that we want and then, I hope, it will go a long way to establish Tamil Nadu's reputation as a State, which can do things with thrift and economy. This is very, very important, because what has happened in Neyveli should be a warning and an example to us.

There is a reference to mechanised brick plant here, started with a capital of Rs. 71 lakhs. I am sure my Hon. Friend the

Industries Minister will say, "It is not my doing". I know the history of the mechanised brick plant from the time it was started. It was all started in the wrong way and it was over-capitalised. It is an enterprise with a capital of Rs. 71 lakhs producing Rs. 10 lakhs worth of bricks. The ratio of capital to turn-over is 7:1 whereas it should be the reverse. You see, in any industry, normally it is very difficult to standardise it. There are industries where the ratio is 1:1; there are industries in which the turn-over is 2 and the capital is 1; and there are industries, like the one with which I am occupied, where the ratio of turnover to capital is 10:1. This distressing feature of this industry, namely, capital of Rs. 71 lakhs producing Rs. 7 lakhs worth of bricks should be borne in mind and the conditions should be improved. I am sure this will be done. If this is not done, it is going to be very difficult for us. I saw this report and I know that this is a legacy from the past, a take-over by the Government. We must improve it, because bricks are still sold at scandalously high prices in Madras. I do not think house-building is easy; it costs Rs. 60 per square foot for a good class house and about Rs. 50 for a second class house. I think it is a very high rate and something should be done to bring down the cost of cement, the cost of bricks and the cost of building labour.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதைத் தான் நானும் விளக்க முன் வந்தேன். அதையே வைத்துக் கொண்டு இந்த 'பிரமிக் இண்டஸ்டிரியே' மோசமானது என்று சொல்லி விட முடியாது. சுடும்போது 'பயரிங்' செய்யும்போது ஒன்று கெட்டு விடலாம். என்னைப் பொறுத்த அளவிற்கு அது பெரும்பாலும் . . .

THIRU G. VASANTHA PAI : The note given to us itself points out that they are firing it in common with other articles. I find from the note that the ceramic wares are also fired in common with other articles. On the other hand, this requires a higher temperature.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அப்படி 'பைர்' செய்யும்போது, ஒரு சில பொருள்கள் கெட்டிருக்குமானால், அதற்குப் பரிகாரம் காண்பதில் தவறில்லை. ஆனால் அவர்கள் சொன்ன விதத்தைப் பார்த்து நம்முடைய 'பிராமிக் இன்டஸ்டிரிசே' மோசமென்ற ஒரு முடிவுக்கு வந்து விடக்கூடாது என்று தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். நீங்கள் சொல்லுகின்ற யோசனைகளை உடனுக்குடன்—அது என்னுடைய தொழிற்சாலையில், நம்முடைய தொழிற்சாலை—குறிப்பு எழுதி அனுப்பினால், அதனுடைய பயனை அடுத்த முறை பெற முடியும்.

அடித்தாற்போல், 'டான்சி பேப்ரிக் எம்போரியம்' பற்றி எல்லோரும் பாராட்டிச் சொன்னார்கள். பாராட்டிவிட்டு, கேட்ட அளவுக்கு கிடைக்கவில்லையென்று சொல்லுகிறார்கள். அதுதான் உண்மை. நம்முடைய டான்சி தொழிற்சாலையிலே, அதுவும் 'பர்னிச்சர்' உற்பத்தி செய்கின்ற தொழிலில் எனக்கு மிகுந்த கவர்ச்சி. நானும் இதிலே 2, 3 ஆண்டுகளாகப் பெருமுயற்சி எடுத்து வருகிறேன். ஆனால் இதற்கு இருக்கிற 'டிமான்ட்'—கிராக்கி அளவுக்கு, அவர்களால் செய்து கொடுக்க முடியவில்லை. அதை நானே நேரில் பார்த்தேன். இதற்கு பரிகாரமாக ஒவ்வொரு மாவட்டத்திலும் அல்லது பெரிய நகரங்களில், இந்தப் 'பர்னிச்சர்' செய்கின்ற தொழிற்கூடத்தை விரிவாக்கலாமென்பதுதான் நம் முடைய யோசனையாக இருக்கிறது. இதை எல்லோரும் பாராட்டுகிறார்கள். நான் செல்லுகின்ற இடங்களில் பார்க்கும்போது, நம்முடைய டான்சி பர்னிச் சருக்கு இருக்கிற கிராக்கி வேறு எந்தப் பொருளுக்கும் இல்லை. அவ்வளவு கவர்ச்சிகரமாக இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அதிலே கால தாமதம் ஏற்படுகிறதென்ற குறையைத் தவிர வேறு ஒன்றுமில்லை. அப்படி வேறு தவறுகள் இருப்பதாகத் தெரியவில்லை. அரசாங்கமும், அவ்வளவையும் அங் கிருந்தே வாங்க வேண்டுமென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. வெளியே விற்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை. ஆனால், அவர்கள் அரசாங் கத்திற்கு கொடுப்பதற்கே சங்கடப்படுகிறார்கள். நான் டான்சி நிறுவ னத்தாரைப் பார்க்கும்போது, எப்படியாவது இந்த பர்னிச்சர் தொழிற் கூடத்தை இன்னும் அதிக அளவில் பெருக்க வேண்டும். தவறக்க வேண்டு மென்று வற்புறுத்திச் சொல்வேன். சில நாட்களுக்கு முன்னாலே, சொம்பக் கஷ்டப்பட்டு மதுரையிலே ஒன்றைத் தொடங்கினார்கள். இதை நடத்துகிற வர்கள் மிகுந்த ஆற்றல் உள்ளவர்களாகவும், தொழில் நாட்டம் உள்ளவர் களாகவும் இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் களெல்லாம் எந்த அளவுக்கு உரிமையோடு கிடைக்கவில்லை என்று சொன்னார் களோ, அந்த அளவுக்கு அதிலே தக்க கவனம் செலுத்தி, உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், யார் கேட்டாலும் அதிகமாகக் கொடுக்கக்கூடிய முயற்சியிலே இந்தத் தொழிற்சாலையை விரிவாக்க வேண்டுமென்ற கோரிக்கையை நான் ஏற்றுக்கொண்டு, அதைச் செய்வேன் என்ற உறுதியைத் தர ஆசைப்படு கிறேன்.

பி.ப. 6-20

அரசு சிமின்டைப்பற்றிச் சொன்னார்கள். அதிலும், எதோ ஒருசில நிகழ்ச்சிகள் அவருடைய வாழ்க்கையிலேயே ஏற்பட்டுவிட்டன என்பதுதான்

என்னுடைய வருத்தமாகும். தமிழ்நாடடைப் பொறுத்த அளவுக்கு, இந்த அரசு சிமெண்ட்டுக்கு உள்ள கோக்கி வேறு எதற்குமில்லை. அந்தத் தொழிற் சாலையில் உற்பத்தி தொடங்கியவுடன், ஒவ்வொரு மாவட்டத்திலும், ஒவ்வொரு மாநிலத்திலும் அதை விற்பதற்காக நானே தனிப்பட்ட முறையில் சோம்பலும் கஷ்டப்பட்டு முயற்சி எடுத்தேன். ஆனால் இப்போது அதற்குள்ள டிமான்ட் மிகவும் அதிகம். இப்பொழுது ஸ்டாகிஸ்ட் நியமிப்பதே கஷ்டமாக இருக்கிறது. அந்த அளவுக்கு அதிகமான டிமான்ட் இருப்பதைப் பார்த்தேன். நானே இதிலே திருப்தியடைந்து விடாமல், சிமெண்ட் தொழிற் சாலைகளை நடத்துகின்ற தனியார்களுள், கேட்டுக்கொண்டார்களை அழைத்து, அவர் களை ஒரு குழுவாகப் போட்டு, இந்தத் தொழிற்சாலையைப் போய்ப் பார்க்கச் சொல்லி, ஒரு அறிக்கையும் தர வேண்டுமென்று கேட்டேன். அவர்களும் அதைப் பார்த்து, பாராட்டி, சில ஆலோசனைகளும் கொடுத்திருக்கிறார்கள். அரசு சிமெண்ட் குவாலிடியைப் பொறுத்த அளவுக்கு நான் கொஞ்சம்கூட அந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. மாண்புமிகு உறுப்பினர் அவர் களே எடுத்துச் சொன்னதைப்போல, இடையிலே ஏதாவது ஏற்பட்டிருக் கிறதா என்பதைப் பரிசீலிக்க வேண்டும். நான் பஞ்சாப் சென்றபோது பார்த்தேன். 'ஸ்டேட்-வைட்', மாநிலம் முழுவதும் 'குவாலிடி கன்ட்ரோல்' செய்யக்கூடிய ஒரு முயற்சியை மாநில அரசின் சார்பில் எடுப்பதை அங்கே கண்டேன். அப்படிப்பட்ட முயற்சியை நம்முடைய மாநிலத்திலும் எடுத் தால், இப்படிப்பட்ட தவறுகளைத் தவிர்க்க முடியுமென்று கருதுகிறேன். வாங்கி வந்த உடனே இப்படிப்பட்ட திகழ்ச்சி ஏற்பட்டது. அதை அவர்கள் கண்ணால் பார்த்துவிட்டார்கள். எனவே, என்னுடைய யோசனை என்ன வென்றால், உடனடியாக சம்பந்தப்பட்டவர்களுக்குச் சொன்னால், அவர்கள் தவறு செய்தது யார் என்பதைக் கண்டுபிடித்துவிட முடியும். இது போன்ற கலப்படம் செய்பவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். மேலும், இது போன்ற கலப்படம் தடுக்கப்பட வேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஆனால் இது எப்போது நடந்ததென்று தெரியவில்லை. இப்போதுள்ள சிமெண்ட் பற்றாக்குறையைப் பயன்படுத்திக்கொண்டார்களா அல்லது உண்மையிலேயே 'ஸ்டாக்கிஸ்ட்'கள் செய்தார்களாவென்பதைக் காண வேண்டும். எனவே அதைப்பற்றிக் குறிப்பு அனுப்புவார்களேயானால், நிச்சயம் அது பரிசீலிக்கப்படுவதில் தடை இருக்காது. எனவே குவாலிடியைப் பற்றிச் சந்தேகப்பட வேண்டாமென்று மறுபடியும் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அடுத்து, Small car Project, Tractor Project பற்றிச் சொன்னார்கள். சில சமயங்களிலே தவறான தகவல்களை, சில பேர் தந்து

விடுவார்கள். அதை அப்படியே நம்ப வேண்டாம். உறுப்பினர் அவர்களே, 'I am told' என்று சொன்னார்கள். அதிலே எனக்கு மகிழ்ச்சி. நான் எதிர்க் கட்சியில் இருக்கும்போதும் இப்படித்தான். உள்ளே நுழைந்தவுடன், அரசாங்கத்தைப்பற்றி எதிர்த்துச் சொல்ல வேண்டுமென்றால், சில கருத்துக் களைக் கொண்டுவந்து கொடுப்பார்கள். எதிர்க்கட்சிகள் அப்படிப் பேசுவது வாடிக்கைதான். அதைத் தவறு என்று சொல்லவில்லை. ஆனால் இரண்டு தொழிற்சாலைகளைப்பற்றி எனக்கு நேரடியாகத் தெரிந்த காரணத்தாலே, அதைப்பற்றி நான் விளக்க ஆசைப்படுகிறேன். இந்தச் சிறிய கார் உற்பத்தியை எப்படியாவது தமிழகத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று ஆசைப்பட்ட வர்களுள் நானும் ஒருவன். அதுவும் திரு. வசந்த் பாய் அவர்கள் சொன்ன அந்த நபர் கார் தொழிற்சாலை லிசென்ஸ் வைத்திருக்கிறார் என்று தெரிந்த வுடன், அவர் எங்கே இருக்கிறார் என்று தேடிப் பிடித்து, அவரிடம் அதிகாரி களை அனுப்பி வைத்து, அவரை என்னுடைய வீட்டிற்கு அழைத்து வந்து, அவரிடத்தில் பல மாதங்கள் சர்ச்சை செய்து, கடைசியில் தோல்வி அடைந் தேன். ஆக நாம் இந்த 'Small car Project பற்றி ஒன்றுமே செய்யவில்லை என்று சொல்வது தவறாகும். மாருதிக்கு ஒரு லிசென்ஸ் கொடுத்தார்கள். உடனே இவருக்கும் ஒரு லிசென்ஸ் கொடுத்தார்கள். மாருதிக்கு எக்ஸ்டென் ஷன் கொடுத்தபோதெல்லாம், இவருக்கும் எக்ஸ்டென்ஷன் கொடுத்துக் கொண்டே வந்தார்கள். இதுதான் நடந்தது. இதற்குமேல் நான் உண்மை யைச் சொல்ல விரும்பவில்லை. நான் அதைப்பற்றி யெல்லாம் உள்ளே நுழைய விரும்பவில்லை. நான் ஆர்வப்பட்டது என்னவென்றால், தமிழ்நாட்டிலே சிறிய கார் உற்பத்திக்கு ஒருவருக்குக் கிடைத்துள்ள Letter of Intent அனுமதி யைப் பயன்படுத்த வேண்டுமென்பதுதான். அதுதான் என்னுடைய ஆசை. அதனால் அவரை அழைத்தேன். அவர் 4 லட்சம், 5 லட்சம் ரூபாய் செலவழித் தீர்ப்பதாகச் சொன்னார். பரவாயில்லை, இந்த அனுமதியைப் பெறுவதற்காக இந்த 5 லட்சம் ரூபாய் செலவழித்ததென்று நினைத்துக்கொள்வோம். எப்படி யாவது அதை வாங்க வேண்டுமென்பதுதான் என்னுடைய குறிக்கோளாக இருந்தது. அதைப்பற்றி ஆராய வேண்டுமென்றுதான் நிபுணர்களையெல்லாம் போட்டோம். ஆனால் கடைசியிலே, அவர்கள் என்ன முறையைச் செய்ய வேண்டுமென்று சொல்கிறார்களோ, அந்த 'Technical know-how' பயன்படாதென்று தொடர்ந்து பல நிபுணர்களும் சொல்லிவிட்டார்கள். நானும் ஒன்றை நம்பாமல், மறு நிபுணரைப் போட்டு, எப்படியாவது சாதகமான பதில் வருமென்று கருதினேன். அதிலே என்னால் வெற்றி பெற முடியவில்லை. ஆகவே தான் சிறிய கார் உற்பத்தியைப்பற்றி நாம் பேச்சளவிலே, வாயளவிலே சொன் னாலும், காரியத்திலே பார்க்கும்போது சொம்பப் பயமாக இருக்கிறது. இந்தப்

பயம் அதிகமானதற்குக் காரணம், இப்போது இந்தியாவில் விமரிசையாகப் பேசப்படும் 'மாருதி' காரில் நானும், முதலமைச்சரவர்களும் ஏறி உட்கார்ந்து பார்த்தோம். நம்முடைய இந்திய நாட்டிலே அந்த மாதிரியான ஒரு கார் இருக்குமாவென்பது சந்தேகமாக இருக்கிறது. நம்முடைய ஊரிலே ஒரு தகரத்தை நான்கு பக்கங்களிலும் வைத்து, எப்படி காராகச் செய்திருப்பார்களோ, அந்த மாதிரி இருந்தது. உள்ளே ஏறியவுடன் எங்களுக்குப் பயமாகி விட்டது. அப்படிப்பட்ட ஒரு சிறிய காரைத் தயாரித்து இருப்பதை .... (குறுக்கிடு) அதில் சொம்ப கதை சொல்கிறார்கள். நான் அதற்கெல்லாம் போக விரும்பவில்லை.

திரு. ஜி. சுவாமிநாதன்: அந்தக் காரையே பார்த்திர்களா அல்லது அந்தக் காரின் 'மாடலை'ப் பார்த்திர்களாவென்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அங்கே ஓட்டுவதற்கான காரைத்தான் நிறுத்தியிருந்தார்கள். அதிலே செல்வதற்கு எனக்கு பயமாகத்தான் இருந்தது. ஆகவேதான் ஓட்டிப் பார்க்க விரும்பவில்லை. எனவேதான் சிறிய கார் திட்டத்திலே எந்த அளவுக்கு வெற்றி பெற முடியுமென்று, அதைப் பார்த்தவுடன் சந்தேகப்பட்டேன். பின்னாலே அது வெற்றி பெறுமா என்று தெரியாது. நான் பார்த்தவரையில் எனக்குப் பயமாக இருந்தது. இந்த முயற்சி . .

* THIRU G. VASANTHA PAI: Sir, so far as this car project is concerned, as a matter of fact, I have seen the document which has been given by the department to him saying that the Government will enter into a joint sector enterprise with him, provided he gives 600 drawings and diagrams of the technical know-how with him. In pursuance of that, 600 drawings photographic copies of the technical know-how and diagrams had been given to the Government. After taking them and giving them to a person employed in a rival concern, who was heading the technical committee and after the concern had taken copies of those documents for submitting a report they had been returned to him. His car project is rejected. That, Sir, is a very wrong thing on the part of the Government, especially after promising assistance and entering into a draft agreement, and after taking his drawings and returning them after copies of them have been taken, saying that the Government do not want it. This is what has happened here, which I object to.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தவருன கருத்து ஒன்றைப் பிடித்துக் கொண்டால், தொடர்ந்து தவருன கருத்துக்களே வந்துகொண்டிருக்கும். எந்த விதமான 'சைவல்'க்கும் கொடுக்கவில்லை. அவர்கள் கார் உற்பத்தியும் செய்யவில்லை. அவர்கள் பஸ் உற்பத்தி செய்கிறார்கள். அதிலேகூட 'Technical Consultant' போட்டிருக்கிறோம். இது சம்பந்தமாக 'Technical Consultant' யார் யாரைப் போடலாமோ அவர்களைப் போடலாம். அவர் சொன்னதைத்தான் நானும் நம்பிக்கொண்டிருந்தேன். நம்பித்தான் அவருக்கு அந்த அனுமதி கொடுக்கப்பட்டது. நீங்கள் இதனுடைய தொழில் நுட்ப அறிவை மட்டும் நிரூபித்துவிட்டால், இந்த 5 லட்சத்தைப்பற்றிக் கவலையில்லை. எப்படியாவது அதைப் பயன்படுத்த வேண்டுமென்றுதான் அப்போதும் சொன்னோம், இப்போதும் சொல்கிறோம். தொழில் நுட்பத்தை நான் முடிவு கட்ட முடியாது. அது சம்பந்தப்பட்டவர்கள்தான் முடிவு கட்ட முடியும். இப்போதுகூட திரு. வசந்த பாய் அவர்களுக்குச் சொல்கிறேன். வேறு யாருக்காவது உண்மையிலேயே கார் செய்யக் கூடிய ஆற்றல் இருந்து, அவர் செய்திருப்பதை வைத்து ஒரு கார் வர முடியுமென்று, திரு. வசந்த பாய் அவர்கள் சொன்னால், என்னால் பொறுத்தவரைக்குத் தயாராக இருக்கிறேன். காரணம் நமக்குள்ள செலவு 5 லட்சம் ரூபாய்தான். அதைப்பற்றிக் கவலையில்லை. அந்தப் பணத்திற்கு செலவழிக்கக்கூடிய தொகைக்கு பயன் கிடைக்க வேண்டும். பயன் கிடைக்குமென்று அவர் சொல்வதையோ அல்லது திரு. வசந்த பாய் அவர்கள் சொல்வதையோ ஏற்றுக்கொள்ள முடியாது. ஆகவே 'Rivalry' என்று சொல்வது தவறு. Ashok Leyland கார் உற்பத்தி செய்யவில்லை. அவர்கள் Bus chassis' செய்கிறார்கள். அதிலுள்ள முதலாளிகளைப் போடவில்லை. 'Technical persons'-ஐப் போட்டோம். அவர்களுடன் இன்னும் சில பேரைச் சேர்த்துப் போட்டோம். இன்னும் வேறு யாராவது கார் உற்பத்தியைப்பற்றித் தெரிந்தவர்கள் இருப்பார்களென்று திரு. வசந்த் பாய் அவர்கள் சொல்வார்களேயானால், அவர்களையும் பரிசிலிக்கத் தயாராக இருக்கிறோம்.

* THIRU G. VASANTHA PAI: Will the Hon. Minister at least concede that the company which he mentioned is manufacturing other cars and is a rival in business, in which case, this matter should not have been referred to any of its employees or the drawings handed over to them?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திருப்பித்திருப்பி அதையே சொல்லக் கூடாது. அவர்கள் கார் செய்யவில்லை. சேலிஸ்தான் செய்கின்றார்கள் என்று இப்போதுதான் சொன்னேன். அதைக்கூட வசந்த பாய் அவர்கள் கவனிக்க வில்லை. சைவல்ரி என்று அவர் சொன்னது தவறு. கார் உற்பத்தி செய் வதிலே அவர்களைவிட நல்ல ஆலோசனை செய்கின்றவர்கள் யாராவது இருக்கின் றார்களா என்று சொல்லட்டும், நானேக்கே கமிட்டி போடுகிறேன்.

* THIRU G. VASANTHA PAI: Sir, may I tell you that the Ashok Leylands have got blocks of shares in one of the car-manufacturing concerns in this State? I repeat it that they have got. I do not want to mention the name.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இப்போது 'ஷேர்' இருக்கிறது என்று சொல்லுகின்றார்கள். முதலிலே கம்பெனி என்று சொன்னார்கள். இப்போது 'ஷேர்' இருக்கின்றது என்று சொல்லுகின்றார்கள். இப்படிச் சொல்லிக் கொண்டே இருக்கவேண்டியதுதான். ஸ்டான்டர்ட் மோட்டார் கம்பெனி எல்லோருக்கும் தெரியும். பாரின் கம்பெனி, சிஸ்டர் கன்சர்ன்ஸ் என்று இப் போது சொல்லி வருகின்றார்கள். இதுபற்றி உடனே முடிவுக்கு வந்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் பதில் சொல்லுகின்றேன். வேறு யாராவது கார் செய்யத் தெரிந்தவர்கள், கார் செய்ய முயற்சிக்கின்றவர்களைத்தான் நாம்
பி.ப 6-30 கேட்க முடியும். வியாபாரம் செய்பவர்களுக்குக் கொடுக்க முடியுமா? கார் இல்லாமல் மௌன்ட் ரோடில் வியாபாரம் செய்பவர்களுக்கு எல்லாம் கொடுக்க முடியுமா? கார் செய்வதிலே அனுபவம் பெற்றவர்களுக்குத்தான் கொடுக்க முடியும். அப்படிப்பட்டவர்களுக்குத்தான் கொடுக்க முடியுமே தவிர, திரு. வசந்த் பாய் விரும்புகின்றார் என்பதற்காக தனிப்பட்ட நபர் சொல்வதையெல் லாம் ஏற்றுகொள்ள முடியாது. இது மக்களுடைய பணம். அவர்களுக்கு இருக்கும் ஆர்வத்தை விட எனக்கும் ஆர்வம் இருக்கின்றது. நானும் அதிக ஆர்வம் கொண்டுதான் முயற்சி செய்தேன். அதற்காக டெக்னிக்கல் பீபிள்...

திரு. ஜி. வசந்த பாய்: மிஸ்டர் சேர்மன் சார், the Minister says 'மக்களுடைய பணம், மக்களுடைய பணம்'...

மாண்புமிகு திரு. செ. மாதவன்: திரும்பத் திரும்பச் சொல்வதால் எந்தப் பயனும் கிடைக்காது. சொல்வதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்று சொல்ல முடியாது. அது சொம்பத் தவறான காரியம். அதற்குப் பதிலாக வேறு.....

THIRU G. VASANTHA PAI: The Hon. Minister said that 'I am saying something which deals with ' மக்களுடைய பணம்

I am only referring to that. Then, why should the Government have given an agreement to him saying "Give us your plans" and after he surrendered the plans, the Government should say "We do not want your car"?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அங்கத்தினர் அவர்கள் நான் சொன்ன தைப் புரிந்து கொண்டார்களோ இல்லையோ, நமக்கு அது சந்தேகமாக இருக் கின்றது. நாமே ஆர்வப்பட்டுத்தான் அவர்களுக்கு 'டெக்னிக்கல் நோவெள' தன்றாக இருந்தால் அதைப் பயன்படுத்த வேண்டுமென்று எண்ணி அதைக் கேட்கின்றோம். என் கேட்கின்றோம் என்று கேட்பது சரியல்ல. அங்கத்தினர் சொல்வதைப் பார்த்தால், இதைப் பொறுத்து அவருக்கே எதிர்ப்பாகப் பேசுவது போல் தோன்றுகின்றது. அவருடைய திறமைக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்றுதான் நாம் அந்த முயற்சியைச் செய்கின்றோம். இந்தத் திறமையை யார் முடிவு செய்வது? நானும் முடிவு செய்ய முடியாது. திரு. வசந்த பாயும் முடிவு செய்ய முடியாது. அதனால்தான் சில 'டெக்னிக் கல் பீபிள்' கையில் கொடுத்தோம். அவரைப் போலவே கார்த் தொழில் வேறு யாராவது இருப்பார்கள் என்று அங்கத்தினர் அவர்கள் இப்போது சொன்னால், அதையும் பரிசீலித்துப்பார்க்கத் தயாராக இருக்கின்றோம். இதிலே எத்தனிதமான எதிர்ப்பும் ஆட்சேபனையும் இல்லை என்பதைத்தான் விளக்க ஆசைப்படுகின்றேன். அதைப் போலவே 'யாரோ ஒருவர், மதராக்டர் கொழிற்சாலை அமைக்கக் கேட்டார், கொடுக்கப்படவில்லை, நின்றுவிட்டது' என்றெல்லாம் சொல்கின்றார்கள். எங்கே நின்றுவிட்டது? யாரோ ஒருவர் சொன்னவுடன் நாம் நம்பிவிடக்கூடாது. ஒருவர் டிராக்டர் தொழிற்சாலைக்கு மனுப்போட்டார். உடனே விசாரிக்க செய்தோம். எப்போதுமே மாநில அரசைப் பொறுத்தவரைக்கும் ஒரு போஸ்டாபிஸ் போலத்தான். நமக்கு அதிகாரம் கிடையாது. இங்கேயிருந்து விசாரிக்க செய்கின்றோம். அந்த மனுப் போய்விட்டது, டெல்லிக்கு யார் அதற்கு மனுப்போட்டாரோ அவரைப் பற்றி 'இப்படியே அனுமதி வாங்கி இதிலேயே ஒரு வியாபாரம் செய்பவர்கள்' என்று அவர் மீது தவறான அறிக்கையை டெல்லி இலாகாவினர் மாநில அரசுக்கு அனுப்பினார்கள். அதை அனுப்பியதற்குப் பின்னர் அவர் எங்களிடத்திலே வந்து மறுபடியும் பெயரைச் சொல்லுங்கள் என்று சொல்லுகின்றார். இது எனக்கு நேரடியாகத் தெரிந்த விஷயம். ஆகையால்தான் உறுதியாக நான் பதில் சொல்லுகின்றேன். அவர் பல முறை என்னிடத்திலே வந்தார். அவர்களிடத்திலே நான், 'டெல்லி அரசு அனுமதி அளிக்கக்கூடிய அரசு, உங்களைப்பற்றிக் குறிப்பிட்டு ஒரு மாநில அரசுக்கு எழுதிய பிறகும், அதை மீறி நான் எழுதமுடியாது' என்று சொன்னேன். நாங்கள் அகப்பட்டுக்

கொள்வோம். அதை நாங்கள் எழுத மாட்டோம். அவர்களே அறிக்கையை மாற்றி எழுதுவதற்கு நீங்களே நேரே சொல்லி எடுப்பதுதான் நல்லது, நம்முடைய அரசு அதை மீறி எழுதாது என்று உறுதியாக அவர்களுக்குத் தெரிவித்தேன். இதிலேகூட ஏதோ மாதிரி அரசு தவறு செய்து விட்டது என்று சொல்லக்கூடாது. அதைப்பற்றி அவர்கள் யாராவது சொன்னால், அதை ஆராய வேண்டும். அமைச்சர்களிடத்திலே, அரசாங்கத்திலிடத்திலே கேட்கலாம்.

திரு. ஜி. சுவாமிநாதன்: அதை ஆராய்ந்து பார்த்தார்களா என்று அறிய விரும்புகின்றேன். குறிப்பிட்ட நபர் அந்த மாதிரி வியாபாரம் செய்யக் கூடியவர் தானா என்று ஆராய்ந்து பார்த்துத்தான் அந்த முடிவு எடுத்தார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: இதைப்பற்றியும் நான் அவர்களிடத்திலே கேட்டேன். பொய்யாகச் சொல்கின்றார்களா என்றும் கேட்டேன். அவர் சொன்ன பதில், அவர் மாட்டிக்கொள்ளாமல் 'அது பெரிய விஷயம், பெரிய தவறு ஒன்றும் அல்ல' என்பதுபோல் பேசி மழுப்பத் தொடங்கினர். ஆகவே நான் அதற்குள் போக விரும்பவில்லை. மாதில அரசைப் பொறுத்த வரையில், அதில் ஒன்றுமே செய்ய முடியாது. அதற்காக மாதில அரசை வற்புறுத்துவது சரியல்ல என்பதை மட்டும் நான் இங்கு கூறிக்கொள்ள ஆசைப்படுகின்றேன்.

இப்போது தமிழ்நாட்டைய மாதிலத்திலே சமீபத்திலே கைத்தறி நெசவாளர்கள் கஷ்டம் எற்பட்டிருக்கின்றது. எப்போதுமே இருக்கிற கஷ்டம், இப்போது அதிகமாக எற்பட்டிருக்கின்றது. காரணம் நூல் கிடைக்காததுதான். தமிழ் நாட்டைப் பொறுத்த அளவுக்கு 200க்கு மேற்பட்ட நூற்பாலைகள் இருந்தாலும், இந்த நேரத்திலே மின்சார வெட்டின் காரணமாக உற்பத்தி கால் பங்குக்கு அதில இந்திய அளவுக்கு பாதிக்கப்பட்டிருந்தாலும், தமிழ் நாட்டிலே அதிகப் பாதிப்பு எற்பட்டிருக்கின்றது. யாரோ ஒருவர் கைத்தறித் தொழிலைச் சேர்ந்தவர்கள் சொன்னதாகச் சொல்கின்றார்கள். அவர்கள் சொல்ல வேண்டாம். நமது மத்திய அமைச்சர்களே இப்படிப்பட்ட கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். அதுதான் எனக்கு வேதனையாக இருக்கின்றது. நாமே முயற்சி எடுத்தோம். நம்முடைய மாதிலத்திலே இருக்கின்ற ஆலைகளிடத்திலாவது உற்பத்தி செய்த நூலை மாதில ரீதியே வாங்கட்டும். அதிலே மத்திய அரசினுடைய ஆணைக்குட்பட்டு இங்கேயுள்ள கைத்தறியாளர்களுக்கு வினியோகிக்கட்டும். இது தான் எங்களுடைய கருத்து என்று சொன்னேம். அதைக் கூட

அவர்கள் ஏற்க மறுத்துவிட்டார்கள். நாங்கள் அந்தக் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாது என்று சொல்லிவிட்டார்கள். அடுத்த கட்டமாக அகில இந்தியாவிலே எவ்வளவு உற்பத்தி இருக்கிறதோ அல்லது அகில இந்தியாவிலே எவ்வளவு உற்பத்தி தேவையாக இருக்கிறதோ, அதைக் கழித்துவிட்டு அதை யாவது எங்களுக்குக் கொடுத்து விடுங்கள், அதையாவது செய்யுங்கள், அதை இந்த மாதிலத்திலுள்ள நூற்பாலைகள் வாங்கிக்கொள்வதற்காவது அனுமதி கொடுங்கள் என்று கேட்டோம். அதையும் மறுத்துவிட்டார்கள். மத்திய அரசிலேயுள்ள அமைச்சர் அவர்கள் பாராளுமன்றத்திலே அகில இந்தியாவிலேயே 20 சதம்தான் நூல் உற்பத்திக் குறைவு என்று சொன்னார்கள். அதையும் வைத்துக்கொண்டு 80 சதவிகிதம் எங்களுடைய தேவைக்குக் கொடுத்து விடுங்கள் என்று சொன்னேம். அதையும் அவர்கள் மறுத்துவிட்டார்கள். மத்திய அரசு கைத்தறி நெசவாளர்கள் பற்றி ஒரு திட்டவட்டமான முடிவு எடுக்காதிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட கஷ்ட காலத்தில், இருக்கின்ற கஷ்டங்களை மேலும் அதிகப்படுத்தியதுபற்றி உண்மையிலேயே நான் மிகுந்த வருத்தம் அடைந்தேன். இதைப்பற்றி அந்த அமைச்சர் அவர்களிடத்திலே நேரடியாகச் சென்று பேசினேன். இந்தப் பொறுப்புள்ள இரண்டு அமைச்சர்களிடத்திலும் நான் பேசினேன். அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள் என்று நான் கருதுகின்றேன். செயல் ரூபத்திலே என்னவாகும் என்று சொல்ல முடியாது. நம்முடைய தேவை மாதம் ஒன்றுக்கு கைத்தறியாளர்களுக்கு 20 ஆயிரம் பேல்கள். அதிலே அவர்கள் சொன்னபடி 80 சதவிகிதம் கொடுத்தாலும், நமக்குப் பெரிய உதவியாக இருக்கும். ஆனால் அவர்கள் அண்மையிலே 'பவர் லூம்ஸ்' சேர்த்து மிட்டத் தட்ட 55 ஆயிரம் பேல்ஸ் வேண்டும். அதிலே 11 ஆயிரம் சொச்சம் பேல்ஸ் கொடுத்திருக்கின்றார்கள் அப்படிக் கொடுத்த நூலும் நமக்கு எது நேவையில்லையோ அதையே அதிகமாகக் கொடுத்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க வேண்டுமென்று அந்த அமைச்சர்களிடத்திலே வாதாடினேன். நாங்கள் கேட்பதைக் கொடுக்கின்ற அதிகாரம் உங்களிடத்திலே இருக்கட்டும். இந்த 200-க்கு மேற்பட்ட ஆலைகளில் உற்பத்தி செய்கின்ற நூல் வெளியே தவறுதலாகச் சென்றுவிடாமல் இருக்க அது வெளியே போகாமல் கண்காணிக்கின்ற அதிகாரத்தை எங்களுக்குத் தாருங்கள் என்று சொல்லிவிட்டு வந்தேன். அதைத் தருவார்கள் என்று நம்புகின்றேன். கைத்தறி நெசவாளர்களுடைய நிலைமை நிச்சயமாக 2 மாதங்களுக்குத் கடுமையாக இருக்கும் என்பதை உணர முடிகிறது. அதை எப்படியாவது நிர்ப்பதற்கு பெரு முயற்சி எடுத்து வருகிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் அனைத்துக் கட்சிகளினுடைய பிரதிநிதிகள் வைத்திருக்கின்றோம். நமக்குக் கொடுக்கின்ற நூலை அவர்கள்

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 24

மூலமாக எதாவது தவறு ஏற்பட்டுவிடாமல் விளியோகிக்கின்ற முயற்சியிலும் ஓரளவு வெற்றி பெற்றிருக்கின்றோம். முழு வெற்றி பெறமுடியும் என்று நம்ப முடியவில்லை. இந்தக் கஷ்டம் தொடர்ந்து நீடிக்கும் என்றுதான் நான் கருது கின்றேன்.

திரு. சா. கிருஷ்ணசாமி நாயுடு : விசைத் தறிகளுக்கும் கைத்தறிகளுக்கும் இவ்வளவு தேவை, இவ்வளவு கிடைத்திருக்கின்றது என்று கூறினார்கள். கிடைத்திருக்கின்ற அளவில் விசைத்தறிக்கு வினியோகிப்பதைச் சற்றுக் குறைத்துக்கொண்டு, கைத்தறிகளுக்குச் சற்று அதிகமாக வினியோகிப்பதற் கான ஏற்பாடு செய்தால், அனுகூலமாக இருக்குமா என்று அரசு பரிசிலிக்குமா என்று அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : நாமே எடுத்திருக்கக்கூடிய கொள்கையின் படி "புரோ ரேட்டா மில்ஸ் பேஸிஸ்" என்ற முறையில்தான் எடுத்திருக்கின் றோம். அதில் கொஞ்சம் மாறினாலும் ஒருவருக்கொருவர், குறைவாக இருக் காரணத்தினாலே பெரிய சச்சரவு ஏற்படும். அதிலே அரசாங்கம் வேறு ஒரு கொள்கையைச் சொல்லிவிடக்கூடாது. வினியோகிக்கும்போது, அதை அனைத்துக் கட்சித் தலைவர்களும் இருந்து விளியோகிக்க வேண்டுமென்ற முடிவை எடுத்திருக்கின்றோம். இந்த முடிவை மாற்றினால், ஏற்றத்தாழ்வு இருக்கின்ற காரணத்தாலே, பலர் லூம்ஸ் உள்ளவர்கள், சிறுசிறு தொழில்கள், பாதிக்கப்படுவதற்கு வாய்ப்பு ஏற்படும். நூற்பாலைகளைப் பொறுத்த அளவுக்கு, பெருமளவுக்கு தமிழ் நாட்டிலே வெற்றியோடு நடைபெற்றாலும், இது இடைக் காலத்திலே ஏற்பட்டிருக்கின்ற தொய்வுதான், சங்கடம்தான். இதுவே நிரந் தரமாக இருக்க வேண்டிய அவசியமில்லை என்றுதான் கருதுகின்றேன். தொழில்களுக்குத் தேவையான மின்சாரம் அதிகமாக உற்பத்தி செய்ய வேண்டுமென்ற கருத்தினை எல்லோரும் வற்புறுத்தினார்கள். நம்முடைய தமிழ் நாட்டைப் பொறுத்த அளவுக்கு, இந்திய நாட்டிலே நாம் ஒரு சிறப்பான இடத்தைப் பெற்றிருக்கின்றோம். தொழில் வளர்ச்சி அதிகம் பெறுவதற்கு ஓர் அளவுகோல், இந்த மின்சாரம், தொழில் துறைகளுக்காக எவ்வளவுக்குப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைப் பொறுத்ததே ஆகும். மற்ற மாநிலங்களை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்த மின்சாரத்தை நாம் தான் அதிகமான அளவுக்கு தொழில் வளர்ச்சிக்காகப் பயன்படுத்தியிருக்கின்றோம் என்பதை உணர்ந்திருக்கின்றோம். அந்த அளவுக்கு மின் உற்பத்தி வளர வேண்டுமென்ற முயற்சியிலே ஈடுபட்டுக்கொண்டிருக்கின்றோம். நெய்வேலி நிலக் கல் பிராஜெக்டைத் தவிர, பெருமளவுக்கு மின்சாரம் உற்பத்தி செய்கின்ற அத்தனை மின்சாரத் திட்டங்களையும் நாம் நிறைவேற்றிவிட்டோம். நெய்வேலி

1973 மார்ச் 24] [திரு. செ. மாதவன்]

நிலக்கல் எப்படியாவது முடிய வேண்டுமென்றுதான் எங்களுக்கு முன்னாலே பதவியிலேயிருந்த காங்கிரஸ் கட்சியினுடைய அமைச்சர் அவர்களும், அதற் குப் பின்னர் வந்த அமைச்சர்களும் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின் றோம். அதிலே தமிழ் நாடு அரசைப் பொறுத்த வரையிலும், கருத்து வேறு பாடே இருக்க முடியாது. மத்திய அரசோடு, மைசூர் அரசோடு எந்த அளவுக்கு வெற்றிகரமாக முடிகிறதோ, அதைப் பொறுத்துத்தான் இத்தத் திட்டம் வரும். இரண்டு மாநிலங்களுக்கும் அதனால் பெருத்த பலன் இருக்கும் என்பதை நாங்கள் மைசூர் மாநில அமைச்சர்களைச் சந்திக்கும் போதெல்லாம் வற்புறுத்தி வருகிறோம். இந்த மாநிலங்களின் சார்பிலே நடக்கின்ற "சதர்ன் ஸோனல் கவுன்சில்' கூட்டத்திலே இந்தக் கருத்தை நாங்கள் அடிக்கடி வலி யுறுத்தி வருகின்றோம்.

மிக விரைவில் மைசூர் மாநில அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்போடு இந்த ஓகனேகல் பிராஜெக்ட் எந்த இடத்தில் வந்தாலும் சரி மைசூர் மாநில எல்லைக்குள் வந்தாலும் சரி, நம் மாநிலத்து எல்லைக்குள் வந்தாலும் சரி, இரண்டு மாநிலங்களுக்கும் பயன்படக்கூடிய முறையில் இரண்டு மாநில அரசுகளும் சேர்ந்து இந்தத் திட்டத்தை உருவாக்குமானால், பெரும் பயன் கிடைக்குமென்ற கொள்கையை வலியுறுத்தி வந்திருக்கிறோம் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைவிட தமிழ் நாட்டைப் பொறுத்த வரையில், எதிர்காலத்தில் நீர் மின்சாரத்தை நம்பியிராமல் அனல் மின்சாரம், அணு மின்சாரம் இவற்றை எவ்வளவு பயன்படுத்துகிறோமோ அதைப் பொறுத்துத்தான் தமிழ் நாட்டில் எதிர்காலத் தொழில் வளர்ச்சி இருக்க முடியும். இந்தக் கருத்தையும் நாம் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக் கிறோம். சில நாட்களுக்கு முன் நான் சென்றிருந்தபோது, பல்வேறு அமைச் சர்களைப் பார்த்தபோது, மின்சார அமைச்சரையும் நேராகப் பார்த்து வாதம் செய்து, ஏற்கெனவே கொடுக்கப்பட்டிருக்கிற தாத்துக்குடி அனல் மின்சாரத் திட்டத்திற்கும் எண்ணூர் எக்ஸ்பான்ஷன் புரோஜிராமுக்கும் உடனடியாக வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி வந்திருக்கிறோம். அவர்களும் மிகுந்த ஆர்வம் காட்டினார்கள். அது போலவே நடந்துவருகிற அணு மின்சாரத் திட்டங்கள் இன்னும் கொஞ்சம் விரைவாக நடத்தி முடிக்கப் படுமானால், அதிக அளவில் மின்சாரம் கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று அவர்களிடம் நம்பிக்கை தெரிவித்து வந்திருக்கிறோம். பி.ப. 6-30

தேசியமயமாக்கும் கொள்கையைப்பற்றிச் சொன்னார்கள். இது கொள் கைப் பிரச்சினை. நான் அதற்குள்ளே செல்ல விரும்பவில்லை. ஒவ்வொரு கட்சி யும் அவரவர்களுடைய கொள்கை அடிப்படையில் கருத்துக்களைச் சொல்லு

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 24

வார்கள். எங்கள் கட்சிக் கொள்கை எல்லாத் தொழில்களையும் அரசாங்கமே நடத்த வேண்டும் என்றே அல்லது எல்லாத் தொழில்களையும் தனியார் துறை நடத்த வேண்டும் என்றே கருதவில்லை. எந்தெந்த தொழில் பொது மக்களுடைய நன்மைக்காக, நாட்டின் நன்மைக்காக அரசுப் பொறுப்பில் நடத்த வேண்டுமென்று முடிவெடுக்கிறார்களோ, அந்தத் தொழில்களை அரசுப் பொறுப்பில் நடத்த வேண்டுமென்பதில் நாங்கள் மிகுந்த ஆர்வம் கொண்டிருக் கிறோம். இந்தத் தொழில்களை நடத்தும்பொழுது, அந்தத் தொழில்களில் உற் பத்தி செய்கிற பொருள்கள் மூலம் கிடைக்கிற லாபம் தனி நபருக்கு அதிகம் கிடைக்கிறதா, பரவலாக மக்கள் சமுதாயத்திற்குக் கிடைக்கும் வாய்ப்பு இருக் கிறதா என்று பார்த்து உற்பத்தி செய்யும் தொழில்கள் மூலப் பொருள்கள் பல தொழில்களுக்குப் பயன்படுகிற முறையில் அதன் பொறுப்பு அரசுப் பொறுப்பில் இருந்தால், பல்வேறு தொழிற்சாலைகளுக்கு அதனுடைய பயன் கிடைக்கும் என்று பல்வேறு காரணங்களைக் கொண்டு இந்த முடிவு எடுத்திருக்கிறோம். இதை அரசு தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கிறது. இந்த நாட்டுடைமை யாக்கும் கொள்கைபற்றி நாங்கள் எப்படியோ மாநில அரசு தன்னிச்சையாக முடிவெடுக்கவேண்டுமென்று ஆசைப்பட்டதில்லை. அகில இந்திய ரீதியில் நாட் டிலுள்ள மத்திய அரசு இதுபற்றித் திட்டமான முடிவு செய்து, இன்னின்ன தொழில்கள் அரசுக்குச் சொந்தமான துறையில், பொதுத் துறையில் இருக்க வேண்டும், இன்னின்ன தொழில்கள் கூட்டுத் துறையில் இருக்க வேண்டும், இன்னின்ன தொழில்கள் கூட்டுறவுத் துறையில் இருக்கலாம், சில அளவுக்கு உட்பட்ட தொழில்கள் தனியார் துறையில் இருக்க வேண்டும் என்று முடிவு எடுப்பார்களேயானால், நாம் மட்டும் முடிவெடுத்தால் நம் மாநிலத்துக்கு ஆபத்து ஏற்பட்டுவிடும். நம் மாநிலத்துத் தொழில்கள் பாதிக்கப்படாமலிருக் கும்படி முடிவெடுக்க வேண்டுமென்று அண்மையில் தொழில் அமைச்சர்கள் மகாநாட்டில் நம் அரசுச் சார்பில் வற்புறுத்தப்பட்டது. அதில் நாம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கையிருக்கிறது. அண்மையில் தொழில் கொள்கையில் ஒரு மாற்றம் வந்தது. அது அவ்வளவு தெளிவாக இருப்பதாகக் கருதவில்லை. இன்னும் அதிகத் தெளிவாக பொருளாதாரத் துறையில், எந்தத் துறையில் எந்தத் தொழில் இருக்க வேண்டுமென்று அறுதியிட்டு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்பதுதான் நம்முடைய வேண்டுகோளாகும்.

அலுமினியத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், அரசின் கொள்கை அது தனியார் துறையில் இருக்கக்கூடாது என்பது. தனியாருக்கு எந்தவித மான உரிமையும் அந்தத் தொழிற்சாலையில் இருக்கக்கூடாது. இந்த அலுமினியம் மூலப்பொருள் நாட்டுக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமென்று திட்டவட்ட மாக ஒரு கொள்கை முடிவை எடுத்திருக்கிறோம். தற்போது மத்திய சர்க்கா

1973 மார்ச் 24] [திரு. செ. மாதவன்]

ருக்குத் தெரிவித்திருக்கிறோம். அதை வைத்து எல்லாத் தொழிற்சாலைகளிலும் இப்படிப்பட்ட ஒரு நிலைமை ஏற்பட்டுவிடுமோ என்று ஒரு சந்தேகம் ஏற்பட்டு விடக் கூடாது, இதனால் தவறான 'இம்பிரஷன்' ஏற்படக்கூடாது என்ற கவலை யைத்தான் தெரிவித்தார்கள். அப்படிப்பட்ட கவலை எங்களுக்கும் உண்டு. இந்தக் கொள்கையின் அடிப்படையில் ஏற்பட்ட முடிவை வைத்து, இதை எல்லாத் தொழில்களுக்கும் கொண்டு செல்லுவோம் என்று யாரும் கருத வேண்டாம். எந்தத் தொழிலுக்கும் கொண்டுவரமாட்டோம் என்றும் நினைக்கவேண்டாம். அகில இந்திய அளவில் தேசியமயக் கொள்கை விரைவிலே உருவாக்கப்படும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்திருக்கிறோம். இதில் சம்பந்தப்பட்ட வெளி நாட்டுக்காரர்கள் பணம்பற்றிச் சொன்னார்கள். இதை வைத்து எல்லாத் தொழில்களையும் பற்றி முடிவு கட்டவேண்டாம். அந்த வெளிநாட்டுக்காரர்கள் நடத்தும் வேறு சில தொழில்கள் இருக்கின்றன. அவைகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டாமென்று சொல்லியிருக்கிறேன். இந்தக் கொள்கையைப் பொறுத்த வரையில், வேறு அதிகமாக விளக்கம் கூறுவதற்கில்லை என்று தெரி வித்துக்கொள்ளுகிறேன். மத்திய சர்க்கார் பல்வேறு கருத்துக்களைச் சொல்லு கிறது. ஒரே பத்திரிகையில் ஒரு பக்கத்தில் மாநில அரசு எதும் கருத்துத் தெரிவிக்கவில்லையென்று சொல்லுகிறார்கள். இன்னொரு பக்கத்தில் தொழில் அமைச்சர் எங்களோடு வாதிட்டார், இன்ன கருத்துக்களைச் சொன்னார் என்று சொல்லுகிறார்கள். இந்த இரண்டு செய்திகளும் வருகின்றன. எந்தச் செய்தி உண்மை என்று உணர்ந்துகொள்ள வேண்டும். மத்திய சர்க்கார் அமைச்சர்கள் என்னைப் பொறுத்த அளவில், இன்று காலையில் சட்டசபையில் கூடச் சொன் னேன் இப்படி நாட்டு மக்களுக்கு தேவையான ஒரு கொள்கை முடிவு எடுத்து, மாநில அரசோடு பேசும்பொழுது, அதில் தனியாருக்குச் சாதகமான கருத்துக் கள் வெளிவரக்கூடிய சூழ்நிலையை உருவாக்குவது சோம்ப வருத்தத்தைத் தரு கிறது. அப்படிப்பட்ட கருத்துக்கள் டில்லியிலிருந்து வெளிவராமலிருக்கு மானால், நாம் உண்மையிலேயே மகிழ்ச்சி அடைந்திருப்போம். என்னைப் பொறுத்த வரையில், இதிலுள்ள பல சிக்கல்கள்பற்றி இது சம்பந்தப்பட்ட அமைச்சர்களிடம் பேசி, அதற்குப் பின்னால் பிரதமரிடம் மிகத் தெளிவாக தமிழ்நாட்டில் என்ன கருதுகிறார்கள், பல்வேறு அரசியல் கட்சிகள் என்ன கருத்தைச் சொல்லுகிறார்கள், அரசாங்கத்தினுடைய கொள்கை என்ன, என்பதையெல்லாம் பிரதமரிடத்தில் எடுத்துச் சொல்லி தனிப்பட்ட தொழிற் சாலைகளின் புள்ளிவிவரத்தையும் கொடுத்திருக்கிறேன். மிகுந்த அனுதாபத் தோடு கவனித்துக்கொண்டிருந்தார்கள். இந்தத் தொழிற்சாலையைப் பொறுத்த வரையில், மாநில அரசின் கொள்கை மிகத் தெளிவாக விளக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த சமயத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

[திரு. செ. மாதவன்] [1973 மார்ச் 24

நம்மூடைய தொழில் நிறுவனங்களுக்குத் தேவைப்படுகிற ஒரு தொழிற் சாலையைப்பற்றி 'மெக்கனைஸ்டு பிளான்ட்' பற்றிச் சொன்னார்கள். திரு. சித்ரா நாராயணசாமி அவர்கள் சொன்னது சரிதான் என்று கருதுகிறேன். அதற்கு மூலக் காரணம், இதற்குப் போடப்பட்ட முதல், அதிலிருந்து எவ்வளவு உற்பத்தி யாகுமோ அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ளாமல் போடப்பட்டிருப்பது அது மட்டுமல்ல. உற்பத்தி எவ்வளவு செங்கல் எண்ணிக்கை வருமோ அவர்கள் நினைத்ததற்கு கொஞ்சம்கூட சம்பந்தம் இல்லாமல் உற்பத்தி கிடைக்கிறது. அந்த உற்பத்தி தக்க அளவுக்கு அதிகப்படாமல் இருக்குமானால், நிச்சயம் போட்ட முதலுக்கு லாபம் வரும் என்று என்னால் நம்ப முடியவில்லை. புதி தாக ஒரு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த அனுமதியை நிறுத்தி விடலாம் என்று முயற்சித்தேன். அந்த அனுமதியின் பேரில் அதற்குத் தேவை யான 'மெஷினரிகளும்' வாங்கி வைத்துவிட்டார்கள். ஆகவே அதையும் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே போட்ட முதலீப்பற்றிக் கவலைப்படாமல் இப்போதுள்ள உற்பத்திச் செலவு அதிகமாக்கப்படாமல் சரிக்கட்டவேண்டு மென்ற முயற்சியில் ஈடுபட்டிருக்கிறோம். செங்கல் தொழிற்சாலை என்ன செய் தால் வளர்ச்சி அடையுமோ அதற்கான முயற்சிகளை எடுத்து வருகிறோம். நம் மூடைய தமிழ்நாட்டில் இன்னும் மத்திய சர்க்கார் தொழிற்சாலைகள் பெருகிட வேண்டும், மத்திய சர்க்கார் நிதி நிறுவனங்கள் இன்னும் அதிகமான அளவுக் குப் பணம் தந்திட வேண்டும். தேசிய வங்கிகள் அந்த முயற்சியில் ஈடுபட வேண்டும். நம்மூடைய தொழில்களுக்குத் தடையாக இருப்பவை இரண்டு. ஒன்று மூலப் பொருள், இன்னொன்று வெளிநாட்டுச் செலாவணி. இந்த இரண் டையும் கொடுக்கும் பொறுப்பு மத்திய சர்க்காரிடம் இருக்கிறது. இந்தப் பொறுப்பை மிக அதிகமான அளவில் அவர்கள் நிறைவேற்ற வேண்டுமென்று நாங்கள் தொடர்ந்த வலியுறுத்துகிறோம். அதற்கு அடுத்த கட்டமாக தொழில் துவங்குவதற்குத் தேவையான தொழில் நுட்ப அறிவு எவ்வளவு தேவையோ இதைப் பெற்றுத் தருவதில் ஒரு நிலையான கொள்கையை உருவாக்க வேண்டுமென்று வற்புறுத்தி வருகிறோம். உதாரணத்திற்குச் சொல்லுவேன். நமக்கு டயர் தொழிற்சாலைக்கு அனுமதி கொடுத்து சொம்ப நாளாகிவிட்டது. இரண்டு மூன்று நாட்களுக்கு முன்புதான் அந்தத் தொழிலைத் துவக்க தொழில் நுட்ப அறிவு ஒப்பந்தம் செய்யும் சூழ்நிலை ஏற்பட்டது. இதை மத்திய அமைச்சர்களிடம் மிகவும் வற்புறுத்தியிருக்கிறோம். தொழில் நுட்ப அறிவுக்கு ஒரு பொதுவான கொள்கை எடுங்கள். பல நாடுகள் வாக்கூடாது என்று கொள்கை வைத்திருந்தாலும், எங்களுக்கு அப் சேபணையில்லை. உலகத்தில் எந்தத் துறையில் எந்த நாட்டில் தொழில் வளர்ந் திருக்கிறதோ, அந்த நாட்டுத் தொழில் நுட்ப அறிவை வாங்கிக்கொள்

1973 மார்ச் 24] [திரு. செ. மாதவன்]

ளுங்கள், வளர்த்துக்கொள்ளுங்கள், அதற்கென்று ஒரு ஏற்பாடு செய்யுங்கள், அந்தத் தொழில் நுட்ப அறிவை எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் கொடுங் கள், இது தான் ஐப்பானில் நடைபெறுகிறது, இதைச் செய்யுங்கள் என்று சொல்லுகிறோம். அவர்களும் அதில் அதிக கவனம் செலுத்துவார்கள் என்ற நம்பிக்கையிருக்கிறது. இந்த வாய்ப்பு வசதிகள் கிடைக்குமானால், நிச்சய மாக தமிழ் நாட்டில் தொழில் வளர்ச்சி மிக அதிகமான அளவில் ஏற்படுத்த முடியும் என்று நம்புகிறேன். தொழில் துறையில் ஈடுபடுத்தப்பட்ட முதலீடு 1967 வரை 78¾ லட்சம் ரூபாய். இந்த 4, 5 ஆண்டுகளில் 1,560 லட்சம் ரூபாய். அதிகமான அளவுக்கு முதலீடு செய்து தொழிலை வளர்க்க வேண்டும் என்ற நம்முடைய கொள்கை நிறைவேற்றப்பட்டு வருகிறது. அதைப் போல சிறிய தொழில்களைப் பொறுத்த வரையில், 1966-ல் ரூபாய் 10,431, 1972-ல் ரூ. 28,990. சிறிய தொழில்களுக்கு அதிக வாய்ப்புக் கொடுப்பதற்கு நாங்கள் நல்ல முயற்சிகள் எடுத்து வருகிறோம். நல்ல கருத்துக்களையெல்லாம் சொன்ன அங்கத்தினர்களுக்கு நன்றி கூறி, ஒரு சில தவறு எங்காவது ஏற்பட்டால், அதை நிச்சயமாகத் திர்த்து, அதற்கு என்ன காரணம் என்று ஆராய்ந்து, அந்தக் காரணத்தை சம்பந்தப்பட்ட இலாகாவினர் இனிமேல் அப்படிப்பட்ட தவறுகள் நடைபெறாமல் உற்பத்தியைப் பெருக்குகிறோம் என்ற உறுதியை மான்புமிகு அங்கத்தினர்களுக்குத் தருவார்கள் என்ற உறுதியைக் கூறி, நன்றி கூறி முடித்துக்கொள்ளுகிறேன்.

மாண்புமிகு சட்ட மன்றத் தலைவர் : இத்துடன் இன்றைய நிகழ்ச்சிகள் முடிவுற்றன. மன்றம் மீண்டும் நாளை மாலை 4 மணிக்குக் கூடும்.

பின்னர், சட்ட மன்றம் ஒத்திவைக்கப்பட்டது.

பி.ப.
6-50

மன்றத்தின்முன் வைக்கப்பட்ட ஏடுகள்.

A. Statutory Rules and Orders

Nil.

B. Reports, Notifications and Other Papers

104. Review on the Tamil Nadu Police, 1972–73. (English and Tamil).

105. Answers to Unstarred Questions Nos. 32 to 38.

[1973 மார்ச் 24

இணைப்பு I

[624 ஆம் பக்கத்தில் 246 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினுவின் விடையைக் காண்க.]

பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புவரை, மாணவர்களிடமிருந்து 1959-60 ஆம் ஆண்டிலிருந்து கட்டணம் வசூலித்தல் நிறுத்தப்பட்டவுடன், அவ்வாறு கட்டணம் வசூலிக்காத ஆரம்பப் பள்ளிகளாக மாறிய பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிக்கும் பள்ளிகளைப் பொருத்தமட்டில், அரசால், அவ்வாசிரியர்கள் அங்கிகரிக்கப்பட்ட ஊதிய விதத்தைவிட அதிகமான விதத்தில் ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிக்கும் பள்ளிகளைப் பொருத்தமட்டில், அரசால், அவ்வாசிரியர்கள் அப்பொழுது உள்ளபடி பெறும் ஊதியமோ அல்லது அரசு ஊழியத்தில் இருந்தால் என்ன ஊதியம் கிடைக்குமோ அவ்விரண்டில் குறைவாக உள்ள ஊதியத் தொகையே ஊதியமாக நிர்ணயம் செய்யுமாறும், அவ்வாறு செய்வதற்கு, ஆசிரியர்களின் மொத்த ஊழிய காலத்தையும், அரசு ஊழிய காலமாகவே கருதி, அரசு சம்பள விதத்தில் தக்க நிலையில் அவர்களுடைய ஊதியத்தை நிர்ணயம் செய்வதற்கும் மாவட்டக் கல்வி அலுவலர்களுக்கு அனுமதி வழங்கியது. அதன்பின், அரசு ஊதிய விதத்தில் கணக்கிடப்பட்ட சம்பளத்தைவிட ஒரு ஆசிரியர் ஊதியம் குறைவாக பெற்று வந்திருந்தால், அவ்வாசிரியருக்கு அவர் 1959 ஆம் ஆண்டு மே மாதம் என்ன சம்பளம் பெற்றாரோ அதனையே 1—6—1959 முதல் கொடுக்கலாமென்றும் ஆணையிடப்பட்டது. மேற்கூறிய ஆணை, சூன் 1959 முதல் ஆசிரியர்கள் ஊதியம் பெறுவதற்கு அவகியுறுவதைத் தவிர்க்கும் பொருட்டு இடப்பட்டது.

2. பள்ளிகளில் 6 முதல் 8 வகுப்புவரை கட்டணம் வசூலித்தலை நிறுத்திய போது, ஆசிரியர்களுக்கு அவர்களுடைய பணிப் பதிவேட்டுப் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ள விதத்தின்படி ஊதியம் வழங்குமாறு எவ்விதமான ஆணைகளும் வெளியிடப்படவில்லை. இருந்தபோதிலும், பின்னர், பள்ளிகளில் கட்டணம் வசூலித்தல் நிறுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு கீழ்க்கண்ட முறைகளின்படி ஊதியம் நிர்ணயம் செய்யலாமென ஆணையிடப்பட்டது :—

(1) ஆசிரியர்களால் உள்ளபடி பெறப்படும் ஊதியம், அரசால் நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் விதத்திற்குச் சரியாக இருந்தால் அச்சம்பளத்தையே வழங்கலாம் ;

(2) ஆசிரியர் உள்ளபடி வாங்கும் சம்பளம், அனுமதிக்கப்படக்கூடிய சம்பளத்தைவிட கூடுதலாக இருந்தால் அவருக்கு அவர் வாங்கும் சம்பளமோ, அல்லது அரசு ஊழியத்தில் இருந்திருந்தால் அரசின் ஊதிய விதத்தில் தக்க

1973 மார்ச் 24]

நிலையில் என்ன சம்பளம் பெற்றிருப்பாரோ இவ்விரண்டில் எது குறைவானதோ அதனை சம்பளமாக நிர்ணயம் செய்யலாம் ;

(3) ஆசிரியர் உள்ளபடி பெறும் சம்பளம், அரசு ஊதிய விதத்தில் நிர்ணயம் செய்யப்பட்ட தொகையைவிட கூடுதலாக இருந்தால் அவர் உள்ளபடி பெறும் சம்பளம் அல்லது அவருடைய பதவிக்கான சம்பள விதத்தில் உச்ச கட்டம் ஆகியவற்றில் எது குறைவோ அதனைக் கொடுக்கலாம் ;

(4) இளநிலை ஆசிரியர் பணியிடத்தில் பணிபுரிந்துகொண்டு இடைநிலை ஆசிரியர் சம்பளம் பெறும், ஊதியப் பாதுகாப்பு அளிக்கப்பட்ட ஆசிரியர்களுக்கு இடைநிலை ஆசிரியர் சம்பள விதத்தில் உச்சகட்ட சம்பளத்தையோ அல்லது அவர்கள் உள்ளபடி பெறும் சம்பளமோ இவ்விரண்டில் எது குறைவோ அதனைச் கொடுக்கலாம்.

இணைப்பு II

[624-ஆம் பக்கத்தில் 247-ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக்காண்க.]

Name of the Engineering College.	Civil. Number appeared.			Number passed in I Class.			Number passed in II Class.		
	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)	(8)	(9)	(10)
1. College of Engineering, Guindy	116	69	54	20	9	11	14	27	21
2. Government College of Technology, Coimbatore.	26	16	21	16	2	5	..	3	3
3. Government College of Engineering, Salem.	.	*	8	..	*	6	..	*	2
4. A. C. College of Engineering and Technology Karaikudi.	49	34	24	13	9	11	17	14	11
5. P. S. G. College of Technology, Coimbatore.	24	14	13	9	7	5	7	4	4
6. Coimbatore Institute of Technology, Coimbatore.	32	35	18	16	5	11	7	4	8
7. Thiagarajar College of Engineering, Madurai.	58	65	46	12	9	8	14	15	16
8. Regional Engineering College, Tiruchirappalli.	23	27	12	16	2	4	..	1	8

* Note.—The Government College of Engineering, Salem, was started during the year 1966-67 only and hence there were no candidates for appearing the final year B.E. Degree Examination during the year 1968-69 and 1969-70.

Name of the Engineering College.	Mechanical. Number appeared.			Number passed in I Class.			Number passed in II Class.		
	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.
	(11)	(12)	(13)	(14)	(15)	(16)	(17)	(18)	(19)
1. College of Engineering, Guindy	196	235	223	54	82	72	67	93	81
2. Government College of Technology, Coimbatore.	69	82	112	41	42	65	7	5	7
3. Government College of Engineering, Salem.	..	*	40	.	.	26	...	*	3
4. A. C. College of Engineering and Technology, Karaikudi.	73	76	74	39	47	45	25	26	19
5. P. S. G. College of Technology, Coimbatore.	124	156	71	55	74	48	42	44	20
6. Coimbatore Institute of Technology, Coimbatore.	71	78	88	40	29	58	1	21	20
7. Thiagarajar College of Engineering, Madurai.	159	179	142	34	43	41	51	51	47
8. Regional Engineering College, Tiruchirappalli.	48	87	100	40	61	93	..	2	7

* Note.—The Government College of Engineering, Salem, was started during the year 1966-67 only and hence there were no candidates for appearing the final year B.E. Degree Examination during the year 1968-69 and 1969-70.

ELECTRICAL.

Name of the Engineering College.	Number appeared.			Number passed in I Class.			Number passed in II Class.		
	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.
	(20)	(21)	(22)	(23)	(24)	(25)	(26)	(27)	(28)
1 College of Engineering, Guindy ..	167	182	187	50	28	36	49	65	72
2 Government College of Technology, Coimbatore.	40	61	71	23	25	32	2	4	6
3 Government College of Engineering, Salem.	..	*	30	..	*	14	..	*	2
4 A.C. College of Engineering and Technology, Karaikudi.	60	65	59	28	32	35	15	25	19
5 P.S.G. College of Technology, Coimbatore.	96	129	70	28	47	50	31	42	16
6 Coimbatore Institute of Technology, Coimbatore.	30	55	41	14	25	22	2	5	10
7 Thiagarajar College of Engineering, Madurai.	145	177	106	40	45	25	41	51	40
8 Regional Engineering College, Tiruchirappalli.	52	74	62	23	35	50	2	2	3

ELECTRONICS.

Name of the Engineerig College.	Number appeared.			Number passed in I Class.			Number passed in II Class.		
	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.
	(29)	(30)	(31)	(32)	(33)	(34)	(35)	(36)	(37)
1 College of Engineering, Guindy ..	99	81	101	27	39	59	34	25	36
2 Government College of Technology, Coimbatore.	..	..	..	..	..	..	..	..	..
3 Government College of Engineering, Salem.	..	..	..	..	..	..	..	..	..
4 A.C. College of Engineering and Technology, Karaikudi.	..	..	..	..	..	..	..	..	..
5 P.S.G. College of Technology, Coimbatore.	..	..	29	..	..	27	..	..	2
6 Coimbatore Institute of Technology, Coimbatore.	..	..	19	..	..	16	..	..	2
7 Thiagarajar College of Engineering, Madurai.	..	..	..	..	..	..	..	..	..
8 Regional Engineering College, Tiruchirappalli.	..	..	30	..	..	30	..	..	..

MINING.

Name of the Engineering College.	Number appeared.			Number passed in I Class.			Number passed in II Class.		
	1968–69.	1969–70.	1970–71.	1968–69.	1969–70.	1970–71.	1968–69.	1969–70.	1970–71.
	(38)	(39)	(40)	(41)	(42)	(43)	(44)	(45)	(46)
1 College of Engineering, Guindy ..	12	6	..	3	..	..	1	5	..
2 Government College of Technology Coimbatore.	..	..	..	..	..	..	..	..	..
3 Government College of Engineering Salem.	..	..	..	..	..	..	..	..	..
4 A. C. College of Engineering and Technology, Karaikudi.	..	..	..	..	..	..	..	..	..
5 P. S. G. College of Technology, Coimbatore.	..	..	..	..	..	..	..	..	..
6 Coimbatore Institute of Technology Coimbatore.	..	..	..	..	..	..	..	..	..
7 Thiagarajar College of Engineering, Madurai.	..	..	..	..	..	..	..	..	..
8 Regional Engineering College, Tiruchirappalli,	..	..	..	..	..	..	..	..	..

* NOTE.—The Government College of Engineering, Salem, was started during the year 1966-67 only and hence there were no candidates for appearing the final year B.E. Degree Examination during the year 1968-69 and 1969-70.

METALURGY.

Name of the Engineering College.	Number appeared.			Number passed in I Class.			Number passed in II Class.		
	1968–69.	1969–70.	1970–71.	1968–69.	1969–70.	1970–71.	1968–69.	1969–70.	1970–71.
	(47)	(48)	(49)	(50)	(51)	(52)	(53)	(54)	(55)
1 College of Engineerig, Guindy ..	..	..	..	..	..	..	..	..	..
2 Government College of Technology, Coimbatore.	..	..	..	..	..	..	..	..	..
3 Government College of Engineering, Salem.	..	..	..	..	..	..	..	..	..
4 A. C. College of Engineering and Technology, Karaikudi.	..	..	..	..	..	..	..	..	..
5 P. S. G. College of Technology, Coimbatore.	..	..	19	..	..	16	..	..	3
6 Coimbatore Institute of Technology, Coimbatore.	..	..	..	..	..	..	..	..	..
7 Thiagarajar College of Engineering, Madurai.	..	..	..	..	..	..	..	..	..
8 Regional Engineering College, Tiruchirappalli.	..	..	26	..	..	21	..	..	3

* NOTE —The Government College of Engineering, Salem, was started during the year 1966-67 only and hence there rere no candidate for appearing the final year B.E. Degree Examination during the year 1968-69 and 1969-70.

CHEMICAL.

Name of the Engineering College.	Number appeared.			Number passed in I Class.			Number passed in II Class.		
	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.	1968-69.	1969-70.	1970-71.
	(56)	(57)	(58)	(59)	(60)	(61)	(62)	(63)	(64)
1 College of Engineering, Guindy ..	..	..	..	..	..	..	..	..	..
2 Government College of Technology, Coimbatore.	..	..	..	..	..	..	..	..	..
3 Government College of Engineering, Salem.	..	..	..	..	..	..	..	..	..
4 A.C. College of Engineering and Technology, Karaikudi.	..	..	..	..	..	..	..	..	..
5 P. S. G. College of Technology, Coimbatore.	..	..	..	..	..	..	..	..	..
6 Coimbatore Institute of Technology, Coimbatore.	20	29	31	18	24	28	4	4	2
7 Thiagarajar College of Engineering, Madurai.	..	..	..	..	..	..	..	..	..
8 Regional Engineering College, Thiruchirappalli.	..	..	..	..	..	..	..	..	..

* NOTE.—The Government College of Engineering, Salem, was started during the year 1966-67 only and hence there were no candidates for appearing the final year B.E. Degree Examination during the year 1968-69 and 1969-70.

இணைப்பு III

[639 ஆம் பக்கத்தில் 253 ஆம் எண்ணுள்ள உடுக்குறியிடப்பட்ட வினாவின் விடையைக் காண்க.]

(அ) இராமனாதபுரம் மாவட்டம் சாத்தூர் தாலுக்காவில் பொதுப் பணித் துறையின் மூலம் 1967-க்குப்பின் நிறைவேற்றி முடிக்கப்பட்டுள்ள திட்டங் களும் அவற்றின் மதிப்பும் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

வரிசை எண்.	திட்டங்கள்.	மதிப்பு (ரூபாய் லட்சங்கள்).
1.	கோட்டைப்பட்டி அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	1.76
2.	புலவாய்ப்பட்டி அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	0.69
3.	அழகபுரி அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	0.97
4.	அயன்சுப்ரமணியபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	1.20
5.	மதிசேரி அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	2.40
6.	தாத்தம்பட்டி கண்மாய் புதுப்பித்தல்.	1.26
7.	சிவஞானபுரம் அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	0.52
8.	நல்லமுத்தான்பட்டி அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	0.61
9.	சீனியபுரம் மற்றும் பவானி கண்மாய் புதுப் பித்தல்	1.16
	மொத்தம்	10.57

(இ) சாத்தூர் வட்டத்தில் வேலைகள் நடைபெற்றுவரும் திட்டங்களும் அவற்றின் மதிப்பும்.

வரிசை எண்.	திட்டங்கள்.	மதிப்பு (ரூபாய் லட்சங்கள்).
1.	வல்லம்பட்டி கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	5.06
2.	முத்துசாமிபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	2.75
3.	குமாரலிங்கபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	1.78
4.	மீனம்பட்டி கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	1.00
5.	பந்துவார்பட்டி கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைத்தல்.	0.52
6.	கம்மாப்பட்டி அருகில் புதிய கண்மாய் அமைத்தல்.	2.69
7.	சத்திரப்பட்டி கிராமத்தின் அருகில் புதிய கண்மாய் அமைத்தல்.	0.81
8.	படந்தால் கிராமத்தின் அருகில் புதிய கண்மாய் அமைத்தல்.	1.47
9.	கீழத்திருத்தங்கல் கிராமத்தின் அருகில் புதிய கண்மாய் அமைத்தல்.	1.78
10.	வைப்பாற்றின் குறுக்கே சங்கரநத்தம் கிராமத்தின் அருகில் ஒரு அணை கட்டுதல்.	11.14
11.	புதுக்கோட்டை பெரிய குளம் மற்றும் இதர கண்மாய்களுக்கு பாசன வசதி அளித்தல்.	1.92
12.	கீவலப்பேரி ஆற்றின் குறுக்கே உள்ள மண் அணையை படுகை அணையாக மாற்றுதல்.	0.41
13.	நெடுங்குளம் ஓடையின் குறுக்கே ஒரு அணை கட்டி நரிக்குடி சிறுகுளம் கண்மாய்க்கு தண்ணீர் வசதி அளித்தல்.	0.66
	மொத்தம்	32.00

(உ) சாத்தூர் தாலுக்காவில் இன்னும் பரிசீலனையில் உள்ள திட்டங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

வரிசை எண்.	திட்டங்கள்.	மதிப்பு. (ரூபாய் லட்சங்கள்.)
1.	சாத்தூர் தாலுக்கா பெரிய சாயக்கன்பட்டி கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைக்கும் வேலை.	1.50
2.	சாத்தூர் தாலுக்கா இராமலிங்கபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைக்கும் வேலை.	3.11
3.	சாத்தூர் தாலுக்கா கோமபங்கிபுரம் கிராமத்தின் அருகே புதிய கண்மாய் அமைக்கும் வேலை.	1.66
4.	சாத்தூர் தாலுக்காவில் விஜயராமபேரி கண்மாயைப் புதுப்பிக்கும் வேலை.	2.80
5.	சாத்தூர் தாலுக்கா முடிந்தலை மற்றும் கண்மாய்களுக்கு அய்யம்பட்டி ஓடையிலிருந்து தண்ணீர் வசதியளிக்கும் திட்டம்.	0.68
6.	சாத்தூர் தாலுக்கா சத்திரப்பட்டி கண்மாய்க்கு தண்ணீர் வசதி அளித்தல்.	0.98
7.	சாத்தூர் தாலுக்கா, சாயினத்தம் கிராமத்தினருகே புதிய கண்மாய் அமைத்தல்.	14.20
8.	சாத்தூர் தாலுக்கா கோவிந்தநல்லூர் கிராமத்தினருகே புதிய கண்மாய் அமைத்தல்.	1.30
9.	கட்டனூர்பட்டி ஓடையில் ஒரு அணை கட்டி வீரபாண்டிபேரிகுளம் கண்மாய்க்கு மேலும் தண்ணீர் வசதியளித்தல்.	0.92
10.	சாத்தூர் தாலுக்கா முத்துலிங்காபுரம் கிராமத்தினருகே புதிய கண்மாய் அமைத்தல்.	2.56
	மொத்தம்	29.61

பொதுப் பணித் துறை கட்டிடப் பிரிவு.

1967-க்குப்பின் நிறைவேற்றப்பட்டுள்ள திட்டங்கள் (வேலைகள் நடைபெற்று வரும் திட்டங்கள் உள்பட)

வரிசை எண்.	திட்டங்கள்.	மதிப்பு. ரூபாய்.
1.	சாத்தூர் அரசு மருத்துவமனையில் மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத் துறை சுற்றுச்சுவரை உயர்த்திக் கட்டுதல்.	11,000
2.	சிவகாசி, என்னூர்க்கே இராசாத்தினம் நலக்குழுத் தலைவர் வழங்கிய நன்கொடையில் காசநோய்ப் பிரிவு ஒன்று கட்டுதல்.	30,000
3.	விருதுநகர் அரசினர் மருத்துவமனையில் வெளிப்புற நோயாளிகள் பகுதியும், அலுவக நடைமுறைப் பிரிவு ஒன்றும் கட்டுதல்.	1,40,400
4.	விருதுநகர் அரசினர் மருத்துவமனையில் 56 படுக்கை கள் கொண்ட பகுதி ஒன்று கட்டுதல்.	1,88,000
5.	சாத்தூர் வட்டாரத் தலைமை மருத்துவ மனையில் புதிர் கதிர் சாதனங்கள் அமைக்கக் கட்டிடம் கட்டுதல்.	37,000
6.	விருதுநகர் மருத்துவ மனையில் புதிர்கதிர் பகுதி கட்டுதல்.	37,000
	மொத்தம்:	4,43,400

குடும்பக் கட்டுப்பாடு நிலையங்கள்.

1.	எம். புதுப்பட்டி	92,000
2.	கள்ளமநாய்க்கன்பட்டி	92,000
3.	கன்னிசேரி புதூர்	92,000
4.	உப்பத்தூர்	92,000
	மொத்தம்	3,68,000

குடும்பக் கட்டுப்பாடு உதவி நிலையங்கள்.

வரிசை எண்.	திட்டங்கள்.	மதிப்பு. ரூபாய்.
1.	மான்சாபுரம்	12,000
2.	தாயில்பட்டி	12,000
3.	கோட்டப்பட்டி	12,000
4.	தென்மேலி	12,000
5.	கொசகுண்டு	12,000
7.	வடமலைக்குருச்சி	12,000
8.	கடன்பகுளம்	12,000
9.	வலையப்பட்டி	12,000
10.	பெத்துரெட்டிபட்டி	12,000
11.	கே. சொக்கலிங்கபுரம்	12,000
12.	கோலபுரம்	12,000
13.	எடின்கோட்டை	12,000
14.	நடுவப்பட்டி	12,000
15.	வடமேலபுரம்	12,000
16.	விளாம்பட்டி	12,000
17.	இருட்டினபுரம்	12,000
18.	பலவநத்தம்	15,000
19.	அப்பையநாயக்கன்பட்டி	15,000
	மொத்தம்	2,34,000

கல்வித்துறை.

வரிசை எண்.	திட்டங்கள்.	மதிப்பு. ரூபாய்.
1.	அப்பையநாயக்கன்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் 2 வகுப்பறைகள் கட்டுதல்.	20,000
2.	திருத்தங்கல் அரசு உயர்நிலைப்பள்ளியில் பொறியியல் பகுதிக்கு மின் சாதனங்கள் அமைத்தல்.	1,550
3.	தடுவப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியின் மின்சாதன ஏற்பாடுகள் உடனடியாக செப்பனிடுதல்.	5,000
4.	தடுவப்பட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் விஞ்ஞானப் பகுதி கட்டுதல்.	25,000
5.	முத்துசாமலிங்கபுரம் அரசு உயர்நிலைப்பள்ளியில் மின் கம்பிகளைப் பழுது பார்த்தல்.	3,800
6.	தரிக்குட்டி அரசு உயர்நிலைப்பள்ளியில் 2 வகுப்பறைகள் கட்டுதல்.	25,000
7.	தடுவப்பட்டி அரசினர் உயர்நிலைப்பள்ளியில் சிறுநீர் கழிப்பிடம் கட்டுதல்.	6,000
